# ஒரு பனஞ்சோலைக் கிராமத்தின் எழுச்சி

வரலாற்றுச் சித்திரம்



என்.கே. ரகுநாதன்



# ஒரு பனஞ்சோலைக் கிராமத்தின் எழுச்சி

வரலாற்றுச் சித்திரம்



# ஒரு பனஞ்சோலைக் கிராமத்தின் எழுச்சி

வரலாற்றுச் சித்திரம்

என்.கே. ரகுநாதன்

கருப்புப் பிரதிகள் - உயிர்மெய் இணைந்த வெளியீடு

**ஒரு பனஞ்சோலைக் கிராமத்தின் எழுச்சி**
வரலாற்றுச் சித்திரம் (நாவல்)
என்.கே. ரகுநாதன்

திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு: மே 2014
© என்.கே. ரகுநாதன்
வெளியீடு: கருப்புப் பிரதிகள் - உயிமெய் (நார்வே)
பி55, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்ஸ் சாலை
சென்னை 600 005 பேச: 94442 72500
மின்னஞ்சல்: karuppupradhigal@gmail.com

ஒளியச்சு: ஆதவன்
நூல் வடிவமைப்பு: ஜீவமணி
அச்சாக்கம்: ஜோதி எண்டர்பிரைசஸ், சென்னை 600 005

**விலை ரூ: 210.00**

**Oru Panancholai Kiramathin Ezhuchi (Novel)**
N.K. Ragunathan

Second Edition: May 2014
© N.K. Ragunathan
by Karuppupradhigal-Uyirmei (Norway)
B55, Pappu Masthan Darga, Lloyds Road,
Chennai 600 005, Tamil Nadu, South India
Mobile: 94442 72500
Email: karuppupradhigal@gmail.com

Typeset: Aadhavan
Lay-out & Cover Design: Jeevamani
Printed by: Jothy Enterprises, Chennai 600 005

**Price: Rs: 210.00**

**uyirmei**
Kaptein Linges vei 9A,
6006 Aalesund,
Norway.
E-mail: banu.nor@gmail.com

**சமர்ப்பணம்**

என்னைப் பெற்று வளர்த்து
ஆளாக்கிய அன்புத் தாய்
வள்ளியம்மைக்கும்
படிக்க வைத்து உருவாக்கி
மானுடனாக்கிய அருமை அண்ணன்
தம்பிப்பிள்ளைக்கும்

## கருப்புக் குறிப்புகள்

மிக அண்மையக் காலமாய் 'தமிழ் கூறும் நல்லுலகின் சிங்கங்காள்'களால், புலிகளால், இன்னபிறர்களால் 'தொப்புள் கொடி' உறவு என மிக உன்னதமாய் விதந்தோதப்படுகிற ஈழத் தமிழ் சமூகத்தின் சாதிய வன்மத்தை, அதன் இந்து-இந்திய கிராமச் சமூகத்தின் நகலெடுப்பாய் இருக்கும் பார்ப்பனியக் கட்டமைப்பை மிக அடிப்படையான எளிய மனிதர்களின் புரிதலிலும் உளவியலிலும் நின்று வெளிப்படுத்திக் கொள்கிறது இப்புதினம்.

புனைவின் மொழியில் தன் வரலாறாக கட்டமைத்துக் கொள்ளும் இந்நாவலின் சித்திரங்கள் பெரும் அனுபவச் சுமைகளை அதற்கெதிரான அன்றாட போராட்டங்களை இலக்கிய அனுபவங்களாய் நிகழ்த்திக் காட்டுகிறது.

"சாதிதான் சமூகம் என்றால் வீசும் காற்றில் விஷம் பரவட்டும்" என்பார் இந்திய சாதியச் சமூகத்தை அழித்தொழிக்கப் போராடிய அறிவாசான் அம்பேத்கர். சாதியத்தை பொருட்படுத்தாத எல்லாவிதப் போராட்டங்களுக்கும் போராளிகளுக்கும் அண்ணலின் கூற்றுகளை முன்வைத்து இதுபோன்ற இலக்கியப் பிரதிகளை பதிப்பிப்பதை புதுப்பித்துக் கொண்டே இருப்போம்.

உயிர்மெய் (பானு-தமயந்தி) பதிப்பகத்துடன் இணைந்து நூலாக்க ஒப்புதல் அளித்த அய்யா என்.கே. ரகுநாதன் அவர்களுக்கும், அதற்கு பெரும் உந்துதலாய் இருந்து நல்லதொரு முனைப்பையும், முன்னுரையையும் வழங்கிய ஜீவமுரளி (ஜேர்மனி) அவர்களுக்கும் நன்றியினை தெரிவிப்பதோடு, இந்நூலின் முதற்பதிப்பை (2004) வெளியிட்டு மக்களிடம் பரப்பிய 'குமரன் பதிப்பகம்' செ. கணேசலிங்கம் அவர்களுக்கும், எங்களது சிரமங்களை சகித்துக் கொண்டு நூலினை வனப்போடு வடிவமைத்த தோழர் ஜீவமணிக்கும், அமுதா, ஷோபாசக்தி, புனிதபாண்டியன், மதிவண்ணன், விஜய்ஆனந்த் (பெங்களுரு) தம்பி அறிவொளி, டீக்கடை முரளி ஆகியோருக்கும் நன்றியினை செலுத்துகிறோம்.

தோழமை சார்ந்து
**நீலகண்டன்**

# முன்னுரை

ஒரு சிறிய கிராமம். பனைமரம் தான் அதன் இயற்கை வளம். அங்குள்ளவர்கள், அம் மரத்தையே நம்பிக் காலத்தைக் கடத்துகிறார்கள். அவர்களில் இருவர், கால்களை நகர்த்தி வேறு ஊர்களுக்குப் போய், அங்கு கள் இறக்கிப் பிழைக்கத் தொடங்கினார்கள். அந்த ஊர்களின் முன்னேற்றம் அவர்களின் மனதில் ஓர் அழுத்தத்தை ஏற்படுத்த, அதனிமித்தம் தங்கள் பிள்ளைகள் இருவரைப் படிப்பிக்கிறார்கள். பல கஷ்ட துன்பங்களுக்கிடையில் அவர்களும் ஆர்வத்துடன் படித்து ஆசிரியர்களாகிறார்கள்.

அவர்களுடைய கிராமத்துக்குப் பக்கத்திலிருந்த ஒரு கிராமத்தில் தமிழறிஞர் ஒருவர் வாழ்ந்து வந்தார். இருவரும் அந்தத் தமிழறிஞரிடம் கல்வி கற்கப் போனார்கள். தமிழ் கற்ற அவர்கள், அவருடைய நாஸ்திகக் கொள்கையினால் கவரப் பெற்று காலப்போக்கில் உலகளாவிய ரீதியில் பரந்து விரிந்த மார்க்சீயக் கொள்கையில் ஊறித் திளைத்து, தமது கிராமத்து வாலிபர்களை மட்டுமன்றி, அண்டை அயலில் உள்ள வாலிபர்களையும் ஒன்றிணைத்து சாதியொடுக்கு முறைக்கு எதிராக மட்டுமன்றி, உழைக்கும் மக்களை நசுக்குபவர்களுக்கெதிரான போராட்டங்களையும் முன்னெடுத்து சகலரையும் எழுச்சி பெறச் செய்தார்கள்.

அடக்கு முறைகளுக்கெதிரான எழுச்சிகளோடு மட்டும் நின்று விடாமல், தமது பிள்ளைகள் கல்வித் துறையிலும் முன்னேற்றம் பெறச் செய்து அகலக்கால் பதித்தார்கள். இந்த வரலாறுதான், ஒரு 'பனஞ்சோலைக் கிராமத்தின் எழுச்சி'யாகும்.

நான், 1991ஆம் ஆண்டில், யாழ் மண்ணிலிருந்து இந்த வரலாற்றை எழுதத் தொடங்கினேன். ஓராண்டுக்குள் கொழும்பு வந்து, அங்கு பத்து ஆண்டுகள் தங்கியிருந்த வேளையிலும், பின்னர் அங்கிருந்து கனடாவில் குடிபுகுந்து, இங்கும் இரண்டு வருடங்கள் என் பேனாவை ஓட்டி இதனைப் பூர்த்தி செய்துள்ளேன்.

நான் மிகக் குறைந்த அளவிலேயே கதைகள் எழுதுபவன். அது என் பலஹீனம் என்றோ பலம் என்றோ நான் மனம் கொள்வதில்லை. அதுவே என் இயல்பு. நான் பிரபலத்தையோ, புகழையோ முக்கியப்படுத்திப் பேனா

ஓட்டுபவனல்லன். அதே வேளை, என் படைப்புக்கள், மக்களின் பிரச்சினைகளை முன்னெடுத்து, அவற்றுக்குத் தீர்வு காண்பவைகளாக அமையுமாயின், திருப்தியடைந்து மகிழ்வுறுவேன். நான் பிறந்து வளர்ந்த பனஞ்சோலைக் கிராமத்தின் வரலாறு, இந்த வகையில் அமைந்திருக்கிறது என்பதை இதைப் படிப்பவர்கள் உணரக்கூடியதாயிருக்கும்.

இதனை எழுதி முடிப்பதற்கு மிகவும் நீண்டகாலம் எடுத்ததாலும், புலப் பெயர்வுகளினூடேயும், வேளையில் எழுதப்பட்ட சம்பவங்கள், மீண்டும் இடம் பெற்றிருக்கக் கூடும் என ஐயுறுகின்றேன். எனினும் அவை வாசகர் மனதில் எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தாது என நம்புகிறேன். அப்படியாயின் அவர்கள் என்னை மன்னித்தருள்வார்கள்.

வராத்துப்பளை,
பருத்தித்துறை.

**என்.கே. ரகுநாதன்**

தற்போதைய முகவரி:
124, Homedale Drive,
Scarborough,
Ontario M1V 1M2,
CANADA

# எண்பது ஆண்டுகால தலித் சமூகத்தின் வரலாறு

**த**லித்துக்கள் விதானைமார்களாக இருந்திருந்தால் இப்படியெல்லாம் நடந்திருக்காது என்பது உண்மைதான்! ஜெ.எஸ்.ஸி பரீட்சை தேர்வு எழுதப் போகும் சந்தர்ப்பத்தில்தான் ராசன் என்ற அழைக்கப்பட்டுக்கொண்டிருந்த ஒரு தலித் மாணவன், அவனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் "கணபதி" என்று பெயர் பதியப்பட்டுள்ளதை அறிந்து கொள்கிறான். தனது பெயரையே தானறியாத ராசன் அதிர்ச்சியடைகிறான். ஆதிக்கசாதிப் பாடசாலை மாணவர்களால் அவமானப் படுத்தப்படுகிறான். தலித் என்ற சாதிப் படிநிலை அவமானமும், தன் பெயரையே தானே அறியாத அவமானமும் அதிர்ச்சியும் வெட்கமும் ஒன்று சேர பிடுங்கித்தின்றன. அதிலிருந்து மீள நினைக்கும் ராசன், தகப்பனாரின் உதவியுடன் தனது பெயரை மாற்றிக்கொள்ள விதானைமார்களிடம் கெஞ்சிக்கூத்தாடியும் முடியாமற்போகிறது. கடைசியாக யாழ்ப்பாணம் கச்சேரிக்கு சென்று ரவீந்திரன் என்று பெயரை மாற்றிக் கொள்கிறான். அதிர்ச்சிகளும் அவமானங்களும் வெட்கங்களும் நிறைந்த என்.கே. ரகுநாதனின் இந்தச்சுயசரிதம் தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டங்கள் பற்றிய புனைவுகளற்ற வரலாறாய் நீண்டு செல்கிறது.

ரெயிஸ்தார்கள் என்று ரகுநாதனால் சொல்லப்படுகின்ற ஆதிக்கசாதி விதானைமார்கள், எப்படி தலித் பெற்றோர்களை ஏமாற்றினார்கள் என்றும், அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு பெயர் வைத்துக்கொள்வதின் விருப்பங்களில் எப்படி சாதித் திமிருடன் ஆதிக்கம் செலுத்தினார்கள் என்பதையும் இந்தச் சுயசரிதம் இப்படித்தான் சொல்லத் தொடங்குகின்றது.

> "சாதிப்படிநிலை அவமானங்களையும் வெட்கங்களையும் அதிர்ச்சிகளையும் அதற்கே உரிய அரசியல் சமூக வாழ்வின் அறம் குறித்த அர்த்தங்களோடு உணரத் தலைப்படுகின்ற ஒவ்வொருவரும் அந்தக்கணமே தமிழ்த்தேசியவாதம் என்பது ஒரு பித்தலாட்டம் என்ற முடிவுக்கு இலகுவில் வந்தடைந்துவிடலாம்."

"ராசன்" என்று தலித் பெற்றோர்களால் விரும்பி அழைக்கப்பட்ட பெயரை அங்கீகரிக்காத ஒரு சமூகத்தின் அரசியல் அதிகாரபீடமான விதானை, அதை "கணபதி" என்று ஏமாற்றி பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தில் பதிந்த நிகழ்வு

தமிழ்த்தேசியம் என்பது தலித்துக்களை உள்ளடக்கி எழவில்லை என்பதை வெளிப்படையாகவே சொல்லிவிடுகிறது. தமிழ்த்தேசியம் என்பது தலித்துகளைப் பொறுத்தவரையில் விதானைமார்களால் ஏமாற்றிப் பதியவைக்கப்பட்ட மோசடிப் பெயர்கள் போலவே ஒத்திருக்கின்றது.

ஆதிக்க சாதி அதிகார பீடங்கள் தாங்கள் விரும்பிவைக்கும் பெயரையெல்லாம் தலித்மக்கள் விரும்பி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை அரசியல் அறமாகக் கொள்ள முடியாது. இங்கேயிருந்து தான் அறம் என்றால் என்ன என்பதற்கான உரையாடல் தொடங்கப்பட வேண்டும். தமிழ்த்தேசியத்தையும் அதன் அரசியல் வரலாற்றையும், விதானைமார்களால் ஏமாற்றி மோசடி செய்து பதியப்பட்ட "கணபதி" என்ற பெயரைப்போலவே மீண்டும் மீண்டும் அதைப் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

"எச்சில் கையால் காக்கா ஓட்டாதவனுக்கு தர்மராசா என்று பெயர் இருக்கும். நாய் குரைத்தால் நடுங்கி ஓடுகிறவனுக்கு வீரசிங்கம் என்று பெயர் சூட்டியிருப்பார்கள். ஏழைகளைச் சுரண்டி பணம் சேர்ப்பவனுக்கு கொடைவள்ளல் என்று பட்டம் சூட்டியிருப்பார்கள்" என்று விதானைமார்களின் மீதான கோபத்தையும் ஆதிக்கசாதி அரசியலின் கோமாளித்தனங்களையும் என்.கே. இரகுநாதன் நையாண்டியாக இப்படி வெளிப்படுத்துகின்றார்.

தலித் மாணவர்கள் கல்வி கற்பதற்கு இந்து போர்ட் மாட்டிக்கொண்ட சைவப்பிரகாச வித்தியாசாலைகளும் இந்துக்கல்லூரிகளும் எவ்வளவு சாதிப்பாகுபாட்டுடன் நடந்துகொண்டன என்பதையும் மெதொடிஸ்த கத்தோலிக்க மிசனரி பாடசாலைகள் தலித் மாணவர்கள் கல்வி கற்பதற்கு எப்படி உறுதுணையாக இருந்தன என்பதையும் ஆதாரங்களோடு என்.கே. ரகுநாதன் குறித்துச் செல்கிறார்.

"தாழ்த்தப்பட்டவன்" என்ற பெயரைச் சுமந்து கொண்டு தலித் சமூகங்களி லிருந்து யார்யாரெல்லாம் போராடி கல்விகற்றார்கள், அவர்களுக்கு யார்யாரெல்லாம் ஆதரவாய் இருந்தார்கள், யாரெல்லாம் உறுதுணையாய் இருந்தார்கள் என ஒரு நீண்ட பெயர்ப்பட்டியலோடு தனது கடந்தகால வாழ்வை கோபத்தோடும் இயலாமையோடும் நன்றியணர்வுவோடும் என்.கே. ரகுநாதன் பதிவு செய்திருக்கின்றார். குறிப்பாக தனது கல்வியில் அக்கறை செலுத்திய ஆதிக்கசாதியைச் சேர்ந்த ஆசிரியர்களையும் இடதுசாரிகளையும் நன்றியோடு நினைவு கூறுகின்றார்.

முப்பது ஆண்டுகளுக்கு முன் "பண்டாவத்தை" என்ற ஒரு வரண்ட திடலைச் சுற்றி பனைகள் சோலைகளாக விரிந்து கிடந்ததற்கான ஞாபகங்கள் என் மனதை இன்னும் அலைக்கழிக்கின்றன. இன்று அவை தமிழ்தேசியத்தின் பெயரால் நடந்த நீண்ட யுத்தத்தின் பிரதிவிளைவுகளாய் ஒற்றைப் பனைகளாகவும்

மொட்டைப் பனைகளாகவும் காட்சியளிக்கின்றன. பண்டாவத்தை திடலின் அருகே, "சிங்கள வைரர்" என்ற தலித்துகளின் தெய்வம் ஒரு மரநிழலின் கீழே இன்றுவரைக்கும் வீற்றிருக்கின்றார். அதைச்சுற்றி உத்திராவத்தை, ஊரியவத்தை, சந்தாதோட்டம், வராத்துப்பளை, கற்கோவளம், தும்பளை தெற்கு, கலப்பனாவத்தை, கொற்றாவத்தை, றக்காவத்தை என்ற பெயர்களைக் கொண்ட கிராமங்கள் உள்ளன. கற்கோவள எல்லையில் நெல்லண்டை, தும்பளை என்ற வெள்ளாளர்களின் கிராமம் நீண்டு விரிந்து செல்கின்றன. இன்றும் தெற்கும் மேற்குமாய் புற்றளை மந்திகை கரவெட்டி என வெள்ளாளர்களின் கிராமங்கள் விரிந்து செல்கின்றன.

சிங்கள வைரவர் கோவிலைச் சுற்றியுள்ள "வத்தை" என்ற சிங்கள உச்சரிப்புக்களுடன் முடிவடைகின்ற தலித் கிராமங்களின் பெயர்கள் எப்படி வந்தன என்று விடைதேடிப்பிடித்தால், விதானைமார்களின் "கணபதி" போன்றதொரு பெயர் மோசடியைப்போல பெரியதொரு வரலாற்று மோசடி இருக்கமுடியாது என்றே கருதுகிறேன். சிங்கள மன்னர்கள் அங்கே இருந்திருக்கலாம் அல்லது சிங்கள மக்கள் வாழ்ந்திருக்கலாம் என்ற ஊகங்களுக்கு அப்பால் தலித்துக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையே மிக நெருக்கமான சமூக உறவுகள் இருந்திருக்கின்றன என்பதை சிங்கள வைரவரும், "வத்தை" என்று முடியும் ஊர்களின் பெயர்களும் தெளிவாக சொல்கின்றன. ஆதிக்க சாதி இந்துக் கடவுள்களை மறுதலித்து ஒரு சிங்கள வைரவரை தலித்துக்கள் தெய்வமாக்கியிருப்பது சாதி ஒடுக்குமுறைக்கெதிரான எதிர்ப்பரசியலை மிகத் தெளிவாகவே காட்டிநிற்கின்றது. வரலாற்று ஓட்டத்தில் தலித்துக்கள் எல்லோரும் ஒரு துரோக சமூகமாக இன்று ஆதிக்கசாதிகளால் அடையாளப்படுத்தப்பட்டமைக்கு, இந்தச் சிங்களவர் வைரவர் கூட ஒரு வலியசான்றாக அமைந்திருப்பாரோ! என எண்ணவும் தோன்றுகிறது. மறுபக்கத்தில் இந்தத் தெய்வத்தின் அருளினால் தானோ என்னவோ இன்று கூட வெள்ளவத்தையில் தமிழர்களால் செறிந்து வாழமுடிகிறது என்றும் கூட வியக்க வைக்கின்றது.

தமிழ் சிங்கள இனமுரண்பாட்டை புரிந்து கொள்வதற்கு சிங்கள வைரவரையும், அதைச்சுற்றியுள்ள தலித் கிராமங்ளுக்கும், ஆதிக்கசாதிக் கிராமங்களுக்கும் உள்ள உறவுகளையும் புரிந்து கொள்வது மிகவும் அடிப்படையானது என்றே கருதுகிறேன். இந்த உறவுகள் தான் தமிழ்தேசியத்தையும் அதற்கு எதிரும் புதிருமான முரண்நகை கொண்ட சாதி ஒடுக்கு முறையையும் பேணிவருகின்றன. சிங்கள வைரவர் அதை மிகத் தெளிவாக கோடு கிழித்துக் காட்டுகின்றார்.

ஒடுக்குமுறைகளால் ஏற்படும் இடப்பெயர்வு புலப்பெயர்வு இந்தக் கிராமங்களைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணம் பலாலி ரோட்டிலிருந்து

தொடங்குகின்றது என்கிறார் என்.கே. ரகுநாதன். சாதி ஒடுக்குமுறையால் கல்விகற்கவும் வேலை தேடியும் தலித்துக்கள் நகரங்களை நோக்கி புலம் பெயர்ந்திருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் "பலாலி ரோட்" தலித் சமூகம் அப்படி உருவானதே என்பதை என்.கே. ரகுநாதன் ஆதாரங்களுடன் குறிப்பிடுகின்றார்.

நகரங்களை நோக்கிய தலித்துக்களின் இடப்பெயர்வு அவர்களுக்கு சாதி அடையாள அவமானப்படுத்தல்களிலிருந்து தப்பித்துக்கொள்ள உதவியது. ஆனாலும் நகரங்களிலும் புலப்பெயர்விலும் வாழும் ஆதிக்க சாதித் தமிழ்கள் அண்ணை எந்தவிடம்! அக்கா எந்தவிடம்! நீங்கள் எந்த ஊர்! சிங்கள வைரவர் கோவிலுக்கு பின்னாலையா முன்னாலையா, வேப்பமரத்துக்கு அந்தப்பக்கமா இந்தப்பக்கமா என்று கேள்விகள் மேல் கேள்விகள் கேட்பதன் மூலம் ஒருவருடைய சாதிய அடையாளங்களை கண்டுபிடித்து தங்களுக்கு வேண்டப்பட்ட சாதிய உறவுகளை தெளிவாக வரையறுத்துக்கொள்கிறார்கள். இந்த வெட்கங்கெட்ட சாதி அறிதல் முறையின் தொடர்ச்சியையும் தீண்டாமையின் எச்சசொச்சங்களையும் தலித் சமூகத்தவர்கள் இன்னும்தான் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

பின்பு நடந்து கொண்டிருப்பவைகள் எல்லாம் உங்களுக்கு நன்றாகத் தெரியுமே! தமிழ்த்தேசிய எழுச்சியின் பின் கண்டம் விட்டு கண்டம் பாய்ந்த சாதிப்படி நிலைகள் அண்ணை எவடம்! அக்கா எவடம்! என்று கேட்டுக் கேட்டு ஆதிக்கசாதிகளின் இருப்பையும் திமிரையும் மேலும் மேலும் செழுமைப்படுத்திக் கொண்டிருக்கின்றன. மகாஜனக் கல்லூரி, காட்லிக் கல்லூரி, இந்துக் கல்லூரி என நீண்டு செல்லும் ஆதிக்கசாதி பழைய மாணவர்கள் சங்கங்களும், இந்துக் கோயில்களுமாகச் சேர்ந்து சாதிப் படிநிலைகளின் காப்பகங்களாக இருந்துவருகின்றன.

என்.கே. இரகுநாதனின் இந்த அனுபவப்பதிவு கிட்டத்தட்ட ஒரு எண்பது ஆண்டுகால தலித்சமூகத்தின் வரலாற்றை பதிவுசெய்திருக்கின்றது. அவர் பிறந்து வளர்ந்த அதே வராத்துப்பளை என்ற கிராமத்தில்தான் நானும் பிறந்தேன். அவர் இங்கே குறித்துச் செல்லும் மனிதர்களில் பெரும்பாலானோரை நான் அறிவேன். எனது தாய்மாமன் பசுபதி என்.கே. இரகுநாதனின் தங்கையான பாக்கியத்தை மணம்முடித்தவர். பசுபதியின் தாய் அன்னம் எனக்கு ஆச்சி உறவு என் அம்மாவின் தாயார். என்.கே. இரகுநாதன் சுற்றிச் சுற்றி குறிப்பிடும் மனிதர்களில் பலர் எனது குடும்ப உறவுக்குள் சுற்றிவந்துகொண்டிருப்பவர்கள். இதை நான் இங்கே குறிப்பிடுவது சாதிப்படிநிலையின் வேர் எவ்வளவு தூரம் பாயும் என்பதை சொல்லிவிடுவதற்காகவே.

நளவர் சமூகத்தை சேர்ந்த என்.கே. இரகுநாதன் வண்ணார் சமூகத்தை சேர்ந்த டானியலின் சகோதரியை மணம் முடித்தார். அதன் பின் இரகுநாதனின்

குடும்ப உறவினர்களாலும் சுற்றத்தாலும் வெறுக்கப்பட்டார். பின் அவர் அரிதாகவே தனது கிராமத்துக்கு வந்து சென்றார். அப்படி அங்கு அவர் வரும்பொழுதெல்லாம் வண்ணான் வாறான் துரும்பன் வாறான் என்று சுற்றத்தார் சொல்வதை என் காதுகளாலேயே கேட்டிருக்கின்றேன். அது அவருக்கு இரட்டைசாதி நிலை அவமானங்களுக்கு கொண்டுசென்றுவிட்டது.

அகமண உறவுமுறையையே மட்டும் கோரும் இந்துத்துவத்தின் சாதிப்படிநிலை தலித் சமூகங்கள் மத்தியிலும் எவ்வளவு ஆழ ஊடுருவியிருந்தன என்பதைச் சொல்வதற்கு இதைவிட வேறு உதாரணம் தேவையில்லை.

இந்த உதாரணம் ஆதிக்க சாதி வாசகர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் என்பதில் எனக்கு சந்தேகமில்லை. தலித்துகளுக்குள் இடையிலான சாதிப்படிநிலை எந்த அரசியல் அதிகாரத்தையும் செலுத்தும் வீரியமற்றது. அது ஆதிக்கசாதி அதிகாரபீடங்களோடு சமரசங்களையும் ஒத்தோடல்களையும் தவிர்க்கமுடியாமல் செய்து வந்திருக்கின்றது. ஆதிக்கசாதிகளைப்போல பாவனை செய்து வாழமுனைகிறது. இது ஒடுக்குபவர் ஒடுக்கப்படுபவர் என்ற சாதிப்படிநிலையின் முரண்நகையாக இருந்தாலும் எந்த அரசியல் அதிகாரமுமற்றது. தன்னையும் சக மனிதனாக அங்கீகரி என்ற ஆதங்கங்களோடு தலித்துகளும் கூட இராசதந்திரப் போர் தொடுத்து வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்று கூடச் சொல்லலாம். அல்லது அதுவும் ஆதிக்க சாதி அரசியலின் கால்களில் வீழ்ந்து கிடக்கின்றது என்றும் சொல்லிவிடலாம்.

சாதியப் படிநிலையின் அரசியல் சூட்சுமங்களை தவிர்த்து அதிலிருந்து தப்பியோடுவதற்கான வாய்ப்புக்களைப்பற்றி நிறையவே கட்டுக்கதைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தக் கட்டுக்கதைகள் தமிழன் என்ற புனைவிலிருந்து தமிழீழம் வரைக்கும் புனைந்துகட்டி முடிவடைந்திருக்கின்றது. அவரவர் வாய்ப்புக்கும் வசதிக்கும் ஏற்ப தமிழ்த்தேசிய அடையாளத்துடன் சாதிநீக்கம் என்ற புனைகதையையும் சேர்த்துக்கட்டப்பட்டிருக்கின்றது. அதை கா. சிவத்தம்பி மிகவும் வெளிப்படையாகவே சொல்லிவிட்டுப் போனார். அவர் தன் விருப்பத்தின் பால் சொல்லிச்சென்றாலும் சாதிநீக்கம் என்ற அவரின் புனைகதை இன்றளவும் புனைவாகவே இருக்கின்றது. ஆனால் அதன் உண்மை முகம் விதானைமார்களால் ஏமாற்றிப் பதியவைக்கப்பட்ட "கணபதி" என்ற பெயரையே மறுமடியும் மறுபடியும் ஞாபகப்படுத்துகின்றது.

முள்ளிவாய்க்கால் கற்றுத்தந்த பாடங்களின் பின் பல்லினங்கள் வாழுகின்ற ஒரு தேசத்தில், கணபதி என்ற குறியீட்டை நாங்கள் வெறுமனே பிள்ளையார் என்றோ விநாயகர் என்றோ ஐங்கரன் என்றோ புரிந்து கொள்ள முடியாது. அப்படி புரிந்து கொள்ளும்படியும் அது தற்செயலானது எனவும் ஒருக்கால் அவை காலாவதியாகிப்போய் அருகிப்போய்விட்டதென்றும் நம்பும்படி

கடந்தகாலங்களில் சோக்கோல்டு மார்க்சீய முற்போக்காளர்களாலும் கூட அறிவுறுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் தலித்துக்கள் அதை அப்படிப் புரிந்து கொள்ள முயல்வது தமிழ்தேசியவாதிகள் இன்று சொல்லிக் கொண்டிருக்கும் "இராசதந்திரப் போர்" என்ற புளுகுமூட்டையை ஏற்றுப் புரிந்துகொள்வது போலாகிவிடும்.

சாதிப் படிநிலைகளை மிக ஆழமாகவே நேசித்துக்கொண்டு அரசுடன் மிக நெருக்கமான உறவுகளைப் பேணவிரும்பும் தமிழ்தேசியவாதிகளையும், மறுபக்கத்தில் வர்க்கவிடுதலையை முன்நிறுத்தி சாதியப்படிநிலைகளை பேணவிரும்புபவர்களையும் நாங்கள் வேறு எப்படித்தான் புரிந்து கொள்ளமுடியும்?

ஆதிக்கசாதி அரசியலின் இருப்புக்காக செய்யப்படும் அனைத்து மோசடிகளையும் ஏமாற்றுகளையும் இராசதந்திரப் போர்களையும் என்.கே. இரகுநாதன் "கணபதி" என்ற குறியீட்டை வைத்துக்கொண்டு மிக இலகுவாகச் சொல்லியிருக்கின்றார். இலங்கை இனமுரண்பாட்டு அரசியலை வர்க்க அரசியல் முரண்பாடாக எங்களுக்கு மீண்டுமொருமுறை மிகத் தெளிவாக விளக்கிச் செல்கிறார். சாதித்திமிர் வரலாறு இன்றுள்ள புலம்பெயர் இடதுசாரிகளையும் தமிழ் இலக்கியவாதிகளையும் கூட விட்டுவைக்கவில்லை. ஆதிக்க சாதி பற்றுறுதியை அவர்கள் கையாளும் மொழிகளாலேயே மிகத்தெளிவாகச் சொல்லிச் செல்கிறார்கள்.

**ஜீவமுரளி**
ஜேர்மனி

# 1

கதிரவன் கண் விழிக்கும் அதிகாலைப் பொழுது.

ஊருக்குத் தென்புறத்தேயுள்ள பாழடைந்த வயல் வெளியில் அன்றைய விளையாட்டு ஆரம்பமாகி விட்டது. குரும்பை கட்டு என்பது அந்த விளையாட்டுக்குப் பெயர். அது, அந்தக் கிராமத்தின் தேசிய விளையாட்டுப் போல.

வாலிபர்களும், வாலிப வயதைத் தாண்டியவர்களும், வயோதிபர்களுமாக விளையாட்டைப் பார்க்கக் கூடியிருக்கின்றார்கள்.

பல வகைகளில் பயனைத் தருகின்ற காரணத்தினால் கற்பக தரு என அழைக்கப்படுகின்ற பனைமரம் அவர்களின் ஜீவசொத்து. குடிமனைகள் அமைந்துள்ள பகுதிகளில் வீடுகளைக் கட்டுவதற்கான இடங்களை ஒதுக்குவதற்காகப் பனைகள் தறிக்கப்பட்டாலும், வீடுகளை அண்டியும் பனைகள் காணப்படும். அவை முற்றத்திலுமிருக்கும், கோடியிலுமிருக்கும் பக்கங்களிலுமிருக்கும். அதைத் தவிர்த்து ஊர்மனையை அடுத்துப் பனங்காணிகள், சற்றுத் தள்ளிப் போனால் பனங்காடுகள்.

பனை மரங்கள் பங்குனி சித்திரை மாதங்களில் கர்ப்பம் தரித்துப் பாளை தள்ளும். தள்ளிய பாளைகள் குரும்பை பிடித்து நுங்காகும். பெண் பனைகளில் தான் இந்த ஜனனம். ஆண் பனைகளில் தள்ளுகிற பாளைகளிலிருந்து கள் இறக்கலாம். இல்லையெனின் அந்தப் பாளைகள் முற்றி, வெறும் கொள்ளிகளாய் நீண்டு உலர்வதோடு சரி. அந்தக் கொள்ளிகள் அடுப்பு எரிக்கத்தான் உதவும்.

மனித குலத்தில் ஆண் பெண், மிருக இனத்தில் கடுவன் பெட்டை அல்லது ஆண் பெண், பறவை இனத்தில் சேவல் பேடு! தாவர வர்க்கத்தில் இந்தப் பாகுபாடே இல்லை. நீரும் பசளையும் கிடைத்தால் எல்லா மரவகையும் செழித்து வளர்ந்து காய்த்துக் கொட்டும். ஆனால் இந்தப் பனை மரத்தில் மட்டும்

பால் வேறுபாடு. ஆண் பனை, பெண் பனை! ஆண் பனை வெறும் கொள்ளிகளைப் பிரசவிக்க, பெண் பனை வர்க்க விருத்திக்கான குரும்பைகளைப் பெற்றெடுத்து, அவை நுங்காகி முற்றிப் பழுத்துப் பனம் பழமாகி, அதன் விதைகள் பூமித்தாயைத் தழுவி… ஜனனம்… ஜனனம்… ஜனனம்…! ஜனன சோபனம்!! அவை ஓங்கி வளர்ந்ததும் கற்பக வியாபகம்!!!

நற்பயன்களை நாசமாக்கும் மனிதப் பதர்களைப் போல, எத்தனையோ வழிகளில் உணவாகப் பயன்படுகிற பனம் பழத்தை, அதன் வளர்ச்சிப் பருவத்திலேயே நாசமாக்கப் படைக்கப்பட்ட ஐந்துவோ என்று எண்ணும் வகையில் அணிற் பிள்ளையானது, பனைகளில் குலை குலையாகக் காய்த்துச் செழித்துப் பருத்துக் கிடக்கிற நுங்குகளைத் தனது சின்னஞ்சிறு கூரிய பற்களால் அரித்து, உள்ளே இருக்கிற தவிந்தைக் குடித்து விட்டுப் போக…

அவை வாடி வதங்கி, இராக்காலக் குளிரினால் சுருங்கி, பாளையின் பிணைப்பிலிருந்து விடுபட்டுப் பொத்துப் பொத்தெனக் கீழே விழ…

வீடுகளிலே வளர்க்கப்படுகிற கால்நடைகளுக்கு அந்த நுங்குகளின் சதைச்சீவல் நல்ல உணவாக அமையும்.

அதனால் நுங்கு பொறுக்குவதே ஒரு போட்டியாக வந்துவிடும்.

ஆடு மாடுகள் வளர்க்கப்படுகிற ஒவ்வொரு வீட்டிலிருக்கிற இளந்தாரியும் - இளந்தாரி இல்லாத பட்சத்தில் யாரோ ஒருவர் - அதிகாலை ஐந்து மணிக்கே எழுந்து முதுகில் ஒரு சாக்கைப் போட்டுக் கொண்டு, சற்று வசதி படைத்தவராயிருந்தால் கையில் ஒரு டோர்ச் லைற்றைப் பிடித்துக் கொண்டு, அடையாத காணி, அடைத்த காணி எல்லாவற்றிலும் புகுந்து பறுகு பற்றையெல்லாம் பொறுக்கிச் சேர்த்தால் - வல்லவன் ஒரு சாக்கு நிறையக் கொண்டு வருவான்.

அரைச்சாக்கு, காற்சாக்கு என்று சேர்ப்பவர்களும் உளர்.

வெறும் கையோடு வருபவர்களும் இருக்கிறார்கள்.

பொல பொலவென்று பொழுது விடிய, சீராவத்தை வயல் விளம்பில் பொறுக்கிய நுங்குச் சாக்குகளுடன் வீரர்கள் கூடி விடுவார்கள்.

வேளையிலே பலவகையான விளையாட்டுகளையும் விளையாடிச் சமதரையாகி விட்ட, பாழடைந்து போன வயல் தட்டில் விளையாட்டு ஆரம்பமாகி விடும். அதுதான் குரும்பை கட்டு விளையாட்டு.

எத்தனைபேரும் பங்கு பற்றலாம்.

ஒவ்வொருவரும் ஒரே அளவிலான நுங்கொன்றை எடுத்து, காலால் கீறிய நீள் சதுரக் கோட்டுப் பரப்பின் நடுவில் நேர் வரிசையாக அடுக்கி வைக்க வேண்டும். அதற்குச் சமாந்தரமாக இருபது இருபத்தைந்து கவடு தூரத்துக்கப்பால் வரிசையாய் நிற்கின்ற விளையாட்டு வீரர்கள் ஒவ்வொருவருடைய கையிலும் ஒவ்வோர் நுங்கு. அதுவும் ஒரே அளவான நுங்கு.

கையிலிருக்கிற நுங்கைப் பலங்கொண்ட மட்டும் உருட்டி, அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் நுங்குகளின் வரிசையைக் குறி வைத்து அடிக்க வேண்டும். உருண்டோடிய நுங்கு அந்த வரிசையில் பட்டுச் சிதற வைக்கும். சிதறிய அத்தனை நுங்குகளும் அதை உருட்டி அடித்தவனுக்காகிவிடும். நுங்குகள் அந்த நீள் சதுரக் கோட்டெல்லையைத் தாண்ட வேண்டும். அவற்றைத் தான் அடித்தவன் எடுக்கலாம்.

மூன்று நான்கு என்றும் கிடைக்கும்; ஒன்றும் கிடைக்கும்; ஒன்றுமே கிடைக்காமலும் போகும்.

ஆறு மணிக்குத் தொடங்கும் விளையாட்டு, ஏழு ஏழரைக்கெல்லாம் முடிந்துவிடும்; முடித்துவிடவேண்டும்.

அந்த விளையாட்டு வீரர்களில் பெரும்பாலானோர் தமது சொந்தத் தொழிலான சீவல் தொழிலுக்குப் போகிறவர்களாயிருப்பர். கூலிப் பிழைப்புக்குப் போகிற ஒன்றிரண்டு பேரும், வெளிக்கிருக்கவென்று வந்த சிலரும் பார்வையாளர்களாயிருப்பர். அவர்களில் சிலரது கைகளைப் பாடசாலைக்குப் போகிற சிறுவர்கள் பற்றிக் கொண்டிருப்பர். ஐந்தாம் வகுப்புக்குக் கீழே படிக்கிற மாணவர்களே அவர்கள்.

ஐந்தாம் வகுப்புக்கு மேலே - அதாவது ஜே.எஸ்.ஸி. வகுப்பில் படிக்கிற மாணவன் ஒருவனும் அந்தப் பார்வையாளர்களுள் அடங்குவான்.

தனது வீட்டுக் கால்நடைகளுக்காக அவனும் நுங்கு பொறுக்க வருவான்.

காலில் முள்ளுத் தைக்காமலிருக்க, கள்ளிப் பலகையில் ஒரு மிதியடியைச் செய்து, தோலினால் பட்டி போட்டு அதை அணிந்து கொண்டு, ஐந்து மணிக்கே எழுந்து நுங்கு பொறுக்கப் போவான். பொறுக்கிய நுங்குகளுடன் வந்து, நுங்குச் சாக்கை ஒரு ஓரமாக வைத்து விட்டு விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருப்பான்.

விளையாட்டில் அவன் பங்கு பற்றுவதில்லை!

இந்த விளையாட்டில் அல்ல, எந்த விளையாட்டிலுமே அவன் பங்கு பற்றுவதில்லை!

நோஞ்சான் என்று சொல்வதற்குமில்லை. மரமேறி உரம் பெற்ற உடல் படைத்த தங்களுக்கு ஈடுகொடுத்து அவன் விளையாட மாட்டான் என்று அவர்களை அவனை ஒதுக்கி வைத்திருக்கிறார்களோ அல்லது படிக்கிற பிள்ளை விளையாடக் கூடாது என்ற எண்ணமோ தெரியாது.

சில சமயங்களில் ஏதாவதொரு விளையாட்டுக்குக் கன்னை பிரிக்கும்போது, ஓர் ஆள் குறைவாயிருந்தால் அந்த இடத்தை நிரப்ப அவனைச் சேர்த்துக் கொள்வார்கள். அவ்வளவுதான்!

ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமேயுள்ள பக்கத்திலுள்ள மிஸன் பள்ளிக் கூடத்தில், ஐந்தாம் வகுப்புப் படித்த காலை, ஒரு ஓட்டப் போட்டிக்கான பயிற்சித் தேர்வு நடைபெற்ற போது, அவன் வேகமாய் ஓடி முன்னுக்கு வந்து விட்டான். அதனால் இறுதிப் போட்டியில் பங்குபெற அவன் தெரிவு செய்யப்பட்டான். போட்டி நடைபெறும் தினத்தில் கையில்லாத பெனியன் அணிந்து வரவேண்டுமென்று ஆசிரியர் கட்டளையிட்டார். வீட்டார் அவனுக்கு ஒரு பெனியன் வாங்கிக் கொடுக்காததனால், அவன் அந்தப் போட்டியில் பங்கு பற்ற முடியாமற் போய்விட்டது.

இதுதான் அவன் விளையாட்டுத் துறையில் புரிந்த சாதனை!

விளையாட்டு நடைபெறுமிடத்துக்குக் கிழக்குப் பக்கமாகப் பரந்து கிடக்கிறது பெரும் மணல்வெளி. அந்த மணல் வெளியையொட்டிக் கோயில் கொண்டிருக்கும் ஈஸ்வரியம்மனுக்குக் குடை பிடித்துக் கொண்டிருக்கிறது ஓர் ஆலமரம். அந்த ஆலமரச் செறிவுகளுக்கூடாக,

கதிரவன் தன் கூரான விழிகளைச் செலுத்தி விளையாட்டைப் பார்க்க மேலெழுந்து வருவதற்குள் விளையாட்டு முடிந்துவிடும்.

விளையாட்டில் பங்கு பற்றியவர்கள், தங்கள் நுங்குச் சாக்குகளைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு வீடுகளுக்குத் திரும்புகிறார்கள்.

அவர்களோடு பார்வையாளர்களில் சிலரும் வீடுகளுக்குத் திரும்ப, வெளிக்கிருக்க வந்தவர்கள், பக்கத்திலுள்ள காணிகளுக்குள் நுழைந்து பற்றைகளின் மறைவில் வெளிக்கிருக்கிறார்கள். பற்றைகளின் மறைவிலிருந்து மலங்கழித்தலைத் தான் வெளிக்கிருத்தல் என்று மறை பொருளில் சொல்வது ஊர் வழக்கம். காணிக்குப் போதல் என்பதும் அதுதான்.

இராசனும் தன்னுடைய சாக்கை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு விரைவாக வீட்டை நோக்கி நடந்தான்.

அவன் பாடசாலைக்குப் போக வேண்டும்!

## 2

**வீ**ட்டு முற்றத்தில், அவனது தந்தை தீட்டுத் தடியை நிலத்தில் போட்டு, அதில் ஒரு காலை மடக்கி இருந்து கத்தி தீட்டிக் கொண்டிருந்தார். பக்கத்தில் இயனக் கூடு கிடந்தது. இரண்டு கத்திகள். ஒன்று பாளைக்கத்தி; மற்றது துணைக்கத்தி. பாளை சீவுகிற கத்திதான் பாளைக் கத்தி. பளிச்சென்று மினுங்கும். கூரோ கூர். பனை ஏறும்போது இடைஞ்சலாயிருக்கிற ஓலை, மட்டை, பன்னாடை போன்றவற்றை வெட்டித் தள்ளப் பயன்படுவதுதான் துணைக் கத்தி.

பாளைக் கத்தியைத் தீட்டி, கைவிரல் நகத்திலே உணாவி கூர் பார்த்துக் கொண்டிருக்கும் போது மனைவியானவள் குண்டுக் கோப்பையிலே தேத்தண்ணி கொண்டு வந்து வைத்தாள்.

கத்தி தீட்டுதலுக்கும் இந்தத் தேநீர் பரிமாற்றத்துக்கும் ஓர் உடன்பாடு. தேநீருடன்தான் வேலை ஆரம்பம். கத்தியை இயனக் கூட்டுக்குள் வைத்துவிட்டு அவர் தேநீர் பருகினார்.

வேளையிலே கொடுக்குக் கட்டிக் கொண்டுதான் தீட்டுத் தடியில் உட்காருவது வழக்கம். கத்தி தீட்டி முடிந்ததும் இயனக் கூட்டை அரையில் கட்டிக் கொண்டு, காதோல் மாதோல்களைப் போட்டுக் கொண்டார். பனையைக் கட்டி அணைத்துக் கொண்டு ஏறும்போது நெஞ்சு பாதிப்படையாதிருக்க மார்பில் அணியும் பாதுகாப்புச் சாதனம்தான் மாதோல். மார்பை மறைக்கும் தோல் மாதோல் ஆயிற்று. அதே போல், கால்களைப் பிணைக்கும் தளைநார், கணுக்கால் வளைவுகளை வெட்டாதிருக்க அணியும் சாதனம் காதோல். கால் தோல் காதோல் ஆயிற்று. தடித்த மாட்டுத் தோலினால் செய்யப்பட்டவை. எல்லாம் முடிந்தபின் முட்டியை எடுத்துக்கொண்டு, அவர் வீட்டோடிணைந்த காணிக்குள் இருக்கும் பனைகளில் ஏறப் போனார்.

இராசன் கொண்டு வந்த சாக்கை அடுப்படித் திண்ணையில் அவிழ்த்துக் கொட்டினான். முழிப்பாயிருந்த இரண்டு மூன்று நொங்குகளை எடுத்து ஒளித்து வைத்துவிட்டுக் காணிக்குப் போக ஆயத்தமானான். வீட்டுக்கு வடக்குப் பக்கமாக பண்டாவத்தை என்றொரு காணி. அதுதான் அவன் வெளிக்கிருக்கப் போகும் வழமையான காணி.

அவன் வந்த அசுகை தெரிந்ததும், அம்மாக்காரி அடுப்படிக் குள்ளிருந்து குரல் கொடுத்தாள்.

''ராசு, புட்டுக்கொண்டுமில்லை மோனை! ஓடிப்போய் கொஞ்சக் கருவாடு வாங்கிக் கொண்டாணை!''

''பள்ளிக்குடத்துக்கு நேரமெல்லே செல்லப் போகுது. நான் என்னம் காணிக்குக் கூடப் போகேல்லை. வந்து மோங் கழுவோணும்.''

''என்ர ராசாவெல்லை! நீ கனதூரம் போகவேண்டாம். முன்னுக்கிருக்கிற செல்லாச்சி வீட்டை கிடக்குது கருவாடு. நேத்துக் கண்டனான். கனக்கக் காயப் போட்டுக் கிடந்தது!''

சிணுங்கியபடி தாய் கொடுத்த காசை வாங்கிக் கொண்டு படலையைத் திறந்து போனான்.

காணிக்குப் போகிற அலுவல் பின் போடப்பட்டாயிற்று. வந்து போகலாம்; அல்லது போகாமலும் விடலாம். அது அடங்கிவிடும்; அல்லது அடக்கப்பட்டு விடும். வயதுக்கும் வாழ்க்கை முறைக்கும் இயற்கை உபாதைகள் இயைந்து போகிற விடயம் தானோ என்னவோ?

அடுக்களைக்குள் வள்ளி காலைச் சாப்பாடு தேடிக் கொண்டிருந்தாள். பிட்டுத்தான் அநேகமாக எல்லா நாளும். எப்போதாவது ஒருநாள் இடியப்பம். காலையிலேயே அரிசி இடித்து, மாவறுத்துத் தான் அவற்றைத் தேடிக் கொள்வாள். நாலைந்து நாட்களுக்குப் போதுமான மா இடித்துச் சேமித்து வைக்கும் வழக்கும் இல்லை. அன்றாடம் காய்ச்சிகளுக்கு அந்த வழக்கம் கிடையாது.

தோசை, பாலப்பம் என்ற வகையறாக்களும் உண்டு. அவை அபூர்வமாகத் தான்! அதுவும் சனி ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்றும்

லீவு நாட்களிலும் மட்டும்தான். அந்த ஆயத்தங்களுக்கு நேரமில்லாத காரணத்தால் பிட்டு, பிட்டு, பிட்டுத்தான் எந்த நாளும்!

பிட்டுக்குத் துணைப் பண்டமாகப் பழைய கறி ஏதும் இருந்தால் சரி. இல்லையென்றால் கருவாடுதான். அண்மைக் கடைகளில் வாழைப்பழம் விற்பது குறைவு. அந்தப் பூமிக்கு வாழை எட்டாம் பொருத்தம். முதல்நாள் பருத்தித் துறைச் சந்தைக்குப் போயிருந்தால், ஒரு சீப்பு வாழைப்பழம் வந்து சேரும். சம்பல் இடிப்பதும் உண்டு. சுகமான வழி பக்கத்தில் உள்ள கரையூருக்கு அனுப்பிக் கருவாடு வாங்குவதுதான். அதைச் சுட்டு கையில் ஒரு துண்டு கருவாடு கொடுக்க, பிட்டு வயிற்றுக்குள் போகும்.

தொங்கறிப் பாய்ச்சலில் வந்து சேர்ந்தான் இராசன். கையகலத்துக்கு ஒரு துண்டுக் கருவாடு, ஐந்து சதத்துக்கு வாங்கியது. அதை அம்மாவிடம் கொடுத்துவிட்டு, கரியை வாயில் போட்டுக் கொண்டு கிணற்றடிக்கு ஓடினான். சாரத்தை உரிந்து கொடியில் போட்டு விட்டு, கோவணத்துடன் நாலு வாளி அள்ளி ஊற்றினான். சவர்க்காரத்தைப் பூசினான். துணிக்குப் போடுகிற சவர்க்காரம் தான். மீண்டும் இரண்டு வாளி, குளித்து முடிந்தது. காகக் குளிப்பு.

மளமளவென்று சாப்பிட்டு முடித்தான். ஒளித்து வைத்திருந்த நுங்குகளை எடுத்து வந்து, பருமிளை உடைத்து நீக்கி விட்டு, பளிச்சென்று தெரிகிற வெள்ளை முகப்பைக் கத்தியால் அரிந்தான். வழ வழவென்று இரண்டு கண்களில் நுங்குத் தவிந்து பளபளத்தது. முக்காளி நுங்கு, அணிற்பிள்ளை ஒரு கண்ணை அரித்துவிட இரண்டு கண்கள் தான் கிடைக்கும். இருக்காளி நுங்கு எடுக்கமாட்டான். அதில் ஒரு கண்தான் மிஞ்சும். ஒருக்காளி என்றால் அதை அணில் அரித்துவிட வெறும் கோம்பைதான் மிச்சம். அதனால் அவன் முக்காளி நுங்குகளையே எடுத்து வைப்பான்.

அரிந்த நுங்கின் குழிக்குள் பெருவிரலை நுழைத்து, தவிந்தைப் பக்குவமாகத் தோண்டி வாயை வைத்து உறுஞ்சி உறுஞ்சிக் குடித்தான். அற்புதமான ருசி, ஒரு ரசனை, பூரிப்பு. கையையும் வாயையும் சாரத்தினால் துடைத்துவிட்டு அவன் பாடசாலைக்குப் போக ஆயத்தமானான்.

வேட்டி மட்டும்தான் உடுப்பு. கிழமைக்கு ஒரு தடவை அல்லது இரு தடவை சவர்க்காரம் போட்டுத் தோய்த்து, நீலம் போட்டுக் காய வைப்பான். அதை உடுத்திக் கொள்வான். மேல் உடம்பில் எதுவுமில்லை. வெறும் மேல்.

இரண்டாம் மூன்றாம் வகுப்புப் படித்த நாட்களில், பள்ளிக்கூடம் புறப்பட்டுச் செல்லும்போது, அம்மாக்காரி, தலைக்கு எண்ணெய் தடவிச் சீப்பால் இழுத்துவிட்டு, அந்தக் கையினாலேயே முகத்தை அழுத்தித் துடைத்து விடுவாள். முகம் எண்ணெயிலே மினுங்கும். அதோடுதான் பாடசாலைக்குப் போவான்.

இப்போது இராசன் அதை நீக்கிவிட்டான். தானே அளவாகத் தலைக்கு எண்ணெய் தடவி இழுத்துக் கொள்வான். கன்ன உச்சி, பக்குவமாக இருக்கும்.

பாடசாலைக்குரிய கொப்பிகள் புத்தகங்களை ஒரு சாண் உயரத்துக்கு அடுக்கி, சித்திரக் கொப்பியைக் கீழே வைத்து அதன் நீளப் பாகத்தை அப்படியே மேலெடுத்து எல்லாப் புத்தகங்களையும் மூடி - எல்லாவற்றையும் சேர்த்து ஒரு வாரினால் கட்டிவிடுவான். கலர்ப் பென்சில் பெட்டியை மேலே சொருகி அதனை இறுக்கிக் கொள்வான்.

இடது தோளில் அந்தப் புத்தகப் பார்சலை வைத்து இடது கையால் அதைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு அவன் பள்ளிக் கூடம் புறப்பட்டு விட்டான்.

வலது கையிலே மைக்கூடு. பாடசாலையிலுள்ள வாங்கு மேசையின் மேல் தட்டில் இடப்பட்டுள்ள வட்டமான துளையில் வைப்பதற்கேற்ற வகையில், விசாலமான தட்டை விளிம்பு அமைந்த பீங்கான் மைக்கூடு. வெள்ளை நிறப் பீங்கான். அதைத் தினமும் பாட சாலைக் கெடுத்துச் சென்று, மாலையில் கொண்டு வரவேண்டும்.

அவன் வீட்டுக்குள்ளிருந்து புறப்பட, அடுப்படிக்குள்ளிருந்து கழுவுவதற்காகச் சட்டி பானைகளை அள்ளிக் கொண்டு குடத்தடிக்கு வந்த வள்ளியின் கண்களில், அவனுடைய வெறும் நெற்றி பட்டெனத் தெரிந்தது.

''இதென்னடா, விறுமன் பிடிச்ச நெத்தியோடு போறாய்? திருநீத்தைப் பூசிக் கொண்டு போடா!''

வேலைச் சுமையின் தாக்கத்தினால் ஆத்திரத்துடன் கத்தினாள்.

இராசனுக்கு அரைகுறை மனம். அவன் படித்துக் கொண்டிருப்பது சைவப் பள்ளிக்கூடம். அம்மா சொல்லாவிட்டாலும் திருநீறு பூசாவிட்டால் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்களால் கண்டிக்கப்படுவான்.

உள்ளே திரும்பிப் போய், திருநீற்றுக் குடுவையில் கையை விட்டு, அதில் கொஞ்சம் எடுத்து நெற்றியிலே இலேசாகப் பூசிக்கொண்டு நடையைக் கட்டினான்.

சிறிது தூரம் றோட்டு. அதிலிருந்து இறங்கினால் பண்டாவத்தைப் பிள்ளையார் கோயில் முகப்பு. அதற்கடுத்துச் சிங்கள வயிரவர் கோவில். இவற்றுக்குமப்பால் கொஞ்சத் தூரம் பனங்காணிகளுக் கூடாக வளைந்தோடிய ஒற்றையடிப் பாதையால் போனதும், இலட்சுமணன் தோட்டப் பிள்ளையார் கோயில் தெரியும்.

அந்தக் கோயிலின் தென்புறமாகவுள்ள ஒரு பழைய கல் வீடுதான், அவனுடைய பள்ளித் தோழன் விவேகானந்தன் வீடு. அவன், இவனுக்காகக் காத்துக் கொண்டிருப்பான்.

படலையில் நின்று ''விவே!'' என்று கூப்பிட்டான்.

விவே, இராசனுடைய கோலத்தில் தோளில் பெரிய புத்தகக்கட்டும் கையில் மைக் கூடுமாகப் புறப்பட்டு வந்தான்.

''இண்டைக்குப் பிந்திப் போனாய் மச்சான். கெதியாய்ப் போகோணும்!'' என்று சொல்லியபடி விரைவாய்க் கால்களைப் பரப்பினான் அவன்.

கொஞ்சம் கறுவல். பிதுங்கிய விழிகள், நெற்றியில் விபூதியை முக்குறியில் பட்டை தீட்டியிருப்பான். நெஞ்சிலும் விபூதிப்பட்டை.

''கெதியாய் நடக்கோணும்!'' என்று சொல்லிக்கொண்டே மைக் கூடிருந்த கையை பக்குவமாக உயர்த்தி வாயைத் துடைத்தான்.

எந்நேரமும் அவனுக்கு வாயிலிருந்து, தடித்த உதடுகளால் எச்சில் வழிந்து கொண்டே இருக்கும்.

''தேவாரத்துக்குப் பிந்தினால் வெளியில் விட்டிடுவினம். பேந்து அடி வாங்கோணும்!'' என்று இராசனை வெறுப்புடன் பார்த்துக் கொண்டே முணுமுணுத்தான்.

மறுபடியும் வாயைத் துடைத்துக் கொண்டான்.

எதிரே சற்று உயரமாகப் பரந்து கிடக்கும் மணல் வெளியைக் கடந்து, கலட்டிச்சனம் கொட்டிக் குவிக்கும் குப்பை மேட்டைத் தாண்டி, அதற்கப்பாலுள்ள வேப்ப மரத்தடிச் சந்தியால் திரும்பினால் ஊர்மனை வந்துவிடும். ஊருக்குள் வடக்குத் தெற்காய் நீண்டு

கிடக்கும் ஒழுங்கையால் நடந்து றோட்டை அடைந்தால் தான் பள்ளிக்கூடம்.

ஊருக்குள் வந்தாயிற்று. இன்னும் கால் மைல் தூரம் நடக்க வேண்டும். அதிகாலைப் பொழுதாகையால் பக்கத்து வீடுகளிலிருந்து 'கிறிச்சுக் கிறிச்சு... கிறிச்சுக் கிறிச்சு' என்று நல்லெண்ணெய் வடிக்கும் செக்குகளின் சத்தம் காதுகளைத் துளைக்க, இருவரும் வேகமாக நடந்து கொண்டிருந்தார்கள்.

# 3

இராசன் ஐந்தாம் வகுப்பு வரை படித்தது, அவனுடைய கிராமத்துக்கண்மையிலுள்ள மிஸன் பாடசாலையில், அவனது அண்ணன்மார், அக்காமார் படித்ததும் அங்குதான். ஏன்? அந்தக் கிராமத்துப் பிள்ளைகள் அனைவரும் இப்போதும் அங்குதான் படித்துக் கொண்டிருக்கிறார்கள். கற்கோவளம் என்ற கிராமத்தை அண்டி அப்பாடசாலை அமைந்திருக்கிறது. அதனால், கற்கோவளம் மெ.மி. பாடசாலை என்று அதற்குப் பெயர். மெ.மி. என்பது மெதொடிஸ்த மிஸன் என்பதன் குறியீடு.

கிறிஸ்தவ சமயத்தைப் பரப்ப வந்த மிஸனரிமார், கல்விப் பணிக் கூடாகத் தங்கள் சமயப் பணியை முன்னெடுத்தார்கள். இயேசுவின் வழியில் பாவிகளையும் ஏழைகளையும் இரட்சித்து, அவர்களை மோட்ச இராட்சியப் பாதைக்கு - அதாவது தூய்மையானவர்களாக வாழ வைப்பதற்கு - ஆயத்தப்படுத்துவது அவர்களது ஊழியத்தின் அடிநாதமாகையால், அடக்கி ஒடுக்கப்பட்ட அல்லது துன்ப துயரங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியிலேயே தங்களின் பணியைத் தொடக்குவது இலகுவானதாயும் பயனுள்ளதாயும் அமைந்தது.

பாடசாலையின் தலைமையாசிரியராக இருந்தவர், பாடசாலையை யொட்டியிருந்த கற்கோவளம் கிராமத்தின் கடலோரமாக வசிப்பவர். மீனவ சமூகத்தைச் சேர்ந்தவர். ஜே.பி. செல்லத்துரை என்று அவருக்குப் பெயர். கிறிஸ்தவ சமயத்தில், அவரது முந்திய தலைமுறையினரே சேர்ந்ததன் காரணமாக, படிப்பில் அக்கறை கொண்டு ஓர் ஆசிரியராகத் துளிர்த்தவர். சாந்த குணம் நிரம்பப் பெற்றவர். பாடசாலைப் பணியோடு, சமயத்தைப் பரப்புவதற்கு அர்ப்பணிப்போடு சேவையாற்றியவர்.

அதன் காரணமாக, அப்பாடசாலையைச் சுற்றியுள்ள கிராமங்களில் வசித்து வந்த தாழ்த்தப்பட்ட மக்களாகிய நளவர், பள்ளர்,

பறையர், வண்ணார், அம்பட்டர் சமூகத்தைச் சேர்ந்த சகலருடைய பிள்ளைகளும் அப்பாடசாலையில் படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

தலைமையாசிரியரின் ஊரைச் சேர்ந்த மீனவக் குடும்பங்களின் பிள்ளைகளும் அங்கே படித்தனர்.

பாடசாலைக்கு வடக்கே, வேளாண் மரபினர் வசிக்கும் தும்பளை என்னும் பெரிய கிராமம் இருக்கிறது. இந்த வேளாளருக்கு மடப்பள்ளி வேலை செய்யும் மடப்பள்ளியர் எனப்படும் சமூகத்தினர், தும்பளையோடு இணைந்துள்ள நெல்லண்டை என்னும் பகுதியில் வாழ்கின்றனர். இவர்களுடைய பிள்ளைகளிலும் சிலர் இங்கே கற்றனர்.

இராசனுடைய தந்தையாகிய கந்தன், முன்னாளில் ஒரு கள்ளுத் தவறணைக் குத்தகைக்காரன். அனுராதபுரம், முல்லைத் தீவு, சாவகச் சேரி போன்ற இடங்களில் அவர் கள்ளுத் தவறணைகளை எடுத்து நடத்தினவர்.

இராசனுடைய அண்ணன்மார் இப்பாடசாலையில் ஐந்தாம் வகுப்புப் படித்து முடிந்ததும் அத்தோடு நிற்பாட்டி, சிறிது காலம் கடந்ததும் கந்தன், அவர்களைத் தனது கள்ளுத் தவறணையில் தொட்டாட்டு வேலைகள் செய்யக் கூட்டிக் கொண்டு போய் விட்டார். படிப்புக்கு முற்றுப்புள்ளி.

அந்தத் துயரம் மனதை அழுத்திக் கொண்டிருந்ததால், இராசனுடைய மூத்த அண்ணனான தம்பிப் பிள்ளை, இராசன் ஐந்தாம் வகுப்புப் படித்து முடிந்ததும், எப்படியாவது மேற்கொண்டு படிக்க வைப்பது என்று முடிவு கட்டியிருந்தார்.

அதன் பலன்தான், இராசன் இப்போது சைவப் பாடசாலையில் படித்துக் கொண்டிருப்பது. பட்டினத்திலே ஆங்கிலப் பாடசாலைகள் இரண்டு உள்ளன. ஒன்று மிஸனரிமார் நடத்தும் ஹாட்லிக் கல்லூரி. மற்றது வேலாயுதம் ஆங்கில பாடசாலை என்று தடித்த வேளாளர் நடத்தும் பாடசாலை. எளிய சாதிப் பிள்ளைகள் அங்கு கால் வைக்கவே முடியாது. ஹாட்லியில் படிக்கலாம். மாதா மாதம் காசு கட்டிப் படிக்க வேண்டும். அத்துடன் அரிவரி வகுப்பிலிருந்து, அல்லது மூன்றாம் வகுப்பிலாவது அக் கல்லூரியில் சேர்ந்து படித்தால் தான் ஆங்கில அத்திவாரம் அமையும். தமிழ் மொழியில் ஐந்தாம் வகுப்புப் படித்து விட்டு அங்கு போய் ஆறாம் வகுப்பில்

சேருவது கஷ்டம். தூரமும் அதிகம். அதனால் அப்பாடசாலைகளை நினைத்துப் பார்க்கவும் முடியாது.

கிறிஸ்தவ மிஸனரிமாரிடமிருந்தும் கத்தோலிக்கப் பாதிரிமாரிடமிருந்தும் தமது சமயத்தைப் பாதுகாக்கவும், அவர்களது கல்விப் பணியை முன்னெடுத்துச் செல்லவுமாக, அப்போது ஆரம்பிக்கப்பட்டதுதான், அந்தச் சைவப் பாடசாலை. தும்பளைச் சிவப்பிரகாச வித்தியாசாலை என்று அதற்குப் பெயர். 1937இல் ஆரம்பிக்கப்பட்டது.

அதை முன்னேற்றுவதற்குப் பல வழிகளிலும் முயற்சிகள் நடைபெற்றன.

ஐந்தாம் வகுப்புப் படித்து முடித்த இராசனை மேற்கொண்டு என்ன செய்வது? என்று வீட்டில் பெரும் ஆலோசனை நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம், அங்கு வாடிக்கையாகக் கள்ளுக் குடிக்க வரும் சீனியர்தான் அதற்கு வழிகாட்டினார்.

மடப்பள்ளி வகுப்பைச் சேர்ந்தவர் அவர். உயர் வகுப்பு வேளாளர் ஆரம்பித்த அப்பாடசாலையில் அவர் மகன் படிப்பிக்க இடம் கிடைத்திருந்தது.

பாடசாலைகளில் படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் தான் அந்த நாட்களில் ஆசிரியர்களுக்குச் சம்பளமும், பாடசாலைத் தேவைகட்கு நிதி ஒதுக்கீடும் என்ற நிலைவரம் இறுக்கமாய் இருந்தது.

இந்த நிலைமையில் இராசனுடைய அம்மாக்காரி, சீனியரிடம் வழி கேட்க, அவர் அப்பாடசாலையில் படிப்பிக்கும் தன் மகனுடைய காதில் அதைப் போட, அவர் பாடசாலைத் தலைமையாசிரியரிடம் எடுத்துச் சொல்ல, வேண்டுதல் பழமாய்க் கனிந்தது!

தம்பிப் பிள்ளை தம் தம்பியாகிய இராசனை மட்டுமல்லாமல், தனது சொந்த மைத்துனனையும் - அதாவது தாயுடைய தம்பியாரின் மகனையும் அங்கு சேர்த்து விட்டார்.

இராசனுக்குத் தொடர்ந்து படிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது மகா சந்தோஷம்! ஆனால் அவன் பாடசாலையில் நுழைந்ததும் அந்தச் சந்தோஷம் கேள்விக் குறியாயிற்று.

இராசனுக்கும் அவனுடைய மைத்துனன் தம்பிராசாவுக்கும் தனிவாங்கு. அதுவும் கடைசி வரிசையில். வேளாள மாணவர்களும், மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களும் முன்வரிசையில்.

அத்துடன் தண்ணீர் குடிப்பதற்குக் கிணற்றடிக்குப் போனால், மற்ற மாணவர்கள் அள்ளி ஊற்ற வேண்டும். கிணற்றில் அவன் தண்ணீர் அள்ளக் கூடாது. தனக்கேற்படும் தாகத்தைத் தீர்க்க, அவன் யாரையும் எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டும்.

கற்கோவளம் பாடசாலையில் அந்த நிலைமை அவனுக்குப் புலப்படவில்லை. ஐந்தாம் வகுப்பு வரைதான் அங்கு உள்ளது. அந்த வகுப்பு வரை படிப்பவர்கள் சிறுவர்கள். அவர்களால் கிணற்றில் தண்ணீர் அள்ள முடியாது. அதனால் மிஸனரி நிர்வாகம், தொட்டிகளைக் கட்டி வைத்தது. காலையில் வரும் வளர்ந்த பிள்ளைகள் மூலம் தொட்டிகள் நிரப்பப்படும். மாணவர்கள் பைப்பைத் திறந்து கையில் ஏந்தி நீர் பருகுவார்கள்.

ஏழை எளிய மக்கள் வாழும் கிராமங்களுக்கு நடுவில் அப்பாடசாலை அமைந்திருந்ததனால், அந்த வகைப் பிள்ளைகளே பெருமளவில் அங்கு கற்றமை காரணமாக வாங்குகளில் அவர்கள் பேதமின்றி அமர்த்தப்பட்டனர். அவர்களுள்ளும் மீன் பிடிக்கும் கரையார் பெருந்தடிப்பு இல்லாதவர்களாதலால், தனிவாங்கு என்ற பிரச்சினைக்கே இடமிருக்கவில்லை.

ஆனால் இங்கோ...?

இராசனுடன் படிக்க வந்த அவனுடைய மைத்துனப் பையனை, சேர்ந்த இரண்டொரு மாதங்களில் அவனுடைய தந்தை, கள்ளுக் கொட்டிலில் கள்ளு விற்க அழைத்துச் சென்று விட்டார். இராசன் தனித்துப் போனான்.

தனி வாங்கினில், எளிய சாதி என்ற லேபலைக் குத்திக் கொண்டு மனப் புழுக்கத்தோடு படிக்க வேண்டியதாயிற்று.

இந்த நிலைமையில்தான் முழி விவேகானந்தன் அவனுக்குச் சிறிது ஆறுதலாயிருந்தான்.

பிதுங்கிய விழிகளும், வாணீரும் அவனை உயர்சாதி மாணவரிடமிருந்து சற்றே விலக்கி வைக்க, அவனும் இராசனைத் தனக்கொரு துணைவனாக்கிக் கொண்டான்.

அதிர்ஷ்ட வசமாக அவனுடைய வீடும், பாடசாலையிலிருந்து சற்றுத் தூரத்தில், இராசன் செல்லும் வழியில் இருந்தது.

அத்துடன், அவன் விசுவகர்ம குலத்தவன். தட்டான். என்றாலும், இராசன் அவனுக்குப் பக்கத்திலிருக்கவோ, அன்றி விவே, இராசனுடைய வாங்கிலில் உட்கார்ந்து படிக்கவோ முடியாது.

இராசனுக்குத் தனி வாங்குதான்!

இந்தப் பாகுபாடு, அவன் மனதைப் பெருமளவில் பாதித்தது. என்றாலும் படிப்பிலிருந்த ஆர்வம் அவனைச் சகித்துக் கொள்ள வைத்தது.

புதிதாய்த் தொடங்கப் பெற்ற பாடசாலை. பாடசாலையை முன்னேற்றுவதற்கு படிப்பித்தலில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். 'இந்து போட்' தன் கூர் விழிகளைப் பாய்ச்சிக் கொண்டிருந்தது. அதனால் ஆசிரியர்கள் மிகுந்த அக்கறை செலுத்திப் படிப்பித்தார்கள்.

இராசனை, பாடசாலையின் படிப்பித்தல் திறமை வெகுவாகக் கவர்ந்தது. அதனால் அவன் தனக்கேற்பட்ட பாதிப்பைச் சகித்துக் கொண்டு மற்ற மாணவர்களுக்குச் சளைக்காமல் படிப்பில் கவனம் செலுத்தினான்.

ஆறாம் வகுப்பில் சேர்ந்தவன், பல மனநெருடல்களுக்கு மத்தியில் எட்டாம் வகுப்பைத் தாண்டி எஸ்.எஸ்.ஸி.யில் கால் பதித்து விட்டான்.

# 4

இராசனும் விவேயும்...

வியர்க்க விறுவிறுக்க நடந்து வந்து, ஒழுங்கைப் பக்கமாகவுள்ள சின்னக்கேற்றுக்கூடாக நுழைந்து, தயங்கித் தயங்கித் தங்கள் வகுப்புப் பக்கம் வந்தால்...

அங்கு பாடம் நடந்து கொண்டிருந்தது. சமய பாடம். தலைமையாசிரியர் தான் பாட ஆசிரியர்.

பாடசாலை தொடங்கி வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது பிந்திவரும் மாணவர்கள் உள்ளே செல்ல முடியாது. அந்த மாணவர்களைக் கவனிக்கும் பொறுப்பு தலைமையாசிரியருக்கே யுரியது. இப்போது அவரே படிப்பித்துக் கொண்டிருக்கும்போது...

இராசனும் விவேயும் வெளியில் நின்று பதற்றமுறுவதை மாணவர் முகங்களிலிருந்து கண்டு கொண்ட தலைமையாசிரியர், மெல்ல வாசற்பக்கம் திரும்பிப் பார்த்தார். இருவரும் நடுங்கிக் கொண்டு நின்றார்கள்.

''ஏன் பிந்தினீங்க?'' மிறாய்ப்பான குரலில் கேட்டார்.

''வீடு தூரம் வாத்தியார்!''

''அதுதான் தெரியுமே! வெள்ளென வெளிக்கிட்டு வர வேணும்.''

''இனிமேல் வெள்ளென வெளிக்கிட்டு வாறம்!'' மிகவும் பணிவான குரலில் சொன்னான் விவே.

''சரி, வந்திருங்கோ!'' என்று நிதானமாய்ச் சொல்லிவிட்டு, அவர் பாடத்தைத் தொடர்ந்தார்.

பிந்தி வந்ததற்குத் தண்டனை வழங்கி அவர்களை வெளியே நிற்பாட்டினால், தன்னுடைய பாடத்தை அவர்கள் இழக்க நேரிடுமே

என்று அந்த நேரத்தில் அவர் மனது தொட்டிக் காட்டியிருக்க வேண்டும்.

மிகவும் ஆஸ்தான சீலர். பெரும் வைதீகர். விபூதியும் சந்தனப் பொட்டும் தவறாமல் நெற்றியை அலங்கரித்துக் கொணடிருக்கும். நடு உச்சி பிளந்த தலைமுடி. குட்டையான தோற்றம்.

அங்கு படிப்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரும் நாஷனல் அணிவார்கள். வெள்ளிக்கிழமைகளில் சிலர் நாஷனல் இல்லாமல் சால்வையால் உடம்பைப் போர்த்திக் கொண்டு வருவார்கள். ஆனால், இவர் எல்லா நாட்களிலும் வேட்டிக்கு மேலே கழுத்தைச் சுற்றிச் சால்வையைப் போட்டுக் கொள்வார்.

தேவாரம், திருவாசகம் எல்லாம் தண்ணி பட்ட பாடாய் ஒப்புவிக்க வேண்டும். இல்லையென்றால் தண்டனைதான். பிரம்படி.

பாடசாலை தொடங்கும் வேளையில், தலைமையாசிரியரைச் சந்திக்க யாராவது வருவார்கள். மேசையிலும் ஏதாவது வேலைகள் இருக்கும். அதனால் வகுப்புக்கு வர முடியாது இருப்பதுமுண்டு.

''கடவுளே, பிள்ளையாரே! இண்டைக்கு வராமல் விட்டால் ஒரு சதம் உண்டியல்லை போடுவன்!'' என்று ஒவ்வொருத்தரும் நேர்த்தி வைப்பார்கள்.

வரவில்லையென்றால், உடனேயே தலைக்கு ஒரு சதம் அரைச்சதம் என்று தண்டி, பாடசாலையில் இருக்கும் சரஸ்வதி தேவியின் உண்டியலில் போட்டு விடுவார்கள்.

சமய பாடம் படிக்காமலிருப்பதற்கு கல்வித் தெய்வத்துக்கே நேர்த்தி. அதாவது லஞ்சம்!

எப்படி இருந்தாலும் அன்று தண்டனை இல்லாமல் வகுப்பில் நுழையக் கிடைத்த சந்தர்ப்பத்தை நினைத்து இருவரும் மகிழ்ந்தார்கள்.

அழகான எழுத்து இராசனுக்கு. தமிழை எழுதுவதில் மிகவும் ஆர்வம் உள்ளவன். சித்திரம் வரைவதிலும் வல்லவன்.

கணிதம், சரித்திரம், பூமி சாஸ்திரம், நாட்டுச் சீவன சாஸ்திரம், இலக்கியம், சித்திரம் என்றெல்லாம் பாடங்கள்.

எஸ்.எஸ்.ஸி. வகுப்புக்கு வந்ததும், முன்பு அதே வகுப்பிற் படித்த ஒரு மாணவனிடம் பல்லைக் காட்டி, அவனுடைய குறிப்புக் கொப்பிகளை வாங்கி, புதிய மொனிற்றேஸ் கொப்பிகளில் அவற்றை எழுத வேண்டும். முதலாந் தவணை தொடங்கியதும் இந்த வேலை நடைபெறும்.

பூமி சாஸ்திரத்தில் உலகப் படங்கள், இலங்கைப் படங்கள் போன்றவை, இயற்கை அமைவு, சனத்தொகை, போக்குவரத்துப் பாதைகள் என்ற வகையிலும், நாட்டுச் சீவன சாஸ்திரத்தில், வீட்டில் வளர்க்கப்படும் மிருகங்கள், நாட்டுத் தாவரங்கள், செடி கொடிகள், மலர் வகைகள் போன்றவற்றையும் எல்லா மாணவரையும் விட பளிச்சென வரைந்து விடுவான் இராசன்.

வியாசத்துக்குக் கொடுக்கிற தலைப்புகளில், மற்றைய மாணவர் கொடுக்காத ஏதாவது கருத்தினைத் தெரியப்படுத்துவான்.

எப்பாடு பட்டேனும் கலர்ப் பென்சில் பெட்டி ஒன்று வாங்கி வைத்துக் கொள்ளுவான். சித்திரங்களை மிகவும் கவர்ச்சியாக வரைந்து, கண்ணைப் பறிக்கும் வகையில் வர்ணம் தீட்டுவான்.

தனிவாங்கு மாணவன். உற்சாகமாய்ப் படித்து, வகுப்பிலுள்ள முன்னணி மாணவர்களுள் ஒருவனாகத் திகழ்வது, ஆசிரியர் மத்தியில் அவன் மீது ஒரு பற்றை ஏற்படுத்தியது. ''இராசன், உன்ரை வியாசக் கொப்பியைக் கொண்டு வா!'' என்று கேட்டு தமிழ் படிப்பிக்கும் ஆசிரியர் அவனை முன்னிலைப் படுத்துவார்.

மாணவர் மத்தியில் இது எரிச்சலை உருவாக்கும். ஆசிரியர் அவனை முதன்மைப்படுத்துவது சகிக்க முடியாததாயிருக்கும். அதனால், வகுப்பில் பரஸ்பரம் உதவும் சிறு நிகழ்ச்சிகளில் கூடக் கண்டிப்பாக நடந்து கொள்வார்கள். அவன் பங்கு பற்றும் பொது நிகழ்ச்சிகளுக்கு மன இசைவு தர மாட்டார்கள்.

விவேகானந்தன் தான் இராசனுக்கு உதவி.

பென்சில் கூர் உடைந்தால் அதைக் கூராக்குவதற்குப் பேனாக் கத்தியைக் கொடுப்பதிலிருந்து, ஒரு வரைபடத்தைப் பிரதி எடுக்கும்போது, அந்த ரிஸ் யூத்தாளைக் கொப்பியில் வைத்து அழுத்திப் பிரதி செய்யும் போது பிடித்துக் கொள்ளுதல் எல்லாவற்றுக்கும் விவேதான் உதவி செய்வான்.

'கார்பன்' தாள் பரவலாகப் பாவனைக்கு வராத காலமது. பிரதி எடுத்த ரிஸ்யூத்தாளைக் கொப்பியில் அழுத்திப் பதிவு செய்து விட்டுப் பின்னர் ரிஸ்யூவை அப்புறப்படுத்தி விட்டு பதிந்த மூல வடிவத்தைப் பேனா அல்லது பென்சிலால் வரைவு செய்ய வேண்டும்.

விவேயின் எழுத்து அவனது முகத்தைப் போல. பருத்த முழியும், வாணீர் ஒழுகும் தடித்த உதடுகளும், படியாது பொங்கி நிற்கும் தலைமுடியும் போல, வடிவில்லாத எழுத்து. அதனால் இராசனுடைய உதவி அவனுக்கு நிறைய வேண்டியிருந்தது.

படங்கள் வரைவதற்கு, வீட்டுப் பாடங்கள் ஆயத்தம் செய்வதற்கு, குறிப்புக்கள் எழுதி வைப்பதற்கு இருவரும் ஒன்றாய்ப் போய் வருவதற்கு. பள்ளியில் தனிவாங்குப் புறக்கணிப்பு. கிணற்றில் தண்ணீர் அள்ள முடியாத ஒதுக்கீடு, மாணவர் மத்தியில் புகை விடும் பொறாமை இவைகளின் மத்தியில், இராசனுக்கு, விவேகானந்தன் பாலைவனத்தில் கிடைத்த பசும்புனல் போல.

தன் திறமையில் மனம் நெகிழ்ந்து, அவன் மேல் அன்பு காட்டும் ஆசிரியர்கள், கொடிய வெயிலில் கிடைத்த குளிர் நிழல் போல.

சாதி ரீதியாகத் தனக்கு ஏற்பட்ட பாதிப்புக்களைப் பொறுமையுடன் சகித்துக் கொண்டு அவன் படிப்பில் அக்கறை செலுத்தினான்.

## 5

சில நாட்களில், விவே ஏதாவதொரு வீட்டுப் பாடத்தைச் செய்யாமல் விட்டிருப்பான்.

அந்தப் பாடத்துக்குரிய ஆசிரியர் கண்டிப்பானவராயிருந்தால் அன்றைக்கு அவன் பாடசாலைக்கு முழுக்குப் போடுவதற்கு எண்ணி விடுவான்.

இராசன் போய் படலையில் நின்று கூப்பிடும்போது, அவன் பாடசாலைக்கு ஆயத்தமாகவே புறப்பட்டு வருவான்.

சிறிது தூரம் நடந்தபின், ''கனக்கப் படிச்ச என்னத்தை மச்சான் கிழிக்கப் போறம்?'' என்று சிரித்துக் கொண்டே கேட்பான்.

''ஏன்? எல்லாம் படிச்சு முடிச்சிட்டியோ?'' என்று நக்கல் தோரணையில் திருப்பிக் கேட்பான் இராசன்.

''இண்டைக்குக் கடலுக்குப் போய்க் குளிக்க ஆசையாயிருக்கு!'' வாணீரைத் துடைத்துக் கொண்டே சொல்வான் விவே.

இராசன் அவனை ஆச்சரியத்தோடு பார்ப்பான்.

விவேயின் கண்களில், ஏதோ ஒரு தயக்கத்தை மறைக்க எழுந்த குறியீட்டுணர்வு மெல்லத் தெரியும்.

அந்த உணர்வினால் இராசனும் கவரப்படுவான்.

அந்தக் கவர்ச்சி, கடற் குளிப்பில் ஏற்பட்ட கவர்ச்சியல்ல. பள்ளியில் நிரந்தரமாகவே அனுபவிக்கும் சாதிப் பாகுபாட்டுக் கொடுமைகளிலிருந்து சற்று ஒதுங்கியிருக்க எழுந்த உணர்வு.

மெல்ல மெல்ல உடலில் ஊறிச் சாகவைக்கும் விஷத்தைப் போல, மெல்ல மெல்ல அவன் உணர்வுகளில் உறைந்து மரக்க

வைக்கும் சமூக நச்சிலிருந்து சிறிதுநேரம் விலகி நிற்க அருண்ட மனஉணர்வு.

இன்று அவன் அருமையாக எழுதிக் கொண்டு வரும் கட்டுரை மனதில் எழுந்து ஓர் ஆதங்கத்தை உண்டாக்கியது.

'ம்... ம்... இண்டைக்காவது அவங்கடை கட்டுரை முதலிடத்தைப் பெறட்டுமே...!' என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டான்.

'பாராட்டுப் பெறவில்லையென்றால் ஒருவனுடைய ஆற்றல் என்பது இல்லாத பொருளாகி விடுமா?'

அந்தப் பிஞ்சுமன ஆழத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது.

''சரி, போவோம்! எனக்கும் கடலில் குளிக்க ஆசையாயிருக்கு!'' என்று மகிழ்ச்சி பொங்கும் குரலில், விவேயின் முதுகில் கை வைத்துச் சொன்னான் இராசன்.

பள்ளிக்கூடம் செல்வதற்குப் பல வழிகள். வழமையாகப் போகிற வழியை விடுத்து, மற்றொரு வழியால் போனார்கள். அந்த வழியில் ஒரு பிள்ளையார் கொலுவீற்றிருக்கிறார். கலப்பனாவத்தைப் பிள்ளையார் கோவில் என்று அதற்குப் பெயர்.

கோவில் தெற்கு வீதியில் தகரக் கூரை போட்ட ஒரு சிறிய மண்டபம். நிறையப் பனை மரங்கள் அடுக்கியிருந்தார்கள். அந்த இடுக்குகளில் புத்தகக் கட்டுகளை மறைத்து வைத்து விட்டுக் கடலை நோக்கி நடந்தார்கள். புத்தகக் கட்டுகளோடு கடற்கரைக்குப் போனால், பார்ப்பவர்கள் தங்களின் கள்ளத்தனத்தைக் கண்டுபிடித்து விடுவார்களே என்ற பயத்தினால் தான் அவற்றை மறைத்து வைத்தார்கள்.

முனைக் கடற்கரை. கோரியடி என்றுதான் அந்த இடத்தைச் சொல்வார்கள். 'லைற் ஹவுஸ்' எனப்படும் வெளிச்ச வீட்டைக் குறிக்கும் சொல்தான் கோரி.

பரவைக்கடல். மத்தியானம். கடல் பெருக்கெடுக்கிற நேரம் வரைக்கும் அரையளவு நீர்தான். மணற் பிராந்தியம். இடையிடை மட்டும் சிறிய கற்பாறைகள். சூரிய வெளிச்சத்துக்கு கடல் அடியில் படர்ந்துள்ள பாசி, கடற்செடிகள், கடலட்டை, நகர்ந்து திரியும் நண்டுக் கூட்டங்கள் பளிச்சென்று தெரியும்.

வேட்டிகளைக் களைந்து மடித்து, கரையிலிருந்த ஒரு கட்டு மரத்தில் வைத்துவிட்டுக் கோவணத்துடன் கடலில் இறங்கினார்கள்.

சில இடங்களில் குந்தியிருந்தால் மார்பளவு நீர்தான். சில இடங்களில் நிற்கும் போதே மார்பளவுக்கு நீர்.

நீருக்குள் முங்கி முங்கி எழும்புவதும், சிறிது நேரம் மூச்சடக்கிக் கொண்டு அமிழ்ந்து கிடந்து, பின் வெளியே தலையை எடுத்து திணறலுடன் கொப்புளித்து, மூச்செறிந்து ஆசுவாசம் கொள்வதும், கால்கள் சற்று ஆழமான இடங்களில் பதிய நீர் தோள் மூட்டு வரை ஏறி மூக்கை எட்ட, கைகளால் நீரை அடித்து அடித்து நிலை கொள்வதும்... திடீரென்று எதிரில் நிற்பவன் மீது நீரைக் கையால் உராய்ந்து முகத்திலடித்துத் திக்கு முக்காட வைப்பதுமாய்...

*பாடசாலைப் பொழுது கழிய வேண்டுமே...!*

இத்தனைக்கும் இரண்டு பேருக்கும் நீச்சலடிக்கத் தெரியாது. கையை வலித்துக் காலை அடித்துத் திணறுவதுதான்.

பதினொரு மணிபோல், வெளிச்ச வீட்டைத் தாண்டி மூன்று நான்கு வாகனங்கள் வந்தன. பட்டாளக்காரருடைய வாகனங்கள். பட்டாளக்காரருடைய தோள்களில் துப்பாக்கியும், தலைகளில் இரும்புத் தொப்பியும், ஆஜானுபாகுவான தோற்றம். வெள்ளை நிறம். மட்டான தாடி.

வெள்ளைக்காரன் தாடி வைக்க மாட்டான். பஞ்சாபிக்காரரோ என எண்ணிக் கொண்டார்கள்.

இராசனும் விவேயும் குளிக்குமிடத்துக்கு எதிரில் வந்து மணல் தரையில் வாகனங்களை நிறுத்தினார்கள். தொப்புத் தொப்பென்று கீழே குதித்தார்கள்.

ஒரு வாகனம் பாரிய ஆயுத வாகனமாகத் தெரிந்தது. அதில் நீட்டிக் கொண்டிருந்த பெரிய குழாய் வானை நோக்கிக் கொண்டிருந்தது.

''*பீரங்கியடா விவே!*'' என்றான் இராசன்.

''*ஏரோப்பிளேனைச் சுட்டு வீழ்த்த!*'' என்றான் விவே. பயம் வரவில்லை. வேடிக்கை பார்க்கிற உணர்வு.

இரண்டாவது உலக மகாயுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலம் அது! எம்மை அடிமைப்படுத்தி வைத்திருந்த வெள்ளைக்காரன்,

தன் எதிரி, எம் தேசத்தைக் கைப்பற்றி விடக் கூடாதே என்ற போர் ஆயத்தமாக தன் படைகளை எம் நாட்டிலும் குவித்திருந்தான்.

அந்தப் படையினர்தான் இங்கும் வந்துள்ளார்கள்.

கரையேறி, வேட்டிகளை எடுத்து உடுத்திக் கொண்டார்கள். வாகனங்கள் வந்ததிலிருந்து, தலைகளை நீருக்குள் அமிழ்த்தாது வைத்த கண் வாங்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததால், தலைகள் இலேசாகக் காய்ந்து விட்டன. கண்கள் சிவந்து காணப்பட்டன.

மெதுவாக இராணுவ வாகனங்கள் நின்ற பக்கம் வந்தார்கள்.

இராணுவத்தினரும் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார்கள். அவர்களில் இருவர், றோட்டுக்கப்புறம் மதிலையண்டினாற் போல நின்ற குட்டைத் தென்னை மரத்தில் நிறைய இளநீர்க் குரும்பைகள் இருப்பதை ஆவலோடு பார்த்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

கொழும்பில், கல்வித் திணைக் களத்தின் பிரதம பணிப்பாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த கே.எஸ். அருள்நந்தி அவர்களின் வீட்டு மதில் அது. அச்சமயம், அப்பகுதியில் பாடசாலைப் பரிசோதகராகப் பணியாற்றிக் கொண்டிருந்த மிஸ் கூல்ட் என்ற அம்மையார் அவ்வீட்டில் வசித்து வந்தார். கூல்ட் அம்மையார் பாடசாலைக்கு வருபவர் என்பதால் அந்த விபரம் அவர்களுக்குத் தெரிந்திருந்தது.

இராணுவத்தினர் அந்தப் பக்கம் வந்த இவர்களைப் பார்த்து, அந்தத் தென்னையைச் சுட்டிக்காட்டி ஏதோ கேட்டார்கள்.

பாஷை புரியவில்லை. விஷயம் புரிந்து விட்டது. 'இளநீர் பறித்துத் தர முடியுமா?' என்று கேட்கிறார்கள்.

இராசன், விவேயைப் பார்த்தான். விவே இராசனைப் பார்த்தான். இராசனின் முகத்தில் சம்மதத்தின் அறிகுறி. அந்த முக பாவத்தை அவர்கள் புரிந்து கொண்டு விட்டார்கள்.

அவ்வளவுதான்! ஒரு பட்டாளத்தான், இராசனின் தோளில் கையை வைத்து, அந்த மதிலண்டை அவனை அழைத்துச் சென்றான்.

அப்படியே அலாக்காகத் தூக்கி, அவனை மதில் மேல் நிறுத்தினான். இராசன் மதில் மேல் நின்றுதான் கொடுக்குக்

கட்டினான். மரத்தைக் கைகளால் அணைத்துப் பிடித்துக் கொண்டு மேலே ஏறினான். வட்டுக்குள் நுழைய முடியவில்லை. அதனால் ஒரு கையால் மட்டையை இறுகப் பற்றிப் பிடித்துக் கொண்டு, கால்களால் மரத்தை வளைத்துக் கொண்டு, சிரமப்பட்டு ஒரு குலையிலிருந்த இளநீர்க் குரும்பைகளைத் திருகித் திருகிக் கீழே போட்டான். இராணுவ வீரர் பலரும் அங்கே வந்து விட்டனர். தங்கள் வலிய கரங்களால் அந்த இளநீர்க் குரும்பைகளை ஏந்தி ஏந்தி எடுத்தனர்.

மதிலுக்கு உள்ளே விழுந்த குரும்பைகளை, ஒரு வீரன் மதிலாற் பாய்ந்து இப்பால் எடுத்துக் கொடுத்தான். இராசன் மூச்சு வாங்கக் கீழே இறங்கினான். மதிலில் கால் வைத்ததுதான் தாமதம். ''தாங்க்யூ! தாங்க்யூ!'' என்று சொல்லிக் கொண்டு, அலாக்காகக் கீழே விட்டான் ஒருத்தன்.

இராசனின் கையில் ஒரு தாள்க் காசை வைத்தான் அவன். இன்னொருவனும் ஒரு தாளை எடுத்துக் கொடுத்தான்.

விவேயின் கையிலும் மற்றொருவன் ஒருதாளை வைத்தான்.

பத்து ரூபா நோட்டுக்கள்!

''பாடசாலைக்குக் கள்ளம் போட்டதற்குக் கிடைத்த பரிசு!'' என்று சொல்லிவிட்டு வாயைத் துடைத்தான் விவே.

''உனக்கு விசர். இப்படி நினைச்சுக் கொண்டு ஒவ்வொரு நாளும் பாடசாலைக்கு மட்டம் போட்டிடாதே. இது மரமேறத் தெரிஞ்சதாலை எனக்குக் கிடைச்ச பரிசு!'' என்றான் இராசன்.

## 6

"மரமேறத் தெரிஞ்சதாலை எனக்குக் கிடைச்ச பரிசு!''

அந்த நேரத்தின் சூழ்நிலைக்கேற்ப இராசன் இதைச் சொல்லி விட்டாலும், அவனது மன ஆழத்திலே அதன் பாதிப்பு பெரும் வேதனையைக் கொப்புளித்துக் கொண்டிருந்தது.

மரமேறத் தெரிந்ததால் அவனுக்கு எத்தனை பரிசுகள்?

பாடசாலையில் தனிவாங்கு.

அங்குள்ள கிணற்றில் தண்ணீர் அள்ள முடியாது.

இன்னும் பாடசாலை மாணவர்கள் வகிக்க வேண்டிய பொறுப்புக்களில் அவனுக்கு முன்னுரிமை கிடையாது.

வெளியுலகில், அவனுடைய சமூகத்தவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளின் தாக்கத்தைச் சிறுவர்கள் புரிந்து கொள்ளுமளவுக்கு அவர்களுக்கு மனப் பக்குவமில்லை; அந்தப் பாதிப்புகளை வயது வந்தவர்கள் தாங்கிக் கொள்வதனால் சிறுவர்களுக்கு அந்தச் சந்தர்ப்பமுமில்லை. என்றாலும் -

கோயில் குளமென்று போனால் பெற்றோருடன் வெளிப் பிரகாரத்தில் நின்று வணங்கி விட்டு வருகிறார்கள். ஒரு தேநீர்க் கடைக்குப் போனால், சந்தர்ப்பம் ஏற்பட்டால், வெளியில் நின்று தகரப் பேணியில் தேநீர் பருகிவிட்டு வருகின்றார்கள்.

இப்போ -

பாடசாலையில் நேரடியாகவே சாதி ஒடுக்குமுறை இராசனைப் பதம் பார்க்கின்றது.

இவ்வளவுக்கும் மத்தியில், அவன் படிப்பில் மிகுந்த அக்கறை செலுத்துகிறான். எப்படியாவது படித்து முன்னேற வேண்டுமென்று மனதில் ஒரு வைராக்கியம் ஏற்பட்டு விடுகிறது.

வீட்டில் நாலைந்து ஆடுகள், இரண்டு மூன்று மாடுகள் வளர்க்கிறார்கள். பனைகள் காய்த்து நுங்குகள் விழுகிற காலத்தில் அதிகாலையிலேயே எழுந்து நுங்கு பொறுக்கப் போக வேண்டும். மாலை வேளைகளில் அந்த நுங்குக் கோம்பைகளைச் சீவ வேண்டும். நுங்கு இல்லாத காலத்தில் ஒரு குளைப்பறியுடன், கையில் ஒரு கொக்கைத் தடியையும் எடுத்துக் கொண்டு தங்களது காணி வேலிகளிலும், கவனிப்பாரற்றுக் கிடக்கும் பிறத்தியாரது வேலிகளிலும் கிளுவை, முட்கிளுவைக் குளைபிடுங்க வேண்டும். அல்லது வேறு மரங்களில் குளை பறிக்க வேண்டும். இவையெல்லாம் ஆடுகளுக்குத் தீனி.

மாடுகளுக்குத் தீனியாக, இரண்டு மூன்று நாட்களுக்கொரு தடவை, ஒரு பனையிலுள்ள ஓலைகளை வெட்டி வீழ்த்தி, அவற்றை வீட்டு முற்றத்துக்கு எடுத்து வந்து சிராய்த்து விடுவார் அவன் தந்தை.

அந்தச் சிராய்த்த ஓலைகள் முற்றத்தில் குவிந்து கிடக்கும். ஒரு அரிக்கன் விளக்கை வீட்டின் கூரைப் பத்தியில் உயரத் தூக்கி விட்டு, அந்த வெளிச்சத்தில் வீட்டிலுள்ள குடும்ப அங்கத்தவர்கள் சுற்றிவர உட்கார்ந்து, அந்த ஓலைச் சிறகுகளை, ஓலை வேறு, ஈர்க்கு வேறாய்க் கிழித்து எடுப்பார்கள். இராசனும் அவர்களில் ஒருவனாய் உட்கார்ந்து கொள்ள வேண்டும்.

நாளைக்கும் அதற்கு மறுநாளுக்கும் தேவையானதைக் கட்டிச் சாக்கிலே சுற்றி வைத்துவிட்டு, அன்றைக்குரியவற்றைக் கிழித்துத் தும்பாக்கி மாடுகளுக்கு வைத்து, முற்றத்தையும் துப்புரவாக்கிய பின்னர்தான் இரவுச் சாப்பாடு. ஒன்பது மணிக்கு மேல் ஆகிவிடும்.

ஓலை கிழிக்காவிட்டாலும் வழமையாக அந்த நேரம்தான் சாப்பாடு. சில நாட்களில் இராசன் சீறு பூறென்று நித்திரை கொள்வான். சோறு, கறி எல்லாவற்றையும் கைவிளக்கொன்றுடன் முற்றத்தில் கொண்டு வந்து வைத்து விட்டு, அம்மாக்காரி இராசனை எழுப்பி வருவாள். நித்திரை மயக்கத்தில் அவன் சோற்றுக் கோப்பைக்குள் கை வைப்பதற்குப் பதிலாக நிலத்தில் மண்ணைப் பிசைவான். அம்மாக்காரி, அவனுக்குச் சோறு தீர்த்திப் படுக்க வைப்பாள்.

இராசனுடைய வீடு, கல் வீடு, அவனுடைய தகப்பன் கள்ளுத் தவறணைகள் குத்தகை எடுத்து நடத்தியபடியால், சிறிது பணம் சம்பாதித்து, கல்லினால் இரண்டறை வீட்டைக் கட்டி விட்டார். அதனால் கல் வீட்டுக் கந்தன் என்று பெயர்; குத்தகைகாரக் கந்தன் என்றும் பெயர்.

அப்பாகந்தன் என்றும் சொல்வார்கள். அந்த அப்பா எப்படித் தொற்றியது என்பது எவருக்கும் தெரியாது.

வீட்டின் இரண்டு அறைகளுக்கும் முன்பாக ஒரு விறாந்தை. ஒரு அடி உயரமான அந்த விறாந்தை விளிம்புகள், பொழிந்த வயிரக் கற்களை அடுக்கிக் கட்டப்பட்டவை. பிள்ளைகள் பிறந்து, புளக்கத்துக்குப் பற்றாமையால், அந்தக் கல் வீட்டையொட்டி அதன் நீளத்துக்கு, ஒரு ஓலைக் கூரை வீடு அமைக்கப்பட்டு, மண்ணால் சுவர் வைத்து நிலைகள் யன்னல்கள் பொருத்தப்பட்டிருந்தன. மால் என்று அதற்குப் பெயர். மஹால் என்பதை அப்படி அழைத்தார்களோ தெரியாது.

அந்த மாலின் ஒரு ஓரத்தில், கல் வீட்டு விறாந்தையின் வயிரக் கல் விளிம்புக்குக் கீழேதான் இராசன் பாய் போட்டுப் படுப்பான். படிப்பதற்கென அவனுக்கு ஒரு மேசையும் கதிரையும் இருந்தாலும், இரவு வேளைகளில், பாயில் சம்மணம் கட்டி உட்கார்ந்து, உயரத்திலுள்ள அந்த விறாந்தை விளிம்பில் கொப்பியை வைத்து எழுதிக் கொண்டிருப்பான்.

பித்தளை விளக்கு எரிந்து கொண்டிருக்கும்.

அந்த நேரத்தில், யாராவது ஒரு வாடிக்கைக்காரர் கள்ளுக் குடிக்க வருவார்.

''வள்ளியக்கை!'' என்று கூப்பிட்டுக் கொண்டு வருவார்.

''என்ன இரத்தினத்தார், இண்டைக்குப் பிந்திப் போச்சு?''

''ஓம் வள்ளியக்கை... வலையிலை கொஞ்சம் பீத்தல் பொத்திக் கொண்டிருந்தாப் போலை நேரஞ்செண்டு போச்சு...'' என்று இழுப்பார் அவர். மீன் பிடித் தொழில் செய்பவர்.

''சரி, உதிலை இரு. உன்ரை வாடிக்கைக் கள்ளுக்கிடக்கு.''

வள்ளி வீட்டுக்குள் நுழைகிறாள்.

இராசன், ஏதோ பாடத்தை உற்சாகத்தோடு எழுதிக் கொண்டிருக்கிறான்.

''இவனொருத்தனுக்குக் கண்டறியாத படிப்பு?'' என்று அலட்சியக் குரலில் கூறிவிட்டு, அவனுக்குப் பக்கத்தில் எரிந்து கொண்டிருந்த கை விளக்கை அவசரமாக எடுத்துக் கொண்டு போகிறாள்.

அரிக்கன் லாம்பு, வீட்டு முகப்பில் தொங்கிக் கொண்டிருக்கிறது. குசினிக்குப் பின்பக்கமாகவுள்ள தாழ்வாரத்திலிருக்கிற கள்ளை எடுத்துக் கொண்டு வரத்தான் விளக்கு வேண்டும். அதற்குத்தான் இராசனின் கை விளக்கை எடுத்துக் கொண்டு போகிறாள்.

அவன் மூச்சுப் பேச்சில்லாமல் இருக்கிறான்.

அவனுக்குப் படிப்பு.

அவர்களுக்குச் சீவியம்! அவனையும் உள்ளடக்கிய சீவியம்தான்.

பெரும் சாதி மனிதர்களின் பரிசுகளையும் ஏற்றுக் கொண்டு, தன் குடும்பச் சுமைகளையும் தாங்கிக் கொண்டு, இராசன் படித்துக் கொண்டிருந்தான்.

# 7

**க**ந்தப்பர் தனது சிம்மாசனத்தில் படுத்துக் கிடந்தார்.

மால் முகப்பில் போடப்பட்டிருந்த குட்டிச் சீமெந்து விறாந்தையில், வள்ளி ஒரு மூடலை இழைத்துக் கொண்டிருந்தாள். கையில் நிதானமில்லை; பரபரப்பு. முகத்திலும் சலனம். குனிந்த நிலையில் பெட்டியின் ஓலைகளை விரல் மாற்றி மாற்றி இழைத்துக் கொண்டிருந்த வேகம், அவள் மனநிலையை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது.

அவளுக்கருகில் சந்தைக்குக் கொண்டு போகும் சின்ன கடகப் பெட்டி. கீழே வெறுந்தரையில் மீன் வாங்குவதற்கான உமல்ப்பறி.

கந்தப்பர் அவள் இருந்த திசைக்கு எதிர்த்திசையில் பார்த்தபடி முகத்தைக் கடு கடு என்று வைத்துக் கொண்டிருந்தார்.

நேரம் நடுமத்தியானம், பன்னிரண்டு மணிக்கு மேலாகி விட்டது.

இழைப்பை நிறுத்தி வானத்தை நோக்கி முகத்தை நிமிர்த்தி ''பிள்ளையள் பள்ளிக் குடத்தாலை வரப்போகுதுகள். ஒரு மணியாப் போகுது!'' என்று பெருமூச்சு விட்டபடி, தன்னளவிலே அரற்றினாள். அதற்குச் சாதகமான அசுகை எதுவும் வராதபடியால், அவள் கைவிரல்கள் மீண்டும் சலசலத்தன.

இறுக்கமாகச் சில நிமிஷங்கள் கழிந்தன.

மீண்டும் அவள் குரலை உயர்த்தி ''பிள்ளையள் பசியோடை வரப் போகுதுகள். சந்தை கலைஞ்சாப் போலையே நான் கடைக்குப் போறது...?'' என்று இழுத்தாள் அவள்.

''அதுக்கு நான் என்ன செய்யிறது?'' என்று வெடித்தார் கந்தப்பர்.

''என்னட்டைக் காசிருந்தால், நான் இதிலையிருந்து தவம் கிடக்கிறனே? இன்னேரம் சமைச்செல்லே முடிச்சிருப்பன்!''

''நேத்துப் பின்னேரம் வித்த கள்ளுக் காசுகள் எங்கை? அவர் மணியத்தார் ரண்டு பேரைக் கூட்டிக் கொண்டு வந்தவராமே. பானேக்கை மூண்டு நாலு போத்தல் கள்ளுக் கிடந்திருக்க வேணுமே?''

''அட கடவுளே! அதை நினைச்சுக் கொண்டே இதிலை மரம் மாதிரிக் கிடக்கிறியள்? அவன் இராசன் ஏதோ புத்தகம் வாங்க வேணுமெண்டு நாலைஞ்சு நாளைக்கு முந்திச் சொல்லி வைச்சவன். காத்தாலை அவன் அடம்பிடிச்சுக் கொண்டு நிண்டான். கையில் கிடந்ததைப் பொறுக்கி இருவது சதம் அவனுக்குக் கொடுத்து விட்டனான்.''

''நாசமறுந்த படிப்பு இவனுக்கு! இவன் படிச்சு என்ன கிழிக்கப் போறான்?... அறுந்து போவாராலை ஒரே ஆக்கினை. வரட்டிண்டைக் கவன்!''

''ஏன் அவனை என்ன செய்யப் போறியள்?''

''அவனுக்கென்னடி படிப்பு? ஆரடி உங்கினைக்கை எங்கடை பிள்ளையள் படிக்குதுகள்? கடக்கரைக்கு விட்டால் கறிக்கு மீனாவது கொண்டருவன்...''

''கடக்கரைக்கு விடப் போறியளோ...? ஏன் கள்ளுச் சீவப்பளக்கி விடுங்கோவன்...''

முறைத்த குரலில் சொன்னாள் வள்ளி. தொடர்ந்து ''அவன் ஓரிடமும் போறேல்லை. பள்ளிக்குடத்துக்குத் தான் போறது!'' என்று முத்தாய்ப்பாய்ச் சொல்லிவிட்டு, கடைப் பெட்டியை எடுத்துச் சற்றுத் தூர எறிந்து, தான் காத்துக் கொண்டிருக்கிற விஷயத்தை எதிர்மறையாக அச்சுறுத்தலுடன் ஞாபகப்படுத்தினாள் அவள்.

கந்தரும் வேண்டாவெறுப்பாக ஈச்சாரிலிருந்து எழுந்து, அவளைக் கடந்து கொண்டு தனது திறைசேரி அறைக்குப் போனார்.

சில நிமிஷங்களில் வெளியே வந்து கடைப்பெட்டிக்குள் சில சில்லறைக் காசுகளை வீசி எறிந்தார். பெட்டியை எடுத்து அதற்குள் இருந்த சில்லறைகளை எண்ணி, அவற்றை அதற்குள்ளேயே விசிறினாள் அவள்.

''இதென்னத்துக்குக் காணும் எனக்கு? அரிசி, தேங்காய் ஒண்டுமில்லைக் குசினிக்கை... கிடக்கட்டுக்கும். பிள்ளையள் வந்து என்னைத் தின்னட்டும்.''

சொல்லிவிட்டு மூடலை இழைத்துக் கொண்டிருந்தாள். கந்தப்பர் திரும்பவும் அறைக்குப் போய் மீண்டும் சில சில்லறைக் காசுகளைக் கொண்டு வந்து பெட்டியில் போட்டார்.

வள்ளி இழைத்த மூடலை ஒரு பக்கமாக வைத்தாள். வார்ந்த ஓலைகளை அள்ளிக் கட்டி அதையும் சேர்த்து வைத்தாள்.

எழுந்து பெட்டியையும் கறி உமலையும் எடுத்துக் கொண்டு ''உங்கை, சந்தைக்கை என்ன கிடக்கப் போகுது?'' என்று பெருமூச்சு விட்டபடி, சங்கடப்படலையைத் திறந்து வெளியேறினாள்.

வீட்டில் அரிசி இருந்தால், அடுப்பை மூட்டி உலை வைத்து அரிசியைக் கழுவிப் போட்டுவிட்டு அவள் சந்தைக்குப் போவாள். அவள் சந்தையிலிருந்து திரும்பும் போது அரிசி அவிந்து கொண்டிருக்கும். பிசகாத மனநிலையிலிருந்தால் கந்தரும் எரிந்த விறகுகளை இடைக்கிடை தள்ளிக் கொண்டிருப்பார்.

இன்றைக்கு, அரிசியும் சந்தையிலிருந்து வந்த பிறகுதான் உலை.

அவசரமாக அகப்பட்டதை வாங்கிக் கொண்டு வள்ளி வீட்டுக்குத் திரும்பினாள். அடுப்பை மூட்டி உலையில் அரிசியைப் போட்டு விட்டு, மீனை வெட்டினாள். அதைக் கழுவி எடுத்துக் கொண்டு அடுப்படிக்குள் நுழைந்ததும் அவள் சக்கரமாய்ச் சுழன்றாள்.

மற்றொரு அடுப்பையும் மூட்டி, ஒரு மரக்கறி, ஒரு குளம்பு, சின்ன மீன் தீயல் என்று சமையலைத் துரித கதியில் இயக்கினாள்.

''அம்மா...!'' என்று கூப்பிட்டுக் கொண்டு, கடைசிப் பிள்ளைகள் இருவரும் படலையைத் திறந்து கொண்டு பாடசாலையிலிருந்து வந்தார்கள்.

''பசிக்குதெணை!'' என்று குரல் கொடுத்தாள் பாக்கியம். கடைசிக்கு மூத்தவள் அவள். கடைக்குட்டி சுந்தரம் சிலேட்டுப் புத்தகத்துடன் நேரே குசினிக்கே வந்து விட்டான். அம்மாவின் சமையலைப் பார்க்க.

அந்நேரம் வள்ளி கஞ்சி வடித்துக் கொண்டிருந்தாள். நெருப்பு வெக்கை ஆளைத் தின்று கொண்டிருந்தது.

''போய் உடுப்புகளைக் கழட்டிப் போட்டு வாருங்கோ! இந்தக் கஞ்சியைக் குடியுங்கோ! அதுக்கிடையில் கறியள் இறக்கிப் போடுவன்!''

''என்னம்மா... சரியாய்ப் பசிக்குது!'' என்றான் சுந்தரன்.

''எல்லாம் முடிஞ்சுது. இனிச் சாப்பிடுறதுதானை... போய் சாறத்தை மாத்திக் கொண்டு வா.''

சோற்றுப் பானையை இறக்கிவிட்டு, அந்த அடுப்பில் கத்தரிக்காய்ச் சட்டியை வைத்தாள். மற்ற அடுப்பில் குளம்பு கொதித்துக் கொண்டிருந்தது. முன்னால் தீயல் மீன்சட்டி. இன்றைக்கு நெத்தலி அகப்படவில்லை. சூடை மீன், இரண்டாம் பால் விட்டு மாங்காயும் கொத்திப் போட்டு மிளகாய் வெங்காயம் நறுக்கிக் கொண்டிருந்தாள்.

குளம்பை இறக்கித் திருகணையில் வைத்து விட்டு, தீயல் சட்டியை அடுப்பில் வைத்தாள். விறகை அமுத்திக் கரியை நெரித்துவிட்டு, அடுப்பைத் தள்ளினாள். பகீர் என்று பற்றி எரிந்தது நெருப்பு.

''அடுப்பும் நெருப்பும் மனிசருக்குப் பயப்படாதோ?'' என்பது அவளது சித்தாந்தம். வெறுமனே அடுப்பையும் நெருப்பையும் துரிதப்படுத்துவதனால் மட்டும் சமையல் முடிந்துவிடாது. சமையலோடு தொடர்பான சகல காரியங்களிலும் காட்டும் கைவண்ணம், செய்வண்ணம் தான் அதன் முக்கியம் என்பது அதன் தார்ப்பரியம். அப்போது அப்படிச் சொல்லவில்லை; செய்து காட்டினாள்.

அடுப்பங்கரையை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த பாத்திரங்கள், மிளகாய் வெங்காயப்பெட்டி, கத்தி, திருகுபலகை போன்றவற்றை அப்புறப்படுத்தி, சாப்பாட்டுக் கோப்பைகளைக் கழுவி, எல்லோருக்கும் சோறு அள்ளி வைத்தாள். கறிகளைப் பகிர்ந்தாள். தீயல் சட்டியையும் இறக்கி அதனையும் பகிர்ந்து பிள்ளைகளை அழைத்தாள்.

''கொப்புவைக் கூப்பிடுங்கோ!'' என்று கந்தப்பருக்கும் அழைப்பு விடுத்தாள்.

கந்தர் அடுப்படித் திண்ணையில் தனது வழமையான இடத்தில் பலகையைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தார். அவருக்கு முன்னால் ஒரு மூடல்ப் பெட்டியைக் கவிழ்த்து வைத்து அதன் மேல் சோற்றுக் கோப்பையை வைத்தாள். பக்கத்தில் தண்ணீர்ச் செம்பு.

பிள்ளைகளும் தங்களது கோப்பைகளைத் தூக்கிக் கொண்டு வந்து, தீயலில் தலை நீட்டிக் கொண்டிருந்த மிளகாய் நறுக்குகளைத் தூக்கி எறிந்து விட்டுச் சாப்பிடத் தொடங்கினார்கள்.

வள்ளி வியர்த்துக் கொட்டிய முகத்தைச் சேலைத் தலைப்பால் துடைத்து விட்டு, ஒரு சிரட்டையில் கஞ்சியை வார்த்துக் குடித்தபடி குசினி வாசலில் குந்தியிருந்தாள்.

''என்னப்பா, இண்டைக்குப் புட்டு அவிக்கவில்லையா?'' என்று கேட்டார் கந்தப்பர்.

''புட்டுக்கு மீனுங் கிடைக்கேல்லை. நேரமும் காணாமல் போச்சு!'' என்று சொன்னாள் வள்ளி.

கந்தப்பருக்கு மீன் தீயல் வேண்டும் கட்டாயமாக. ஒடியல் பிட்டு அவ்வளவு இஷ்டமில்லை. ஆனாலும் தினமும் அவிப்பதால், அவருடைய கோப்பையிலும் கொஞ்சம் பிட்டு வைப்பாள் வள்ளி.

இன்றைக்கு இல்லாததால் தான் அவரும் கேட்டார்.

'புட்டுத் தின்னுற இலட்சணத்திலை?' என்று மனதுக்குள் நினைத்த வள்ளி, ''சோறு கறி வேணுமெண்டால் சொல்லுங்கோ!'' என்று சொல்லியபடி, முன்னே இருந்த பாத்திரத்திலிருந்து சிரட்டையில் கஞ்சியை மொண்டு, சோற்றுப் பருக்கைகளுடன் உறிஞ்சி உறிஞ்சிக் குடித்தாள்.

அவள், கிணற்றடிக்குப் போய்க் குளித்துவிட்டு வந்து சாப்பிட நாலு மணியாகும். அதற்குள் இராசனும் வந்து விடுவான்.

## 8

அழுக்காய்ப் போய் மூலையில் குவித்து வைத்திருந்த துணி துண்டுகளை அள்ளி மார்புடன் அணைத்தவாறு கிணற்றடிக்குப் புறப்பட்ட வள்ளி. கந்தரைக் கடந்து போகையில், ''இராசன் வந்தால் அவனோடை ஒண்டும் கதைச்சுப் போட வேண்டாம்!'' என்று போடி போக்காய்ச் சொல்லி விட்டு, பதிலுக்கு கந்தர் ஏதாவது சொல்லுவார் என்று எதிர்பார்க்கிற தோரணையில், காலடிகளின் வேகத்தையும் தளர்த்தினாள்.

''அவன் வரட்டிண்டைக்கு. அவனோடை கதை இருக்கு!'' என்று தடித்த குரலில் பதில் சொன்னார் கந்தர். வள்ளி எதிர்பார்த்ததுதான்.

''அவன் படிக்க ஆசைப்படுறான். அவனோடை ஒரு தண்டு முண்டுக்கும் போக வேண்டாம்.''

''படிக்க ஆசைப்படுறானோ? படிச்சு என்னத்தையடி கிழிக்கப் போறான்?...? அதுதான் வெள்ளெனச் சொன்னனான், கடக்கரைக்குப் போய் வலை இழுத்தாலும் அவங்கள் குடுக்கிற மீன் எங்கடை கறிக்குக்காணும்.''

''ஏன் கரையான் தொழில் பழக்கப் போறியளோ அவனுக்கு?''

''கரையாந் தொழில் பழகாட்டால் எங்கடை தொழில் பழகட்டன்...''

''அவனை என்ன இயனக் கூடுகட்டிக் கொண்டு பனை ஏறச் சொல்லிறியளே?''

''அவன் பனை ஏற நாள்க்கிடக்கு. அவன், குஞ்சியப்பன் காறன்ரை கள்ளுக் கொட்டில்லை போய்க் கள்ளுவிக்கட்டன். இப்ப பழகினாத்தானை பின்னடிக்கு விசயம் விளங்கும்.''

அவள் ''கள்ளு விக்கவும் வேண்டாம்; கரை வலைக்குப் போகவும் வேண்டாம். அவன் படிக்கப் போறனெண்டு ஆசைப்படுறான். தமையன்மாரும் அவனைப் படிப்பிக்க வேணுமெண்டு ஆசைப்படுறான்கள். அவன் மூத்தவன், இராசனைக் கடற்கரைக்கு அனுப்புற தெண்ட கதையைக் கேட்டால், இங்கை வெட்டுப் போர்தான் நடக்கும்.''

''அவரே இங்கை முதலாளி?''

''வயது வந்தால் அவனும் முதலாளிதானே! அவங்கள் படிச்சுக் கொண்டிருக்கேக்கை, படிப்பைக் குழப்பிப் போட்டு, அவங்களைக் கூட்டிக் கொண்டு போய், தவறணையிலை விட்டியள். இப்ப தவறணையுமில்லை; படிப்புமில்லை.''

''விசர்க்கதை கதையாதை. எவ்வளவு காலத்துக்கடி படிக்கிறது. எங்கடை ஆட்களுக்கு என்னத்துக்கடி படிப்பு? அப்புக்காத்துப் பிறக்கிறாசியாய் வரப்போகினமே? இப்ப அவங்கள் ஏதோ நாலு பனை சீவி, நாலு பணம் உழைக்கத் தெரிஞ்சிட்டாங்கள் தானே!''

''அப்புக் காத்துக்கும் படிக்க வேண்டாம். பிறக்கறாசிக்கும் படிக்க வேண்டாம். நாலு எழுத்து எழுத வாசிக்கப் படிக்கட்டும். அது போதும்! ஆத்திரம் அவசரத்துக்கு ஒரு புட்டிசம் எழுத வாசிக்கத் தெரிஞ்சால் போதும்!''

''ஓமடி. நீயும் உன்ரை பொடியள்ளை பக்கத்திலை போய்ச் சேர். இவன் என்ன படிச்சுக் கிழிக்கிறான் எண்டு பாப்பம்? என்னட்டை மட்டும் ஒரு சதக்காசு கேட்டுப் பார் அவனுக்கு? பிறகு நடக்கிறது தெரியும்?''

''அவன்ரை படிப்புக்கு ஒருத்தரும் கால்க் காசும் கொடுக்க வேண்டாம். அதை நான் பாப்பன்!''

''நான் பாப்பனோ? என்னண்டடி பாப்பாய்? எந்தப் புருசன்ரை உழைப்பிலையடி பாப்பாய்? என்ரை உழைப்பிலை சுறண்டிப் பாப்பியாடி?''

வள்ளி ஒரு கணம் வாயடைத்துப் போனாள்.

பின்னர் சமாளித்துக் கொண்டு, ''நான் அவன் மூத்தவனிட்டைச் சொல்லி, அவன்ரை படிப்புச் சிலவெல்லாத்தையும் அவனைப்

பாக்கச் சொல்லுறன். இராசனோடை நீங்கள் ஒண்டும் கதைக்க வேண்டாம். அவன் வாற நேரமாச்சு. பசியோடை வரப் போறான்...''

ஈச்சாரில் நிமிர்ந்திருந்து வாதாடிய கந்தப்பர், தலையை மறுபக்கம் ஒருக்களித்துப் படுத்துக் கொண்டார். அந்த ஈச்சார்தான் அவரது சிம்மாசனம், அனுராதபுரத்திலிருந்து கொண்டு வந்தது. வள்ளி கிணற்றடிக்குப் புறப்பட்டுப் போனாள்.

துணி துண்டுகள் துவைத்துக் காயப் போட்டுக் குளித்து விட்டுக் குறுக்குக் கட்டுடன் திரும்பியபோது இராசன் அப்போதுதான் பள்ளிக்கூடத்திலிருந்து வந்திருந்தான்.

வந்தவன் விறாந்தையிலுள்ள மேசையில் தனது புத்தகக் கட்டை வைத்து விட்டு, பசிக் கொடுமையால் உபத்திரவப் படாதவன் மாதிரி அல்லது பசியையே மறந்தவன் மாதிரி, அவ்விடத்திலேயே தன் நிலை மறந்து நின்றான்.

''ராசு, ஏன் மோனை பசிக்கேல்லையே? வாவன் சாப்பிட'' என்று அழைத்தாள் வள்ளி.

அவன் அதற்கு எவ்வித பதிலுமில்லாமலே நின்று கொண்டிருந்தான்.

தாய் திரும்பவும் அழைத்தாள். அடுப்படிக்குள் நுழைந்து கூட்டினால் மூடிவைத்த சோறு கறியைத் திறந்து, அவன் கோப்பையைக் கழுவிச் சோறு போட்டுக் கறிகளும் வைத்தாள்.

ஒரு மூடல் பெட்டியைக் கவிழ்த்து, சோற்றுக் கோப்பையை அதன் மேல் வைத்து, பக்கத்தில் குந்து பலகையையும் இழுத்து வைத்துவிட்டு, அவள் தனக்கு ஒரு சட்டியில் சோறு போட்டுக் கொண்டிருந்தாள்.

இராசன் வந்து குனிந்த நிலையிலேயே பலகையில் உட்கார்ந்தான். சோற்றில் கையை வைத்துப் பிசைந்தபடியே, பார்வையை மெதுவாகத் தாயின் பக்கம் நிமிர்த்தி, ''அம்மா, எனக்கு என்ன பேர்?'' என்று தாழ்ந்த குரலில் கேட்டான்.

''ஏன், உனக்கு என்ன பேர்? இராசன்தான்!''

''இல்லை!''

''அப்ப?''

பட்டென்று அவன் கண்களிலிருந்து திரண்ட கண்ணீர்த் துளிகள் உதிர்ந்து முத்துக்களாய்ச் சிந்த, அவன் விம்மி விம்மி அழத் தொடங்கினான்.

''ஏன், என்ன நடந்தது? அழாமல் சொல்லு!'' என்று தேற்றினாள் அவள். மிகவும் தாழ்ந்த குரலிலேயே சொன்னான்.

படிப்பு என்றாலே வேப்பங்காய் அப்பனுக்கு. அதோடு சேர்ந்த பிரச்சினையென்றால்... அதனால் இடது கையால் அவனுடைய வாயைப் பொத்தி, அவன் குரலைத் தடுத்து, மெல்ல எழுந்து அடுக்களைத் திண்ணை வரை வந்து, கந்தரை எட்டிப் பார்த்தாள்.

நல்லவேளை! அவர் அனந்த சயனம்! சாப்பாட்டு நித்திரை.

மெதுவாக வந்து இராசனுக்குப் பக்கத்தில் குந்தினாள்.

''என்ன மோனை நடந்தது?''

''எனக்குக் கணபதி எண்டு பேர் பதிஞ்சிருக்கு'' என்று சொல்லிவிட்டு அவன் அழத் தொடங்கினான்.

''கணவதியோ? இராசன் எண்டுதானே கொப்பு பேர் குடுத்தவர். அதெப்படிக் கணவதி எண்டு வந்தது?''

''இல்லையம்மா, இண்டைக்குத் தான் பள்ளிக்கூடத்துக்கு எல்லாற்றை பிறப்புச் சேட்டிவிக்கற்றும் வந்தது. அதிலை என்ரை பேர் கணவதி எண்டு பதிஞ்சிருக்கு!''

''வேறை ஆற்றையோ சேட்டிவிக்கற்றை மாறி அனுப்பிப் போட்டாங்கள் போலை. இராசன் எண்டு பதிய என்னெண்டு கணவதி எண்டு வரும்?''

''தலைமை வாத்தியார் என்னட்டைத் தந்தவர். தகப்பன் பேர் கந்தன். தாய் பேர் வள்ளி எண்டெல்லாம் இருக்கு!''

''நீ பாத்தனியே?''

"ஓம் அம்மா, வடிவாப் பாத்தனான். எல்லாப் பொடியளும் என்னைக் கணவதி, கணவதி எண்டு கூப்பிடத் தொடங்கியிட்டாங்கள்!'' என்று சொல்லிவிட்டு, அவன் 'ஓ!' என்று அழத் தொடங்கினான்.

வள்ளிபாடு பெரிய சங்கடமாய்ப் போய் விட்டது. அவனை அணைத்துப் பிடித்தபடி, ''அழாதை! அழாதை!! என்னெண்டு விசாரிச்சுப் பாப்பம். நீ இப்ப சாப்பிடு... சத்தம் கேட்டுக் கொப்பர் எழும்பினால் சமாளிக்க ஏலாது...'' என்று தேற்றினாள்.

சோற்றைக் குழைத்து அவனுக்குத் தீற்றினாள். ஒரு தடவை வாங்கிச் சாப்பிட்டவன், பின்னர் தாயின் கையைத் தடுத்துவிட்டு தானே அள்ளித் தின்னத் தொடங்கினான்.

வள்ளியும் சற்று விலகி, தானும் சாப்பிடத் தொடங்கினாள்.

''நான் ஒருக்கால் றெயித்தார் செபத்தியாம்பிள்ளையிட்டைப் போய் என்னெண்டு விசாரிச்சுக் கொண்டு வாறன். சாப்பிட்டிட்டுப் போய் நீ உன்ரை அலுவலைப்பார்!''

பாடசாலையில் சேர்வதற்குப் பிறப்புப் பத்திரம் தேவைப்படாத காலம் அது. ஆனால், ஜே.எஸ்.ஸிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது மாணவரின் பிறப்புப் பத்திரம் கட்டாயம் தேவை. இப்பரீட்சை அரசாங்க மட்டத்தில் நடைபெற்றது. காரணம் சித்தி பெற்றவர் தனியார் நிறுவனங்களிலோ அரசாங்கத்திலோ நடுத்தர உத்தியோகத்தைப் பெற முடியும். ஜே.எஸ்.ஸி. (Junior School Certificate) என்றாலென்ன, அதற்கடுத்த எஸ்.எஸ்.ஸி. (Senior School Certificate) என்றாலென்ன ஆங்கில மொழியில் கற்றுத் தேர்ந்தால் உத்தியோகம் நிச்சயம். ஆனால் தமிழ் மொழி மூலம் கற்றவர்களுக்கு வாய்ப்புகள் சொற்பமே. அவர்கள் ஆசிரியத் தொழிலுக்குப் போகலாம். அதுவும் பயிற்சிக் கலாசாலைகளில் கற்க வேண்டும்.

அந்த ஜே.எஸ்.ஸி. பரீட்சைக்காகத் தான் தலைமையாசிரியர், மாணவர் மூலம், பெற்றோரிடம் அவர்களின் விபரங்களைத் திரட்டிப் பிறப்புப் பத்திரங்களைத் தருவித்திருந்தார். இராசனுடைய பத்திரத்தில், இராசனுக்குப் பதிலாக கணபதி என்றிருந்தது.

ஆம், இராசனுக்கு இனிப் பெயர் கணபதி.

வேளையிலேயே சாதி ரீதியாகப் பாதிப்புற்றிருந்த இராசனை இந்தப் பெயர் மேலும் பாதிப்படையச் செய்தது.

நாகன், கந்தன், வேலன், கணபதி, முருகன் என்ற பெயர்களெல்லாம் ஊர் வழக்கில் யாரைக் குறிக்கும்?

எளியஞ் சாதியையல்லவா?

## 9

இரண்டு நாட்கள் இராசன் பாடசாலைக்குப் போகவில்லை. வீட்டில் பதுங்கிப் பதுங்கி இருந்தான். பின்னர் தாயின் வற்புறுத்தலின் பேரில் புறப்பட்டான்.

''ஒண்டுக்கும் யோசிக்காதை. நான் உன்ரை பேரைச் சரிப்படுத்தித் தருவன்'' என்று உறுதி கூறியதன் பேரில் பாடசாலைக்குப் போனான். போய் புத்தகக் கட்டைத் தன்னுடைய மேசையில் வைத்ததும், அந்த மேசையில் சோக்கினால் எழுதப்பட்டிருந்த கொட்டை எழுத்துக்கள் அவனுடைய நெஞ்சைப் பலமாக அழுத்தின.

ஓம் கணபதி.

அப்படியே திடுக்கிட்டு நின்றான் அவன்.

வகுப்பில் ஒருவருமில்லை; தேகாப்பியாசத்துக்கு வெளியே சென்றிருந்தார்கள். கையினால் உரங்கொண்ட மட்டும் அழித்தான். எழுத்துக்கள் அழிந்தன. ஆனால் சுவடுகள் தெரிந்தன. மேசையில் வெண்கட்டித் தூள் பரவிக் கிடந்தது.

ஆசிரியரின் மேசையில் கிடந்த கரும்பலகைத் துடைப்பத்தையெடுத்து, அந்த இடத்தை நன்றாக அழுத்தித் துடைத்துத் துப்புரவாக்கினான். கரும் பலகை துடைக்க நனைத்திருந்த துடைப்பம், அவனுக்கு உதவியாக இருந்தது. எழுதிய சுவடே தெரியாமல் மறைந்து போயிற்று. ஆனால், நெஞ்சின் ஆழத்தில் அதன் வடு ஆழமாகப் பதிந்து அவனை உறுத்தியது.

ஆனாலும், எதுவும் நடக்காதவன் போல, எதையும் அறியாதவன் போல அவன் தேகாப்பியாசம் நடைபெறும் இடத்துக்குப் போனான்.

தேகாப்பியாசம் முடிவுற்றிருந்தது.

இராசனுடைய வகுப்பில் இலட்சுமிப் பிள்ளை என்கிற ஒரு பெண் பிள்ளை உள்பட மொத்தம் ஆறே ஆறு மாணவர்கள். அந்த வகுப்புக்கு கீழேயுள்ள ஏழாம் வகுப்பு மாணவர்களோடு சேர்த்துத் தான் தேகாப்பியாசம். இலட்சுமிப் பிள்ளையும் ஏழாம் வகுப்பு மாணவிகளோடு இணைந்து கொள்வாள். பெண் பிள்ளைகளுக்குத் தேகாப்பியாசம் கிடையாது. தையல் வகுப்பு நடைபெறும்.

கை கால்களை முன்னுக்கு பின்னுக்கு பக்கங்களுக்கு நீட்டி மடக்குதல், இடம் வலம் நடத்தல், சுற்றி ஓடுதல், திரும்பி ஓடுதல் இவற்றுடன் தேகாப்பியாசம் நிறைவுறும். அதன்பின், வாரோடுதல், கெந்திப்பிடித்தல் கிளித்தட்டுப் போன்ற விளையாட்டுகள் நடைபெறும். ஆசிரியர் போய் விடுவார்.

இராசன் அங்கு சென்றபோது, கிளித்தட்டு விளையாட்டு நடைபெற்றுக் கொண்டிருந்தது. குத்தி மறித்து, வெட்டி ஓடிக் கொண்டிருக்கிறார்கள். அவனை யார் விளையாட்டுக்குக் கவனிக்கிறார்கள்? வேளையிலே வந்து தேகாப்பியாசத்தில் பங்கு பற்றிருந்தால், அது முடிந்த கையோடு கன்னை பிரிக்கும்போது இவனையும் சேர்த்துக் கொள்வார்கள். அவனும் சேர்ந்து கிளித்தட்டு மறிப்பான். இன்று தருணமும் கிட்டவில்லை; மனமும் நொடிந்து போயிருந்தது.

பாடசாலை வளவுக்குள்ளேயே, விளையாட்டிடத்தோடு றோட்டோரமாக ஒரு நெசவுசாலை இருந்தது. பாடசாலையை ஸ்தாபித்த சபையினர் இந்த நெசவு சாலையையும் நிறுவியிருந்தனர். கிடுகினால் வேய்ந்த கூரையும் பக்கங்களுக்குச் சலாகையடித்து, நெஞ்சுயரத்துக்குக் கிடுகு மறைப்புமாக, பத்துத் தறிகளுக்குக் குறையாத நெசவு சாலை. கால்களை மாற்றி மாற்றி அழுத்தி, 'டக்கு டிக்கு' என்று அடித்து நூற் கட்டையை ஓட்டும் சத்தப் பின்னணியோடு நெசவாளி இழைகளை மாற்றும் லாவகத்தைப் பாடசாலை மாணவர்கள் பார்த்துப் பொழுதைக் கழிப்பார்கள்.

கிளித்தட்டில் பங்குபற்றாத இராசனும் அங்கு வந்து நின்றான்.

சட்டில் என்று சொல்லப்படும் அந்த நூற்கட்டை, இடைக்கிடை தள்ளு விசையிலிருந்து வேகமாய்ப் பாய்ந்து கீழே விழுகின்றது. நெசவாளி அதைப் பொறுமையோடு எடுத்து, சுருள் குலைந்த நூலைச் சுற்றி விசைப் பொறியிலிட்டு அடிக்கிறான்.

இடைக்கிடை நூல் அறுந்து போகின்றது, விழிகளைக் கூர்மையாக்கி அறுந்த இழைகளை விரல் நுனிகளைக் கொண்டு பிணைத்துத் தொடர்ந்து நெய்கிறான்.

இழைகளின் சேர்க்கை. அணு அணுவான முன்னேற்றம்!

எப்படியோ துணியாகி விடுகின்றது.

மனிதனுடைய வாழ்வும் அணு அணுவாகத்தான் முன்னேற்றம் காணும் என்பதற்கறிகுறியாக இத்துணி நெசவு இருந்தாலும் அதைப் புரிந்து கொள்ளும் மனப்பக்குவம் அவனுக்கு இல்லை.

இத்துணி மனிதனின் மானத்தை மறைக்கத் திரையாகி விடுகின்றது.

நல்ல மனிதருக்கும் கெட்ட மனிதனுக்கும் துணி, மானத்தை மறைக்கின்றது. மானம் இழந்தவர்கள், துணிகளால் தங்களை அலங்கரித்துக் கொண்டு மானம் பேசுகிறார்கள்.

மணி அடித்துச் சத்தம் கேட்க, கிளித்தட்டு விளையாடிக் கொண்டிருந்த மாணவர்கள் திடும் திடும் என்று வகுப்புக்கு ஓடுகிறார்கள். சிலர் கிணற்றடிக்கு ஓடுகிறார்கள். தண்ணீர் குடிக்க வேண்டும். கை கால் கழுவ வேண்டும். தண்ணீர்த் தொட்டியருகே கியூ நிற்கின்றது. அதிலே இரண்டு மிடறு குடித்துத் தாகத்தைத் தீர்ப்பவர்களும் இருக்கிறார்கள்.

இராசனும் வகுப்புக்குச் செல்கின்றான்.

இராசலிங்க வாத்தியாரின் இலக்கியப் பாடம்.

புகழேந்திப் புலவரின் நளவெண்பாப் பாடம்.

பாட்டொன்றை இரண்டு தடவை சந்த ஓசையுடன் பாடிக் காட்டுவார். மாணவர்களையும் எழுப்பி, அந்தச் சந்தத்துடன் பாடச் சொல்லிக் கேட்பார். சில மாணவர் நன்றாகப் பாடுவார்கள். சிலர் தடுமாற்றத்துடன் பாடுவார்கள். இராசனுக்கு ஓசை நயத்துடன் பாட வராது.

''நளவெண்பாவை நீ நல்லாப் பாட வேணும்!'' என்று குரல் வரும். இராசனின் சாதியைக் குறிக்கும் வெண்பா என்பதுதான் அதன் அர்த்தம். இராசன் முணுமுணுப்பான்.

இன்றைக்கு அவனுடைய பெயர் மீது அக்கறை பிறந்துவிட்டது.

''நளவெண்பாவைக் கணவதி பாடாவிட்டால் வேறு யார் நல்லாய்ப் பாடுறது?'' என்று நக்கலாகக் குரல் எழுப்பினான் மோகனதாஸ்.

இராசனுக்குக் கோபம் தலைக்கேறியது.

''வாயை மூடிக் கொண்டிரு. புகழேந்தியாரை என்னெண்டு நினைச்சுக் கொண்டிருக்கிறாய் நீ? அவர் கள்ளுச் சீவினவரோ?'' என்று உரத்த குரலில் கத்தினான்.

கரும்பலகையில் எழுதிக் கொண்டிருந்த இராசலிங்க வாத்தியார், ''என்ன அங்கே சத்தம்?'' என்று அதட்டிக் கொண்டே திரும்பிப் பார்த்தார்.

இராசன் எழுந்து நின்றான்.

அவன் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது.

''ஏன் அழுகிறாய்? என்ன நடந்தது?'' என்று கேட்டார் ஆசிரியர்.

''மோகனதாஸ் என்னைச் சாதி சொல்லி நக்கல் அடிக்கிறார் வாத்தியார்.''

''என்ன சொன்னவன்?''

''நளவெண்பாவை நான்தான் படிக்க வேணுமாம்!''

''ஏன்?''

''அது நளவெண்பாவாம்.''

ஆசிரியருக்கு அதிலுள்ள உள்ளர்த்தம் புரிந்து விட்டது. ஆனால் அதை வெளிக்காட்டாமல், ''அது தலை சிறந்த புகழ்பெற்ற இலக்கியம். எல்லோரும் தான் அதைப் படிக்க வேணும்'' என்று சொன்னார்.

''பேருக்குச் சண்டை பிடிக்கிறான்கள் வாத்தியார்.'' முழியைப் பிதுக்கிக் கொண்டு, வாணீரைத் துடைத்தபடி சொன்னான் விவே.

''பேருக்குச் சண்டையா? அதென்னது?'' கேட்டார் ஆசிரியர்.

"இராசனைக் கணவதி எண்டு சொல்லுறான் காந்தி."

இராசலிங்க வாத்தியாருக்குக் கணப் பொழுதில் எல்லாம் புரிந்துவிட்டது. இந்த வகுப்பு மாணவரின் பிறப்புச் சாட்சிப்

பத்திரங்கள் எடுப்பித்தது, அவற்றில் இராசனுக்குக் கணபதி என்று பெயர் பதியப்பட்டிருந்தது. இவற்றையெல்லாம் தலைமையாசிரியர் மூலம் அறிந்திருந்தது எல்லாம் பட்டென்று அவர் மனதில் தோன்றியது.

இராசனைப் பார்த்தார் அவர்.

குனிந்த தலை நிமிராமல் விம்மிக் கொண்டிருந்தான் அவன். இராசன் வீட்டில் கள்ளுக்குடிக்கும் தன் தந்தையாரான சீனியரின் வேண்டுதலின் பேரில்தான், அப்பாடசாலையில் சேர்ந்த பிள்ளை இராசன். மாலை வேளைகளில், இராசன் வீட்டுக்குப் போய் கள்ளுக் குடித்துப் பலதும் பத்தும் கதைக்கும் வேளையில் இந்தப் பிரச்சினை அவருக்குச் சமர்ப்பிக்கப்படும். தந்தை வந்து தன்னிடம் விசாரிப்பார். எல்லாவற்றையும் யோசித்தார் வாத்தியார். நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று அவர் மனது உறுத்தியது.

"அதிலையென்ன? கணபதி நல்ல பெயர்தானே! முழுமுதற் கடவுள் விநாயகப் பெருமானின் பெயர், பிள்ளையாரிலை இருக்கிற பக்தியினாலை, அவன்ர தகப்பன் வைச்சிருக்கிறார்."

"அவங்கடை ஆட்களுக்கு மட்டும் வைக்கிற பேராம்!" விவே மேலும் விளக்கம் கூறினான்.

வாத்தியாருக்குத் தர்மசங்கடமாகி விட்டது. இதற்கு எப்படி விளக்கம் கூறுவது என்று மனம் பின்னடைந்த வேளையில் ஒரு சம்பவம் அவருக்குக் கை கொடுத்தது.

சூரிய குமாரன் எனப்படும் நிர்வாக சேவை அதிகாரி ஒருவர் அப்போது, அப்பகுதி டி.ஆர்.ஓ.வாகப் பணிபுரிந்து கொண்டிருந்தார். அவருடைய மனைவி ஓர் ஆசிரியை. அவருக்குப் பெயர் வள்ளி. உயர் சாதிக்காரி. பணக்காரக் குடும்பம். பட்டதாரியான அவர் அங்குள்ள பெண்கள் பாடசாலையொன்றில் படிப்பித்துக் கொண்டிருந்தாள். தமிழ்ப் பற்றினால் அவள் தந்தை அவளுக்கு அந்தப் பெயரைச் சூட்டியிருந்தார். இதையிட்டு இந்தப் பாடசாலை ஆசிரியர் மத்தியிலும் அதிசயப் பாணியில் விமர்சனங்கள் நடைபெற்ற தருணத்தில் வாத்தியாருக்கு இந்த விபரம் நினைவுக்கு வந்தது.

"யார் சொன்னது? இந்தப் பேரெல்லாம் அவங்கடை ஆட்களுக்குரியதென்று? இப்ப எங்களுக்கு டி.ஆர்.ஓ.வாக

இருக்கிறார் சூரிய குமாரன் எண்டு ஒரு பெரியவர். அவற்றை பெண் சாதிக்குப் பெயர் வள்ளி. வடமராட்சி ஹிந்து விலை படிப்பிக்கிறா. அவ, இராசன்ரை ஆட்களே?'' என்று கேள்வி எழுப்பினார்.

காந்தி தலையைக் கீழ்நோக்கிக் கொண்டு, கண் புருவங்களை மெல்ல உயர்த்தி, வாத்தியார் சொல்வதை அவதானித்துக் கொண்டிருந்தான். நெஞ்சு படக் படக்கென்று அடித்துக் கொண்டிருந்தது.

"பேரிலை ஒண்டுமில்லை. ஆட்கள் நல்லவர்களாயிருக்க வேண்டும். அதுதான் முக்கியம்!'' என்று அடக்கமாகச் சொல்லிவிட்டு மாணவர்களை உற்றுப் பார்த்தார். சற்று இடைவேளைக்குப் பிறகு.

"ரோஜா மலரை ரோஜா என்று அழைக்காமல் வேறு என்ன பெயரால் அழைத்தாலும், அது ரோஜா ரோஜாதான்! ஒருவரின் குணத்திலும் பண்பிலும் தான் சிறப்பு அடங்கியிருக்கிறது. பெயரில் அல்ல! என்று ஒரு மேல் நாட்டு அறிஞர் சொல்லியிருக்கிறார். இதை நாங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்'' என்று சொல்லி நிறுத்திவிட்டு, மீண்டும் அவர்களை அக்கறையோடு நோக்கினார்.

அவர்கள் எல்லோரும் பார்வையைச் சற்றே தாழ்த்தியபடி இருந்தார்கள். இராசனும் குனிந்த நிலையிலேயே இருந்தான். விவே மட்டும் தலையை நிமிர்த்தி விழிகளைப் பிதுக்கியபடி காந்தியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"இவன் மோகனதாசுக்கு அவன்ர தகப்பன் கரம்சந்த்ர மோகனதாஸ் காந்தி என்று பெயர் வைத்திருக்கிறார். மகாத்மாகாந்தியில் இருக்கிற பக்தியினாலை தான் அவற்றை பேரை பிள்ளைக்குச் சூட்டியிருக்கிறார்... மகாத்மா காந்தியைப் பற்றி அறிஞ்சிருக்கிறியள் தானே? சாத்வீக வழியில் பாடுபடுபவர். சாந்தி மார்க்கம்தான் அவர் பாதை. இந்தியாவின் சுதந்திரத்துக்காகப் போராடுகிறார். தீண்டாமை ஒழிப்புக்காக மிகவும் பாடுபடுகிறார்...'' சிறிது நேரம் நிறுத்தினார். பின் தொடர்ந்து. "இங்கை நாங்கள் காந்தியின் பேரை வைச்சுக் கொண்டு சாதிக்கதை கதைக்கிறம்!''

இராசலிங்க வாத்தியாருடைய அன்றைய பாடம் காந்தீய விளக்கத்துடன் முடிந்தது.

"எல்லாத்துக்கும் முதல், நீங்கள் நல்லாய்ப் படிச்சு முன்னுக்கு வரவேணும்!'' என்று சொல்லிவிட்டு ஆசிரியர் வெளியேறினார்.

## 10

இந்தியாவின் தவப்புதல்வன் மகாத்மாகாந்தி, 1927ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ஆம் திகதி, இலங்கைக்கு விஜயம் செய்தார். மூன்று வாரங்கள் இங்கு தங்கி பல இடங்களுக்கும் சென்று தன் பக்தர்களுக்குத் தரிசனம் வழங்கியவர், யாழ்ப்பாணம் வந்தவிடத்தில், பருத்தித்துறை மண்ணிலும் காலடி பதித்தார். வல்லிபுர ஆழ்வார் கோயிலுக்கு வருகை தந்து தமது அடியார்களை ஆட்கொண்டார்.

காந்தியின் சாத்வீகக் கொள்கைகளால் வேளையிலே கவரப்பட்டு அவ்வழியில் கதர் அணிந்து, அவர் இலட்சியங்களுக்குத் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்து வந்தவர்தான். மாணவன் காந்தியின் தந்தை, மகாத்மாஜி வருகை தந்தபோது அவரை நேருக்கு நேர் தரிசித்ததையும், அவர் திருவாய் மொழிந்த உபதேசங்களைக் கேட்டதையும் பெரும் பேறாகக் கருதிய அவருக்கு இரண்டோர் வருடத்தில் பிறந்தான் ஒரு புதல்வன். அந்தப் பேருவகையில் அந்தப் புதல்வனுக்கு கரம் சந்த்ர மோகனதாஸ் காந்தி என்றே பெயர் சூட்டி இறும்பூதெய்தினார் அவர்.

பாடசாலையில் அவனை, இந்த நீண்ட பெயரைச் சொல்லக் கஷ்டப்பட்டு, சக மாணவர்களிலிருந்து ஆசிரியர் வரை காந்தி என்றுதான் அழைப்பார்கள்.

பெயர் சூட்டியதன் அர்ப்பணிப்பு எங்கே?

தந்தை எவ்வழி?

தனயன் எவ்வழி?

இதைத்தான் இராசலிங்க வாத்தியார் 'பெயரிலே ஒன்றுமில்லை. ஆட்கள் நல்லவர்களாயிருக்க வேண்டும். அதுதான் முக்கியம்!' என்று குறிப்பிட்டு, மேலை நாட்டவர் சொன்னதையும் எடுத்துக் காட்டினார்.

எச்சிற்கையாலே காக்கா ஓட்டாதவனுக்கு தர்மராசா என்று பெயர் இருக்கும். நாய் குரைத்தால் நடுங்கி ஓடுகிறவனுக்கு வீரசிங்கம் என்று பெயர் சூட்டியிருப்பார்கள், ஏழைகளைச் சுரண்டிப் பணம் சேர்ப்பவனுக்குக் கொடைவள்ளல் என்று பட்டம் வழங்குவார்கள்.

இவைதான் உலக நடவடிக்கைகள்.

அன்று பாடசாலை விட்டு வீடு திரும்பும்போது விவே இராசனுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறி, அவனை உற்சாகப்படுத்திக் கொண்டு வந்தான்.

"எப்பிடி? காந்திக்கு இராசலிங்க வாத்தியார் நல்லாக் குடுத்தாரடா! இனி அவன் வாய் திறக்க மாட்டான்" என்று உஷார்ப் படுத்தினான்.

"நான்தான் அவரைக் கிளப்பி விட்டனான்!" என்று தலையை ஆட்டிப் பெருமிதமும் கொண்டான்.

விவேயின் வீடிருக்கும் இலட்சுமணன் தோட்டம் வரும்வரை, விவே சொல்பவற்றைக் கேட்டு சற்று ஆறுதலடைந்த மனத்துடன் வந்த இராசன், அவன் பிரிந்ததும், திரும்பவும் அமைதி குன்றிய மனத்துடன் வீட்டை நோக்கி நடந்தான்.

வீட்டுக்குப் போனதும் அம்மா சாப்பாடு பரிமாறினாள். அவன் மனநிலை சரியில்லை என்பதை உணர்ந்து கொண்ட அவள், அவனிடம் கேள்விகள் கேட்டு, அவன் மனதைப் புண்படுத்தக் கூடாது என்ற எண்ணத்தில் தானும் அமைதியாயிருந்தாள்.

வயிற்றுப்பசி, அவனை உணவுண்ண வைத்தது. பொறுமையோடிருந்து சாப்பிட்டு முடிந்ததும் கோப்பை கழுவ எழுந்த போது, "அம்மா, நான் இனிப் பள்ளிக்குடத்துக்குப் போக மாட்டன்!" என்று அழுத்தமாகச் சொல்லி விட்டு வெளியேறினான்.

வள்ளி, அதிர்ந்து போய் இருந்தாள்!

அவள் சொன்னது போல இரண்டு நாட்கள் பாடசாலைக்குப் போகாமலே இருந்தான்.

வள்ளியின் பாடு பெரும் திண்டாட்டம்.

இராசன் பாடசாலைக்குச் செல்வது அவன் தந்தைக்குப் பெரும் வெறுப்பு. அதனால் பாடசாலையோடு தொடர்பான காரியங்கள், கொப்பி, பென்சில் வாங்கத் தேவையான பண விவகாரங்களை,

வள்ளி, இரகசியமாகவே ஒப்பேற்றி, அவனைப் படிக்க அனுப்பிக் கொண்டிருந்தாள். இந்த நிலைமையில், அவன் பாடசாலைக்குப் போகாமல் குளறுபடி பண்ணிக் கொண்டிருப்பதை வெளியரங்கமாக விசாரிக்கவோ, அதைத் தீர்த்து வைக்க முயற்சிப்பதோ பெரும் இடைஞ்சலாயிருந்தது.

கந்தரும், அதைத் தெரிந்தும் தெரியாதது மாதிரி நடந்து கொண்டார்.

இரண்டு நாட்கள் இராசன் பாடசாலைக்குப் போகவில்லை. வீட்டில் படுத்துக் கிடப்பான். வீட்டுக்காரர் சொல்கிற வேலைகளைச் செய்து கொடுப்பான். ஆடு மாடுகளுக்கு வேண்டிய சாப்பாடுகளைத் தேடி வைப்பான். கடைக்குப் போய்ச் சாமான் வாங்கிக் கொடுப்பான். மாலை வேளையில் வழக்கம் போல விளையாடுமிடத்துக்குப் போய், விளையாட்டில் சேர்த்தால் சேர்ந்து விளையாடுவான். அல்லது பார்த்துக் கொண்டு நிற்பான்.

என்ன ஆகப் போகிறது என்பது அவனுக்குச் சூனியமாக இருந்தது.

இந்த அவல நிலையை, இராசனின் மூத்த அண்ணன் தம்பிப் பிள்ளைக்குத் தெரிவித்து, அவனைக் கூப்பிட்டு, அவன் மூலம் ஒரு தீர்வு காண வேண்டுமென்று வள்ளி முடிவு செய்தாள்.

தம்பிப் பிள்ளை தாழையடியில் தொழில் செய்கிறான். அவன் மட்டுமல்ல, அவனுக்கு நேரே இளைய தம்பி செல்லத்துரையும் அங்குதான் தொழில். சீவல் தொழில்தான். கள்ளிறக்கும் தொழில். இருவரும் இளைஞர்களாதலால், அவர்களுடைய தாய்மாமன் மாணிக்கம் அவர்களை அழைத்துப் போய் தொழில் பழக்குகிறார்.

வள்ளியம்மையின் வீட்டுக்கு முன்பாக உள்ள வீதியால்தான், காலையும் மாலையுமாக இரு தடவை, தட்டி பஸ் தாழையடிக்குச் செல்லும். தாழையடிக்குப் போகிற பஸ், மாணிக்கருடைய கள்ளுக் கொட்டிலுக்குப் பக்கத்தில் தரித்துத்தான், பின் பருத்தித் துறைக்குத் திரும்பி வரும். தட்டிபஸ், உரிமையாளர் தாழுவிடம் கடிதத்தைக் கொடுத்தால், அவர் அங்கு போய்ச் சேர்ந்த மறுகணமே கடிதத்தை மகனிடம் சேர்ப்பிப்பார்.

வள்ளி எப்படிக் கடிதம் எழுதுவது? எழுத வாசிக்கத் தெரியாது. இரண்டாவது மகள் தங்கம்மாவைக் கொண்டு கடிதம் எழுதுவித்து

காலையில் பஸ்காரத் தாமுவிடமே கொடுத்தனுப்பினாள். 'இராசன் பாடசாலைக்குப் போகாமல் குழப்பிக் கொண்டிருக்கிறான் பெயரிலே ஏதோ தொந்தரவாம். நீ உடனே புறப்பட்டு வா!' என்பதுதான் கடிதத்தின் சாரம்.

கடிதத்தைக் கொடுத்து விட்டு வள்ளி நிமிஷத்துக்கு நிமிஷம் புழுங்கித் துவண்டு கொண்டிருந்தாள். இராசன் பாடசாலைக்குப் போகாததால், புத்தகங்களைத் தொட்டும் பார்க்காமலிருப்பது அவள் இதயத்தை வாள் கொண்டறுப்பது போலிருந்தது.

அதன் காரணமாக ஒருக்கால் ரெஜிஸ்தாரிடம் போய் நிலைமையை அறிந்து வரவேண்டுமென்று மனம் உந்தித் தள்ளியது. அந்த எண்ணம் வலுப்பெறவே, கந்தர் தொழிலுக்குப் போனதும், அந்தப் பதிவுகாரப் புண்ணியவானிடம் போனாள். காலை வேலைகளையெல்லாம் முடித்து விட்டு அங்கு போனபோது நேரம் ஒன்பதரை மணி. பதிவுகாரர் மாட்டுக் கொட்டிலுக்குள் நின்று, மாடுகளுக்கு இராத்திரிக் கரைத்து வைத்த புண்ணாக்குத் தண்ணிப் பாத்திரங்களை அப்புறப்படுத்திவிட்டு, மாடுகளை வெளியாலே மேய விடுவதற்கு அவிழ்த்துக் கொண்டிருந்தார்.

"யாரது கந்தன் பெண்டிலா? என்ன விசேசம்?" என்று கேட்டார்.

"பிள்ளையின்ரை பேரைப் பிழையாய்ப் பதிஞ்சு போட்டியள் ஐயா! அவன் அங்கை கிடந்து அழுகிறான்!"

"எந்தப் பிள்ளை? வயதென்ன?"

"இராசன் எண்டு தேப்பன் சொன்னவராம். நீங்கள் கணவதி எண்டு பதிஞ்சு போட்டியள். இப்ப, அவன் சோதினை எடுக்கிறதுக்கு பிறப்புச் சேட்டிவிக்கற் எடுக்க, அதிலை கணவதி எண்டு கிடக்காம்."

"நல்ல கதை இது? தேப்பன் சொல்லாமல் நான் பதிஞ்சனானே? மறந்து போய்க் கதைக்கிறியள்" இவர்கள் தலையிலே சுமத்தினார் அவர்.

"இப்ப என்ன செய்யிறதாக்கும்? அவன் பள்ளிகூடத்துக்குப் போக மாட்டன் எண்டு அடம் பிடிச்சுக் கொண்டிருக்கிறான்."

மாட்டுக் கொட்டிலுக்குள்ளிருந்து வெளியே வந்தார். வள்ளிக்கு முன்னால் நின்று அவளை ஏற இறங்கப் பார்த்தார். பார்த்தவாறே, "என்ன பேர் வழங்குவது அவனுக்கு?" என்று கேட்டார்.

"இராசன்!"

"பதிஞ்சிருக்கிற பேர் என்ன?"

"கணபதியாம்..." என்று மெதுவாக இழுத்தாள்.

"கணபதிக்கு என்ன குறைச்சல்? உங்கடை பிள்ளையாற்றை பேரெல்லெ! உங்கடையாக்கள் எல்லாரும் வைக்கிற பேர்தானே..."

'எங்கடையாக்களுக்கொரு பேர், உங்கடையாக்களுக்கொரு பேரோ? ஏன் கைகால் வித்தியாசமோ?' என்று கேட்க அவள் மனம் உந்தியது. ஆனால் மனதை அடக்கிக் கொண்டு, "அவனுக்கு இராசன் எண்டு பேர் பழகீட்டுது. இனி என்ன செய்யிறது? ஐயா வாலை ஏதாவது..." என்று இழுத்தாள்.

"ம்... ம்... ஐயா ஒண்டுஞ் செய்யேலாது. கச்சேரிக்குப் போய் பேர் மாத்த வேணும். அதுக்குப் பொடியன்ரை தகப்பன் போக வேணும்!"

"பொடியும் போக வேணுமா ஐயா!"

"தேவையில்லை!.. ம்... ம்... போனால் நல்லது!"

"மொத்தப் பெரிய உபகாரமையா! போயிட்டு வாறன்!" என்று சொல்லிவிட்டு வள்ளி வெளியேறினாள். வரும் வழியில், கந்தப்பரிடம் கெஞ்சி மன்றாடி, இராசனையும் கூட அனுப்புவதென முடிவு செய்து கொண்டு வீட்டுக்கு வந்தாள்.

# 11

**வீ**ட்டுக்கு வந்து, கடைக்குப் போய் சாமான்கள் எல்லாம் வாங்கி வந்து, சமைத்து முடித்து கந்தப்பருக்குச் சாப்பாடு பரிமாறினாள். விளைமீனிலே குளம்பு, பயற்றங்காய் வெள்ளைக்கறி, பெரிய காரல் மீனிலை தீயல், சொதி, அத்துடன் சாட்டுக்குக் கொஞ்சம் ஒடியல் பிட்டு.

பயற்றங்காய், கத்திரிக்காய் வெட்டிப் போட்டு மாங்காய்ச் சீவலும் சேர்த்து காரல் மீனைக் கலாதியாய்த் தீய்த்திருந்தாள்.

வள்ளியும் ஒரு குண்டாளக் கோப்பையிலே சோறு போட்டுக் கொண்டு வந்து, அவருக்கு முன்னாலிருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

"இஞ்சை, கேக்கிறனெண்டு கோவிக்காதையுங்கோ. இராசன் ஐஞ்சாறு நாளாய் அழுது கொண்டிருக்கிறான். ஒருக்கால் அவனைக் கச்சேரிக்குக் கூட்டிக் கொண்டு போய்..."

அவள் சொல்லி முடிப்பதற்குள், கந்தப்பர் அவளை ஏறிட்டு நிமிர்ந்து பார்த்தார்.

"அவன்ரை பேரை ஒருக்கா மாத்தி விடுங்கோ!" வள்ளியின் பணிவான குரல்.

"எனக்கு வேறை வேலையில்லையே? சீவல் முடிஞ்சு கச்சேரிக்குப் போட்டு வர நேரம் கிடக்கே?"

"என்னப்பா செய்யிறது? எங்கடை வீட்டுக்காரியங்களை நாங்கள் நானே பாக்க வேணும்?"

கந்தப்பர் ஒன்றும் பேசாமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

"உங்களுக்குக் கஷ்டம்தான். நான் போயிடுவன். தகப்பன் இருக்க நான் எப்பிடிப் போறது? எனக்கு எழுத வாசிக்கவும் தெரியாது..."

என்று இழுத்தாள். அடுக்களைக்கு எழுந்து போய் அகப்பையில் கொஞ்சம் தீயல் அள்ளிக் கொண்டு வந்து அவர் கோப்பையில் வைத்தாள்.

'என்னத்துக்கடி அவனுக்குப் படிப்பு?' என்று அவர் கேட்காமல் விட்டதே பெரிய காரியமாகப் பட்டது வள்ளிக்கு. 'காலத்துக்கு ஈடு கொடுக்க வேண்டும் என்ற மனநிலைக்கு வந்து விட்டார் போலும்!' என எண்ணிக் கொண்டாள் அவள்.

"கொஞ்சம் வெள்ளெனச் சீவிப் போட்டு, அவனையும் கூட்டிக் கொண்டு போய், கச்சேரியிலை பதிஞ்சு போட்டு வாருங்கோ!" என்று மன்றாட்டமாய் வேண்டுகோள் விடுத்தாள்.

கந்தப்பர் சாப்பிட்டு விட்டு எழுந்து குடத்தடிக்குப் போய் கையை வாயைக் கழுவிக் கொண்டு, நேரே தன் சிம்மாசனத்தில் படுத்தார். ஒரு குச்சியைத் தேடி எடுத்துப் பல்லைக் குத்தினார்.

வள்ளிக்குச் சரியான சந்தோஷம்! இராசன் படிப்பதில் கொஞ் சமும் விருப்பமில்லாத கணவர், அவனைக் கச்சேரிக்குக் கூட்டிச் சென்று, அவனுக்குப் பெயர் மாற்றச் சம்மதம் தெரிவித்தமைக்கு. தான் ஆற்றிய பங்களிப்பினை மனதுக்குள் எண்ணிப் பெரும் மகிழ்ச்சி அடைந்தாள். அந்த மகிழ்வுணர்வுடன், மூத்த மகன் தம்பிப் பிள்ளை எப்போது வந்திறங்குவான் என எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

எல்லாத் தொழில்களுமே சுமை நிறைந்தவைதான்! பாடுகள் மிக்கவைதான்! பாடுபடுவதனால் தான் தொழிலாளியை பட்டாளி என்று அழைக்கிறார்கள். ஆனால் இந்தத் தொழில்கள் எல்லாவற்றிலும் மிகவும் பயங்கரமானதும் நுணுக்கம் நிறைந்ததுமான தொழில் சீவல் தொழில். முதலாவது அந்தத் தொழில் செய்பவன் சாதி ரீதியாக மிகவும் கொடுமைப்படுத்தப்படுகிறான். இரண்டாவது மரமேறுவது பயங்கரமான வேலை. கால் சறுக்கி, கை சறுக்கி, அல்லது ஒரு மட்டை இடுங்குப்பட்டு... அதைச் சொல்லவே உடல் நடுங்கும். மூன்றாவது, ஒருநாள் கூட லீவு எடுக்க முடியாத தொழில். ஆத்திரம் அவசரம் என்று ஒரு தொழிலாளி எங்காவது செல்ல வேண்டி வந்தால் கூட, இன்னொரு தொழிலாளியை ஒழுங்கு செய்து விட்டுத்தான் செல்ல வேண்டும்.

கள்ளுச் சுரக்கும் பாளையின் நுனிப்பகுதி நாளொன்றுக்கு இரண்டு வேளையும் அரும்பளவு சீவப்பட்டால் தான் அது சுரக்கும்.

சீவாது விட்டால் பாளை காய்ந்து உரமேறி, சுரப்புக் குன்றி அறவே இல்லாது போய் விடும்.

அதனால் சீவல் தொழிலாளி ஒருத்தன் எங்காவது போவதாயிருந்தால், இன்னொரு தொழிலாளியை ஏற்பாடு செய்து விட்டுத்தான் போக வேண்டும். அவனே பத்துப் பதினைந்து பனை தென்னைகளில் ஏறி இறங்க வேண்டியவன், மற்றொருவனின் மரங்களிலும் ஏறி இறங்குவதானால் எவ்வளவு கஷ்டம்?

ஒருநேரம் அல்லது இரண்டு நேரம் பொறுப்பெடுப்பான். அதற்குள், உரியவன் வந்து சேர வேண்டும். கஷ்டமும் துன்பமும் நிறைந்த தொழில்.

தம்பிப் பிள்ளைக்கு அம்மாக்காரியின் கடிதம் அன்று காலையிலேயே கிடைத்துவிட்டது. காலைத் தொழிலை முடித்துவிட்டு, தான் சீவும் மரங்களைத் தம்பியார் செல்லத்துரையிடமும், வேறொருவரிடமும் பிரித்துக் கொடுத்து விட்டு, அன்று மாலையில் ஊருக்குப் புறப்பட்டான்.

இராசனுடைய படிப்பு விஷயங்களை வீட்டிலிருந்து தாயானவள் அன்றாடம் நெறிப்படுத்தினாலும், அவனைப் படிப்பிக்க வேண்டும் என்று உறுதியோடிருப்பவன் தம்பிப்பிள்ளைதானே!

மாலை ஆறு மணியானதும் தம்பிப்பிள்ளை வீடு வந்து சேர்ந்தான்.

நெருக்கடியான தருணத்தில் அவன் வந்து சேர்ந்தது வள்ளிக்கு பெரும் ஆறுதலாகவும் தெம்பாகவும் இருந்தது!

வந்தவனுக்குத் தேத்தண்ணீர் போட்டுக் கொடுத்து விட்டு, "இரவைக்கு என்ன மோனை சாப்பிடப் போறாய்?" என்று கேட்டு, மகளைக் கூப்பிட்டு, பிட்டு அவிக்கச் சொல்லிவிட்டு, மகனுடன் இருந்து இராசன் பள்ளிக் கூடத்துக்குப் போகாததற்கான வில்லங்கங்களை விளக்கமாகச் சொன்னாள். கந்தப்பர் அந்த நேரம் தொழில் செய்வதற்காகத் தூரத்துக் காணியொன்றுக்குச் சென்றிருந்தார். அது வள்ளிக்குப் பெரும் உதவியாக இருந்தது.

தலைமை வாத்தியார் பிறப்புச் சேட்டிவிக்கற் எடுப்பித்ததையும், அதில் அவனுக்குக் கணபதி என்று பெயர் பதியப்பட்டிருப்பதையும் கூறி, "பள்ளிக்குடத்திலை எல்லாப் பிள்ளையளும் கணவதி, கணவதி எண்டுதானாம் கூப்பிடுகினம். இராசன் எண்டு கூப்பிடுறதில்லையாம்.

அதனாலை அவன் இப்ப இரண்டு மூன்று நாளாய்ப் பள்ளிக்குடம் போகாமலிருக்கிறான்!" என்று சொன்னாள்.

அத்துடன், அன்று காலை, தான் ரெஜிஸ்தாரரிடம் போனதையும் அவர், கச்சேரிக்குப் போய் பெயர் மாற்ற வேண்டும் என்று சொன்னதையும் விபரமாக எடுத்துக் கூறினாள்.

"இராசன் எண்டுதானே அப்பு பதிஞ்சிருப்பர்?" என்று கேட்டான் தம்பிப் பிள்ளை.

"அப்பிடித்தான் கொப்பு பேர் சொல்லியிருப்பர். றெயித்தார் பதிஞ் சா லெல்லோ...? இந்தக் குறுக்காலை போவார், காத்தான், பூத்தான் எண்டுதானே எங்கடை பிள்ளையளுக்குப் பேர் பதியிறவங்கள்!" என்று வெறுப்போடு சொன்னாள் வள்ளி.

"இந்த அக்கிரமங்கள் எப்பதான் தொலையுமோ?" என்று அவன் பல்லைக் கடித்துக் கொண்டு பெருமூச்செறிந்தான்.

சிறிது நேரம் யோசித்துக் கொண்டிருந்தான். பின், "கச்சேரிக்குப் போய்த்தான் பேர்மாத்த வேணும். அதுக்கு அப்புதான் போகோணும்... நான் அப்புவிட்டைச் சொல்லிப் போட்டுப் போறன்..." என்றான்.

"நானும் சாடை மாடையாய்ச் சொல்லி வைச்சிருக்கிறன். தான் போறதெண்டு சொல்லிப் போட்டார்!" என்றாள் வள்ளி.

அந்த நேரம் பார்த்து இராசன் வந்தான். அவனிடம் "பள்ளிக் கூடத்திலை என்னடா நடந்தது?" என்று தமையன் கேட்டான்.

அவ்வளவுதான்! அவன் கண்ணீரும் கம்பலையுமாய் அங்கு நடக்கும் அல்லோல கல்லோலங்களையெல்லாம் விளக்கமாகச் சொல்லிக் கொண்டே இருந்தான்.

கச்சேரிக்குப் போய் பெயர் மாற்றுகிற திட்டத்தைச் சொன்னான் அண்ணன்காரன்.

இராசன் முகத்தில் இலேசாக மகிழ்ச்சி அரும்பியது.

"மாத்திற பேரை ஒரு நல்ல பேரா மாத்துவம். அல்லது இராசன் எண்ட பேர்தான் வேணுமெண்டால் அதையே வைப்பம்."

இராசன் மனதில் ஒரு குறுகுறுப்பு இழையோடியது. அண்ணன் சொல்றதும் சரிதான். 'இந்தப் பயல்களுக்கு ஒரு திணறலைக் கொடுக்க வேணும்' என்று அவன் மனதில் ஓர் எண்ணம் அரும்பியது.

"என்ன?" என்று கேட்டான் தம்பிப் பிள்ளை.

"ஓம்!" என்று மெதுவாகச் சொல்லித் தன் இசைவை வெளிப்படுத்தினான்.

"அப்ப, என்ன பேர்?"

இராசன் சிறிது நேரம் யோசித்த வண்ணமிருந்தான்.

"யோசித்துச் சொல்லு"

"ரவீந்திரன்?... இது எப்படி?" என்று கேள்வி ரூபத்தில் சொன்னான் இராசன்.

"உனக்கு விருப்பமெண்டால் சரிதான். அது நல்ல பேர்!" என்றான் தம்பிப்பிள்ளை.

வள்ளி ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள். ராசு, ராசு என்று அன்பு குழைய அழைத்த அன்னைக்கு, இது மனதில் என்னமோ போலிருந்தது. என்றாலும், இக்காலத்துப் பொடியன் விரும்பேக்கை நான் என்ன செய்யிறது? என்ற எண்ணத்தில் பேசாமலிருந்தாள்.

அன்றிரவு சாப்பாட்டை முடித்துக் கொண்டு, கந்தப்பர் தனது சிம்மாசனத்தில் படுத்துக் கிடந்தார். தம்பிப்பிள்ளை, யாரோ தனது சிநேகிதனிடம் போய்ச் சிறிது நேரம் கதைத்துக் கொண்டிருந்து விட்டு, படலையை திறந்து வந்து நேரே தந்தையின் முன்வந்து நின்றான். கந்தர் அவனை உற்றுப் பார்த்தார்.

"கச்சேரிக்கு ஒருக்கால் போய், இராசன்ர பேரை மாத்திப் போட்டு வாணை அப்பு. அவன் படிப்பைக் குழப்பிக் கொண்டிருக்கிறான்" என்று பணிவான, ஆனால் சற்றே கண்டிப்பான குரலில் கூறினான்.

"ஏதோ உங்கை சிலம்பல் பட்டுக் கொண்டிருக்கினம். அவனும் பள்ளிக்குப் போகாமல் சும்மா உழண்டு கொண்டு திரியிறான்" என்று பதில் சொன்னார்.

இராசனின் படிப்பு விஷயமாக, வள்ளி மட்டும் ஏதாவது முயற்சி எடுத்தால் கந்தர் சீறிப் பாய்வார். மகன் தலையிட்டதால் தனது பாச்சா பலிக்காது என்பதை உணர்ந்து கொள்ளாமலிருக்க அவர் சிறுபிள்ளையல்ல. அம்மாக்காரிதான் தலைக்கிடாயாக நிற்கிறாள் என்றாலும், அவன் தன்னைப் படிக்கவைக்கவில்லையென்று ஒரு வெக்காரத்தோடை இருக்கிறவன், குடும்பத்திலை மூத்த மகன். அவன்ரை சொல்லுக்கு இசைந்து போக வேணுமென்று பணிந்து நின்றார்.

"சரி; நாளைக்கு நாளையிண்டைக்கு நான் கச்சேரிக்குப் போறன். வெள்ளென எழும்பிச் சீவிப் போட்டுத்தானே போக வேணும்" என்றார்.

"என்ன செய்யிறது? எங்கடை வேலையை நாங்கள்தானே கஷ்டப்பட்டாவது செய்ய வேணும்!" என்று சொல்லிவிட்டு, அவன் அம்மாக்காரியை அழைத்துக் கொண்டு குசினிக்குப் போனான்.

அன்றிரவு, அவன் வீட்டில் தங்கிவிட்டு, விடிந்ததும் தட்டி பஸ்ஸில் ஏறி தாழையடிக்குப் புறப்பட்டான்.

## 12

அன்று சற்று வெள்ளென எழுந்து, சீவலை முடித்துக் கொண்டு ஒன்பதரை மணியளவில், கந்தர் யாழ்ப்பாணம் செல்லப் புறப்பட்டார்.

இராசனும் மலர்ந்த முகத்துடன் தந்தையுடன் சென்றான்.

பஸ் எடுக்க வீட்டிலிருந்து கிராமக் கோட்டடிக்குச் செல்ல வேண்டும். தாழையடியிலிருந்து வருகிற பஸ், காலை எட்டு மணியளவில் வீட்டுக்கு முன் பாகவுள்ள றோட்டால் வந்து பருத்தித் துறை பஸ் நிலையத்தைச் சேரும். அந்த பஸ்ஸில்போனால், அங்கிருந்து யாழ்ப்பாண பஸ் எடுக்கலாம்.

எட்டு மணிக்கு முடியவில்லையே!

அதனால் கந்தப்பர் மகனையும் அழைத்துக் கொண்டு கிராமக் கோட்டடிக்கு நடந்து சென்றார். சுமார் ஒன்றரை மைல் தூரம்.

கிராமக் கோட்டுச் சந்தியை அடைவதற்கு முன்பாகத்தான் இருக்கிறது அந்த றெஜிஸ்தாரின் வீடு. கத்தோலிக்க சமயத்தவர். தடித்த ஜாதி வெறி பிடித்த சைவ வேளாளர் வசிக்கும் வீடுகளுக்கு நடுவில் வாழ்கிறார்.

கத்தோலிக்கர் என்ற படியால் - வெளிநாட்டிலிருந்து வந்த சமயத்தைத் தழுவியர் என்ற காரணத்தாலும், சகலருக்கும் வேண்டிய ஓர் அரசாங்கத் தொழிலைச் செய்கின்ற காரணத்தாலும் சாதி வெறி குறைந்து பண்புடன் நடந்து கொள்ளுவார் என்ற எதிர்பார்ப்புக்கு மாறாகவே அவர் கருமமாற்றினார். தன்னை அண்டி வாழ்பவர்களின் நடத்தைக்கு மாறாக வாழக் கூடாது என்ற பண்பாடு போலும்!

நளவர், பள்ளர், பறையர், வண்ணார், அம்பட்டர் என்று தாழ்த்தப்பட்ட ஜாதியில் யாராவது ஒருவருக்குப் பிள்ளை பிறக்கும்;

அதைப் பதியப் போவார்கள். றெயித்தார் ஏதாவது வேலை செய்து கொண்டிருப்பார்.

"என்ன முருகன் வந்தது?" என்று கேட்பார்.

"பிள்ளை பிறந்திருக்கையா, பதிய வந்தனான்."

"யாருக்குப் பிறந்தது?"

"ஹி... ஹி... என்ன கேள்வி ஐயா? எனக்குத்தான்!"

"என்ன பிள்ளை? பெட்டையோ, பொடியனோ?"

"பொடியன்!"

"எப்ப பிறந்தது?"

"அது... ஒரு நாலைஞ்சு நாள் இருக்கும்!"

"சரியான திகதி என்ன?"

"பதினாலாந் தேதி ஐயா!"

"என்ன பேர் வைக்கப் போறாய்?"

"ஹி... ஹி... சிவக்குமார் எண்டு வைக்கச் சொல்லி மனுஷியின்ரை தம்பிக்காரன் நிக்கிறான்!"

"டே... பொல்லாத பேராக் கிடக்கு!"

"ஹி... ஹி..."

"ஏன்ரா முருகா, உங்கடை பேரன், பூட்டன்மாரை யெல்லாம் மறந்து போனியளே?"

"..."

"உன்ரை அப்பன்ரை பேரென்ன டாப்பா?"

"சின்னக்குட்டி!"

"அதுசரி, உன்ரை பெஞ்சாதிக்கென்ன பேர்?"

"நாகம்மா!"

"சரி, இப்ப நான் கையிலே வேலையாயிருக்கிறன். எல்லாம் பதிஞ்சு வைக்கிறன். நீ, நாளைக்கு அல்லது நாளையிண்டைக்கு வந்து கையெழுத்துப் போட்டிட்டுப் போ!"

"சரி ஐயா!"

"ம்... பிள்ளைக்கு என்ன பேர் வைக்கப் போறனெண்டனி?"

"சிவக்குமார்!"

"சிவக்குமார்... சரி போயிட்டு வா! நாளையிண்டைக்கு வா!"

முருகன் வீட்டுக்குப் போய், நாளை மறுநாள் வரும்போது றெயித்தார் எல்லாம் பதிந்து வைத்திருப்பார்.

அவருடைய வீட்டு முற்றத்தில், பிறம்பாக ஒரு கொட்டில் கட்டி, கிடுகினால் வேய்ந்து, சலாகை அடித்து வைத்திருக்கிறார். அதுதான் றெயித்தார் கந்தோர். எல்லாச் சாதியும் வருகிற படியால் அதை அமைத்திருந்தார். நடுவில் ஒரு மேசை போட்டு, தனக்கென ஒரு கதிரையும் வைத்துள்ளார். யார் வந்தாலும் நின்ற நிலையிலே கையொப்பமிட்டுச் சென்று விடலாம்.

முருகன் வந்தால் அவர் காட்டுகிற இடத்திலே கையெழுத்து வைத்துவிட்டுப் போக வேணடியதுதான். கையெழுத்திடத் தெரியாவிட்டால், வலது கைப் பெரு விரலடையாளம்.

நிச்சயமாக, முருகனுடைய பிள்ளைக்குச் சிவக்குமார் என்ற பெயர் பதிந்திருக்க மாட்டார். பிள்ளையின் பேரன் பெயர் சின்னக்குட்டி என்பதால், அதே பெயரைச் சிறிது மாற்றி சின்னவன் என்றுதான் பதிந்திருப்பார்.

கையெழுத்துப் போட வருகிறவர்கள், படிக்காதவர்களாயிருந்தாலென்ன, எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாயிருந்தாலென்ன, அவர்களை அவர் நடத்தும் முறையில், அந்தச் சிறிய கொட்டில் கந்தோருக்குள் கூனிக் குறுகிக் காலெடுத்து வைத்து, நின்ற நிலையில், மேசையில் விரித்து வைக்கப்பட்டிருக்கும் பதிவுப் புத்தகத்தில், அவர் காட்டுகிற இடத்தில், கையொப்பத்தை அல்லது பெருவிரல் அடையாளத்தை வைத்துப் போவார்களே தவிர, என்ன எழுதியிருக்கு? ஏது எழுதியிருக்கு? என்று பார்க்கவே மாட்டார்கள்.

தைரியமெல்லாம் காலங் காலமாகப் பறிக்கப்பட்டு வருகின்ற போது உண்மை நிலைப்பாடு எப்படி வலுப்பெறும்?

தாழ்த்தப்பட்ட மக்கள் படிப்பதில்லை. படித்தாலும், அக்கம் பக்கத்திலுள்ள சிறிய பாடசாலைகளில், நாலாம், ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமே. அதனால் ஒரு பியோன் வேலை கூடப் பார்க்க முடியாது. எப்படியும் ஒரு அரசாங்க உத்தியோகத்தில் சேர்வதற்கு,

பெயரை, வயதை, பிறந்த இடத்தை நிச்சயப்படுத்துவதற்குப் பிறப்புப் பத்திரம் தேவை. அதைப் பெற வேண்டும். இந்த ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அந்த வசதி கிட்டாத வரை, புழக்கத்திலுள்ள பெயர்தான். பதிவுப் பெயராகவும் இருக்குமென்று திட்டவட்டமாகச் சொல்ல முடியாது.

பதிவுகாரரிடம் வந்த முருகன் சொல்லி விட்டுப் போன பெயர் சிவக்குமார். ஆனால் அவர் பதிந்ததோ சின்னக்குட்டி.

செல்லத்துரை, சின்னத்துரை, நாகலிங்கம், முருகேசு என்றெல்லாம் பெயர்கள் புழக்கத்திலிருக்கும். ஆனால் பதிவில் செல்லன், சின்னான், நாகன், முருகன் என்றிருந்தால் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. பிறப்புப் பத்திரம் பெற வேண்டிய தேவையில்லாதபடியால் செல்லத்துரை, சின்னத்துரை, நாகலிங்கம், முருகேசுக்களும் இன்னும் சற்று நாகரிகமான பெயர்களும் நடமாட முடிகின்றது.

கால வளர்ச்சியோடு ஒட்டி, ஜாதி வெறியர்களான பதிவுக்காரர்களிடமிருந்து இளம் சந்ததியினரிடம் அப்பதவிகள் மாறி வரும்போது, இன்றைய நாகரிகத்துக்கேற்றவாறு அழகிய பெயர்கள் பதியப்படுகின்றன என்பது உண்மைதான்! அதே வேளை, ஒரு குழந்தையின் சரியான பெயர் பதியப்படும் வேளை, தந்தையின் பெயர் சரியானதா? எனக் கூற முடியாது. செல்லையா என்பவருக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்து நந்தகுமார் எனப் பெயர் பதியப்படும். பிள்ளையின் பெயர்; நந்தகுமார். தந்தையின் பெயர் முருகன் செல்லையா என்று சொல்லப்படுகிறது. அதே போல் பதியப்படுகின்றது. ஆனால் பழைய றெஜிஸ்ரார், செல்லையாவைச் செல்லன் என்றுதான் பதிந்திருப்பார். ஆகையால் அது பிழையானதாகும். ஆனால், புதிய தலைமுறைக்கு அதனால் நன்மை ஏற்படுகிறது என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம்.

செல்லையாவுக்குப் பிறப்புப் பத்திரம் தேவைப்பட்டு, அதைப் பெற்றிருந்தால் உண்மை நிலை வெளிப்பட்டிருக்கும். ஒரு பிள்ளையின் பெயரைப் பதிவு செய்ய, தந்தையின் உண்மைப் பெயர் - அதாவது பிறப்புச் சாட்சிப் பத்திரம் தேவைப்படாத வரை, புதிய தலைமுறைக்கு லாபம்தான்.

இன்னும் பிறப்புப் பதிவின் போது தொழில் பதிகின்றார்கள். கள்ளுச் சீவுகிற அல்லது பறையடிக்கிற ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஓர் இளைஞன் தன் சொந்தத் தொழிலை விட்டு, ஒரு கடையில் விற்பனையாளனாக அல்லது தொட்டாட்டு வேலை செய்பவனாக

இருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவனுக்கு ஒரு பிள்ளை பிறக்கின்றது. பதியப் போகின்றான். தொழில் கூலி வேலையென்றோ விற்பனையாளன் என்றோ சொன்னாலும், றெஜிஸ்ரார் அவ்விளைஞனுடைய தந்தையரின் தொழிலைத் தெரிந்தவராதலால், மரமேறுதல் என்றோ பறையடித்தல் என்றோ பதிந்து விடுகிறார்.

இந்தச் சமூக மக்களை எவ்வளவு முன்னேறாமற் செய்ய முடியுமோ அவ்வளவுக்குத் தடைகள், இடையூறுகள். தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேறாமல் தடுத்ததில், றெஜிஸ்ரார்மாருக்கும் முக்கிய பங்கு உண்டென்றால், அது மறுக்க முடியாத உண்மை.

இராசனுக்குத் கணவதி என்று பெயர் சூட்டிய றெஜிஸ்ராரின் வீடு வந்ததும் கந்தர் காறித் துப்பினார். "இதுதான் அந்தப் பரதேசியின் வீடு!" என்று வீட்டைக் கண்ணால் காட்டி முகத்தைச் சுளித்தார்.

இராசனுக்கும் கொடும் ஆத்திரம் மனதில் குமுறியது.

கிராமக் கோட்டடியில் பஸ்ஸைப் பிடித்து இருவரும் பயணமானார்கள். மனதில் ஒரு வைராக்கியம். ஒரு மணித் தியாலத்தில் யாழ் நகரில், நாகவிகாரை எனப்படும் புத்த கோயிலடிச் சந்தியில், கந்தர், மகனின் கையைப் பிடித்தபடி பஸ்ஸிலிருந்து இறங்கினார். தான் முன்னும், மகன் பின்னுமாக விறு விறுவென்று ரயில் பாதையால் கிழக்குத் திசை நோக்கி நடந்தார்கள். ரயில் நிலையத்தைத் தாண்டி சிறிது நேரத்தில் கச்சேரியை அடைந்தார்கள். பன்னிரண்டு மணி நெருங்கிக் கொண்டிருந்தது. வருவோர் போவோரிடம் பதிவுக் காரியாலயத்தைக் கேட்டு உள்ளே போனார்கள். கந்தர், பெரியவரிடம் நிலைமையைச் சொன்னார்.

உத்தியோகத்தர்கள் சாப்பிடுவதற்காக தமது ஆசனங்களை விட்டுப் போயிருந்தார்கள். பொறுமையோடு காவல் இருந்து, ஒரு கிளாக்கர் முன்னிலையில், அவர் கேட்ட விபரங்களைச் சொல்லிப் பதிந்து கொண்டதும், முத்திரைக்குக் காசு கொடுத்து, முத்திரையில் கையெழுத்திட்டு, இராசனையும் அழைத்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பினார்.

இராசனுக்குப் புதிதாகப் பதிந்த பெயர் ரவீந்திரன்!

## 13

**யா**ழ்ப்பாணம் கச்சேரிக்குப் போய் வந்தபின், இராசன் உற்சாகத்துடன் பாடசாலைக்குப் போனான். முகத்தில் அதைக் காட்டிக் கொள்ளவில்லை. அதே நேரம் சோகமாகவும் வைத்திருக்கவில்லை.

இராசலிங்க வாத்தியார், வகுப்பில் காந்தியடிகளின் உபதேசங்களைப் பற்றி விசேடமாக, தீண்டாமை ஒழிப்புப் பற்றிய அவருடைய போதனைகளை எடுத்துச் சொன்னதன் பின் சற்றே அமைதி நிலவத் தொடங்கியது. இராசனும் தன் பாட்டிலே பாடங்களில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தான்.

கச்சேரியிலே பெயர் மாற்றம் செய்யப்பட்டாலும், மாற்றப்பட்ட பெயரோடு பிறப்புச் சாட்சிப் பத்திரம் வருவதற்கு இரண்டு வாரங்கள் செல்லும். அதுவந்து, தலைமையாசிரியரிடம் அதைக் கொடுத்ததும் சிறு அளவில் ஒரு அதிர்ச்சி ஏற்படும் என்பதை இராசன் உணர்ந்திருந்தான்.

ஆனாலும், ஜே.எஸ்.ஸி. பரீட்சைக்கான விண்ணப்பம் அனுப்பப்பட்டாயிற்று. இராசனுக்கு கணபதி என்ற பெயர்தான் பதியப்பட்டது.

இந்த நிலைமையில் இராசனுடைய வீட்டு விலாசத்துக்கு ஒருநாள் பிறப்புப் பத்திரம் வந்து சேர்ந்தது.

அதன் அடிப்பகுதியில், மாற்றப்பட்ட பெயர் என்ற இடத்தில் சிவப்பு மையினால், ரவீந்திரன் என்றெழுதப்பட்டு, அதன் கீழே, தந்தையாகிய நாகன் கந்தன் என்பவரின் வேண்டுதலுக்கமைய, இன்ன ஆண்டு, இன்ன மாதம், இன்ன திகதி பெயர் மாற்றஞ் செய்யப்பட்டது என்று எழுதப்பட்டிருந்தது.

இராசனுக்கு மிகப்பெரிய சந்தோஷம். ஆனால், அதே வேளை அதை எப்படித் தலைமையாசிரியரிடம் கொண்டு போய்க் கொடுப்பது என்று தயக்கமடைந்தான்.

ஒரு திங்களன்று அதையும் எடுத்துக் கொண்டு பாடசாலைக்குப் போனான். போகும் வழியில், வழக்கம் போல விவேயையும் அழைத்துக் கொண்டு போனான்.

அவ்வேளையிலே, அவனுடைய காதோடு காதாக மட்டும் தனக்குப் பெயர் மாற்றம் செய்ததையும், ரவீந்திரன் என்றுதான் தனக்கு இனிப் பெயர் என்றும் சொல்லியிருந்தான்.

இன்று, வழியில் அந்தச் சேட்டிவிக்கற்றை அவனுக்குக் காட்டினான்.

"ரவீ!" என்று வாணீர் வழிய, கண்களை அகல விரித்தபடி, ஆச்சரியத்தோடு அவனைப் பார்த்தான் விவே.

இராசனும் சிரித்துக் கொண்டான்.

"இதை எப்படியடா தலைமை வாத்தியாரிடம் கொடுக்கிறது விவே?" என்று கேட்டான்.

"உறையிலே வைச்சிருக்கிற பேர்த் சேட்டிவிக்கற்றை இரண்டு கையாலையும் கொடு!" அவன் தமாஷாகப் பதில் சொன்னான்.

"என்ன மச்சான் பகிடியே பண்ணுறாய்?"

"என்ன பகிடி! பேர்த் சேட்டிவிக்கற் வந்திருக்கு. அதைக் கொண்டு போய் அவரிட்டைக் கொடுத்தால் தானே, அவர் இடாப்பிலை மாத்துவார்" என்று சற்றே உறுதியான குரலில் சொன்னான் விவே.

இராசனுக்கு அப்போதும் மனதில் துணிவு ஏற்படவில்லை.

"ம்... ம்..." என்று முனகினான். "சரி, இண்டைக்கு எப்பிடியும் குடுக்கத்தான் வேணும்!" என்று ஒரு முடிவுக்கு வந்தான்.

இருவரும் வேகமாக நடந்து பாடசாலையை அடைந்தார்கள். வகுப்புத் தொடங்கி மூன்று பாடங்களின் போதும், இராசன், அரை குறை மனதுடனேயே பாடங்களில் கவனம் செலுத்தினான். பிறப்புப் பத்திரம் உள்ளடக்கிய நீள் உறையை இடைக்கிடை தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

இடைவேளைக்கு மணியடித்தது.

மணியடித்ததுதான் தாமதம், சகல மாணவர்களும் எழுந்து ஒன்றுக்கு, தண்ணிக்கென்று வெளியே ஓடினார்கள்.

இராசனும் எழுந்தான். அந்த நீள் உறையைக் கையில் எடுத்துக் கொண்டு தலைமை வாத்தியாரின் மேடையண்டை போனாள். மெதுவாக அந்த உறையை இரு கைகளாலும் நீட்டி அவரிடம் ஒப்படைத்தான்.

"என்ன இது?" என்று கேட்டார் தலைமை வாத்தியார்.

"என்னர பேத் சேட்டிவிக்கற்!" என்றான் அவன்.

"அதுதான் இங்கை இருக்கே!"

"பேர் மாத்தின சேட்டிவிக்கற்!"

"பேர் மாத்தினதா?..." என்று ஆச்சரியம் மேலிடக் கேட்டுக் கொண்டே, அதை வாங்கி, உறையிலிருந்து அதை எடுத்து விரித்துப் பார்த்தார் அவர்.

"ர...வீ...ந்...தி...ர...ன்..." என்று நிதானமாக வாசித்தார்.

"ச்சை! பொல்லாத பேராயிருக்கு. இனிமேல் உனக்குப் பேர் ரவீந்திரன்..." 3

என்று சிரித்தவர், "ஜே.எஸ்.ஸி- சோதினைக்கு உன்ரை பழைய பேர் குடுத்தாச்சு. புதுப்பேரை இடாப்பிலை மாத்த வேணும். இன்னும் ரண்டு மாதம் தானே இருக்கு வருஷம் முடிய. அடுத்த வருஷம் புது டாப்பிலை மாத்தி எழுதுவம்..." என்று அவனைக் கூர்ந்து பார்த்தபடி இழுத்தார் அவர்.

இராசனின் முகம் சுருங்கியது.

"இடாப்பிலை மாத்தச் சொல்லி, அண்ணை சொல்லச் சொன்னவர்" என்று சற்றுத் தடுமாறினாலும் நிதானமாகச் சொன்னான் அவன்.

தலைமை வாத்தியார் நெற்றியில் கையை வைத்துச் சிறிது நேரம் யோசித்தார்... ஓர் ஆசிரியரின் பொறுப்புணர்ச்சி அவர் நெஞ்சை வருடியதா? அன்றி, புதிதாகத் தொடங்கப்பட்ட இப்பாடசாலைக்கு சகல மாணவர்களும் வந்து சேரக் கூடிய தருணத்தை இழக்கக் கூடாது என்ற நிர்வாக நெறி உந்தியதா... என்று புரியாத நிலையில்...

"சரி, பார்த்துச் செய்யிறன்!" என்று முடிவு கூறினார்.

இராசன் தலை குனிந்தபடி அவ்விடத்தை விட்டுச் சென்றான். அவனுடைய பெயர் மாற்ற விவகாரம் ஆசிரியர் மத்தியிலும் மாணவர் மத்தியிலும் களை கட்டத் தொடங்கியது.

படிப்பிக்க வந்த ஓர் ஆசிரியர், உற்சாகமான குரலில் "ரவீந்திரன்!" என்று அழைத்தார். "இராசன் கணபதியாகி கணபதி ரவீந்திரன் என்று வந்து விட்டது!" என்று செய்திப் பரிவர்த்தனை உணர்வோடு கூறினார்.

"ஆ! ரவீந்திரன்!" என்று ஒரு மாணவனின் குரல் ஒலித்தது.

"ரவீ..." என்றும் குரல் ஒலித்தது. அது விவே. எல்லோரும் இராசனையே திரும்பிப் பார்த்தார்கள்.

## 14

தலைமையாசிரியரின் பாடு மிகவும் சங்கடமாக இருந்தது.

இரண்டு மாதங்களுக்கு முன்னர், அரசாங்க மட்டத்தில் நடைபெறும் பரீட்சையான ஜே.எஸ்.ஸி. பரீட்சைக்கு விண்ணப்பம் அனுப்பிய போது இராசனுடைய பிறப்புச் சாட்சிப் பத்திரத்தில் இருந்தபடி, கணபதி என்று பெயர் பதிந்து அனுப்பியிருந்தார். அதற்கு மூலாதாரமாக வரவு இடாப்பிலும் இராசன் என்றிருந்த பெயரை வெட்டி, பக்கத்திலே கணபதி என்றெழுதினார்.

இப்போது, கணபதி என்ற பெயர் ரவீந்திரன் ஆகிவிட்டது.

இடாப்பில் மூன்றாவது பெயர் பதிய இடமில்லை.

இன்னும் நாலைந்து வாரங்களில் மூன்றாவது தவணை முடிவடைந்து விடும். இனி ஒன்பதாம் வகுப்பு. அதாவது எஸ்.எஸ்.ஸி-. புதிய இடாப்பில் மாற்றப்பட்ட பெயரைப் பதிந்து விடலாமென்று ஒருகணம் யோசித்தார். ஆனால் அவனுக்குப் பெயர் பெரும் பிரச்சினை. கஷ்டங்களுக்கு மத்தியில் கச்சேரிக்குப் போய், பெயர் மாற்றிக் கொண்டு வந்துள்ளார்கள். அவனுடைய அண்ணன்காரன் இடாப்பிலே அதை மாற்றும்படி சொல்லியனுப்பியுள்ளான்.

எல்லாவற்றுக்கும் மேலாக, கணபதி என்ற இந்தப் பெயரை வைத்துக் கொண்டு மாணவர் மத்தியில் பெரும் அல்லோல கல்லோலம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. காலை வேளையில் இடாப்புக் கூப்பிடும் போது ரவீந்திரன் என்று மாற்றப்பட்ட பின்னும் கணபதி என்று கூப்பிட்டால், அதுபோதுமே சாதி பேதம் பார்க்கும் மாணவர்களின் குரோத உணர்வுக்குத் தீனி போட. சகல சமூகத்தையும் சேர்ந்த மாணவர்களைத் திரட்டி, பாடசாலையின் வரவைக் கூட்டி, பாடசாலையை முன்னிலைப்படுத்த வேண்டுமானால் இத்தகைய சின்னத்தனத்துக்கு இடமளிக்கக் கூடாது என்று எண்ணினாரோ,

அன்றி மனிதாபிமான முறையில், அந்த மாணவனையும் கணக்கிலெடுத்தாரோ...

இடாப்பில் ஒரே வரியிலிருந்த - வேளையிலே வெட்டப்பட்டிருந்த இராசன் என்ற பெயரோடு, இப்போதிருக்கிற கணபதி என்ற பெயரையும் வெட்டி, அதற்கு மேலே சிறிய எழுத்துக்களில் க.ரவீந்திரன் என்று எழுதினார்.

மறுநாளிலிருந்து இடாப்புக் கூப்பிடும்போது, அவன் ரவீந்திரன் என்றே கூப்பிடப்பட்டான். அந்த வேளை வகுப்பில் ஒரு மர்ம அமைதி நிலவினாலும், ஒவ்வொரு மாணவருடைய பார்வையிலும் ஆச்சரியம் தழும்பியது. ஒருவரையொருவர் மாறி மாறிப் பார்த்துக் கொண்டார்கள்.

விவே மட்டும் விசும்புத்தனமான புன்னகையோடு, ரவீந்திரனைப் பார்த்து வாணீரைக் கையால் துடைத்துக் கொள்வான். உன் பாடு வெற்றிதான் என்பதே அதன் அர்த்தமாய் அமைந்திருக்கும்.

நாட்கள் செல்லச் செல்ல ரவீந்திரன் என்ற பெயர் புழக்கத்தில் வரத் தொடங்கியது. ஆறாம் வகுப்பிலிருந்து நிலை கொண்டிருந்த இராசன் என்ற பெயராலும் அவன் சில சமயம் அழைக்கப்பட்டான். கணபதி என்று யாரும் கூப்பிடுவதில்லை. ஆனாலும், காந்தி என்ற மாணவனுடைய மனதின் ஒரு மூலையில் படிந்திருந்த அப்பெயர் அழிக்கப்படாமலே இருந்தது.

இந்த நிலைமைக்கு மத்தியிலும் ரவீந்திரன் மிகவும் உற்சாகத்துடன் தன் படிப்பைத் தொடர்ந்து கொண்டிருந்தான்.

எஸ்.எஸ்.ஸி. பிறெப் என்றழைக்கப்பட்ட ஒன்பதாம் வகுப்புக்குப் போன சில நாட்களில், அந்த வகுப்புக்கு ரவீந்திரனின் சமூகத்தைச் சேர்ந்த ஒரு மாணவன் வந்து சேர்ந்தான்.

பூவிலிங்கம் என்பது பெயர். பாடசாலையிலிருந்து கால் மைல் தூரத்தில் அதே றோட்டில்தான் அவன் வீடு. நாலாம் குறுக்குத் தெருவில் கடற்கரையோரமாக அமைந்துள்ள தொம்பையப்பர் கத்தோலிக்கப் பாடசாலையில் படித்துவிட்டு, இப்பாடசாலையின் முன்னேற்றத்தை யறிந்து வந்துள்ளான்.

இதுவரை தனிவாங்கு மேசையில் இருந்த ரவீந்திரனுக்கு ஒரு துணை கிடைத்தது. இருவரும் அருகருகே உட்கார்ந்திருந்தனர்.

பாடசாலையின் கிழக்குப் பக்கமாக சிறிது நிலப்பரப்பு இருந்தது. அதனால் பாடசாலை முகாமைத்துவம் தோட்டம் செய்தது. பாடசாலைக் கட்டடங்களை எல்லைப்படுத்தி மீந்திருந்த தரையில், வாழை, கத்திரி, வெண்டி, மிளகாய் என்று பயிர் வளர்ந்தது. கூலியாட்கள் தான் நிலத்தைக் கொத்திப் பயிர் வளர்ப்பார்கள். நீர்ப் பாய்ச்சும் வேலை மாணவர்களுக்கு, தோட்டப் பாடம் என்று இல்லை. விளையாட்டுப் பாட நேரத்தில், ஆசிரியர் திசை மாற்றி விடுவார். தோட்டத்தின் நடுவே கிணறு இருந்தது. பாடசாலைக் கிணறுதான் அது.

பாடசாலையில் ஆண்கள் பெண்களுக்கென இரு தண்ணீர்த் தொட்டிகள். காலையில் வேளையோடு வரும் மாணவர்கள் அத்தொட்டிகளை நிரப்பி விடுவார்கள். சின்னப் பிள்ளைகள் உட்பட, வளர்ந்த மாணவர்கள் தொட்டிகளிலிருந்து பைப் மூலம் தண்ணீர் குடிப்பார்கள். சில வளர்ந்த மாணவர்கள் பைப்புக்காகக் காத்திருக்காமல் கிணற்றில் அள்ளிக் குடிப்பார்கள்.

தண்ணீர் இறைக்க வந்தாலும், ரவிக்கு துலாக் கயிற்றைப் பிடித்துத் தண்ணீர் இறைக்க முடியாது. கிணற்று நீர் தீட்டாகிப் போய்விடும். அதனால் அவனுக்குத் துலா மிதிக்கும் வேலை மட்டும்தான். இன்னும் இரண்டு மாணவர்களுடன் அவன் துலா மிதிப்பான். தாகம் ஏற்பட்டால், தண்ணீர் அள்ளுபவன் முன்னிலையில், கையை ஏந்திக் கொண்டு நிற்க, அவன் ஊற்ற இவன் குடிக்க வேண்டியதுதான்.

இவனுடைய வகுப்பிலே கோவிந்த பிள்ளை என்றொரு மாணவன் இருந்தான். தற்செயலாக, அவனும் ரவியும் மட்டும் கிணற்றடிக்கு வந்தால், கோவிந்தபிள்ளை ரவியிடம், "துலாவைத் தாழ்த்தி நீ தண்ணி அள்ளு ரவி. ஒண்டும் தீட்டுப்படாது!" என்று சொல்லுவான்.

ரவி தண்ணீர் மொள்ளுவான். கோவிந்த பிள்ளை கோலிய கைகளுடன் முன் நிற்பான். ரவி ஊற்றுவான். பின் தானும் குடித்து விட்டு அப்பால் நகருவார்கள்.

பாடசாலையைச் சுற்றிப் பெரிய வேலிகள். அலம்பல் வேலிகள்தான். உக்கிப் பழுதடைந்து விட்டால் கூலித் தொழிலாளர்கள் வந்து வேலியடைத்துக் கொண்டிருப்பார்கள். கடைசிப் பாட நேரம் மாணவர்கள் அனுப்பப்பட்டு, உக்கிப் போய் பிடுங்கி எறிந்த கதியால்கள், வரிச்சு மட்டைகளைப் பொறுக்கி ஒதுக்குவார்கள். வேலியோரத்தைச் சுத்தப்படுத்துவார்கள்.

ஒன்பதாம் வகுப்பு மாணவர், அந்த வேலைக்குச் சென்றிருந்த வேளை, வழக்கம் போல அதை இதைச் சொல்லி, மோகனதாஸ் நக்கல் அடித்துக் கொண்டிருந்தான். குறி ரவிக்குத்தான்! அங்கு வேலியடைத்துக் கொண்டிருந்த கூலிகள் அனைவரும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள்.

"இன்னும் கொஞ்சக் காலத்திலே வேலியடைக்க ஆட்கள் கிடைக்காமல் போகும். அதுக்கு முதல் மதில் கட்டச் செய்ய வேணும்" என்று மோகனதாஸ் நாசூக்காகச் சொல்லிவிட்டு, யாராவது தன்னை உசுப்பி விடுவார்கள் என்று எதிர்பார்த்திருந்தான்.

"ஏன் அப்படி! ஏன் ஆக்கள் கிடைக்க மாட்டார்கள்?" யாரோ ஒருவன் கேட்டான்.

"அவங்கடை பிள்ளையள் எல்லாம் படிக்கத் தொடங்கி விட்டதுகள். பிறகு உத்தியோகம் பார்க்கத் தொடங்கினால் கூலி வேலை செய்ய ஆள் இருக்காதுதானே!"

இப்போது நேரடியாகவே கணை ரவீந்திரனை வந்தடைந்தது.

"அவரவர் வேலையை அவரர் செய்யிறதுதானே!" என்று தன் பாட்டிலே சொன்னான் ரவீந்திரன்.

"அப்ப, நளவர் பள்ளருக்கென்ன வேலை?" என்று மோகனதாசும் தன் பாட்டிலே கேட்டான்.

"பொத்தடா வாயை!" ரவீந்திரன் குரல் வெடித்தது. அவ்வளவுதான்!

மோகனதாஸ் கையிலிருந்த பட்ட கதியாலை ஓங்கி, ரவீந்திரனுக்கு அடித்து விட்டான்.

ரவீந்திரன் அக்கதியாலைப் பறித்து அவனைத் திருப்பி அடிக்க ஓங்கும்போது, "ஏய், ஏய், ஏய்! என்னடா செய்யிறியள் உங்கை?" என்று கடூரமான தொனியில் அதட்டியபடி தலைமை வாத்தியார் அவர்களை நெருங்கி வந்தார். மாணவர்கள் விறுவிறுத்துப் போய் நின்றார்கள். ரவீந்திரன் ஓங்கிய கதியாலைக் கீழே போட்டான். ரவீந்திரனுக்கு மோகனதாஸ் அடித்ததை அவர் தெளிவாகப் பார்த்து விட்டார்.

"டே, மோகனதாஸ்! என்ர மேசைக்குக் கிட்டப் போய் நில்!" என்று சத்தமிட்டுச் சொன்னார். "மற்றவை எல்லாரும் இதெல்லாம்

துப்புரவு செய்ய வேணும்!" என்று சொல்லிவிட்டுக் கூலியாட்களைக் கவனிக்க வேலிப்பக்கம் நகர்ந்தார்.

கடைசி மணி அடிப்பதற்குச் சில நிமிஷங்களுக்கு முன் தலைமையாசிரியர் வகுப்பறைக்கு வந்தார். ரவியைக் கூப்பிட்டார்.

"நான் எல்லாம் கவனிக்கிறன். பள்ளிக்கூடம் விட்டதும் நீ வீட்டுக்குப் போ!" என்று இதமாகச் சொல்லிவிட்டு, மற்றவர்களைப் பார்த்து, "மணியடித்ததும் எல்லோரும் என் மேசைக்கு முன்னாலே வந்த நில்லுங்கோ!" என்று சொல்லிவிட்டுப் போனார்.

## 15

'அடிபட்டது நான். அப்படி இருக்கும்போது, நான் இல்லாமல் என்ன விசாரணை?' என்று ரவீந்திரனின் மனம் உறுத்திக் கொண்டிருந்தது. பாடசாலை விட்டதும் மாணவரோடு மாணவராக, நூறு நூற்றைம்பது யார் தூரம் வந்ததும், அவன் திரும்பி நடந்து வெறிச்சோடிக் கிடந்த பாடசாலைக்குள் நுழைந்தான்.

தலைமை வாத்தியார் தன் கதிரையில் அமர்ந்திருந்தார். அவர் மேசைக்கு முன்னால் அவனது வகுப்பு மாணவர்கள். அடங்கியொடுங்கிப் போய் நிற்க, தலைமை வாத்தியார் அவர்களுக்கு ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார்.

ரவீந்திரன் மேசையண்டை வந்ததும், அதை அவதானித்த தலைமை வாத்தியார், அவன் பக்கம் தலையை நீட்டி "ஏன் வந்தனி?" என்று கேட்டார்.

ரவீந்திரன் தயக்கத்துடன், "நான் இல்லாமல் எப்படி விசாரிக்கிறதெண்டு வந்தனான்..." என்று இழுத்தான்.

தலைமை வாத்தியார் எழுந்து மேடையிலிருந்து இறங்கி வந்தார். ரவியின் முதுகிலே கையை வைத்து அழைத்துக் கொண்டு வெளி வாசல் வரை நடந்தார்.

"எனக்கு எல்லாம் தெரியும். நான் வேண்டிய நடவடிக்கை எடுப்பன். நீ ஒண்டுக்கும் யோசிக்காமல் போ!" என்று கூறி அவனை அனுப்பி விட்டுத் திரும்பி நடந்தார். ரவீந்திரன் தீராத ஏக்கத்துடன் வீட்டுக்குச் சென்றான். விவே இல்லாதது மனதில் ஒரு வெறுமையை ஏற்படுத்தியது. என்றாலும், அவன் விசாரணை நடைபெறும் இடத்தில் நிற்பது பெரும் தெம்பாக இருந்தது. எல்லா விஷயங்களையும் அவன் அறிந்து வருவான் என்ற நம்பிக்கையோடு அவன் வீட்டை நோக்கி நடந்தான்.

மறுநாள் வேளையோடு எழுந்து, தான் செய்ய வேண்டிய வீட்டுக் காரியங்களை யெல்லாம் முடித்துவிட்டு, ரவி பாடசாலைக்குக் கிளம்பினான். வேகமாக நடந்து, விவேயின் வீட்டுப் படலையைத் திறந்து கொண்டு உள் நுழைந்தான். இடிந்து சிதலமாகக் கிடந்த சுவரோரமாக நின்று, "விவே!" என்று கூப்பிட்டான்.

விவேயும், தலை இழுத்து புத்தகங்களை அடுக்கிக் கொண்டிருந்தவன், "யாரு ரவியா? எனக்குத் தெரியும், நீ இண்டைக்கு வெள்ளென வருவாய் எண்டு. நான் நினைச்சபடியே வந்திட்டாய். சரி, சரி! நானும் வெளிக்கிட்டிட்டன்!" என்று சொல்லி புத்தகக் கட்டைத் தூக்கித் தோளில் வைத்து, மைக்கூட்டை மறுகையால் பிடித்துக் கொண்டு புறப்பட்டான். படலையைத் திறந்து சார்த்திவிட்டு, "ராத்திரி நீ நித்திரை கொண்டிருக்க மாட்டாய்?" என்று ரவியைத் திரும்பிப் பார்த்துக் கேள்வி எழுப்பினான்.

"சரிடா, நடந்ததைச் சொல்லு!" என்று ரவி அவசரப்படுத்தினான்.

விவே, மைக்கூடிருந்த கையை உயர்த்தி, வாணீரைத் துடைத்துக் கொண்டு சொல்லத் தொடங்கினான்.

"தலைமை வாத்தியார் எங்களோடை கோபிக்காமல் கதைச்சவர். மோகனதாசைக் கொஞ்சம் உறுக்கிப் பேசினவர். அவன், உனக்கு அடிச்சதைத் தான் கண்டதாகச் சொல்லி, மோகனதாசைப் பார்த்து "நீ என்ன மோட்டு வேலை செய்தனி? அடிபட்டு அவனுக்கு ஏதாவது காயம் ஏற்பட்டால், உன்னை அவங்கள் பொலிஸிலை பிடிச்சுக் கொடுத்திருப்பான்கள். நானும் பொலிசுக்கு வரவேணும்... அந்த நேரம் நான் அந்த இடத்துக்கு வந்தது நல்லதாப் போச்சு. ரவி உனக்கு அடிச்சு ஏதாவது காயம் ஏற்பட்டால் என்ன நடக்கும்?" என்று அவனைப் பார்த்துக் கேள்வி கேட்டார்.

அவன் வாய் பேசாமல் கீழே குனிந்து கொண்டிருந்தான்.

"இது புதுப்பள்ளிக் கூடம். இதைப் பெரிய பள்ளிக்குடமாக்க வேணுமெண்டு இதைத் தொடங்கினவை ஆசைப்படுகினம். எல்லாச் சாதிப் பிள்ளையளும் இங்கை வந்து படிச்சால்தான் பள்ளிக்கூடம் பெரிசா வரும். அதுக்காகத்தான், அவை என்னைத் தலைமை வாத்தியாராய் வைச்சிருக்கினம். நானும் உங்கடை சண்டை சச்சரவுகளை யெல்லாம் சரிப் பண்ணி பள்ளிக்குடத்தை மேலுக்குக் கொண்டு வரவேணும்.

"உங்களுக்குப் படிப்புத்தான் முக்கியம். தேவையில்லாமல் அவன் பெரிசு இவன் சிறிசு எண்டு சொல்லிக் குளப்படி பண்ணினால் படிப்பிலை முன்னேற்றம் காண முடியாது!... இப்படித் தான்ரா அவர் சொன்னவர்" விவே நிறுத்தினான்.

"என்னைப் பற்றி என்னடா சொன்னவர்?" ரவி கேட்டான்.

"நீ சரியான கெட்டிக்காரனாம். கஷ்டப்பட்டுப் படிக்கிறியாம். வீட்டிலை கஷ்டம். தூரத்தில் இருந்து நடந்து வந்த போதும் இங்கை, உங்கடை கரைச்சல். இதுகளுக்கு மத்தியிலை படிக்கிற தெண்டால் எவ்வளவு கஷ்டம்? எண்டெல்லாம் சொன்னவர்."

இருவரும் பள்ளிக்கூடம் போய்ச் சேர்ந்தார்கள்.

வகுப்பு அமைதியாயிருந்தது.

அன்று மட்டுமல்ல, அதைத் தொடர்ந்து வகுப்பில் அமைதி நிலவியது.

இராசலிங்க வாத்தியார் சில வாரங்களுக்கு முன் நிகழ்த்திய மகாத்மா காந்தியடிகள் பற்றிய பிரசங்கமும், அதைத் தொடர்ந்து தலைமை ஆசிரியரின் பாடசாலை முன்னேற்றம், கல்வி வளர்ச்சி பற்றிய விளக்கங்களும் ஒரு மாற்றத்தை உண்டாக்கின.

மாணவர் அனைவரும் தங்கள் படிப்பில் அக்கறை செலுத்தி வந்தனர்.

பிறெப் எஸ்.எஸ்.ஸி. முடிந்து, அனைவரும் எஸ்.எஸ்.ஸி. வகுப்புக்குப் போனார்கள். ஒரு பிரச்சினையுமில்லாமல் அந்த ஆண்டு இறுதியில் அனைவரும் பரீட்சை எழுதி, எஸ்.எஸ்.ஸி.யில் சித்தி பெற்றார்கள். ரவியும் நல்ல முறையில் சித்தியடைந்தான்.

ரவியின் மனதில் மறக்க முடியாத ஒரு நிகழ்வாக அமைந்தது அப்பரீட்சை. பாடசாலைகளில் எஸ்.எஸ்.ஸி.யில் படிக்கும் மாணவர் தொகை குறைவு. ஆனாலும் அரசாங்கப் பரீட்சை. பல பாடசாலை மாணவர்களை ஒருங்கிணைத்து, ஏதாவது ஒரு பாடசாலையில் பரீட்சையை நடத்துவார்கள்.

பருத்தித் துறை ஒரு பட்டினம். ஆங்கில எஸ்.எஸ்.ஸி-. பரீட்சை அங்கு நடந்ததால் தமிழ் எஸ்.எஸ்.ஸிப் பரீட்சையை அப்பட்டினத்தில் நடத்தாமல் கரவெட்டியிலுள்ள திரு இருதயக் கல்லூரியில்

நடத்தியது. சிவப் பிரகாச வித்தியாசாலையிலிருந்து அக்கல்லூரி எப்படியும் நான்கு மைல் தூரத்திலுள்ளது. தலைமையாசிரியர் ஒரு மாட்டு வண்டியை ஒழுங்கு செய்து ஒரு மாணவியுட்பட, அனைவரையும் அவ்வண்டியிலனுப்பிப் பரீட்சை எழுத வைத்தார்.

பரீட்சை இரண்டு அல்லது மூன்று தினங்கள் நடைபெற்றிருக்க வேண்டும்.

பரீட்சை முடிவுற்று சில மாதங்களில் முடிவு வெளிவந்தது. ஆறு மாணவரும் சித்தி பெற்றனர்.

அப்பாடசாலையில் படிப்பித்த ஆசிரியர்களுள், பிரச்சினைகளைச் சமாதான வழிகளில் தீர்த்து வைப்பதில் வல்லவராய் விளங்கியதோடு, மரநிழலிலே ஆடிப் பாடிக் கூத்தாடி சகல விதமான உணர்வுகளையும் வெளிப்படுத்தி இலக்கிய பாடம் படிப்பித்து, மாணவர் நெஞ் சங்களிலே இலக்கியச் சுடரை ஏற்றி வைத்து தானும் ஓர் அணையாத தீபமாகப் பிரகாசித்த தலைமையாசிரியர் தம்பையா, மற்றொரு அமைதிப் பண்பாளரும் இலக்கிய பாட ஆசிரியருமான இராசலிங்கம், ஆங்கில ஆசிரியர் குருநாதன், மற்றும் நாகலிங்கம், நாகேந்திரம், சின்னத்துரை, வேலும் மயிலும் ஆகிய ஆசிரியர்களின் படிப்பித்தல் முறைகள் ரவியின் மனதை விட்டகலாதிருந்தன.

கலவன் பாடசாலைகளில், ஆசிரியைகள் அரிவரி, முதலாம் வகுப்பு, இரண்டாம், மூன்றாம் வகுப்புகளில் படிப்பிப்பதுதான் அன்றைய சம்பிரதாயம். அதனால் ஓர் ஆசிரியையின் தொடர்பும் அவனுக்கு ஏற்படவில்லை. அந்த நினைவுகளும் மனதில் இடம் பெறவில்லை.

ரவீந்திரனின் படிப்புக்கு ஆரம்பக் கல்வியையூட்டி அத்திவாரம் அமைத்தது கற்கோவளம் மெ.மி. பாடசாலை.

படிப்பினை விரிவுபடுத்தியது தும்பளைச் சிவப்பிரகாச வித்தியாசாலை. இந்தப் பாடசாலைகள் அவன் மனதை விட்டகலாதிருக்கும்.

## 16

வராத்துப்பளைக் கிராமத்தில் படித்துக் கொண்டிருந்த மாணவன் ரவீந்திரன் ஒருவன்தான் அல்ல, ரவீந்திரனுக்கு மூத்த இன்னொரு மாணவனும் படித்துக் கொண்டிருந்தான். பசுபதி என்று அவனுக்குப் பெயர்.

ரவீந்திரனைப் போல பசுபதிக்கும் ஆரம்பக்கல்வி பக்கத்திலுள்ள கற்கோவளம் மெதொடிஸ்த மிஸன் பாடசாலையில்தான். ஐந்தாம் வகுப்பு வரை அங்கு படித்துவிட்டு மேற்கொண்டு படிக்க, பருத்தித் துறைப் பட்டினத்துக் கண்மையிலுள்ள புலோலி மெதொடிஸ்த மிஸன் பாடசாலையில் படித்தான். தட்டா தெருப் பாடசாலை என்றுதான் அதற்கு வழமையான பெயர்.

பசுபதியின் தந்தையின் ஒன்றுவிட்ட சகோதரர் ஒருவர் யாழ்ப்பாணத்தில், பலாலி வீதியில் ஆரிய குளத்தை அண்டிய பகுதியில் வசித்து வந்தார். அதனால், பசுபதி தட்டாதெருப் பாடசாலையில் ஜே.எஸ்.ஸி. சித்தியெய்திய பின், யாழ்ப்பாணத்தில் படிக்க அழைத்துச் சென்றார்கள்.

எட்டாம் வகுப்பு வரை தமிழில் படித்த படியால், பட்டினத்தில் உள்ள ஆங்கிலக் கல்லூரிகளில் இடம் பெறுவது இயலாத காரியம். பருத்தித் துறை மாதிரி யாழ்ப்பாணத்திலும் சைவப் பெரியார்களால் நிர்வகிக்கப்படுகிற தமிழ் மொழி மூல இந்துப் போட் பாடசாலைகளிலும், தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு அனுமதி பெற முடியாது. அதனால், கோப்பாயிலுள்ள மெதொடிஸ்த மிஸன் பாடசாலை யொன்றில் பசுபதியைச் சேர்த்து விட்டார்கள்.

தும்பளைச் சிவப்பிரகாச வித்தியாசாலை புதிதாகத் தொடங்கப்பட்ட பாடசாலை என்ற படியாலும், அக்கம் பக்கங்களிலுள்ள கத்தோலிக்கப் பாட சாலைகள், மிஸன் பாடசாலைகளில் படிக்கும் சைவப் பிள்ளைகளை அரவணைத்து

முன்னேற்ற வேண்டுமென்ற காரணத்தாலுமே ஆரம்பிக்கப்பட்ட அப்பாடசாலையில் ரவீந்திரன் சேர்க்கப்பட்டான். அப்பாடசாலையில் சேர்க்கப்பட்ட முதலாவது தாழ்த்தப்பட்ட மாணவன் ரவீந்திரனே.

வராத்துப் பளையில், ஐந்தாம் வகுப்புக்கு மேல் ஒரு உத்தியோகத்தைக் குறியாய் வைத்துக் கல்வி கற்ற முதல் மாணவன் பசுபதி. இரண்டாவது மாணவன் ரவீந்திரன். இவர்களைத் தொடர்ந்து சின்னத்துரை என்ற மாணவன் ஹாட்லிக் கல்லூரியில் ஆங்கில மூலம் கல்வி கற்றான். அதே வேளை அதே வயதுள்ள சங்கரப்பிள்ளை என்ற மாணவன், கற்கோவளம் மெ.மி. பாடசாலையில் படித்து ஐந்தாம் வகுப்பில் திறமைச் சித்தி பெற்று, புலமைப் பரிசில் கிடைத்து யாழ்ப்பாணத்திலுள்ள ஸ்ரான்லி அரசாங்கப் பாடசாலையில் விடுதியில் இருந்து ஆங்கில மூலம் கல்வி கற்றான்.

பருத்தித் துறையிலே கள்ளிறக்கும் தொழிலாளர்கள் வாழும் கிராமங்கள் பல உண்டு. மேலே குறிப்பிட்ட நால்வரும் பிறந்த கிராமம் வராத்துப்பளை. வராத்துப்பளை யோடிணைந்த கிராமங்கள் உத்திராவத்தை, சந்தாதோட்டம், ஊரியவத்தை ஆகியவையாகும். ஒவ்வொரு கிராமத்துக் கிடையிலும் கொஞ்சக் கொஞ்சத் தூரம் இடைவெளி இருந்தாலும் சகலரும் உறவினர்களாகவே இருந்தார்கள்.

கலியாண வீடு, செத்த வீடு, மற்றும் கொண்டாட்டங்கள் என்றால் எல்லோரும் ஒன்று சேர்ந்து கொண்டாடுவார்கள். இந்த நான்கு கிராமங்களுக்குள்ளும் வாழ்ந்த மக்களுள், முதலில் எஸ்.எஸ்.ஸி. வரை பள்ளிப் படிப்பை மேற்கொண்ட கிராமம் வராத்துப்பளைதான்.

முதல் மாணவன் பசுபதி.

இரண்டாவது மாணவன் ரவீந்திரன்.

மூன்றாவது மாணவர்கள் ஒரே வயதினரான சின்னத் துரையும் சங்கரப் பிள்ளையும், சங்கரப் பிள்ளைக்கு பிறப்புச் சாட்சிப் பத்திரத்தில் சங்கரப் பிள்ளை என்றிருந்தாலும், ஊரில் அவனும் சின்னத்துரை என்றே அழைக்கப்பட்டான்.

பெண் பிள்ளைகளில் ஐந்தாம் வகுப்புக்கு மேல் உயர்கல்வி கற்றதும் வராத்துப்பளையைச் சேர்ந்த மாணவிதான். ரவீந்திரனுடைய தங்கை பாக்கியம்தான் அந்த மாணவி. பருத்தித் துறையிலுள்ள மெதொடிஸ்த பெண்கள் கல்லூரியில் தான் அவள் படித்தாள்.

பாக்கியத்தைத் தொடர்ந்து சந்தா தோட்டத்திலிருந்து பாக்கியம் என்று மற்றொரு மாணவி, நவமணி, நல்லம்மா ஆகியவர்களுடன் உத்திராவத்தையிலிருந்து சிவபாக்கியம் என்ற பிள்ளையும் பருத்தித் துறை மெதொடிஸ்த மிஸன் கல்லூரியில் படித்தார்கள். இக்கல்லூரியில் இச்சமூகத்தைச் சேர்ந்த முதல் மாணவி என்ற தகுதி ரவீந்திரனின் தங்கை பாக்கியத்தையே சேரும்.

ஹாட்லிக் கல்லூரியிலும் மெதொடிஸ்த பெண்கள் கல்லூரியிலும் இந்தச் சமூகத்தைச் சேர்ந்த சின்னத்துரை, பாக்கியம் ஆகிய மாணவர்கள் சேர்ந்து படித்தாலும், வதிரியைச் சேர்ந்த மாணவர்கள் இரண்டு கல்லூரிகளிலும் வேளையிலேயே படிக்கத் தொடங்கி விட்டார்கள். வதிரியைச் சேர்ந்த யோசேப் என்ற ஓர் ஆசிரியர் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவியது இதற்கு வாய்ப்பாக அமைந்தது. அவர் தன் வீட்டுக் கண்மையிலுள்ள ஒரு மெ.மி. பாடசாலையில் இணைந்து உயர்சாதி மாணவர்களுக்குப் படிப்பித்த வேளை. அவருடைய மகள் தேவமலர் மெதொடிஸ்த கல்லூரியிலும் மூன்று ஆண்மக்கள் ஹாட்லிக் கல்லூரியிலும் கற்ற நால்வரும் வேறு இடங்களில் பட்டப் படிப்பை முடித்து, பின் தாங்கள் கற்ற கல்லூரிகளிலேயே ஆசிரியர்களாகப் பணிபுரிந்தார்கள். யேசுதாஸ், கிறிஸ்துதாஸ், சத்தியதாஸ் எனப்பட்ட இவர்கள் விளையாட்டுத் துறையில் பெரும் சாதனை படைத்தார்கள்.

ரவியின் தங்கை பாக்கியமும், மற்ற மாணவியரும் அங்கு படித்த போது யோசேப் ஆசிரியர் மகள் தேவமலர் அங்கு படிப்பித்துக் கொண்டிருந்தார். சின்னத்துரை ஹாட்லியில் படித்த வேளை யோசேப் ஆசிரியருடைய ஆண்மக்கள் இருவர் அங்கு படிப்பித்துக் கொண்டிருந்தார்கள். கிறிஸ்தவ சமயத்துக்கே இப்பங்களிப்பு உரியதென்பது எவரும் மறுக்க முடியாத உண்மையாகும். மிகப்பெரும் மகிழ்ச்சிக்குரிய செய்தி என்னவென்றால் தேவமலர், இறுதிக்காலத்தில் தான் படிப்பித்த அதே கல்லூரியில் அதிபராகப் பணியாற்றி ஓய்வு பெற்றமையாகும்.

கல்யாண உறவு, சமபந்தி போசனம் என்ற வகையில் மேலே குறிப்பிட்ட நான்கு கிராமங்களில் ஒன்றான ஊரியவத்தைக் கிராமம், ஏழு எட்டு வீடுகள் மட்டுமே உள்ள ஒரு சிறிய கிராமம். கால் மைல் தூர இடைவெளியில் ஒன்றிரண்டு வீடுகளாக ஏழெட்டு வீடுகள் மட்டுமே உள்ள ஒரு சிறிய கிராமம். இந்த ஏழு எட்டு வீடுகளில் நான்கு வீட்டார் சைவக்காரர். மற்றவர்கள் கத்தோலிக்கர். இந்தக் கத்தோலிக்க மதத்தவர்களுக்கு இனசனம் வசிப்பது பருத்தித்துறை

நாலாம் குறுக்கு வீதியிலுள்ள கலட்டி என்ற கிராமத்தில். அங்கும் பத்துப்பதினைந்து வீடுகள்தான். அனைவரும் கத்தோலிக்க சமயத்தவர்கள். அந்தோனியார் தேவாலயம் என்றொரு பழமை வாய்ந்த கோயிலும் அங்குண்டு. பூசைக்கு, அங்குள்ளவர்கள் மட்டுமல்ல ஊரியவத்தையிலுள்ளவர்களும் அங்குதான் செல்வார்கள்.

வராத்துப்பளை, உத்திராவத்தை, சந்தா தோட்டம், ஊரியவத்தை என்ற இந்த நான்கு கிராமங்களோடு சமபந்தி போசனம் என்ற வகையில் கலட்டியும் சேர்ந்ததுதான் என்றாலும் சமயரீதியான வேறுபாட்டினால் கல்யாணத் தொடர்புகள் இடம் பெறுவதில்லை. ஒரு சைவக்காரன் ஒரு கத்தோலிக்கப் பெண்ணைக் காதலித்துக் கலியாணம் செய்வதில், ஒரே சாதியினர் என்பதால் பிரச்சினைகள் ஏற்படுவதில்லை. ஆனால் சைவ சமயத்தவர் கத்தோலிக்க சமயத்துக்கு மாற வேண்டும். கலட்டிப் பகுதியின் கல்வி வளர்ச்சியைப் பொறுத்தவரை, வராத்துப்பளையில் பசுபதி, இராசன் ஆகியோர் படித்த காலை, அங்கு அல்பிரட், அந்தோனிப்பிள்ளை ஆகிய இரு மாணவரும் ஹாட்லியில் படித்துக் கொண்டிருந்தனர். வராத்துப்பளையைச் சேர்ந்த சின்னத்துரையும், அந்தோணிப் பிள்ளையும் ஒரே வகுப்பு மாணவர்கள்.

தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வியோடு தொடர்பான மிக முக்கியமான சம்பவத்தை இங்கு இணைக்க வேண்டும்.

ஒரேயொரு குடும்பம். தன்னந்தனியனாக மற்றைய உயர் சாதியினர் வாழும் கிராமத்தில் வாழ்ந்து முன்னேறிய வரலாறு பெரும் சிறப்புக்குரியதாகும்.

பொன்னையா என்றொரு தனிக்குடும்பம். கள் இறக்கி விற்பதுதான் தொழில், ஊரியவத்தையிலுமில்லாது கலட்டியிலுமில்லாது இரண்டுக்குமிடைப்பட்ட புளியடி ஒழுங்கை என்ற இடத்தில் வாழ்ந்து, பிள்ளைகளைப் படிப்பித்து முன்னேறியிருக்கிறார்கள். சைவக் குடும்பம். மூத்த மகன் இராசையாவை, கலட்டியிலுள்ள றோ.க. பாடசாலையில் ஆரம்ப வகுப்புகள் படிக்க வைத்து, பின் அவர்களின் நெருங்கிய உறவினரான சண்முகம், யாழ்ப்பாணம் அழைத்துப் போய் அங்கு சம்பத்திரிசியார் கல்லூரியில் சேர்த்துப் படிக்க வைத்தார்.

பசுபதி யாழ்ப்பாணத்தில் சிறிய தந்தையாரான சின்னப்பு வீட்டிலிருந்து கோப்பாய் மெ.மி. தமிழ்ப் பாடசாலையில் படிக்கப்

போனபோது, இராசையா, சண்முகத்தாரோடிருந்து சம்பத்திரிசியாரில் படித்துக் கொண்டிருந்தார். இராசையா பசுபதிக்கு மூத்தவர்.

இதனால் பருத்தித் துறையிலுள்ள மேற்படி சமூகத்தவர் மத்தியில் முதலாவதாகப் படித்தவர் இராசையா எனச் சிறப்புப் பெறுகிறார். இராசையா, பூவிலிங்கம், தங்கையர் இருவர் மற்றும் குடும்பத்தின் முழு அங்கத்தவர்களும் படித்த குடும்பம் இது ஒன்றே!

இராசையாவின் மூத்த தங்கையாரான பாக்கியம். யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் படித்து பின்னர் சென்னை கிறிஸ்ரின் கல்லூரியில் படித்துப் பட்டதாரியாகி இச்சமூகத்தின் முதலாவது பெண் பட்டதாரியானதும் சிறப்புக்குரியது. இவர்தான் வராத்துப்பளையின் முதல் பட்டதாரியான சங்கரப்பிள்ளையைத் திருமணம் புரிந்தார். இச்சமூகத்தில் இரு பட்டதாரிகள் ஒன்றிணைந்து நடைபெற்ற முதலாவது திருமணம் இது என்பதும் வரலாற்றுப் பதிவாகும்.

இராசையாவை யாழ்ப்பாணம் அழைத்து சண்முகத்தார் படிக்க வைத்ததற்கு ஒரு பின்னணி இருந்தது. முதலாவது, பொன்னையாவுக்கு சண்முகம் ஒன்றுவிட்ட சகோதரன் முறை. இரண்டாவது சண்முகம் தனது உடன்பிறந்த தம்பியான மாணிக்கம் என்பவரைப் படிக்க வைத்து புகையிரதக் காவலராக உத்தியோகம் பார்க்க வைத்தமை.

ஒரு வேடிக்கையான சம்பவத்தை இங்கு சொல்ல வேண்டும். இந்த மாணிக்கம் என்பவர் சம்பத்திரிசியார் கல்லூரியில், ஆறாம் ஏழாம் வகுப்புப் படிக்கும்போது London என்ற இடப் பெயரை லொண்டன் என்று சொன்னதால், அவரை அவரது நண்பர்கள் லொண்டன், லொண்டு என அழைக்கத் தொடங்கி பிற்காலத்திலும் அந்தப் பழக்கம் தொடரலாயிற்று.

ஹாட்லிக் கல்லூரியில் படித்து எஸ்.எஸ்.ஸி.யில் சித்தியடைந்த கலட்டியைச் சேர்ந்த அல்பிரட், தபால் திணைக்களத்தில் இணைந்து உயர் பதவி வகித்தார். அந்தோனிப்பிள்ளை, ரயில்வேத் திணைக்களத்தில் இணைந்து இறுதிக் காலத்தில் புகையிரத நிலைய அதிபரானார்.

இவர்கள் காலத்தவரான மைக்கேல் பிள்ளை என்பவர். கலட்டியிலுள்ள தொம்மையப்பர் பாடசாலையில் ஆறாம் ஏழாம் வகுப்பு வரை படித்தவர். சிறந்த சமூக சேவையாளர். முதன் முறை நடைபெற்ற பருத்தித் துறை நகர சபைத் தேர்தலில்,

ஓர் உயர் சாதி வேட்பாளருடன் போட்டியிட்டு வெற்றி யீட்டி, தன்னுடைய மக்களுக்காக மட்டுமல்லாமல், சகல மக்களுக்காகவும் பணியாற்றினார். முதன் முதல் நடைபெற்ற உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் தாழ்த்தப்பட்ட சமூகத்தவர் ஒருவர் வெற்றியீட்டிய இந்நிகழ்வும் வரலாற்றுப் பதிவுக்குரியதாகும்.

ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் பருத்தித் துறையில் வாழ்ந்த நளவ சமூகத்தவர் மத்தியில் முதற்படித்து உத்தியோகம் பார்த்தவர் இராசையா. இவர் மெக்கானிக்கல் என்சினியராகப் படித்து ரயில்வேத் திணைக்களத்தில் உயர் பதவி வகித்தார். யாழ்ப்பாணத்தில் ஆரிய குளத்தடி, கலாலி வீதியில் படித்து உத்தியோகம் பார்த்தவர் மாணிக்கம். அக்காலத்தில் பலாலி றோட்டாருடன் சம்பந்த உறவுகள் வைத்திருந்த வேறு ஊர்களைச் சேர்ந்தவர்களின் குடும்பத்தவர் சிலர், படித்து கொழும்பிலுள்ள தனியார் நிறுவனங்களில் பணிபுரிந்தாலும், வராத்துப்பளை, உத்திராவத்தை, சந்தாதோட்டம், ஊரியவத்தை, கலட்டி, யாழ் - பலாலிறோட், மானிப்பாயிலுள்ள தன்னை என்ற மேற்படி இரத்த உருத்துக்குரிய மக்களில் முதலாவதாகப் படித்து அரச உத்தியோகம் பார்த்தது மாணிக்கம்தான் என்பது சிறப்புக்குரியது.

தனியார் நிறுவனத்தில் முதன்முறையாக பணிபுரிந்த பெருமை யாழ் பலாலிறோட்டைச் சேர்ந்த பொன்னையா என்பவருக்கே உரியது. அவரும் சம்பத்திரிசியாரில் படித்து விட்டுக் கொழும்பிலுள்ள 'எலிபன்ற் ஹவுஸ்' என்ற சோடாப்பான உற்பத்தி நிறுவனத்தில், நிர்வாகத் துறையில் பணிபுரிந்தார். இவருடைய இளமைக் கால இருப்பிடம், யாழ் இரண்டாம் குறுக்குத் தெருவாகும்.

பின்னர் பலாலி றோட்டில் உறவினரோடு வாழ்ந்து வந்தார். றோ.க. சமயத்தவர். எலிபன்ற் ஹவுஸில் பணியாற்றியபோது, மொறட்டுவையை அண்மித்த அங்குலானை என்னுமிடத்தில் வசித்து வந்தார். நீண்டகாலம் அங்கு வசித்தமையால், அவரைப் பலரும் 'அங்குலானைப் பொன்னையர்' என்று அழைக்கத் தொடங்கினார். அந்நாட்களில் பருத்தித் துறை, யாழ்ப்பாணம், மானிப்பாய்ப் பகுதிகளிலிருந்து யாராவது கொழும்புக்கு ஏதாவது அலுவல்களினிமித்தம் போனால் அங்குலானைக்குப் போய் அவர் வீட்டிலேயே இரண்டு மூன்று நாட்கள் தங்கி வருவார்கள். அவருடைய துணைவியார் மனங்கோணாமல் அவர்களுக்கு உணவு பரிமாறி உபசரித்து அனுப்புவார். ரவியும் தனது இளமைக் காலத்தில் கொழும்புக்குப் போனால் அங்கு போய்த் தான் தங்கி விட்டு வருவான்.

ரவியினுடைய தந்தையாரான கந்தப்பர் பாவிலு என்னும் ஒருவருடன் இணைந்துதான் அனுராதபுரத்தில் கள்ளுத் தவறணை நடத்தினார். அந்தப் பாவிலுவின் மகன்தான் இந்தப் பொன்னையா ஆவார். அந்தத் தொடர்பின் அடிப்படையில் தான், ரவி கொழும்புக்குப் போனால் அங்குலானையில் தங்கி விட்டு வருவான். இதன் காரணமாக, பொன்னையரின் மகன் இராஜசிங்கத்துடனும் அவனுக்கு தொடர்பு ஏற்பட்டது. அங்குலானைப் பொன்னையரின் உண்மைப் பெயர் பாவிலு பொன்னையா என்பதாகும்.

இராஜசிங்கம் மொறட்டுவையிலுள்ள சென் தோமஸ் கல்லூரியில் படித்து அரச சேவையில் சேர்ந்து பொலிஸ் திணைக் களத்தில் எழுது வினைஞராகப் பணியாற்றி, இறுதிக் காலத்தில் கொழும்பிலுள்ள பிரதம பொலிஸ் அலுவலகத்தில் பிரதம லிகிதராகப் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நளவ சமூகத்தவர்கள் வசிக்கும் நாலைந்து கிராமங்கள் பற்றியும் அங்கு படித்து உத்தியோகம் பார்த்தவர்கள் பற்றியும் பார்த்தோம். இதே சமூகத்தவர் வசிக்கும் இன்னொரு கிராமத்தைப் பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டிய தேவை உள்ளது. பருத்தித் துறைக் ஹாட்லிக் கல்லூரிக்கு முன்பாகவுள்ள வீதியில் தென் திசையில் கோணந்தீவு என்றொரு சிறு கிராமம் உள்ளது. பத்துப் பதினைந்து குடிமனைகள்தான். கள் இறக்கி விற்பதுதான் தொழில். அந்நாட்களில் அங்கும் மூவர் படித்து ஆசிரியர்களாகி முதலில் யாழ்ப்பாணத்துக்கு வெளியே படிப்பித்து விட்டுப் பின்னர், பிறந்த மண்ணுக்கு வந்து அக்கம் பக்கங்களிலுள்ள பாடசாலைகளில் படிப்பித்தார்கள். கார்த்திகேசு என்பது ஒருவரின் பெயர், மற்றவர் செல்லையா, அடுத்தவர் தம்பிமுத்து.

செல்லையா இறுதிக் காலத்தில், எம்.சி.சுப்பிரமணியத்தால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் ஒன்றான புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலையில் படிப்பித்து ஓய்வு பெற்றார். அவருடைய மகன் ஒருவர், வராத்துப்பளையைச் சேர்ந்த பெண்ணொருத்தியைத் திருமணம் செய்தார். இத்திருமணத்தின் மூலம் இச்சமூகத்தவர் மத்தியிலான திருமணபந்தம் மேலும் விசாலமடைந்ததை நாம் அவதானிக்கலாம்.

## 17

ரவீந்திரனும் அவனது உடன் வகுப்பு மாணவரும் சேட் அணியாமலே பாடசாலை வாழ்க்கையை முடித்தனர். அதன் பின்னர், எஸ்.எஸ்.ஸி.க்கு வந்த ஜெபமாலை என்ற மாணவன் சேட் அணிந்து வர அதைத் தொடர்ந்து மேல் வகுப்பு மாணவர் அனைவரும், காலப் போக்கில் அடுத்தடுத்த வகுப்பினரும், பின்னர் நாகரிகம் வளரத் தொடங்க, கீழ் வகுப்பிலிருந்தே சகல மாணவரும் சேட் அணியத் தொடங்கினர். அனைவரும் வெள்ளைச் சேட்டுத்தான்.

இந்த வகையில் இன்று பிரபலமாகியுள்ள ஒரு சைவப் பாடசாலையில் மேலங்கி அணியும் நாகரிகத்தை கத்தோலிக்க மாணவரே தொடக்கி வைத்தனர் என்ற உண்மை மறுக்க முடியாததாகும்.

ரவி அங்கு படித்த காலையில் கோவிந்த பிள்ளையின் வீட்டுக்கு ஒருநாள் போயிருக்கிறான். கோவிந்த பிள்ளையின் தந்தை ஒரு பரிகாரி. கிட்டிணபிள்ளை என்பது பெயர். அதனால் அந்த வீட்டுப் படலை எந்நேரமும் கலகலப்பாக இருக்கும். நோயாளிகள், மருந்து வாங்க வருவோர் என்று சனக்கூட்டம். அந்தக் கூட்டத்துக்கு மத்தியில் வீட்டுப் படலையில் நின்றபடியே கோவிந்த பிள்ளையோடு கதைத்துவிட்டுத் திரும்பியிருக்கிறான். அவனுடைய அண்ணன் குமாரசாமி வளரிளம் பருவத்து இளைஞன். சிரித்த முகம். சமூக முன்னேற்ற அலுவல்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான். அண்ணனுடைய அந்த உணர்வுதான், பள்ளிக்கூடத்தில், ரவியைத் துலாவைத் தாழ்த்தித் தண்ணீர் அள்ளச் செய்ததுடன், ரவி ஊற்ற கோவிந்தியைக் கையேந்திக் குடிக்கவும் வைத்தது.

கோவிந்த பிள்ளை வீட்டுக்குப் பக்கத்து வீடுதான் இலட்சுமிப் பிள்ளையின் வீடு. பொதுவான சாதி வேற்றுமை இருந்தாலும் வகுப்பில் ஒரே பெண் பிள்ளை என்ற காரணத்தாலோ என்னவோ அவள் ரவீந்திரனோடு குரூரத்தனமாகப் பழகவில்லை. பெண் பிள்ளை என்றதால் ரவியும் அவளை வீட்டில் ஒருபோதும் சந்திக்கச்

செல்லவில்லை. அவளுடைய அக்காளைத்தான் சின்னத்துரை வாத்தியார் திருமணம் செய்திருந்தார். கோவிந்தியின் வீட்டுப் படலையில் நின்றபடியே இலட்சுமிப் பிள்ளையின் வீட்டைப் பார்த்துவிட்டு ரவி தன் விடு திரும்பினான்.

மற்றொரு கெட்டிக்கார மாணவனான வல்லிபுரம் வீட்டுக்கும் ஒருநாள் போனான். வல்லிபுரம் பெரிய அளவில் சோலிசுரட்டு இல்லாதவனாயிருந்தாலும் பெரும் நட்பு என்று சொல்வதற்கு எதுவும் இல்லை. ஆளைக் கூப்பிட்டுப் படலையில் சிறிது நேரம் உரையாடி விட்டு வந்தான். கூரை போட்ட படலை, படலைக்கு வெளியே ஒரு பாதுகாப்பு ஏற்பாடு. படலைக்குள் நுழைவதற்கு முன் ஒரு தடையினைத் தாண்டித்தான் படலைக்குள் நுழைய முடியும். சக (+) வடிவில் மூன்றடி உயரத்துக்கு மரத்தினால் செய்யப்பட்ட ஒரு சுழலும் சாதனத்தைப் பொருத்தியிருந்தார்கள். அதன் சுழற்சியோடு ஒருவர் மட்டும் நடந்து படலையைத் திறக்க வேண்டும். ஆம்! ஒரு தடவை ஒருவர் மட்டும் தான் உள்ளே செல்ல முடியும். சங்கடப்படலை என்று அதற்குப் பெயர். ரவி முதல் தடவையாக அந்தப் படலையைக் கண்டு, திறந்து, உள் நுழைந்து மகிழ்ச்சியடைந்தான்.

இந்தச் சங்கடப்படலையைப் பின்னாளில் ஆஸ்பத்திரிகளிலும் பெரிய கம்பனி வாசல்களிலும் காண முடிந்தது.

பாடசாலைக் காலம் முழுவதும் நடந்து செல்வதற்கு வழித்துணையாகவும், பாடசாலையில் ஏற்படும் பிரச்சினைகளுக்குப் பட்டும் படாமலும் இணைந்து நின்றவனுமாகிய விவேயின் வீட்டுக்கு, ரவி இரண்டு தடவை போயிருக்கிறான். வழமை போலப் படலையில் தான் பேசிக் கொண்டார்கள். அப்புறம் ரவி, விவேயைச் சந்திக்க சந்தர்ப்பம் ஏற்படவில்லை.

பாடசாலைத் தொடர்பு ஒரு முடிவுக்கு வந்தாலும், பாடசாலை அமைந்திருந்த கலட்டி என்ற ஊர் உறவு மேலும் சில காலம் நீடித்தது.

கந்தையாப் பரியாரி என்றொரு பிரபலஸ்தர்தான், அந்தப் பாடசாலையின் மூலபிதா. வைத்தியத்தோடு சமூக சேவையிலும் ஈடுபட்டு வந்தார். பாடசாலையில் அந்நாட்களில் வெள்ளிக்கிழமை தோறும், மாணவர்கள் அனைவரும் வரிசைகளில் நிற்க, திருவாசகம் பாடி, சரஸ்வதி தேவிக்குப் பூஜை வைத்த பின்னரே, வகுப்புகள் நடைபெறும். காலையில் அங்கு வருகை தந்து, அந்த நிகழ்ச்சியை

நடாத்தி வைப்பவர் கந்தையாப் பரியாரிதான். அவருடைய மகளைத் திருமணம் புரிந்தவரும் ஒரு பரியாரி. செல்வராசாப் பரியாரி என்பது அவர் பெயர்.

கந்தையர், பரியாரியானாலும் சற்றுக் கர்வமான குணம் படைத்தவர். கடும் போக்காளர், செல்வராசா நேர் எதிரானவர். இளைஞர், சாந்த குணம், ரவியின் வீட்டில் யாருக்காவது நோய் நொடி ஏற்பட்டால், ரவி ஓடிப் போய், செல்வராசாப் பரியாரியிடம் சொல்லிவிட்டு வருவான். அவர் சைக்கிளில் வந்து வைத்தியம் செய்வார். சிறுபெட்டியொன்றைச் சைக்கிள் கரியரில் கட்டி வைத்திருப்பார். அதற்குள் மருந்துகள்.

சைக்கிளில் மூன்று நான்கு மைல் தூரத்துக்குச் சென்று நோயாளிகளைப் பரிசோதித்து மருந்து கொடுத்து வருவார். உடலை ஒரு சால்வையால் போர்த்திக் கொண்டு திரிவார். அந்த உறவு சில வருடங்கள்தான் நிலைத்தது. பின் அதுவும் விடுபட்டுப் போயிற்று.

சிவப்பிரகாச வித்தியாசாலைக்குக் கிழக்குப் பக்கமாக, அதே வீதியில் ஒரு கூப்பிடு தூரத்தில் இருக்கிறது லூர்து மாதா கோவில். பெரு நாட்களில் கத்தோலிக்கப் பக்தர்கள் மட்டுமல்லாது, சைவ மக்களும் திரண்டு வந்து வணங்கிச் செல்லும் மாதா கோவில் அது. அந்தக் கோயிலை அண்டி ஒரு கத்தோலிக்கப் பாடசாலை இருந்தது. ஐந்தாம் வகுப்பு வரைதான் வகுப்புகள்.

சிவப்பிரகாச வித்தியாசாலைக்கு மேற்குப் பக்கமாக, இந்தக் கத்தோலிக்கப் பாடசாலை இருந்த அளவு தூரத்தில் மெதொடிஸ்த மிஸன் பாடசாலை யொன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. சூரியற்றை பள்ளிக்கூடம் என்பது, கிராமிய வழக்கில் அதற்குப் பெயர். சூரியருடைய பாடசாலை என்பதுதான் அதன் உண்மை அர்த்தம். மிஸனரியைச் சேர்ந்த சூரியர் எனப்படும் கல்விமான் ஒருவர் அதனை உருவாக்கியிருக்க வேண்டும். பேச்சு வழக்கில் சூரியற்றை பள்ளிக்கூடம் எனப் பரவலாக நிலைபெற்று விட்டது. எஸ்.எஸ்.ஸி. வரை வகுப்புக்கள் இருந்தன.

சிவப்பிரகாச வித்தியாசாலை தொடங்கப் பெற்ற சில ஆண்டுகளில் அவ்விரு பள்ளிக் கூடங்களும் மூடப்பட வேண்டிய நிலைக்குள்ளாகின. கலட்டியைச் சேர்ந்த சகல மாணவர்களும் சிவப்பிரகாச வித்தியாசாலையிலேயே சேர்ந்து படித்தார்கள். மெதொடிஸ்த மிஸன் பாடசாலையான சூரியற்றை பள்ளிக் கூடத்தில் படித்த ஒன்றிரண்டு மெதொடிஸ்த மாணவர்கள் பட்டினத்திலுள்ள

மிஸன் கல்லூரிக்குச் செல்ல, சைவ மாணவர்கள் சிவப்பிரகாச வித்தியாசாலையில் சேர்ந்தது, அப்பள்ளிக்கூடம் மூடப்படுவதற்கு ஒரு முக்கிய காரணமாய் அமைந்தது. அதே போல் கத்தோலிக்கப் பாடசாலையில் படித்த மாணவர்களும் புதுப்பள்ளிக் கூடத்தின் படிப்பித்தல் வேகத்தினால், சிவப்பிரகாச வித்தியாசாலையில் இணைந்து படித்தார்கள்.

இம்மானுவல், றெமிசியார் ஆகிய கத்தோலிக்க மாணவர்கள் ரவீந்திரனுக்கு மேல் வகுப்பிலும், ஜெபமாலை என்ற மாணவன் ரவீந்திரனுக்குக் கீழ் வகுப்பிலும் படித்தார்கள்.

இக் கத்தோலிக்க மாணவர்களின் வருகை, சிவப்பிரகாச வித்தியாசாலைக்கு ஒரு புதிய பரிமாணத்தைத் தந்தது.

மேற்கு நாடுகளிலிருந்து வந்த சமயத்தின் அடிப்படையான கோயில் தொடர்பு, பூஜை வழிபாடு, இவற்றுடன் கத்தோலிக்கக் குருமார்களின் அரவணைப்புப் போன்றவை. ஆடை அணிகளில் ஒரு நாகரிகத்தைக் கொண்டு வர, நமது கத்தோலிக்கர்களும் வேட்டிக்கு மேலே சட்டை அணியத் தொடங்கினர். இந்த வகையில் இம்மானுவலும், றெமிசியாரும், ஜெபமாலையும் சேட் அணிந்து பாடசாலைக்கு வருவார்கள். இதைப் பார்த்து தணிகாசலம், சுந்தரம் என்ற மேல் வகுப்பு மாணவரும் சேட் அணியத் தொடங்கினார்கள். ஆனாலும் அது ஒரு பாடசாலைக் கட்டுப்பாடாய் அமையாத காரணத்தினால் எஸ்.எஸ்.ஸி. வகுப்புக்கு வந்தாலும் அதை நடைமுறைக்குக் கொண்டு வந்தார்கள் என்று சொல்வதற்கில்லை. எஸ்.எஸ்.ஸிக்குக் கீழே இரத்தினசிங்கம் என்றொரு மாணவன் படித்தான். அழகானவன், கம்பீரமான தோற்றமும் சிவந்த மேனியும், அவனும் சேட் அணிந்து வகுப்பைக் கலக்கினான்.

## 18

எஸ்.எஸ்.ஸி. சோதனை பாஸ் பண்ணியாகிவிட்டது. தமிழ் எஸ்.எஸ்.ஸி. தான். பக்கத்திலுள்ள கற்கோவளம் மெதொடிஸ்த மிஸன் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு வரை படித்து முடிந்ததும், மேற்கொண்டு படிப்பைத் தொடர்வதற்கு அதாவது ஆங்கில மூலம் படிப்பதென்றால் ஹாட்லிக் கல்லூரிக்குச் செல்ல வேண்டும். அது மெதொடிஸ்த மிஸனரிமார் நடத்தும் கல்லூரி. பட்டினத்தில் மற்றொரு ஆங்கிலப் பாடசாலை இருக்கிறது. வேலாயுதம் பாடசாலை என்று அழைக்கப்படும், புலோலி ஆங்கில பாடசாலை அது. சைவப் பெரு மக்களின் பாடசாலை. தாழ்த்தப்பட்ட மாணவர் அதனை அணுக முடியாது. ஹாட்லியில் சேர்ந்து படிக்கலாம். அந்த நாட்களில், கல்வி நிறுவனங்களில் பெரும்பான்மையானவை தனியார் பாடசாலைகளே. மாதா மாதம் கட்டணம் செலுத்தித்தான் படிக்க வேண்டும்.

பணம் செலுத்தத் தேவையில்லாத சிவப்பிரகாச வித்தியாசாலையில் தமிழ் மூலம் கல்வி கற்பதற்கே எதிர்ப்புத் தெரிவித்த ரவியின் தந்தை கந்தப்பர், ஹாட்லியில் காசு கட்டிப் படிக்கச் சம்மதம் கொடுத்திருப்பாரா? அதுவும் ஒருவருடம் இரண்டு வருடம் என்றில்லை. எஸ்.எஸ்.ஸி. பாஸ் பண்ணும் வரையென்றால், எப்படியும் எந்த வகுப்பிலும் தேறாத நிலையின்றிப் படித்து முடிக்க ஐந்து வருடம் வேண்டும். இனி என்ன செய்வது?

தமிழில் எஸ்.எஸ்.ஸி. சித்தியடைந்தவர்கள் எந்த அரசாங்க உத்தியோகத்துக்கும் போக முடியாது. ஆங்கிலம் இல்லாமல் தனியார் கம்பெனிகளிலும் வேலை செய்ய முடியாது. அரச நிறுவனங்களில் சரி, தனியார் நிறுவனங்களில் சரி சிற்றூழியராக - பியோனாக - வேலை செய்யலாம். ஆனால், தாழ்த்தப்பட்டவர்களுக்கு யார் அந்த வேலையைக் கொடுப்பார்கள்? அங்கெல்லாம் வேலை செய்கிற உயர்சாதி மக்கள், தங்கள் சாதியிலேயே தமிழ் மூலம் படித்தவர்களை அவ்வேலைகளுக்குப் போட்டு விடுவார்களே!

ஆசிரியர் வேலை ஒன்றுக்குத்தான் அவர்கள் தங்களைத் தயார்ப்படுத்தலாம். ஆசிரியர் தராதரப் பத்திரம் என்று, ஒரு நிலை ஆசிரியராய் வருவதற்கு பரீட்சை எழுதிச் சித்தி பெற வேண்டும். அதற்கான பாடங்களைக் கற்றுத்தான் விண்ணப்பிக்க வேண்டும். அதற்கு மேல் நிலையிலுள்ள பயிற்றப்பட்ட ஆசிரியர் என்ற தகுதியைப் பெற, தெரிவுப் பரீட்சையில் சித்தியடைந்து இரண்டு வருடங்கள் பயிற்சி பெற வேண்டும். அதிலும் சாதிப் பிரச்சினைகள், திருநெல்வேலியில் சைவ ஆசிரிய பயிற்சிக் கலாசாலை என ஒன்றிருக்கிறது. அதில் சைவர்கள் - விசேடமாக வேளாளர்களே சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். கோப்பாயில் அரசினர் பயிற்சிக் கலாசாலை இருக்கிறது. அதில் போட்டி அதிகம். தெரிநிலைப் புள்ளிகள் அதிகம் பெற வேண்டிய நிலை. நல்லூரில் ஐக்கிய கிறிஸ்தவ ஆசிரிய கலாசாலை ஒன்றை நிறுவியிருந்தார்கள். அங்கு கிறிஸ்தவர்கள் மட்டும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். கொழும்புத் துறையில் கத்தோலிக்க சமயத்தவர்களுக்கான பயிற்சிக் கலாசாலை நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்த இரு பயிற்சிக் கலாசாலைகளிலும் அந்தந்தச் சமய மாணவர்களே படிக்கச் சந்தர்ப்பமளிக்கப்பட்டது. சாதி உணர்வு அடிமனதில் ஊறிப் போயிருந்தாலும், அந்நிய தேசத்தவர் தமது மதத்தைப் பரப்புவதற்குக் கல்வியை ஓர் ஊடகமாகப் பயன்படுத்தி, அதனால் பயனடைந்த உயர்சாதியினர் அதை வெளிக்காட்டிக் கொள்ளாததனால் அந்தந்தச் சமயத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும் திறமை அடிப்படையில் ஆசிரியர் பயிற்சி பெறச் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

கோப்பாயில் படித்து எஸ்.எஸ்.ஸி. சித்தியடைந்த பசுபதிக்கு இந்தப் பிரச்சினை முன்பே தலைதூக்கி விட்டது. ஒரு உத்தியோகத்துக்கும் போக முடியாது. மேற்கொண்டு தமிழிலும் படிக்க முடியாது. அதனால் பசுபதி யாழ்ப்பாணத்தை விட்டுச் சொந்த ஊருக்கே வந்து விட்டார்.

நெல்லியடியில் ஓர் அரசாங்கப் பாடசாலை இருந்தது. நெல்லியடி மத்திய கல்லூரி என்று அதற்குப் பெயர். அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தில் நடைபெறும் கல்லூரி.

வடமராட்சிப் பிரதேசத்தில் இது ஒன்றுதான் அரசாங்கப் பாடசாலை. அங்கு தமிழ் எஸ்.எஸ்.ஸி. சித்தியடைந்த அல்லது அந்த வகுப்பு வரை படித்த மாணவர்களைச் சேர்த்து, விசேட ஆங்கில வகுப்பு நடத்தப்பட்டது. வழமை போல் முதலாம் வகுப்பிலிருந்து, எஸ்.எஸ்.ஸி. வரை வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும்,

தமிழ்ப் பாட சாலைகளில் படித்த மாணவர்களுக்காக, இந்த விசேட வகுப்பு நடத்தப்பட்டது. பசுபதி அங்கு போய் ஒரு வருடம் படித்தார். தொடர்ந்து படிக்க மனம் சலித்து சிறிது காலம் வீட்டில் சும்மா இருந்தார்.

தமிழ் இலக்கண இலக்கியங்களில் பசுபதிக்கு ஆர்வம் அதிகம். அதனால், புகழோச்சிய தமிழறிஞரான புலோலியூர் கந்த முருகேசன் அவர்களிடம் தமிழ் இலக்கண இலக்கியங்கள் கற்கத் தொடங்கினார்.

வராத்துப்பளைக் கிராமத்துக்குத் தெற்கே பல்லப்பை வயிரவர் கோயிலுக்கும் அப்பால் இருக்கிறது கந்த முருகேசனார் இல்லம். இல்லத்துக்கு 'தமிழகம்' என்று பெயர். அங்கே தமிழ் வாழ்ந்து கொண்டிருந்தது. பண்டிதர், வித்துவான் பரீட்சைகளுக்குப் படிப்பவர்கள். பி.ஏ., எம்.ஏ. பட்டங்களுக்கு தமிழையும் ஒரு பாடமாகப் படிப்பவர்கள் எனப் பலர் அங்கு வந்து கற்றார்கள். பசுபதியும் பாலபண்டிதர் பரீட்சைக்குத் தோற்றும் நோக்கத்துடன் கந்த முருகேசனாரிடம் படித்துக் கொண்டிருந்தார்.

ரவிக்குத் தமிழில் ஆர்வம் அதிகமென்றாலும் பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களைப் படிக்கும் அளவுக்கு ஆர்வமில்லை. அதுமட்டுமல்ல, அவன் குடும்பத்து வறுமை நிலையில், ஏதாவது ஒரு தொழில் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்ற நிலை இருந்தது. அதன் காரணமாக, அவன் நெல்லியடி மத்திய கல்லூரியில் சேர்ந்து ஆங்கிலம் படித்தான்.

இது காலவரை வெறும் மேலுடன் பாடசாலைக்குப் போய் வந்தவன் சேட் அணியத் தொடங்கி விட்டான். வேட்டியும் வெள்ளைச் சேட்டும், அதுதான் பாடசாலைச் சீருடை.

வராத்துப்பளையிலிருந்து நெல்லியடி மத்திய கல்லூரி எப்படியும் நான்கு மைல் தூரத்தைக் கொண்டது. வீட்டிலிருந்து புறப்பட்டு பனஞ்சோலைக் காணிகள், அயற் கிராமங்கள், குறுக்கு வீதி என்று ஒரு மைல் தூரத்துக்கு நடந்து சென்றுதான், நெல்லியடிக்குச் செல்லும் பஸ்ஸைப் பிடிக்க வேண்டும். புலோலிக் கிராமக் கோட்டுச் சந்திதான் அந்தப் பஸ் பிடிக்கும் இடம். வியர்த்துக் களைத்து, அந்தத் தூரத்தை நடந்து வந்து, சந்தியிலுள்ள சிறிய தேநீர்க் கடையொன்றில் தலையை நீட்டி "பஸ் வந்திட்டுதோ?" என்று கேட்பான் ரவி. பஸ் வரவில்லையென்றால் அவ்விடத்தில் இரண்டொரு பயணிகள் நின்று கொண்டிருப்பார்கள். பயணிகள் இல்லையென்றால், கடைக்காரனைக் கேட்டுத்தான் நிலைமையை

அறிய வேண்டும். வரவில்லையென்றால் பஸ்ஸுக்காகக் காத்து நிற்பான் ரவி. "பஸ் போட்டுது!" என்று கடைக்காரர் சொன்னால்... அவ்வளவுதான்! ரவி, விசுக் விசுக் என்று நடக்கத் தொடங்கி விடுவான். பொடிநடை.

அந்த எட்டரை மணி பஸ்ஸைத் தவற விட்டால், அடுத்த பஸ் ஒன்பதுக்கும் வரலாம். அதற்குப் பிந்தியும் வரலாம். அதனால் விறு விறு நடை. மந்திகைச் சந்தி, அங்கிருந்து தெரு மூடி மடத்துக் கூடாக மாலிசந்தி, அங்கிருந்து மேற்குத் திசையில் நடந்து வதிரிச் சந்தி. அச்சந்தியிலிருந்து தெற்கு நோக்கி ஒரு கூப்பிடு தூரம் நடந்தால் கல்லூரி. கல்லூரியை அடைந்து, வகுப்பில் நுழைய, முதலாம் பாடம் முடியும் தறுவாயிலிருக்கும். சேட் நனைந்து போயிருக்கும். முகத்தில் வழிந்தொழுகும் வியர்வையைத் துடைத்துக் கொண்டு தன் ஆசனத்தில் அமர்வான்.

பஸ்ஸில் வந்தாலும் வீட்டிலிருந்து ஒரு மைல் தூரம் நடை பின் நெல்லியடிச் சந்தியிலிறங்கி கூப்பிடு தூரம் நடந்துதான் கல்லூரியை அடைய வேண்டும். என்றாலும் களை தெரியாது. சாதாரண பயணம். இந்தப் பஸ் பயணத்துக்குப் போகவும் வரவும் முப்பது சதம் டிக்கற் செலவு. அம்மாக்காரி அங்கிங்கு தேடிப் பொறுக்கித்தான் அந்தக் காசைக் கொடுப்பாள்.

இரண்டு தவணைக்காலம் ரவி, அவலப்பயணம் செய்து கல்லூரிக்குப் போய் வந்தான். இந்தக் கால இடைவெளியில், அவன் அண்ணன் தம்பிப்பிள்ளை, தொழில் செய்யும் இடத்திலிருந்து ஊருக்கு வரும் போதெல்லாம், அம்மா, வேதனையோடு அந்தச் செய்தியை அவன் காதுகளில் போடுவாள். தம்பிப் பிள்ளைக்கு இரவில் வந்து விடியப் போகிற பயணம். அதனால், ரவியின் பாடசாலைப் பயணத்தை நேரில் காண வாய்ப்பில்லை. அவனும் அதை அண்ணனிடம் சொல்லத் தருணமில்லை. அண்ணன் வந்து அம்மாவிடம் கதைக்கும் போது அவன் படித்துக் கொண்டிருப்பான்.

அம்மாக்காரி, ரவிக்கும் தெரியாமல் - மிகக் கட்டுப்பாடாக அப்பனுக்கும் தெரியாமல், காதோடு காதாக பெரிய மகனின் காதில் போட்டு வெதும்புவாள்.

இறுதியாகப் பலன் கிடைத்துவிட்டது

தம்பிப்பிள்ளை கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் சேர்த்து, ரவிக்கு ஒரு சைக்கிள் வாங்கிக் கொடுத்தான். ரவி, உற்சாகமாகக் கல்லூரி

போய் வந்தான். அந்த ஆண்டிறுதியில் நடைபெற்ற பரீட்சையில் அவன் சித்தியடைந்து ஏழாம் வகுப்புக்குப் போனான்.

ஏழாம் வகுப்புக்குப் போனதும் ரவிக்கு இன்னொரு பணி வந்து சேர்ந்தது.

கற்கோவளம் மெ.மி. பாடசாலையில் படித்து ஐந்தாம் வகுப்புச் சித்தியடைந்த அவன் தங்கை பாக்கியம், தொடர்ந்து படிப்பதற்கு பருத்தித் துறையிலுள்ள மெதொடிஸ்த மிஸன் பெண்கள் கல்லூரியில் சேர்த்திருந்தார்கள். தவணைக்குத் தவணை பணம் செலுத்தித்தான் அங்கு படிக்க வேண்டும். தனியார் பாடசாலை, தம்பிப் பிள்ளை கஷ்டப்பட்டுப் பணத்தைச் செலுத்தினாலும், அங்கு போய் வருகிற நித்திய பிரச்சனை. மாணவியான பாக்கியத்துக்கு படிப்பிலிருந்த ஆர்வத்தினால், சகிக்கக்கூடிய தமையனாயிருந்தாலும் அம்மாக்காரியை அது அழுத்திக் கொண்டிருந்தது.

வீட்டிலிருந்து பாடசாலைக்கு எப்படியும் மூன்று மைல் தொலை தூரம். நல்ல வேளையாக, காலையில் பாடசாலை செல்வதற்கு ஒரு பஸ் வசதி இருக்கிறது. தாழையடியிலிருந்து பருத்தித் துறைக்கு வரும் பஸ் எப்படியும் எட்டு மணியளவில் அப்பக்கத்தால் வரும். அந்தப் பஸ்ஸில் ஏறினால் எப்படியும் பத்துப் பதினைந்து நிமிடத்தில் அது, பருத்தித் துறைப் பஸ் நிலையத்தில் இறக்கிவிடும். அங்கிருந்து ஒரு கால் மைல் தூரம் நடந்து சென்றால், கல்லூரியை அடைந்து விடலாம். பாடசாலை விட்டதும் வீட்டுக்கு வர பஸ் வசதி எதுவும் கிடையாது. நடைதான்!

ரவிக்கு ஏற்பட்டதைப் போல, பஸ்ஸைத் தவற விட்டால் பாக்கியமும் நடந்துதான் போக வேண்டும். பஸ் இடை நடுவில் பழுதடைந்து உரிய நேரத்துக்கு வரவில்லையென்றால் அன்று பாடசாலைக்கு முழுக்குத்தான்.

இந்தப் பிரயாணக் கஷ்டத்தோடு தவணைப் பணம் செலுத்த வேண்டிய நெருக்கடி குடும்பத்தை அழுத்தியது.

ரவி அடைந்த துயரத்திலிருந்து அவனை விடுவிக்க அவனுக்குச் சைக்கிள் வாங்கிக் கொடுத்ததால் அவனுக்கு ஏற்பட்ட விடிவு, அவன் தங்கைக்கும் ஒரு புதிய வழியை உருவாக்கிற்று. பாக்கியத்தையும் பணம் செலுத்தும் கோரப் பிடியிலிருந்து தப்பிக்க, புதிய ஆண்டில் அவளையும் நெல்லியடி மத்திய கல்லூரியில் சேர்த்து விட்டார்கள்.

ரவி, தங்கையாரைச் சைக்கிள் கரியரில் இருத்திப் பாடசாலைக்குக் கூட்டிச் சென்றான்.

காலையில் எட்டு மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டால் எப்படியும் எட்டரை மணிக்கு முன் கல்லூரியை அடைந்து விடுவார்கள்.

பாக்கியத்துக்கு வெள்ளைச் சட்டை, அந்த நாட்களில் 1703 என்று ஒரு வேட்டி பிரபலமாகியிருந்தது. ரவி, அந்த வேட்டி உடுத்து, பப்ரிக் துணியில் தைத்த வெள்ளைச் சேட்டை வேட்டிக்குள்ளே விட்டுக் கட்டிக் கொண்டு, துடிப்புடன் சைக்கிளை உளக்கிக் கொண்டு செல்வான். பார்ப்பவர் மனதில் குறுகுறுப்பை உண்டாக்கும் காட்சி.

## 19

இரண்டு மாதம்தான் அவர்கள் அப்படிக் கல்லூரிக்குப் போய் வந்து கொண்டிருந்தார்கள். அதற்கிடையில் அதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டிய விபரீதம் ஏற்பட்டு விட்டது.

ஒரு நாள் பாடசாலையிலிருந்து வெகுதூரம் தாண்டி, கிராமக் கோட்டுச் சந்தியால் திரும்பி வந்து கொண்டிருந்தது சைக்கிள். பசி வயிற்றைக் குடைந்து கொண்டிருக்க, ரவி, சைக்கிளை வேகமாக உளக்கிக் கொண்டிருந்தான். தங்கையார் புத்தகக் கட்டுகளை மடியில் வைத்து, அவற்றை ஒரு கையால் அணைத்தவாறு, மறுகையால் சீற்றின் பின்புறத்தை இறுகப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

இன்னும் நூறு யார் தூரம் ஓடினால் சந்தா தோட்டம் வந்து விடும். அப்புறம் சைக்கிள் ஊர்மனைக்குள்ளால் தான் செல்ல வேண்டும். அந்த இடைவெளியில் ஒரு மதகு. இரு பக்கமுமுள்ள மதகுச் சுவரில் நாலைந்து பொடியன்கள் அமர்ந்திருப்பது ரவியின் கண்களில் பட்டது. அதைப் பெரிதுபடுத்தாமல் கிட்ட வந்ததும்தான் ஒரு பயங்கரமான காட்சி அவன் கண்களில் பட்டது. வேலியிலிருந்த நீளமான பட்ட கதியால்கள் இரண்டைப் பிடுங்கி, றோட்டின் குறுக்காக வைத்துக்கொண்டு, இரண்டு மதகுச் சுவர்களிலும் இருந்தார்கள் அந்த மாணவர்கள்.

அதாவது, றோட்டுத் தடுக்கப்பட்டிருந்தது!

ரவியின் கண்களில் அந்தக் கொடூரம் பளீரெனத் தெரிந்தது. அவனுக்கும் அந்தத் தடைக்குமிடையில் எப்படியும் இருபது முப்பது யார் இடைவெளிதான் இருந்தது. அவன் சிந்தனை விழிப்படைந்து விட்டது.

"சைக்கிளை இறுக்கிப் பிடிச்சுக் கொள். றோட்டுக்குக் குறுக்கை தடிபோட்டு வைச்சிருக்கிறான்கள். நான் அதற்குள்ளாலை தான் சைக்கிளை விடப் போறன்!" என்று அழுத்தமாகச் சொன்னான்

ரவி. பாக்கியத்தின் கண்களிலும் அந்தத் தடிகள் தெரிந்தன. இரு கைகளாலும் சைக்கிள் சீற்றை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள் அவள். அதற்குள், சைக்கிள் குறுக்கே கிடந்த அந்தத் தடிகளை நெருங்கிவிட்டன.

ரவி, ஹாண்டிலை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு பெடலை விசையாக உளக்கினான்.

படக் படக் என்ற சத்தம். உக்கிப் போன கதியால் தடிகள், இருவருடைய பாரத்துக்கும் நொருங்கிப் போக சைக்கிள் அப்பால் உருண்டு போயிற்று. நாலு உளக்கலில் சந்தா தோட்டத்து ஒழுங்கை வந்தது. ஒழுங்கைக்குள் சைக்கிளை விட்டு, டக்கென்று பிறேக்கைப் பிடித்து, சைக்கிளை நிறுத்தினான் ரவி. தங்கையை இறங்கச் சொன்னான். "நடந்து போ! நான் வாறன்!" என்று சொல்லி விட்டு, சைக்கிளைத் திருப்பி மதவடிக்கு ஓட்டினான். முறிந்த தடிகளைக் கைகளில் பிடித்துக் கொண்டு எல்லோரும் நடுறோட்டில் நின்றார்கள்.

சைக்கிளை அவசரமாக நிற்பாட்டினான் ரவி. "என்னடா செய்தனீங்கள்?" என்று உரத்த குரலில் கத்திக் கொண்டு, அவர்களில் ஒருவனின் கன்னத்தில் ஓங்கி விட்டான் ஓர் அறை!"

அவர்கள் திடுக்கிட்டுப் போனார்கள். தடிகளைத் தூக்கி ஆயத்தப் படுத்துவதற்கிடையில், ரவி சைக்கிளை எடுத்துக் கொண்டு அதில் ஏறி உளக்கிக் கொண்டு ஒழுங்கைக்குள் நுழைந்து விட்டான். சிறிது தூரம் வந்து, தங்கையையும் ஏற்றிக்கொண்டு வீட்டுக்கு வந்துவிட்டான்.

திடீர் அடியினால் திணறிப் போன அந்த மாணவர்கள் எதுவும் செய்யத் தெரியாமல், தங்கள் புத்தகக் கட்டுகளைச் சுமந்த வண்ணம் தமது வீடுகளுக்குப் போனார்கள். அவர்கள் எல்லோரும் புற்றளை வீதியால் திரும்பி நடந்தார்கள். ஒருவனுக்குப் பல்லப்பையில் வீடு. சந்தா தோட்டத்தைக் கடந்து தன் வீட்டுக்குச் செல்லப் பயந்ததனால் அவனும் அவர்களோடு சேர்ந்து கொண்டான்.

அவர்கள் வேலாயுதம் ஆங்கில பாடசாலையில் கல்வி கற்பவர்கள். பல்லப்பை மாணவன், வேளையிலேயே ரவிக்குத் தெரிந்தவன்.

மறுநாட்காலை, பாடசாலைக்குப் புறப்படும் வேளை!

ரவி அடுப்படிக்குள் இருந்து அவசர அவசரமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். பிட்டுத்தான் சாப்பாடு. அதற்கு உப உணவாகப் பழங்கறியோ, கருவாடோ தெரியாது. பாக்கியம் வேளையிலே சாப்பிட்டு விட்டுப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். வள்ளியம்மை வீட்டு முகப்பிலுள்ள விறாந்தையிலிருந்து ஏதோ அலுவல் செய்து கொண்டிருந்தாள்.

"வள்ளீ...!" என்று படலைக்கு வெளியிலிருந்து ஒரு குரல் தெறித்தது. குரலில் சற்று மிடுக்கு.

கூர்ந்து பார்த்தாள் வள்ளி. திடுமென எழும்பி, "யாரது? நாச்சியாரே? வாருங்கோ நாச்சியார்! என்ன நாச்சியார், காலங் காத்தாலை?..." என்று கேட்டபடி படலைப்பக்கம் ஓடினாள்.

நாச்சியார் படலையைத் திறந்து கொண்டு உள்ளே வந்தார். இரண்டடி நடந்து நின்றபடியே, "என்ன, உன்ரை மோன், என்ரை மோனுக்கு அடிச்சுப் போட்டானாம்? அதுதான் கேக்க வந்தனான்!"

வள்ளி திகைத்துப் போய் தறதறவென்று முழுசினாள். உடனேயே தன்னைச் சமாளித்துக் கொண்டு, "என்ன நாச்சியார் சொல்லுறியள்? அவன் ஏன் அடிக்கிறான்? அவன் அடிச்சிருக்க மாட்டான்!" என்று தாழ்வான குரலில் சொன்னாள். நாச்சியாரை விழுந்து கும்பிடாத அளவுக்குப் பணிவு குரலில்.

"ஓ, நான் அடிச்சனான்தான் அவனுக்கு!" என்று குசினிக்குள்ளிருந்து மிறாய்ப்பான குரல் பாய்ந்து வந்தது. ரவிதான் பதில் சொன்னான். வாய்க்குள் பிட்டு. அந்தக் குதப்பலோடு கனத்து வந்தது குரல்.

தெய்வானை நாச்சியார் திடுக்கிட்டுப் போனார். கண்கள் மிரள மிரள விழித்தன.

வள்ளியும் திடுக்கிட்டாள். கண்கள் பயந்து மிரண்டன. உடல் நடுக்கம் எடுத்தது. என்றாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "வாயை மூடடா! என்னடா கதைக்கிறாய் அங்கையிருந்து?" என்று மகனை உறுக்கிக் கொண்டு, உடனேயே தலையைக் குனிந்து, மிகவும் பணிவான குரலில், "அவன் சும்மா சொல்லுறான் நாச்சியார். அவன் ஏன் அடிக்கிறான் ஆருக்கும்... ஏதோ விசரிலை கதைக்கிறான்..." என்று சொன்னவள், "நாச்சியார், நீங்க வாங்கோ நாச்சியார், நான் அவனுக்குக் குடுக்கிறன் நல்ல குடுவை!" என்று சொல்லி முடிப்பதற்குள் குசினிக்குள் இருந்து சாப்பிட்ட ரவி,

வாயில் பிட்டைக் குதப்பியபடி வெளியே வந்து, தெய்வானை நாச்சியாரை ஏறிட்டுப் பார்த்தான்.

பிட்டை விழுங்கிவிட்டு, "ஓ, நான் அவனுக்கு அடிச்சனான்தான். உங்கடை மோனைப் போய் ஏனெண்டு கேளுங்கோ..." என்று உரத்துச் சொன்னான். பாடசாலைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த பாக்கியம், இந்த முறுகல் நிலை காதில் விழுந்து வெளியே வந்தாள். நடப்பதைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

"நானும் உவளும் சைக்கிள்ளை பள்ளிக்கூடத்தாலை வரேக்கை. அவை என்ன செய்தவை எண்டு போய்க் கேளுங்கோ!" உறுமினான் அவன்.

''என்னடா நடந்தது? நடந்ததைச் சொல்லனடா'' என்று வற்புறுத்தலாய்க் கேட்டாள் தாய்.

ரவி உள்ளே போய்த் தண்ணீர்ச் செம்பைத் தூக்கி வந்தான். வாயைக் கொப்பளித்துக் கையையும் கழுவினான். குனிந்து, உடுத்திருந்த சாரத்தால் வாயையும் கையையும் துடைத்துக் கொண்டு தாய்க்கருகில் போனான்.

''இவவடை மோனும் இன்னும் இரண்டு மூண்டு பேரும் சேர்ந்து, பட்டகதியால்களைப் பிடுங்கி றோட்டுக்குக் குறுக்கே போட்டுக் கொண்டு மதகிலை குந்தியிருக்கினம். எங்களைத் தடக்கி விழுத்திப் புதினம் பாக்க அவைக்கு ஆசை. விழுந்து கைகால் முறிஞ்சு தெண்டால்? இவ்வளவுத்துக்கும் என்ன குற்றம் செய்தனாங்கள் அவைக்கு?'' மிறாய்ப்பாய்ப் பேசினான்.

வள்ளியம்மைக்கு மனம் ஆறுதல் அடைந்தது. இப்போது நாச்சியாரைக் கேள்விக்குறியோடு பார்த்தாள். நாச்சியாருக்குத் தர்ம சங்கடமாய்ப் போயிற்று. தலையைச் சொறிந்துகொண்டு மெல்ல அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

நாச்சியார் போனதும் வள்ளியம்மை, ரவியையும் பாக்கியத்தையும் பார்த்து, ''சரி, படிச்சது போதும் இனிப் பள்ளிக்குப் போற அலுவலை விட்டிடுங்கோ!'' என்று சொல்லி விட்டுக் குசினிக்குள் நுழைந்தாள்.

ரவி, அம்மாக்காரி சொன்னதைக் காதில் விழுத்தாமல், வேட்டியையும் உடுத்திச் சேட்டையும் போட்டுக் கொண்டு தங்கையாரையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டான்.

தாய் எவ்வளவோ தடுத்தும் அவர்கள் போய் விட்டார்கள்.

தெய்வானை நாச்சியாரிடம் தான் வள்ளி அரிசி வாங்குகிறவள். தெய்வானை மூடைக் கணக்காக நெல் வாங்கி, அவித்துக் குற்றி விற்பவள். பச்சையரிசியும் குற்றி விற்பாள்.

வள்ளி அங்கு போய் அரிசி வாங்குவாள். கையில் காசிருந்தால் காசைக் கொடுத்து வாங்குவாள். காசில்லாத நேரங்களில் கடனாக வாங்குவாள். பின்னர், காசு கிடைத்ததும் கொண்டு போய்க் கொடுப்பாள்.

ஒருநாள் ரவியிடம் கொஞ்சக்காசைக் கொடுத்து, "இதைக் கொண்டு போய் தெய்வானை ஆச்சியிடம் கொடுத்திட்டு வா மோனை!" என்று சொன்னாள்.

அவனுக்கு வீடு தெரியாது.

"பல்லப்பை வயிரவர் கோயிலடிக்குப் போய், 'தெய்வானை நாச்சியின்னர வீடெது?' என்று யாரையாவது கேட்டால் சொல்லுவினம்..." என்று சொல்லி அனுப்பி வைத்தாள். ரவி காசை வாங்கிக் கொண்டு போனான். காணிகளைத் தாண்டி, வயலுக்குள்ளாலே போய், பல்லப்பை வயிரவர் கோயிலடியில் நின்று தடுமாறினான்.

அந்த வேளை, அந்த வழியால் முத்துக் குமாரு வாத்தியார் வந்தார். பிடரிவரை வெட்டிய சடைத்த மயிர். கழுத்தைச் சுற்றி ஒரு துண்டு, வேளையிலே இராசனுக்குப் பழக்கமான முகம். விடியப்புறம் ஐந்து மணிக்கு எழும்பி, இராசன் குரும்பை பொறுக்கப் போகும்போது, அவனுக்கும் முன்பே எழுந்து காணிகளுக்குள் நடக்கத் தொடங்கி விடுவார். இராசனுடைய போட்டியாளர்.

வாத்தியார் அருகில் வந்ததும், இராசன் மெல்ல வாயைத் திறந்து, "தெய்வானை ஆச்சியின்னர வீடு எங்கை யிருக்கு..." என்று தடுமாற்றத்துடன் கேட்டான்.

வாத்தியார் முறைத்துப் பார்த்தார்.

"தெய்வானை ஆச்சியோடா? நாச்சியார் எண்டு சொல்லோணும்... உதுதான் வீடு..." என்று சுட்டிக்காட்டினார்.

"சரி ஐயா!" என்றான் இராசன்.

"ஐயா வோடா? நயினார் எண்டு சொல்லோணும்!" என்று மிறாய்த்தார் அவர்.

பதட்டத்துடன் "சரி ஐயா!" என்று மீண்டும் அவன் ஐயா பாஷையை பேசி விட்டான். முத்துக்குமாரு வாத்தியார் கண்களில் பொறி பறக்க அப்பால் போனார்.

ஒரு மாதிரி தெய்வானை ஆச்சியின் படலையைத் திறந்து, பணத்தை அவளின் கையில் கொடுத்து விட்டு வீடு திரும்பினான்.

இந்த முத்துக்குமாரு நயினாருடையதும், தெய்வானை நாச்சியாருடையதும் வாரீசுகள்தான். சேட் அணிந்து தங்கை யாரையும் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு கல்லூரிக்குப் போவதைக் காணச் சகிக்காமல், றோட்டுக்குக் குறுக்கே தடிகளைப் போட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

றோட்டுக் குறுக்கே அல்ல - சமூக வளர்ச்சிப் பாதைகளுக்குக் குறுக்கே பெரும் தடைக் கற்களைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் மனிதன் முன்னேறிக் கொண்டேயிருக்கிறான்.

## 20

**பி**ள்ளைகள் இருவரும் பள்ளிக்கூடம் போனதிலிருந்து துடித்துப் பதைத்துக் கொண்டிருந்தாள் வள்ளி. அதுவும் பாடசாலை விடும் நேரம் நெருங்க நெருங்க, என்ன நடக்குமோ, ஏது நடக்குமோ? என்று அவள் மனம் பரிதவித்துக் கொண்டிருந்தது. என்றாலும், அவள் அதை வெளிக்காட்டாமல் அன்றைய வேலைகளையெல்லாம் செய்து கொண்டிருந்தாள்.

தம்பிப்பிள்ளை இப்போது தாழையடியில் இல்லை. தாழையடியிலிருந்தால், பஸ்ஸில் ஒரு கடிதத்தைக் கொடுத்து அவரை வரவழைத்து இந்த வில்லங்கத்துக்கு ஒரு முடிவு கட்டி விடலாம்.

தம்பிப்பிள்ளைக்குத் திருமணம் ஆகிவிட்டது. மணம் முடித்தது தாய் மாமனுடைய மகளைத்தான்; தாழையடியில் தொழில் செய்து கொண்டிருந்த மாணிக்கத்தின் மகளைத்தான். கலியாணம் முடிப்பதற்கு முன், தம்பிப் பிள்ளையும், தம்பியார் செல்லத்துரையும் மாமனிடமிருந்து பிரிந்து தம்பிப் பிள்ளை உடுத்துறையிலும், செல்லத்துரை புதுக்காட்டுச் சந்தியிலும் தனித்தனியே தொழில் நடத்தினர். தற்போது அவர்கள் ஒன்றிணைந்து, யாழ்ப்பாணம் போய் தொழில் செய்கின்றனர்.

குருநகரில், கத்தோலிக்கரின் சவக்காலையை அண்மித்த ஒரு சிறிய தென்னங்காணியில் தான் கள்ளுக்கொட்டில். அக்கம் பக்கத்திலுள்ள காணிகளிலுள்ள தென்னைகளில் கள்ளுச் சீவி விற்பனை. யாழ்ப்பாணம் பிரதான வீதியிலிருந்து பிரிந்து செல்லும் டேவிட் றோட் சந்தியில் ஒரு சிறிய வெற்று நிலத்தைக் குத்தகைக்கெடுத்து, அதில் ஒரு சிறிய தென் ஓலை வீட்டைக் கட்டிக் கொண்டு, அதில்தான் குடியிருப்பு. சமையல், சாப்பாடு, படுக்கை எல்லாம் அங்குதான். மிகவும் பின்தங்கிய கிராமப் பகுதிகளில் தொழில் செய்தவர்களுக்கு இப்போது பட்டினவாசம்.

தம்பிப் பிள்ளையை தந்தி அடித்துக் கூப்பிட்டு, பாக்கியம் பாரதூரமான பிரச்சினைக்குப் பின்னரும், அடம்பிடித்துக் கொண்டு பள்ளிக் கூடம் போனதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டுமென்று மனம் துடித்துக் கொண்டிருந்தது. இந்த நிலையில் பிள்ளைகளைக் காணாமல் அவளால் எதுவும் செய்ய முடியாதிருந்தது. தந்தியடிப்பதற்கு இரண்டரைக் கட்டை தூரம் நடந்து போய்த்தான் தபாற் கந்தோரைப் பிடிக்க வேண்டும். தபால் எழுதுவித்துப் போடலாம். அதற்கும் நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் கோவிலடிக்குப் போக வேண்டும். கடிதம் எப்போ கிடைக்கும் என்பதும் தெரியாது.

எப்படி இருந்தாலும் பிள்ளைகள் வந்து சேராமல் அவளால் எதுவும் செய்ய முடியாதிருந்தது. அவர்கள் வரும் நேரத்தைப் பரபரப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள். பக்கத்து ஒழுங்கையால் சைக்கிள் வரும் சத்தத்தைக் காதுகள் துருவிக் கொண்டிருந்தன.

வழமை போல ஒரு பிரச்சினையுமில்லாமல் இருவரும் வந்து சேர்ந்தார்கள். அவர்களுக்குச் சாப்பாடு பரிமாறிக் கொண்டே தானும் சாப்பிட்டாள்.

"வழியிலை தெருவிலை யாரும் நிண்டவங்களோ?" என்று மெல்லிய குரலில் கேட்டாள். கந்தப்பருக்குத் தெரிந்தால் அவருக்குப் பெரும் கொண்டாட்டமாயிருக்கும் என்ற பயக்கலக்கம்.

"ஒருத்தரும் நிக்கேல்லையெணை! ஏன் நேத்துக் குடுத்தது காணாதோ?" என்று விசும்புத்தனமாகப் பதில் சொன்னான் ரவி.

"ஆ! போதும் சாப்பிடு!" என்று மெதுவாகச் சொன்னாள் வள்ளி. பிறகு வழமையான பாடுகள்.

கந்தர் சீவப்போனதும் வள்ளி இருவரையும் கூப்பிட்டாள். "இங்கை வாருங்கோ ரண்டு பேரும். உங்களோடை ஒரு கதை கதைக்க வேணும்!" என்று அன்பாகவும் அழுத்தமாகவும் வேண்டுகோள் விடுத்தாள்.

இருவரும் வந்து, திண்ணையில் அம்மாக்காரிக்கு முன்னால் இருந்தார்கள். அம்மாவின் முகத்தை ஊடுருவிப் பார்த்தார்கள்.

"இஞ்சை, நான் சொல்லுறதைக் கொஞ்சம் கவனமாகக் கேளுங்கோ, நீங்கள் படிக்க வேணுமென்கிறதுதான் எனக்கும் கொண்ணன்மாருக்கும் ஆசை. கொப்புவுக்கு இஞ்சித்தும் விருப்பமில்லை. இந்த நிலைமையில், அந்தக் கடைப்புளி நாய்கள்

ஏதாவது வம்புத்தனம் செய்தால், ஆம்புளப் பிள்ளைக்கு ஒண்டும் வராது. தற்சேலாக ஏதும் அடிதடி காயம் ஏற்பட்டால், அதை மாத்திப் போடலாம். ஆனா, பொம்புளைப் புள்ளைக்கு ஒண்டு வந்தால் அது பெரிய வில்லங்கத்தை உண்டாக்கும்... நான் சொல்லிறது விளங்கிறதோ உங்களுக்கு?'' ஏற இறங்கப் பார்த்தாள் அவள்.

ரவி, கேள்விக்குறியோடு, அம்மாவைப் பார்த்தான். 'அப்படி என்ன வரப் போகிறது?' என்பது அந்தப் பார்வையில் தொக்கி நின்றது! 'பதிலுக்கு நாங்களும் குடுப்பம்தானே!' என்பதும் விடையாய்த் தெரிந்தது.

''பொம்பிளைப் பிள்ளையள் அடி உதையைத் தாங்க மாட்டுதுகள். அதைத் தாங்கினாலும், ஊருலகத்தாற்றை கதை, அதுகள்ளை வாழ்வைப் பாதிக்கும்... கலியாணம், கார்த்திகை எண்டு வாற காலத்திலை...'' மென்று விழுங்கினாள் வள்ளி.

பாக்கியம், நிலத்திலே கைகளால் கீறிக் கொண்டிருந்தாள். ரவி, அம்மாவை உற்றுப் பார்த்து ''என்னணை, பழங்காலத்துக் கதை கதைக்கிறாய், காலம் மாறிப் போச்சணை. பொம்புளையளும் படிச்சு உத்தியோகம் பாக்கிற காலம் வந்திட்டுது...'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து கிளம்ப ஆயத்தமானான்.

''ராசு, நீ பள்ளிக்குப் போ! உனக்கு ஒரு பிரச்சினையும் இல்லை. பாக்கியம் போக வேண்டாம். நீ வீட்டிலை நில். பெரிய அண்ணனுக்கு ஒரு கடிதம் போட்டு, அவனைக் கூப்பிடுவம். அவன் வந்து யோசிச்சு வேறை ஏதாவது வழி செய்வம்'' என்று சொன்ன வள்ளி, மகளின் முதுகைத் தடவி, ''ஒண்டுக்கும் கவலைப்படாமலிரு; ஒரு நல்ல வழி பிறக்கும்!'' என்று ஆறுதல் கூறி விட்டு, அவள் தன் வேலைகளைச் செய்யப் புறப்பட்டாள். பிள்ளைகளும் எழுந்து போனார்கள்.

ரவி வெறுமையுணர்வோடு இரண்டு நாட்கள் பாடசாலைக்குப் போய் வந்தான்.

பாக்கியத்தின் பாடு பெரும் அவலமாயிருந்தது. புத்தகங்களைத் திறப்பாள். மூடுவாள், அடுக்கி ஒரு பக்கம் தூரப் போடுவாள். உலகம் அவளுக்கு இருண்டு போய்க் கிடந்தது.

அவளது நிலைமையைப் பார்க்க, ரவிக்கும் பெரும் வேதனையாயிருந்தது. பாக்கியத்தை தன்னுடைய பாடசாலையில்

சேர்த்த இரண்டொரு மாதங்களில் அவளுக்கு ஆங்கிலம் படிப்பித்த லீலா ரீச்சர், ஒருநாள் இவனைக் குறுக்கு வழியில் கண்டதும் "ரவி! உன்னுடைய தங்கை நல்ல கெட்டிக்காரியாயிருக்கிறாள்!" என்று சொன்னது அவன் மனதில் நிழலாடியது. அவன் இப்போது படும் துயரத்தைப் பார்த்து, "இதற்கு ஒரு நல்ல முடிவு காண முடியாதா?" என்று தனக்குள் ஆலோசிக்கத் தொடங்கினான்.

ஒரு திங்கட்கிழமை பாடசாலைக்குப் புறப்பட்டு, கிராமக் கோட்டடி மட்டும் வந்து, சைக்கிளை மறுபக்கம் திருப்பி, நிதானமாக உளக்கிக் கொண்டு, மெதொடிஸ்த மிஸன் பெண்கள் கல்லூரியை நோக்கிப் போனான்!

கல்லூரியை அடைந்ததும், சைக்கிளை ஒரு பக்கம் நிறுத்திவிட்டு, அதிபரின் அலுவலகத்துக்குப் போனான்.

பாடசாலை தொடங்கும் நேரம். மாணவிகள் நெருக்கமாகவும் வேகமாகவும் வகுப்புகளுக்குச் சென்று கொண்டிருந்தார்கள். ஆசிரியைகள், அலுவலகத்துள் நுழைந்து தங்கள் வரவைப் பதிவு செய்து கொண்டு வெளியேறிக் கொண்டிருந்தார்கள். சில ஆசிரியைகள், அதிபருடன் லிகிதர் அம்மாவுடனும் ஏதோ விடயங்களைப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ரவி, தான் வந்தது அகால வேளை என்பதை உணர்ந்து ஒரு பக்கமாக, தூணோடு ஒதுங்கி நின்றான். சில நிமிடங்களில் மணி அடித்து, கல்லூரிக் கீதம் இசைக்கப்பட்டுப் பாடசாலை தொடங்கியது.

மேலும் சில நிமிஷங்கள் கழிந்ததும் அதிபர் வெளியே வந்தார். இவனைக் கண்டதும் அருகில் போய் நிமிர்ந்து பார்த்தார். சற்றுத் தெரிந்த முகம். யாரோ ஒரு மாணவியிடம் வந்து போய்க் கொண்டிருந்தவன்.

"வகுப்புகளை ஒருக்கால் சுற்றிப் பார்த்துக் கொண்டு வருகிறேன். இங்கே நில்லுங்கள்!" என்று ஆங்கிலத்தில் சொல்லிவிட்டு அவர் அப்பால் நகர்ந்தார்.

இராசன் மகிழ்ச்சியோடு காத்துக் கொண்டிருந்தான்.

## 21

மிஸ் பாக்கர் என்பது அதிபரின் பெயர். வெள்ளைக்கார அம்மா. பட்டதாரி. நாற்பத்தைந்து வயது மதிப்பிடக்கூடிய தோற்றம். முகத்தில் இளமைத் துடிப்பும் உற்சாகமும் பொலிந்து விளங்கியது. பிறவிக்கிறிஸ்தவரான அவர், இளம் வயதிலேயே புரட்டஸ்தாந்து சேவைச் சபையில் சேர்ந்து பணியாற்றுபவர். சேவைத் திறமையின் காரணமாக வெளிநாட்டு மக்களுக்கு அவரது சேவை பயன்தர வேண்டுமென்று, திருச்சபை அவரை இலங்கைக்கு அனுப்பியது. இங்கு வந்து அவர், புகழ் படைத்த இப்பெண்கள் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றி வருகிறார்.

பத்துப் பதினைந்து நிமிடங்களில் அவர் தன் அலுவலகத்துக்குத் திரும்பி வந்தார். வாசலில் நின்ற ரவிக்கு கண்களால் அழைப்பு விடுவித்துத் தன் ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். ரவி உள்ளே நுழைந்ததும் ஓர் ஆசனத்தில் அமரச் செய்து, "என்ன விடயம்?" என்று கேள்வி எழுப்பினார்.

ரவி, அரைகுறை ஆங்கிலத்தில் தன் பிரச்சினையைச் சொல்லத் தொடங்கியதும், அதிபர் கிளாக்கர் அம்மாவை அழைத்து அவரையும் அருகில் உட்கார வைத்தார். ரவி ஆங்கிலத்தில் சொல்லத் தடுமாறியதைப் போல, மிஸ் பாக்கரும் அதைப் புரிந்து கொள்ளச் சிரமப்பட்டார். அவருக்குத் தமிழ் அறிவு குறைவுதான் என்றாலும் ஆர்வத்தோடு செவிமடுத்துக் கொண்டிருந்தார்.

இப்போது, ரவி, தான் அங்குவந்த விடயத்தைத் தமிழில் சொல்ல, கிளாக்கர் அம்மா, அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கொண்டிருந்தார்.

"இங்கு எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த பாக்கியம் என்ற மாணவியின் அண்ணன் நான். எங்களுடைய குடும்பம் மிகவும் வறுமைப்பட்ட குடும்பம். தந்தையார் கள் இறக்கி விற்றுக் கிடக்கும் பணத்திலிருந்துதான் வாழ்க்கை நடத்தி வருகிறோம். அந்த

உழைப்பு சீவியத்துக்கே காணாது. இந்த நிலைமையில் அம்மா கஷ்டப்பட்டு மூடல் இளைத்து அதை விற்றுக் கிடக்கும் சொற்ப வரும்படியிலிருந்துதான் எங்கள் படிப்புக்குப் பணம் கிடைக்கிறது. நானும் படிக்கிறேன்.

"இந்த நிலைமையில் இங்கே படித்துக் கொண்டிருந்த தங்கையாருக்கு, பாடசாலைக்குரிய கட்டுப் பணம் செலுத்த முடியாத காரணத்தால்தான், அவளை இப்பாடசாலையிலிருந்து விலக்கி, நான் படிக்கும் நெல்லியடி மத்திய கல்லூரியில் சேர்த்தேன். அவளை என் சைக்கிளில் ஏற்றிச் செல்வேன். அங்கு போய் வரும் வேளையில், ஒரு கொடூரமான காரியம் நடந்தபடியால்தான் அவள் அங்கு செல்ல முடியாதிருக்கின்றது. அவள் வீட்டில் அழுது கொண்டிருக்கிறாள்."

இதைச் சொல்லும் போது ரவியின் கண்கள் கலங்க, குரலும் அடைத்துக் கொண்டது. கண்களைக் கையினால் துடைத்துக் கொண்டான். பேச முடியாமல் தலையைக் கீழே கவிழ்ந்து கொண்டான்.

உணர்ச்சி வசப்பட்ட அதிபர், "ஏன், என்ன நடந்தது?" என்று பதட்டத்துடன் அவனை உற்றுநோக்கியபடி கேள்வி எழுப்பினார்.

"நாங்கள் படிக்கிறது, எங்களுக்கு அக்கம் பக்கத்திலிருக்கிற உயர் சாதிப் பொடியன்களுக்குச் சகிக்க முடியவில்லை. கொஞ்சம் துப்பரவான சட்டை போட்டுக் கொண்டு, அவள் சைக்கிள்ளை போனது அவங்களுக்குச் சரியான ஆத்திரம். அதனாலே, போன திங்கட்கிழமை, நானும் தங்கச்சியும் பள்ளிக்கூடத்தாலை வரேக்கை, நாலைந்து பொடியள் ஒரு மதவிலை இரண்டு பக்கமும் இருந்து, றோட்டுக்குக் குறுக்கை தடியளைப் போட்டுக் கொண்டிருக்கிறான்கள். எங்களைச் சைக்கிளாலை விழுத்தி வேடிக்கை பார்க்கிற ஆசை..."

"என்ன? றோட்டுக்குக் குறுக்கை தடியளைப் போட்டுக் கொண்டிருந்தவங்களா? அப்ப உன்பாடு கஷ்டமாயிருந்திருக்குமே...?" அதிபர் ஆத்திரத்தோடு கேள்வி எழுப்பினார்.

"நான், தங்கைச்சியை, சைக்கிளை இறுக்கிப் பிடிக்கச் சொல்லிவிட்டுத் தடியளுக்கு மேலாலை சைக்கிளை விட்டு ஒரு மாதிரி அங்காலை போய்ச் சேர்ந்திட்டன்!"

"பிறகு?"

"பிறகு என்ன? தங்கைச்சியை இறக்கி விட்டுத் திரும்பி வந்து, அதிலை ஒரு பொடியனுக்குக் குடுத்தன் ஒரு குடுவை!" என்று வீறாய்ப்புடன் சொல்லி முடித்தான் ரவி.

அதிபர், கண்களை அகல விரித்துத் தலையை மேலும் கீழுமாக ஆட்டினார். "அதுதான் சரி. அவங்களுக்கு நல்ல பாடம் படிப்பிக்கத்தான் வேணும்!" என்று இறுக்கமாகச் சொன்னார்.

ரவி தொடர்ந்தான்.

"அதுக்குப் பிறகு நான்தான் பள்ளிக்கூடம் போறனான். பாக்கியத்தை அம்மா மறிச்சுப் போட்டா..." சிறிது நேரம் மௌனமாயிருந்து விட்டு, "நான் ஆம்பிளைப் பிள்ளை. எனக்கொரு வில்லங்கம் வாற தெண்டால், அது வேறு விஷயம். ஆனால் அவள் பொம்பிளைப் பிள்ளைக்கு ஒரு தீங்கும் வரக்கூடாது தானே! அதனால் அவளைப் பள்ளிக்கூடத்துக்கு விடாமல் வீட்டிலை மறிச்சு வைச்சிருக்கிறம். அவள் வீட்டிலை கிடந்து அழுது கொண்டிருக்கிறாள்.

"நான் இன்று பாடசாலைக்குப் புறப்பட்டு வந்த வழியில், அவள் அழுது கொண்டிருப்பதைத் தாங்க முடியாமல், சைக்கிளை இந்தப் பக்கம் திருப்பி உங்களிடம் வந்திருக்கிறேன்."

அதிபர் நீண்டதொரு பெருமூச்சு விட்டார். அவனைப் பார்த்து, "இப்ப உனக்கு என்ன வேணும்?" என்று ஆதங்கத்தோடு கேட்டார்.

ரவி, கண்களிரண்டையும் நிமிர்த்தி, அதிபரைப் பணிவோடு வணங்கியபடி, "பாக்கியம் இங்கே படிப்பதற்கு நீங்கள் அனுமதி தரவேண்டும்!" என்று தாழ்வான குரலில் வேண்டிக் கொண்டான்.

சிறிது நேரம் அமைதியாயிருந்த அதிபர், பின்னர் கிளாக்கர் அம்மாவை நிமிர்ந்து பார்த்தார். "நீங்கள் ஒருக்கால் போய், பாக்கியம் என்ற இந்தப் பிள்ளை படித்த வகுப்பு ரீச்சரைக் கூட்டிக் கொண்டு வாங்க!" என்று சொன்னார்.

கிளாக்கர் எழுந்து போய், உடனடியாக அந்த ரீச்சரை அழைத்து வந்தார். கிளாக்கர் இருந்த கதிரையில் அந்த ரீச்சரை இருக்கச் சொல்லி, அதிபர் அவரிடம் விசாரணை நடத்தினார்.

"உங்கள் வகுப்பில் பாக்கியம் என்றொரு மாணவி படித்தாளா? அவளுடைய கல்வித் திறன் எப்படி? மற்றும் வகுப்பு நடவடிக்கைகள் பாடசாலை நிகழ்வுகள் எப்படி?" என்று சுருக்கமாக வினவினார்.

"பாக்கியம் வகுப்பில் மிகவும் கெட்டிக்காரி. விளையாட்டு, பேச்சுப் போட்டி என்று பல நிகழ்ச்சிகளில் சாதனை படைத்தவர்" என்று அந்த மாணவியின் திறமைகளை அடுக்கிக் கொண்டே போனார்.

"வறுமையின் நிமித்தம் அவளை இங்கு படிப்பிக்க முடியாமல் வேறு பாடசாலையில் சேர்த்தார்களாம். இப்போ, அப்பாடசாலைக்குப் போய் வருவதில் பிரச்சினை இருப்பதால், மீண்டும் அவளை இங்கு சேர்க்க விரும்புகிறார்கள். இவர், அந்தப் பிள்ளையின் அண்ணன்" என்று சொல்லி நிறுத்தி விட்டு, ஆசிரியையைப் போகும்படி விடை கொடுத்தார்.

ரவியை பொறுப்புணர்வுடன் பார்த்து, "ஓ.கே! உமது தங்கையை இங்கே கொண்டு வந்து சேர்க்கலாம். அத்துடன்..." என்று இழுத்தார்.

ரவி பரபரப்புடன் அவர் முகத்தை ஏறிட்டு நோக்கினான்.

"பாக்கியம் தனக்குரிய பாடசாலைக் கட்டணத்தைச் செலுத்த வேண்டியதில்லை. அத்துடன், அவள் இங்கே போடிங்கில் இருந்து படிக்க நான் அனுமதி வழங்குகிறேன். வறிய மாணவர்களுக்குரிய உபய நிதியத்திலிருந்து இங்கு தங்கி அவள் தன் படிப்பதைத் தொடரலாம்."

ரவி, மிகுந்த மனக் கிளர்ச்சியுடன் அதிபர் அம்மாவுக்கு நன்றி தெரிவித்து விட்டு வீட்டுக்கு வந்தான். அம்மாவை அழைத்து இந்த மகிழ்ச்சியான செய்தியை அவள் காதில் போட்டான். பாக்கியத்துக்கும் தெரிவித்தான்.

அவ்வளவுதான்! வீடே மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியது. அவன் பம்பரமாய்ச் சுழன்று பாக்கியத்தைத் தயார்ப்படுத்தி, நெல்லியடி மத்திய கல்லூரியில் அவள் விடுகைப் பத்திரத்தையும் பெற்று, இரண்டு நாட்களில் மெதொடிஸ்த மிஸன் பெண்கள் கல்லூரியில் அவளைச் சேர்த்து விட்டான்.

## 22

ரவிக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. பருத்தித் துறையில் மட்டுமல்ல, வடமராட்சி முழுவதற்கும் பிரசித்தி பெற்ற அப்பாடசாலையில் இடம் கிடைத்ததோடு, பாடசாலைக் கட்டணம் செலுத்தாமல் படிக்க வாய்ப்புக் கிடைத்தது, அத்துடன் கட்டணம் செலுத்தாமல் போடிங்கில் தங்கிப் படிக்கத் தருணம் கிடைத்தது. எல்லாமே அவனுக்குப் பெரும் சாதனையாய் அமைந்து விட்டது.

தங்கையாரை வழிமறித்துத் தடக்கி விழுத்தி வேடிக்கை பார்க்க இருந்த கடைப் புளிக் கூட்டத்தின் தீய நடவடிக்கை தன் குடும்பத்திற்கு இப்படிப் பெரும் நன்மையைத் தருமென்று அவன் கனவில் கூட எதிர்பார்க்கவில்லை. மகிழ்ச்சிப் பெருக்கில் அவன் திளைத்துப் போனான்.

அவன் படிக்கும் பாடசாலையில் அவனுடைய நண்பர்களும் சில ஆசிரியர்களும் "தங்கையார் ஏன் வருவதில்லை?" என்று கேட்பார்கள். அவன் நடந்த சம்பவத்தைச் சொல்லாமல், "இங்குவந்து போவது சரியான கஷ்டம்; அதனால் என் அண்ணன், திரும்பவும் அவளைப் பழைய பள்ளியில் சேர்த்து விட்டார்" என்று மழுப்பி வைத்தான்.

உயர் சாதி மாணவர்களே பெருவாரியாகப் படிக்கும் கல்லூரி அது. ரவியும், தங்கையும் மற்றும் இரண்டொரு பேருமே ரவியினுடைய சாதியைச் சேர்ந்தவர்கள். வதிரியைச் சேர்ந்த நாலைந்து மாணவர்களும் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்கள். இப்படியிருக்க, சாதி வெறியில் நடந்த குரூர சம்பவத்தை அங்கு சொல்லாமல் மறைத்து விட்டான். அதன் காரணமாக, பாக்கியம் மெதொடிஸ்த பெண்கள் கல்லூரியில் மீண்டும் சேர்க்கப்பட்டதற்கு, தூரப் பயணம் தான் முக்கிய காரணம் என்று கூறி மறைத்து விட்டான்.

தான் ஒழுங்காகப் பாட சாலைக்குப் போய் வந்து கொண்டிருந்தான். ஆனால் மனதில் ஓர் இனந்தெரியாத அழுத்தம்…

நெல்லியடிக்கு, தங்கையாரோடு கலகலப்பாகப் பேசி வந்து போய்க் கொண்டிருந்த மகிழ்ச்சி இப்போது இல்லாமற் போய்விட்டது. அத்துடன், வீட்டில் படிப்பு சம்பந்தமாக இருவரும் கலந்து மாறிக் கதைத்துக் கொள்வது, சந்தேகங்களை நிவர்த்தி செய்வது, விளையாடுவது, சண்டை பிடிப்பது எல்லாம் அற்றுப் போய் ஒரு வெறுமை உணர்ச்சி அவனை ஆட்கொண்டது.

அத்துடன் தன்னுடைய படிப்பு சம்பந்தமான தேவைகள் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு, அவனுடைய அண்ணன் தாழையடியில் இல்லாமல் யாழ்ப்பாணப் பட்டினத்தில் தொழில் செய்து கொண்டிருப்பதும் அவனுடைய வெறுமை இறுக்கமாகிக் கொண்டிருப்பதற்கு வழி கோலியது. முன்பானால், தாழையடி செல்லும் பஸ்ஸில் ஒரு கடிதத்தை எழுதிக் கொடுக்க, உடனடியாகவே தம்பிப் பிள்ளை வீட்டுக்கு வந்து விடுவார். இப்போது அது இயலாத காரியம். யாழ்ப்பாணத்துக்கு அடிக்கடி பஸ் ஓடுவது என்பது உண்மைதான். என்றாலும் பட்டினத்திலும் சரி, பருத்தித் துறையிலும் சரி பஸ்ஸைப் பிடிக்க ஒரு மைலுக்கு மேல் நடக்க வேண்டும். அத்துடன் தகவலை உடனடியாகத் தெரிவிக்கவும் முடியாது.

தபாலில் கடிதத்தை அனுப்பினாலும், பட்டினத்தில் தொழில் முறை சீராக நடைபெற வேண்டுமென்பதால், உடனடியாகப் புறப்பட்டு வரவும் இயலாது. இப்படிச் சிக்கலான ஒரு நிலவரத்தைத் தம்பிப்பிள்ளை தெளிவாகப் புரிந்து கொண்டார். இதன் காரணமாக அவர், ரவியை யாழ்ப்பாணம் வந்து சேரும்படியும், அங்கு ஒரு நல்ல கல்லூரியில் அவனைச் சேர்த்து விடலாமென்றும் கடிதம் எழுதினார்.

ரவி, நெல்லியடி மத்திய கல்லூரியில் சேர்ந்து ஒரு வருடம் பூர்த்தியானதும் ஏழாம் வகுப்பில் இணைந்து ஒரு தவணைக் காலம் தான் படித்தான். அந்தத் தவணைக் காலத்தில்தான், அவன் தன் தங்கையாரை அங்கு கொண்டு வந்து சேர்த்து, பின் அங்கிருந்து விடுவித்தான். இப்போது அந்தத் தவணை முடிவில் அண்ணன் அழைக்கவே தானும் விடைபெற்றுக் கொண்டு யாழ்ப்பாணம் போய்ச் சேர்ந்தான்.

வட பகுதியிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் விடிவுக்காக எம்.சி. சுப்பிரமணியம் என்ற வாலிபர் இரவு பகலென்று பாராமல் ஓயாது உழைத்துக் கொண்டிருந்தார். ரவியின் அண்ணன் தம்பிப்

பிள்ளை அவரிடம் சென்று, தன் தம்பியாரை பட்டினத்திலுள்ள ஒரு பாடசாலையில் சேர்ந்து விடுமாறு கேட்டிருந்தார். எம்.சி.யும் அதற்குச் சாதகமாகப் பதில் அளித்தார். இதன் நிமித்தமே தம்பிப் பிள்ளை தம்பியாரான ரவியை யாழ்ப்பாணத்துக்கு அழைத்திருந்தார்.

யாழ்ப்பாணம் வந்த ரவி, ஏதாவதொரு கல்லூரியில் சேர்வதற்கு சில நாட்கள் பொறுத்திருக்க வேண்டியிருந்தது. அண்ணன்மார் தொழிலுக்குப் போக இவன் வீட்டிலிருந்தான். முன்பின் பழக்கமில்லாத இடத்தில் தனியே இருக்கப் பிடிக்காமல், அண்ணன்மார் தொழில் செய்து கள்ளு விற்கும் இடத்துக்குச் சில சமயம் போய் வரத் தொடங்கினான்.

டேவிட் றோட்டிலிருக்கும் வீட்டிலிருந்து கள்ளுக் கொட்டிலுக்குப் போகும் வழியில்தான் பிரசித்தி பெற்ற சென் பற்றிக்ஸ் கல்லூரி இருக்கிறது. பழைமை வாய்ந்த பெரிய கட்டடம் அதைப் பார்க்கும்போது, ரவிக்கு, இந்தப் பள்ளிக் கூடத்தில் ஓர் இடம் கிடைத்தால் இங்கும் படிக்கலாம் தானே! என்று ஓர் ஆசை ஏற்பட்டது. அதன் காரணமாக, ஒருநாள் காலை நன்றாக உடுத்திக் கொண்டு அந்தக் கல்லூரிக்குச் சென்றான்.

அலுவலக வாசலில் கதவு நிலையைப் பிடித்துக் கொண்ட ஒரு நெடிய உருவம், பாதிரியின் உடையில் நின்று கொண்டிருந்தது. அவர்தான் அதிபர் என்று அவன் ஊகித்துக் கொண்டான். அருகில் போய், மிகவும் பணிவான குரலில் "குட் மோணிங் பாதர்!" என்று வணக்கம் தெரிவித்தான். அவரும் பதிலுக்கு "குட் மோணிங்!" சொன்னார். அவர் பார்வை, அவன் வந்த விடயத்தைத் துளாவியது.

"நான் இங்கு படிப்பதற்கு விரும்புகிறேன். ஓர் இடம் கிடைக்குமா?... ஏழாம் வகுப்புக்கு?" என்று பணிவான குரலில் கேட்டான்.

ரவியை அவர் ஏற இறங்கப் பார்த்தார். கணப் பொழுதும் சுணங்காமல், "இங்கே ஒரு இடமும் கிடையாது. எல்லா வகுப்புகளும் நிரம்பிவிட்டன" என்றார். அவர் எதுவித பதட்டமும் அடையவில்லை. குரலில் ஒரு கம்பீர நிதானம்.

பாதர் லோங்க் தான் அந்த அதிபர். லோங்க் என்ற பெயருக்கே பொருத்தமாக, கதவு நிலையளவுக்கு உயர்ந்து நின்றார். ஏழாம் வகுப்புக்கு இடம் கேட்டு வந்துள்ளான். வயது பதினெட்டு இருக்கும். அந்த வகுப்பில் படிக்கும் மாணவரை விட ஐந்து ஆறு

வயது கூட. அத்துடன் வேட்டிதான் உடை..." இப்படி அதிபரின் சிந்தனை உருண்டிருக்கும்.

ரவி, 'போதுமடா சாமி!' என்று நினைத்துக் கொண்டு தமையனுடைய கள்ளுக் கொட்டிலை நோக்கி நடந்தான்.

இரண்டொரு நாட்களில் எம்.சி. சுப்பிரமணியம் ரவியைக் கூட்டிக் கொண்டு போய், திருநெல்வேலியிலுள்ள பரமேஸ்வராக் கல்லூரியில் சேர்த்து விட்டார். ஒரு பிரச்சினையுமில்லை. கல்லூரி அதிபர் அவனை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்தார். அவனுடைய தோற்றம், அவரை அப்படிப் பார்க்கத் தூண்டியது.

எம்.சி., அதிபரின் பார்வையிலிருந்து புறப்பட்ட சந்தேகத்துக்கு விடை பகருமாப் போல், "இவர் தமிழ் எஸ்.எஸ்.ஸி. பாஸ் பண்ணி விட்டு, பின் ஆங்கிலத்தில் ஆறாம், ஏழாம் வகுப்புகளில் படித்தவர்..." என்று விடை பகர்ந்தார்.

அவ்வளவுதான்! அதிபர் அவனை அங்கு படிக்கச் சேர்த்துக் கொண்டார். எம்.சி.சுப்பிரமணியம், அவருக்கு நன்றி தெரிவித்துவிட்டு வெளியேறினார்.

எஸ்.-சிவபாத சுந்தரம் என்ற அந்த அதிபர், கேம்பிறிட்ஜில் எம்.எஸ்ஸி. படித்துவிட்டு அண்மையில்தான் இலங்கை திரும்பி பரமேஸ்வராக் கல்லூரியின் அதிபர் பொறுப்பை ஏற்றிருந்தார்.

லண்டனில் படித்தபோது, பொன்னம்பலம் கந்தையா என்ற மார்க்ஸீயவாதியுடன் இணைந்து படித்தது மட்டுமல்லாமல் மேலும் பல இடது சாரிச் சிந்தனையாளருடனும் தொடர்பு கொண்டிருந்தார். அதன் காரணமாக இங்கு தோழர் எம்.சி.சுப்பிரமணியத்துக்கும் அறிமுகமாகியிருந்தார். அதன் காரணமாகவே வயது அதிகமான ரவியை அக்கல்லூரியில் சேர்த்துக் கொள்வதற்குச் சிறிதளவு தயக்கமும் கொள்ளவில்லை. ரவிக்கு மகா சந்தோஷம்!

எம்.சி.யின் துணைவியாருடைய தம்பி ஒருவன், யாழ் சம்பத்திரிசியார் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். எஸ்.எஸ்.ஸி. வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும்போது, அவனுக்கு, மைத்துனரின் மார்க்ஸீயக் கொள்கையில் பற்றுதல் ஏற்பட்டு விட்டது. இதன் காரணமாக கொழும்பு கொட்டாறோட்டிலிருந்து வெளிவந்த கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் வாரப் பத்திரிகையான 'தேசாபிமானி'யைக் கல்லூரிக்கு எடுத்துச் சென்று, அங்கு

மாணவர்கள் மத்தியிலும் சில ஆசிரியர்களிடமும் விநியோகித்துக் கொண்டிருந்தான். ஆனால், வெகு விரைவில் அதிபர் பாதர் லோங்கிடம் அகப்பட்டுக் கொண்டான்.

வடபகுதியில் கத்தோலிக்கரின் பெருமதிப்புகளும், பக்திக்கும் அருட் பிரவாகமாயமைந்த ஆலயம்தான் சம்பத்திரிசியார் ஆலயம். அவ்வாலயத்தின் இதய கீதமாய் இயங்கிவந்த சம்பத்திரிசியார் கல்லூரியில், கம்யூனிஸ்ட் பத்திரிகையைப் பரப்புவதென்றால் அதன் முடிவு என்னவாயிருக்கும்?

பாதர் லோங்க் எந்த விதமான விசாரணையுமின்றி அந்த மாணவனை உடனடியாகவே கல்லூரியிலிருந்து அகற்றி விட்டார். எம்.சி. அதனை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு, மனதில் ஒருவித சஞ்சலமும் கொள்ளாமல், மைத்துனனைப் பரமேஸ்வராக் கல்லூரிக்குக் கூட்டிச் சென்று, அதிபர் சிவபாத சுந்தரத்திடம் நடந்த சங்கதியைச் சொல்லி, அங்கு அவனைச் சேர்த்து விட்டார்.

அந்த மாணவன்தான், எஸ்பொ என்று இலக்கிய உலகில் அழைக்கப்படும் எஸ்.பொன்னுத்துரை.

யாழ்ப்பாணத்திலுள்ள திருநெல்வேலியில் அமைந்து, உயர்குடி வேளாளப் பெற்றோரின் பிள்ளைகள் மட்டுமே கல்வி கற்கும் பரமேஸ்வராக் கல்லூரியில் முதன்முதலாகச் சேர்க்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மாணவன் எஸ்.பொன்னுத்துரை. இரண்டாவது தாழ்த்தப்பட்ட மாணவன் ரவீந்திரன்.

எல்லாப் பாடசாலைகளையும் போல இக்கல்லூரியிலும், காலை நேரத்தில் கல்லூரிக்கு முன்பக்கமுள்ள ஈஸ்வரன் கோவிலில் சகல வகுப்பு மாணவர்களும் ஒழுங்காக நிறுத்தப்பட்டு தேவாரம் பாடிய பின்னரே பாடங்கள் ஆரம்பமாகும். அதே போல மாலையிலும் பாடசாலை முடிவடைந்த பின்னர் வகுப்பு மாணவர் வரிசையாக வந்து நிற்க, இறைவணக்கம் நடைபெற்று அதன் பின்னரே மாணவர் வீடுகளுக்குக் கலைந்து செல்வர். அதிபரின் கண்டிப்பான நடவடிக்கை இது. எனினும் சில மாணவர் கடைசி மணி அடித்ததும் இறுதி வணக்கத்துக்கு நில்லாமல் கள்ளத்தனமாக ஓடி மறைந்து விடுவார்கள்.

இதை அவதானித்த அதிபர். கடைசி மணி அடிப்பதற்குச் சில நிமிடங்கள் முன்னதாகப் பாடசாலையிலிருந்து வெளியேறி ஏதாவதொரு இடத்தில் மறைந்து நிற்பார். குறுக்கே ஓடிவரும்

மாணவரைக் கையும் மெய்யுமாகப்பிடித்து வந்து கோயில் வாசலில் நிறுத்தி பத்துப் பதினைந்து நிமிடங்கள் தேவாரம் பாட வைத்து, அதன்பிறகே வீட்டிற்கு அனுப்புவார்.

பொன்னுத்துரையும், ரவீந்திரனும் இத்தண்டனை வழங்கலை அவதானித்து மனதுக்குள் சிரித்துக் கொண்டனர்.

இந்தப் பரமேஸ்வராக் கல்லூரி வளவில் தான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது சிறப்பாக நடைபெற்று வருகிறது என்பது யாவருமறிந்த விடயம்.

## 23

**சி**வப்பிரகாச வித்தியாசாலையில் படிக்கும்போது, பனங்காணிகள், மணல்வெளி, குப்பைமேடு, ஊர்மனை எல்லாம் தாண்டி இரண்டு மைல் தூரம் நடை. நெல்லியடியில் படித்த போது பஸ்ஸைப் பிடிக்க ஒரு மைல், பஸ்ஸை விட்டிறங்கிச் சிறிது தூரம் நடை. இப்போது பட்டினத்திலும் நடை. அண்ணன்மாரோடு வசித்து வந்த டேவிற் றோட்டிலிருந்து குறுக்கு வழியாகப் பலாலிறோட்டுக்கு வந்து அங்கிருந்து திண்ணைவேலிச் சந்தி வரை நடந்து வந்துதான் பரமேஸ்வராவை அடைய வேண்டும். அதுவும் இரண்டு மைல் தூர நடை. நடை, நடை, நடைதான்!

கல்லூரியை வந்தடைய எப்படியும் முதலாம் பாடம் ஆரம்பமாகி விடும். ஒரு மாதிரிச் சமாளித்துக் கொண்டு போய் வகுப்பில் அமர்வான் ரவி.

சிறிது நாட்களின் பின் பஸ்ஸில் போக வழி கிடைத்தது. அதுவும் பஸ் படிப்பதற்கு அரை மைல் தூரம் நடக்க வேண்டும். இப்படி இரண்டு மாதங்கள் ரவி அடைந்த கஷ்ட நிலையை அவதானித்த தம்பிப் பிள்ளை, ஊரில் அவன் ஓடித் திரிந்த சைக்கிளை எடுப்பித்துக் கொடுத்தார். அது, அவனுக்குப் பெரும் வசதியாய் அமைந்தது. எப்படியும் வீட்டிலிருந்து புறப்பட்டால் பதினைந்து இருபது நிமிடங்களில் கல்லூரியை அடைந்துவிடுவான்.

காற்சட்டை அணிந்த மாணவர்கள் மத்தியில், வேட்டியை உடுத்திக் கொண்டிருப்பது அவனுக்கு ஒரு பாரிய மனத்தாக்கம். அத்துடன் எல்லா மாணவர்களும் சிறுவர்கள். தோற்றத்தில் வித்தியாசமானவர்கள்.

வகுப்புக்கு வந்த ஆசிரியர்கள், முதலில் ரவியை ஆச்சரியத்துடன் நோக்கி, அவனது படிப்புப் பற்றி விசாரித்து விட்டுத்தான் படிப்பிக்கத் தொடங்கினார்கள், படிப்பித்தார்கள்.

ரவிக்கு வகுப்பைத் தொடர்வது கஷ்டமாக இருந்தது. நெல்லியடியில் படித்த போது அதன் அதிபர் டொக்ரர் சிவப்பிரகாசம், தமிழ் மூலக் கல்வி கற்று எஸ்.எஸ்.ஸி. சித்தியெய்திய மாணவர்களுக்காகவே அடிப்படை ஆங்கில வகுப்பாக (பேசிக் இங்கிலிஷ் கிளாஸ்) ஆறாம் வகுப்பைத் தொடங்கி, அத்தகைய மாணவர்கள் படிக்க வாய்ப்பை ஏற்படுத்தினார். மாணவர்களும் சற்றே தயக்கமான நிலையில் கல்வியைத் தொடர்ந்தார்கள்.

ஆனால் இங்கு?

ரவி தடுமாற்ற நிலையிலேயே இயங்கி வந்தான்.

முத்துக்குமாரசாமி எனப்படும் ஆசிரியர் ஆங்கிலம் கற்பித்தார். அந்தப் பாடத்தின் போது ரவி மிகவும் தளர்ச்சி அடைந்தான். ஆங்கிலம் தான் அவனது பலஹீனம். தமிழையும் சமயத்தையும் தவிர எல்லாப் பாடங்களும் ஆங்கில மொழியில் தான் கற்பிக்கப்பட்டது. கணிதப் பாடத்தில் ஆசிரியரின் விளக்கம் அவனுக்குத் தெளிவு குறைவாயிருந்தாலும், முன்னைய விளக்கங்களின் ஆதரவுடன் ஓரளவுக்கு முன்னேற்றம் கிடைத்தது. தமிழ்ப் பாடத்தின்போது அவன் மிக உற்சாகத்துடன் இயங்கினான்.

நவநீத கிருஷ்ண பாரதியார் என்னும் தமிழறிஞர்தான் தமிழ்ப்பாட ஆசிரியர். வெண்ணெய்க் கண்ணனார் என்று அவருக்கு ஒரு சிறப்புப் பெயர். நன்கு கற்பித்தார். ஆயினும் அவரிடம் ஒரு சிறு குறைபாட்டினை ரவி உணர்ந்து கொண்டான்.

சொற்களைச் சேர்த்தெழுதும் போது, சக என்ற கூட்டல் அடையாளத்தை - மலர் சக சோலை என்பதை மலர் பிளஸ் சோலை என்பார். அதேபோல, அடிமை பிளஸ் புத்தி அடிமைப்புத்தி, குரங்கு பிளஸ் இனம் குரங்கினம், வாழை பிளஸ் பழம் வாழைப்பழம் என்றெல்லாம் சொல்லுவார். அவர் வராத நாட்களில் பாட ஓய்வு நிலையிலிருக்கும் வித்துவான் வேந்தனார் என்ற தமிழ்க்கடல் வந்து பாடம் நடத்துவார்.

ரவி பரமேஸ்வராவில் நீண்ட காலம் படிக்கவில்லை. என்றாலும் அங்கு கற்ற மிகக் குறுகிய காலத்தில் தமிழ் விற்பன்னர்களான நவநீத கிருஷ்ண பாரதியார், வித்துவான் வேந்தனார் ஆகிய இருவரதும் காற்றுப்பட்டதைப் பெரும் பெருமையாகக் கருதிக் கொண்டான்.

நெல்லியடியில் ஒன்றரை ஆண்டுகள் படித்து இடைநிறுத்திக் கொண்டபோது, அக்கல்லூரியின் அதிபர் டொக்ரர் கு.சிவப்பிரகாசம், ஆங்கிலம் கற்பித்த அரசன், அவரது துணைவியார் லீலா, தமிழ் கற்பித்த பண்டிதர் கந்தையா ஆகியோர் அவன் மனதை விட்டு நீங்காதவர்களாகினர்.

மாணவர்களில் வதிரியைச் சேர்ந்த தம்பிராசா, திவ்வியராஜன், அல்வாயைச் சேர்ந்த தணிகாசலம் ஆகியோருடன் கரவெட்டியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை, கந்தப்பு ஆகியோர் அவன் மனதில் இடம் பிடித்துக் கொண்டவர்களாவர். இவர்களில் முன்னைய மூவரும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள். பள்ளர் சமூகத்தவர்கள். மற்றைய இருவரும் வேளாள குலத்தவர். இவ்விருவரும் முன்பு கூறிய தணிகாசலமும் ஆசிரியர்களாகப் பணிபுரிந்து தலைமை ஆசிரியர்களாகப் பதவி உயர்வு பெற்றுப் பணியாற்றியவர்கள்.

கிருஷ்ணபிள்ளை யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள பாரதி பாடசாலையில் பல காலம் தலைமையாசிரியராகப் பணியாற்றினார். தமிழ் சிங்கள ஆசிரியர்கள் ஒன்றிணைந்து இயங்கிய ஜாதிக குரு சங்கமய வின் யாழ்ப்பாணக் கிளையின் தலைவராகவும் பணிபுரிந்தார்.

இவ்விடத்தில் ஒரு முக்கிய விடயத்தைக் குறிப்பிட வேண்டும். ஜாதிக குரு சங்கமய வின் தலைவராக கிருஷ்ண பிள்ளை இருந்த போதும் அதன் செயலாளராகப் பணியாற்றியவர், சகலராலும் கும் என்று அன்பாக அழைக்கப்பட்ட தும்பளையைச் சேர்ந்த தோழர் குமாரசாமி ஆவார். அவர் ஜாதிக குரு சங்கமய வின் தலைமைப் பீடத்தில் ஒரு செயற்குழு உறுப்பினராகச் செயற்பட்டு அதன் அடிப்படையில், யாழ் கிளையை அமைத்தவர்.

தும்பளையில் வாழும் வேளாள சாதியினர் மிகவும் மிதவாதப் போக்குடையவர்கள். தும்பளையை அண்டிய மிகச்சிறிய பகுதியான தட்டாதெரு என்ற இடத்தில் பிறந்து வளர்ந்தவர்தான் கும். தட்டார் இனத்தவர். தும்பளைக் கிராமத்தில் துளிர்த்து எழுந்த ஒரு இடதுசாரி கும் ஒருவர்தான். இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்காலம் வரை அக்கிராமத்தில் வேறு ஒருவராவது மனித சமுதாய வளர்ச்சிக்கான முன்னேற்றக் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளாமல் வாழ்ந்து வருவது ஆச்சரியத்துக்கு மேல் ஆச்சரியம்!

கந்தப்புவும் ஓர் ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கிப் பின்னர் தலைமையாசிரியரானார். ஆசிரியர், தலைமையாசிரியர்

என்பதல்ல அவரது சிறப்பு. படிக்கும் காலத்திலேயே அற்புதமான கவிதைகள் எழுதி பிற்காலத்தில் புகழ் பூத்த கவிஞராக மிளிரத் தொடங்கினார். மன்னவன் என்ற பெயரிலேயே அவர் கவிதைகள் யாத்தார். பெயரிலேயே கவித்துவம், கவிதை பொழிவதில் மன்னவனேதான்! புரட்சிகரமான கருத்துக்களைக் கவிதைகள் மூலம் வெளிப்படுத்தினார். என்றாலும் தமிழ்ச் சமுதாயத்தை அண்டியதாகவே அவர் கவிதைகள் இருந்தன. இளம் வயதில் அவரது கவியாற்றலைப் பலரும் பாராட்டி இவன் ஒரு 'மன்னவன்' என்று முடிசூட்ட, அந்தப் பெயரே இயல்பாய் அமைந்துவிட்டது.

## 24

வீட்டில தேத்தண்ணி வைப்பதற்குச் சீனி தேயிலை முடிந்து விட்டால் வள்ளியம்மை, இராசனைக் கடைக்கனுப்பித்தான் அவைகளை வாங்குவாள். அநேகமாக இந்த வேலை, மாலை வேளைகளில் தான் நடைபெறும். இராசன் கையில் நாலைந்து சதத்தைக் கொடுத்து, ''கால் றாத்தல் சீனியும் இரண்டு சதத்துக்குத் தேயிலையும் வாங்கி வா!'' என்று அவனை அனுப்புவாள். அவனும் போய் வாங்கி வருவான். கால் மைல் தூரத்துக்கு நடைதான்.

ஊரில் தொழில் பார்த்துக் கொண்டிருந்த இராசனின் அண்ணன் அப்போது ஒரு சைக்கிள் வாங்கி ஓடிக் கொண்டிருந்தார். கள்ளுச் சீவுகிற நேரம் தவிர மற்றைய நேரங்களில் ரவுணுக்குப் போய் ஏதாவது சாமான்கள் வாங்கி வருவது, சிநேகிதரிடம் போவது இப்படியான பயணங்கள். வராத்துப்பளையில் முதன்முதல் சைக்கிள் வாங்கியது தம்பிப் பிள்ளைதான். மாலை வேளைகளில் அவர் கள்ளுச்சீவப் போக, சைக்கிள் ஒரு பக்கத்தில் சும்மா கிடக்கும். இராசன் ஏழு எட்டாம் வகுப்புப் படிக்கிற காலம். அம்மாக்காரி கடைக்குப் போய் சீனி தேயிலை வாங்கிவரச் சொல்ல, சும்மா கிடக்கிற சைக்கிளைப் பார்த்து மனதில் ஒரு எழுச்சி ஏற்பட, 'அந்தச் சைக்கிளை எடுத்துத் தான் ஏன் பழகக் கூடாது' என்ற எண்ணம் மனதில் உதித்தது.

அம்மா கொடுத்த காசைக் கையில் பிடித்தபடி சைக்கிளை எடுத்து றோட்டுக்குக் கொண்டு வந்து, இடது காலைப் பெடலில் வைத்து தத்தித் தத்தித் தத்தி அதில் ஏற முனைவான். ஒரே தத்தல்தான். இப்படியே வடிவேலுவின் கடை வரை எத்தி எத்தி எத்திப் போய் கடைக்கு ஒரு இருபது முப்பது யார் தூரம் இருக்கும் போதுதான், மற்றக் காலை பாருக்கப்பால் வைத்து சீற்றில் உட்காருவான். சைக்கிள் கடைக்கு வந்துவிடும். உடனே பிறேக்கைப் பிடித்து தொப்பெனக் குதித்து இறங்குவான். சைக்கிளை ஒரு பக்கத்தில் சார்த்தி வைத்து விட்டு, கடையில் சீனியை அல்லது இரண்டையும் வாங்குவான்.

அந்தச் சரைகளைக் கையில் பிடித்தபடியே சைக்கிளை எடுத்து மறுபடியும் தத்தலும் எத்தலுமாக வந்து, வீடு நெருங்கியதும்தான் அதில் ஏறி உட்கார்ந்து இரண்டு உளக்கு உளக்கிப் பின், பொத்தென்று குதித்து இறங்குவான். இந்தக் கஷ்டத்தின் மத்தியிலும் நிதானம், கையிலுள்ள சரைகளை ஒருநாளும் பிய்ந்து கொட்டுப்பட்டதில்லை.

இப்படியே ஒருவரது உதவியுமில்லாமல் மாதக்கணக்கில் தானாகவே சைக்கிள் ஓடப் பழகி விட்டான்.

பின்னாளில் அவன் நெல்லியடியில் படிக்கும் போது அவனுக்குச் சொந்தமாக ஒரு சைக்கிள் கிடைத்தது. அண்ணா வாங்கிக் கொடுத்தது. நெல்லியடிப் பாடசாலைக்குப் போய் வருவதோடு, பருத்தித் துறை ரவுணுக்கும் அதில் போய் வரத் தொடங்கினான்.

சைக்கிள் சில்லில் ஏதாவது முள்ளுக் குத்தி அல்லது கல்லுப் பொத்தி, காற்றுப் போய்விட்டால் ரியூப் பைக் கழற்றி ஒட்டுப் போட வேண்டும். தம்பிப் பிள்ளை அப்போது ஊரைவிட்டகன்று வேறு இடங்களில் தொழில் புரிந்து கொண்டிருந்தார். அதனால் ரியூப்பை ஒட்டிக் கொடுக்க ஆளில்லை. ரவி வீட்டிலிருந்து இரண்டு மைல் தூரத்துக்கப்பால் பருத்தித்துறையிலுள்ள சைக்கிள் திருத்தும் கடைக்கு, காற்றுப் போன சைக்கிளை உருட்டிக் கொண்டு போவான். பருத்தித்துறைப் பிரதான வீதியில் சந்தைக்குத் தென் பக்கமாக, மருதடிப் பிளைளையார் கோயிலுக்கு அப்பால் உள்ள சைக்கிள் கடைக்கு, காற்றுப் போன சைக்கிளை உருட்டிக்கொண்டு போவான். நவரத்தினம் எனப்படும் ஒரு நல்ல மனிதர் அந்தக் கடையை நடத்திக் கொண்டிருந்தார். சற்று உயரமும் மெலிவான உடற்கட்டுமுள்ள மனிதர். எவருடனும் அன்பாக நடந்து கொள்ளும் இனிய குணம் படைத்தவர். பாரிய திருத்த வேலைகளுக்காக வந்திருக்கும் சைக்கிள்களைச் சுணக்கி வைத்து, ஒட்டு வேலையை உடனடியாகச் செய்து கொடுப்பார். 15 சதம்தான் ஒரு ஒட்டுக்கூலி. இப்படியே ஒட்டு வேலைக்கு மட்டுமல்லாமல், சைக்கிள் வால்வ் ரியூப் வெடித்துப் பழுதானாலும், சைக்கிளை வீட்டிலிருந்து உருட்டி வந்து, நவரத்தினம் கடையில் அதனை வாங்கிப் பொருத்திக் காற்றடித்தபின்தான் ஓட்டம்.

இப்படி நாலைந்து மாதம் உருட்டித் திரிய, ரியூப் ஒட்டுவதற்கு சொலுஷன் பைக்கற் வாங்கி, கடையில் சிறு ரியூப் துண்டும் பெற்றுக் கொண்டால், வீட்டில் அந்த வேலையைத் தானே செய்யலாம் என்ற எண்ணம் உதயமாயிற்று. அதே போல வால்வ் ரியூப் துண்டுகளும்

வாங்கி வைத்திருந்தால் அதையும் பயன்படுத்தலாம் என்ற எண்ணமும் வந்தது.

உண்மைதான்! ஆனால் காற்றடிப்பதற்கு 'பம்ப்' ஒன்றில்லாமல் எதுவும் செய்ய முடியாதே! மனம் தளர்ச்சியுறாமல் கொஞ்சப் பணம் தேடி கையால் அடிக்கிற பம்ப் ஒன்று வாங்கிக் கொண்டான். ஒட்டையை ஒட்டிக் காற்றடிக்க முடிந்தது. கையோடு சைக்கிள் சுழற்றுகிற சாவி, குறடு போன்ற சில ஆயுதங்களையும் வாங்கி, காலப்போக்கில் சைக்கிளில் ஏற்படுகின்ற சில பிழைகளைத் திருத்தப் பழகிக் கொண்டதுடன், அதனை முழுமையாகக் கழற்றிக் கழுவிப் பூட்டவும் பழகிக் கொண்டான்.

பின்னர் பெரியவனாய் வளர்ந்து ஆசிரியத் தொழில் புரியும் காலம் வரை, கையில் காசில்லாமல் உழன்று கொண்டிருந்த போதும், யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இலக்கியக் கூட்டங்கள், வாலிபர் சங்கக் கூட்டங்கள், கம்யூனிஸ்ட் கட்சிக் கூட்டங்கள் யாவற்றுக்கும் பருத்தித் துறையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு இருபது மைல்களுக்கு மேல் சைக்கிளிலும் போய் வந்து கொண்டிருந்தான்.

## 25

நெல்லியடியில் படிக்கும்போது ரவியின் அண்ணன் வாங்கிக் கொடுத்த சைக்கிள், இப்போது யாழ்ப்பாணம் வந்து விட்டது. பரமேஸ்வராக் கல்லூரிக்குப் போய் வரப் பயன்பட்ட சைக்கிள், ரவியின் வாழ்க்கைப் பயணத்தைத் திசை திருப்புவதிலும் தன் பங்கினைச் செலுத்தியது.

அவனுடைய சின்னண்ணன் செல்லத்துரை, கள் இறக்கும் தொழில் முடிந்து, கள்ளை விற்பனை செய்யும் பொறுப்பை அண்ணனிடம் கொடுத்துவிட்டு, இருப்பிடத்துக்கு வந்து மத்தியானத்துக்குரிய சமையல் செய்து சாப்பிட்டு விட்டு தமையன் தம்பிப் பிள்ளையை சாப்பாட்டிற்கு அனுப்புவதற்காக-- ரவியை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார். ரவி பாடசாலையிலிருந்து வந்ததும், அவனைச் சாப்பிடச் சொல்லிவிட்டுக் கள்ளுக் கொட்டிலை நோக்கிப் போவார். அவர் போன கையுடன் தம்பிப் பிள்ளை வந்து உணவருந்தி விட்டுச் சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொள்ளுவார்.

ரவியும் சிறிதுநேரம் படுத்துக் கிடப்பான். பின் எழுந்து பாடசாலைப் புத்தகங்களைப் புரட்டுவான். அல்லது எழுதுவான். எப்படியும் பொழுதைப் போக்காட்டுவது கஷ்டம். சிறிது பொழுது கழிந்ததும் எழுந்து கள்ளுக் கொட்டிலுக்குப் புறப்பட்டு விடுவான். சைக்கிள் இருக்கவே இருக்கிறதே! அங்கே கள்ளுக் குடித்துக் கொண்டு பலதும் பத்தும் கதைத்துக் கொண்டிருப்பவர்கள், அவனது படிப்புப் பற்றிக் கலந்துரையாடுவார்கள். அவ்வேளைகளில் அவன் அவர்களுக்குக் கள் தேவைப்பட்டால், கள் அளந்து கொடுப்பான். காலப் போக்கில், மாலை வேளையில் இங்கு கள் விற்பது ரவியின் பொறுப்பாயிற்று. அண்ணன்மாருக்கு அது பெரும் ஆறுதல்...

அவர்களது கள்ளுக்கொட்டில் அமைந்திருப்பது கடலோரப் பகுதி.- ஒதுக்கமான இடம். அந்த இடத்தை விட பட்டினத்தில் ஜன நெருக்கமான இடத்தில் தம்பிமுத்து என்பவர் கள்ளுக்கடை நடத்தி வந்தார். பெருமளவிலான வியாபாரம். உத்திராவத்தையில்

பிறந்து வளர்ந்து, யாழ் பலாலிறோட்டில் சின்னப்பரின் மகளைக் கலியாணம் முடித்தவர். அதனால் தம்பிப்பிள்ளை தன்னிடத்தில் மிஞ்சிப் போயிருக்கும் கள்ளினை முட்டியில் அல்லது சிறிய பானையில் ஊற்றி, அதை ரவியிடம் கொடுத்து, தம்பிமுத்துவிடம் கொடுத்து விட்டு வரச் சொல்லுவார். ரவி, சைக்கிளில் அதை எடுத்துச் சென்று கொடுத்து விட்டு வருவான். பரமேஸ்வராவில் படிக்கும் மாணவர்கள் யாராவது வழியில் எதிர்ப்பட்டால், தான் காணாதது மாதிரிச் சைக்கிளை ஓட்டுவான். இந்தக் காலமாயிருந்தால் ஒரு பிளாஸ்டிக் குடுக்கையில் எடுத்துச் செல்லலாம்.

இப்படியே பரமேஸ்வராவில் படிப்பும், பட்டினத்தில் கள்ளுத் தொழிலுமாக... அவன் வாழ்க்கை தடுமாறிக் கொண்டிருந்தது. ஆங்கில பாடத்தில் அவன் அடைந்த பின்னடைவு இத்தடுமாற்றத்தை மேலும் அழுத்தி ஒரு முடிவைக் கொண்டு வந்தது.

ரவி பாடசாலைக்குச் செல்வதை நிறுத்திக் கொண்டான். கள் விற்கும் பணியைத் தன் முழுநேர வேலையாகச் செய்து கொண்டிருந்தான்.

தம்பிப்பிள்ளையின் பாடு மிகவும் சங்கடமாயிருந்தது.

ஊரில் படிப்பைக் குழப்பியிருந்தவனை, சிரமப்பட்டுப் பட்டினத்துக்குக் கூப்பிட்டுப் படிக்க வைத்தால், அவன் படிப்பான் என்ற எதிர்பார்ப்பு பெரும் ஏமாற்றமாய் அமைந்தது. ரவி, கள்ளு விற்றுக் கொண்டிருக்கிறான். -

பிறந்து வளர்ந்த ஊரில் அந்தத் தொழிலில் ஈடுபட்டால், அநதச் சமூகமே அத் தொழிலில் தான் தங்கி வாழ்கிறது என்ற அடிப்படையில், அது பிரச்சினை இல்லை. ஆனால், படிக்க வென்று இங்கு வந்து, அவன் கள்ளு விற்றுக் கொண்டிருந்தால்... நினைத்தது என்ன? நடப்பது என்ன?

பட்டினத்தில் ரவி, கள்ளுக்கொட்டிலில் வேலை செய்து கொண்டிருப்பதனால், தனக்கும் தம்பி செல்லத்துரைக்கும் பெரும் ஆறுதலாயிருக்கிறது என்பது உண்மைதான். ''கஷ்டம் அனுபவிக்காமல் பணத்தைத் தேட முடியுமா? படிப்பதற்கு வந்தவன் எங்களுக்கு உதவி செய்து தன் வாழ்வைக் கெடுத்துக் கொள்வதா?'' என்றெல்லாம் தம்பிப் பிள்ளை சிந்திக்கத் தொடங்கினார். இந்தச் சீரற்ற நிலைமைக்கு, ரவி படிப்பில் பின்னடைவு கொண்டதும் ஒரு முக்கிய காரணம்தான். அடிப்படைக் கல்வி ஆங்கிலத்தில்

அமையாததால் அப்படி ஏற்பட்டு விட்டது என்பதை அவர் ஏற்றுக் கொண்டார்.

இனி...?

ரவிக்கு வேறுவழியில் வாழ்க்கைப் பயணத்தை ஏற்படுத்திக் கொடுக்க அவர் மனம் தவித்தது.

யாழ்ப்பாணப் பட்டினத்தில் இரண்டாம் குறுக்குத் தெருவும் சப்பல் வீதியும் சந்திக்குமிடத்தில், தென் கிழக்குப் பக்க மூலையில், ஒரு சிறிய இடத்தில் தகரத்தால் ஆக்கப்பட்டு நடத்தப்பட்ட ஒரு சிறிய கடை மூடப்பட்டுக் கிடந்தது. எப்படியும் பன்னிரண்டு அடிநீளம் ஆறு அடி அகலம்தான் அதன் விஸ்தீரணம். கூரையும், பக்க மறைப்புக்களும் தகரத்தால் ஆக்கப்பட்ட கடை வாசலால் உட்புகுந்து முன்பக்கம் உள்ள தட்டியை உயர்த்தி முண்டு கொடுத்து விட்டுத் தான் வியாபாரம் செய்ய வேண்டும்.

தம்பிப்பிள்ளை அக்கடையின் உரிமையாளரைச் சந்தித்து அதை வாடகைக்குப் பேசி எடுத்துக் கொண்டார். அதில் ரவியை அமர்த்திக் கடை நடத்துவதாக ஏற்பாடு.

பெரிய கடை அல்ல. தளபாடங்களும் அளவாகவே இருந்தன. பட்டினத்திலுள்ள பெரிய கடைகளில் சாமான்கள் வாங்கி, சைக்கிளில் கொண்டுவந்து சேர்த்து, அவற்றை ஒழுங்குபடுத்தி வைத்து வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டது.

நடுத்தர மக்கள் வசிக்கும் பகுதி அது. அன்றாடம் காய்ச்சிகள் அவ்வப்போது கிடைக்கும் பணத்திற்கு தேவையான பண்டங்களை கொஞ்சம் கொஞ்சமாக வாங்கித்தான் வாழ்க்கையை ஓட்டுவார்கள். நடுத்தர மக்கள், சில நாட்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கி வைத்துச் சீவிப்பார்கள். அதனால் அவர்கள் பெரிய கடைச்சந்தையிலிருந்து தங்களுக்குத் தேவையான சாமான்களை வாங்கிவந்து விடுவார்கள். தற்செயலாக ஏதாவதொன்றிரண்டு சாமான்கள் மட்டும் இல்லாமற் போனால் அந்தக் கடைக்கு வருவார்கள்.

அரிசி, மா, சீனி, தேயிலை, கிழங்கு, பாண் போன்ற சில வகைப் பொருட்களுடன் பொதி செய்யப்பட்ட சில சாமான்களும் விற்கப்படும் கடை வியாபாரம் வலு குறைவு.

கடைக்கு நேரெதிரே எஸ்ரியார் அன் கொம்பனி என்ற பெயரில் ஒரு பஸ் கொம்பனி இயங்கி வந்தது. நாலைந்து பஸ்களுக்குரித்தான கொம்பனி. மிகவும் விசாலமான மண்டபம். சுற்றுலா, கோவில் பிரயாணம், பாடசாலை விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் என்று பலர் கூட்டாகப் பயணம் செய்வதற்கு வாகன ஏற்பாட்டுக்கு அங்குதான் வருவார்கள். அத்துடன் பஸ், லொறி, கார்கள் திருத்தும் வேலையும் அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது.

கடையிலிருந்து ஒரு கூப்பிடு தொலைவில்தான் யாழ் மத்திய கல்லூரி அமைந்திருந்தது. மதிய இடைவேளையின் போது, மாணவர்கள் கடைக்கு வந்து சிகரட் வாங்கிப் புகைப்பார்கள். ஜெயரட்ண சிங்கம் என்னும் மாணவர் இவர்களுள் முக்கியமானவர். இரண்டாம் குறுக்குத் தெருவில் இவர் வீடு. அடிக்கடி வந்து ரவியுடன் அளவளாவிப் போவார். வேம்படி மகளிர் கல்லூரியில் படிப்பித்து பின்னர் அங்கு உப அதிபராகப் பணியாற்றிய மிஸ் வடிவேலு என்பவர் ஜெயரட்ண சிங்கத்தின் அக்கா ஆவார். ஜெயரட்ண சிங்கம் எஸ்.எஸ்.ஸி. பாஸ் பண்ணியதும் அரபு நாடொன்றுக்குச் சென்று அங்கு தொழில் புரிந்தார். அவரது முழு வாழ்வும் அந்த நாட்டிலேயே இணைந்தது.

கடையில் வியாபாரம் இல்லாமையால் அது நட்டத்தில் ஓடிக் கொண்டிருந்தது. அதனால் தம்பிப்பிள்ளை கடையை விற்று விட்டார். கடையை வாங்கியது சந்தா தோட்டத்தைச் சேர்ந்தவரும், நிறங்களில் ஒரு நிறத்தைப் பட்டப் பெயராகக் கொண்டவருமான ஓர் இளைஞராவார்.

ரவி கடையிலிருந்து விடுபட்டதும் ஒரு மாத காலம் அண்ணன்மாருடனேயே இருந்துவிட்டுப் பருத்தித் துறை போய்ச் சேர்ந்தான். அந்த இடைவேளையின் போது அக்கடையில் ஒரு விபரீதம் நடந்தது.

•

கடைக்கு ஏதோ சாமான் வாங்க வந்த ஓர் இளம்பெண் பிள்ளையைக் கடைக்காரர் பாலியல் வன்முறைக்காளாக்கி விட்டார். கடைக்கு வந்த பிள்ளைக்கு ஏதோ இனிப்புப் பண்டத்தைக் காட்டி உள்ளே அழைத்து, படாரென்று கடைக்கதவையும் தட்டியையும் மூடி விட்டதை முன் கராஜ்ஜிலிருந்தவர்கள் அவதானித்திருக்க் வேண்டும். பொலிசுக்கு அறிவித்து விட்டார்கள். பொலிஸ் நிலையமும் வெகு அருகில்தான் இருந்தது.

உடனடியாக அங்குவந்த பொலிஸ்காரர்கள் படபடவென்று கதவைத் தட்டினார்கள். என்ன கதி? சில நிமிஷங்களின் பின்னர்தான் கதவு திறந்தது. உள்ளே கடைக்காரர் மட்டும் தான் காணப்பட்டார். பொலிஸ்காரரின் பணி யாது? அவர்கள் உள் நுழைந்து, மேசையின் கீழும் மூலை முடுக்குகளிலும் தடவினார்கள். கடைசியில் சாக்கொன்றினால் மூடிக்கிடந்த பாண் பெட்டியைத் திறந்து பார்த்தால்...?

உள்ளே சிறுமி முடங்கிப் போய் கிடந்தாள்!

பிறகு என்ன நடந்திருக்கும்?

பொலீஸ், கடைக்காரரைக் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு போனார்களோ... அல்லது கடையில் வைத்தே கப்பப் பணத்தைப் பெற்றுக் கொண்டு போனார்களோ தெரியாது. அவருக்கு விடுதலை கிடைத்தது. ஆனால் கடையை ஆறுமாதம் வரை நடத்திக் கொண்டிருந்த ரவிக்குத்தான் அந்த அவப்பெயர் விழுந்தது.

அந்தச் சுமையை இலேசாகத் தட்டிக் கொண்ட ரவி, தான் பிறந்த மண்ணுக்குப் போய்ச் சேர்ந்தான்.

## 26

ரவி பிறந்து வளர்ந்து, தன் சக்திக்கேற்ற வரை படித்து ஓர் அரை மனிதனாகி விட்ட அவனது பனஞ்சோலைக் கிராமமான வராத்துப்பளையைப் பற்றியும், சிறு வயது முதல் அவன் நடமாடித் திரிந்த அயற் கிராமங்களைப் பற்றியும் நாம் அறிந்துகொள்ள முடியும்.

முதலில் அவனது பனஞ்சோலைக் கிராமத்தைப் பற்றி...

றோட்டுக்கு மேற்குப் பக்கமாக நான்கு வீடுகள். அவை நான்கும் றோட்டோரமாக. அதே போல் கிழக்குப் பக்கமாகவும் நான்கு வீடுகள் றோட்டோரமாக. மேலும் பன்னிரண்டு வீடுகள். அவை அனைத்தும் கிழக்குப் பக்கமாக ஒரு கால் மைல் சுற்று வட்டத்துக்குள். மொத்தமான இருபது வீடுகளுக்குள்ளும் இருபத்தி நான்கு இருபத்தைந்து குடும்பங்கள். அவ்வளவுதான்!

ஒன்றிரண்டு குடும்பத்தவர்கள், கரை வலை இழுக்கச் செல்ல மற்றையோர் அனைவரும் பனை ஏறும் தொழில்தான். எல்லா வீடுகளிலுமுள்ள வளரிளம் பருவத்து இளைஞர்களும் சின்னச் சின்ன வேலைகள் செய்து பழகி பதினெட்டு இருபது வயது வாலிபர்களானதும் எல்லா வேலைகளும் செய்யத் தொடங்கி விடுவார்கள். அவர்களில் ஒன்றிரண்டு பேர் கரை வலைக்குப் போக அநேகமானோர் பனை ஏறத் தொடங்கி விடுவார்கள்.

இளம் பெண்களிலிருந்து வயது வந்த பெண்கள் உட்பட அனைவரும் சதா இயங்கிக் கொண்டே இருப்பார்கள். கருப்பநீர் இறக்கும் வீடுகளில், கருப்பணிக் கொட்டில் என்று ஒரு பெரிய கொட்டில் அமைந்திருப்பார்கள். பெரிய அடுப்புகள் உருவாக்கி அவற்றில் கருப்ப நீர் காய்ச்சுவார்கள். ஒற்றை அடுப்புகள் அல்ல. இரட்டை அடுப்புகள், மூன்றடுப்புகள் என்று விசாலமான அடுப்புகள். பத்துப் பத்தரை மணிக்கு அடுப்புகளை மூட்டி பெரிய பானைகளில் கருப்பநீர் காய்ச்சத் தொடங்கினால், மாலை நாலு

ஐந்து மணி வரை காய்ந்துதான் அது பாணியாகும். பனையிலிருந்து கிடைக்கிற விறகுகள் கருப்பணி காய்ச்ச ஒத்து வராது. ஜுவாலை காணாது. அதனால், குடத்தனை, அம்பன் போன்ற இடங்களிலிருந்து வண்டில்களில் விற்பனைக்காக வரும் காட்டு மரவிறகுகளை வாங்கி எரிப்பார்கள்.

இந்த வீடுகளில் மூடல், பெட்டி இளைப்பது நித்திய தொழிலாகும். பனை மரங்களிலிருந்து குருத்தோலை வெட்டிக் காய வைத்து சத்தகத்தால் வார்ந்தெடுத்து மூடல் பெட்டிகள் இளைப்பார்கள். கடைகளில், பச்சை, நீலம்,சிவப்பு என்று சாயத் தூள்களை வாங்கி, நீரில் கரைத்து அவற்றில் வார்ந்த ஓலைகளை அவித்துக் காய வைத்தால், அந்தச் சாய ஓலைகள் பளிச்சிடும். அந்தச் சாய ஓலைகளால் மூடல் பெட்டிகளுக்கு வடிவடையாளங்கள் பொத்தி, பருத்தித் துறைச் சந்தைக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்வார்கள். கருப்பநீர் காய்ச்சுகிறவர்கள், பாணியைக் காய்ச்சிப் பனங்கட்டி செய்து அவற்றையும் எடுத்துச் சென்று விற்று, வீட்டுக்குத் தேவையான சாமான்களை வாங்கி வருவார்கள்.

சிறிய அளவில் மூடல் பெட்டி இளைப்பவர்களும், பனங்கட்டி செய்பவர்களும் அருகில் உள்ள கற்கோவளம் சந்தைக்குக் கொண்டு சென்று விற்று, சமையலுக்கான அரிசி, மீன், மரக்கறி வகை, தேங்காய் போன்றவற்றை வாங்கி வருவார்கள்.

மொத்தத்தில் கிராமம் முழுவதும், தற்பிழைப்பில் தங்கியிருக்கும் கிராமமாகும். இந்தத் தற் பிழைப்புக்குப் பனைமரமே மூலவளமாகும்.

வாடிக்கையாளரை முகமலர்ச்சியுடன் வரவேற்றல், அவர்களை அன்பாக உபசரித்தல், அவர்களின் தொழில்துறை, குடும்ப நலன்களை விசாரித்தல் போன்றவற்றில் கரிசனை காட்டுதல் போன்றவை எந்த வியாபாரத்தையும் மேலோங்கச் செய்யும் என்பது பொது விதி. கள் விற்பவர்களுக்கும் இது பொருந்தும். கள்ளுக் குடிக்க வருபவர்கள் ஆறுதலாக உட்கார்ந்து கதைத்துப் பேச வசதியுள்ள வீடுகளில் வியாபாரம் அதிகமாகும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய உண்மையாகும். கந்தப்பர் வீட்டுக் குசினியோடிணைந்து சற்று உயரமானதும் நீளமானதுமான ஒரு திண்ணை இருக்கிறது. குடிகாரர்கள் அதில் வந்து அமர்ந்து கதைத்துப் பேசிக் கொண்டு கள் அருந்துவார்கள். கள்ளுப் பிளாவைத் திருகணையில் வைத்து விட்டுப் பலதும் பத்தும் கதைப்பார்கள். கந்தப்பரும் வள்ளியம்மையும் வீட்டு

முகப்பில் இருந்து அவர்களைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் கேட்கும்போது கள் அளந்து கொடுக்க வேண்டும்.

இவ்வாறே கள்ளு விற்கிற வீடுகளில், வாடிக்கையாளர் வந்து கள் அருந்தும் போது, வீட்டுக்காரர் அவர்களில் அக்கறை செலுத்திக் கொண்டிருப்பார்கள்.

கிராமத்தின் கிழக்கோரமாக, மணல் வெளியை அண்டினாற் போல இரண்டு வீடுகளில் வசிப்பவர்கள் சலவைத் தொழிலாளர்கள். அவ்விரு குடும்பத்தவர்களும் வராத்துப்பளையிலுள்ள மற்றைய சமூகத்தவர்களுக்கு மட்டும் சலவைத் தொழில் செய்து சீவிக்க முடியாது. அடுத்தடுத்த கிராமங்களிலுள்ள நளவ சமூகத்தவர்களுக்கும் பறைய தெருவில் வசிக்கும் பறையர்களுக்கும் தொழில் செய்து தமது சீவியத்தை ஓட்டிக் கொள்வார்கள்.

இரு குடும்பத்தவர்களும் கத்தோலிக்கர்கள். ஒருவருக்குப் பெயர் அருளப்பு. வெள்ளைக்காரனைப் போன்று வெள்ளை வெளேரென்று நிறம். அதனால் அனைவராலும் அவர், வெள்ளையன் என்றே அழைக்கப்பட்டார். நான்கு பெண் பிள்ளைகள். அனைவரும் சுத்தமாக உடை அணிவார்கள். மற்ற சலவைத் தொழிலாளிக்கு சின்னத்தம்பி என்று பெயர். அவருக்கு ஆண்களும் பெண்களுமாக நாலைந்து பிள்ளைகள். அவருடைய வாழ்க்கைத் தரம் பின்னடைந்திருந்தது. இரு குடும்பத்தவருக்கிடையிலும் அவ்வளவு நல்லுறவு இல்லை. அதனால், சின்னத் தம்பி வீட்டையண்டி மணியகாரன் தோண்டிக் கட்டிய கிணற்றைப் பாவிக்காமல், வெள்ளையர் தன் வீட்டுக் காணிக்குள் ஒரு கிணற்றை வெட்டினார். சலவைத் தொழில் செய்வதற்குக் கிணறு இல்லாமல் முடியுமா? ஞாயிற்றுக்கிழமைகளில் வெள்ளையர் குடும்பம் நன்றாக உடுத்திக் கொண்டு இரண்டு மைல் தொலைவிலுள்ள லூர்து மாதா கோவிலுக்குத் தவறாமல் போய் வணங்கி வருவார்கள். சின்னத் தம்பியின் குடும்பத்தினர் அவ்வளவு அக்கறையோடு கோயிலுக்குச் செல்வதில்லை. ஏதாவது முக்கிய நிகழ்வுகள் கொண்டாட்டங்களுக்குப் போய் வருவார்கள்.

இவற்றுடன் இணைந்த இன்னுமொரு தகவல் இருக்கின்றது. வராத்துப்பளையிலிருந்து ஒருமைல் தூரத்துக்கப்பால் எழுந்தருளியிருக்கும் வல்லிபுர ஆழ்வார் கோயிலுக்கும் அப்பால் இருக்கும் வலிக்கண்டி என்னும் சிறு கிராமத்திலிருக்கும் மரியம்மா என்னும் சலவைத் தொழிலாளப் பெண்ணொருத்தி அங்கிருந்து வந்து, வராத்துப்பளையிலுள்ள ரவி வீட்டாருக்கும், ரவியினுடைய

சின்னம்மா - மாமா வீட்டார்களுக்கும் சலவைத் தொழில் செய்து வந்தாள். சிலவேளையில் இந்தத் தொழிலாளரும் இக்கிராமத்தில் வசித்துப் பின்னர் அங்கு போனார்களோ தெரியாது.

மரியம்மா தொழில் புரியும் இந்த வீடுகளில், கலியாண வைபவம், மரணச் சடங்குகள் என்று ஏதாவது நிகழ்ந்தால், அந்தப் பெண்ணுடைய கணவன், தம்பி ஆகியோர் வந்து வெள்ளை கட்டி, பாடை கட்டி, தங்கள் பணிவிடையைச் செய்வார்கள்.

ரவி தும்பளையில் படித்த போது வெறும் மேலுடன் தான் போய் வருவான் என்று முன்னர் அறிந்திருந்தோம். நெல்லியடியில் படித்தபோது சேட் அணியத் தொடங்கி விட்டான். இரண்டு வேட்டி இரண்டு சேட் தான் உள்ள உடுப்புகள். ஒரு சோடி அவனிடமிருந்தால், மற்றச் சோடி வண்ணாத்தியிடமிருக்கும். பள்ளிக்கூடத்தில் ஏதாவது விசேட நிகழ்ச்சி நடைபெறுமாயின், ரவி வலிக்கண்டிக்கு நடந்து போய் தன் வேட்டியையும் சேட்டையும் வாங்கி வருவான். தங்கையாருக்கும் ஏதாவது விசேட நிகழ்ச்சியின் பொருட்டு சட்டை தேவைப்படின் அவனே போய் வாங்கி வருவான்.

வெள்ளையர் வீட்டுக்கு முன்பாக ஒரு பெரிய சடைத்த புளியமரம் நின்றது. பத்துப் பேர் கை அகட்டி நின்று கட்டிப் பிடித்தாலும் அடங்காத அளவு பருத்த மரம். கிளைகள் பரப்பிய அதன் எல்லை, எப்படியும் ஒரு பரப்புச் சுற்றளவுக்கு மேல் விசாலமானது. எப்படியும் 200 வருட வயது எல்லையைத் தாண்டியிருக்கும். ரவியின் மாமா மாணிக்கத்துக்குச் சொந்தமான குஞ்சி வளவுக் காணியின் ஓரத்தில் அது நிற்கின்றது. உரிய காலத்தில் அது பூத்துக் காய்த்துப் பழுக்கும் போது மாணிக்கம் நாலைந்து கூலியாட்களைப் பிடித்து, பழங்களைப் பறித்து எட்டுப் பத்துச் சாக்குகளில் நிரப்பி, வீட்டுக் கொடுத்துச் சென்று கோதுகளை அகற்றிக் காய வைத்து விற்பனை செய்வார். அது ஒரு பக்கம் இருக்க, ஊரிலுள்ளவர்கள், கறிக்குப் புளி தேவைப்படும் போது, புளியடிக்கு வந்து, கீழே விழுந்திருக்கும் பழங்களைப் பொறுக்கி எடுத்துச் செல்வார்கள். கீழே இல்லாவிட்டால், ஒரு கல்லை எடுத்து எறிய, பழங்கள் பொல பொலவென்று விழும். விட்டு விசாலித்து வளர்ந்து காய்த்துக் கொட்டுவதால், அந்தப் புளியமரம் ஒரு கொடைவள்ளல். அதன் உரிமையாளர் மாணிக்கமும் தன்னையறியாமலே ஒரு கொடை வள்ளல்.

இந்தப் புளிய மரத்துக்கு வடதுபுறத்தில் ஒரு நூறு யார் தூரத்தில் ஆழ்வார் வீடு இருக்கிறது. அவரது வீட்டின் பின்பக்கமாக நன்றாகச் சடைத்து வளர்ந்த ஒரு மாமரம் நிற்கிறது. அதுவும் உரிய காலத்தில் நிறையக் காய்த்துப் பலன் தரும். மரத்தின் ஒரு பக்கத்தில் மாணிக்கத்தாரின் வீட்டோடு அண்டிய வெறும் காணி. மாமரம் கிளைகளின் அரைவாசிப் பகுதியை, அந்தக் காணிக்குள் பரப்பியிருந்தது. வீட்டுக்குப் பக்கத்தில் பிரதானமான ஒழுங்கை. அந்த ஒழுங்கைக்கு மேலாகப் பாய்ந்து பக்கத்திலுள்ள நாராயணி வீட்டையும் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தன கொப்புகள். விசேடமான மாங்காயல்ல. சாதாரண கறிமாங்காய்தான். என்றாலும் மாணிக்கர் வீட்டாரும், நாராயணி வீட்டாரும் ஒழுங்கையால் போவோர் வருவோரும் கல்லை வீசி, கறிக்கோ கடித்துத் தின்னவோ காய்களைப் பறிக்கும் போது வில்லங்கம் தொடங்கிவிடும். மாணிக்கத்தாரோடும், நாராயணியோடும் ஆழ்வாருக்கு எப்போதும் தகராறுதான். புளியமரத்தோடு பிரச்சினை இல்லை. ஒரு நாளைக்கு நாலு கொட்டை புளிபோதும் சமையலுக்கு. மாங்காய்? கறிக்கு வேணும். கடித்துத் தின்ன சிறியவர்களுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும் வேணும். அதனால் ஆழ்வாரை அந்தப் பழி சாராது. மாமரத்துக்குத் தான் அது உரியது. எல்லாவற்றுக்கும் மேலாக ஆழ்வாரை அனைவரும் மாவடி ஆழ்வான் என்றே குறிப்பிடுவார்கள்.

## 27

**பா**டசாலை விட்டு வந்ததும் சாப்பிட்டு விட்டுச் சிறிது நேரம் ஓய்வெடுத்து விட்டு, பின்னேர வேளையில் இராசன் தனது தூரத்து உறவினரான நாகப்பர் வீட்டுக்குச் செல்வான். நாகப்பரும் மூத்த மக்களும் கள்ளுச் சீவப் போய் விடுவார்கள். இளைய மகன் பொன்னுத்துரையும் அம்மாக்காரியும் தான் வீட்டிலிருப்பார்கள். பொன்னுத்துரையை ஐந்தாம் வகுப்புடன் நிறுத்தி விட்டார்கள். வீட்டிலே அம்மாக்காரிக்கு உதவியாக நொட்டு நொடுக்கு வேலைகளைச் செய்து கொண்டிருப்பான். இராசனை விட இரண்டு வயதுக்கு இளையவன், மெல்லிய தோற்றம், சிவந்த மேனி, சுறுசுறுப்பானவன். சவுக்கண்டியிலுள்ள மரக்கட்டிலில் இருந்து இருவரும் அதை இதைக் கதைத்துப் பொழுதைப் போக்குவார்கள். பொன்னுத்துரை நேர்மையும் நிதானமும் மிக்கவன். வேடிக்கையான கதைகள் சொல்லிச் சிரிக்க வைப்பான். தான் ஏதாவது சாமான் வாங்கக் கடைக்குப் போனால் இவனையும் அழைத்துச் செல்வான். இந்த நிலைமையில் திடீரென ஏதோ வருத்தம் ஏற்பட்டு, நாலைந்து நாட்களில் மரித்துவிட்டான். இராசனுக்குத் தாங்க முடியாத கவலை.

இராசனுடைய மாமனார் மாணிக்கமும், அவருடைய தங்கை நல்லம்மாவும் குடியிருந்த வீடுகளோடு இணைந்து சின்னத்துரை என்று ஓர் இளைஞன் வசித்து வந்தான். வாய் பேச முடியாத ஊமை. இராசனை விட இரண்டு வயது மூத்தவன். ஊமை என்ற படியால் பள்ளிக்கூடப் பக்கம் கால் பதிக்கவேயில்லை. தகப்பன் இல்லை. வேளையில் சிவபதம் அடைந்து விட்டார். தாயும், அக்காக்காரி நகுலம்மாவும் மூடல் பெட்டி இழைத்து குடும்பம் நடத்திக் கொண்டிருந்தார்கள். கஷ்ட சீவனம். சின்னத்துரை பதினேழு பதினெட்டு வயது வரைக்கும் வீட்டு வேலைகள் யாவும் செய்து கொடுத்துக் கொண்டு, மண் வெட்டுதல், வேலியடைத்தல் போன்ற சில்லறை வேலைகளை மற்றைய சமூகத்தவர்களுக்குச் செய்து கொடுத்து கூலிப்பணம் பெற்று அம்மாக்காரியின் கையில் கொடுப்பான். சும்மா இருக்க மாட்டான். சுறுசுறுப்பானவன்.

பதினெட்டு வயது வந்ததும் பனை ஏறத் தொடங்கி மற்றவர்களுக்கு ஓலை வெட்டிக் கொடுக்கப்பழகி, பின்னர் கள் இறக்கத் தொடங்கி விட்டான்.

சரியான உஷாரானவன். குஷிப் பேர்வழி. எல்லோருடனும் ஆ... ஊ... பாய்... கூய்... என்று குரலெழுப்பி ஏதாவது சொல்லிக் கொண்டேயிருப்பான். கக்கட்டம் விட்டுச் சிரிப்பான். இராசன் அவனிடம் போகும் வேளையில் கையில் ஏதாவது பத்திரிகையைக் கொண்டு சென்றால் அதைப் பறித்தெடுத்து, தடித்த எழுத்துக்களை அ..ம்..மா..... ஆ...சு...ம்... மாஆ... என்று சரியாகவும் பிழையாகவும் உச்சரிப்பான். படிப்பிலே ஆர்வம். இந்த நிலைமையில் அந்தோ பரிதாபம்! ஒரு நாள் அவன் பனையிலிருந்து விழுந்து திடீர் மரணத்துக்குள்ளானான். பயங்கரக் கொடுமை. ஆண் துணையில்லாத குடும்பத்துக்கு உழைத்துக் கொடுத்து காப்பாற்ற முன்னின்றவன். இராசன் மனதில் இந்த இரண்டு இழப்புக்களும் காலம் முழுதும் ஒட்டிக் கொண்டே இருக்கின்றது.

வராத்துப்பளைக் கிராமத்தில் மடப்பள்ளியர் என அழைக்கப்படும் மற்றொரு சமூகத்தினரின் வீடுகள் சிலவும் உள்ளன. ரவியின் வீட்டுக்குத் தென் கிழக்குத் திசையில் சின்னம்மா என்னும் ஓர் அம்மாளின் வீடு இருக்கின்றது. வேளையிலே கைம்பெண் ஆகிவிட்டவர். தில்லையம்பலம் என்னும் மகன், தங்கம்மா என்னும் மகள் இருவருக்கும் அன்னை. பிள்ளைகள் இருவரும் மணம் முடித்து அவர்களுக்குப் பிள்ளைகளும் இருக்கின்றனர். தில்லையம்பலத்தின் மனைவி விசாலாட்சி. வியாழி என்றுதான் அனைவரும் அழைப்பார்கள். தங்கத்தின் கணவர் சிவசம்பு. சிவசம்புவின் அண்ணர் முத்துக்குமாரு. இவரது வீடு ரவியின் வீட்டுக்குப் பின்புறம் உள்ளது. தில்லையம்பலம், சிவசம்பு, முத்துக்குமாரு மூவரும் கண்டி மாத்தளை போன்ற இடங்களில் கடைகள் நடத்திக் கொண்டிருந்தார்கள். வருமானம் பரவாயில்லை. இங்கு குடும்பங்கள் சிறப்பாக நடந்து கொண்டிருக்கின்றன.

சின்னம்மாவினுடைய வீடு, வேளையில் வராத்துப்பளைக்குத் தென்புறத்தே சுமார் கால் மைல் தூரத்திலுள்ள றக்காவத்தை என்ற பனங்காட்டுக்குள் அமைந்திருந்தது. நிறையப் பனைமரங்கள், கீழே அலம்பல், பன்னை, பாவட்டை, அண்ணவுண்ணா, ஈச்சைமரங்கள் நிறைந்த காட்டுக்குள், வெற்று நிலமான ஒரு பகுதிக்குள் வீட்டைக் கட்டிக் குடியிருந்தார்கள். மண் வீடுதான். அவர்களுடைய வீட்டிற்கு மேற்குப்புறமாக றோட்டோரத்தில் சிதம்பரப்பிள்ளை என்பவரது

வீடு. அதற்கு முன்னால் இளையவி என்பவரது குடிசை. இளையவி மாட்டுவண்டில் வைத்துப் பிழைத்துக் கொண்டிருந்தார். மூன்று வீட்டாருக்கும் பொதுவாக, அரசாங்கத்தால் தோண்டிக் கொடுத்த கிணறு.

இவர்கள் வணங்குவதற்கு இரண்டு கோயில்கள் இருந்தன. ஒன்று ஈஸ்வரன் கோயில். மற்றது வீரபத்திரர் கோயில். இரு கோயில்களும் கல்லால் கட்டப்பட்டுச் சுண்ணாம்பு பூசி, வெள்ளை அடித்துப் பளிச்சென்றிருக்கும். கூரைக்குச் சீமை ஓடுகள். இக்கோயில்களுக்குக் கிழக்கே அரை மைல் தூரத்தில் பரமேஸ்வரன் கோயில் என்றொரு கோயிலும் கல்லால் கட்டி சீமை ஓடு போட்ட கோயில். சனசஞ் சாரமே இல்லை. கடலிலிருந்து மீன் பிடித்துக் கொண்டு வரும் கரையார் உண்டியலில் ஒரு சதம் இரண்டு சதம் போட்டு விட்டு வருவார்கள். றக்காவத்தையை அண்டியிருக்கும் கோவில், ஈஸ்வரன் கோயில் என அழைக்கப்பட்டாலும் அங்கே குடி கொண்டிருப்பதும் ஈஸ்வரி அம்மன் தான். ஈஸ்வரி அம்மன் கோயில் என்று அழைப்பதில் உள்ள சொல் நீட்சியால், ஈஸ்வரன் கோயில் என்றே அனைவரும் அழைப்பார்கள்.

இராசன் சின்ன வகுப்பிலிருந்த போது, மூத்தண்ணன் தம்பிப் பிள்ளையுடன் ஒருநாள் நொங்கு பொறுக்க, றக்காவத்தைக் காணிக்குப் போயிருக்கிறான். காணி மூலையில், ஈஸ்வரன் கோயிலுக்குப் பின்பக்கமாக, ஒரு பாழடைந்த பெரிய கட்டடம் நில மட்டத்துக்குள் அமிழ்ந்து கிடப்பதைக் கண்டான். தடித்த சுவர்கள். அதன் பக்கத்தில் வித்தியாசமான சின்னம் பொறிக்கப்பட்ட ஒரு பித்தளை நாணயத்தைக் கண்டெடுத்து வீட்டுக்குக் கொண்டு போனான். பின்னாளில் அவன் மேற்படிப்புப் படித்த போது, இலங்கையை ஆண்ட போர்த்துக்கேயரின் ஆதிக்கத்தில் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த புவிராச பண்டாரம், எதிர் மன்ன சிங்கபரராச சேகரன் போன்ற சிற்றரசர்களின் காலத்தில் *(1580-1615)* மந்திரி பிரதானிகளோ அன்றி அவர்களது அடிவருடிகளோ வாழ்ந்த கட்டடத்தின் சிதைவு அது என்பதை உணர்ந்து கொண்டான். சிங்கள மன்னர் ஆண்ட காரணத்தால்தான், அக்கம் பக்கமுள்ள ஊர்களெல்லாம் வத்தைகளாகப் பெயர் பெற்றுள்ளன.

காலப்போக்கில் தில்லையம்பலம், சிவசம்பு குடும்பங்கள் இடம் பெயர்ந்து ரவி வீட்டுக்கு முன்னால் உள்ள காணியை வாங்கி, வசதியான கல் வீடு ஒன்று கட்டி அதில் வாழ்கிறார்கள். சிதம்பரப் பிள்ளையின் பிள்ளைகள் ஒருவரோ இருவரோ தும்பளையில்

திருமணம் செய்து வாழ, முதியவர்கள் உலகிலிருந்து விடைபெற்றுக் கொண்டார்கள். இளையவியும் வராத்துப்பளைக்கு வந்து ஒரு குடிசையை அமைத்து வாழ்ந்து வந்தார். இரண்டு ஆண்பிள்ளைகள். பத்மநாதன் என்பது மூத்தவனுடைய பெயர். எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகுவான். ரவிக்கு இரண்டு வயதுக்கு இளையவன். பத்தா என்றுதான் ரவி அழைத்து உரையாடுவான். இந்தச் சிறுவர்கள் வேளையிலேயே தாயைப் பறிகொடுத்து விட்டார்கள்.

இளையவி வண்டிலில் சாமான்கள் ஏற்றிக் கொடுப்பார். வீடு கட்டுபவர்களுக்கு கல், மண் ஏற்றிக் கொடுப்பார். கடும் நோயாளிகள் ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டி ஏற்பட்டால் கார் கிடைக்காத பட்சத்தில் இளையவியின் வண்டில் தான் பயன்படும்.

ரவி வீட்டுக்குப் பின்னால் நான்கு மடப்பள்ளி வீடுகள். ஒன்று சிவசம்புவின் அண்ணன் முத்துக்குமாருவின் வீடு, அவரது குடும்பத்தவர்கள் சற்றுக் கடும் போக்கு. மற்றொரு வீட்டில் ஆண் துணை இல்லை. தாயும் மகளும் இடியப்பம் பிட்டு அவித்து விற்றுச் சீவியம் நடத்தினார்கள். ரவியின் வீட்டுக்குப் பின்புறமாக ஒரு காணிக்குள் இரண்டு வீடுகள். குடும்பத் தலைவர்கள் இல்லை. விதவைப் பெண்கள். ஆளுக்கொரு ஆண் பிள்ளைகளைக் கஷ்டப்பட்டு உறவினர் உதவியுடன் வளர்ந்து வந்தார்கள். காலப்போக்கோடு இணைந்து சுப்பிரமணியம் என்பவர் படித்து, பருத்தித் துறையில் உள்ள உள்ளூராட்சிப் பணிமனையில் பணிபுரிந்தார். மற்ற விதவையின் மகன் வேத நாயகமும் படித்து, அரசாங்க சேவையில் சேர்ந்து வெளியூரில் பணிபுரிந்தார்.

முன்னால் உள்ள வீட்டில் வசிப்பவர்களில், தங்கம், மற்றவர்களோடு பழகும் பண்பாட்டில் சிறிதளவு கட்டிறுக்கமானவர். ஆனால் அவரது அம்மாவாகிய சின்னம்மாவும், மச்சினியாகிய விசாலாட்சியும் தங்கமானவர்கள். எவருடனும் அன்பாகவும் இனிமையாகவும் பழகும் பண்பு நிறைந்தவர்கள். ரவி வீட்டார் தான் அவர்களுக்கு அடுத்த வீட்டாரும் நெருக்கமானவர்களும் என்றாலும், ரவியின் குடும்பத்தவர்களுடன் கீழிறங்கிப் பழகினால், தமது உறவினர்கள் தங்களைக் குறைவாக நினைப்பார்கள் என்று எண்ணியோ என்னவோ கட்டுமட்டாகவே நடந்து கொள்வார்கள்.

ரவியின் அம்மாவைப் பெயர் சொல்லி அழைக்க மாட்டார்கள். கந்தன் பெண்டில்! என்றுதான் கூப்பிடுவார்கள். அதே மாதிரிப்

பிள்ளைகளையும், கந்தன்ர மேள், கந்தன்ர மோன் என்றே கூப்பிடுவார்கள். ரவிக்கு அந்த நாட்களில் இராசன் என்று பெயர் இருந்ததாலும், தங்கத்தின் மகன் மாணிக்கராசாவுடன் நட்புடன் பழகியதாலும் அவனை இராசன் என்று கூப்பிடுவார்கள். எல்லோரிலும் இனிமையானவர் விசாலாட்சிதான். அவருடைய மகளும் தாயைப் போல அனைவருடனும் அன்பாகப் பழகும் பண்பு படைத்தவர்.

வெள்ளையன், சின்னத்தம்பி ஆகியோருடன் வீடுகளுக்கப்பால் நளவ சமூகத்தவர்களான கிட்டிணன், கோவிந்தன் ஆகிய இருவரது வீடுகள் இருக்கின்றன. கள் இறக்கி விற்று வந்தார்கள். கோவிந்தனை கங்காணி என்றும், கங்காணி கோவிந்தி என்றும் எல்லோரும் குறிப்பிடுவார்கள். எங்காவது தோட்டக் காட்டிலோ அன்றி ஸ்தாபனங்களிலோ கங்காணி வேலை பார்த்தாரோ தெரியாது. தோற்றத்திலும், நடையுடை பாவனையிலும் பேச்சு வழக்கிலும் வித்தியாசம். மனைவியும் அப்படியானவர்தான். நடுத்தர வயது வந்தும் பிள்ளைகள் இல்லை. நோய்வாய்ப்பட்டு கங்காணியார் இறந்து போக, இரண்டு மூன்று வருடங்களின் பின் மனையாட்டி செல்லம்மாவும் இறந்து போனார். நெருங்கிய உறவினர் என்று யாருமில்லை. வீடும் அழிந்து போயிற்று.

உத்திராவத்தையில் ஐயம்பிள்ளை என்று ஒருவர் இருந்தார். செட்டி என்று தான் அவரை அனைவரும் அழைத்தார்கள். செட்டி எனப்படும் குலம் தென்னிந்தியாவில் இருக்கிறது. இலங்கையிலும் வியாபாரத்தின் நிமித்தம் வந்து வாழ்கின்றார்கள். செட்டி என்றால் பொதுப்படையாக, பணப் புழக்கம் உள்ளவர் என்று கருதப்படுகின்றது. வட்டிக்குப் பணம் கொடுப்பவர்கள் என்பது பொதுவான நிலைப்பாடு. இந்தச் செட்டியின் கைகளிலும் பணம் புழங்கியது. கர்வ சுபாவமும் நிரம்பப் பெற்றவர். ஊரில் குத்தகைகாரக்கந்தன், கல்வீட்டுக் கந்தையன், மாவடி ஆழ்வான் என்றெல்லாம் பெயர்கள் அடிபட கங்காணி, செட்டி என்று வேறு நாட்டுப் பெயர்கள் அடிபட இவ்விருவரும் காலாகவிருந்தனர்.

வராத்துப்பளையில் வீடுகளை அண்டியும் அக்கம் பக்கங்களிலும் பனை மரங்களே நிறைந்து காணப்படும். மருந்துக்கும் கூட ஒரு தென்னை மரத்தையும் காண முடியாது. பெரியவர்கள் போற வாற இடங்களில் தென்னை மரங்களைப் பார்ப்பார்கள். வீட்டில் உள்ள ஒரு சின்னக் குழந்தை அதைக் காணவே மாட்டாது. வீட்டில் சொந்தக் கிணறுகள் இல்லாத படியால் அதைப் பயிர் பண்ண

முடிவதில்லை. கந்தப்பர் தன் வீட்டில் கிணறு வெட்டியதும் அந்த எண்ணம் ஏற்பட்டு விட்டது. அவர் தொழில் புரிந்த அனுராதபுரத்தில் நிறையத் தென்னைகளைப் பார்த்த கண்கள், வீட்டில் கிணறு வெட்டியதும், வீட்டில் அதைப் பயிராக்க வேண்டும் என்ற எண்ணம் உந்தித் தள்ளியது. அதன் நிமித்தம் ஊரில் தென்னை மரம் உள்ள வீடுகளில் நன்றாய்ப் பழுத்துக் காய்ந்த பத்து பொச்சுத் தேங்காய்களை வாங்கி வந்து, முளைக்க வைத்து, அவை இலை விடத் தொடங்கியதும் பெயர்த்து கிணற்றையண்டி நட்டு விட்டார். நாலைந்து இலைகள் வரத் தொடங்கும் வரை வாளியால் தண்ணீர் ஊற்றி, பின் வாய்க்கால்கள் கோலி அவற்றுக்கு நீர் பரவச் செய்தார். வீட்டில் உள்ளவர்கள் குளிக்கும் போது வாய்க்காலை மாற்றி மாற்றிக் குளிக்க தென்னங் கன்றுகளுக்கும் போதியளவு தண்ணீர் பாய்ந்து, அவை மரங்களாகிக் காய்க்கத் தொடங்கின. தேங்காய் முற்றிலும் பறித்து அவற்றைக் கறிக்குப் பயன்படுத்தினர். இளநீர்களும் பறிக்கப்பட்டன. ஏதாவது நல்ல காரியங்களுக்குக் கும்பம் வைக்க அவை பயன்படுத்தப்பட்டன. இளநீர் குடிக்க ஆசை ஏற்பட்டாலும் பறித்துக் குடிப்பார்கள். வராத்துப்பளையில் முதன்முதல் கந்தப்பர் வீட்டிலேயே தென்னை மரம் உருவாக்கப்பட்டது.

இதைப் பார்த்த மாணிக்கத்துக்கும் இந்த உணர்வு ஏற்பட்டது. ஆனால் அவர் வீட்டில் கிணறு இல்லாததால் அங்கு தென்னை உற்பத்தியாக்க முடியாது. அதிர்ஷ்டவசமாக, அந்த வீட்டார் பாவிக்கும் குஞ்சிவளவுக் கிணற்றுக்கு வடக்குப் பக்கமாக, அவருக்குச் சொந்தமான குஞ்சிவளவுக் காணி இருக்கிறது. அந்தக் காணி வேலிக்கும் கிணற்றுக்குமிடையில் எப்படியும் ஆறு ஏழடி இடைவெளிதான் இருக்கும். எட்டுப் பத்துக் குடும்பத்தவர்கள் வந்து குளிக்கும் கிணறு அது. அதனால் அவர் ஒரு வாய்க்காலை அமைத்து காணிக்குள்ளே தென்னங்கன்றுகளை நாட்டி நீர்ப் பாய்ச்சினார். அவை நன்றாக செழித்து வளரத் தொடங்கின. காணிக்குள் காய்கறிப் பயிர்ச் செய்கையும் நடைபெற்றது.

கந்தப்பர் வீட்டு முற்றத்தில் ஒரு மாமரம் நின்றது. வீடு, குசினி, மாட்டுக் கொட்டில் ஆகியவற்றுக்கு நடுவில் அந்த மாமரம் நின்ற படியால் செழித்து வளரவில்லை. அடிமரம் மட்டும் பத்தடி உயரமிருக்கும். அதற்கு அப்பால் தான் கிளைகள், மரம் செழிப்பாயில்லா விட்டாலும் நிறையக் கிளைகள். இராசன் அடிக்கடி அந்த மரத்தின் மீதேறி வெளியே தூரத்தில் நடக்கும் புதினங்களை அவதானிப்பான். கிளையொன்றினூடாக, கல்வீட்டுக் கூரையிலிறங்கி, ஓடுகளில் நடந்து திரிவான். முகட்டு ஓட்டில்

குந்தியிருந்து புதினம் பார்ப்பான். ஏழாம் வகுப்புப் படிக்கும் போது ஒரு விசாலமான பலகையைத் தேடி எடுத்து அதை மாமரத்தின் கிளைகளில் படிய வைத்து, மற்றொரு கிளையில், தான் அமர்ந்திருந்து வீட்டுப் பாடம் படிப்பான். எழுத்து வேலை செய்ய முடியாது. மைப்போத்தலை அங்கு எடுத்துச் செல்ல முடியாது. பென்சில் வேலை செய்யலாம்.

இந்த மரத்தில் பதினைந்து இருபது காய்கள் மட்டுமே காய்க்கும். அதனால் சொதிக்கு அல்லது தீயலுக்கு வெட்டிப் போட மாங்காய் பறிக்க மாட்டார்கள். முற்றிப் பழுக்க விட்டு, பறித்துப் பழமாகத் தின்னுவார்கள். பிரமாதமான ருசி எதுவும் கிடையாது. மாணிக்கத்தார் வீட்டிலும் இதே அளவான மாமரம், வீட்டு முற்றத்தில் நிற்கிறது. சற்று அடர்த்தியானது. பருவ காலத்தில் நிறையக் காய்க்கும். பழமும் பரவாயில்லை சற்று ருசியானது.

கந்தப்பர் வீட்டுக் கிணற்றடியில், துலாவுக்குப் பின் பக்கமாக, ஓர் ஆலமரம் நிற்கிறது. பனையின் பொந்து ஒன்றில் ஒரு காக்கையார், ஒரு ஆலம் பழத்தைக் கொண்டு வந்து போட, அது முளைத்து, பனையைத் தழுவி வளர்ந்து, விசாலமாய் வளர்ந்திருக்கிறது. அப்பிரதேசத்தில் அது ஒன்றுதான் ஆலமரம்.

## 28

**வ**ராத்துப்பளையிலிருந்து ஒரு கூப்பிடு தூரத்தில் தொடங்குகிறது உத்திராவத்தைக் கிராமம். ஆக மொத்தம் எட்டே எட்டு வீடுகள் மட்டும்தான். இவற்றை விட வேளையில் தெற்கு மூலையில் இரண்டு வீடுகள் இருந்து அழிந்து, இருந்த இடமே தெரியாமல் போய்விட்டன. ஒரு வீட்டில் வயிரமுத்து என்னும் துடிப்பான இளைஞர் தந்தையை இழந்து, தொழில் செய்து தாயுடன் வாழ்ந்து வந்தார். பனையிலிருந்து விழுந்து திடீர் மரணமுற்றார். பின் தாயாரும் மரணமடைந்தார். உறவினர் எவருமில்லாத ஒரு தனிக்குடும்பம். ஊரின் நடுவில் ஒரேயொரு கிணறு. அனைவரும் மரமேறிப் பிழைப்பவர்கள்தான். பெண்கள் வீட்டிலிருந்து மூடல் பெட்டி இளைத்தல், கருப்பணிக் காய்ச்சி பனங்கட்டி போடுதல், அவற்றைச் சந்தைக்குக் கொண்டு சென்று விற்றல் இப்படி மற்றைய சமூகத்தவர்கள் தூரத் தூர இருப்பதால், கள்ளுக்குடிக்க வரும் சனத்தொகை குறைவு. அதனால் மூன்று தொழிலாளர்கள் மற்றச் சமூகத்தவர்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில் கள்ளுக் கொட்டில்கள் வைத்து வியாபாரம் செய்து கொண்டிருப்பார்கள். அவர்களில் வேலுப்பிள்ளை என்பவர் முக்கியமானவர். பெருந்தொகையான மக்கள் வாழும் கலட்டியை அண்மித்த பகுதியில் ஒரு மணற்றிடல் காணில் கள்ளுக்கொட்டில் நடத்திக் கொண்டிருந்தார். காது கேளாது. செவிட்டு வேலுப்பிள்ளை என்றுதான் மற்றவர்கள் பேசிக் கொள்வார்கள்.

யாழ்ப்பாணம், பலாலி றோட்டிலுள்ள சண்முகத்தின் தங்கை அன்னம்மாவை அவருக்குத் திருமணம் செய்து கொடுத்தார்கள். அன்னம்மா யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவராதலால் உத்திராவத்தைக்கு வந்த சில நாட்களில் ஒரு சிங்கர் தையல் மெசினை வாங்கித் தைக்கத் தொடங்கினார். பருத்தித் துறையில் வசிக்கும் - அதாவது வராத்துப்பளை, உத்திராவத்தை, சந்தா தோட்டம், ஊரியவத்தை ஆகிய நாலு கிராமங்களுக்குள்ளும் முதன்முதலாக தையல் மெசின் பாவனையிலிருந்த வீடு அது ஒன்றுதான்.

அக்கிராமங்களில் உள்ள மக்கள் பிள்ளை குட்டிகளுக்கு அருமை பெருமையாக ஏதாவது சட்டை தைக்க, தங்களுக்கு ரவிக்கை தைக்க வேண்டுமானால் பருத்தித் துறை ரவுனுக்குப் போய் தையல்காரர் மூலம் தைத்துக் கொள்வார்கள். இந்த நிலைமையில் அன்னத்தின் தையல் மெசின் பெரும் வாய்ப்பாக அமைந்தது.

அன்னத்தின் மச்சாள் - அதாவது வேலுப்பிள்ளையின் தங்கை லட்சுமி, அப்போது கன்னிப் பெண்ணாக வீட்டிலிருந்தாள். அவளும் தைக்கப் பழகி, வாடிக்கையாளருக்குத் தைத்துக் கொடுத்துக் கொண்டிருந்த காலமது. இராசன் பாடசாலையால் வந்து சிறிதுநேரம் ஆறுதல் எடுத்துவிட்டு, மாலையில் பொழுது போக்குவதற்காக லட்சுமி வீட்டுக்குப் போவான். வழியில் நிற்கும் மாமரத்துக்குக் கல் எறிந்து, விழும் மாங்காயைக் கடித்துக் கொண்டு போவான். லட்சுமி, அவனுக்கு மச்சாள் முறை. தந்தை வழிச் சொந்தம். லட்சுமி மச்சான் என்றுதான் கூப்பிடுவான். அங்குபோய் லட்சுமி மச்சாளோ அன்னமக்காவோ தைப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பான். லட்சுமி அவனைக் கூப்பிட்டு, "வாடா இங்கை, இதைத் தையடா!" என்று ஏதாவது நேரான துணிகளைக் கொடுப்பாள். ஆண் பிள்ளைகளின் சாரம் பெண்களின் பாவாடை.... இப்படி. காலப் போக்கில் ரவி பெரிய தையல்காரனாக வந்து விட்டான். தைப்பது மட்டுமல்ல, ரவிக்கைகள், பெண் பிள்ளைகளின் சட்டைகள், ஆண் குழந்தைகளின் காற்சட்டைகள் என்றவாறு, நாட் போகப் போக, அங்கு தையல் வேலைகள் குவிய, ரவியை வரவழைத்துத் தையல் தொழிலை அவன் தலையில் சுமத்தி விட்டார்கள். ஒரு ரூபா இரண்டு ரூபா என்று கூலியும் கொடுத்தார்கள். ரவி ஒரு தையற் கலைஞன் ஆகிவிட்டான்.

பருத்தித் துறையில், இந்தச் சாதி மக்களும் மற்றச் சாதி மக்களைப் போல சைக்கிள் ஓடத் தொடங்கியிருந்தனர். உயர் சாதி மக்கள் உபயோகித்துப் பழுதடைந்த அல்லது கறள் பிடித்த சைக்கிள்களை - அதாவது அவர்கள் ஒதுக்கி விடும் சைக்கிள்களை - ஐந்து பத்து ரூபாக்களுக்கு வாங்கி ஓடினர். ஆனால் முதன் முதலாகச் செகிட்டு வேலுப்பிள்ளை ஒரு புது ரலி சைக்கிளை வாங்கி ஓடினார். மொத்த விலை **45** ரூபா. முதற் காசு பதினைந்து ரூபாவைக் கொடுத்து விட்டு மிகுதியைப் பத்துப் பன்னிரண்டு மாதங்களில் செலுத்த வேண்டும்.

வேலுப்பிள்ளையின் தந்தைக்குப் பெயர் ஆழ்வான். வீட்டுப் படலைக்கு மேலே ஒரு சின்னக் கூரையை அமைத்துவிட்டார். அதனால் அந்த வாசலுக்குத் தலைவாசல் என்று பெயர்

வந்துவிட்டது. அதன் காரணமாக, தலைவாசல் ஆழ்வார், தலைவாசல் வேலுப்பிள்ளை, தலைவாசல் அன்னம், தலைவாசல் லட்சுமி என்று அவர்களுக்குப் பெயர்களும் சூட்டப்பட்டன.

உத்திராவத்தையில் மணியகாரன் கட்டிக் கொடுத்த ஒரு கிணறுதான் இருந்தது என்று மேலே குறிப்பிட்டிருந்தேன். அங்கு குடியிருக்கும் வீட்டுக் காணியில் முதன்முதல் கிணறு வெட்டிப் பாவித்ததும் ஆழ்வார் வீட்டார்தான்.

மொத்தத்தில் தையல் மெசின், புதுச் சைக்கிள், தலைவாசல், சொந்தக் கிணறு என்று, நாலு கிராமங்களுக்குள்ளும் சிறப்புற வாழ்ந்த குடும்பம் அது.

அக்கிராமத்தில் நடந்த அதிர்ச்சியைத் தரும் அதிரடிச் சம்பவம் ஒன்றினை இங்கு குறிப்பிட வேண்டும்.

கிராமத்தின் நடுப்பகுதியில் கந்தையன் என்று ஒருவர் வாழ்ந்து வந்தார். 45 வயதுக்கு மேலே இருக்கும். திருமணம் செய்து நீண்ட காலமாகியும் குழந்தை குட்டிகள் எதுவுமில்லை. மனைவியின் மேல் மிகவும் பாசம். மனைவியும் கணவர் மேல் உயிரை வைத்திருந்தாள். இந்த நிலைமையில் அவளுக்கு ஏதோ வருத்தம் வந்து இறந்து போனாள். அக்கம் பக்கத்திலுள்ள உறவினர் அனைவரும் பங்கு கொண்டு மரணச் சடங்குகளை நிறைவேற்றினர். பிரேதம் தகனம் செய்யப்பட்ட பின்னரும் ஆண்கள் பெண்களாகக் கூடி அவருக்கு ஆறுதல் கூறி, சாப்பிட, குடிக்க எல்லா உதவிகளையும் செய்தனர். இரவில் ஆண்களும் பெண்களுமாக அங்கு படுத்து அவருக்கு ஆறுதல் அளித்தனர். அவர்களுக்கும் வீடு வாசல் உண்டல்லவா? நாலைந்து நாட்கள் செல்ல தத்தமது வீடுகளில் படுத்துறங்கினர்.

இந்த நிலைமையில் எட்டாம் சடங்குக்கு முதல் நாள் கந்தையர் தானாகவே பருத்தித் துறைச் சந்தைக்குச் சென்று, சடங்குக்கு வேண்டிய சாமான்கள் ஒன்றும் தவறாமல் வாங்கி, சைக்கிளில் மூட்டையாகக் கட்டிக் கொண்டு வந்து சேர்த்தார். வழமையாக சாமான் வாங்கும் கடைகளில் அதிகமான பொருட்களை வாங்கியபோது, சிலர் "எதற்கு அதிகம்? வீட்டில் ஏதாவது விசேஷமா?" என்று கேட்க, மனைவி இறந்ததையும் எட்டாம் சடங்குக்கு வாங்குவதாகவும் சொன்னார். மிக நெருக்கமான நண்பர் ஒருவர் வினவியபோது "நாளைக்கு என்ர செத்த வீடு. தவறாமல் வந்துவிடு!" என்று சொல்லி விட்டும் வந்திருக்கிறார். இந்தத் தகவல் பின்னர் தான் தெரிய வந்தது.

அக்கம் பக்கத்து வீட்டார் அன்று மாலையிலேயே அந்த வீட்டில் கூடி, மறுநாள் சடங்குக்கு வேண்டிய சகல அலுவல்களையும் கவனித்தனர். அரிசி துப்புரவாக்குதல், மிளகாய் வறுத்துத் தூள் இடித்தல், மற்றும் காய்கறி வகைகளை ஒழுங்குபடுத்தல், வீடு வாசல் துப்புரவாக்குதல் என்று சகல வேலைகளையும் செய்து முடித்துவிட்டு அவர்கள் தங்கள் வீடுகளுக்குப் போக, கந்தையர் மட்டுமே தனிமையில் படுத்துறங்கினார்.

அடுத்த வீட்டு முருகப்பரின் மனைவி, எட்டாம் சடங்கு நாளன்று விடியற்காலை, கந்தையருக்குத் தேத் தண்ணீர் போட்டுக் கொடுக்கவென்று இரண்டு வீடுகளுக்குமிடையில் கண்டாயத்தைக் கடந்து வருகிறாள். இருள் அகலவில்லை "அண்ணை, அண்ணை!" என்று கூப்பிட்டுக் கொண்டு வர...

வீட்டு வாசலில் கந்தையர் நின்று கொண்டிருப்பது மெல்லிய வெளிச்சத்தில் தெரிகிறது. ஆனால் அவள் கூப்பிடுகிற சத்தத்துக்கு ஒரு பதிலும் வரவில்லை.

முருகரம்மா கிட்டப் போய், "ஏன் அண்ணை பேசாமலிருக்கிறாய்?" என்று கேட்டபடி அவரைத் தொட்டால்...

அவர் சுழலுகிறார்.

ஆம்; கயிற்றில் சுழலுகிறார்.

அட பாவமே! நிலையின் மேல் தீராந்தியில் கயிற்றைப் போட்டுத் தூங்கி மீளாத் துயில் கொள்கிறார்.

இந்தத் துயரச் செய்தி உத்திராவத்தையை மட்டுமல்ல, அந்தச் சாதியினர் வசிக்கும் மற்றக் கிராமங்களை மட்டுமல்ல, சகல கிராமத்து மக்களையுமே அதிரச் செய்துவிட்டது.

பருத்தித்துறைச் சந்தையிலிருந்து வந்த அவரது நண்பர், முதல் நாள் தன்னிடம் சாமான் வாங்கிய போது சொன்ன அந்த வேதனை நிறைந்த வேடிக்கை வார்த்தைகளைச் சொல்லி, விம்மி விம்மி அழுதது, கந்தையன் தன் ஆசை மனைவியைப் பிரிந்து தவித்ததைப் புலப்படுத்தி எல்லோர் மனதையும் கலங்கச் செய்தது.

ரவி நெல்லியடியில் இரண்டாம் வருடம் கல்வி கற்றபோது உத்திராவத்தை முருகரின் இளைய மகன் இராசனும் அம்மத்திய கல்லூரியில் சேர்ந்து ஆறாம் வகுப்பில் கல்வி கற்றான். அவன் சில

காலம் பஸ்ஸில் பிரயாணம் செய்து பாடசாலைக்குப் போனாலும், பின்னர் சைக்கிள் ஒன்று வாங்கிக் கொண்டான். இதன் காரணமாக இருவரும் இணைந்தே அங்கு போய் வந்தனர். இக்காலத்தில் கதிரவனுடைய மகளான சிவபாக்கியம் என்ற மாணவி, பருத்தித்துறை மெதொடிஸ்த பெண்கள் கல்லூரியில் சேர்ந்து படித்தாள். இருவரும் கற்கோவளம் மெ.மி. பாடசாலையில் ஐந்தாம் வகுப்பினை முடித்துக் கொண்டு மேற்படி கல்லூரிகளில் இணைந்து படித்தனர். உத்திராவத்தையில் முதன்முதல் மேற்படிப்புப் படித்த மாணவர்கள் இவ்விருவருமாவர்.

கிராமத்துக்கு வட திசையில் நாலைந்து மடப்பள்ளிக் குடும்பத்தினர் வாழ்கின்றனர். அவர்களில் இரண்டொருவர் வெளியூர்களில் தொழில் புரிகின்றனர். செல்லையா என்பவர் முறிவு, நெறிவு, நோவுகளுக்கு வைத்தியம் செய்து கொண்டிருந்தார். எந்த நாளும் யாராவது வந்து கொண்டேயிருப்பார்கள். மெல்லிய நெடிய தோற்றம். சிவலை, மார்பு சிறுத்து வயிற்றுடன் இணைந்து நெடிதாக இருப்பதுடன், வளவளவென்று பேசுவதாலும் அயலவர்கள் குடலையன், குடலைச் செல்லையன் என்று பேசிக் கொள்வார்கள். வேறு இரண்டு பேர் வண்டில் மாடு வைத்துப் பிழைப்பு நடத்துகிறார்கள்.

நாகமணி என்றொரு பணக்காரர் இருந்தார். வெளியூரில் வியாபாரம் செய்து சிறிது பணம் சேர்த்து விட்டார். பணக்கார நாகமணி என்றுதான் அனைவரும் கதைப்பார்கள்.

ரவியின் தந்தை ரவிக்குப் பத்து வயதாயிருக்கும் போது, வீட்டில் கிணற்றை வெட்டி, பணப் பற்றாக்குறைக்கு அவரிடம் இருநூறு முன்னூறு ரூபா கடனாக வாங்கிக் கொண்டார். வட்டிக்குத்தான்! அப்போது கந்தப்பர் அனுராதபுரத்தில் கள்ளுத் தவறணை நடத்திக் கொண்டிருந்தார். காசு சேர்த்து ஊருக்கு வந்து, அந்தக் காசை நாகமணியரிடம் கொடுக்கப் போனால் அவர் ஊரில் இருக்க மாட்டார். தான் வியாபாரம் செய்யும் கண்டிக்கோ மாத்தளைக்கோ போயிருப்பார். இருக்கிற நேரம் போனால், “பேந்துவா, பின்னை வா!” என்று சொல்லியனுப்பி விடுவார். காலம் கடத்த காசு கரைந்து போய்விடும். அலைந்து அலைந்து அலுத்துப் போய் ஏழெட்டு வருடங்களுக்குப் பிறகு, இரண்டு மடங்குக்கு மேலாகக் கொடுத்துத்தான் கந்தப்பர் அந்தக் கடனை அடைத்தார். இதனால், நாகமணி என்ற பெயர் ரவியின் வீட்டில் மிகவும் பிரசித்தம்!

# 29

சந்தா தோட்டத்துக்கு வருவோம்.

நாலு கிராமங்களிலும் பெரிய கிராமம். உத்திராவத்தைக்கு மேற்குப் புறமாக அமைந்திருக்கிறது. கிராமக் கோட்டுச் சந்தியிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்கிற றோட்டுக்கு வடக்குப் பக்கமாக அநேக வீடுகளும், தெற்குப் பக்கமாக முதலியம்மன் கோயிலுக்கு முன்பாக நான்கு வீடுகளும் அமைந்துள்ளன. எப்படியும் முப்பது வீடுகளுக்குக் குறையாது. முதலியம்மன் கோயிலையொட்டி ஒரு கிணறும், வடக்குத் திசையில் இலுப்பையடியில் ஒரு கிணறும், மேலும் வடக்கே தள்ளி அண்ணாவி கந்தையர் வீட்டையொட்டி ஒரு கிணறுமாக மூன்று கிணறுகள். இவை மணியகாரன் வெட்டிக் கொடுத்த கிணறுகள். முதன்முதல் சொந்த வீட்டில் கிணறு வெட்டியவர் கதிரன் என்பவராவார். மூன்று நான்கு ஆண் பிள்ளைகள். அவர்களின் உழைப்பினால் ஊருக்குள் முதன்முதல் கல் வீடு கட்டியவரும் அவர்தான். சந்தா தோட்டத்தில் அவருடைய ஒரேயொரு மகளான பாக்கியம் என்பவள்தான் முதன்முதல் பருத்தித் துறை மெதொடிஸ்த பெண்கள் கல்லூரியில் சேர்ந்து படித்த மாணவியாவள். அவளைத் தொடர்ந்து நவமணி, நல்லம்மா என்னும் மாணவிகள் அங்கு படித்தனர்.

வீடுகள் நெருக்கமானபடியால் வெற்று நிலம் இல்லை. தரை இறுக்கமான களிமண் தரைதான். ஆனாலும் அக்கம் பக்கங்களில் உள்ள காணிகளில் பனை மரங்கள் குறைவு. அதேபோல தென்னை மரங்களும் அதிகமில்லை. அடுத்து வாழும் தடித்த வேளாளருடைய காணிகளில் உள்ள பனை தென்னைகளில் சிலர் கள் இறக்குவார்கள். தொழில்வளம் குறைந்த இடமாதலால் இளம் தொழிலாளர்கள் சற்றுத் தூர இடங்களுக்குப் போய், தென்னைகளில் கள் இறக்கி வீட்டுக்குக் கொண்டு வந்து விற்பார்கள். சிலர், அந்தந்த இடங்களில் கள்ளுக்கடை வைத்தும் நடத்துவார்கள்.

சில வாலிபர்கள், யாழ்ப்பாணத்தில் கலியாணம் முடித்து அங்கு தொழில் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களுள் கதிரவனின் மூத்த மகன் மாணிக்கம், நாவலடியிலுள்ள ஒரு பெண்ணைக் கலியாணம் முடித்து அங்கு வாழ்ந்தார். நாவலடி மாணிக்கம் என்று அழைக்கப்பட்டார்.

அவருக்கு ஆறு விரல் மாணிக்கம் என்றும் பெயர். வலது அல்லது இடது கையில் பெரு விரலோடு ஒட்டி ஒரு குட்டி விரல் ஒட்டியிருந்ததே இதற்குக் காரணமாகும். மற்றொருவர் யப்பான் மாணிக்கம் எனப்படுபவர். அவர், ஆரிய குளம் பலாலிறோட்டில் திருமணம் செய்து, சற்றுத் தூரத்திலுள்ள மற்றச் சமூகத்தவர் வாழும் பகுதியில் கள்ளுக்கடை நடத்தினார்.

உத்திராவத்தையைச் சேர்ந்த தம்பிமுத்து என்பவர் பலாலி றோட்டில் பிரபலஸ்தரான சின்னப்புவின் மகளைக் கலியாணம் செய்து, வெலிங்டன் தியேட்டருக்கு முன்பாகக் கள்ளுக்கடை நடத்தினார். பெரிய அளவிலான வியாபாரம். பெரும் பணம் சம்பாதித்ததனால், பலாலிறோட்டில் கட்டப்பட்ட புது வீடுகளில் தம்பிமுத்துவின் வீடே, விசாலமானதும் வசதிகள் நிறைந்ததுமாகும். அவரது தங்கை சிவபாக்கியம் சின்னப்புவின் மகன் சிவ சுப்பிரமணியத்தைக் கலியாணம் செய்தாள்.

பலாலி றோட்டில் முதன்முதலில் அரசாங்க உத்தியோகம் பார்த்தவர் - அதாவது புகைவண்டிக் காவலராக (Railway Guard) பதவி வகித்தவர். லொண்டன் மாணிக்கம் என்று முன்னர் குறிப்பிட்டிருந்தேன். அவருக்கடுத்து அரசாங்க உத்தியோகம் பார்த்தவர் சிவ சுப்பிரமணியம் ஆவார். இவர் ஆரம்பத்தில் சிறிது காலம் கொழும்பிலுள்ள எலிபன்ற் ஹவுஸில் பணியாற்றி விட்டுத்தான், அரசாங்கத்தில் இணைந்து சுகாதார பரிசோதகராகப் பணியாற்றினார்.

பலாலி றோட்டில் வசித்தவர்கள் பலர் வேளையில் கொழும்பில் தனியார் நிறுவனங்களில் பணிபுரிந்திருக்கிறார்கள். இவர்களுள் முதன்மையானவர் பொன்னையா என்பவர். அவர், எலிபன்ற் ஹவுஸில் பணிபுரிந்து அந்தச் செல்வாக்கில்தான் சிவசுப்பிரமணியத்தை முதலில் அங்கு வேலையில் சேர்த்தார். பொன்னையாவின் தந்தையின் பெயர் பாவிலுப்பிள்ளை. இந்தப் பாவிலுப்பிள்ளையும் ரவியின் தந்தை கந்தப்பரும் சேர்ந்து தான் அந்நாட்களில் அனுராதபுரத்தில் கள்ளுத்தவறணை நடத்தினார்கள்

என்பது குறிப்பிடத்தக்கது. பொன்னையாவின் மகன் இராஜசிங்கம் அரச சேவையில் சேர்ந்து பொலிஸ் திணைக்களத் தலைமையகத்தில் முக்கிய பதவி வகித்து ஓய்வு பெற்றவர். சந்தா தோட்டத்துக்கும் யாழ் ஆரிய குளப் பலாலிறோட்டுக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருப்பதை எடுத்துக்காட்ட இவற்றையெல்லாம் விவரிக்க வேண்டி ஏற்பட்டது.

சந்தா தோட்டத்தில் றோட்டுக்குத் தென்புறமாக வசித்த கந்தையா என்பவரை, இலக்கணாவத்தைக் கந்தையன் என்று கூப்பிடுவது வழக்கம். அந்த வீடு அமைந்த பகுதி இலக்கணாவத்தை என்று அழைக்கப்படுவதே அதற்குக் காரணம். கந்தையன் வீட்டை அண்டித் தடித்த வெள்ளாளர் குடும்பம் நாலைந்து இருக்கிறது. வராத்துப்பளையிலும் உத்திராவத்தையிலும் வசிக்கும் மடப்பள்ளியர்களைப் போல அனுசரித்துப் போகும் தன்மை அவர்களிடம் குறைவு. கர்வம் நிறைந்த பழக்க வழக்கங்கள். என்றாலும் அங்கு வசிக்கும் நளவ சமூகத்தவர்களுக்கு றோட்டுப் பக்கமாக நிறைய உறவினர்கள் வசிப்பதனால் எவ்விதப் பாதிப்பும் இல்லை.

சந்தா தோட்டத்தைச் சேர்ந்த சிற்றம்பலம் என்ற இளைஞர் யாழ்ப்பாணத்தில் ஓர் உறவினருடன் இருந்து, அங்குள்ள பாடசாலை யொன்றில் படித்துவிட்டு, ஊர் திரும்பி சமூக முன்னேற்ற வேலைகளில் ஈடுபட்டார். நளவ சமூகத்தவர்கள் வசிக்கின்ற ஓரிடத்திலும் தெய்வ வணக்கம் செய்வதற்கான கோயில்கள் எதுவுமில்லை. உயர்சாதியினருடைய கோயில்களுக்குப் போய் தூரத்தில் நின்று வணங்கி விட்டு வர வேண்டியதுதான். இலக்கணாவத்தை வேளாளருடைய ஆதிக்கத்திலுள்ள கோயிலொன்றில் நடைபெற்ற சாதி வெறிச் சண்டையின் காரணமாக, தாங்கள் வணங்குவதற்கு ஒரு கோயிலை உருவாக்க வேண்டிய ஒரு கட்டாயத் தேவை சந்தா தோட்டத்தாருக்கு ஏற்பட்டது. சிற்றம்பலம், மாணிக்கம், வேலுப்பிள்ளை, செல்லையா, கந்தையா, நமசிவாயம், கணபதிப் பிள்ளை என்று பல இளைஞர்களும் பெரியவர்களும் சேர்ந்து முதலி கோயிலை உருவாக்கினார்கள். முதலியம்மன் தான் முழுமையான பெயர். சுருக்கமாக முதலி கோயில் என்றே அனைவரும் அழைப்பார்கள்.

சிற்றம்பலத்துக்கு காந்தி என்பதுதான் பொதுவான பெயர். சிற்றம்பலம் காந்தி என்று இரட்டைப் பெயராக அமைத்து அழைக்கப்பட்டாலும், சிற்றம்பலத்தை விட்டு, காந்தி என்றே

அனைவரும் அழைப்பார்கள். இப் பெயர் எப்படி ஏற்பட்டது? இந்தியாவின் தவப்புதல்வர் மகாத்மா காந்தி 1927 நவம்பர் 17இல் இலங்கைக்கு வந்து யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்து, பருத்தித் துறையிலுள்ள வல்லிபுர ஆழ்வார் ஆலயத்துக்கு வந்து தனது அடியார்களுக்கு தரிசனம் கொடுத்தார்.

சிற்றம்பலம் அப்போது பிறந்த மூன்று மாதக் குழந்தையாயிருந்தார். காந்தியைத் தரிசிக்கச் சென்ற அவரது தந்தையும் உறவினரும் அவருக்கருகில் சென்று வணங்கினார்கள். காந்தியின் முகத்தைப் பார்த்த உறவினர்கள் வீட்டுக்கு வந்ததும், சாணைக் குழந்தை சிற்றம்பலத்தைப் பார்த்து, "அப்படியே காந்தியின் முகத்தைப் போலிருக்கிறது!" என்று வியப்புடன் சொல்லிக் கொஞ்சி மகிழ்ந்தார்கள். அன்றிலிருந்து, காந்தி, காந்தி, காந்தி என்று அனைவரும் அழைக்கத் தொடங்கி, இன்றுவரை அதே பெயரினால் அவர் அழைக்கப்படுகிறார். அவரும் சமூக சேவைகளில் ஈடுபட்டு சிறப்புக்குரிய அந்தப் பெயரை நிலைநிறுத்திக் கொண்டுள்ளார்.

ரவியுடன் படித்த ஒரு மாணவனின் தந்தை. மகாத்மாஜியை வல்லிபுரக் கோயிலில் தரிசித்து வந்தபின் பிறந்த தனது குழந்தைக்கு, கரம் சந்த்ர மோகனதாஸ் காந்தி என்று பெயர் சூட்டியதையும், அந்தப் புனிதப் பேரைச் சூடிக் கொண்டே அக்கிரமங்கள் செய்ததையும் முன்னர் அறிந்திருக்கிறோம்.

கந்தையா என்றொரு நாடகக் கலைஞர் சந்தா தோட்டத்தில் வாழ்ந்து வந்திருக்கிறார். அண்ணாவி கந்தையா என்றுதான் அவரை அனைவரும் குறிப்பிடுவார்கள். பக்கத்தில் உள்ள ஊர்களில் ஒன்றிரண்டு நாடகங்கள் பழக்கி மேடையேற்றியிருக்கிறார். ஆனால் தன் சொந்தக் கிராமத்தில் ஒரு நாடகமாவது பழக்கி மேடையேற்றவில்லை. வாலிபர்கள் மத்தியில் அந்தக் கலையுணர்வு துளிர்க்காமலிருந்தது ஒரு காரணமாயிருக்கக் கூடும்.

சந்தா தோட்டத்தில் முதலி கோயிலுக்கு கிழக்குப் பக்கமாக இலக்கணாவத்தை என்று ஓர் இடம் இருக்கிறது. நளவ சமூகத்தவர்களின் நான்கு குடும்பங்கள் அங்கு வசிக்கின்றனர். அதற்குமப்பால் கொத்தியாவத்தை என்னும் சிறு கிராமம் உள்ளது. அங்கும் நளவ சமூகத்தவர்களே வசிக்கின்றனர். மிகவும் பின் தள்ளப்பட்டவர்கள். கூலித் தொழில்தான் பிழைப்பு.

சந்தா தோட்டத்துக்கு வடக்குப் பக்கமாகச் சற்றுத் தூரத்தில் அமைந்திருக்கிறது ஊரியவத்தை என்ற கிராமம். உத்திராவத்தைக்

கண்மையில் உள்ள வயல் வெளியை அண்டி இரண்டு வீடுகளும், அப்பால் கால் மைல் தூரத்தில் இரண்டு வீடுகளும், வடக்குப் பக்கமாக தூரம் தூரமாக இரண்டு மூன்று வீடுகளும், நடுவில் மணியகாரன் வெட்டிக் கொடுத்த கிணற்றையண்டி ஒரு வீடுமாக மொத்தம் எட்டு வீடுகள் மாத்திரமே. ஆனால் பரந்த பிரதேசம். இரண்டு வீட்டார் கத்தோலிக்கர்கள். மற்றவர்கள் சைவ சமயத்தவர்கள். சைவர்கள், அக்கம் பக்கங்களிலுள்ள சைவக் கோயில்களுக்குப் போய் வணங்கிவர, கத்தோலிக்கர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் ஒரு மைலுக்கப்பாலுள்ள கலட்டி அந்தோனியாரிடம் போய் பூசை கண்டு வருவார்கள்.

ஊரியவத்தையின் கிழக்குத் திசையில் மாதனை எனப்படும் ஊர் பரந்து விரிந்து கிடக்கிறது. இரும்பு வேலை செய்யும் கொல்லரும் தச்சு வேலை செய்கிற தச்சரும் கலந்து வாழுகின்ற ஊர். எப்படியும் ஒரு சதுர மைல் பரப்புள்ள பிரதேசம் இத்தொழில்களைப் புரியும் இரு பகுதியினருக்குமிடையில் பாகுபாடு கிடையாது. சகல சடங்குகளும் ஒருமித்தே நடைபெறும். இவர்கள் வேளாளரை விடக் குறைவாகவே நடத்தப்படுகிறபடியால் சாதித்திமிர் கிடையாது. நளவ சமூகத்தவர்களைக் குறைவாக மதித்தாலும் எதிர்ப்புக் காட்டாமல் நடந்து கொள்வார்கள்.

நளவ பகுதியினர் வசிக்கும் ஊரியவத்தையின் மேற்குப் பக்கமாக இரண்டு கத்தோலிக்கக் குடும்பங்களும் ஒரு சைவக் குடும்பமும் இருக்கிறது. அந்த இடத்தை மிதியன் என்று அழைப்பார்கள். சைவக் குடும்பத்தைச் சேர்ந்த, ஆறடிக்கு மேல் உயரமான வாலிபருக்கு மிதியன் வேலுப்பிள்ளை என்று பெயர். திடகாத்திரமானவர். கடும் உழைப்பாளி. கள்ளுச் சீவி விற்றுப் பண வருவாயுடன் வாழ்ந்தவர். சந்தா தோட்டத்துடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். அங்கு நடைபெறும் சகல குடும்ப நிகழ்வுகள், சமூக நிகழ்வுகளில் மனநிறைவோடு பங்குபற்றுவார். வராத்துப்பளையில் கவிஞர் பசுபதியின் தங்கையை மணமுடித்து அங்கு வாழ்ந்து வந்தார்.

கலட்டி என்கிற ஊர், வரா, உத், சந்தா, ஊரி ஆகிய கிராமங்களிலிருந்து வெகு தூரத்திலிருப்பதாலும், மாறுபட்ட சமயத்தவர்கள் வாழ்வதாலும் ரவிக்கோ மற்றவர்களுக்கோ எவ்வித தொடர்புகளும் இல்லை. அங்குள்ளவர்கள், கள் இறக்கும் தொழில் செய்வது குறைவு. பருத்தித்துறை ரவுணுக்கு அண்மித்திருப்பதால் பலவித வேலைகளும் செய்வார்கள். மேசன் வேலை, தச்சு வேலையும் செய்வார்கள். சிலர் கூலிக்கு லொறி

ஒட்டிப் பிழைத்தார்கள். ரவியினுடைய தந்தை கந்தப்பர் 1937இல் தனது வீட்டுக் காணிக்குள் ஒரு கிணற்றை வெட்டி - இக் கிணறுதான் முதன் முதல் வீட்டு வளவில் கட்டப்பட்ட கிணறு என்று முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளது - உட்பக்கத்தைத் தரை மட்டத்துக்கு மட்டும் கற்களை வைத்துக் கட்டி விட்டு, பின்னர் ஏழெட்டு வருடம் கழித்துத்தான் உட்பக்கத்தை சீமெந்தால் பூசி மேற்கட்டையும் கட்டி முடித்தார்.

கலட்டியைச் சேர்ந்த மாம்பழம் என்று செல்லப் பெயரால் அழைக்கப்படும் ஒருவர்தான் அந்தக் கிணற்று வேலைகளைச் செய்தவர். ரவிக்கு அப்போது பதினாறு வயது. வராத்துப்பளையிலிருந்து நடந்து போய் மாம்பழத்தை வேலைக்கு வரச் சொல்லி விட்டு வருவான்.

கிணற்றின் மேற்கட்டை, வேறெங்கும் இல்லாதபடி சற் சதுர வடிவில் அமைத்துக் கட்டினார். இதனால் நான்கு மூலைகளிலும் முக்கோண வடிவிலான பகுதி விசாலமாய் அமைந்துள்ளது. தண்ணீர் கோலும் பகுதிக்கு எதிர்ப் பக்கத்திலுள்ள இரண்டு பகுதிகளிலும் இரண்டொருவர் உட்கார்ந்து உரையாடிக் கொண்டிருக்க முடியும்.

மாம்பழத்துடன் ஏற்பட்ட இந்தத் தொழில் முறை உறவினால் ரவியின் மைத்துனன் முறையான - ரவியின் தந்தையாருடைய தங்கையின் மகன் - சுப்பையா, மாம்பழத்தின் ஒரு மகளான அருளம்மாவை காதல் திருமணம் செய்து கொண்டார். காலப்போக்கில் அருளம்மாவும் வராத்துப்பளையில் குடியேறி வாழத் தொடங்கினாள். சுப்பையாவும் மரியதாஸ் என மாறிக் கொண்டான்.

## 30

தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு அக்காலத்தில் கோவில்கள் எதுவுமில்லை. உயர் சாதியினரின் கோயிலுக்குப் போய் தூர நின்று வணங்கி விட்டு உண்டியலில் காணிக்கையைப் போட்டு விட்டு வர வேண்டியதுதான். சந்தா தோட்டத்தவர்கள், எப்படியும் அரை மைல் தூரத்திலுள்ள புற்றளைப் பிள்ளையார் கோயிலுக்குப் போய், முதலில் நயினார்மாரைக் கையெடுத்துக் கும்பிட்டு, அதன் பின்னரே தெய்வத்தை வணங்கிவிட்டு வர வேண்டும். வீட்டில் யாருக்காவது நோய் நொடி என்றால் அல்லது கஷ்ட நஷ்ட மென்றால் உடனடியாகப் போக முடியாது. நேர்த்தி வைத்து வசதி கிடைத்த நாட்களிலேதான் போய் வரவேண்டும். இதன் காரணமாக தங்கள் கிராமத்தில் ஒரு கோயில் அமைக்க வேண்டுமென்று நீண்ட காலமாக கிராமத்தில் வாழ்ந்தவர்கள் நெஞ்சில் வேண்டுதல் நிலைத்திருந்தாலும், அதற்குத் தெய்வ அருள் கிடைக்கவில்லை.

சந்தா தோட்டத்தில் றோட்டுக்குத் தென் பக்கமாக இலக்கணாவத்தை என்ற பகுதியில் முதலி என்றொரு அம்மா வாழ்ந்து வந்தாள். கணவர் வேளையிலே இறந்து விட்டார். பிள்ளைகள் இல்லை. வயோதிபமடைந்து விட்டதனால் அனைவரும் அவளை முதலியாச்சி என்றே அழைத்தனர். ஓர் ஓலைக் குடிசையில் வாழ்ந்து வந்தாள். குடிசைக்கு முன்பாக பெரும் நிலப்பரப்பு இருந்தது. அக்காணியில் தன் உறவினர் இரண்டு பேரைக் கூலிக்கமர்த்தி தோட்டம் செய்வித்துக் கொண்டிருந்தாள். பயிர்களுக்கு நீர்ப்பாய்ச்ச மணியகாரன் வெட்டிக் கொடுத்த கிணறு பேருதவியாயிருந்தது. கணபதி, முத்தன் என்ற இரண்டு நளவ சமூகத்தவர்களும் தோட்ட வேலைக்கு உழைத்துக் கொண்டிருந்தார்கள். தோட்டம் கொத்துதல், பாத்தி கட்டுதல், பயிர்களுக்கு வாய்க்கால் திறந்து விடுதல் இப்படிப் பல வேலைகளும் செய்வார்கள். துலா தாழ்த்தித் தண்ணீர் இறைக்க முடியாது. ஆனால் துலாமிதிக்கும் வேலையை அவர்கள்தான் செய்ய வேண்டும். முதலியாச்சிக்கு சாந்த குணமும், தாராள மனதும். தோட்டத்தில் பறிக்கப்படும் காய்கறி வகைகளில், கணபதி, முத்தன்,

மற்றும் தன் சாதியைச் சேர்ந்த இருவருக்கும் வீட்டுக்குக் கொண்டு போகத் தாராளமாகக் கொடுத்த பின்பே, சந்தைக் கெடுத்துச் சென்று விற்பனை செய்வாள். சந்தைக்குக் கொண்டு செல்வதற்குமுன் அண்டை அயல் வீட்டுக்காரருக்கும் கொடுத்துதவுவாள்.

இப்படியே தனிமையில் வாழ்ந்த முதலியாச்சி பரமபதம் அடைந்ததும், அயலவரை அணைத்து வாழும் அவருடைய நற்பண்பின் காரணமாக அவள் வாழ்ந்த குடிசையை அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் விளக்கேற்றிக் கோயிலாக்கி விட்டார்கள். இதன் காரணமாக அயலவர்கள் மட்டுமல்ல, சந்தா தோட்டத்திலுள்ள அனைவருமே அங்கு வந்து முதலியை வணங்கத் தொடங்கினார்கள். நளவ சமூகத்தவர்களே அதிகளவுக்கு அங்கு வந்து முதலியாச்சியை வணங்கி வருவதால் ஆச்சிக்கு விளக்கேற்றும் வேலையை ஆச்சியின் உறவினர்கள் கை விட்டு விடவே, முத்தனும் கணபதியுமே அந்தப் பணியைச் செய்தார்கள். குடிசை கோயிலாகியது. ஆச்சியின் காணியில் பயிர்ச் செய்கையும் நடைபெறாமல் போனது. அதனால் காலப்போக்கில் அந்தப் பரந்த தோட்டக் காணியில் கிடுகினால் ஒரு கோவிலைக் கட்டி துதிக்கத் தொடங்கினார்கள். முதலியம்மன் கோயில் என்று அதற்குத் திருநாமம் வழங்கப்படலாயிற்று. முதலியம்மன் அருள்பாலித்தமையால், சாதி வெறியர்களைக் கும்பிட்டு வழி நடந்து போய், புற்றளைப் பிள்ளையாரைக் கும்பிட்டு வணங்கும் தேவை இல்லாமற் போய்விட்டது. காலப்போக்கில் அம்மையின் ஆலயத்தைக் கல்லாற் கட்டி, சந்தா தோட்டத்து மக்கள் மட்டுமல்ல, விசேட ஆராதனைகளின் போது உத்திராவத்தை, வராத்துப்பளை, ஊரியவத்தை மக்களும் வந்து வணங்கிச் செல்வார்கள்.

புற்றளைக் கிராமம், புலோலி என்ற பெரும் பகுதியில் உள்ளடங்கியது. அண்மையில் வெளிவந்த நூலொன்றுக்கு எழுதப்பட்ட முன்னுரையில் ஓர் அன்பர், புலோலியூரைச் சேர்ந்த சைவாலயங்களை நிரல்படுத்தும் போது முதலியம்மன் கோயிலையும் அதில் சேர்த்திருப்பதானது, முதலியம்மன் கோயில் வேளாளரால் உருவாக்கப்பட்டதென்பதற்குச் சான்றாக அமைகின்றது.

உத்திராவத்தைச் சனங்களுக்கும் இதே மாதிரி ஒரு நெருக்கடி, வேளையில் இருந்து வந்தது. அவர்களுக்குப் பல்லப்பை வயிரவர் கோயில் நெருக்கமாய் இருந்தது. அங்கு போய் அங்கும் தடித்த வெள்ளாளரைக் கும்பிட்டு வணங்கி விட்டுத்தான் பிறகு வயிரவருக்குக் கைதூக்க வேண்டும். இந்த நிலைமையில், சந்தா

தோட்டத்தைச் சேர்ந்த உறவினர்கள், அங்கு ஒரு கோயிலை உருவாக்கியது, இவர்கள் மனதிலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. இதன் காரணமாக அங்குள்ள முருகன்கள், கந்தையன்கள் என்று அனைவரும் இணைந்து வயிரவர் கோயிலை உருப்படுத்தினார்கள். முதலியம்மன் குடிகொண்ட இடம் போல, வயிரவரும் விசாலமான இடத்தில் குடி கொண்டிருக்கிறார்.

வராத்துப்பளையில் பண்டாவத்தைப் பிள்ளையார் என்றொரு கோயிலிருக்கிறது. ஊருக்கு வடமேற்குத் திசையில் இது அமைந்திருக்கிறது. கல்லால் கட்டப்பட்டுச் சீமை ஓடு போட்ட கோயில். அதுவும் பரந்த இடத்தில் அமைந்திருக்கிறது. கோயிலைப் பரிபாலிக்கும் மடப்பள்ளியர் சிலரே அங்கு வசிப்பதாலும் - அவர்களும் அங்கொன்றும் இங்கொன்றுமாக வசிப்பதாலும் கோயிலடிக்கு வருவது குறைவு. வெள்ளிக்கிழமைகளில் ஒரு பூசாரி வந்து பூசை வைப்பார். பூசைக்கும் இரண்டொருவர்தான் வருவார்கள். இல்லையென்றால் பூசாரியார் தன் பாட்டிலே பூசையை வைத்துவிட்டுச் செல்வார்.

கோயிலுக்கு முன்பாக பெரிய ஆலமரமொன்று நிற்கின்றது. பிள்ளையாருக்கு உரிய மரம் ஆலமரம் என்று அறியக் கிடக்கின்றது. அப்பிரதேசத்தில் வத்தைகளை உருவாக்கிய சிங்கள ஆட்சியாளர்களின் பரிவாரங்கள், புத்தர் ஞானம் பெற்ற அந்தப் போதி மரத்தை அங்கு நாட்டியிருக்க வேண்டும். ஆனால் கோயில் முகப்பில், பின் சந்ததியினர் நாட்டிய வேப்பமரம் ஒன்றும் நிழல் கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஏதாவது வயிற்றுக் கோளாற்றுக்கு அவித்துக் குடிக்க, பேயோட்ட, சன்னதம் ஆட்டுவிக்க, பருவமடைந்த பெண் பிள்ளைகளுக்குத் தலையில் தடவி முழுக வார்க்க என்றெல்லாத் தேவைகளுக்கும் வேப்பங்குளை பிடுங்க பலரும் அங்கு வருவார்கள்.

பண்டாவத்தைப் பிள்ளையார் கோவிலுக்கு வடமேற்கு மூலையில் ஒரு பரந்த காணி ஓரத்தில் சிங்கள வயிரவர் கோயில் என்றொரு கோயில் இருக்கிறது. ஒரு சிறிய இலந்தை மரத்தின் கீழ், ஒரு கல்லை வைத்து சூலம் ஒன்றைக் குத்தியிருக்கிறார்கள். விளக்கு எதுவும் இல்லை. சண்டித்தனம் நிறைந்த தெய்வம் என்பது பொதுவான அபிப்பிராயம். சனங்களும், விஷமத்தனமான செயற்பாடுகளிலிருந்து தப்பிக் கொள்வதற்காக அந்த வயிரவருக்கு நேர்த்திக் கடன் வைத்து, காரியம் நிறைவேறியதும் அங்கு சென்று கர்ப்பூரம் கொளுத்தி வணங்கிவிட்டு வருவார்கள். சிங்கள வயிரவர்

கோயில் காலங் காலமாக அதே கோலத்திலேயே காட்சியளித்து வருகிறது.

வராத்துப்பளையில் தென்கிழக்குத் திசையில் மணற்பரப்போரமாக வாழ்ந்தவர்களுக்கு, பண்டாவத்தைப் பிள்ளையார் புழக்கத்துக்கு அண்மிக்கவில்லையென்ற நிலைப்பாட்டில், தம் சமூகத்தவர்கள் சந்தா தோட்டத்தில் முதலியம்மனுக்கும், உத்திராவத்தையில் வயிரவருக்கும் கோயில்கள் அமைத்து வழிபடத் தொடங்க, தாங்களும் ஒரு கோயில் அமைத்து வழிபட வேண்டுமென்ற பக்தியுணர்வோ அங்கலாய்ப்போ ஏற்பட, மணல் வெளியோரமாக, ஒரு கல்லை வைத்துச் சூலத்தை நட்டு, வயிரவருக்கு ஆலாத்தி எடுக்கத் தொடங்கினர். பின்னர் ஒரு கிடுகுக் கொட்டிலை அமைத்து பூசைகளும் நடத்தத் தொடங்கினர். மினாசி என்றழைக்கப்பட்ட வினாசி என்பவரும் அவருடைய மனைவி பொன்னியும்தான் இக்கோயிலை உருவாக்கியவர்களாவர். காலப்போக்கில் பலமான கிடுகுக் கொட்டில் அமைத்து அங்குள்ளவர்கள் அனைவரும் வந்து வணங்கத் தொடங்கினர். நேர்த்திக் கடன்களும் வைத்து நிறைவேற்றினர்.

என்றாலும் தடித்த சமூகத்தினரின் பரிபாலனத்தில் அமைந்துள்ள சகல கோயில்களிலும் விசேட பூசைகள் நடைபெறும் காலங்களில் அங்கு போய் வணங்கி வருவர்.

# 31

ரவியின் சமூகத்தவர்கள் வாழும் வராத்துப்பளை, உத்திராவத்தை சந்தாதோட்டம், ஊரியவத்தை, கலட்டி ஆகிய கிராமங்களைப் பார்த்தோம். இனி அக்கம் பக்கங்களிலுள்ள வேறு சாதியார் வாழுகின்ற கிராமங்களைச் சிறிதளவு சுற்றிப் பார்ப்போம்.

முதலில், ரவியின் கிராமத்தையண்டி, கிழக்குத் திசையில் இருக்கும் கற்கோவளத்தைச் சுற்றி வருவோம்.

மீனவர்கள் வசிக்கும் கிராமம். அவர்களைக் கரையார் என்றுதான் சகலரும் குறிப்பிடுவார்கள். கரையோரம் வசிப்பவர்கள் என்றால் அதுதான் இல்லை. அவர்கள் வசிக்கும் பகுதிக்கும் கடற்கரைக்குமிடைத் தூரம் ஒரு மைலுக்குக் குறையாது. மணற் பிரதேசம். ஆனால் கரை வலை இழுத்து - அதாவது கடலில் தங்கள் தொழிலைச் செய்கின்ற படியால் கரையார் என்ற பெயர் பொருத்தமாயமைந்து விட்டது.

எப்படியும் ஒரு மைல் நீளம் ஒரு மைல் அகலமான பிரதேசத்தில் வசிக்கிறார்கள். நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள். இவர்களுள் கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்த சிலரும், பெரும்பான்மையோர் சைவ சமயத்தவருமாவர். வெள்ளையர் இலங்கைக்கு வந்த காலத்தில், அவர்கள் புரட்டஸ்தாந்து சமயத்தைப் பரப்பியதில், சில குடும்பங்கள் அச்சமயத்திற் சேர்ந்து, படித்து உத்தியோகம் பார்த்து நாகரிக வாழ்க்கை வாழ்ந்து இரண்டாந் தரப் பிரஜைகளாகியுள்ளனர். மற்றையவர்கள் அனைவரும் தொழிலாளர்களே! கடற்றொழிலாளர்கள். அவர்களில் சிலர் வலைகள், தோணிகள் வைத்து, சம்மாட்டிகள் என அழைக்கப்பட்டு தொழில் நடத்தினாலும் மற்றவர்கள் அனைவரும் அன்றாடங் காய்ச்சிகளே. அவர்களுக்குக் கீழ் தொழில் புரிபவர்களே.

வலை இழுத்து மீன் பிடித்து கூலி பெறுவார்கள். கறிக்கு மீனும் கிடைக்கும். பிடித்த மீன்கள் சந்தைக் கனுப்பப்பட்டு விற்பனை செய்வது போக, கருவாட்டுக்குக் காய வைக்கவும்

படும். கருவாட்டு வேலைகளைப் பெண்களே செய்வார்கள். மீன் வியாபாரம் கைக்குளம் சந்தை என்றழைக்கப்படும் கற்கோவளம் சந்தையில் ஓரளவுக்குத் தான் நடைபெறும். மந்திகை ஆஸ்பத்திரிக் கப்பால் உள்ள கலிகை என்ற ஊரிலிருந்து பெண்கள் குறுக்குக் கட்டுடன் ஓட்டமும் நடையுமாய் வந்து, கடற்கரைக்குப் போய் மீன் வாங்கிக் கடகங்களில் சுமந்து கொண்டு சென்று பருத்தித் துறை மார்க்கெட்டிலும், நெல்லியடிச் சந்தையிலும் விற்பனை செய்வார்கள். இந்தப் பெண்களும் நளவ சமூகத்தைச் சேர்ந்தவர்களே. மிகவும் பின் தள்ளப்பட்ட வகுப்பினர்.

மீனவக் குடும்பங்கள் வசிக்கும் பகுதி முழுவதும் மணற் பிரதேசம். சின்னச் சின்ன வீடுகள். வீடுகளுக்குச் சுவர் வைக்க, களி மண் கிடையாது. கூரையைப் பனையோலையால் வேய்ந்து கிடுகினால் மறைப்புக் கட்டி விடுவார்கள். கஷ்டப்பட்டுக் களிமண் கொண்டு வந்து திண்ணை அமைத்து விடுவார்கள். சமையல் செய்யும் இடத்தை - கிடுகு வேலி, அடுப்பின் நெருப்பினால் ஆபத்தையுண்டாக்கும் என்பதனால், பனைமட்டை வரிந்து மறைத்து விடுவார்கள். நிலமும் மணல்பரப்பு. குடிசனமும் அதிகம். அதனால் சிறு சிறு துண்டுக் காணிகளில் வீடுகளை அமைத்துக் கொள்வார்கள். பூவரசு, கிளுவை, முள்முருக்கு முதலிய மரங்களை நாட்டி வேலியடைத்துக் கொள்வார்கள். ஊரின் நடுவே ஒரு பலசரக்குக் கடை இருந்தது. குறைந்த அளவு சாமான்கள்தான். சின்னச் சின்ன தேவைகளுக்கு அங்கு போய் வாங்குவார்கள். றோட்டோரம் இருக்கிற கைக்குளம் சந்தைக்குப் போய் அங்குள்ள கடைகளில் பொருட்களைத் தேவையான அளவுக்கு வாங்குவார்கள்.

ஊரின் கிழக்குத் திசையில் சிதம்பரி கந்தையா என்னும் சம்மாட்டி வசித்து வந்தார். முதன்முதல் கல்வீடு கட்டியவர் அவர்தான். சொந்தக் காணிக்குள் முதன்முதல் கிணற்றை தோண்டியவரும் அவரே. மற்றும் படி அங்கும் மணியகாரன் வெட்டிக் கொடுத்த கிணறுகள்தான். பிறகு சொந்தக் கிணறுகள் பெருகத் தொடங்கின. மணற் பிரதேசமானபடியால் கிணறு தோண்டப் பெருஞ் செலவில்லை. தண்ணீரும் அதிக ஆழத்தில் இல்லை. கட்டத்தான் காசு வேண்டும்.

மீன் பிடித்து வாழும் இந்த மக்களில், ஒரு மாணவன் மிகுந்த ஆர்வத்தோடு படித்து ஆசிரியரானார். அருளானந்தம் என்பது அவர் பெயர். ஆனந்த வாத்தியார் என்றுதான் அனைவரும் அழைப்பார்கள். அருகில் உள்ள கற்கோவளம் மெ.மி. பாடசாலையில் படிப்பித்துக்

கொண்டிருந்தார். அவர் ஒரு சுதேச வைத்தியருமாவார். காலையில் பாடசாலைக்குப் புறப்படுவதற்கு முன், வீட்டுக்கு வரும் நோயாளிகளைப் பரிசோதித்து மருந்துகள் கொடுத்து விட்டு வருவார்.

இவற்றுக்கு மேலாக அவர் ஒரு சிறந்த கலைஞர். பேச்சு எழுத்து பாட்டு கவிதை புனைதல் எல்லாம் கைவரப் பெற்ற கலைஞர்.

ரவிக்குப் பதினெட்டுப் பத்தொன்பது வயதாயிருக்கும் போது பருத்தித் துறையிலுள்ள வடலங்கா புத்தகசாலையிலிருந்து ஒரு நாவல் கிடைத்தது. அந்நாவலின் பெயரின் கவர்ச்சி அவனை வாங்கத் தூண்டியது.

'காந்தாமணி அல்லது தீண்டாமைக்குச் சாவுமணி' என்று இரட்டைத் தலைப்பு. நாவல்களுக்கு இரட்டை தலைப்பு இடுவது அக்காலத்து வழக்கம். வீரகேசரிப் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியர் எச்.நெல்லையா எழுதி வெளியிட்டது.

ஒரு பறைய சாதிப் பெண்ணை ஒரு பண்ணையாரின்மகன் காதலித்துத் திருமணம் செய்ய முயற்சிக்கிறான். ஒரு தீக்ஷிதர் தன்னாலான கொடுமைகள், சதி முயற்சிகளில் ஈடுபட்டு அதனைத் தடுக்க முயல்கிறார். இறுதியில் திருமணம் நிறைவேறுவதுதான் கதை.

கதையைப் படித்த ரவிக்கு எப்படியும் அதனை நாடகமாக்கி அரங்கேற்ற வேண்டுமென்று ஒரு தீவிர மனஉறுத்தல் ஏற்பட்டது. புத்தகத்தை ஆனந்த வாத்தியாரிடம் கொடுத்து, அதை நாடகமாக்கித் தரும்படி அன்பாக வேண்டிக் கொண்டான். ரவி ஆனந்த வாத்தியாரிடம் படித்த மாணவனல்ல. ஆனாலும், அடுத்த பின் தங்கிய கிராமத்தில் பிறந்து படித்த இளைஞன். பத்திரிகைகளுக்குச் செய்திகள் திரட்டி அனுப்பிக் கொண்டிருப்பவன். அவன் மீதுள்ள பற்றுதலின் காரணமாக அவர் அதை ஏற்றுச் சில வாரங்களில் அதை நாடகமாக்கிக் கொடுத்தார். கால மாற்றத்துக்கேற்ற மாதிரி 'காந்தாமணி' என்று மட்டும் தலைப்புச் சூட்டியிருந்தார். வராத்துப்பளை வாலிபர்கள் இந்நாடகத்தைப் பழகி, அரங்கேற்றிய விபரத்தைப் பின்னர் தெரிந்து கொள்வோம்.

இராசலிங்கம் என்றொரு தந்தையில்லாத மாணவன் எஸ்.எஸ்.ஸி.யில் சித்தியெய்தி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பிரவேசிப்பதற்காக கிறிஸ்தவ சமயத்தில் இணைந்து பயிற்சி பெற்று ஆசிரியரானார். பெயரை கிறிஸ்தவ சமய இன்னிஸலோடு

இணைத்து டி.எம்.இராசலிங்கம் என்ற பெயரில் பிரசித்தமானார். கொஞ்சம் கிறுக்குக்குணம்; மற்றவர்களின் முன்னேற்றத்தில் புகைச்சலும் உண்டு.

கற்கோவளம் என்ற தனது கிராமத்தின் பெயரைக் கற்கைவளம் என்று சொல்லத் தொடங்கினார். ஆசிரியப் பயிற்சி பெறுவதற்கு முன் கொழும்பிலிருந்து வெளிவரும் வீரகேசரிப் பத்திரிகைக்கு பருத்தித்துறை நிருபராகக் கடமையாற்றினார். அங்கங்கு நடைபெறும் நிகழ்வுகளை எழுதி அனுப்புவதோடு, அடிக்கடி கற்கை வளத்தில் அது நிகழ்ந்தது இது நிகழ்ந்தது என்று செய்திகள் அனுப்பிக் கொண்டிருப்பார்.

ஆசிரிய பயிற்சிக்குப் போனதும் நிருபர் வேலையைக் கைவிட வேண்டியேற்பட்டது. அவ்வேளை எஸ்.எஸ்.ஸி. சித்தியெய்தி விட்டு, வீட்டிலிருந்த ரவிக்கு அவ்வேலையைச் செய்யச் சந்தர்ப்பம் கிடைத்தது. அவன் அப்பணியை மேற்கொண்டான்.

கற்கோவளத்தில் மீன் பிடித் தொழிலை மேற்கொள்ளும் மக்களில் முதன்முதலாக ஆசிரியராய் வந்தவர் அருளானந்தம் என்ற முழுப் பெயர் கொண்ட ஆனந்த வாத்தியார்தான். அதன்பிறகு டி.எம். இராசலிங்கம். தொடர்ந்து சதானந்தம், கணபதிப் பிள்ளை என்போரும், குணரத்தினம் என்பவரும் ஆசிரியராய் வந்தார்கள். செல்வராஜா என்பவர் ஹாட்லிக் கல்லூரியில் படித்து சுகாதார பரிசோதகராகப் பணிபுரிந்தார். குணரத்தினம் என்பவர் தகப்பன். மீன்பிடித்தொழில் செய்ய, படித்து முன்னேறியவராவார்.

## 32

கற்கோவளத்தின் வட திசையில் எட்டுப் பத்துக் குடும்பங்கள் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவி வாழ்ந்து வந்தனர். மெ.மி. பாடசாலையிலிருந்து கிழக்கு நோக்கி அவர்களது இல்லங்கள் அமைந்திருந்தன. வெள்ளைக்காரன் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்காக கல்வியையும் அதனோடு இணைத்துப் பாடசாலைகளையும் உருவாக்கினான். பருத்தித் துறையில் ஹாட்லிக் கல்லூரி என்ற ஆண்கள் பாடசாலை, மெதொடிஸ்த பெண்கள் கல்லூரி என்ற பெண்கள் பாடசாலை என்று இரு பெரும் ஆங்கிலக் கல்லூரிகளை அமைத்ததோடு சில கிராமங்களில் மெதொடிஸ்த மிஸன் பாடசாலைகள் என்று தமிழ்மொழிக் கல்வி நிலையங்களையும் உருவாக்கினான். அந்த வகையில் அமைந்ததுதான் கற்கோவளம் மெ.மி.பாடசாலை. அந்தப் பாடசாலை, ரவியின் அண்ணாமார் அக்காமார் படிக்கும் காலத்திலேயே இயங்கிக் கொண்டிருந்தது. ஜே.பி. செல்லத்துரை என்பவர் நீண்ட காலமாக அதன் தலைமையாசிரியராகப் பொறுப்பேற்று நடத்திக் கொண்டிருந்தார். தூர இடங்களிலிருந்து வரும் சில கிறிஸ்தவ ஆசிரியர்களும், ஆனந்த வாத்தியார் என அழைக்கப்படும் அருளானந்தமும் அங்கு பணிபுரிந்தனர்.

சுமார் 50 அடி நீளமும் 40 அடி அகலமுமுள்ள ஒரு பெரிய மண்டபம்தான் பள்ளிக்கூடம். கல்லால் கட்டப்பட்டு அரைச்சுவர் வைத்துச் சீமை ஓட்டினால் வேயப்பட்ட மண்டபம் ஒரு பக்கமாக நடுவில் ஒரு சிறிய மேடை. அந்த மேடைதான் தலைமையாசிரியரின் இருப்பிடமும் அலுவலகமும். அந்த மேடைக்குப் பின்பக்கம் ஒரு சிறிய மண்டபம். அது அவர்களின் தேவாலயம். ஞாயிற்றுக்கிழமைகளில் அங்கு கூடி ஆராதனை செய்வார்கள். பருத்தித் துறையிலிருந்து ஒரு சுவாமி வந்து பூசை நடத்தி வைப்பார். பாடசாலைக் கட்டடத்தின் தென்மேற்கு மூலையில் இருபது அடி உயரத்தில் ஒரு மணியடிக்கும் கோபுரம், பூஜைக்கு பக்தர்களை அழைக்க மணியடிப்பதற்காக.

கிறிஸ்தவர்கள் அனைவரும் படித்து, ஆசிரியர்களாக, அரசாங்க உத்தியோகத்தர்களாக, தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்களாக இருந்தனர். ஏழை மீனவர்களைப் போலல்லாமல் அனைவரும் கல் வீடு கட்டி வாழ்ந்து வந்தனர். ஆசிரியர்களுள் தம்பி ஐயா வாத்தியார் என்பவர் வேறோரிடத்திலிருந்த மெ.மி. பாடசாலையில் படிப்பித்துக் கொண்டிருந்தார். ஜோன் முத்தையா என்ற ஆசிரியர் கற்கோவளம் மெ.மி. பாடசாலையில் படிப்பித்துக் கொண்டிருந்தார். அவர் ஒரு சுதேச வைத்தியருமாவார். காலையில் அவர் பாடசாலைக்குப் புறப்படு முன், வரும் நோயாளிகளைக் கைபிடித்துப் பார்த்து மருந்துகள் கொடுத்து விட்டுத் தான் வருவார். இதன் காரணமாக பல நாட்கள் கால தாமதமாகவே வருவார். ஜே.பி. செல்லத்துரை கொஞ்சம் பொறுமைசாலியும் பொறுப்புணர்ச்சியுமுள்ளவர். இதன் காரணமாக, முத்தையா வாத்தியார் நேரம் பிந்தி வரும்போது இங்கிதமாக, நேரத்துக்கு வரத் தெண்டியுங்கள் என்று சொல்லி வைப்பார்.

ரவி என்ற இராசனை, அவளது தாயினது தம்பியாரான மாணிக்கம் தன்னுடைய மகன் தம்பிராசனுடன் பாடசாலையில் சேர்த்து விட்டார். சிலேற்று, பென்சில், புத்தகம் எதுவும் கிடையாது. ஐந்தாறு மாணவர்கள் வெறுங்கையுடன் அரிவரி வகுப்புப் படிக்க வந்திருந்தார்கள். அவர்களுக்கு மேசை வாங்கு எதுவுமில்லை. மற்ற வகுப்புக்களில் மாணவர்கள் இரண்டு மூன்று மேசை வாங்குகளில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தார்கள். அரிவரி வகுப்பில் சேர்ந்த புது மாணவர்கள் ஐந்தாறு பேரும் தலைமையாசிரியரின் மேடைக்குப் பக்கமாக, வாசலில் இருந்து சீமேந்து விறாந்தையில், மண்ணை அள்ளிப் போட்டுப் பரப்பி அ, ஆ எழுதப் பழகிக் கொண்டிருக்கிறார்கள்.

முத்தையா வாத்தியார் அவர்களைக் கடந்து வரவுப் புத்தகத்தில் கையெழுத்திடுவதற்காக, தலைமையாசிரியரின் மேடையை நோக்கிப் போகின்றார். முதலாம் பாடம் முடிந்திருக்க வேண்டும். அதிக நேரம் பிந்தி வந்தபடியால், த.ஆ. கையெழுத்திடும் கொப்பியைக் கொடுக்க மறுத்திருக்க வேண்டும். முத்தையா வாத்தியார் ஏதோ முறுமுறுத்தார். தலைமை வாத்தியாரும் ஏதோ பதிலுக்குச் சொன்னார்.

அவ்வளவுதான்!'

தலைமை வாத்தியாரின் மேசையிலிருந்த நீளமான பிரம்பை எடுத்துக் கீழே நின்றபடி ஓங்கி அந்தப் பக்கமும் இந்தப் பக்கமுமாக அவருக்கு இரண்டு அடி அடித்தார்.

தலைமை வாத்தியார் கை நீட்டவுமில்லை; வாய் திறக்கவுமில்லை.

முத்தையா வாத்தியார், பிரம்பை மேசையில் வீசிவிட்டு வெளியே நடக்கத் தொடங்கினார்.

பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் விறைத்துப் போய் மேடையையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். அந்தப் பேரதிர்ச்சியான சம்பவம், ரவிக்கு இன்றுவரை மனதை விட்டகலாமலே இருக்கின்றது.

முத்தையா வாத்தியாரை, பாடசாலைகளை நிர்வகிக்கும் சபை விசாரணை செய்து, வேறு பாடசாலைக்கு மாற்றியது.

செல்லத்துரை வாத்தியார் கருணையும் தெய்வ பக்தியும் நிரம்பப் பெற்றவர். எவருடனும் கார சாரமாகப் பேச மாட்டார். கிறிஸ்தவர்கள் வசிக்கும் பகுதியில், கடற்கரை யோரமாக ஒரு மணல் மேட்டையண்டி அவரது வீடு அமைந்திருந்தது. கல் வீடுதான். ஆனால் ஓலைக்கூரை, வருபவர்களோடு உரையாட வசதியான மண்டபம். அங்கிருந்தும் உரையாடுவார். நீண்ட நேரம் பொழுது போக்க வேண்டுமானால் அதுவும் மாலை வேளைகளில் வெளியே உள்ள மணல் மேட்டுக்கு அழைத்துச் சென்று கடலோரத்தைப் பார்த்துக் கொண்டே பேசி மகிழ்வார்கள். ரவிக்கும் இந்தச் சுகானுபவம் கிடைத்துள்ளது.

வராத்துப்பளையிலுள்ள படித்த மாணவர்களான பசுபதி, ரவீந்திரன் இருவரையும் மெதொடிஸ்த சபையில் சேர்ப்பதற்கு அவர்களை அணுகிக் கொண்டிருந்தார் செல்லத்துரை ஆசிரியர். ஆனால் அவர்களோ, நாஸ்திகக் கருத்துக்களில் மூழ்கிப் போயிருந்தன.மயால், சமயத்தில் சேர மறுத்துக் கொண்டிருந்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் பசுபதி ஆசிரியப் பயிற்சி பெறுவதற்கு முயற்சித்துக் கொண்டிருந்தார்.

சைவப் பிறவிகளான இவர்கள், திருநெல்வேலியில் சைவப் பெருமக்கள் நிர்வகிக்கும் சைவாசிரிய பயிற்சிக்கலாசாலையில் சேர்வது நடக்க முடியாத காரியம். தேர்வுப் பரீட்சையில் அதிகளவு புள்ளிகள் எடுத்து நேர்முகத் தேர்வுக்குப் போனால் அங்கு, பிறப்புச்

சாட்சிப் பத்திரத்தைப் பார்த்து, விண்ணப்பதாரியின் தொழில்- - மரமேறி, பறையடித்தல், சலவைத் தொழில் செய்தல் என்ற வகையில் இருந்தால் அவ்வளவுதான்! கை கழுவி விடுவார்கள். கோப்பாயில் அரசினர் ஆசிரிய கலாசாலை இருந்தது. அதற்கு நிறையப் புள்ளிகள் எடுத்திருந்தால் தான் தெரிவு செய்யப்படலாம்.

இந்த இக்கட்டான நிலையில் நல்லூரில், ஐக்கிய கிறிஸ்தவ ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதற்குக் கிறிஸ்தவர்கள் மட்டுமே தெரிவு செய்யப்படுவார்கள். இந்த நிலையில் செல்லத்துரை வாத்தியார் இவர்களை மெதொடிஸ்த சபையில் சேர்க்க முயற்சித்துக் கொண்டிருக்க, இவர்கள் தங்கள் பகுத்தறிவுக் குருநாதரும், தமிழ்ப் பேரறிஞருமான கந்த முருகேசனாரிடம் போய், தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

கந்த முருகேசன் பெரும் ஆர்வத்துடன் அனுமதி வழங்கினார். அனுமதியல்ல, பெரிய அளவில் உற்சாகமூட்டினார். ''சமயத்தின் பேரால் உவங்கள் செய்யிற அநியாயத்துக்கு நாங்கள் பதிலடி கொடுக்க வேணும்! போங்க. போய் கிறிஸ்தவ சமயத்திலை ஞானஸ்நானம் பெறுங்க!'' என்று ஆசீர்வாதம் வழங்கினார். அவ்வளவு தான்! பசுபதி முதலிலும் அடுத்து ரவியும் கிறிஸ்தவர்களாக ஞானஸ்நானம் பெற்று, அந்த அனுசரணையில் நல்லூர் ஆசிரிய கலா சாலையில் பயிற்சி பெற்று ஆசிரியர்களாயினர்.

ரவி, பசுபதியை விட நாலைந்து வயது இளையவன். பசுபதி வேளையில் பயிற்சி பெற்று ஆசிரியத் தொழிலுக்குப் போக, ரவி நான்கு வருடங்களின் பின் பிரவேசப் பரீட்சை எழுதி நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டான். ஆனாலும் அந்த ஆண்டு அவனுக்கு பிரவேசம் கிடைக்கவில்லை. அடுத்த ஆண்டும் எழுதினான். தேவையான புள்ளிகள் எடுத்து நேர்முகத் தேர்வுக்குப் போனான். தேர்வில் எல்லா விபரங்களும் விசாரிக்கப்பட்டு, அவன் முகத்தில் ஒரு வெற்றிகரமான முடிவு வெளிப்பட, தேர்வாளர்களில் ஒருவராயிருந்த செல்லையா ஆசிரியர் (விரிவுரையாளர்) "நீ கம்யூனிஸ்ட்காரன் என்று போன வருஷம் உன்னைப் பற்றி ஒரு மொட்டைக் கடிதம் வந்தது. அதனால்தான் போன வருடம் உன்னைக் கூப்பிடவில்லை. இந்த வருடமும் நீ சோதனையில் நிறையப் புள்ளிகள் எடுத்திருக்கிறபடியால் தெரிவு செய்கிறோம்!" என்று சொல்லித் தான் அனுமதி வழங்கினார்.

மொட்டைக் கடிதம் எழுதியது யார்? என்பது கற்கைவளம் என்று தன் ஊருக்குப் பெயர் சூட்டி, சமயம் மாறிப் பயிற்சி பெற்ற ஆசிரியப் பெருந்தகையான டி.எம்.இராசலிங்கம் என்ற பேரறிஞன் தான் என்பது காலப் போக்கில் தெரிய வந்தது. என்றாலும் ரவி அவனுடன் மோதிக் கொள்ளாமல் தன் பணியை முன்னெடுத்துச் சென்றான்.

## 33

**தா**ழ்த்தப்பட்ட மக்களைச் சேர்ந்த நளவ சமூகத்தவர்கள் வசிக்கும் கிராமங்களைப் பற்றிச் சொல்லிவிட்டு, மற்றொரு தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்கள் வசிக்கும் பறைய தெருவைப் பற்றிச் சொல்லாமல் மீனவக் குடும்பங்கள் வசிக்கும் கற்கோவளத்தைப் பற்றிச் சொன்னதையிட்டு வாசகர்கள் என்ன நினைக்கிறார்களோ தெரியாது. கற்கோவளம் வராத்துப்பளையை அண்டியிருப்பதால் சொல்ல நேர்ந்தது. எனினும் இப்போது பறைய தெருவைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

வராத்துப்பளையிலிருந்து வடமேற்குத் திசையில் ஆரம்பிக்கிறது இந்த ஊர். பறைய தெரு, பறைய ஊர் என்பதுதான் அக்கிராமத்துக்குரிய பெயர். அவர்களிலும் முப்பது குடிமனை இருக்கும். பறையடிப்பதுதான் அவர்களது தொழில். உயர்சாதியினரின் வீடுகளில் நடைபெறும் செத்தவீடு, சின்னச் சின்னக் கொண்டாட்டங்கள், கோயிற் பூசைகளுக்குப் போய் பறைமேளம் அடிப்பார்கள். ஆண்களும் பெண்களும் கூலி வேலைகளும் செய்வார்கள். மிகவும் வறுமையான குடும்பங்கள், கஷ்டமான சீவியம். பறையடிக்கப் போகிற இடங்களில் வழங்கப்படுகிற சாதமும், பட்சணங்களும் உணவாகும். அக்கம் பக்கங்களிலுள்ள வேளாளருக்கு மட்டுமன்றி, மடப்பள்ளியர், கோவியர், கொல்லர், தட்டார், கரையார் என்றிவ்வாறான சகல மக்களுக்கும் பறையடிப்பார்கள்.

கற்கோவளம் மெ.மி. பாடசாலை பக்கத்திலிருந்தாலும் தமது பிள்ளைகளைப் படிக்க அனுப்ப மாட்டார்கள். ஒன்றிரண்டு பேர் 3, 4, 5ஆம் வகுப்பு வரை படித்திருப்பார்கள். அவ்வளவுதான்.

பனை மரங்கள் செறிந்த கிராமம். மணியகாரனால் ஆரம்பத்தில் ஒன்றிரண்டு கிணறுகள் வெட்டிக் கொடுக்கப்பட்டிருந்தன. குடிசை வீடுகள். ஓலைக் கூரை. அவர்களது கிராமத்தை ஊடறுத்து ஒழுங்கையொன்று செல்கிறது. மாதனைக்குப் போகிறவர்களும், பருத்தித் துறைப் பட்டினத்துக்குப் போகிறவர்களும் அந்த ஒழுங்கை

யூடாகத்தான் செல்ல வேண்டும். எவ்வித பிரக்ஞையுமின்றி "பறைய ஊருக்காலை போய்... கண்ணகையம்மன் கோயிலைத் தாண்டி பருத்துறைச் சந்தைக்குப் போக வேண்டும்!" என்று வெளிப்படையாகவே எவரும் சொல்லுவார்கள்.

ரவிக்கு எட்டுப் பத்து வயதாயிருக்கும் போது, கறுவல் அண்ணாவி என்றொரு கிழவர் அங்கு வாழ்ந்து நாட்டுக் கூத்துப் பழக்கியிருந்தார். வராத்துப்பளையில், ஏதோ ஒரு நாட்டுக் கூத்தைப் பழக்கி, நெல்லண்டைப் பத்திரகாளி கோயிலில் ஆடுவித்தார். அண்ணாவியார், பாத்திரங்களோடு பக்கத்தில் நின்று தாளம் போட்டு ஆட்டுவிக்க வேண்டும். அண்ணாவியும் சேர்ந்து கை கால்களை அசைத்து ஆட வேண்டும். பாட வேண்டும். கையில் தாளங்கள் ஒலித்துக் கொண்டேயிருக்கும்.

பெயர் நினைவில்லாத ஒரு பாத்திரம். கால்களையும் கைகளையும் அங்குமிங்கும் அசைத்து ஆடி ஆடிப் பாடிக் கொண்டிருக்கையில், கால் தடுக்கி விழுந்து போனான். விழுந்தவன் கணமும் பிசகாமல் எழுந்து, தாளலயத்தோடு ஆடத் தொடங்க, அண்ணாவியும் மிறாய்த்த குரலில் 'விழுந்தெழும்பி ஓடி வாடா வீரகுமாரா...' என்று மிடுக்குடன் பாடி, சபையினரின் கை தட்டுதலைப் பெற்றார். நாட்டுக் கூத்துக்கள் அந்நாட்களில் மேடைகளில் அரங்கேறுவதில்லை. ஒரு சிறிய பந்தல் போட்டு, அந்தப் பந்தலிலேயே நடைபெறும். வெறும் நிலம்தான் தளம். கறுவல் அண்ணாவிக்கு நல்ல பேரும் புகழும் இருந்தது. ரவியின் இளம் வயதிலேயே அவர் பரகதி அடைந்து விட்டார். அவருக்கு கை வைத்தியமும் தெரியும்.

அவர்களுக்குள்ளே பிரசித்தக் கந்தன் என்று ஒருவன் இருந்தான். உடையாரின் கையாள். மணியகாரனின் ஆட்சிக்குட்பட்ட கிராமங்களுக்கு ஏதாவது அறிவித்தல் செய்ய வேண்டுமானால், உடையார் பிரசித்தக் கந்தனை அழைத்து, அந்த அறிவித்தலை அவரிடம் கொடுப்பார். கந்தனுக்குக் கொஞ்சம் வாசிக்கத் தெரியும். தெரிந்தாலும் உடையார் அந்த விபரத்தைக் கந்தனுக்கு இரண்டு மூன்று தடவை சொல்லிப் புரிய வைத்து அனுப்புவார்.

கந்தன் பறை மேளத்துடன் ஊர்களுக்குள் நுழைந்து முக்கியமான இடங்களில் நின்று, முதலில் டாம், டாம், டாம் என்று பறையடிப்பான். அடித்த கையோடு...

"இத்தால் சகலருமறிய வேண்டியது... உடையார் ஐயா வீட்டில் உங்களுக்குரிய... இன்ன விபரம் பதியப்பட வேண்டியுள்ளதால்,

அங்கு சென்று உங்கள் விபரங்களைப் பதியும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்."

மீண்டும் பறை முழக்கம். டாம்... டாம்... டாம்...

உடையாரின் கையாள் ஆனதால் கிராமங்களில் மட்டுமல்லாமல் ஊரிலும் நல்ல மதிப்பு. செழிப்பான முகத் தோற்றமும் கம்பீரமும். குடுமித்தலை. வீடும் சுண்ணாம்புக் கல்லினால் கட்டப்பட்ட வீடு, பிள்ளைகளும் கற் கோவளம் மெ.மி. பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு வரை படித்தார்கள்.

முதன்முதல் அங்குள்ள மக்களில் ஊர் தாண்டித் திருமணம் செய்தது கந்தனுடைய மகள் ஒருத்திதான். மாகியப்பட்டி என்ற இடத்தைச் சேர்ந்த மார்க்கண்டு என்பவருக்கு மகளைக் கட்டிக் கொடுத்தார். பறைய தெருவில் வாழ்ந்த வாலிபர்களை விட கம்பீரமான தோற்றமும் முக அழகும் நிறைந்த மாப்பிள்ளை. பறைய ஊருக்குள் முதன்முதல் சேட் அணிந்தவர் அவர்தான். ஏழு எட்டாம் வகுப்பு வரை படித்திருக்க வேண்டும்.

கற்கோவளம் சந்தையில் மரக்கறி மற்றும் சாமான்கள் விற்பதற்கு கிடுகால் வேயப்பட்ட ஒரு வெறும் தரை மண்டபமும், மீன் விற்பதற்கு கல்லால் கட்டப்பட்டு சீமை ஓடும் சீமெந்துத் தரையுமான மற்றொரு மண்டபமும் இருந்தன. சற்றுத் தள்ளி கிணறும், இரண்டு கடைக் கட்டிடங்களும் இருந்தன. இவை மணியகாரன் கட்டிக் கொடுத்தவை.

கடையொன்றினை, தும்பளையைச் சேர்ந்த வடிவேலு எனப்படும், தங்கமான மனிதர் ஒருவர் நெடுங்காலம் நடத்தி வந்தார். சகல சாமான்களும் கடையில் கிடைக்கும். யாருடனும் உரத்த குரலில் பேச மாட்டார். ஐந்து பத்துச் சதம் குறைவாயிருந்தாலும் "பிறகு கொண்டு வந்துதா!" என்று சொல்லிச் சாமான்களைக் கொடுத்து விடுவார். சில வாடிக்கையாளர் கையில் காசில்லாமல் போய் கடனாகக் கேட்டாலும் கொடுப்பார். சிவலைத் தோற்றம். வெற்று மேனி. குடுமித்தலை. எந்நேரமும் சனங்கள் சாமான் வாங்க வந்த வண்ணமாகவே இருப்பர். தும்பளையைச் சேர்ந்த வெள்ளாளர்.

அடுத்த கடை சற்றுத் தள்ளி, பாடசாலைக்கு முன்பாக இருக்கிறது. நவசிவாயப் பக்தர் என்றொருவர் சில காலம் நடத்தினார். அவருக்குப் பிறகு குமாரசாமி ஐயர் என்றொருவர் நடத்தினார். என்றாலும் வடிவேலு கடையில் நடக்கும் வியாபாரம் இல்லை. அதற்குப் பிறகு பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கம் -

கூப்பன் கடை - அந்தக் கட்டடத்தில் நடைபெற்றது. அக்கடைக்கு முன்பாக, றோட்டுக்கு கிழக்குப் பக்கத்தில் ஒரு பழைய கட்டடத்தில் சரவணைப் பரியாரி என்றொருவர் சிலகாலம் கடை நடத்தி வந்தார். அவர் கற்கோவளம் மீனவ குடும்பத்தைச் சேர்ந்தவர். சிறிது வைத்தியமும் தெரியும். அதனால்தான் பரியாரி என்று பலரும் அழைப்பார்கள். சுத்தமாக உடுத்திக் கொள்வார். சால்வை தரித்துக் கொள்வார். சற்றுக் கடுமையான போக்காளர். அதனால் சனங்கள் அவரிடம் சாமான் வாங்கப் போவது குறைவு.

இந்தக் கடைகள் இருக்கத் தக்கதாக, கந்தனின் மருமகன் மார்க்கண்டு சந்தைக் கட்டங்கள் இரண்டுக்கும் அண்மித்த பகுதியில் ஒரு மண் கொட்டிலைப் போட்டு அதில் மீன் தவிர்ந்த சமையலுக்கு வேண்டிய எல்லாப் பொருட்களையும் விற்றுக் கொண்டிருந்தார். கந்தனுடைய மனைவியும் அவனுக்கு உதவி செய்து கொண்டிருந்தாள்.

மிகவும் அடிமைத்தனமாய், உயர் சாதியினருக்கு கைகட்டி வாழ்ந்து கொண்டிருந்த அந்த மக்கள் மத்தியில் பகிரங்கமான ஓரிடத்தில் ஒரு கடையை உருவாக்கி அதில் சாமான்கள் விற்பதற்கான மனோவலிமை மார்க்கண்டுவுக்கு உண்டானது பாராட்டப்பட வேண்டியது.

நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்க செல்லையா என்ற பெயர் பூண்ட சமூக முற்போக்குச் சிந்தனையாளர் ஒருவர் அக்கிராமத்தில் வசித்து வந்தார். செந்தளிப்பான முகமும் உடற்கட்டும். எந்நேரமும் வாரிவிடப்பட்ட தலை. கால் முட்ட வேட்டி உடுத்து தோளில் ஒரு சால்வையும் போட்டிருப்பார். சமூக சீர்திருத்த வேலைகளில் எப்பொழுதும் ஈடுபட்டுக் கொண்டிருப்பார். உயர் சாதி மக்களால் இழைக்கப்படும் ஒடுக்கு முறைகளால் தனது ஊர்மக்கள் பாதிக்கப்படும் போது அதில் தலையிட்டு, தன் மக்களுக்குப் பக்கபலமாக நின்று வெற்றியீட்டிக் கொடுப்பார். அடிமைத்தனத்திலிருந்து விடுபட முடியாதவர்களினால் வெறுத்தொதுக்கப்பட்டாலும், மனம் தளர்வடையாது அவர்களை அணுகி, அவர்களைச் சீரான பாதைக்கு இட்டுச் செல்வதில் தளர்வு கொள்ள மாட்டார்.

அவரது நெருங்கிய உறவினர் ஒருவரின் மகனான இராசையா என்னும் வாலிபன், மார்க்ஸீயக் கருத்துக்களில் மூழ்கி, செல்லையாவுக்கு ஒத்தாசையாக சமூக முன்னேற்றப் பணிகளில் ஈடுபட்டான். அந்நாட்களில் அக்கம் பக்கத்துக் கிராமங்களில் நடைபெற்ற மார்க்ஸீய வகுப்புகளில் பெரும் ஆர்வத்தோடு பங்கு

பற்றித் தன்னை வளர்த்துக் கொண்டான். சமய மாற்றத்துக்கு புரட்சி ஒன்றே மார்க்கம் என்ற கொள்கையில் இறுக்கமான நம்பிக்கை கொண்டிருந்தான். அவனுடைய நெருங்கிய உறவினன் ஒருத்தன் எஸ்.எஸ்.ஸி. பாஸ் பண்ணி, ஆசிரியப் பயிற்சி பெற்று அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையால் உருவாக்கப்பட்ட புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் படிப்பிக்கத் தொடங்கினான். அவனைத் தொடர்ந்து மேலும் சில மாணவர்கள் படித்து, ஆசிரியர்களாகவும் அரசாங்க உத்தியோகத்தர்களாகவும் பணியாற்றத் தொடங்கினர். தங்கராசா என்னும் ஓர் இளைஞர் ஆசிரியராகி, மலையகப் பாடசாலையொன்றில் படிப்பித்தார். அங்கு படிப்பித்த மலையக மங்கையொருத்தியைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டார். கல்வியில் பெரும் நாட்டம் கொண்ட இவர், கல்வி நிர்வாகத் துறையில் பரீட்சை எழுதி, தேர்ச்சி பெற்று மலையகத்தின் ஒரு பகுதியில் உதவிக் கல்விப் பணியாளராகப் பணியாற்றினார்.

தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்களிடையில், மிகவும் மந்தமான வாழ்வுக்குள்ளானவர்கள் இந்தப் பறைய சமூகத்தவர்கள். கொடிய அடக்குமுறைகளிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள மிக மிக மெதுவாகவும், மிகக் குறைந்த அளவிலுமே அவர்கள் முன்னேறியுள்ளனர். அடக்குமுறையிலிருந்து விடுபட்டு முன்னேறிச் செல்ல புரட்சிப்பாதை இன்றியமையாதது என்பதை உணர்ந்த அக்கிராமத்து இளைஞர்கள், மார்க்ஸீயச் சிந்தனைகளைக் கைக் கொள்ளத் தொடங்கியதுடன், கல்வியும், அதற்கு ஊன்றுகோல் என உணர்ந்த இளம் சந்ததி, கல்வி கற்று முன்னேறி வருவது பாராட்டத்தக்கதாகும். இந்த ஊரை நெசவு பகுதி என்றும் சிலர் குறிப்பிடுவர். முற்காலத்திலிருந்தே இந்தச் சமூகத்தவர் நெசவு தொழில் செய்து வந்ததாக வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. தற்சமயம் இந்த ஊரில் இரண்டொருவர் நெசவு தறி வைத்து நெசவு செய்து விற்கின்றனர்.

இந்தப் பின்னணியில் காலா காலமாக பறைய தெரு, பறைய ஊர் என்று அந்த இனத்தையே இழிவுபடுத்தும் வகையில் நிலவிவந்த ஈனத்தனமான பெயர்களைத் துடைத்தெறிந்து, தும்பளை தெற்கு என்று இளம் சமுதாயம் பெயர் சூட்டியிருப்பதும் மெச்சத்தக்கதாகும். அதே வேளை, வேளாளர் வாழும் தும்பளை என்ற ஊரோடு இணைத்துப் பெயர் வைக்காமல் ஒரு தனிப்பட்ட பெயராக வைத்திருக்கலாமே என்று சிலர் கருத இடமுண்டு.

## 34

பருத்தித்துறையில் தும்பளை என அழைக்கப்படும் இடம் ஒரு பரந்த வளமான நாகரீகப் பிரதேசமாகும். வடக்குத் தெற்காகப் போகிற நெடுஞ்சாலையின் இரு மருங்கிலும் நெடுந்தூரத்துக்குக் குடிமனைகள். இம்மனைகளுக்கு அப்பாலும் இப்பாலும் மேலும் நிறைய வீடுகள். வீடுகளில் அநேகமானவை வேலிகளால் மறைக்கப்பட்டிருந்தாலும் எல்லா வீடுகளும் கல் வீடுகளே! றோட்டோர வீடுகளில் அநேகமானவை மதிற்சுவர்கள். இரும்புக் கேற்றுகள். அந்நாட்களில் ஒன்றிரண்டு வீடுகளுக்கு கிடுகு வேலிகள் படலைகள் இருந்தாலும் காலப்போக்கில் அனைத்துமே மதில்களாகி விட்டன.

பத்திரகாளி அம்மன் கோயிலை அண்டிய பகுதி நெல்லண்டை என அழைக்கப்படும். இதன் காரணமாகவே அந்தக் கோயிலுக்கும் நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயில் எனப் பெயர் வழங்கி வருகிறது. அக்கோயிலை அண்டிய பகுதியில் வசிப்பவர்கள் மடப்பள்ளியர் என அழைக்கப்படுவர். கோயிலை அண்டியே அவர்கள் குடிமனைகள் அமைந்திருந்தன. கோயிலின் பரிபாலனப் பொறுப்பு வேளாளரிடம் இருந்தாலும், கோயிலில் நடைபெறும் கொண்டாட்டங்கள், விசேட பூசையின் போது பிரசாதம் சமைத்தல் மற்றும் தொட்டாட்டு வேலைகளை இந்த மடப்பள்ளியரே செய்வர்.

மற்றைய வீடுகளில் வேளாளரே குடியிருந்தனர். அநேகமாக எல்லோரும் தங்கள் சக்திக்கேற்பக் கல்வி கற்று, அரச உத்தியோகம், தனியார் நிறுவனங்களில் வேலை, சிங்கள நாடுகளில் வியாபாரம் என்று வசதியான வாழ்க்கை வாழ்ந்து வந்தனர்.

அந்த வீதி, நேரே கடற்கரையை நோக்கிச் சென்றாலும் பரமேஸ்வரன் கோயிலை அண்டி, தும்பளை முடியும் இடத்தில் மேற்கு நோக்கிப் பருத்தித் துறைப் பட்டினத்துக்குச் செல்கிறது. அந்த வீதியின் இருமருங்கிலும் சிறிது தூரத்துக்குக் குடிமனைகள். கடற்கரை நோக்கிச் செல்லும் வீதியில் ஒரு கூப்பிடு தூரத்தில்

அடர்ந்த தென்னந்தோப்பு ஒன்றும், அதற்கண்மையில் வீதியின் இருமருங்கிலும் மிகவும் விஸ்தாரமான தோட்டக் காணிகளும் உள்ளன. எப்படியும் முப்பது நாற்பது பேர் பயிர் செய்யக் கூடிய வளமான நிலம். மிளகாய், வெண்காயம், கத்தரி, வெண்டி, புடோல், பாகல் என்று பயிரிடுவார்கள். உத்தியோகம் பார்க்குமளவுக்குப் படிக்காதவர்களும், கடை கண்ணி வைத்துப் பிழைக்க முடியாதவர்களுமான வேளாளர், இவ்விவசாயத்தைப் புரிந்து வந்தனர்.

வீடுகளில் ஒன்றிரண்டு பனை தென்னை மரங்கள் இருந்தால் வராத்துப்பளையைச் சேர்ந்த நளவ சமூகத்தவர்கள் சிலர், உரிய பணத்தைச் செலுத்தி, அம்மரங்களிலிருந்து கள் இறக்குவர். என்றாலும் இத் தொழிலாளரை அவர்கள் அடிமைகளாய் நடத்துவதில்லை. வீடுகளில் ஏதாவது சின்னச் சின்ன வேலைகள் இருந்தால் அவர்களை அழைத்து கூலி கொடுத்து அவற்றைச் செய்விப்பர். படித்துத் தொழில் புரிவதும், வெளியூர்களில் வியாபாரம் செய்வதும் இந்த மனோநிலைக்குக் காரணமாய் அமைந்திருக்க வேண்டும். ஆரம்ப காலத்தில் சிறு சிறு உத்தியோகங்களுக்கு உந்து கோலாயிருந்த கல்வி, காலப்போக்கில் உரம் பெற்று, டாக்டர்கள், இஞ்சினியர்கள் என்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் என்றெல்லாம் உயர்ந்து கொண்டே போனது.

காலப் போக்கில் சாதி வெறிக் கொடூரங்கள் குறைந்துவிட்டன. அக்காலத்தில் ஐயாமாரிடம், எளியஞ்சாதிப் பெண்டுகள் ஏதாவது உதவி கேட்டுப் போவதாயிருந்தால், ஒரு காவோலையை இடையில் சொருகி தங்கள் பாதச் சுவடுகளை அழித்துக் கொண்டுதான் போக வேண்டும். ஐயாமாரின் வீட்டுப் படலை அவர்களை அழைத்துத் தங்கள் உதவியைப் பெற்றுக் கொண்டு திரும்ப வேண்டும். அவர்களுடைய காற்பதிவுகளிலேயே அவ்வளவு தீட்டு, வள்ளியம்மை காவோலையை இழுத்துக் கொண்டு இரண்டு மூன்று தடவை போயிருக்கிறாள்.

மணியகாரனின் (டி.ஆர்.ஓ.) நேரடி அதிகாரியான உடையாரின் வீடு தும்பளையின் வடகிழக்கு மூலையில், குடிமனைகள் எதுவுமற்ற பரந்த மணற்பரப்பில் அமைந்துள்ளது. மிகவும் விசாலமான காணி. பனை தென்னை மரங்களும், பயிர்ச் செய்கைக்குரிய நிலங்களும் அமைந்துள்ளன. அடிமை குடிமைகளே பயிர்த் தொழில் செய்வார்கள். தும்பளை, கற்கோவளம், வராத்துப்பளை, பறைய தெரு ஆகிய பகுதிகள் அவரது நிர்வாகத்தில். அங்கு

வசிப்பவர்கள், இந்தப் பகுதிகளுக்குரிய விதானைமார், உடையாரின் தலையசைப்பில்லாமல் எதுவும் செய்ய முடியாது. முன்பு தும்பளையைச் சேர்ந்த ஒருவர் விதானையாராக இருந்தார். அவர் முதிர்ச்சி அடைந்ததும், உடையார் தனது மகன் கந்தையாவை விதானையார் ஆக்கினார். படித்தவர். டாக்டருக்குப் படிக்க எண்ணியிருந்து, மெடிக்கல் வளாகத்தில் அனுமதி கிடைக்காததால், காலப்போக்கில் விதானையாராக உருப்பெற்றார். கால மாற்றத்தை யொட்டி, தந்தை போல் அடாவடித்தனம் செய்யாமல், சனங்களோடு பண்பாகப் பழகினார்.

பங்கீட்டரிசிப்புத்தகம் (கூப்பன்) வழங்கிய நாளில், ரவி தன் குடும்பத்தவர்களின் கூப்பன்களைப் பெறப் போயிருந்தான். நீண்ட கியூவில் சனம் நின்றது. ரவியுடன், விதானையார் சற்றுப் பழக்கமானவர். ஒரு படித்த மாணவன் கியூவில் நிற்பதைக் கண்டதும், விதானையார் ஓடிவந்து, "இங்கை வா! உனக்கு அதிகம் வேலைகளிருக்கும்..." என்று அழைத்துப் போய், கூப்பன் வழங்குபவர்களிடம் உடனடியாக அவற்றைப் பெற்றுக் கொடுத்து வழியனுப்பி வைத்த சம்பவத்தை, ரவி இன்றும் மனதில் பதித்து வைத்துள்ளான்.

தும்பளை புளியடிச் சந்தியில், திருநாமம் என அழைக்கப்பட்ட ஒரு வேளாளர், அந்த நாட்களில் ஒரு 'போட்கார்' வைத்திருந்து வாடகைக்கு ஓட்டிக் கொண்டிருந்தார். தடித்த கன்வஸ் படங்கினால் ஆன, மடிக்கக்கூடிய கூடாரம். முன்னுக்கும் பின்னுக்குமாக பயணிகளை ஏற்றிச் செல்வார். பருத்தித் துறைப் பட்டினத்தையண்டி வாடகைக்கார்களை அமர்த்தலாமேயன்றி, இப்பக்கம் திருநாமத்தின் ஒரேயொரு கார் மட்டும்தான். வராத்துப்பளை, கற்கோவளம், தும்பளைப் பகுதிகளில் யாருக்காவது கடும் நோய் ஏற்பட்டு மந்திகை ஆஸ்பத்திரிக்கு அல்லது டாக்டர் விசுவலிங்கத்திடம் கொண்டு போக வேண்டுமானால், ஓடிப்போய் திருநாமத்திடம் தான் சொல்ல வேண்டும். அவர் உடனே புறப்பட்டு வருவார். கட்டையான தோற்றம். கறுப்பு நிறம். எந்த நேரமும் முகமலர்ச்சியுடன் காணப்படுவார்.

ரவி தும்பளையில் படிக்கும் போது, திருநாமம் வீட்டுக்குப் பக்கத்திலிருந்த சபாநாதன் என்ற மாணவனும் அங்கு படித்தான். ரவிக்குக் கீழேயுள்ள வகுப்பு. பாடசாலை விட்டதும் இருவரும் கதைத்துக் கதைத்து றோட்டு வழியாக நடந்து வந்து, சபாநாதன் புளியபடி ஒழுங்கையிலிறங்க, ரவி தன்வீடு நோக்கி நடப்பான்.

சபாநாதனுடன் தினமும் வருவதால், திருநாமத்தாருக்கும் ரவிக்கும் நல்ல பழக்கம். ரவியின் கிராமத்தில் அவனுடைய வீட்டாருக்கு மட்டுமல்ல, வேறு எவருக்காயினும் கார் தேவைப்பட்டால், அவர்கள் ரவியைத் தான் அனுப்புவார்கள். அவசரத் தேவைகளுக்கு மட்டுமல்ல, ஒரு கலியாணம், வேறு கொண்டாட்டங்களுக்கும் திருநாமத்தின் கார்தான்.

மடப்பள்ளிகள் நெருக்கமாக வசிக்கும் நெல்லண்டைப் பகுதிக்கு மேற்குத் திசையில் தட்டாரப் பகுதி என்றொரு சிறு இடம் அமைந்துள்ளது. நாலைந்து தட்டார் அங்கு வாழ்ந்து நகைப் பட்டறை வைத்துத் தொழில் செய்தனர். தம்பையாப்பத்தர் என்றொரு செல்வாக்கு மிக்க, பண்பான பத்தர் ஒருவர் அங்கு தொழில் செய்து வந்தார். ரவியினுடைய வீட்டார் அவரிடம்தான் ஓடர் பண்ணித் தங்கள் நகைகளைச் செய்து கொள்வார்கள். ரவியினுடைய தந்தை, கள்ளுத் தவறணைகள் நடத்தி கையில் கொஞ்சம் காசு புழங்கியபடியால், அதிக அளவிலல்ல, பிள்ளைகளின் தேவைகளுக்கேற்ப, காப்பு, சங்கிலி, அட்டியல், தோடு என்று இடைக்கிடை செய்விப்பார்கள்.

யாராவது போய்ச் சொல்லிவிட்டு வர வேண்டியதுதான். ரவியும் வளர்ந்த பின் அங்கு போய் பட்டறையைப் பார்த்து வந்திருக்கிறான். முன்பணம் எதுவும் கொடுப்பதில்லை. அவர் அந்த நகைகளைச் செய்து முடித்து, இரண்டொரு நாள் பார்த்திருந்து விட்டு, பின் தானே அந்நகையை எடுத்துச் செல்வார். நகையை வாங்கிக் கொண்டு, இருந்தால் முழுக்காசு, அல்லது கையிலிருக்கும் தொகையைக் கொடுப்பார்கள். அதுவுமில்லையென்றாலும், அவர் நகையைக் கொடுத்து விட்டே செல்வார். பின் வேறொரு நாள் வந்து பணத்தை வாங்கிச் செல்வார். கையில் காசு கிடைத்ததும், ரவி வீட்டாரே கொண்டு போய்க் கொடுப்பார்கள்.

தம்பையாப்பத்தரின் மகன் துரைராசா என்பவரும், மேற்படி தேவைகளின் நிமித்தம் இரண்டோர் தடவை ரவி வீட்டுக்கு வந்து போயுள்ளார். தந்தையாயிருந்தாலென்ன, மகனாயிருந்தாலென்ன வெள்ளை வெளேரென்ற மெல்லிய வேட்டியுடுத்தி மேலுடம்பை ஒரு சால்வையால் போர்த்திக்கொண்டு வருவார்கள். சுத்தத் தூய்மையான வேட்டி சால்வையைப் பார்த்து ரவியின் மனது புல்லரிக்கும்.

பத்தர்மார் வசிக்கும் இப்பகுதியில் தான் பிரபல மார்க்ஸீய வாதியும், மக்கள் தொண்டனுமான - சகலரும் அன்பாகக் 'கும்' என்றழைக்கும் குமாரசாமிமாஸ்ரர் பிறந்து வளர்ந்த இடம் என்பதை நான் முன்னர் தெரிவித்திருக்கிறேன்.

தும்பளையில் வேளாளரும் மடப்பள்ளியரும் அண்மித்து வாழ்ந்து வரினும் - அவர்களுக்கிடையில் கலியாண உறவு இல்லையே தவிர, குடும்பங்களில் நடைபெறும் நன்மை தீமைக் கொண்டாட்டங்களில் நெருங்கிப் பழகி அனைவரும் ஒன்று சேர்ந்து பங்கு பற்றித் தமது அன்பை வெளிப்படுத்துவர்.

தும்பளைக்கு மேற்கே கலப்பனாவத்தை என்னும் சிற்றூர் ஒன்றிருக்கிறது. நாலைந்து வெள்ளாளக் குடும்பங்கள் மட்டும்தான் வாழ்கிறார்கள். தோட்டம் துரவுதான் தொழில். பிள்ளையார் கோயில் ஒன்றிருக்கின்றது. கலப்பனாவத்தைப் பிள்ளையார் கோவில் என்று தான் பெயர். வத்தைகளுக்கண்மித்திருப்பதால் சிங்களவர்களால் இடப்பட்ட பெயர்தான். அதனால் கல்ப்பனாவத்தை, கலப்பனாவத்தை என்றாகியிருக்க வேண்டும். அதற்குத் தென்புறமாகத் தான் இலட்சுமணன் தோட்டம் இருக்கிறது. கம்பராமாயணத்தில் இராம இலட்சுமணர்கள் இராவணனை அழிக்க இலங்கை வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இராமபிரான் தடம் பதித்த நாமம் ஒன்றில்லாமல் இலட்சுமணன் பெயரில் ஓர் ஊரா? லக்ஷ்ன்வத்தை என்றுதான் வத்தைகளோடு வத்தையாக இடம் பெற்றிருக்க வேண்டும். லக்ஷ்மன், இலட்சுமணனாகத் திரிபு பெற்று இலட்சுமணன் தோட்டமாக மாறியுள்ளது. இரண்டே இரண்டு வீடுகள். ஒன்று ரவியின் நண்பனான விவேகியினுடையது. தட்டாரக் குடும்பம். மற்றது ராமசாமி ஐயர் என்று கூப்பன் கடையில் சிறிதுகாலம் மனேஜராகப் பணியாற்றியவர். இருவீடுகளும் அக்கம் பக்கமாக. இலட்சுமணன் தோட்டப் பிள்ளையார் கோயில் மிகவும் பெரிய அக்கிரகாரத்தைக் கொண்டது. மதிலால் அமைந்த அக்கிரகாரம். கோயிலுக்கு முன்பக்கத்தில் சுவாமி தீர்த்தமாடும் பெரிய கேணி இருக்கிறது. இணைந்து சிறிய ஆறுகால் மடம் ஒன்றுள்ளது.

வேளாளரைப் போலவே மடப்பள்ளியரும் படித்து முன்னேறியவர்களாவர். அரசாங்க உத்தியோகம், தனியார் நிறுவனங்களில் வேலை வியாபாரம் என்று அவர்களும் பரந்து வாழ்க்கை நடத்தினர். தும்பளைச் சிவப்பிரகாச வித்தியாசாலையில் படித்த ரவி, நெல்லண்டையைச் சேர்ந்த இராசலிங்க வாத்தியாரிடம்

கற்றவன் என்பது மகிழ்ச்சிக்குரிய விசயமாகும். இராசலிங்க வாத்தியாரின் தம்பியாகிய ராஜ் சுப்பிரமணியம் என்பவர் படித்துக் கணக்காளராகி, கொழும்பிலுள்ள கல்வித் திணைக்களத் தலைமையகத்தில், கணக்குத் துறைக்குப் பொறுப்பாளராயிருந்து நிர்வாகத் துறையில் சித்தி பெற்று கல்வி அமைச்சரின் செயலாளராகவுமிருந்தவர். பத்திரிகைகளில் அடிக்கடி அவர் பெயர் பிரபலம் பெற்று வந்ததும் குறிப்பிடத்தக்கது.

அவர்களது தந்தையார் தான் மணியம் என்றழைக்கப்படும் சுப்பிரமணியத்தார் ஆவார். ரவி வீட்டுக்கு வந்து அன்பாக உரையாடி, கள் அருந்திச் செல்பவர். சீனியர் என்பது பொதுவான பெயர். சீனி போல இனிமையானவர் என்பது பொருள்.

தும்பளை வாசிகளோடு வராத்துப்பளையாருக்கு அதிகளவு தொடர்பில்லையென்றாலும், சதா அந்த வீதியாலேயே அவர்களின் பயணம் நடைபெறுவதால் ஓரளவுக்குத் தகவல்கள் தரப்பட்டுள்ளன. இனி வராத்துப் பளைக்குத் தென்மேற்குத் திசையிலிருக்கிற தென் புலோலியூர் பற்றிச் சில குறிப்புக்களை எழுத வேண்டியுள்ளது. தமிழறிஞர் கந்த முருகேசனைப் பற்றி முன்னர் தெரிவித்துள்ளேன். அவர் வீட்டுத் திண்ணையிலிருந்து, பசுபதி யாப்பிலக்கணம் படித்துக் கவிஞரானதும், ரவி பகுத்தறிவுக் கருத்துக்களையறிந்து தீவிரவாத இயக்கங்களில் ஈடுபட்டதும் முக்கியமான தகவல்கள். அதேவேளை...

புலவர் பெருமக்கள் அவதாரம் செய்த புண்ணிய பூமி புலோலி மேற்கு. சதாவதானி நா.கதிரவேற்பிள்ளை, குமாரசாமிப்புலவர், தில்லை நாத நாவலர், தென்புலோலியூர், மு.கணபதிப்பிள்ளை, சைவப் பெரியார் க.சிவபாத சுந்தரனார், பகுத்தறிவுத் தந்தை கந்த முருகேசனார், கவிஞர் வே.சிவக்கொழுந்து எனப் பல புலவர் பெருமக்கள் தமிழ் வளர்த்துப் பெருமை சேர்த்தவர்களாவர். கந்த முருகேசனார் நாவலன் கோவை எனப்படும் தீந்தமிழ்க் காவியத்தை யாத்து தமிழ் மக்களுக்கு வழங்கியிருக்கிறார்.

மக்கள் வாழும் இடங்களுக்கு கிராமம் அல்லது ஊர் எனப் பெயர்கள் வருவதற்கு முன் விசாலமான பகுதிகளாகப் பெயர் சூட்டப்பட்டிருந்தன. இந்த வரிசையில் புலோலி கிழக்கு, புலோலி மேற்கு, புலோலி தெற்கு என இப் பகுதிகள் அழைக்கப்பட்டன. பட்டினத்தை அண்டிய பருத்தித் துறைப் பகுதி புலோலி வடக்காக இருக்க வேண்டும். ஆனால் அப்படிப் பெயர் எதுவும் இல்லை.

இந்தப் பகுதிகள் யாவும் ஒன்றிணைக்கப்பட்டு வடமராட்சி என அழைக்கப்படுகின்றது. மேலே குறிப்பிட்ட இடங்கள் மட்டுமன்றி அல்வாய், கரவெட்டி, நெல்லியடி, வதிரி, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி யாவும் வடமராட்சிக்குள் அடங்கும். வல்லிபுரக் குறிச்சிக்குத் தென்புறத்தேயுள்ள வலிகண்டி, குடத்தனை, அம்பன் நாகர்கோவில், செம்பியன்பற்று போன்ற பகுதிகள் தென்மராட்சியாகும். வட மறவர் ஆண்டபடியால் வடமராட்சி என்றும், தென்மறவர் ஆண்டபடியால் தென்மராட்சி என்றும் பெயர் வழங்கியது போலும்!

அங்கு வாழும் மக்கள் தத்தமது சொந்தக் காணிகளில் பயிர் செய்து பிழைப்பதுவே வாழ்க்கை நெறியாகும். வேறு தொழில்களில் ஈடுபட வெளியிடங்களுக்குச் செல்வோர் தொகை மிக மிகக் குறைவு. இதனால் பலரையும் அணைத்து வாழும் சமாதான சகவாழ்வு என்ற பண்பாடு அங்கு அந்நாட்களில் மருந்துக்கும் கிடையாது. இதன் காரணமாக அங்குள்ள உயர் சாதி மக்களிடம் சாதித் தடிப்பு அதிகம். எளியஞ்சாதி சட்டை போடுவதையோ, காலில் செருப்பு அணிவதையோ அவர்களால் சகித்துக் கொள்ள முடியாது. ரவி, கந்த முருகேசனிடம் போகும் போது சேட் அணிந்து செருப்புடன் போனதைப் பொறுக்க முடியாத ஓர் ஆசிரியர் அவன்மீது தன் வெப்பிசாரத்தைக் காட்டியதை முன்பு குறிப்பிட்டிருக்கிறேன். இப்போது காலம் மாறிவிட்டது.

## 35

ரவி, பரமேஸ்வராக் கல்லூரிக்கு முழுக்குப் போட்டு, அத்துடன் யாழ்ப்பாணப் பட்டினத்துக்கும் முழுக்குப் போட்டு விட்டு, வராத்துப்பளைக்கு வந்ததும், தான் பிறந்து வளர்ந்த பூமியில் தடம் பதித்தது சந்தோஷமாயிருந்தாலும், அவனுக்குப் பொழுது போவது பெரும் கஷ்டமாயிருந்தது.

பசுபதி அப்போது ஆசிரிய கலாசாலையில் படித்துக் கொண்டிருந்தார். ஊரில் ரவியினுடைய வயதையொத்த இரண்டு மூன்று வாலிபர்கள் மட்டும் இருந்தார்கள். இராசன் என அழைக்கப்பட்ட கிட்டிண பிள்ளை, பூபால் என அழைக்கப்பட்ட பூபால பிள்ளை, இரத்தினம் என்றொரு இளைஞர் இவர்களே அந்த இளைஞர்கள். இரத்தினம் சிலகாலம் கடற்கரைக்குப் போய் மீன் வலை இழுத்து விட்டுப் பின்னர் தமையனுடன் கள்ளுத் தொழில் செய்ய தாழையடிக்குப் போய்விட்டான். பூபாலும் அதே போல, கடற்றொழிலும், கள் இறக்கும் தொழிலும் செய்து கொண்டிருந்தான். ரவியையும் சேர்த்து மற்றவர்களெல்லோரையும் விட இரண்டு வயது மூத்தபடியால் இராசனை இராசண்ணன் என்றே சொல்வார்கள். இராசண்ணன் கள் இறக்கும் தொழில் மட்டும் செய்து கொண்டிருந்தார்.

ரவி, நெல்லியடியில் - பஸ்ஸில் போய் படித்துக் கொண்டிருந்த போது, பாடசாலை விட்டதும் வீடு திரும்புவதற்காக நெல்லியடிச் சந்திக்கு வந்து பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டிருப்பான். இருபது முப்பது நிமிஷம் காத்துக் கொண்டிருக்க வேண்டும். சந்தியில் அப்போது லக்ஷ்மி ஸ்ரோர் என்று ஒரு கடை இருந்தது. சோடா என்னும் பானங்கள், பொதி பண்ணிய பொருட்கள், பாடசாலைப் புத்தகங்கள், வாசிப்புப் புத்தகங்கள், தென்னிந்தியச் சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்று பலதரப்பட்ட வியாபாரம்.

பஸ்ஸுக்காகக் காத்து நிற்கும் போது அங்கு தொங்க விடப்பட்டிருக்கும் பத்திரிகைகள், சஞ்சிகைகளைத் தட்டிப்

பார்ப்பான். கையில் காசு கிடைத்தால் ஏதாவது சஞ்சிகைகளும் வாங்குவான். கடையில் ஓர் இளைஞர்தான் இருப்பார். கடும் போக்கில்லாதவர். சின்ன வயதில் வீட்டில் பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதை, நல்லதங்காள் கதை போன்ற புத்தகங்களை வாசித்திருந்த ரவிக்கு - லக்ஷ்மி ஸ்ரோர் சிறிதளவு வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தியது. பின்னர் பரமேஸ்வராக் கல்லூரியில் படித்த போது அங்குள்ள நூல் நிலையத்திலும் சிறிய அளவில் சஞ்சிகைகள், புத்தகங்கள் படிக்க வாய்ப்புக் கிடைத்தது. இந்த நிலைமையில் ஊருக்கு வந்ததும், நண்பர்கள் தொழிலுக்குப் போகிறவர்களாதலால் பொழுது போக்குவது பெரும் கஷ்டமாயிருந்தது. பூபாலுவுக்கும் இராசண்ணனுக்கும் சிறிதளவு வாசிப்புப் பழக்கம் இருந்தது. அவர்களிருவரையும் மத்தியான வேளையில் மட்டும் சந்திக்க முடியும். மாலைப் பொழுதைக் கழிப்பது ரவிக்குப் பெரும் பிரயத்தனமாயிருந்தது. அதனால், மாலை வேளைகளில் அவன் பருத்தித் துறைக்குப் போகத் தொடங்கினான்.

நெல்லியடி மத்திய கல்லூரி அதிபராயிருந்த டாக்டர் சிவப்பிரகாசம், பருத்தித் துறையில் வேலாயுதம் ஆங்கில பாடசாலைக்கு அடுத்துள்ள அவரது முதுச வீட்டில்தான் மாலை நேரத்தைக் கழிப்பார். அவர் முன்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையொன்றின் அதிபராக இருந்தவர். அவரிடம் படித்த மாணவர்கள், ஆசிரியர்கள் என்று பலர் அடிக்கடி வந்து போவார்கள். அங்கு தமிழ்ப் புத்தகங்கள் கிடைக்காது. தற்செயலாக ஒன்றிரண்டு தமிழகப் பத்திரிகைகள் கிடைக்கும். அவற்றை ரவி படிப்பான்.

பட்டினத்தில் றகுமானியா ஸ்ரோர் என்று ஒரு கடை இருந்தது. யாழ்ப்பாணத்து முஸ்லிம்கள் நடத்திய கடை. பலசரக்குக் கடையல்ல. முன்னர் குறிப்பிட்ட லக்ஷ்மி ஸ்ரோர் போன்ற கடை. அக்கடையிலும் சில சஞ்சிகைகள் தொங்கிக் கொண்டிருக்கும். ரவி, அங்கும் இடைக்கிடை சஞ்சிகைகள் வாங்குவதால், மேலோட்டமாக அவற்றைத் தட்டிப் பார்க்கும் வாய்ப்புகள் ஏற்படும். மிக முக்கியமானது வடலங்கா புத்தகசாலை.

பட்டினத்தில் சந்தை அமைந்திருந்த சற்சதுர றோட்டு வடகிழக்கு மூலையிலிருந்து கடற்கரை நோக்கிப் போகிற மூலையில் அமைந்திருந்தது. பிரபல புத்தகக் கடையான இந்த வடலங்கா புத்தகசாலை. யாழ்ப்பாணப் பட்டினத்தைத் தவிர பெரிய அளவில் நிறையப் புத்தகங்களோடு காட்சியளித்தது வடலங்கா புத்தகசாலை தான்! பாடசாலைப் புத்தகங்கள் ஏராளம், ஏராளம். அவற்றை விட

சாதாரண வாசகர்களுக்கான புத்தகங்கள், சஞ்சிகைகள், தினசரிப் பத்திரிகைகளுக்கும் குறைவில்லை.

வடலங்கா புத்தக சாலையின் அதிபர் ஓர் ஆசிரியர். வே.சிவக்கொழுந்து என்பது அவர் பெயர். பருத்தித் துறைத் தம்பசிட்டி அவரது வசிப்பிடம். நீதிமன்றத்துக் கணித்தாயுள்ள சித்தி விநாயகர் வித்தியாசாலையில் படிப்பித்துக் கொண்டிருந்தார்.

பாடசாலைகளில் படிப்பிப்பதற்குத் தேவையான, தமிழ், கணிதம், சமயம், சரித்திரம், பூமி சாஸ்திரம், நாட்டுச் சீவன சாஸ்திரம் என்று எல்லா வகையான பாடப் புத்தகங்களும் எழுதி, அச்சிட்டு விற்பனை செய்து கொண்டிருந்தார். பா.கீ. பிரிவிலிருந்து ஏழாம், எட்டாம் வகுப்புகள் வரை. கலட்டியிலிருந்த கலாநிதி அச்சியந்திர சாலையில் அந்தப் புத்தகங்களை அச்சியற்றினார். அந்நாட்களில், யாழ் பட்டினத்தைத் தவிர, பருத்தித் துறை கலட்டியை அண்டிய பகுதியில் கலாநிதி அச்சியந்திர சாலைதான் ஒரேயொரு அச்சகம். பின்னர், பருத்தித் துறைப் பட்டினத்தில் ஊழியன் அச்சகம் என்ற பெயரில் ஓர் அச்சுக்கூடம் ஸ்தாபிக்கப்பட்டது. இது பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தை அண்டி இருந்தது. இதன் காரணமாக கலாநிதி அச்சகம், பருத்தித்துறை மெத்தை வீட்டுச் சந்திக் கண்மையிலுள்ள ஒரு கட்டடத்தில் இயங்கி வந்தது. இவ்வச்சகத்தைத் தொடங்கி நடத்தியது ஓர் ஐயர் குடும்பமாகும். அந்த ஐயர்தான் கலாநிதி பஞ்சாங்கத்தின் மூலபிதா ஆவார். அந்தப் பஞ்சாங்கத்தை அச்சேற்றுவதற்காகவே, கலாநிதி அச்சியந்திர சாலை தொடங்கப்பட்டிருக்க வேண்டும். அத்துடன், ஊர்களில் நடைபெறும் திருமணம், சாமர்த்தியச் சடங்கு அழைப்பிதழ்கள், பணச்சடங்கு அழைப்பிதழ்களும் அங்குதான் அச்சிடப்பட்டன.

ரவி, டாக்டர் சிவப்பிரகாசம் வீடு, றகுமானியா ஸ்ரோர், இவற்றுக்குப் போய் வந்த காலை, வடலங்கா புத்தக சாலைக்கும் போய் வரத் தொடங்கினான். அந்நாட்களில் ரவி, வீரகேசரி பாலர் பகுதிக்கு எழுதத் தொடங்கி விட்டான். சிவக்கொழுந்து பாடசாலைப் புஸ்தகங்களை எழுதி அச்சிட்டு விற்றுக் கெண்டிருந்தாலும், அவர் ஒரு சிறந்த கவிஞருமாவார். 'யாழ்ப்பாணன்' என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதி அவை பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருந்தன. இந்த வேளையில் புற்றளையைச் சேர்ந்த, பெரிய தம்பி என்பவர் சிறுகதைகள் எழுதி அவையும் பிரசுரமாயின. யாழ்ப்பாணன் என்ற கவிஞர், பெரிய தம்பி என்ற சிறுகதை எழுத்தாளர் இவர்களுடன், ஏதேதோ பெயர்களில் பாலர்

பகுதிக்கு எழுதி வந்த ரவிக்குமிடையில் ஒருவித மன உணர்வு நிலை பெறத் தொடங்கியிருக்க வேண்டும். இதன் காரணமாகவே மாலை வேளைகளில் ரவி, வடலங்கா புத்தக சாலையை மேய்ந்து கொண்டிருந்தான். சிவக்கொழுந்தரும் அவனை அரவணைத்து நடந்து கொண்டார். காந்தாமணி அல்லது தீண்டாமைக்குச் சாவுமணி என்ற நாவல் ரவிக்கு அப்புத்தக சாலையிலிருந்து தான் கிடைக்கப் பெற்றது.

ரவியிடம் வாசிப்புப் பழக்கம் மெல்ல மெல்ல விசாலித்துக் கொண்டது. எப்போதும் ஏதாவதொரு புத்தகத்துடனேயே அவன் வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது. மாலை வேளைகளில் அநேகமாக அவன் பருத்தித் துறைக்குக் கிளம்பி விடுவான். நடைதான். டாக்டர் சிவப்பிரகாசம் வீடு, றகுமானியா ஸ்ரோர், வடலங்கா புத்தக சாலை என்று அவன் பொழுது கழியும். கையில் ஏதாவதொரு புத்தகத்துடன் அவன் வீடு திரும்ப இருண்டு விடும். இதன் காரணமாக, அவன் இரண்டு சின்னப் பற்றறிகள் கொண்ட 'டோர்ச் லைற்' ஒன்றை வாங்கினான். அந்த லைற்றைக் கையில் எடுத்துக் கொண்டுதான் அவன் பருத்தித் துறைக்குப் போவான். திருப்பி வீட்டுக்கு வரும்போது றோட்டைத் தாண்டி ஒழுங்கைகளுக்கால் நடக்கும்போது, கொண்டு வரும் புத்தகம் அவன் மனதைக் குடைவதாயிருந்தால்-

லைற்றைப் பற்ற வைத்து, அதன் பின் பக்கத்தை வாய்க்குள் நுழைத்து பளிச்சிடும் வெளிச்சத்தில், கையிலிருக்கும் புத்தகத்தை விரித்து மேலோட்டமாக வாசித்துக் கொண்டே நடப்பான். புத்தக வாசிப்பில் வெறி!

இரவில் ஏதாவதொரு புத்தகத்தை வாசித்து விட்டுத் தான் உறங்குவான். அந்தப் புத்தகம் முடிவு பெறாவிட்டால் அதை அல்லது ஒரு புதுப் புத்தகத்தை கையில் எடுத்துக் கொண்டுதான், விடிந்ததும் காலைக்கடன் கழிக்கப் போவான். ஒரு கூப்பிடு தூரத்தில் உள்ள பனங்காணியில் தான் அந்தக் காரியம் நடைபெறும். புத்தகத்தை விரித்து வாசித்தபடியே குந்தியிருந்து மலங்கழிப்பான். மலக்கழிப்பு முடிந்திருக்கும். என்றாலும் நேரம் போவது தெரியாமல் வாசிப்பு நடைபெறும்.

அங்கே என்ன நடக்கும்? ஒரு நாய்ப் பிள்ளையார் அல்லது ஒன்றிரண்டு காக்கையர் அவன் கழித்த மலத்தை, அவன் குண்டியில்

படாதவாறு நக்கி அல்லது கொத்திப் புசித்துக் கொண்டிருக்க, ரவி ரசனையோடு புத்தகத்தை வாசித்துக் கொண்டிருப்பான்.


புத்தகங்களை, ரவி, பூபால், இராசண்ணா மூவரும் பகிர்ந்து வாசித்து மகிழ்வடைவது மட்டுமல்ல, அவற்றையிட்டுத் தமது கருத்துக்களையும் பரிமாறிக் கொள்வர். பூபால் ஓர் இராட்சத வாசிப்புக்காரன். எத்தனை பெரிய புத்தகமாயிருந்தாலென்ன, தத்துவக் கருத்துக்களாயிருந்தாலென்ன விரைவில் வாசித்து முடித்து விடுவான். அதேவேளை கருத்துக்களை உள்வாங்கும் வல்லமை குறைவு. இராசண்ணார் அப்படியல்ல. விடயங்களைப் புரிந்து கொள்ளுவார். தன் கருத்துக்களையும் ஓர் ஆசான் போன்ற மனப்பக்குவத்துடன் வெளிப்படுத்துவார்.

அந்நாட்களில் செருகளத்தூர் சாமா என்னும் பெயரில் ஒரு பிரபல நடிகர் படங்களில் நடித்துக் கொண்டிருந்தார். வாட்டசாட்டமான உருவம். மயிர் குறைந்ததல்ல. இரு பாத்திரங்களுக்கிடையில் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டு, வாக்குவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது சாமா, நிதானமாகவும் தமாஷாகவும், அதேவேளை வேடிக்கையாகவும் ஏதாவது சொல்லுவார். பிரச்சினை முடிவுக்கு வந்துவிடும். அதே போலத்தான் இராசண்ணனும். யாராவது இருவருக்கிடையில், தெளிவில்லாத ஒரு தகராறு நடந்து கொண்டிருக்கும் போது, இராசண்ணன் தலையிட்டு சிரித்தபடி ஒரு வார்த்தை உதிர்ப்பார். பிரச்சினை ஒரு முடிவுக்கு வந்துவிடும். இந்தக் குணாம்சத்தின் காரணமாக அவரைத் தெரிந்தவர்கள், அவரைச் சாமா என்று சொல்லத் தொடங்கினார்கள். காலப்போக்கில் அவருக்குச் சாமா என்ற பெயர் நிலைத்துக் கொண்டது.

சின்னஞ்சிறிய பனஞ்சோலைக் கிராமம். முதலில் இருவர் மாத்திரமே படித்து முன்னுக்கு வந்து கொண்டிருந்தார்கள். சமூக அடக்குமுறைகளினால் பாதிக்கப்பட்டுத் தமது விடிவுக்காக மற்றைய இளைஞர்களும் அவர்களுடன் ஒன்று சேர்ந்து, கிராமத்து மக்கள் மத்தியில் புரட்சிகரக் கருத்துக்களைப் பரப்பத் தொடங்கினார்கள்.

அதனடிப்படையில் காலங் காலமாக அடிமை வாழ்வில் முடங்கிக் கிடந்த மக்களும் விழிப்புணர்ச்சி பெறத் தொடங்கினார்கள்.

□



# ஒரு பனஞ்சோலைக் கிராமத்தின் எழுச்சி

வரலாற்றுச் சித்திரம்

இரண்டாம் பாகம்

# 1

ரவியின் மூத்த அண்ணர் தம்பிப்பிள்ளை கொஞ்சம் சொகுசான உடல்வாகு கொண்டவர். கஷ்டமான வேலைகள் செய்ய விருப்பமில்லை. உள்ளமும் அவ்வாறே மென்மையானது. அதே வேளை கொடுமைகளை எதிர்த்துப் போராடுவதில் மனஉறுதி கொண்டவர். இருபது இருபத்திரண்டு வயதிருக்கும் போது, அவரது மாமனாரான மாணிக்கம் அவரை அழைத்துத் தன்னுடன் தொழில் பழக வைத்துக் கொண்டார். அவர் அப்போது தாழையடியில் கள்ளுக் கொட்டில் வைத்து நடத்திக் கொண்டிருந்தார்.

கள்ளு விற்றல், சமையல் வேலை செய்தல், நிலத்தைக் கூட்டித் துப்புரவு செய்தல், மற்றும் நொட்டு நொடுக்கு வேலைகள் என்று தொடங்கி, கள் இறக்கும் தொழிலிலும் தம்பிப் பிள்ளை ஈடுபட்டார். மூன்று நான்கு வருடங்கள் இம்மாதிரிக் கஷ்டங்களை அனுபவித்து விட்டு ஊர் திரும்பினார். உடல் வேதனை இல்லாத ஒரு பிழைப்பைத் தொடங்க வேண்டுமென்று ஆசைப்பட்டார்.

அவருடைய வீட்டுப் படலைக்கு முன்னால், அவர்களுக்குச் சொந்தமான ஒரு காணித் துண்டு இருந்தது. றோட்டோரக் காணி. காணியில் ஒரு பக்கம் பனை மரங்கள் நிற்க மறுபக்கம் வெறும் தரையாய் இருந்தது. அந்த வெறுந்தரையில் ஒரு கடையைக் கட்டி வியாபாரம் செய்தால் என்ன? என்ற எண்ணம் ஏற்பட்டது. வியாபாரம் என்றால் பல சரக்குக் கடைதான்.

அந்த எண்ணம் வலுப்பெறவே கடையொன்று கட்டப்பட்டது. களிமண் சுவர். கிடுகினால் வேய்ந்த கூரை. முன்பக்கம் பலகைகளினால் அடுக்கி மூடப்படும் அகலமான நிலை கொண்ட வாசல். வாடிக்கையாளர் வந்து நின்று கதைத்துப் பேசி, சாமான்கள் வாங்குவதற்கு வசதியாக முன்பக்கமும் சிறிது நீண்ட கூரை. கடையில் சாமான்கள் பரப்பி வைப்பதற்கான தட்டுகள், ஒரு பக்கச் சுவரில் றாக்கை, முதலாளி இருப்பதற்கான இருக்கையும், முன்னால்

பணப்புளக்கத்துக்கான இலாச்சியுடன் கூறிய சிறிய மேசையும், தராசு ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது.

சனம் குறைந்த பகுதிதானே! ஓரளவுக்குத்தான் வியாபாரம். அந்த நாட்களில் பாண் பரவலாக வரவில்லை. கோதுமை மாவு வந்துவிட்டது. இன்னும் அரிசி மா, சீனி, தேயிலை ஆகிய பொருட்களுடன் சரக்கு வகைகள் முதலியன கடையில் இருந்தன.

ஒரு மாரிகாலம். மழை இலேசாகப் பெய்து கொண்டிருந்தது. மழையின் காரணமாகக் கடைக்கு ஒரு சனமும் வரவில்லை. தம்பிப்பிள்ளை இருக்கையில் இருக்க அலுத்துப் போய் வெளிப்பத்தியில் வந்து நிற்க...

உரத்து வீசிய காற்றுக்கு, கடைக்குப் பக்கத்தில் நின்ற சொத்திப் பனையொன்று படாரென்று முறிந்து கடையின் முன்பக்கக் கூரைக்கு மேல் விழுந்தது. கூரையைப் பிய்த்துக் கொண்டு விழுந்த பனையின் ஓலைகள் முன் விறாந்தையை அடைத்துக் கொண்டிருந்தன. பயங்கரமான அந்தச் சத்தத்துக்கு வீட்டிலிருந்தவர்கள் ஓடிவந்து பார்த்தனர்.

தம்பிப்பிள்ளை அந்த ஓலைகளுக்குள் மறைந்து விட்டார். நல்ல வேளை பனைவட்டின் அடியிலோ கருக்கு மட்டைகளின் கீழோ ஆள் அகப்படாமல் ஓலைகளுக்குள்ளேயே மறைந்து கிடந்தார். ஓடிப்போய், கத்திகள் எடுத்துவந்து, ஓலைகளை மட்டைப் பக்கமாக ஒவ்வொன்றாக, மெது மெதுவாக வெட்டி அப்புறப்படுத்தி, தம்பிப் பிள்ளையைத் தூக்கி எடுத்தார்கள். பெரும்காயம் எதுவுமில்லை. சிராய்ப்புக் காயங்கள். ஆள் அரை மயக்கத்திலிருந்தார். உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போய், ஏதோ உடனடி மருந்துகள் கொடுத்து வீட்டுக்கு அழைத்து வந்தார்கள். கடை அதனோடு மூடப்பட்டு விட்டது. கடையிலிருந்த சாமான்கள் அரைகுறை விலைக்குக் கொடுத்து முடிய, வெறுங்கடையாக மூடப்பட்டுக் கிடந்தது. தம்பிப்பிள்ளை உடல் தேறி, சில வாரங்களுக்குப் பின், தன் சொந்த முயற்சியாக, சற்றுத் தூரவுள்ள இடங்களில் கள்ளுச் சீவி விற்கத் தொடங்கினார்.

இப்படியான நிலைமையில் அக்கடைக் கட்டடம் பயன்படுவதற்கான ஒரு சந்தர்ப்பச் சூழ்நிலை ஏற்பட்டது. அதனை இங்கு அறிந்து கொள்வோம்.

யாழ்ப்பாணம் பலாலி வீதியில் ஸ்ரீநாக விகாரைக்கு மறுபக்கமுள்ள ஆரிய குளத்தை அண்டியுள்ள பகுதி பழைய காலத்தில் புதரும் செடிகளும் படர்ந்திருந்த பள்ள நிலமாக இருந்தது. பட்டினத்தில் வாழ விரும்பிய நளவ சமூகத்தவர்கள் பருத்தித் துறை மானிப்பாய், மல்லாகம் எனப் பல இடங்களிலுமிருந்து அங்கு வந்து குடியேறினார்கள். காலப்போக்கில் நிலம் செப்பனிடப்பட்டு வீடுகளும் வளமுள்ளவனவாயமைந்தன. அங்கு வசித்த பிரசித்தி பெற்ற வழக்காடுனர் சின்னப்பு வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு வெற்றுநிலம் இருந்தது. அங்கு வசித்த சமூகப் பற்றுள்ள இளைஞர்கள் ஒன்று சேர்ந்து, அரசாங்கத்துக்கு விண்ணப்பித்துக் கிடைத்த நிதியிலிருந்து அந்தக் காணியை வாங்கி, அதில் ஒரு பெரிய மண்டபத்தை அமைத்து ஒரு சமூக சேவை நிறுவனத்தை உருவாக்கி இயக்கிக் கொண்டிருந்தார்கள்.

சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கம் என்பது அந்நிறுவனத்துக்குச் சூட்டப்பட்ட பெயர். இளைஞர்களில் சம்பத்திரிசியார் கல்லூரியில் படித்த ஒன்றிரண்டு மாணவர் தவிர, மற்றவர்கள் அனைவரும் சேணிய தெருவில் ரயில் றோட்டுக் கண்மித்ததாகவுள்ள சன்மார்க்க வித்தியாலயத்தில் படித்த மாணவர்களே. அந்தப் பாடசாலைப் பெயரின் அர்த்தம் அவர்கள் எல்லோர் மனதையும் கவர்ந்திருக்க வேண்டும். அதன் காரணமாகத்தான் சங்கத்துக்கு சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கம் என்று பெயர் சூட்டினார்கள். சமூக முன்னேற்றத்துக்காகப் பாடுபடும் அச்சங்க மண்டபத்தில் வாசிக சாலையும் நடைபெற்றது.

அந்த றோட்டில் வசித்த இளைஞர்கள் மட்டுமல்லாமல் சேணிய தெருவில் வசிக்கும் எம்.சி. சுப்பிரமணியம், உடுவிலைச் சேர்ந்த ஜேக்கப் காந்தி, மல்லாகத்தைச் சேர்ந்த யோவேல் போல், யாழ் ஆஸ்பத்திரி றோட்டில் வசித்த ஜி.எம். பொன்னுத்துரை, சுண்டிக் குளியைச் சேர்ந்த ஜி. நல்லையா ஆகிய இளந்தலைவர்களும் இணைந்தே இந்தச் சங்கத்தை ஆரம்பித்தார்கள்.

அப்போது பசுபதியும், சிற்றம்பலம் காந்தியும் யாழ்ப்பாணத்தில் படித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களும் இச் சங்க நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். இவ்விருவரும் தங்களது படிப்பு முடிந்து ஊருக்குத் திரும்பியதும், தமது ஊரிலும் அதே மாதிரியான சங்கம் உருவாக்க வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். சிற்றம்பலம் காந்தியின் கிராமம் ஒரு விஸ்தாரமான கிராமமானபடியால் அங்கு ஒரு சங்கத்தை நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒரு

சங்கம் உருவாக்கப்பட்டது. நல்வழி ஐக்கிய சேவா சங்கம் என்று அதற்குப் பெயர் சூட்டப்பட்டது. சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கத்தின் சாயல். அவர்களும் ஒரு கிடுகு மண்டபத்தை அமைத்து வாசிக சாலையும் நடத்தினார்கள். தொடக்கத்தில் பசுபதியும், பின்னாளில் ரவியும் அச்சங்கத்தில் இணைந்து செயற்பட்டார்கள். இந்தப் பின்னணியில், வதிரியில் வடமராட்சி சமூக சேவா சங்கம் என்னும் பெயரில் ஒரு சங்கம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

வராத்துப்பளையில் பசுபதியுட்பட, ரவி, பூபால், இராசண்ணன் ஆகியோர் மத்தியில் வாசிப்புப் பழக்கம் ஓர் அசுர வேகத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த காலம். ரவி, சந்தா தோட்டத்துக்குப் போய் வாசித்து விட்டு வர முடியும். படித்து விட்டுச் சும்மா இருந்த காலம். பூபாலும் இராசண்ணனும் தொழில் செய்பவர்கள். இடைநேரத்தில் வீட்டில் சற்று ஓய்வெடுக்க வேண்டியவர்கள், அங்கு போய்த் திரும்ப முடியுமா? அதனால் தங்களுடைய கிராமத்தில் ஒரு நூல் நிலையம் உருவாக்க வேண்டுமென்ற எண்ணம் உருப்பெற்றது. இதற்கு, பனை மரம் முறிந்து வீழ்ந்ததால், சிதலமாகி இழுத்து மூடப்பட்டுக் கிடந்த தம்பிப் பிள்ளையின் கடை தூண்டுகோலாயிருந்தது. அந்தக் கடைக்கு ரவி சொந்தக்காரனாயிருந்தது மேலும் பலத்தைக் கொடுத்தது. ஆனால், அந்தக் கொட்டில்தான் இடிந்து பழுதடைந்து கிடக்கிறதே! சரி, முயன்றால் முடியாத காரியம் எதுவுமில்லையே...!

வராத்துப்பளையிலுள்ள இளம் மட்டத் தொழிலாளர்கள் அனைவரையும் அணுகி, தங்கள் ஆவலை வெளிப்படுத்தி அவர்களிடம் நிதி சேகரித்தார்கள். பசுபதியின் அண்ணன் இராசையா கொஞ்சம் படித்தவர். தந்தையுடன் சேர்ந்து நயினா தீவில் கள்ளுத்தொழில் செய்து கொண்டிருந்தார். இரத்தினம் என்பவரின் அண்ணன் பாலசிங்கம் மருதன் கேணியில் தொழில் செய்து கொண்டிருந்தார். இவர்களிடமிருந்தும், ஊரில் தொழில் பார்த்துக் கொண்டிருந்த இராசண்ணனின் அண்ணன் பிள்ளை நாயகம், மற்றும் நாகப்பரின் மகன் செல்லத்துரை, ரவியின் அண்ணன்மார் தம்பிப்பிள்ளை, செல்லத்துரை என்று பலரிடமும் பணம் சேகரித்து உற்சாகத்துடன் தமது பணியைத் தொடங்கினர்.

கடையை இடித்து சற்று விசாலமாக அமைக்க வேண்டும். களிமண் சுவரும், கிடுகுக் கூரையும்தான். இளைஞர்கள் பலரும் சேர்ந்து வேலையைத் தொடங்கினார்கள். வாசகர்கள் இருந்து படிப்பதற்காக முன்பக்கம் ஓர் அறையும், புத்தகங்கள் பத்திரிகைகள்

பாதுகாத்து வைப்பதற்காக பின்பக்கம் ஓர் அறையுமாகச் சுவர் எழுப்பப்பட்டது. முன்பக்கத்துக்குக் கதவு இல்லை. பின் அறைக்கு இரட்டைக்கதவுகள் சுவர் எழுப்பும் வேலைகள் முடிவுற்றதும் மாதனையிலுள்ள ஒரு தச்சரை ஒழுங்கு பண்ணி, ஆறடி நீளம் மூன்றடி அகலமான ஒரு நீள மேசை, அதே நீளத்துக்கு இரண்டு வாங்குகள் தயாரிக்கப்பட்டன. வாசிக சாலையும் தளபாடங்களும் ஒழுங்கு செய்யப்பட்டாயிற்று.

சுவர் வைக்கும் வேலைகள் நடந்து கொண்டிருக்கும் போதே வாசிக சாலைக்குப் பெயர் சூட்டும் கைங்கரியம் நடந்து முடிந்தது. அடக்கி ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால், அந்த அடக்குமுறைகளிலிருந்து விடுபட முற்போக்குச் சிந்தனையுள்ள புத்தகங்கள் பத்திரிகைகளை, வேளையிலிருந்து படித்துக் கொண்டிருந்த இளைஞர்களுக்கு பெயர் சூட்டுவதற்கு கந்த முருகேசனாரின் பகுத்தறிவுச் சிந்தனையும் வழிகாட்டத் தொடங்கியது. பசுபதி, கந்த முருகேசனிடம், யாப்பிலக்கணம் கற்கப் போய் இந்த நாஸ்திக வாதத்தில் நன்றாக ஊறியிருந்தார். ரவியும் அக்கொள்கையில் உரம் பாய்ந்தவனாகவே இருந்தான். பசுபதியும் ரவியும்இடைக்கிடை கந்த முருகேசனாரிடமிருந்து ஈ.வெ.ரா. பெரியாரின் குடியரசு, அண்ணாத்துரையின் திராவிட நாடு வார இதழ்களை வாங்கி வந்து தாங்களும் படித்து இராசண்ணனுக்கும் பூபாலுவுக்கும் கொடுப்பார்கள். இந்த அடிப்படையிலேயே வாசிக சாலைக்குப் பெயர் வைப்பதில் ஈடுபாடு தோன்றியது. ரவி, பகுத்தறிவு மன்றம் என்று பெயர் வைக்க வேண்டுமென்று சொன்னான். பசுபதியோ, பகுத்தறிவுக் கொள்கையோடு யாப்பிலக்கணம் கற்ற பாதிப்பினால் தமிழர் அதாவது திராவிடர் என்ற பழைய பண்பாட்டு அடிப்படையில் திராவிடர் கலை மன்றம் எனப் பெயர் சூட்டினார். வாசிக சாலைக்கு அந்தப் பெயர் வைக்கப்பட்டு விளம்பரப் பலகை ஒன்றும் பொருத்தப்பட்டது.

அது, அந்தப் பனஞ்சோலைக் கிராமத்தில் ஓர் அகல் விளக்காக எரிந்து கொண்டிருந்தது!

## 2

**அ**கல் விளக்கு தொடர்ந்து எரியவும், வெளிச்சம் கொடுக்கவும் எண்ணெய் ஊற்ற வேண்டும். இல்லையெனில் அது வெறும் அகல் விளக்காக மட்டும் இருந்து விடும். அதாவது, வாசிக சாலையில் புத்தகங்கள் பத்திரிகைகள் இல்லையென்றால் அது வெறும் கட்டடம்தான். ஆதலால் இளைஞர்கள் தொழிற்படத் தொடங்கினர்.

மீண்டும், வாசிக சாலையில் ஆர்வமுள்ள தொழில் செய்கிற வாலிபர்களிடம் போய்க் கையேந்தும் நிலை ஏற்பட்டது. சந்தா செலுத்திப் பத்திரிகைகளை வரவழைக்க எண்ணம் கொண்டனர். இன்று ஒரு பத்திரிகைக்குச் சந்தா செலுத்துவதானால் பல கட்டுப்பாடுகளும் சிரமங்களும் உள. அப்போது அப்படி இல்லை. உள்நாட்டுத் தபாலட்டையொன்று அந்நாட்களில் மூன்று சதம். இந்தியாவுக்கு அனுப்பும் அட்டை ஐந்து சதம். அதனால், ஒரு தபாலட்டையை வாங்கி, செயலாளர் என்ற தொடக்கத்துடன் வாசிக சாலையின் பெயரையும், விலாசத்தையும் எழுதி, திகதியுமிட்டு, மேற்படி விலாசத்துக்கு தங்கள் சஞ்சிகையை வருட சந்தாவுக்கு V.P.P. மூலம் அனுப்பி வைக்குமாறு எழுதி அனுப்ப வேண்டியதுதான்.

ஒரு வார முடிவுக்குள், தபாலகத்திலிருந்து அந்த வி.பி.பி தொகையுடன் தபாற் கந்தோர்ச் செலவும் சேர்த்து, பணத்தைச் செலுத்தி பொருளைப் பெற்றுச் செல்லுமாறு ஒரு துண்டு வரும். பணத்தைக் கொண்டு போய்த் தபால் நிலையத்தில் செலுத்த, அந்தச் சஞ்சிகை இதழ் ஒன்று தருவார்கள். அவ்வளவுதான்! மாத இதழானால் மாதந்தோறும், வார இதழானால் வாரந்தோறும் சஞ் சிகை வந்து கொண்டே இருக்கும்.

முதல் அனுப்பிய சந்தா ஈரோட்டிலிருந்து வெளிவந்த குடியரசுவுக்கு. அடுத்து அனுப்பிய சந்தா காஞ்சிபுரத்திலிருந்து வெளிவந்த திராவிட நாட்டுக்கு. நாரண துரைக்கண்ணன் என்ற பிரபல நாவலாசிரியர் ஒருவர் சென்னையிலிருந்து ஆனந்த போதினி என்னும் ஒரு மாத சஞ்சிகையை வெளியிட்டுக் கொண்டிருந்தார்.

அவர் எழுதிய உயிரோவியம் என்ற நாவல் இவர்களின் கையில் கிடைத்து அதைப் படித்த ருசியில் ஆனந்த போதினிக்கும் சந்தா செலுத்தினார்கள். தொடர்ந்து கல்கி, கலைமகள், துமிலன் என்ற எழுத்தாளர் தொடங்கிய மாலதி என்ற மாதப் பத்திரிகை, இவற்றுடன் முற்போக்குக் கருத்துக்களைத் தாங்கி பிற மொழி எழுத்தாளர்களின் மொழிபெயர்ப்புகளைத் தாங்கி வெளிவந்த சக்தி என்னும் சக்திவாய்ந்த மாத சஞ்சிகை இவற்றுக்கெல்லாம் சந்தா செலுத்தி வரவழைத்தார்கள். ஆனந்த விகடனுக்குச் சந்தா செலுத்தவில்லை. அதில் வெறும் ஹாஸ்யத் துணுக்குகளும் கோமாளிக் கூத்துக்களும் தானே என்று கருதி அதைப் புறக்கணித்தார்கள்.

தமிழ்நாட்டில் சென்னையோ, காஞ்சிபுரமோ, சேலமோ எங்கேயிருந்தாலும் பத்திரிகை வெளியான மூன்றாம் நாள் தபால் மூலம் திராவிடர் கலைமன்றத்துக்கு வந்துவிடும். வெள்ளிக்கிழமை பிரசுரமாகும் குடியரசு, திராவிட நாடு பத்திரிகைகளை எதிர்பார்த்து, வாசனை வெறிபிடித்த ரவியும் நண்பர்களும் பத்து பத்தரை மணிக்கெல்லாம் வாசிக சாலைக்கு வந்து, வீதியில் தபாற்காரனைப் பார்த்துக் கொண்டு நிற்பார்கள். தபாற்காரன் சிறிது சுணங்கினாலும், அந்தப் பத்திரிகைகளைக் கொடுத்து விட்டுப் போவான்.

வீரகேசரிப் பத்திரிகையை வடலங்கா புத்தகசாலையிலிருந்து நேரம் சுணங்கிப் பெறுவதாக முன்னர் குறிப்பிட்டிருந்தேன். காலப் போக்கில் அதற்கும் சந்தா செலுத்தினார்கள். என்ன ஆச்சரியம்! இன்றைக்குரிய பத்திரிகை - வெளியூர்ப் பதிப்பு எனக் குறிப்பிடப்பட்டு - நேற்று மாலையே மெயில் வண்டியில் சேர்க்கப்படும். அதுவும் இன்று பத்து பத்தரைக்குக் கிடைத்துவிடும்.

இன்றைய நாட்களில் போக்குவரத்து வளர்ச்சி, கடிதப் பரிமாற்றத் துரிதம் என்றெல்லாம் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டாலும் தெஹிவளையிலிருந்து வெள்ளவத்தைக்கு அனுப்புகிற ஒரு கடிதம் போய்ச் சேர மூன்று நான்கு நாட்கள் எடுக்கிறது. பதிவுத் தபால் என்றால் ஒரு வாரம் வேண்டும்.

ரவி ஆசிரியத் தொழிலுக்குப் போவதற்கு முன், மூன்று ஆண்டுகள் வீரகேசரிப் பத்திரிகையின் பருத்தித்துறை நிருபராகப் பணியாற்றிக் கொண்டிருந்தான். இன்றைய காலம் மாதிரிப் பலவிதமான செய்திகளையும் எழுத முடியாது. பத்திரிகையில் பிரசுரிக்கவும் மாட்டார்கள். எங்காவது கூட்டங்கள் நடந்தால் அதுவும், பிரபலஸ்தர்கள் பங்கு பற்றும் கூட்டங்களின் செய்திகளை

எழுதியும் அனுப்பலாம். அல்லது திடீர் மரணச் செய்திகள் நீதிபதியின் தீர்ப்பினைச் சேர்த்து எழுதி அனுப்பலாம்.

ரவி செய்திகளைத் தேடிக் கொண்டிருப்பான். ஏதாவது கிடைக்கும். அதை மனதில் வைத்துக் கொண்டு, மாலை நாலு மணியளவில் பருத்தித் துறைக் கடற்கரையோரம் அமைந்துள்ள பிரதான தபாற்கந்தோரடிக்குப் போவான். செய்தி எழுதும் தாளும் பேனையும் அவன் வசம் இருக்கும். தபாற்கந்தோருக்கு முன்பாகப் பரந்த கடல் அலை அடித்துச் சீறிக் கொண்டிருக்கும். பகல் வேளையில் மீன்பிடித் தொழில் முடிந்ததும், படகுகள் கரையோரமாக இழுத்து விடப்பட்டிருக்கும். அப்படியான படகொன்றில் அமர்ந்து, ரவி செய்திகளை எழுதிக் கொண்டிருப்பான். சரியாக ஆறு மணிக்கு தபாற் கந்தோர் வாசலில் மெயில் பஸ் - தபாற் பொதிகளை ஏற்றிச் செல்லும் பஸ் வண்டி - வந்து நிற்கும். தபால் ஊழியர்கள் தபாற் பொதிகளை அவ்வாகனத்தில் கொண்டு வந்து ஏற்றுவார்கள். ரவியும் உடனடியாக தான் சேகரித்தெழுதிய செய்தித் தாள்களை மடித்து உறையிலிட்டு ஒட்டி, அந்த உறையை பஸ்ஸில் இருக்கும் விசேட தபாற் பெட்டியில் தள்ளிவிட்டுப் புறப்படுவான்.

இதில் உள்ள புதின மென்னவென்றால், இன்று மாலை மெயில் வண்டியில் இட்ட செய்திகள், நாளை கொழும்பு சென்றடைந்து அன்று பத்திரிகையில் பிரசுரமாகி, மறுநாட்காலை 10 மணிக்கே பத்திரிகை ரவியின் கையில் கிடைத்து விடுகிறது.

விஞ்ஞான வளர்ச்சி இன்று நாட்களை வீறுநடை போடச் செய்கின்றது. E-mail, Fax, Internet என்று பல்வேறு வகைச் சாதனங்கள் உடனுக்குடன் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதால், தபால் விநியோகச் சீர்கேட்டை மனிதவர்க்கம் தாங்கிக் கொள்ள வேண்டியதுதான்.

# 3

இலங்கையின் முதலாவது பாராளுமன்றத் தேர்தல் 1948ஆம் ஆண்டு நடைபெற்றது. பருத்தித் துறைத் தொகுதியில், சகல மக்களாலும் ஜெயம் என்று அன்பாக அழைக்கப்பட்ட இளம் சட்டத்தரணி சி.தர்மகுலசிங்கம், லங்கா சம சமாஜக் கட்சியின் ஆதரவில் போட்டியிட்டார். அவர் ஒரு சமூக சீர்திருத்தவாதி. வடமராட்சியில் நிலை கொண்டிருந்த கொடூர சாதி வெறிக் கெதிராகத் தீவிரமாகப் போராடிக் கொண்டிருந்தார். அங்கு பெரும் அடக்கு முறைகளினால் அல்லற்பட்டுத் துயர வாழ்க்கை நடத்தும் நளவர், பள்ளர், பறையர், வண்ணார், அம்பட்டர் மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் துயரங்களில் பங்கு கொண்டு அவர்களின் விடிவுக்காகப் போராடினார்.

நீதிமன்றத்தில் வழக்காடுவதற்காகத் தன்னிடம் வரும் ஏழை எளிய மக்களிடம் கடும் போக்காக நின்று பணம் கேட்க மாட்டார். கொடுப்பதை வாங்குவார். பணமில்லாமல் கையைப் பிசைந்து கொண்டிருப்பவர்களிடம், பணத்தை எதிர்பார்க்காமலே வழக்குப் பேசுவார். சில சமயம் கோட்டிற்குச் செலுத்த வேண்டிய முத்திரைச் செலவுகளையும் தானே ஏற்றுக் கொள்ளுவார்.

துன்னாலை அவரது பிறப்பிடம். அவருடன் ஐந்து ஆண் சகோதரர்கள். இவருக்கு மூத்த இருவர் இவரைப் போலவே சட்டத் தரணிகள். துரைசிங்கம் என்பவர் பருத்தித் துறையிலேயே வழக்குகள் பேசினார். தனபாலசிங்கம் என்பவர், கொழும்பில் சுப்ரீம் கோர்ட் நீதிபதியாகப் பணியாற்றினார். இளையவர் லோகநாதன், இலங்கை வங்கியின் பிரதம அதிபதியாகக் கொழும்பில் பணிபுரிந்தவர். இளம் வயதிலேயே தாயும் தந்தையும் இறந்து போக, மூத்தவரான மாணிக்கவாசகர் இவர்களை வளர்த்து படிப்பித்து உயர் பதவிகளில் மேலேற்றினார்.

தேர்தலில் தா. இராமலிங்கம் என்ற தமிழ் காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி பெற, தர்மகுலசிங்கம் இரண்டாவது பெரும்பான்மை

வாக்குகளைப் பெற்றார். தொகுதியிலுள்ள சகல தொழிலாளர்களும் தாழ்த்தப்பட்ட மக்களும் ஜெயத்துக்கே வாக்களித்து தங்கள் ஆதரவை வெளிப்படுத்தினர்.

இத்தேர்தல் நடைபெறுவதற்குச் சில காலத்துக்கு முன்புதான் கொழும்பில் இயங்கி வந்த இடது சாரிக் கட்சியான லங்காசம சமாஜக் கட்சியிலிருந்து சித்தாந்த வேறுபாடுகளின் காரணமாக ஒரு பகுதியினர் பிரிந்து சென்று கம்யூனிஸ்ட் கட்சியை அமைத்து அதை முன்னெடுத்துச் சென்றனர். நடைபெற்ற தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் போட்டியிட்ட டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்க மாத்தறைத் தொகுதியிலும், பீட்டர் கெனமன் கொழும்பிலும் வெற்றியீட்டினர்.

கம்யூனிஸ்ட் கட்சி இயங்கத் தொடங்கியதும் அதன் கிளை யாழ்ப்பாணத்திலும் நிறுவப்பட்டது. மு.கார்த்திகேயன், எம்.சி.சுப்பிரமணியம், டாக்டர் சீனிவாசகம், ஐ.ஆர்.அரியரத்தினம் எனப் பல முற்போக்காளர்கள் இணைந்து சமூக மாற்றத்துக்கான பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

எம்.சி.சுப்பிரமணியம், தொடக்கத்தில், பலாலிறோட் சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கத்துடன் இணைந்து சமூக முன்னேற்றப் பணிகளில் இயங்கிக் கொண்டிருந்தாலும், அந்தப் பணியைப் பரந்த அளவில், அதாவது தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரினதும் முன்னேற்றத்துக்காக முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்ற எண்ணத்தில், மற்றைய தலைவர்களுடன் சேர்ந்து, அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை என்ற ஸ்தாபனத்தை அமைத்து இயங்கத் தொடங்கினார். இ.வெ. செல்வரத்தினம், கவிஞர் பசுபதி ஆகியோர் அதன் இணைச் செயலாளர்களாக இயங்கினர். எம்.சி. சுப்பிரமணியம், கம்யூனிஸ்ட் கட்சியின் வழிநடத்தலிலேயே மகாசபையின் செயற்பாடுகளை முன்னெடுத்தார். சிறுபான்மைத் தமிழர் மகாசபை ஆரம்பிப்பதற்கு முன்னர் கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கத்தை எம்.சி. நடத்தினார்.

இந்த வேளையில்தான், பருத்தித் துறைத் தேர்தல் முடிவுகள், கம்யூனிஸ்ட் கட்சிக்காரருக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. சாதி வெறி பிடித்த வேளாளரும் மற்றும் மிதவாதப் போக்காளரும் தங்கள் வாக்குகளின் மூலம் தமிழ் காங்கிரஸ் அபேட்சகருக்கு வெற்றியீட்டிக் கொடுத்தாலும், தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் சமசமாஜ அபேட்சகருக்கு அணி திரண்டமை பெரும் பாதிப்பை

ஏற்படுத்தியது. லங்கா சம சமாஜக் கட்சியிலிருந்து பிரிந்து செயற்படத் தொடங்கிய சந்தர்ப்பத்தில் - தாங்கள் எந்த மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை முன்வைத்து அவர்களின் விடுதலைக்காகப் போராட வேண்டுமென்று நினைத்தார்களோ - அம்மக்கள் மறுதிசையில், அதாவது சமசமாஜக் கட்சிக்கு வாக்களித்து அணிதிரண்டதை அடிப்படையாக வைத்து தங்கள் இயக்கப் பணிகளை ஆரம்பித்தனர்.

அவ்வேளையில் எம்.சி.க்கும் ரவிக்குமிடையில் தொடர்பு நிலவிக் கொண்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கூட்டங்கள், மாநாடுகள், கருத்தரங்குகளுக்கு ரவி அடிக்கடி போய் வருவான். எம்.சி.யும் இடைக்கிடை பருத்தித்துறைக்கு, ரவியிடம் வந்து போனார். இலங்கையின் முதலாவது பாராளுமன்றம் இயங்கத் தொடங்கியதும் யாழ் நகர சபைத் தேர்தல் நடைபெற்றது. அத்தேர்தலில் எம்.சி.யும் போட்டியிட்டார். எம்.சி.யின் தேர்தல் வேலைகளைச் செய்வதற்காக, எம்.சி., ரவியை அழைத்துப் போய் ஒரு மாத காலம் தன் வீட்டில் வைத்திருந்து தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தினார். அதனால் நெருக்கமான தொடர்பு.

இவற்றையெல்லாம் பின்னணியாகக் கொண்டு எம்.சி. ஒரு நாள் ரவியிடம் வந்தார். "வடமராட்சியில் கட்சி வகுப்புகள் நடத்த வேண்டும். வகுப்பு நடத்தவரும் தோழர்கள் இங்கு வந்து தங்கித் தான் வகுப்புகளை நடத்துவார்கள். நீதான் வகுப்புகளை ஒழுங்கு செய்ய வேண்டும்!" என்று கேட்டுக் கொண்டார். ரவி மகிழ்வுடன் சம்மதம் தெரிவித்தான்.

ரவியின் வீடு சற்றுப் பெரியதுதான். இரவில் எல்லோரும் சிறிய சீமெந்து விறாந்தையிலும், சற்று விசாலமான ஹோலிலும்தான் பாய்களை விரித்துப் படுத்துறங்குவார்கள். சற்றுத் தூரத்திலுள்ள உறவினர்கள் யாராவது வந்தாலும் அவர்களையும் அங்கு படுக்க வைக்க முடியும். ஆனால் கட்சித் தோழர்களாயிருந்தாலும் வேறு இடங்களிலிருந்து வரும், படித்த, நாகரிகமானவர்களை எப்படி அங்கு இரவில் தங்க வைப்பது? இந்தக் கெடுபிடி இல்லாத ஒரு வாய்ப்பு, அதாவது வாசிக சாலையில் தங்கக் கூடிய வாய்ப்பு ரவிக்கு இருந்தபடியால் தான் எம்.சி.யும் அங்கு வந்து கேட்டார். ரவியும் ஆம் என்று முடிவு சொன்னான்.

திராவிடர் கலை மன்றம் வாசிகசாலை தொடங்கி இரண்டொரு மாதம்தான் ரவி தன் வீட்டில் வசித்து வந்தான். பிறகு, வாசிகசாலையே அவனது இருப்பிடமாகி விட்டது. வாசிக சாலையின் உள் அறைச்

சுவரில் ஒரு றாக்கை மாட்டப்பட்டிருந்தது. அங்கு புத்தகங்கள் இல்லை. சஞ்சிகைகள், பத்திரிகைகளை அந்த றாக்கையில் அடுக்கி வைத்ததால் - முழு அறையும் சும்மா கிடந்தது. அதன் காரணமாக, ரவி ஒரு பாயையும் தலையணையையும் அங்கே கொண்டு வந்து வைத்துத் தன் வாழ்க்கையை அங்கே கழிக்கத் தொடங்கினான். சாப்பிட, தேநீர் குடிக்க, குளிக்க, உடுப்புகள் தோய்க்க மட்டும்தான் வீட்டுக்குப் போவான். மற்றும் படி வாசிப்பு, எழுத்து, உறக்கம் என்று வாசிகசாலையின் அறையிலேயே அவன் காலம் கழிந்தது.

வாசிக சாலையும் மூன்று வருடங்கள் நடைபெற்று பின்னர் ஓய்ந்துவிட்டது. வெறும் கட்டடம்தான் மிஞ்சிக் கிடந்தது. அதே வேளை, ரவி அங்கு தங்கிய போதும் அறையில் காற்றும் வெளிச்சமுமில்லாமல் கஷ்டப்பட்டான். இச்சந்தர்ப்பத்தில் அவனுடைய வீட்டுக்கு முன்பக்க மண்டபத்தில் ஏதோ மாற்றம் செய்யப்பட்டதால் ஆறு அடி நீளமான (உயரம் 3 அடி) ஒரு பெரிய யன்னலைக் கழற்றி வெளியே வைத்திருந்தார்கள். ரவி வாசிகசாலையின் ஒரு பக்கச் சுவரை இடித்து, அந்த யன்னலைப் பொருத்தினான். அறைக்கு வெளிச்சம் வரத் தொடங்கியது. வாசிகசாலை இயங்காததால் முன்பக்கத்திலிருந்த ஆறடி நீளமான மேசையை உள் எடுத்து யன்னலோரமாக வைத்தான். இருவாங்குகளையும் எடுத்துப் பக்கத்தில் ஒருமித்து வைத்தான். மேசையில் எழுத்து, படிப்பு வேலை, வாங்குகள் இரண்டிலும் பாயை விரித்து உறக்கம்.

கட்சி வகுப்புகள் முதலில் வாசிக சாலையிலேயே ஒழுங்கு செய்யப்பட்டன. பக்கத்துக் கிராமங்களிலுள்ள முற்போக்கு எண்ணங் கொண்ட வாலிபர்களை அழைத்து வகுப்புகள் நடத்தப்பட்டன. வகுப்பு நடைபெறும் நேர காலத்தை எம்.சி. வேளையிலே அறிவித்து விடுவார். தொழிலாளர்களானதால், வகுப்புகள் இரவிலேயே நடைபெறும். அந்த நாட்களில், வகுப்பு நடத்தும் தோழர் மாலையிலேயே வந்து விடுவார். வகுப்பு முடிந்ததும் இரவுச் சாப்பாடு, படுக்கை எல்லாம் ரவியுடன் தான்.

ரவியின் தந்தை நோயாளியாகி விட்டார். தொழில் செய்வதில்லை. வீட்டில் அன்றாடச் சாப்பாட்டுக்கே பெருங்கஷ்டம். வள்ளியம்மாள் மூடல், பெட்டி இழைத்து அதை விற்றுக் கிடைக்கும் சிறிதளவு பணத்தில்தான் வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது. இந்த நிலைமையில் ஒரு நாகரிகமான மனிதர் அங்கு வந்து தங்கிப் போவதானால்

ரவியின் இருப்பிடம் தாக்குப் பிடிக்கும். ஆனால் வருபவர்களுக்கு இரவில் சாப்பாடு கொடுக்க வேண்டுமே...

அப்படியான தருணங்களில், ரவி அம்மாக்காரியிடம் மெல்லிய குரலில் இழுத்து, இழுத்து "நாளைக்கு யாரோ வர்றாங்கம்மா..." என்று சொல்லி விடுவான்.

அந்த நாளில் எவ்வளவோ கஷ்டங்களுக்கு மத்தியில், வழக்கத்தைவிட, வித்தியாசமான முறையில் சோறும் இரண்டு கறியும் ஆக்கி வைப்பாள். இரவு, கட்சி வகுப்பு முடிந்ததும், அந்தச் சாப்பாட்டை ரவி, தன் மேசைக்கு எடுத்து வருவான். வந்தவர் சாப்பிட்ட பின் தானும் போய்ச் சாப்பிட்டு விட்டு, தனது பாயை அந்த நீள மேசையில் விரித்து அவரைப் படுக்க விடுவான். தான், வாங்கிலில் படுத்துறங்குவான்.

அ.வைத்திலிங்கம் என்ற தோழர் கேம்பிறிட்ஜில் எம்.ஏ.,எம். எஸ்ஸி. படித்து விட்டு வந்து, யாழ் இந்துக் கல்லூரியில் படிப்பித்துக் கொண்டிருந்தார். லண்டனில் வாழ்ந்து பழகியவருக்கும் அதே சாப்பாடும் அதே படுக்கையும்தான். தோழர்களாகிவிட்ட பின் ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தோடும் ஒத்துப் போக வேண்டியதுதான்.

இராமசாமி ஐயர் என்று ஒரு தோழரும் இருதடவை வகுப்பு நடத்த வந்திருந்தார். நல்லூர் கந்தசாமி கோவிலுக்குப் பின்பக்கத்தில் அவருடைய வீடு. அவருக்கும் வள்ளியம்மை சாப்பாடு தயாரிக்க வேண்டும். மற்றத் தோழர்களுக்கு மீன்கறியோடு ஒரு மரக்கறியும் தயாரித்து உணவு கொடுக்க முடிந்தது என்றால் ஐயருக்கு?

மீன் குளம்பு, மீன் சொதி, மீன் பொறியல் அல்லது மீன் தீயல் என்று சதா மீன் மீன் மீன் என்றே சமைப்பவர்களுக்கு ஐயருக்கு சமையல் செய்ய எப்படி முடியும்?

கத்தரிக்காயில் ஒரு குளம்பு, வெண்டிக்காயில் ஒரு வெள்ளைக்கறி, பருப்பு என்று கறிகள் ஆக்கினாள். கோப்பையை விடுத்து வாழையிலையில் உணவு பரிமாறப்பட்டது.

கறிகளுக்கு இட்ட உறைப்பை அவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. குளம்பை ஒதுக்கி வைத்துவிட்டார். வெண்டிக்காய், பருப்புக் கறிகளிலும் பச்சை மிளகாய். ஐயர் மிகவும் சிரமப்பட்டார். வெண்டிக்காயிலும், பருப்பிலும் கிடந்த பச்சை மிளகாய்

நறுக்குகளை எடுத்து ஒதுக்கி விட்டு, சோற்றிலே கொஞ்சம் பருப்பையும் வெண்டிக் காயையும் எடுத்து வைத்து, சோற்றினால் அவற்றை மூடி மறைத்து அள்ளி வாயில் போட்டு விழுங்கினார். எப்படியும் இரண்டு பிடி சோறுதான் சாப்பிட்டிருந்தார்.

ரவி, இயக்கத்துக்குத் தன்னை அர்ப்பணித்தவன். அவன் சிரமங்களை ஏற்றுக் கொள்வது பெரிய காரியமல்ல. ஆனால் அவன் அம்மா? வீட்டிலுள்ளவர்களுக்கு ஒரு வேளைச் சாப்பாட்டிற்கே பெரும் அல்லற்படுபவள். வீட்டிற்கு வருகிற மற்றைய சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு உணவு பரிமாறுவதானால் அவளது தியாகப் பண்பு?

வகுப்பு நடத்துவதற்கு அநேகமாக ஒரு தோழர் தான் வந்து போவார். சில சமயங்களில் இன்னொரு இளந் தோழரும் அந்த நிகழ்வினைப் பார்வையிட வருவார். மலேசியாவிலிருந்து இலங்கை திரும்பிய ஒரு இளம் தோழர், பூபால சிங்கம் புத்தகசாலை அதிபர் பூபாலசிங்கம் போன்றோர் இவர்களில் அடங்குவர். இவ்வேளை இருவரைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பும் தலையில் விழும். வள்ளியம்மை, தன் பிள்ளையைத் தேடி வருபவர்களை மதிக்க வேண்டுமென்று கருதி பெரும் சிரமங்களுக்கு மத்தியில் அவர்களுக்கு உணவு பரிமாறினாள். வருபவர்கள், காலையில் தேநீர் அருந்தி விட்டுப் போவார்கள்.

திராவிடர் கலை மன்ற வாசிக சாலையில் நான்கு ஐந்து வகுப்புகள் நடத்தப்பட்ட பின், சற்றுத் தூரத்திலுள்ள இடங்களிலும் வகுப்புகள் நடத்தப்பட்டன. வகுப்பு நடத்தும் தோழர், ரவியின் வீட்டுக்கு வருவார். பின், ரவி அவரைச் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு போய், வகுப்பு முடிந்ததும் வீட்டுக்கு அழைத்து வருவான். மறுநாள் விடிந்ததும், காலைக் கடன் கழிக்க, பக்கத்திலுள்ள காணிகளுக்கு அழைத்துச் செல்வான். வீட்டுக்கு வந்து அடிக் கழுவுவார்கள். கிணற்றடியில் அதற்கென ஒரு மறைப்பு கட்டப்பட்டிருந்தது. பின் முகம் கழுவித் தேநீர் அருந்தி விட்டுப் புறப்பட்டுச் செல்வார்கள். ரவி, சைக்கிளில் ஏற்றிச் சென்று பஸ்ஸில் அனுப்பிவிட்டு வருவான்.

குடும்பக் கதைகள், காதல் கதைகள் என்று ஆரம்பமான அவனது வாசிப்புப் பழக்கம், காலப்போக்கில் சமூக மேம்பாட்டிற்கு வழிகோலும் முற்போக்கு இலக்கிய வாசிப்புக்கு இட்டுச் சென்றது. இந்தப் பின்னணியில் தன் இருபதாவது வயதில் மார்க்ஸிம் கார்க்கியின் உலகப் புகழ்பெற்ற தாய் நாவலைப் படிக்கும் சந்தர்ப்பம்

ஏற்பட்டது. தொழிற்சாலையொன்றில் வேலை செய்யும் பாவெல் என்ற இளைஞன் தொழிலாளர்களின் விடியலுக்காகப் பாடுபட்டு வருகிறான். வறுமைக் கோட்டில் வாழும் அவன் தொழிலாளர் போராட்டங்களுக்காக துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், அறிக்கைகள் தயார்ப்படுத்தும் பணிகளில் ஈடுபடுகிறான். அதற்கு உதவியாக பல தோழர்கள் அடிக்கடி வீட்டுக்கு வருகிறார்கள். படிப்பறிவேயில்லாத அவனுடைய தாய் பெலகேயா, மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் அவர்களுக்கு உணவு தயாரித்து வழங்கி, படுக்கை வசதியும் செய்து கொடுத்து அவர்களின் போராட்டப் பணிகளுக்கு உறுதுணையாக நிற்கின்றாள். காலப்போக்கில் அந்த இளைஞர்கள் தயாரிக்கும் சுவரொட்டிகள் துண்டுப் பிரசுரங்களை எழுத்துக் கூட்டி வாசிக்கப் பழகி, தானும் அவர்களோடிணைந்து பாடுபடுகிறாள்.

தாய் நாவலை வாசித்த ரவியின் மனதில் இந்த உன்னத பாத்திரங்கள் மனதில் பதிந்தாலும் எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. இரண்டோர் ஆண்டுகளில், கட்சி வகுப்பு நடத்த தோழர்களும், வேறு தேவைகளுக்காக நண்பர்களும் அவன் வீட்டுக்கு வரும்போது துட்டுக்கு வழியில்லாத அவனுடைய தாய் வள்ளி, மகன் உழைக்காத நிலையிலும் எவ்வளவோ கஷ்டப்பட்டு அவர்களுக்குச் சமைத்துப்போட்டு, பிள்ளையின் சமூக சேவைக்குப் பக்க பலமாய் நிற்பதைக் கண்டு, பாவெலும் பெலகேயாவும் அந்தக் கிராமத்திலிருப்பதை உணர்ந்து கொண்டான். பாவெலின் பங்களிப்புக் குறைவானதுதான். ஆனால் பெலகேயாவின் பங்களிப்பு? கார்க்கியின் பெலகேயாவுக்கு மகன் பாவெல் உழைத்துக் கொடுத்தான். பெலகேயா கஷ்டப்பட்டு எழுத படிக்கவும் தெரிந்திருந்தது. இந்த வள்ளி பெலகேயாவுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. ஆனால் அங்கு வரும் தோழர்கள் தனது சாதி மக்களின் விடிவுக்காக ஏதோ பணி செய்கிறார்கள் என்ற ஆதங்கத்தில் மூடல் பெட்டி இழைத்தும், கடன் வாங்கியும் அவர்களை உபசரிக்கின்றாள். பிற்காலத்தில் ரவி இந்தப் பெலகேயாவை நினைத்துப் பெருமிதமடைந்தான்.

# 4

**வ**ராத்துப்பளையில் தொடங்கிய வகுப்புகள், சந்தா தோட்டம், உத்திராவத்தை, கொத்தியாவத்தை, பறைய தெரு, கோணந்தீவு, அல்வாய் எனப் பல கிராமங்களில் சுமார் ஓராண்டு காலம் நடத்தப்பட்டது. இரண்டு மூன்று கிழமைகளுக்கொன்றாக எப்படியும் இருபது வகுப்புகள் நடந்தன. அடிமைப்படுத்தப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளிலேயே வகுப்புகள் நடத்தப்பட்டமை பெரும் பயனைத் தந்தது. இளைஞர்கள் மத்தியில் முற்போக்குச் சிந்தனைகளையும், தாம் அனைவரும் ஒன்றிணைந்து அடிமை விலங்கறுக்கப் போராட வேண்டும் என்ற உணர்வையும் ஏற்படுத்தியது. சில கிராமங்களில் நடைபெற்ற வகுப்புகளில் வேளையிலே முற்போக்குணர்வுகள் கொண்ட உயர்சாதி இளைஞர்களும் பங்கு பற்றினர்.

தோழர் தர்ம குலசிங்கம் காலத்தின் தான், வடமாநிலத்தில் முதன்முதல் தொழிற்சங்கப் போராட்டம் ஆரம்பித்தது. பஸ் தொழிலாளர் சங்கம்தான் முதன்முதல் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சங்கம். யாழ்ப்பாணத்தில் உள்ள பஸ் தொழிலாளர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து, தமது சம்பள உயர்வு, வேலை நேரக் கட்டமைப்பு போன்ற உரிமைகளுக்காக வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தி வெற்றியும் ஈட்டிக் கொண்டார்கள்.

இந்தத் தொழிற்சங்கத்தைத் தொடர்ந்து பல்வேறு தொழில் சார்ந்த தொழிலாளர்களும் தமது உரிமைகளுக்காகப் போராடத் தொடங்கினார்கள். சம சமாஜக் கட்சியைச் சேர்ந்த அ.துரை ராஜ சிங்கம் மிகவும் பங்களிப்பு நல்கினார். வி.ஏ.கந்தசாமி சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தைக் கட்டி எழுப்பினார். தொடர்ந்து மட்பாண்டத் தொழிலாளர் சங்கம், கூட்டுறவுச் சங்கக் கடைத் தொழிலாளர் சங்கம், சீமெந்துத் தொழிலாளர் சங்கம், உப்புத் தொழிலாளர் சங்கம் எனப் பல தொழிற் சங்கங்கள் உருவாகி தமது உரிமைகளுக்காகப் போராடி வெற்றி பெற்றன. கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கமும் அப்போதுதான் ஆரம்பிக்கப்பட்டது.

வடமாநிலத்தில் பல தொழில் நிறுவனங்கள் நடைபெற்று அவற்றில் பணிபுரியும் தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்காகப் போராடினாலும், மிகப் பரந்த அளவில் அங்கு நிலை பெற்றுக் கொண்டிருந்தது சாதி அடக்குமுறைக் கொடூரமாகும்.

தோழர் எம்.சி. சுப்பிரமணியம் சிறுபான்மைத் தமிழர் மகாசபையை நிறுவி, தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினைகளுக்காகப் பாடுபட்டாலும், போராட்டப் பாதையில் அவர் வழிநடத்தியது குறைவு என்றுதான் சொல்ல வேண்டும். இந்தக் காலத்தில் தான் வடபுலத்தில் ஆலயப் பிரவேசப் போராட்டம் தொடங்கியது. இப்போராட்டம் ஆரம்பித்த காலத்தில், கம்யூனிஸ்ட் கட்சியில் பிளவு ஏற்பட்டது. மாஓ.சே.துங்கின் புரட்சிகரக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டவர்கள், வேறுபட்டு தீவிரவாதப் போக்கில் இயங்கத் தொடங்கினர்.

எம்.சி.யும் தனது தோழர்களுக்குத் தலைமை தாங்கி ஆலயப்பிரவேசப் போராட்டத்தில் பங்கு பற்றினார். ஆனால் அவர்கள் அடைந்த பலன் மிகவும் குறைவு. அவ்வேளை, மா.ஓ.வாதிகள் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் என்ற பெயரில் ஒரு புரட்சிகர இயக்கத்தை ஆரம்பித்து ஆலயப் பிரவேசப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றனர். சுன்னாகத்தைச் சேர்ந்த எஸ்.ரி.என்.நாகரத்தினம் என்பவர் இவ்வியக்கத்தை வழிநடத்தினார். இவர் தமது இளமைக் காலத்திலிருந்தே மார்க்ஸீயக் கொள்கைகளில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தாலும், சுன்னாகச் சந்தையில் ஒரு பிடவைக் கடை நடத்திக் கொண்டிருந்ததால் கட்சி நிகழ்வுகளுக்கு ஒழுங்காக வர முடியாத நிலைமையிலிருந்தார். என்றாலும் முக்கிய நிகழ்வுகளுக்கு வந்து போவார். மாவிட்டபுரப் போராட்டத்தில், தன் முழுப் பலத்தையும் காட்டி அதை வெற்றி பெறச் செய்தார். அவர் தனது ஆண்பிள்ளைகளுக்குச் சூட்டிய பெயர்கள், இடதுசாரிக் கொள்கையில் அவருக்கிருந்த பற்றினை வெளிப்படுத்துவதாகும். பிள்ளைகளின் பெயர்கள்: லெனின், ஹஸ்ட்ரோவ், ஏங்கல்ஸ், மார்க்ஸ்.

பிரசித்தி பெற்ற பன்றித் தலைச்சி அம்மன் ஆலயம், நல்லூர்க் கந்தசாமி கோவில், செல்வச் சந்நிதி கோயில், வல்லிபுர ஆழ்வார் கோயில், மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் என்று பல பிரசித்தி பெற்ற ஆலயங்களிலும், சிறு சிறு ஆலயங்களிலும் இப்போராட்டம் நடைபெற்று வெற்றி பெற்றது.

இவற்றில் எல்லாம் மிகப்பெரிய போராட்டம் நடைபெற்றது மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலில்தான். போராட்டம் என்னும் போது எவரும் தவறுதலாக விளங்கிக் கொள்ளக்கூடாது. சத்தியாக்கிரக வழியில்தான் போராட்டம் நடைபெற்றது. பக்தர்கள் கோயில் வாசலில் அமைதியாக உட்கார்ந்திருந்து "நாமும் உள்ளே சென்று வணங்க உரிமை கொடு!" என்பதுதான் கோரிக்கை.

மாவிட்டபுரத்தில் இம்மக்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த போது, கோயில் வாசலைத் தடுத்து வைத்துக் கொண்டிருந்தான் ஒரு சூரன். கோயில் மூலஸ்தானத்தில், தடிகள், கற்கள், குண்டுகள் போன்ற ஆயுதங்களைக் குவித்து வைத்துக் கொண்டு, உள் மண்டபத்தில் குண்டர்களையும், வெளியில் பொலிஸ்காரர்களையும் தயார் நிலையில் நிற்க வைத்து நின்ற சூரன் யாருமல்ல. அப்போது பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த அடங்காத் தமிழன் சி.சுந்தரலிங்கம் ஐயா அவர்கள்தான்.

அந்நாட்களில் எம்.சி.சுப்பிரமணியம், பாராளுமன்றத்தில் நியமன எம்.பி.யாக இருந்தார். அவர் சார்ந்திருந்த கம்யூனிஸ்ட் கட்சி அவரை இப்பதவியில் அமர்த்தியது. மாவிட்டபுர வாசலில் மா.ஓ.வாதிகளின் வழிநடத்தலில், அடக்கி ஒடுக்கப்பட்ட சகல மக்களும் அணிதிரண்டு சத்தியாக்கிரகம் நடத்திக் கொண்டிருக்க, திரிபுவாதிகளால் அங்கு வந்து உரிமை கோர முடியவில்லை. எம்.சி.சுப்பிரமணியம், பாராளுமன்றத்தில் பெரிய அளவில் சர்ச்சை எதுவும் செய்யாமல் பிரதமரான ஸ்ரீமாவோ அம்மையாரிடம் தனிப்பட்ட முறையில் இந்தப் பிரச்சினைக்கு ஏதாவது தீர்வு காணும்படி வேண்டிக் கொண்டார்.

அம்மையாருக்கு, அடங்காத் தமிழனுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை. பொலிஸின் பொறுப்பில் விட்டு விட்டார். அடங்காத் தமிழனுக்கெதிராக, பிரதமரால் எதுவும் செய்ய முடியாதிருக்கும்போது, பொலிஸ் என்னத்தைச் செய்வது? பொலிஸ் படை, ஆலய வாசலில் நின்ற சுந்தரலிங்கம் ஐயாவுக்குச் சல்யூட் அடித்துவிட்டு, சத்தியாக்கிரகிகளிடம் வந்து, "நீங்கள் கலைந்து செல்லுங்கள். விரைவில் எல்லோருக்கும் கோவிலைத் திறந்து விடுவோம்!" என்று கூறி, சற்று அதிகாரப் போக்கில் அவர்களைக் கலைத்தனர்.

அந்த வருடம் ஆலயத்தின் தேர்த் திருவிழா எவ்வித பக்தியோ, ஆடம்பரமோ எதுவுமின்றி ஆலய நிர்வாகிகளுடனும் குருக்கள்

மாருடனுமே நடந்தேறியது. ஆனால் அடுத்த வருடத் தேர்த் திருவிழாவுக்கு முன்பு ஆலயம் சகல மக்களுக்குமாகத் திறந்து விடப்பட்டது. 'பிற்போக்கு வாதி ஒருபோதும் உடனடியாகப் பணிந்து போக மாட்டான். காலப் போக்கில் பணிந்து விடுவான்' என்று மாஓ.சே.துங் சொன்னது மிகப் பொருத்தமாக நடைபெற்றது.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் பிரேரணைகள், வெளியிடப்படும் அறிக்கைகள் எவற்றுக்கும் நிதானமாகப் பதில் அளிக்காமல் அட்டகாசம் பண்ணி அடாவடித்தனம் புரிவதால், அடங்காத் தமிழன் என்ற சிறப்புப் பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது. இத்தனைக்கும் மிகச் சிறந்த கணித மேதை, பிரிட்டிஸ் மகாராணி எலிஸபெத்துக்கு கணித பாடம் கற்பித்த பேராசான்.

## 5

**வ**ட பகுதியிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு மாவிட்டபுர சந்நிதான வாசலில் அமைதியாக உட்கார்ந்து சத்தியாக்கிரகம் செய்ய, வதிரியைச் சேர்ந்த ஓர் ஆசான் பத்திரிகைகளில் ஓர் அறிக்கை வெளியிட்டார். "ஆண்டவனைக் கோயிலுக்குள்ளே சென்று தான் வணங்க வேண்டுமா? உள்ளே சென்றும் வணங்கலாம்; வெளியில் நின்றும் வணங்கலாம்; ஆசார சீலர்களாயிருப்பதே முக்கியம்!" என்று ஆத்மீக வடிவிலான, பிற்போக்கு வாதிகளுக்குப் பந்தம் பிடிக்கும் அறிக்கை.

வதிரிமக்கள் - மற்றைய பகுதிகளில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட மக்களை விடவும் சிறிதளவு வித்தியாசமானவர்கள். படித்து ஆசிரியர்களாக இருக்கும் ஐந்து பத்துப் பேரை விட மற்றையவர்களில் பெரும்பாலானோர் சிங்கள நாடுகளுக்குப் போய், அங்கு சப்பாத்துத் தொழில் செய்து வியாபாரம் செய்பவர்கள். ஊரில் வசிப்பவர்களும் அதே தொழில் செய்து பிழைப்பவர்கள். பணவசதியும் பரவாயில்லை. இதன் காரணமாகவே தாழ்த்தப்பட்ட மற்றைய சமூகத்தவர்களுடன் முரண்பாடு. முரண்பாடு மட்டுமல்ல; தாம் உயர்ந்தவர்கள் ஏற்ற நிலைப்பாடும் கூட.

வதிரியைத் தவிர்ந்த பல கிராமங்களில் பள்ளர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் சிறிய அளவில் வசிக்கிறார்கள். பல்வேறு தொழில் செய்கிறார்கள். கூலி வேலை செய்கிறார்கள். பனைச் சீவிக் கள்ளு விற்கிறார்கள். அவர்களை, வதிரிமக்கள் தங்களுடன் சேர்த்துக் கொள்ளாதது மட்டுமல்ல, அவர்களைக் குறைவாகவே மதிப்பிடுகிறார்கள்.

ஆண்டவனைக் கோயிலுக்கு உள்ளே போய்த்தான் வணங்க வேண்டுமா? எங்கும் நின்றும் வணங்கலாம் தானே! என்று திருவாய் மலர்ந்த வதிரியைச் சேர்ந்த ஆசிரியருக்கும் ரவிக்குமிடையில் நட்புறவு இருந்தது. வதிரியில் அந்நாட்களில் வே.கோவிந்தசாமி என்றொரு பகுத்தறிவுவாதி இருந்தார். ரவியும் பகுத்தறிவுவாதியாக

இருந்த காரணத்தால் அவருக்கும் இவனுக்கும் தொடர்பு ஏற்பட்டது. அதன் காரணமாக அங்கு நடைபெறும் பகுத்தறிவுக் கூட்டங்களுக்குப் போனவிடத்தில், மேலே குறிப்பிட்ட ஆசிரியருடன் ரவிக்குத் தொடர்பு ஏற்பட்டது.

இந்த ஆசிரியர் ஒரு சைவ உணவுக்காரர். வதிரியில் உள்ள அநேக குடும்பங்கள் சைவ உணவுக் குடும்பங்களே. ரவி, தனது வாசிக சாலையில் தன் வாழ்க்கையைக் கழித்ததால், இந்த ஆசிரியர் இரண்டொரு நாள் வந்து போனார். ரவியும் அவர் வீட்டுக்கு இரண்டொரு தடவை போய், ஒருநாள், அவருடைய துணைவியார் கொடுத்த உணவையும் உண்டு வந்தான். சைவ உணவுதான்.

இந்த நிலைமையில் ஒருநாள் தன்னிடம் வந்த ஆசிரியருக்கு அவன் தன் அம்மாக்காரியிடம் சொல்லி, சைவ உணவு சமைத்து உட்கொள்ளச் செய்து அனுப்பினான்.

எப்படியும் காலை பத்து மணிக்கு வந்து மாலை நாலு மணிக்குத் தான் போவார். இந்த நிலைமையில் மீண்டும் ஒருநாள் வந்தார். ரவி, "சாப்பிட வேணும்; அம்மாவிடம் சொல்லுகிறேன்!" என்று கிளம்ப, ஆசிரியர் அவனை மறித்து, "அம்மாவுக்கு வீண் சிரமம். நான் உங்களுடைய கறியுடன் சாப்பிடுகிறேன்" என்று சொன்னார். மத்தியானம் சாப்பிடும்போது மீன்கறியுடன் சாப்பிட்டார். ரசித்துச் சாப்பிட்டார். அதன்பின் அடிக்கடி சனி ஞாயிற்றுக் கிழமைகளில் அங்கு வந்து, முதலில் ஒரு போத்தல் கள்ளு வாங்குவார். ரவியுடன் உரையாடி உரையாடி அதைக் குடித்து மகிழ்வார். பின் பெரிய மீன் துண்டுகளுடன் சாப்பிடுவார்.

ரவியின் அம்மாக்காரிக்கு வேளையிலேயே கஷ்டம். கட்சி வகுப்பு நடத்தவரும் தோழர்களுக்கு பெரும்பாடு பட்டுச் சமைத்துக் கொடுப்பவள். இப்போது ஒரு வைதீகப் பெருமகனுக்கும் சாப்பாடு.

இந்த வகை உறவு ஏற்பட்ட பிற்பாடுதான், ஆலயப் பிரவேசப் போராட்டம் நடைபெற்றது. அப்போராட்ட காலத்தில் தான், அவர் "தெய்வத்தை எங்கிருந்தாலும் வணங்கலாம்" என்று அறிக்கை விட, போராட்ட வீரர்கள் அந்த அறிக்கையைக் கண்டித்து ஓர் அறிக்கை விட்டனர்.

ஆசான் அசந்து விடவில்லை. அவர் பதில் அறிக்கை விடுத்தார். அதில்-

"தும்புகள், துரும்புகள், தம்பட்டக் கம்புகள் எல்லாம் சமூக சேவை செய்ய வெளிக் கிட்டுதுகள்!" என்பதுதான் அதன் முக்கிய செய்தி. அதுவும் அஃறிணைக் குறியீட்டில்,

தும்புகள் என்பது நளவரைக் குறிக்குமாம். அதாவது பனை நாரிலே தளைநார் செய்து பனை ஏறுவதால் தும்புகள் என்றாயிற்று. துரும்புகள், தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சலவைத் தொழில் செய்யும் வண்ணாரைக் குறிக்கும். துரும்பர் என்று அவர்களைக் குறிப்பிடுவார்கள். தம்பட்டக் கம்புகள் - மேளம் அடிக்கும் தடி. இது பறையரைக் குறிக்கும்.

அவர் இப்படி அறிக்கை விடுக்க, அதேவேளை மட்டுவிலைச் சேர்ந்த பள்ள சமூகத்தைச் சேர்ந்த தோழர்கள், மாவிட்டபுரம் போராட்டத்தில் முன்னிலையில் நின்றனர். தோழர் சுப்பையா தலைமையில் ரகுநாதன், சின்னத்தம்பி மாஸ்ரர், மற்றும் பலர் இணைந்து செயற்பட்டனர். இவர்களோடிணைந்து செல்லக்கிளி என்ற பெண் போராளியும் கோயில் திறப்புப் போராட்டங்களில் ஈடுபட்டார். பன்றித் தலைச்சியைத் தொடர்ந்து மாவிட்டபுரத்தில் இவருடைய பங்களிப்பு முக்கியமாயமைந்தது. அதைத் தொடர்ந்து சமூக முன்னேற்றச் செயற்பாடுகளிலும், பெண்ணியக் கோட்பாடுகளைப் பரப்புவதிலும் அயராதுழைத்தார். சின்னத்தம்பி மாஸ்ரரைத் திருமணம் புரிந்தார். பின்னாளில், தமிழீழ மண் மீட்புப் போரில் ஈடுபட்ட பெண் போராளிகளுக்கு முன்னவராக செல்லக்கிளியின் நாமம் இடம் பெறுகின்றது.

வெகு தீவிரமாக இயங்கிக் கொண்டிருந்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் வழிநடத்தலில் வதிரி தவிர்ந்த மற்றைய இடங்களைச் சேர்ந்த பள்ளர் மட்டுமல்லாமல் சகல சமூகத்தவர்களும் ஒன்றிணைந்து தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தலைமையில் இப்போராட்டத்தை வெற்றி பெறச் செய்தனர். இச்சமயத்தில் தான், வதிரியைச் சேர்ந்த ஆசிரியப் பெருந்தகை தங்களுடைய சாதியினர் வைதீகப் பெருங்குடியினர் என்று கருத்துக் கொண்டிருந்தமைக்காக இதனை இங்கு சுட்டிக் காட்ட வேண்டி ஏற்பட்டது.

அதேவேளை நளவ சமூகத்தவர்கள் பனை ஏறி இறங்குவதால் எல்லோரும் போர்க்குணம் படைத்தவர்கள் என்று நினைப்பதும் தவறாகும். மட்டு விலைச் சேர்ந்த நளவ சமூகத்தவர்களில் சிலர் சாதியொழிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்க, ஒன்றிரண்டு குடும்பத்தவர்கள் படிப்பினில் அக்கறை செலுத்தினர். நடராசா

என்பவர், படித்துப் பட்டதாரியாகி, ஸ்ரான்லி மத்திய கல்லூரியில் படிப்பித்துக் கொண்டிருந்தார். தீ.ஒ.வெ. இயக்கம் போராட்டம் நடத்திக் கொண்டிருக்க அவர், சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் எம்.சி. சுப்பிரமணியத்துடன் இணைந்து, எம்.சி. உருவாக்கிய பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் தலைவராகப் பணியாற்றினார். நடராசாவின் தம்பி இராஜதுரையும் படித்துப் பட்டதாரியாகிப் படிப்பிக்கத் தொடங்கி, தற்போது யாழ்ப்பாணத்தின் பிரபல கல்லூரிகளில் ஒன்றான யாழ் மத்திய கல்லூரியின் அதிபராகப் பணிபுரிகின்றர். கல்லூரியை முன்னிலைக்குக் கொண்டு வந்துள்ளார்.

பூங்குன்றனார் என்ற புலவர் பெருமகன், "யாதுமூரே, யாவரும் கேளிர்" என்று திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற முதுமொழியொன்று புராண இதிகாச காலத்திலிருந்தே கூறப்பட்டு வருகின்றது.

நேற்றைய பாரதி, 'சாதிகள் இல்லையடி பாப்பா!' என்று குழந்தைப் பிள்ளைக்குச் சொல்லுவது போலக் கூறியிருக்கின்றார்.

சாதி அமைப்பு இருந்ததனால்தான் அப்போதைய சமத்துவப் புலவர்களிலிருந்து இன்றைய கவிஞர்கள் வரை இவ்வாறு கூற வேண்டி ஏற்பட்டது என்று எண்ணத் தோன்றுகின்றது.

இவைகளை ஆழ்ந்து நோக்கும் போது, தமிழர் மத்தியில் ஆதி காலத்திலிருந்தே சாதிப் பாகுபாடு நிலவி வந்திருக்கின்றது என்பதை நாம் ஊகித்துக் கொள்ள முடிகின்றது. உலகம் முழுவதும், உழைப்பினால் பணப் பெருக்கத்தினால், நாகரிகப் பாங்கினால், படிப்பறிவினால் ஏற்றத் தாழ்வுகள் இருந்து கொண்டேயுள்ளன. ஆனால் தமிழர் மத்தியில், அவர்களின் பெரும் பேறான 'இந்துத்துவ'ப் பங்களிப்பினால் இந்தச் சாதிமுறை வலுவடைந்திருக்கிறது என்றுதான் நாம் கருத வேண்டியுள்ளது.

ஆலயப் பிரவேசப் போராட்டம் நடந்த காலத்தில் 'கந்தன் கருணை' என்று ஒரு நாடகம் எழுதப்பட்டு நாடகமாக்கப்பட்டு வடபுலமெங்கும் மேடையேற்றப்பட்டது. பேராதனைப் பல்கலைக்கழகத்திலும், கொழும்பு சரஸ்வதி மண்டபத்திலும் மேடையேற்றப்பட்டது.

மாவிட்டபுரப் போராட்டத்தை அடித்தளமாகக் கொண்ட நாடகம். நாரதர், முருகனிடம் போய், அவன் கொலுவீற்றிருக்கும்

மாவிட்டபுரத்தில் பக்தர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதனால், சமாதான முறையில் அவர்கள் போராட்டம் நடத்துவதைச் சொல்ல, முருகன் ஒரு பக்தனை அழைத்து, அவனிடம் தன் கை வேலினைக் கொடுத்து, போராடித்தான் உரிமைகளைப் பெற வேண்டும் என்று ஆசீர்வதித்து மறைவதாகக் கதை.

இந்நாடகம் நூலுருப் பெற்று, கொழும்பில் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. அப்பொழுது ஓர் அன்பர்,

"முற்காலத்தில் சாதி அமைப்பு ஆனையிறவுக் கடலுக்கு அப்பால் மட்டுமே இருந்தது. காலப்போக்கில் அது, ஆனையிறவைக் கடந்து கொழும்புக்குப் பரவி - இப்போது இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்சு, கனடா என்று உலக நாடுகளெல்லாம் பரவியுள்ளது" என்று ஆதாரங்களுடன் எடுத்துரைத்தார்.

ரவியும் அக் கூட்டத்திலிருந்தான். அவன் ஆசிரியராகி கொழும்பிலுள்ள ஒரு பாடசாலையில் படிப்பித்துக் கொண்டிருந்தபோது, அங்கு யாழ்ப்பாணத்தை யண்டியுள்ள கட்டுவன் என்ற பகுதியைச் சேர்ந்த ஓர் ஆசிரியர் படிப்பித்துக் கொண்டிருந்தார். வேளாளரல்ல. முக்கியர் என்ற சமூகத்தைச் சேர்ந்தவர். வேளாளருக்கு அடிமை குடிமை வேலை செய்யும் சாதியர். பாடசாலையில், ரவி உப அதிபராக இருந்ததோடு, நிறையச் செல்வாக்குடையவராகவும் இருந்தார். இவற்றைச் சகிக்க முடியாத அந்த ஆசிரியர் ஒருநாள் எஸ்.எஸ்.ஸி. வகுப்பு மாணவரிடம்,

"ரவீந்திரன் மாஸ்ரருடைய ஆட்களை நாங்கள், வீட்டுக் கெடுப்பதில்லை. வெளியாலை வைச்சு, சிரட்டையிலை தான் தேத்தண்ணி குடுக்கிறனாங்கள்!" என்று சொல்லியிருக்கிறார்.

வதிரி மக்களல்ல, இந்த இடைச்சாதி மக்களுமல்ல, தமிழன் என்று பிறந்தவனுக்கு இந்த இந்துத்துவ - சாதிப் பாகுபாடு, அவன் எங்கு தடம் பதிக்கிறானோ அங்கெல்லாம் பரவச் செய்வான் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

## 6

**கா**லையில் எழுந்ததும் தொழிலுக்குப் புறப்படும் கணவன் கந்தப்பருக்கு, வள்ளியம்மை முதலில் தேத்தண்ணி வைத்துக் கொடுத்து விட்டு, பின் நொட்டு நொடுக்கு வேலைகளைச் செய்வாள். அதன் பிறகுதான், காலைச் சாப்பாடு தேடத் தொடங்குவாள். உலை வைத்து பிட்டு அவிக்கும் வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது, பிள்ளைகள் எழும்பித் தங்கள் காரியங்களில் ஈடுபடுவார்கள். இராசன் பிந்தி எழும்பி, கோவணக் கட்டோடு வெளிக்கிருக்கப் போவான்.

வீட்டுக்கு முன்னாலுள்ள வெறும் காணியில் அடர்த்தியில்லாமல் அங்கொன்றும் இங்கொன்றுமாக நிற்கும் ஆமணக்கம் செடிகளுக்குப் பின்னால், கோவணத்தைப் பின்பக்கமாக அவிழ்த்து விட்டு வெளிக்கிருப்பான். ஒரு அவசரமுமில்லை. அவஸ்தையுமில்லை. நன்றாக மலம் கழிந்தபின் எழுந்து முன் பக்கமாக கோவணம் தொங்கிக் கொண்டிருக்க வீட்டுக்கு வருவான். வேலியோரமாக பாவட்டைச் செடிகளுக்கருகில் இருக்கும் முட்டியை எடுத்து வந்து, தண்ணீர்க் குடத்திலிருந்து நீர் எடுத்து, கோடிப் பக்கம் போய் குண்டி கழுவுவான். அதன் பின்னர் கோவணத்தைக் கட்டிக் கொண்டு அம்மாக்காரியிடம் செல்வான். இனிமேல்தான் முகம் கழுவுவது, சாப்பாடு எல்லாம்.

இராசனுக்கு மட்டுமல்ல, அங்குள்ள ஆண் பிள்ளைச் சிறுவர்கள் அனைவருக்கும் கோவணம்தான் உடுப்பு. ஐந்து வயது முடிய பள்ளிக் கூடம் போகும் போது, அரையில் ஒரு துண்டைக் கட்டிக் கொண்டு போவார்கள். பிறகு வீட்டுக்கு வந்ததும் வேறொரு துண்டை மாற்றிக் கட்டிக் கொள்வார்கள். வராத்துப்பளைக் கிராமத்தைச் சேர்ந்த சிறுவர்களுக்கு மட்டுமல்ல, அயல் கிராமங்களைச் சேர்ந்த வேளாளர், மடப்பள்ளியர், கரையார் போன்ற சகல குடும்பங்களைச் சேர்ந்த ஆண் சிறுவர்களுக்கும் இதுதான் உடுப்பு.

பெண் குழந்தைகளும், இரண்டு வயது வரைக்கும் அம்மணக் கோலத்தில் தான் திரிவார்கள். இரண்டு வயதுக்குப் பின் பிள்ளைகளின் தாய், தந்தையர், பருத்தித் துறைச் சந்தைப் பக்கம் போய், பிடவைக் கடைகளில் துணி வாங்கி தையல்காரரிடம் கொடுத்துச் சட்டை தைத்துக் கொண்டு வந்து அப் பிள்ளைகளுக்குப் போடுவார்கள். இந்தக் காலம் மாதிரி தைத்த உடுப்புகள் இல்லை அப்போது.

ஆண் பிள்ளைகளாயிருந்தாலென்ன, பெண் பிள்ளைகளாயிருந்தாலென்ன, அரைகுறை உடுப்புடன் அல்லது வெறும் மேலுடனும் பகற் பொழுதைக் கழித்துவிட்டு, இரவில் அம்மா அல்லது அப்பாவுடன் அவர்கள் போர்த்திக் கொண்டு படுக்கும் பழஞ்சேலைக்குள் தங்களை மறைத்துக் கொண்டு உறங்கி விடுவார்கள்.

சிறுவர்களுக்குத்தான் இந்த உடுப்புப் பற்றாக்குறை என்றில்லை. இளைஞர்கள் நாலுமுழம், எட்டு முழம் என்று வேட்டி தமது தகுதிக்குத் தக்கமாதிரி உடுத்துவார்கள். சாரமும் உடுப்பார்கள். சால்வை போட மாட்டார்கள். போடக் கூடாது. சால்வை அணிவது மேல் சாதிக்காரருக்குப் பணிந்து போகாமல் விடுவது என்ற நிலைப்பாடு ஆகும். மேல் சாதிக்காரரை மட்டுமல்ல, தங்கள் வயதிற்கூடிய உறவினருக்கும் மரியாதை கொடுக்காமல் விடுவது என்ற கருத்தாகும்.

இராசன் பிறந்து வளர்வதற்கு முன் அக்கிராமங்களிலுள்ள பெண்களுக்கு குறுக்குக் கட்டுத்தான் உடை. பதினாறு முளச் சேலையை கொய்யகம் வைத்து இடையில் கட்டி விட்டு மேல்த் துண்டை மார்பகங்களை மறைத்துக் கட்டிக் கொள்ள வேண்டும். குமர்ப் பிள்ளைகளுக்கும் அதுதான் உடுப்பு. இராசன் பிறந்த காலத்தில் இந்த வகை உடுப்பு - குறுக்குக் கட்டு - அணிவதில் சிறிய அளவு மாற்றம் ஏற்படத் தொடங்கியது.

சற்று வயதானவர்கள் குறுக்குக் கட்டு கட்டிக் கொண்டிருந்தாலும் இளம் பெண்கள் தாவணி அணியத் தொடங்கி விட்டார்கள். கொய்யகம் வைத்து, இடது பக்கத் தோளுக்கு மேலாக பின் பக்கம் தொங்க விட்டு, அந்தத் தொங்கலில் ஒரு மூலைத் தலைப்பை வலதுபக்க வயிற்றோரமாக முன் எடுத்து, இடது பக்க இடையில் சொருகி விடுவார்கள். மார்பகம் நன்றாக மறைக்கப்பட்டு, சேலை, தோள் மூட்டு வரை உயர்ந்திருக்கும்.

எல்லாப் பெண்களும் இப்படித் தாவணி போடுவதில்லை. குடும்பத்தில் வசதி குறைந்தவர்கள் குறுக்குக் கட்டுத்தான். சற்று வசதி படைத்தவர்கள் தாவணி அணியத் தொடங்கி விட்டார்கள். ஆனால், அனைவரும் குளித்து முழுகும்போது குறுக்குக் கட்டுத்தான் கட்டுவார்கள்.

காலஞ் செல்லச் செல்ல ரவிக்கை அணியும் பழக்கம் ஏற்படத் தொடங்கியது. வீட்டில் குறுக்குக் கட்டு, அல்லது மாறாடி என்று அழைக்கப்பட்ட தாவணி அணிந்து கொண்டிருப்பவர்களும் ஏதாவது கோயில் குளம் அல்லது கலியாண வீடு, செத்த வீடு, வேறேதாவது கொண்டாட்டங்களுக்குப் போகும்போது ரவிக்கை அணிந்து போகத் தொடங்கி விட்டார்கள். இராசனின் அம்மா மாறாடியுடன்தான் எங்கும் போவாள். ரவிக்கை அணியவில்லை.

வயது போன கிழவிகள் சேலையுடுத்தி மார்பை மறைக்க ஒரு சிறு அளவிலான துணியைக் கோணமாக்கி அதன் மூலையில் ஒரு சதம் அல்லது இரண்டு சதத்தை வைத்து முடிந்து, வலது புறத் தோளுக்கப்பால் போட்டுத் தொங்க விடுவார்கள். முந்தானை முடிச்சு என்பது அதற்குரிய பெயராகும். இராசனுடைய அம்மாவின் தாய்க் கிழவி குஞ்சுப்பிள்ளை முந்தானை முடிச்சுத்தான் போட்டுக் கொள்வாள்.

வராத்துப்பளையில் உடுப்புக்கள் அணியும் வகையில் முன்னணியில் இருந்தவர்கள் பசுபதியின் குடும்பத்தினர் ஆவர். பசுபதியின் தந்தை கந்தையர் நயினா தீவில் கள்ளுக்கடை நடத்திக் கொண்டிருந்தது இதற்கு ஒரு காரணம். இத்தொழிலினால் அவர்களிடம் பணப்புழக்கம் அதிகமாயிருந்தது. இதனால் அவர்கள் நாகரிகமான முறையில் உடுப்புக்களை அணிந்தார்கள். பண வருவாய் ஒரு பக்கமிருந்தாலும், மற்றொரு பின்னணியும் அவர்களுக்கிருந்தது. கந்தையரின் தம்பியார் சின்னப்பு என்பவர் யாழ்ப்பாணம் ஆரிய குளத்தடியில் - பலாலிறோட்டில் வசித்துக் கொண்டிருந்தார். கந்தையாவோ அவருடைய மூத்த மகனான இராசையாவோ, நயினா தீவுக்குப் போகும்போதும், வீட்டுக்கு வரும்போதும் சின்னப்பர் வீட்டில் தங்கித்தான் தமது பயணத்தை மேற்கொள்ள வேண்டும். பட்டினத்து வீடு, அதனால் அங்குள்ளவர்களோ அயலவர்களோ நாகரீகமான உடைகளை அணிவார்கள். அந்தப் பாங்கு கந்தையா வீட்டிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

பசுபதியின் அம்மா அன்னம் வீட்டிலிருக்கும் வேளையில் தாவணி அணிந்தாலும், பக்கத்திலுள்ள கைக்குளச் சந்தைக்குப் போனாலென்ன, வேறெங்காவது போவதாயிருந்தாலென்ன, ரவிக்கை அணிந்து தாவணி உடுத்தித்தான் செல்வாள். இராசையா சேட் அணிந்து தான் நயினா தீவுக்குப் பிரயாணம் செய்வார். வராத்துப் பளையில் முதன் முதல் ரவிக்கை போட்டுத் தாவணி உடுத்தியது அன்னம்தான். சேலை எந்த நிறமாயிருந்தாலும், ரவிக்கை வெள்ளை நிறம்தான். முதன் முதல் சேட் அணிந்ததும் இராசையாவும், சித்தப்பா சின்னப்பு வீட்டிலிருந்து படித்துக் கொண்டிருந்த பசுபதியும்தான். சேட்டும் வெள்ளை நிறம்தான்.

இவற்றைத் தொடர்ந்து தான் வராத்துப்பளையிலுள்ள இளம் பெண்கள் ரவிக்கை அணிந்து தாவணி உடுக்கத் தொடங்கினார்கள். வாலிபர்களும் சேட் போடத் தொடங்கினார்கள். இராசனும் தும்பளையில் எஸ்.எஸ்.ஸி- சித்தி யெய்தும் வரை வேட்டியை மட்டும் கட்டிக் கொண்டு வெறும் மேலுடன் போய் வந்தான். பிறகு நெல்லியடியில் படிக்கப் போகும் போது சேட் அணிய வேண்டிய கட்டாயம் வந்துவிட்டது.

பசுபதியின் பேரனாரான சின்னப் பொடியர், சிறிய அளவில் கள் இறக்கினாலும், பரியாரி வேலையும் பார்த்தார். ஊரில் வசிப்பவர்களுக்கும், அயலவர்களுக்கும், தலையிடி, காய்ச்சல், தடிமன் என்று சின்னச் சின்ன வருத்தங்கள் வந்தால், கைபிடித்துப் பார்த்து மருந்துகள் கொடுப்பார். அதனால் அவர் பரியாரி சின்னப்பொடி என்று அழைக்கப்பட்டார். அவர் சுத்தமான நாலு முழத் துண்டொன்றைக் கட்டிக் கொள்வார். எங்காவது வெளியில் போகும்போது சிறு துண்டொன்றைத் தோளில் போட்டுக் கொண்டு போவார்.

## 7

படிப்பிலும் முன்னேறி நடையுடை பாவனைகளிலும் ஏற்றம் கண்ட அக்குடும்பத்தின் தலைவி அன்னம் சமையற்கலையிலும் வல்லவளாக இருந்தாள். மதிய உணவுக்குச் சுவையான கறிகள் சமைப்பாள். காலை உணவுக்கு பிட்டு, இடியப்பம், தோசை, பாலப்பம் என்று வகை வகையான உணவுகள். சில காலம், இடியப்பம், தோசை அல்லது பாலப்பம் என்று மேலதிகமாகச் செய்து ஊரவர்களுக்கு வியாபாரம் செய்தாள். பின் நாட்களில் பிள்ளைகள் இதனைத் தடுத்து நிறுத்தினாலும், அதன் அடிப்படை உண்மை என்னவென்றால், இவற்றைத் தயாரித்து விற்பதற்கு முதலில் வளமான குசினி வேண்டும். அடுத்து அப்பண்டங்கள் தயாரிப்பதற்கு வேண்டிய உபகரணங்கள் வேண்டும். எல்லாமே நிறைவாக இருந்தன. அன்னமும் ஒரு சிரமுமில்லாமல் பலகாரங்கள் செய்து விற்றாள்.

பசுபதி ஆசிரிய கலாசாலையில் படித்துக் கொண்டிருந்தபோதும், பின் இரத்மலானையில் படிப்பித்துக் கொண்டிருந்தபோதும், விடுமுறைக் காலங்களில் வீட்டுக்கு வருவார். அப்போது வேலை வெட்டி எதுவுமில்லாமல் சும்மா இருந்த ரவீந்திரன், அடிக்கடி பசுபதி வீட்டுக்கு வந்து, அவருடன், அவர் வீட்டுக் கேற்றடியில் உட்கார்ந்து பலதும் பத்தும் உரையாடி நேரத்தைப் போக்குவார்கள். இருவருக்கும், வாசிப்புப் பழக்கம் நிறைய ஏற்பட்டிருந்ததனால் இலக்கியத்தைப் பற்றியே அதிகம் உரையாடல் இடம்பெறும். அப்போது, பசுபதி கவிதைகள் எழுதிப்பிரசுரம் செய்து கொண்டிருந்தார். ரவியும், எழுத ஆரம்பித்திருந்தான். அரசியல் விழிப்புணர்வு, ஒடுக்கு முறைகளுக்கெதிரான விடுதலைப் போராட்ட உணர்வுகள் இவை பற்றியும், கவிதைகள் பற்றியும் விமர்சனம் நடைபெறும். அநேகமாக மதிய வேளையில் இச்சந்திப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, மதியச் சாப்பாடு சமைப்பதற்காக பசுபதியின் அம்மா அன்னம், கைக்குளச்

சந்தைக்குப் போய் மீனும் மரக்கறியும் மற்றும் மளிகைப் பொருட்களும் வாங்கி வருவாள்.

அத்துடன் வடை, முறுக்கு, பனங்காய்ப் பணியாரம் போன்ற நறுக்கு நொறுக்குப் பண்டங்களும் மறக்காமல் வாங்கி வருவாள். கேற் வாசலில் இருக்கும் மகனிடம் இருவருக்கும் சேர்த்துக் கொடுத்து விட்டுத்தான் உள்ளே போய் சமையல் தொடங்குவாள். பசுபதியும் ரவியும் மிகுந்த ஆவலோடு அந்தப் பண்டங்களைச் சுவைத்து, தமது உரையாடலுக்கு மேலும் ரசனை ஊட்டுவார்கள்.

வராத்துப் பளையில் முதலாவதாகப் படித்து உத்தியோகம் பார்த்தது பசுபதி என்று அறிந்தோம். மற்றைய சகோதரர்களும் படித்தார்கள். தனியார் நிறுவனத்திலும் ஒருவர் பணியாற்றினார். பசுபதியின் இளைய சகோதரன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்று இலங்கை மத்திய வங்கியில் பணியாற்றி சில வருடங்களின் பின்னர் வங்கி ஆளுனரின் செயலாளராகப் பதவியுயர்வு பெற்று மத்திய வங்கிக்குப் பெரும் பங்களிப்புச் செய்து வருகின்றார்.

பசுபதி, நல்லூர் ஆசிரியர் கலாசாலையில் படித்துக் கொண்டிருந்த போது, ரவியின் தங்கை பாக்கியத்துடன் உறவு ஏற்பட்டுவிட்டது. இந்த உறவை அறிந்த பசுபதியின் பெற்றோர் பெரும் எதிர்ப்புக் காட்டினார்கள். அதற்கு முக்கிய காரணம் பாக்கியத்தின் தாய் மாமனாரான மாணிக்கத்தோடு அவர்களுக்கிருந்த பகைமையுணர்ச்சியாகும். பசுபதியின் பெற்றோருக்குச் சொந்தமான பெருங் காணியின் ஒரு பக்கத்தில் மாணிக்கத்துக்கும் சிறு துண்டு பங்கிருந்தது. வேளையில் வேலியடைத்துப் பிரிக்கப்பட்டிருந்தது என்றாலும் மாணிக்கம் தன் எல்லை குறைக்கப்பட்டுள்ளதாகக் கோட்டில் வழக்காடிக் கொண்டிருந்தார். நாகரிக வளர்ச்சியில் தங்கள் குடும்பம் முன்னேறிக் கொண்டிருப்பது ஓர் அடிப்படைக் காரணமாயிருக்க, இந்தக் காணி எல்லைத் தகராறையும் முன் வைத்து பெரும் எதிர்ப்புக் காட்டிக் கொண்டிருந்தார்கள்.

பசுபதி கவிஞர். ரசனை உணர்வுகள் நிரம்பப் பெற்றவர். முற்போக்குச் சிந்தனையாளர். ஆசிரியராகப் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தவர். அதனால் அழகும் நிதானப் போக்கும் கொண்ட - அதே வேளை படித்துக் கொண்டிருந்த பாக்கியத்தை விரும்பி, அவளைத் திருமணம் செய்வதென முடிவு செய்து கொண்டார். படிக்கும் காலத்தில் பாக்கியம் மிகவும் சிவந்த மேனியுடன்

இருந்தார். அதன் காரணமாக எல்லோரும் அவளை வெள்ளைத் தங்கச்சி என்றே அழைத்தனர். பசுபதி ஆசிரியப் பயிற்சி முடித்து இரத்மலானையில் படிப்பித்துக் கொண்டிருக்கும் போது அவர்களது திருமணம் நடைபெற்றது. விரைவில் கைதடியில் தொடங்கப்பெற்ற குருடர் செவிடர் பாடசாலைக் கிளையில் படிப்பிக்க ஆரம்பித்ததும் இருவரும் இணைந்து வாழச் சந்தர்ப்பம் கிடைத்தது.

இத்தம்பதியினருக்கு ஆறு பிள்ளைகள் பிறந்தனர். கிராமத்தில் முதலாவதாகப் படித்து ஆசிரியப் பதவி வகித்தவர் பசுபதி. இச்சமூகத்தில் முதலாவதாக உயர்தரப் பாடசாலையில் படித்தவள் பாக்கியம். என்றாலும் அவள் படிக்கும் காலத்திலேயே பசுபதி அவளுடன் காதல் உறவு கொண்டு, அவளை விரைவில் கலியாணம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளானதால் பாக்கியம் தன் படிப்பை ஒன்பதாம் வகுப்புடன் நிறுத்த வேண்டிய அவல நிலை ஏற்பட்டது. இம்மனத்தாக்கம் தனது பிள்ளைகளைப் படிப்பிக்க வேண்டுமென்ற உந்து சக்தியாய் அமைந்தது. பசுபதியின் குடும்பத்தவர்களுக்கும் ஈடுகொடுக்க வேண்டுமல்லவா?

இந்த நிலைமையில் கவிஞர் பசுபதி தனது 41ஆம் வயதில் கொடிய புற்று நோய்க்காளாகி இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். பசுபதியின் கவிதைகள், மகாகவி பாரதியின் கவிதைகளோடு ஒப்பு நோக்குகையில் மிகச் சிறிய அளவான பங்களிப்புத்தான். அதேவேளை பாரதியைப் போல பசுபதியும் புரட்சிக் கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டிருந்தார் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

'புதியதோருலகம் செய்வோம் - கெட்ட

போரிடுமுலகத்தை வேரோடு சாய்ப்போம்!'

என்று மகாகவி பாரதிதாசன் பாடியிருக்கின்றான். பல தசாப்தங்களுக்குப் பின் வந்த பசுபதி -

'புது உலகம் காண்பதற்குப் புரட்சி வேண்டும்' என்று பாடியிருக்கிறார். இந்த ஒப்பீடுகளைத் தவிர்த்து, பாரதிக் கவிஞன் தனது 39வது வயதில் யானையால் தூக்கியெறியப்பட்டு, அதனடிப்படையில் இயற்கையெய்த, பசுபதிக் கவிஞனும் இளம் வயதில் புற்று நோய்ப் புயலினால் வேட்டையாடப்பட்டிருக்கிறான்.

பசுபதி சாகும்போது ஐந்து பிள்ளைகள், ஆறாவது பிள்ளை யொன்றுக்கும் அடிகோலிவிட்டுத்தான் அவர் இவ்வுலகை விட்டு நீத்தார். பாக்கியம் இளமங்கை. பொருளாதார வசதி எதுவுமில்லை. பசுபதியின் பெயரால் கிடைத்த சொற்ப பென்ஷன் தொகையுடன், மூடல் பெட்டி இழைத்து மிகவும் கஷ்டப்பட்டு ஆறு பிள்ளைகளையும் படிக்க வைத்தாள். தன் கணவனுக்குச் செய்ய வேண்டிய கடப்பாடு, பிள்ளைகளைப் படிக்க வைப்பதே என்று கண்டிப்பாக இருந்தாள். ஆனால் கொடுமை... ஏ.எல். படிக்கும் போது மூத்த பெண் பிள்ளை பாம்பு கடித்து மரணமானாள். ஏ.எல். படித்துவிட்ட மூத்த மகன், குடும்பக் கஷ்டங்களுக்கு நிவாரணம் தேட வேண்டுமென வெளிநாடு சென்று, அங்கு பணியாற்றிக் கொண்டிருந்த வேளை, அவனும் விபத்துக்குள்ளாகி மரணமானான்.

பசுபதி இயற்கையெய்தியதும், பசுபதியின் குடும்பத்தினரும், பாக்கியத்தின் குடும்பத்தினரும் இயன்றளவு உதவி செய்தனர். பாக்கியத்தின் அம்மா வள்ளியம்மை மகளுடனே வாழ்ந்து வந்தாள். பிள்ளைகளுக்கு உதவியாயிருக்க வேண்டுமல்லவா?

மிகவும் பண நெருக்கடிக்குள்ளான நிலைமையில் நான்கு பிள்ளைகளையும் படிக்க வைத்து, ஒரு பெண் பிள்ளை பட்டதாரி ஆசிரியை. ஒரு மகன், சார்ட்டட் அக்கவுண்டன்ட். மற்றொருவன் ஏ.எல். என்று படித்துவிட்டுப் பணி செய்கின்றார்கள். மிக வியப்புக்குரிய செய்தி ஒன்றும் இருக்கிறது. தந்தையின் முகத்தையே அறியாது, அவர் இறந்து 19 நாட்களின் பின்னர் பிறந்த பையன் ஆர்வத்துடன் படித்து டொக்டராகி, நரம்பியல் துறையில் பணிபுரிகிறான். அம்மா பாக்கியமும் மன நிறைவுடன் இருக்கிறாள்.

ரவியின் அம்மாக்காரி வள்ளியம்மையை ஊரிலுள்ளவர்கள் அற்றோணி வேலன்ர மகள் என்று குறிப்பிடுவார்கள். நீதியும் நேர்மையும் அவளுடைய பெருங்குணங்களாக இருப்பதே அதற்குக் காரணமாகும். உறவினர்களிடையே அன்றி ஊரவர்களிடையே ஏதாவது தகராறுகள் ஏற்பட்டு, சண்டை சச்சரவுகள் நடைபெற்றால், வள்ளியம்மை அதிலுள்ள நியாய அந்நியாயங்களை எடுத்துச் சொல்லித் தீர்த்து வைப்பாள். அவளுடைய தந்தை வேலன் ஊரிலுள்ளவர்களுக்குக் கோடு கச்சேரிகளில் ஏதாவது வழக்குக் கணக்கென்றால் அவற்றுக்கு வழி சொல்லிக் கொடுப்பார். தனக்குப் பழக்கமான ஒரு புறக்கராசியை அல்லது அப்புக்காத்துவை ஏற்பாடு செய்து தானும் கோட்டுக்குப் போய் உதவி செய்வார். இதனால் அவருக்கு அற்றோணி வேலன் என்ற பெயர் ஏற்பட்டது. அவருக்குப்

பிறந்த மகன் மாணிக்கத்துக்கும் இந்தப் பெயர் வழங்குவதாயிற்று. அற்றோணி வேலன்ர மகன் என்றே பலரும் குறிப்பிடுவார்கள். அவர் ஊர்ப்பிரச்சினைகளுக்கு நடுநிலை வகித்துத் தீர்த்து வைக்க மாட்டார். தன் சொந்தப் பிரச்சினைகளாயிருந்தால் வழக்குரைத்து வாதாடுவார். மற்றவர்கள் தன்னை நாடி வந்தால் புறக்கிராசி, அப்புக்காத்து மாரிடம் கூட்டிச் சென்று வாதாட வைப்பார்.

வேலனுக்குப் பிள்ளைகளாகப் பிறந்த வள்ளியம்மையின் பிள்ளைகளோ, அன்றி மாணிக்கத்தின் பிள்ளைகளோ, ஆண்களாயிருந்தாலென்ன, பெண்களாயிருந்தாலென்ன இந்தச் சுபாவத்தைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் வள்ளியின் மூத்த மகனான தம்பிப் பிள்ளை, மாணிக்கத்தின் மகளான இலட்சுமிப் பிள்ளையைக் கலியாணம் செய்து பிறந்த பிள்ளைகளுள் மூத்த மகன், கொழும்பிலுள்ள தனியார் வங்கியொன்றில் பணியாற்றிக் கொண்டிருந்து, சட்டக் கல்லூரியில் படித்துச் சட்டத்தரணியானான். வங்கி முகாமையாளரோடு பேசி, காலையில் சட்டக் கல்லூரியில் படிப்பும், மாலையில் வங்கி வேலையுமாக ஏற்பாடு செய்து கொண்டான். புறொக்ரர் ஆனதும் வங்கி வேலையை விட்டுவிட்டு, இலங்கையின் சில இடங்களில் வழக்காடி விட்டு, பின், லண்டன் சென்று அங்கு இடம் பெயர்ந்து வதிவிடவுரிமை கோருவோருக்குச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் நிறுவனமொன்றை நடத்தி வருகின்றான்.

# 8

ரவீந்திரன் பரமேஸ்வராக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில், யாழ்ப்பாணத்திலுள்ள அவனது சமூகத்தவர்களுடன் சிறிதளவு பழகக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருந்தன. என்றாலும் பள்ளிக்கூடம், டேவிற்றோட்டிலிருந்த வசிப்பிடத்துக்கு வந்ததும் படிப்பு, கடற்கரையோரமாக இருந்த அண்ணன்மாரின் கள்ளுக் கொட்டிலில் கள் விற்பனை போன்ற காரியங்களால் பலாலிறோட்டிலுள்ளவர்களோடு நெருங்கிப் பழக வாய்ப்புக் கிடைக்கவில்லை. பரமேஸ்வராக் கல்லூரிப் படிப்புக்கு மிகக் குறுகிய காலத்தில் முற்றுப்புள்ளி வைத்துவிட்டு ஊர் திரும்பியதும் பொழுது வெறுமனே கழிந்தது.

இந்தக் காலத்தில், யாழ். பலாலிறோட்டில் இயங்கிக் கொண்டிருந்த சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்க வருடாந்த மகாநாடு ஒன்றில் பங்கு பற்றும்படி ரவிக்கு அழைப்பு வந்திருந்தது. ரவி ஆர்வத்துடன் போனான். சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கத்துக்குப் பக்கத்தில் உள்ள வீடுதான், பசுபதியின் சித்தப்பா சின்னப்பரின் வீடு. பசுபதி அங்கு தங்கித்தான் தனது மேற்படிப்பைப் படித்தவர். அதன் காரணமாக, பசுபதி இந்த சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கத்துக்கும் சில காலம் செயலாளராகப் பணியாற்றினார். இந்தத் தொடர்பின் காரணமாகத்தான் சங்கத்தின் வருடாந்த மாநாட்டிற்கு ரவிக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது.

ரவி மகாநாட்டுக்குப் போய் மகிழ்ச்சியுடன் பங்கு பற்றினான். மகாநாட்டின் பின், பசுபதி, ரவியைத் தன் சித்தப்பா வீட்டுக்கு அழைத்துச் சென்று, சாப்பிட வைத்து படுத்துறங்கவும் வைத்தார். சித்தப்பாவின் மகன் சிவ சுப்பிரமணியத்துடன் உறவு ஏற்படத் தொடங்கியது. பசுபதி, ஆசிரியப் பயிற்சி பெற்று, இரத்மலானையிலுள்ள செவிடர் குருடர் பாடசாலையில் படிப்பிக்கப் போன பின் ரவி, யாழ் நகர் வரும் போதெல்லாம், மணியம் வீட்டிலேயே தங்கி ஊர் திரும்புவான்.

மணியத்தின் தொடர்பு ஏற்படுவதற்கு முன், ஏதாவது தேவைகளின் நிமித்தம், யாழ்ப்பாணம் வந்தால் எப்படியும் கடைசி பஸ்ஸைப் பிடித்து அவன் ஊர் திரும்பி விடுவான். ஒருநாள் பஸ் கிடைக்கவில்லை. அதனால் ஸ்ரான்லி வீதியிலுள்ள ஒரு கடைவாசலில் படுத்துறங்கி விடிந்ததும் ஊர் திரும்பினான்.

வேறோர் நாளும் பஸ்ஸைத் தவற விட்டுவிட்டு, பலாலிறோட் ஒழுங்கையில் வசிக்கும் தனது நெருங்கிய உறவினர் - தந்தை வழிச் சொந்தம் - வீட்டுக்குப் போய் கதவைத் தட்டி உள்ளே போய் அங்கு படுத்துறங்கி வீட்டுக்குத் திரும்பினான். அவர்கள் அவனை அனுசரித்த முறை மனதில் அதிருப்தியை உண்டக்கியதனால், பிறகு அவன் அங்கு போக விரும்பவில்லை. இந்த நிலைமையில்தான் மணியத்தின் அரவணைப்பு அவன் மனதில் இனிமையைப் பாய்ச்சியது.

யாழில் நடைபெறும் வாலிபர் சங்கக் கூட்டங்கள், பொதுநல அமைப்புக்களின் மகாநாடுகள் மற்றும் தனது சொந்த அலுவல்களுக்கெல்லாம் யாழ் வரும் போது மணியம் வீட்டில் தங்கித்தான் ஊர் திரும்புவான். மணியத்தினுடைய அம்மா இராசம்மா ஒரு தெய்வப் பிறவி. அன்பு நிறைந்த ஒரு தேவதை. ரவியை அன்பாக அழைத்துக் குசினிக்குள் அழைத்துச் சென்று உணவு பரிமாறுவாள். காலையென்றால் பிட்டு அல்லது இடியப்பம், மத்தியானத்தில் சுவையான கறி வகைகளுடன் சோறு, இரவில், ரவிக்கு மணியம் படுக்கை ஒழுங்கு பண்ணிக் கொடுப்பான். உடுப்பதற்கு சாரம் கொடுப்பான். இத்தனைக்கும் மணியம் இலக்கிய உணர்வோ, அரசியல் உணர்வோ அணுவளவும் இல்லாதவன்.

மணியத்தின் அம்மாக்காரி, ரவியை அன்போடு உபசரிப்பதற்குக் கொஞ்சமும் குறையாமல் இருந்ததுபோல், அவன் தந்தையார் சின்னப்பரும் மிகவும் ஆதரவாக நடந்து கொள்வார். இவ்வளவுக்குமிடையில் பெரிய புதினம் என்னவென்றால், சின்னப்பர், ரவியின் தந்தைக்குரித்தான - அவரது வீட்டுக்கு முன்னாலுள்ள காணியொன்று தனக்குரியதெனக் கோட்டில் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது.

ரவி, அண்ணன்மாரிடமிருந்து விடைபெற்று, ஊருக்கு வந்து வெறுமனே பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தாலும், அடிக்கடி யாழ்ப்பாணம் வந்து போக வேண்டிய சந்தர்ப்பங்கள் தொடர்ந்து

கொண்டேயிருந்தன. இச் சந்தர்ப்பங்களில் எழுத்தாளர்களின் சந்திப்புகள் முக்கியமாக இடம் பெற்றன.

யாழ், மாக்கெற்றுக்கு நடுப்பகுதியில் அமைந்துள்ள பஸ் நிலையத்தையொட்டி கஸ்தூரியார் வீதியில் யோசப் சலூன் என்ற பெயரில் ஒரு முடிவெட்டும் நிலையம் அமைந்திருந்தது. அதன் உரிமையாளர் யோசப் என்பவர் காலமானதையடுத்து அவரின் மகன் டொமினிக் ஜீவா, அத்தொழில் நிறுவனத்தை நடத்திக் கொண்டிருந்தார். இடதுசாரி மனப்பான்மை கொண்டவர். அதனால் அவர் இளம் வயதிலிருந்தே கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளில் சிறுகதைகள் எழுதிக் கொண்டிருந்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து 'மறுமலர்ச்சி' என்ற மாத சஞ்சிகையொன்று வெளிவந்த காலம் அது. சமுதாயத்தில் மறுமலர்ச்சி ஏற்படவேண்டுமென்று அக்குழுவினர் இலக்கியம் படைத்தாலும், சமுதாய மாற்றம் ஏற்பட வேண்டும் என்று புரட்சிகரமாகச் சிந்திப்பவர்களின் கருத்துக்களை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இதன் காரணமாகப் பல இளைஞர்கள் அக்காலத்தில் தங்கள் பேனாக்களை முற்போக்குப் பாதையில் ஓட்டினார்கள். இவர்களில் முக்கியமானவர், பிற்காலத்தில் எஸ்.பொ. என்ற பெயரில் பிரபலமடைந்தவரான எஸ்.பொன்னுத்துரை ஆவார். இந்தப் பொன்னுத்துரையை இலக்கியப் பாதையில் வழிநடத்தியவர் த.இராஜகோபாலன் என்னும் எழுத்தாளர். அவர் அதிகம் எழுதவில்லை. அதனால் பிரபலமும் பெறவில்லை. எஸ்.பொன்னுத்துரை, இராஜகோபாலன் போன்றோர் யாழ். பட்டினத்திலேயே வசித்து வந்தவர்கள். அதனால், தமது இலக்கிய வேகம் தாக்கம் பெற அடிக்கடி டொமினிக் ஜீவாவிடம் வந்து உரையாடிப் போவார்கள்.

யாழ். பட்டணத்துக்கு வெளியே வசிக்கும் இளம் எழுத்தாளர்களும், கவிஞர்களும், பட்டினம் வந்தால் தவறாமல் யோசப் சலூனுக்கு வந்து போவார்கள். சில்லாலையிலிருந்து ஓர் இளங்கவிஞர் அடிக்கடி வந்து போவார். அவர், அந்நாட்களிலேயே, தன் பெயருக்கு முன்னால் தான் பிறந்து வளர்ந்த ஊரின் பெயரை இணைத்து சில்லையூர் செல்வராசன் என்று பெயர் சூட்டிக் கொண்டார். உரும்பிராயிலிருந்து செ.கணேசலிங்கன், அவரது மைத்துனர் தம்பிராசா, பருத்தித் துறையிலிருந்து எழிலன் என்ற பெயரில் எழுதிக் கொண்டிருந்த இளம் எழுத்தாளர் என்.கே.ரகுநாதன், சுன்னாகத்திலிருந்து பிரபல விமர்சகர் கனக.செந்திநாதன் முதலியோரும் அங்கு வந்து

போவார்கள். கனக.செந்திநாதன் விமர்சனப் பாங்கில் உரையாடிச் செல்வார். டானியலும் அந்நாட்களில் எழுதத் தொடங்கி விட்டார். ஆனாலும் ஏனோ தெரியாது அவர் ஜீவாவிடம் வருவதில்லை.

அங்கு தினந்தோறும் வந்து செல்லும் முக்கியமான நபர், நா.செல்லத்துரை எனப்படும் செய்தி சேகரிப்பாளர். வீரகேசரி நிருபர். அச்சு வேலியிலுள்ள நாவற்காடு என்பது அவரது சொந்த ஊர். தினமும் பகல் இரண்டு மூன்று மணியளவில் பஸ்ஸிலிருந்து இறங்கி ஜீவாவின் கடைக்கு வந்து, தான் வேளையிலேயே சேகரித்து வைத்துள்ள செய்திகளுடன், மேலே குறிப்பிடப்பட்ட இலக்கிய நண்பர்கள் மூலம் கிடைத்த செய்திகளையும், ஜீவாவின் கடையில் பின்பக்கமுள்ள மேசையிலிருந்து எழுதி, மெயில் வண்டி யாழ். ஸ்ரேஷனை வந்தடையும் நேரத்துக்குத் தவறாமல் சென்று அவற்றை அவ்வண்டியில் அனுப்பி விடுவார்.

அவர் நிருபராயிருந்த வீரகேசரிப் பத்திரிகைக்கு அந்நாட்களில் யாழ். நகரில் கிளைக் காரியாலயம் ஒன்று நிறுவப்படவில்லை. அதனால் ஜீவாவின் கடையிலிருந்தே செய்திகளை எழுதி அனுப்புவார். ஆனாலும், செல்லத்துரைக்கும், வீரகேசரிக்குமிடையிலிருந்த தொடர்புகள், பெரிய கடைச் சந்தையிலிருந்த தம்பித்துரை புத்தகசாலை யூடாகவே நடைபெற்று வந்தன. தம்பித்துரைதான் யாழ்ப்பாணத்துக்கு வீரகேசரி ஏஜெண்டாக இருந்தார்.

பின்னாளில் வீரகேசரி கிளைக் காரியாலயம், யாழ். ரயில் நிலையத்துக் கண்மையில் ஒழுங்குபடுத்தப்பட்டபின், செல்லத்துரை தவறாமல் ஜீவா கடைக்கு வந்து புதினங்கள் விசாரித்து அதன் பின்னரே காரியாலயத்துக்குச் சென்று செய்திகள் எழுதி அனுப்பிக் கொண்டிருந்தார்.

## 9

நிருபர் செல்லத்துரை அச்சுவேலியிலிருந்து யாழ் நகர் வந்து, கோடு, கச்சேரி, ஆஸ்பத்திரி, பொலிஸ் நிலையம், மற்றும் சமூக சேவை நிறுவனங்கள் என்று பல இடங்களுக்கும் திரிவார். மாலை வேளைகளில் முற்ற வெளியில் நடைபெறும் அரசியல் கூட்டங்களுக்கும் மற்றும் பொது இடங்களில் நடைபெறும் விசேட கூட்டங்கள் மாநாடுகளுக்கும் தலைகாட்டுவார். கூட்டங்கள், மாநாடுகள் நடைபெறும் இடங்களில் அதிக நேரம் செலவிடுவதில்லை. ஒரு சுற்றுச் சுற்றி வந்து முக்கியமானவர்கள் பேசுவதைக் காதில் போட்டுக் கொண்டு திரும்பி விடுவார்.

யோசப் சலூனிலிருந்து செய்திகள் எழுதும் போது ரவி அந்தப் பக்கம் வந்தால், உடனே அவனிடம் சில செய்திக் குறிப்புகளைக் கொடுத்து செய்தி எழுதும்படி சொல்லுவார். அவனும் தனக்கு இயன்றவரை எழுதிக் கொடுப்பான். ரவியின் இப்பணி, பின்னர் வீரகேசரி கிளைக் காரியாலயத்திலும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ரவி, வேலை எதுவுமின்றிச் சும்மா இருந்த காலமாகையால், யாழ்ப்பாணம் வரும் சமயங்களில் இப்பணி தொடர்ந்து கொண்டிருந்தது.

ரவி, எஸ்.எஸ்.ஸி. பாஸ் பண்ணி விட்டு வேலை எதுவுமில்லாமல் ஊர் சுற்றிக் கொண்டிருந்த காலம். அதனால், செல்லத்துரைக்கு செய்திகள் எழுதிக் கொண்டிருக்கும் போது, ஒருநாள், தன்னைப் பருத்தித் துறை நிருபராகச் சேர்த்து விடும்படி கேட்டிருந்தான். செல்லத்துரை, அவனுடைய கஷ்ட நிலையினை உணர்ந்தவராதலால், "நீ ஒரு விண்ணப்பம் எழுதி, வீரகேசரிக்கு அனுப்பு. நானும் ஆசிரியருக்கு எழுதிப் பார்க்கிறேன்!" என்று அவனை உற்சாகப்படுத்தினார். ரவி, இரண்டொரு நாட்களில், வீரகேசரிக்கு விண்ணப்பம் அனுப்பி வைத்தான்.

பருத்தித் துறையில், சந்தா தோட்டத்தில் அமைந்திருந்த நல்வழி ஐக்கிய சேவா சங்கத்தின் சார்பில் ஒரு விசேட கூட்டம் நடைபெற

ஏற்பாடாகி இருந்தது. இலங்கையின் முதலாவது பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்று, பாராளுமன்றம் தொடங்கப்பட்ட கையோடு, செனட் சபையும் இயங்க வேண்டியதாக அரசியல் அமைப்பு அமைந்திருந்தது. அதன் காரணமாக செனட் சபைக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தாழ்த்தப்பட்ட சமூகத்தில் நளவர் சமூகத்தைச் சேர்ந்த ஏ.பி.இராசேந்திரா என்பவர், அப்போது கொழும்பிலுள்ள அரசு நிறுவனமொன்றில், தொலுக்கு முதலியாராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். சிறுபான்மைத் தமிழர்கள் சார்பில் ஒரு செனட்டர் நியமிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை எழுந்ததன் காரணமாக முதலாவது யூ.என்.பி. அரசாங்கத்தில் முதலியார் ஏ.பி.இராசேந்திரா செனட்டராக நியமிக்கப்பட்டார்.

அவர் செனட்டரானதும் யாழ்ப்பாணத்திலுள்ள சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கம் அவருக்கு ஒரு பாராட்டு விழா நடத்தியது. பசுபதியும் அவ்விழாவிற்குப் பங்களிப்புச் செய்தார். அதைத் தொடர்ந்து முதலியாரை, நல்வழி ஐக்கிய சேவா சங்கம் தனது விசேட மாநாட்டுக்கு அழைத்து பாராட்ட ஏற்பாடு செய்தது. அப்போது, பசுபதி அச்சங்கத்தின் செயலாளராக இருந்தார்.

முதலி கோயிலுக்குப் பக்கத்தில் பெரிய கிடுகுக் கொட்டகையொன்று அமைக்கப் பற்று அங்கு மாநாடு நடைபெற்றது. வேளையில் தமது மக்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டு, முதலியார் இராசேந்திரா செனட்டரானதும் யாழ். சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கத்தில் அவருக்குப் பாராட்டு விழா நடத்தியவர்களுமான எம்.சி. சுப்பிரமணியம், ஜி.எம். பொன்னுத்துரை போன்றோர் கொழும்பிலிருந்து வந்த முதலியாரை, யாழ். நகரத்திலிருந்து அழைத்து வந்தனர்.

அக்காலத்தில் பருத்தித் துறையிலிருந்து செய்திகள் சேகரித்து அனுப்புவதற்கு எந்த பத்திரிகைக்கும் நிருபர்கள் இருக்கவில்லை. இந்த மாநாட்டுச் செய்திகள் வீரகேசரியில் இடம் பெற வேண்டுமென்று விரும்பிய ரவீந்திரன், செல்லத்துரையை இந்த மாநாட்டுக்கு வரும்படி வேண்டுதல் செய்தான். ஒரு முழு நாள் மாநாடு. செல்லத்துரை பருத்தித் துறைக்கு இந்த மாநாட்டுக்காக வந்தால், அன்று யாழ்ப்பாணத்தைத் தவற விட வேண்டும். அதன் காரணமாக "நீயே குறிப்புகளை எடுத்து, செய்தியை எழுதிக்

கொண்டு வந்து தா! நான் அனுப்பிப் பிரசுரிக்கச் செய்கிறேன்!" என்று ரவியிடம் சொல்லியிருந்தார்.

முதலியார் இராசேந்திரா கோட்டு சூட்டு அணிந்து தலையில் தலைப்பாகையும் இடையில் ஒரு சிறு வாளும், கோட்டில் பதக்கங்களுமணிந்து கம்பீரத் தோற்றத்தில் மேடைக்கழைத்து வரப்பட்டார். அவருடன் சேர்ந்து, ஜேக்கப் காந்தி, யோவேல் போல், எம்.சி. சுப்பிரமணியம், ஜி.எம்.பொன்னுத்துரை ஆகியோர் மேடையில் அமர்ந்திருக்க, மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்தது.

தனது சமூக மக்கள் மத்தியில் நடைபெறும் மாநாடாக இருப்பதால், ரவி, சபையின் முன் பக்கத்திலிருந்து சகல நிகழ்வுகளையும் முதலியாரின் உரையையும் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தான். காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமான மாநாடு உணவு வேளைக்காக பன்னிரண்டு மணிக்கு இடை நிறுத்தப்பட்டது. மீண்டும் இரண்டு மணிக்கு ஆரம்பம். மாநாட்டுப் பிரமுகர்களுக்கு விசேட விருந்துபசாரம். வந்த பார்வையாளர்கள் அனைவரும் உறவினர்களாதலால் அவ்வீடுகளிலேயே மதிய உணவு. ரவி, தன் உணவுக்காக வீட்டுக்குப் போனான்.

அங்கே-

வீரகேசரி அலுவலகத்திலிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. ஆவலோடு அதனைப் பிரித்துப் பார்த்தான். அவனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அவனை பருத்தித்துறை நிருபராகப் பணியாற்றும்படி வீரகேசரி நிர்வாகம் அனுப்பி வைத்த கடிதம் அது.

பிறகென்ன? மாநாட்டு நிகழ்வுகளை காலையிலிருந்த உற்சாகத்துக்கு மேலதிகமான உற்சாகத்தோடு குறிப்பெடுத்து, இரவிரவாக அவற்றை உற்சாகத்தோடு எழுதி மறுநாள் தபாலில் சேர்த்தான். இரண்டாவது நாள் வெளிவந்த வீரகேசரியில் முக்காற் பக்கத்துக்கு அச் செய்தி பிரசுரமாகியிருந்தது.

ரவி தொடர்ந்து செய்திகள் சேகரித்து அனுப்பிக் கொண்டிருந்தான். முன்பு குறிப்பிட்டது போல, வீட்டிலிருந்தும் எழுதுவான். மாலை வேளையில் பருத்தித்துறைத் தபாற்கந்தோர் முன்பாக, கடலோரத்திலிருக்கும் படகுகள், தோணிகளில் இருந்தும் எழுதி, மெயில் பஸ் வந்ததும் அதில் சேர்த்து விடுவான். நிருபர் செல்லத்துரை யாழ் ரயில் நிலையத்துக்கு முன்பாக இருந்த வீரகேசரி

கிளை அலுவலகத்திலிருந்து எழுதி மெயில் வண்டி வந்ததும் அதில் சேர்த்து விடுவது போல.

மாத முடிவில், அவனுக்கு வீரகேசரி அலுவலகத்திலிருந்து, அந்த மாதப் பணிகளுக்கான காசோலை வந்தது. கணக்குப் பார்த்தால் ஒரு செய்திக்கு ரூபா 1.50 தான் அப்போதைய வருமானம். அவன் முதல் அனுப்பிய செய்தி முக்காற் பக்கத்தை அடைத்திருந்தது. அந்தப் பரப்பளவாயிருந்தாலும் சரி, ஒரு கலத்து பத்து அல்லது ஐந்து வரிகளாயிருந்தாலும் சரி, ஒரு செய்திக்கு அதே அளவு தொகைதான்!

## 10

ஒருவித மனக் கர்வத்தோடும் மகிழ்ச்சியோடும் ரவி இப்பொழுது ஊர் முழுவதும் சுற்றி வந்தான். வேலை வெட்டி ஒன்றுமில்லாமல் வீட்டில் கிடந்து மாய்ந்த கவலை தீர்ந்தது. ஒருபுறம்; கையில் கொஞ்சம் காசு கிடைப்பது மறுபுறம்; மனதில் மகிழ்ச்சியளித்தது.

ஜி.ஜி.பொன்னம்பலம் ஐயாவின் தமிழ்க் காங்கிரஸிலிருந்து பிரிந்து எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்துப் பிரசார வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்த காலம். யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் கூட்டங்கள் நடத்திக் கொண்டிருந்தார்கள். பருத்தித்துறை சித்தி விநாயகர் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் ஒரு கூட்டம் நடைபெற ஏற்பாடாகி இருந்தது. பருத்தித்துறை ஊழியன் அச்சகத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த ஏரம்பு எனப்படும் ஆசிரியர்தான், தமிழரசுக் கொள்கையில் மிக ஆர்வம் கொண்டு அக்கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தார்.

தமிழரசுக் கட்சியின் தானைத் தளபதியாயிருந்த அப்பாத்துரை அமிர்தலிங்கம் அக்கூட்டத்தில் பேசவிருப்பதாக விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. ஏரம்பர் ரவியிடமும் ஒரு நோட்டீசைக் கொடுத்து, கூட்டத்துக்கு கட்டாயம் வரும்படி கேட்டிருந்தார்.

ரவியும் அன்று மாலை வேளையிலேயே அங்கு போயிருந்தான். மைதானம் சனக் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. ரவி, முன்பக்கமாய்ப் போய் நின்று கொண்டான். மேடையில் ஒருவருமில்லை. முக்கிய பேச்சாளரை எதிர்பார்த்து அமைப்பாளர்கள் கீழே நின்று கொண்டிருந்தார்கள்.

மைதான வாசலில் ஒஸ்ரின் கார் ஒன்று வந்து அதிலிருந்து மூன்று பேர் இறங்கினார்கள். தூய வெள்ளை வேட்டி, நாஷனல், சால்வை அணிந்திருந்தார்கள். அவர்களில் ஒருவர் அமிர்தலிங்கம். அவரை மேடைக்கு அழைத்துச் செல்ல எவரும் வராததால் உடன்

வந்த இளைஞர்கள் தடுமாறிக் கொண்டிருந்தார்கள். ரவி உடன் இதனை அவதானித்து விட்டான். அவன் அடிக்கடி யாழ்ப்பாணம் போவதால், அங்கு நடைபெறும் கூட்டங்களில் அப்போதுதான் சட்டக் கல்லூரியிலிருந்து வெளியேறி வந்த அமிர்தலிங்கம் வீராவேசத்துடன் பேசுவதைப் பார்த்திருக்கிறான். அவரை நன்கு அறிந்து வைத்திருக்கிறான். அதனால் அவன் பரபரப்புடன் ஓடிப்போய், மேடைக்கருகில் நின்ற ஏரம்பு மாஸ்ரரிடம், அமிர்தலிங்கம் வந்திருப்பதைச் சொன்னான். அவவ்ளவுதான்! ஏரம்பு மாஸ்ரர் இன்னும் சிலருடன் ஓடிப் போய் அமிர்தலிங்கத்துக்குக் கை கொடுத்து அழைத்து வந்தார்கள். கூட்டம் ஆரம்பமானது.

அமிர்தரின் பேச்சுவன்மையைப் பலரும் அறிந்திருந்தாலும் அவரைப் பருத்தித்துறைச் சனங்களுக்கு அடையாளம் காட்டிய சந்தர்ப்பத்தை எண்ணி ரவி எப்போதும் பெருமை கொள்வான்.

செல்லத்துரை, நிருபராகப் பணிபுரியத் தொடங்குவதற்கு முன், ஆசிரிய தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி பெற்றிருந்தார். ஆனால் வேலை கிடைக்கவில்லை. அதன் காரணமாகவே செய்தி எழுதத் தொடங்கினார். அவ்வேளை, மலையகப் பாடசாலை யொன்றில் அவருக்கு ஆசிரிய நியமனம் கிடைத்தது. என்றாலும் அதை அவர் புறக்கணித்து விட்டு நிருபர் வேலையையே பெரும் மன நிறைவுடன் செய்தார்.

அவர் இலக்கியக் கட்டுரைகளும் எழுதினார். எழுத்தாளர் கூட்டத்தோடு நிறையப் பழகியதால் ஒன்றிரண்டு சிறுகதைகளும் எழுதினார். அந்நாட்களில் எழுதிக் கொண்டிருந்த இளம் எழுத்தாளர்களைப் பற்றி ஈழகேசரி வார இதழில் அறிமுகக் கட்டுரைகள் எழுதினார். எழுத்தாளர்களைப் பற்றி மேலோட்டமாக எழுதாமல், அந்த எழுத்தாளரின் கதைகள், நாவல்கள், கவிதைகள் போன்ற படைப்புகளை நிறையப் படித்து விமர்சனப் பாங்கில் எழுதினார்.

பட்டினத்தில் ஜோசப் சலூனில்தான், அவர் பல எழுத்தாளர்களையும், சந்தித்துப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. சாதுரியமும் நிதானப் போக்கும் கைவரப் பெற்ற செல்லத்துரை அன்றைய ஒவ்வொரு எழுத்தாளரையும் அளந்து வைத்திருந்தார். அவர்களுடன் அளவோடு பழகுவார். தன்னைவிடச் சிறந்த எழுத்தாளர் எவருமில்லை என்று தலைக்கனம் கொண்டிருந்த ஓர் எழுத்தாளர், மற்றவர்களிடம் இல்லாத பொல்லாத கதைகளைச்

சொல்லி சுத்துமாத்துப் பண்ணுவதிலும் வல்லவர். இந்த மேதைக்கு நிருபர் செல்லத்துரை 'இலக்கியக் கொம்பன்' என்றும் 'டூப் மாஸ்டர்' என்றும் பட்டங்கள் வழங்கியது, அன்றைய எழுத்துலகம் அறிந்த செய்தி.

அதே வேளை, அந்த எழுத்தாளரும் செல்லத்துரைக்குச் 'செய்தி வேட்டைச் செல்லத்துரை' என்று பட்டத்தை வழங்கினார். அது காழ்ப்புணர்வினால் வழங்கப்பட்ட பட்டமாக இருந்தாலும், சாமர்த்தியமாகவும், வேகமாகவும் செய்திகளைச் சேகரிப்பதனால் அது அவருக்குப் பொருத்தமாக அமைந்து விட்டதைச் சகலரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

# 11

கற்கோவளம் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பை முடித்துவிட்டு தும்பளைச் சிவப்பிரகாச வித்தியாசாலையில் ஆறாம் வகுப்பில் சேர்ந்த முதலாவது கிழமை ஒரு நாள் மாலை நேரத்தில், கற்கோவளம் பாடசாலைத் தலைமையாசிரியர் செல்லத்துரை, ஒரு கடதாசிச் சுருளுடன் ரவியைத் தேடி வந்தார். அவர் கையிலிருந்தது ஆசிரியர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட ஒரு நேர சூசிப் பத்திரமும், வெள்ளைத் தாளும் ஆகும். அவற்றை அவர் ரவியிடம் கொடுத்து, அந்த நேர சூசியை வடிவாகக் கோடு போட்டு எழுதித்தரும்படி கூறிவிட்டுச் சென்றார்.

கற்கோவளத்தில் படிக்கும்போது அவன் அப்படியொரு அட்டவணைப் பத்திரத்தை எழுதிக் கொடுத்ததாக நினைவில்லை. வகுப்பில் பாடங்களைச் செய்யும்போது - முக்கியமாக அவனுடைய அழகான எழுத்தை அவதானித்து விட்டு தலைமையாசிரியர் அவனிடம் வந்திருக்க வேண்டும். நாலைந்து ஆசிரியர்கள் மட்டும் படிப்பிக்கும் பாடசாலை அது. அவர்களிடம் கொடுத்துச் செய்விக்கத் தருணம் கிடைக்கவில்லையோ அன்றி தானே காலதாமதம் செய்து நேரசூசியைத் தயாரித்ததாலோ, ரவியிடம் கொடுத்து அதைத் துப்புரவாக எழுதுவிக்கக் கொண்டு வந்தாரோ தெரியாது. அவனுக்குப் பெரிய ஆச்சரியமும் சந்தோஷமும்.

இது அவனது எழுத்துப் பணிக்கு - அதாவது அட்டவணை வடிவமைப்பதற்குக் கிடைத்த முதலாவது சந்தர்ப்பமாகும். இப்பணி, காலம் முழுவதும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. அழகாக வடிவமைத்துக் கொடுப்பது என்று மட்டுமல்ல, நிகழ்வுகளை, கருத்துக்களை, அறிக்கைகளைத் தயாரித்துக் கொடுப்பது என்றெல்லாம் விரிவுபட்டுக் கொண்டிருந்தது.

ரவி, ஏழாம் எட்டாம் வகுப்புப் படிக்கிற காலத்தில் கிராமத்தில் நடைபெறும் திருமண நிகழ்வுகள், சாமர்த்தியச் சடங்குகள், பணச் சடங்குகளுக்கெல்லாம் அவன்தான், அச்சிடுவதற்கான

அழைப்பிதழ்களை எழுதி அவற்றைத் தும்பளையோடிணைந்திருந்த கலட்டியிலிருந்த கலாநிதி அச்சகத்தில் கொடுத்து அச்சிடுவித்துக் கொடுப்பான். சிறிய பிரசுரங்களாயிருப்பதால், அச்சகத்தாரே சரி பிழை பார்த்து அச்சிட்டுக் கொடுப்பார்கள். சில வேளைகளில் இவனே சில வேளையில் போய் சரி பிழை பார்த்துக் கொடுப்பான். கிராமத்திலுள்ள சில இளந்தாரிகள் பத்திருபது மைல் தூரத்துக்கப்பாலுள்ள இடங்களில் தொழில் பார்த்து வருவார்கள். உறவினர்கள் யாராவது மரணித்து விட்டால் அவர்களை வரவழைக்க தந்தி அடிக்கும் வேலையும் ரவியின் தலையில்தான் சேரும். தபாற்கந்தோருக்குப் போய், தந்தி எழுதும் பத்திரம் வாங்கி - இன்னார் இறந்து விட்டார். உடன் வரவும். இன்னாருக்கும் அறிவிக்கவும் - என்றெல்லாம் ஆங்கிலத்தில் எழுதி தந்தி அனுப்புவான்.

பசுபதி ரவியை விட மூத்தவர்தான். படிப்பிலும் மூத்தவர்தான். ஆனால் அவர் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து படித்ததனால் சனங்கள் அவரிடம் போய் இந்த உதவிகளைச் செய்விக்கக் கிடைக்கவில்லை. தற்செயலாக அவர் வீட்டிற்கு வந்திருந்தாலும் வசதி படைத்த அவர் வீட்டிற்குப் போய் அந்த உதவியைப் பசுபதி மூலம் செய்வதைச் சனங்கள் தவிர்த்து விடுவார்கள். அதனால் இந்தப் பங்களிப்பு ரவியைத் தொடர்ந்து கொண்டேயிருந்தது.

சிவப்பிரகாச வித்தியாசாலையில் சாதித் தடிப்புக் காரணமாக ரவி அவ்விடத்தில் கருத்திற் கொள்ளப்படவில்லை. நெல்லியடியில் படித்தபோதும், பரமேஸ்வராவில் படித்த போதும் அங்கெல்லாம் ஆங்கிலக் கல்விக்காகக் கையேந்திக் கொண்டிருந்ததாலும் அதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படவில்லை.

பத்திரிகை நிருபராகப் பணியாற்றத் தொடங்கியதும் இந்த வேலை நிறையத் தொடங்கியது. இடது சாரிப் போக்கும் சமூக மேம்பாட்டுக்கான செயற்பாடுகளும் இடம் பெறத் தொடங்கியதும் எழுத்துப் பணியும் அச்சகப் பணியும் அதிகமாக இடம் பெறத் தொடங்கின. காந்தாமணி அல்லது தீண்டாமைக்குச் சாவு மணி என்ற நாவல் கையில் கிடைத்ததும், அதை நாடகமாக்கி, காந்தாமணி என்ற தனிப் பெயரில் அரங்கேற்றியதை முன்னர் குறிப்பிட்டிருக்கிறேன். நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் ஆலய முன்றிலில் நடைபெற்ற அந்த நாடகத்துக்கான விளம்பர நோட்டீஸில் ரவி தன் கை வண்ணத்தைக் காட்டச் சந்தர்ப்பம் கிடைத்தது.

'காந்தாமணி என்ற பறையர் குலப் பெண்ணுக்கும் பண்ணையாரின் மகனாகிய இன்னாருக்கும் (பெயர் ஞாபகமில்லை) இன்ன மாதம் இத்தனையாம் திகதி நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் திருமணம்' என்று எழுதி விட்டான். அந்த நோட்டீஸைப் பார்த்து, கோயிலில் நாடகம் நடத்துவதற்கு வேளையில் அனுமதி வழங்கிய ஆலய அறங்காவலராகிய உடையார், மனம் உக்கிரமடைந்து புறுபுறுக்கத் தொடங்கி விட்டார்.

ரவி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் படித்துக் கொண்டிருந்தபோது அலுவலக வேலைகள் பலவற்றுக்கு அழைக்கப்பட்டான். பயிற்சிக் கலாசாலையில் வருட முடிவில் சஞ்சிகையொன்று வெளியிடப்படுவது வழக்கம். ரவியினுடைய முதலாவது வருட முடிவில் சுடரொளி என்ற அந்தச் சஞ்சிகைக்குச் சேர்ந்த கட்டுரைகளைப் பார்வையிட்டு, அச்சேற்றும் பொறுப்பு ரவியிடம் ஒப்படைக்கப்பட்டது. இரண்டாம் வருட மாணவர்கள் பயிற்சி முடிந்து வெளியேறுவதற்கு முன்பு சஞ்சிகை கைகளிற் கிடைக்க வேண்டும்.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அமைந்திருந்த இடம் நல்லூர் முத்திரைச் சந்தையடி, சுடரொளி அச்சேற்றும் அச்சகம் பிரதான வீதியில். ரவி காலையுணவை முடித்துக் கொண்டு கச்சேரி நல்லூர் வீதியால் நடந்து சென்று அச்சகத்தை அடையவேண்டும். மதிய உணவைக் கடைகளில் முடித்துக் கொண்டு 2 மணி வரை அச்சகத்தில் வேலை. ஒப்பு நோக்கித் திருத்தும் பணி. இதனால் ரவி, தனது மூன்றாந்தவணைப் பரீட்சைக்குச் சமூகமளிக்கவில்லை. நிர்வாகம் அவனை முக்கிய பணியிலீடுபடுத்தியதனால் அவனுக்கு விதிவிலக்களித்தது. விடுதலை முடிந்து இரண்டாமாண்டு முதலாந்தவணையில் படித்தபோது, ஒருநாள் அவன் கலாசாலை அலுவலகப் பணியொன்றில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவேளை, தற்செயலாக மாணவர்களின் பரீட்சைப் புள்ளி விபரக் கொப்பி கண்ணிற் பட்டது. வேண்டுமென்றே அதைப் புரட்டிப் பார்த்தான். அதில், சென்ற தவணைப் பரீட்சையில் அவன் பெயருக்கு நேரே 80, 75, 65, 70 என்ற வகையில் புள்ளிகள் இடப்பட்டிருந்தன. அவன் மனதுக்குள் சிரித்துக் கொண்டான்.

கலாசாலைச் சஞ்சிகைப் பணியை தான் செய்ய, நிர்வாகம் அதற்கான பிரதிபலனைச் செய்திருக்கிறது என்று அவன் எண்ணிக் கொண்டான்.

ஆசிரியப் பயிற்சி முடிவுற்றதும், பதுளை ஊவாக் கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் படிப்பித்துவிட்டு, கொழும்பு சென்று அங்கு ஒரு முஸ்லிம் பாட சாலையில் சில ஆண்டுகளும் விவோனந்தாக் கல்லூரியில் சில ஆண்டுகளும் பணியாற்றிவிட்டு, யாழ்ப்பாணம் வந்து புனித மரியாள் வித்தியாலயத்திலும் இறுதியில் யாழ். மத்திய கல்லூரியிலும் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

எல்லாப் பாடசாலைகளிலும் ரவியினுடைய எழுத்துறுப்பு, வடிவமைப்பு செயற்றிறன் போன்ற அடிப்படைத் தேவைகளின் காரணமாக, அறிக்கைகள், விளம்பரங்கள் போன்றவற்றுடன் சஞ்சிகை மற்றும் அச்சகப் பணிகள் யாவும் ரவியிடமே ஒப்படைக்கப்பட்டன. சில பாடசாலைகளில் ஆசிரியர்களின் சம்பளப் பட்டியல் தயாரிக்கும் வேலையுடன், சம்பளம் வந்ததும் அதைப் பிரித்து வழங்கும் பணியும் அவரிடமே ஒப்படைக்கப்பட்டன.

இவை, அவரது ஆசிரியப் பணியுடன் தொடர்புடைய நிறுவனங்களின் பணிகள். இவற்றுடன் நில்லாது சமூக சேவை, நிறுவனங்கள், இளைஞர் அமைப்புகள், இலக்கியம் தொடர்பான நிகழ்வுகள், சஞ்சிகை வெளியீடுகள் யாவற்றினூடாகவும் ரவியின் கைவண்ணம் வெளிப்பட்டுக் கொண்டேயிருந்தது.

கொழும்பை விட்டு யாழ்ப்பாணம் புறப்பட்டதையடுத்து, விவேகானந்தாக் கல்லூரியில் நடைபெற்ற பிரியாவிடை வைபவத்தில், அதன் அதிபர் சந்திரசேகரம் - கொழும்பு றோயல் கல்லூரியில் படிப்பித்து, விவேகானந்தாவுக்கு அதிபராக வந்தவர் - ரவி கல்லூரி அலுவலகப் பணிகளில் நிதானமாகவும் திறமையாகவும் பாடுபட்டதையெல்லாம் எடுத்துச் சொல்லி "எனது வலது கையை இழந்த நிலை ஏற்படுகின்றது!" என்று அவரது ஆற்றல் திறனை மதித்துப் பேசினார்.

## 12

**ஊ**வாக் கல்லூரிக்கு வந்த புதிதில் ரவீந்திரன் ஆசிரியர் ஆரம்ப வகுப்பொன்றில் மூன்று மாத காலம் படிப்பித்தார். பின்னர் மத்திய பிரிவுக்கு மாற்றப்பட்டார். ஏழு, எட்டாம் வகுப்புகளில் தமிழும் சமூகக் கல்வியும் படிப்பித்தார்.

எவ்.என்.ஹெட்டியாராச்சி என்பவர்தான் கல்லூரியின் அதிபர். ஐந்தடி இரண்டங்குல உயரம்தான் இருப்பார். வெண்ணிற மேனி. மெலிந்த உடற்கட்டு. தூய வெள்ளைக் காற்சட்டை, வெள்ளைச் சேட், வெள்ளை கோட்தான் அவரது உடை. மிகவும் மெதுவான குரலில்தான் பேசுவார். ஆசிரியர்கள் அவரை எவ்.என்.எச். என்றுதான் குறிப்பிடுவார்கள்.

இருமொழி மாணவரும் படித்த கல்லூரி அது. தமிழ் வகுப்புகளுக்கு வீரகத்தி எனப்படும் ஆசிரியர் பொறுப்பாளராக விருந்தார். இருந்தாலும் சகல வகுப்புகளையும் ஹெட்டியாராச்சி சுற்றி வந்து அவதானிப்பார். ஆசிரியர் படிப்பித்துக் கொண்டிருக்க மாணவச் செல்வங்கள் உரத்த குரலில் கேள்விகள் கேட்டு தங்களுக்குள் அடாவடித்தனம் பண்ணிக் கொண்டிருக்க, அவ்வேளை நடைபாதையூடாக வகுப்புகளைக் கவனித்துக் கொண்டு எவ்.என்.எச். வருவாரானால் பட்டென்று வகுப்பு அமைதியாகி விடும். காலையில் பாடசாலை ஆரம்பிக்கும் போது சகல வகுப்பு மாணவர்களும் அணிவகுத்து நிற்க, அதிபர் அவர்கள் முன்வந்து அசெம்பிளி நடத்துவார். மெதுவான, அதே வேளை இறுக்கமான குரலில் நாலைந்து வார்த்தைகள் பேசுவார். அவர் சொல்வதைக் கேட்பதற்காக மாணவர்கள் ஆட்ட அசைவின்றி புலன்களை அவர் மீது செலுத்திக் கொண்டிருப்பார்கள். குண்டூசி விழுந்தால் அந்தச் சத்தம் கேட்குமளவுக்கு நிசப்தம்... நிசப்தம்... நிசப்தம்!

ரவீந்திரன் மாஸ்ரர் ஏதோ ஒரு வகுப்பில் படிப்பித்துக் கொண்டிருந்தபோது, ஒரு மாணவன் ஏதோ புரளி செய்ய, ரவீந்திரன் மேசையில் கிடந்த பிரம்பைத் தூக்கி அவனை அடித்து விட்டார்.

கல்லூரி விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவன் அவன். இந்தத் தண்டனை ஒரு வியாழன் அல்லது வெள்ளி நடந்திருக்க வேண்டும். திங்கட்கிழமை ரவீந்திரன் வேறொரு வகுப்பில் படிப்பித்துக் கொண்டிருந்தபோது, அதிபர் பியோனை அனுப்பி, ரவீந்திரனைக் கூப்பிட்டார். ரவீந்திரன் உடனடியாக அங்குபோனபோது, எவ்.என்.எச். கடுகடுத்த முகத்துடன், கையில் ரெலிபோன் ரீஸீவருடன் இருந்தார். ரவியைக் கண்டதும் "போன கிழமை ஒரு மாணவனுக்கு அடித்து விட்டீர்கள். அவனுடைய தகப்பன் போனில் எனக்கு முறையிட்டுக் கொண்டிருக்கிறார். என்ன நடந்தது?" என்று விறாய்ப்பாகக் கேள்வியை எழுப்பி விட்டு, ரிஸீவரை அவனிடம் கொடுத்தார். அவன் பதற்றத்துடன் ரிஸீவரை வாங்கி "ஹலோ! நான் ரவீந்திரன் மாஸ்ரர் கதைக்கிறன். என்ன விஷயம்?" என்று நிதானத்துடன் கேட்டார்.

"நான், உங்களிட்டைப் படிக்கிற தவபாலனின் அப்பா கதைக்கிறன். வியாழக்கிழமை அவனுக்கு அடிச்சுப் போட்டியளாம். அவன் இங்கை வந்து அழுது கொண்டிருக்கிறான். என்னத்துக்கு அடிச்சனீங்கள்...?" என்று சற்று மிறாய்ப்பான குரலிலே கேட்டார். ரவி மாஸ்ரர் சற்றே குரலைத் தாழ்த்தி, "மகனைக் கேளுங்கோ! நான் படிப்பித்துக் கொண்டிருக்கும்போது, பாடத்தைக் கவனிக்காமல், உரத்துச் சத்தம் போட்டுப் புரளி பண்ணிக் கொண்டிருந்தான். அதுக்குத்தான் அடிச்சனான். அவனை விசாரிச்சுப் பாருங்கோ..." என்று அழுத்தமாகக் கூறினான். "சரி சேர்! நான் அவனை வடிவாக விசாரிக்கிறேன்" என்று சொல்லிவிட்டு அவன் போனை வைத்து விட்டான். ரவியும், "வகுப்பில் குளப்படி செய்ததற்குத் தான், நான் அடிக்க நேரிட்டது. எல்லாம் தகப்பனுக்குச் சொல்லியிருக்கிறேன். அவர், போனை வைத்து விட்டார்!" என்று அதிபருக்குத் தெரிவித்து விட்டு, தானும் போனை வைத்தான். அதிபரின் பதிலை எதிர்பார்த்து தயங்கிய நிலையில் நின்றான்.

"என்ன நடந்தது வகுப்பிலே!" என்று அதிபர் கேள்வி எழுப்பினார். நடந்தவற்றையெல்லாம் விபரித்துக் கூறியதும், "சரி, வகுப்புக்குப் போங்கோ! பிள்ளையளுக்கு அடிக்க வேண்டாம்" என்று எச்சரிக்கையாகச் சொல்லி விட்டு, உடனேயே, "வகுப்பிலே இருக்கிற பிரம்பை இங்கே கொடுத்து விடவும்!" என்று அழுத்தமாகக் கூறினார். உடனே பியோனை ரவி மாஸ்ரருடன் அனுப்பி, அதைப் பெற்றுக் கொண்டார்.

ரவி, அந்தச் சம்பவத்துக்குப் பிறகு பிரம்பைத் தொடுவதில்லை. பிள்ளைகளின் படித்தற் குறைபாட்டுக்காக அவர்களைக் கண்டிக்காது விட்டாலும், சில பிள்ளைகள் தாம் படிக்க இயலாமையால், மற்ற மாணவர்களைக் குழப்பிப் புரளி பண்ணுவதைத் தாங்க முடியாமல் - தண்டிக்கவும் முடியாமல், அந்த மாணவரை வகுப்பில் எழுந்து நிற்க வைப்பார். சற்று அமைதி அடைந்ததும் இருக்க வைத்து படிப்பிப்பார்.

மறுநாள், மலையகத்தைச் சேர்ந்த அதே ஆளிடமிருந்து ரவிக்கு மீண்டும் அழைப்பு வந்தது. அதிபர் தான் சொல்லியனுப்பினார். 'தொல்லை இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறதே' என்று மனம் கசந்தபடி அதிபரின் அலுவலகத்துக்குப் போனான். தொலைபேசி கீழே கிடந்தது. அதிபர் ஏதோ கோவையைப் புரட்டிக் கொண்டிருந்தார். ரவியைக் கண்டதும், போனைக் காட்டி, அது உமக்குத்தான் என்று கண்டித்தார்.

ரவி போனை எடுத்தான்.

"குட் மோணிங் சேர். நான் உங்கள் மாணாக்கன் தவபாலனின் அப்பா பேசுகிறேன். நான் எல்லாம் வடிவாக விசாரிச்சனான். நீங்கள் படிப்பிக்கேக்கை, தான் படிப்பில் கவனம் செலுத்தாமல் குளப்படி செய்ததாக ஒப்புக் கொண்டிட்டான். நாங்கள் பிள்ளையளிலே இருக்கிற பிரியத்தாலை ஆசிரியர்மாரைக் குறை கூறலாம். ஆனால், வகுப்பிலே பலவிதமான குடும்பப் பின்னணிகளின் கோளாறுகளோடை வாற பிள்ளைகளோடை படுற பாடு மாஸ்ரர்மாருக்குத்தான் தெரியும்... நேற்று நான் உங்களோட கொஞ்சம் கொதிப்படைந்து பேசிப் போட்டேன். என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ சேர்... குறை நினையாதையுங்கோ... எனக்கு நீங்கள் ஒரு உதவி செய்ய வேணும். பள்ளிக் கூடம் முடிஞ் சாப் போலை, அவனுக்கு நீங்கள் ரியூசன் சொல்லிக் கொடுங்கோ. ஒரு மணித்தியாலம் சொன்னால் போதும். நான் அதற்குரிய சம்பளத்தை உங்களுக்குத் தருவன். அவனுக்குப் படிப்பிலே கொஞ்சம் கவனம் சேரும். அத்துடன் உங்கள் மேலே மதிப்பும் உண்டாகும்..."

ரவீந்திரன் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தார். எதுவும் பேசவில்லை.

"என்ன சேர் பேசாமலிருக்கிறியள்!" என்று பணிவாகக் கேட்டான் அவன். "நான் உமது மகனிடம் சொல்லுகிறேன்" என்று

கூறிவிட்டு, போனை வைத்தார் அவர். அதிபர் அவரை நிமிர்ந்து பார்த்து, "என்னவாம்?" என்று கேட்டார். "மகனுக்கு ரியூசன் சொல்லிக் கொடுக்கட்டுமாம்..." என்று ரவி இழுக்க, "நல்லதுதானே! உங்களுக்கும் மாலை நேரத்தில் வேலையாய்ப் போச்சு. அவனுக்கும் படிப்பாய்ப் போச்சு. அவன் போடிங்கில் இருக்கிறபடியால் வெரி ஈசி." என்று கூறி அதிபர் அவனுக்கு விடை கொடுத்தார். தவபாலன் கல்லூரி விடுதியில் தங்கிப் படிப்பவன். 3.30 மணிக்குப் பாடசாலை முடிவடைய அவன் விடுதிக்குப் போய் உடுப்பு மாற்றி தேநீர் அருந்தி விட்டு ஒரு வகுப்பறைக்கு வர, ரவி மாஸ்ரரும் ஐந்து நிமிஷ நடைத் தூரத்திலிருக்கும் தங்குமிடத்திற்குப் போய் வரவும் நேரம் சரியாக இருக்கும். தமிழ், கணிதம், சமூகக் கல்வி என வாரத்தில் ஐந்து நாட்களும் ரியூஷன். ஆசிரியர் அக்கறையாய்ப் படிப்பிக்க, மாணவனும் ஆர்வத்தோடு படித்தான்.

வகுப்பில் திறமைசாலியாய் மிளிர்ந்தான். குழப்படியும் இல்லாதொழிந்தது. மாதமுடிவில், மாணவனுடைய தந்தை விடுதிப்பணம் அனுப்பும் போது ரியூசனுக்குரிய காசையும் அதிபருக்கு அனுப்பி வைப்பார். அதிபரும் ரியூசன் காசை, ரவியைக் கூப்பிட்டுக் கொடுத்து விடுவார்.

ஒரு மாதச் சம்பளம் ரூபா ஐந்து மட்டும்தான். தன்னுடைய சம்பளத்துக்கு மேலாகக் கிடைக்கிற பணம் ஆகையால், அதைச் செலவழிக்காமல் சேர்த்து வைத்து, நாலு மாதக் காசு கிடைத்ததும் அத் தொகையான இருபது ரூபாவுக்கு ஒரு பெரிய பாரதியார் படம் வாங்கிக் கொண்டு போய், தன் படுக்கைக்கு மேலே, சுவரில் தொங்க வைத்துப் பூரிப்படைந்தான்.

தினந்தோறும் அந்த மகாகவியைத் தரிசித்து முதலில் "வல்லமை தாராயோ? இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே!" என்று அந்த மாமனிதர், சக்தி தேவியை வேண்டிப் பாடியதை நினைவு கொள்ளுவார். உடனேயே, அந்த வேண்டுதலில் ஒரு சிறு மாற்றம் செய்து,

'வல்லமை *தாராயோ? இந்த மானுடம் பயனுற வாழ்வதற்கே!*' என்று, தன்னையும் உட்படுத்தி அருள் வேண்டுவார்.

கந்தப்பளையில் கழிந்த மூன்று நாட்களை ரவி மனதில் நிறுத்தவில்லை. பதுளை ஊவாக் கல்லூரியில் இரண்டாண்டுகளுக்குக் குறைவாகவே அவர் படிப்பித்தாலும் எவ்.என்.எச்.சின் நெறிப்படுத்தல், காலம் முழுதும் நிலைத்தது.

கொழும்பில் படிப்பித்த இரு பாடசாலைகளில் பிரச்சினைகள் எதுவும் நிகழாவிட்டாலும், யாழ்ப்பாணத்தில் படிப்பித்த இரு பாடசாலைகளிலும் ஒவ்வொரு பிரச்சினையைச் சந்திக்க நேர்ந்தது.

புனித மரியாள் வித்தியாலயத்தில் படிப்பித்தபோது, ஒரு ஆறாம் வகுப்பு மாணவன் செய்த புரளியைப் பொறுத்துக் கொள்ளமுடியாத ரவி, தடியை எடுத்து அவனுக்கு ஒரு அடி அடித்து விட்டார். அடுத்த அடி விழுவதற்குள் அவன் வகுப்பிலிருந்து வெளியே பாய்ந்து, பாடசாலைக்கு வெளியே வேகமாய் ஓடி, 150 யார் தூரத்துக்கப்பால் உள்ள மதிற் சுவரைத் தாண்டி ஓடி விட்டான். அவ்வளவுதான். அவன் பிறகு அந்தப் பக்கம் திரும்பிப் பார்க்கவுமில்லை.

அந்த மாணவனுடைய அம்மாக்காரி சின்னக் கடைச் சந்தையில் ஒரு அரிசி வியாபாரி. ரவி அவளிடம் பொருட்கள் வாங்குவதும் உண்டு. முறைப்படி திருமணம் செய்யாமல், யாரோ ஒருவனுடன் தொடர்பு கொண்டிருந்ததால் பிறந்த பிள்ளைதான் அவன் என்று பின்னர் அறிந்து கொண்டான். அம்மாக்காரியும் மகனுக்கு அடித்த அந்தச் சம்பவம் குறித்து வாய் திறக்கவில்லை.

எட்டுப் பத்து ஆண்டுகள் கழித்து ஒருநாள், ரவி பன்னிரண்டு வயதான தனது மகளைப் பாடசாலையிலிருந்து சைக்கிள் முன் பக்கத்திலிருத்திக் கொண்டு வீட்டுக்குத் திரும்புகையில் -

முன் பக்கமாக வந்து கொண்டிருந்த சைக்கிள் ஒன்று படக்கென நிறுத்தப்பட்டு, சைக்கிளை ஓட்டி வந்தவன். மற்றவனிடம் சைக்கிளை எறிந்துவிட்டு, ரவிக்கு முன்னால் பாய்ந்து வந்து "டேய், ரவீந்திரா! எனக்கு அடிச்சனி யெல்லோடா..." என்று பயங்கரமான குரலில் கத்திக் கொண்டு, ரவியை அடிக்கக் கையோங்கினான். பின் பக்கமிருந்தவன், சைக்கிளைக் கீழே போட்டுவிட்டு ஓடி வந்து, அவனைக் கட்டிப் பிடித்து, "எனக்கும் படிப்பிச்ச மாஸ்ரர்டா அவர்! வாடா, இங்காலை!" என்று அவனை மடக்கிப் பிடித்தான்.

ரவி நிதானம் தவறாமல் மகளை ஒரு கையால் அணைத்துப் பிடித்தபடி காலை ஊன்றிநின்று, அவனை விழித்துப் பார்த்தார். அதற்கிடையில், சனங்கள் கூடி விட்டார்கள். "நீங்கள் போங்க மாஸ்ரர்!" என்று எல்லோரும் சொல்லி அவனையும் ஓரத்துக்கு இழுத்துச் சென்றார்கள். தண்டனைக்குக் கிடைத்த ஒரு தண்டனை இது. ரவி, அதிலிருந்து தப்பிப் பிழைத்ததற்கு, அயலவர்கள், அவனிடம் படித்த மாணவர்கள் ஒன்றிணைந்து விடுதலை பெற்றுக் கொடுத்தார்கள்.

இன்னொரு தண்டனை மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

ஏழாம் வகுப்பில் படிப்பித்துக் கொண்டிருக்கும் போது இரண்டாம் வரிசையில் அமர்ந்திருந்த ஒரு மாணவன் புரளி பண்ணிக் கொண்டிருந்தான். அவனை அதட்டிக் கண்டித்து விட்டுப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அவன் சிறிதேனும் பணியவுமில்லை. பாடத்தில் கவனம் செலுத்தவுமில்லை. குளப்படி முன்பை விடவும் அதிகமாக இருந்தது. ஆத்திரம் கொண்ட ஆசிரியர் பிரம்பைத் தூக்கி ஓர் அடி அடித்து விட்டார். பாடம் நடந்து கொண்டிருந்தது. வகுப்பில் கசமுச சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

"என்ன அது?" ரவி விசாரித்தார்.

அடி வாங்கிய மாணவனுக்கருகில் இருந்த மாணவன், "இவன் தன்ரை அப்பாவுக்குச் சொல்லி உங்களுக்கு அடிப்பிக்கப் போறானாம் சேர்..." என்றான். எல்லா மாணவரும் அவனைத் திரும்பிப் பார்த்தார்கள்.

ரவி, அவனை எழுப்பினார். "அப்படிச் சொன்னனியோ?" என்று விசாரித்தார். அவன் மேலும் குனிந்தவண்ணம் இறுக்கமாக "ஆம்" என்றான்.

ரவி மாஸ்ரர், உடனே அவனைப் போய்க் கடைசி வரிசையில் இருக்குமாறு உத்தரவிட்டார். "நீ அங்கே இருந்தால் உனக்கு நான் அடிக்கவும் மாட்டன். நீயும் உன் அப்பனைக் கொண்டு எனக்கு அடிக்கவும் வேண்டாம்!" என்று கூறி, பின் வரிசையிலிருந்த ஒருவனைக் கூப்பிட்டு இடத்தை மாற்றினார். அவன் தன்னிடத்திலிருந்து முன்னுக்கு வர, இவன் அங்கு போய் உட்கார்ந்தான்.

ரவீந்திரன் அவனிடம் பாடம் சம்பந்தமாக ஒரு கேள்வியும் கேட்பதில்லை. அவன் ஏதாவது பதில் சொன்னால், சரி, பிழை சொல்லிக் கொள்வார், அவ்வளவுதான்!

இரண்டொரு நாட்கள் கழித்து, ஏதோ ஒரு பாடத்தைப் படிப்பித்து கரும் பலகையிலும் விளக்கம் எழுதினார். எல்லோரும் தங்கள் கொப்பிகளில் எழுதித் தனக்குக் காட்டும்படி கட்டளையிட்டிருந்தார். மாணவர்கள் தமது தெளிவுக்கும் விரைவுக்குமேற்ப எழுதி முடித்துக் காட்டிக் கொண்டிருந்தார்கள். நாலைந்து பேர் அவரிடம் வரவேயில்லை. ஆசிரியர் பொறுமையிழந்து "எழுதிக் காட்டாதவர்கள்

எழும்பி வாங்கோ” என்று கடுமையாகச் சொல்லிவிட்டுப் பிரம்பை அடுத்த வகுப்பு ஆசிரியரிடம் வாங்கி, ஒவ்வொருத்தருக்கும் கையில் ஒவ்வொரு அடி கொடுத்தார். ஒருவர் பின்னொருவராக வர, அவர்களுக்கு அடி கொடுத்துக் கொண்டிருந்த ஆசிரியர், கடைசியாக வந்த மாணவன் கையை நீட்டிக் கொண்டு வர, அவனை நிமிர்ந்து பார்த்ததுதான் தாமதம், தடியை மேசைப் பக்கம் சுழற்றி எறிந்து விட்டு, “சரி பிள்ளைகள்! இனி நாங்கள் இந்த விஷயத்தைப் பற்றி அறிந்து கொள்ளுவோம்” என்று பாடத்தைத் தொடங்கினார்.

என்ன ஆச்சரியம்!

அந்த மாணவன், தன் இரு கரங்களையும் தூக்கிக் கும்பிட்டபடி, ஆசிரியர் முன்பாகச் சாஷ்டாங்கமாக விழுந்து அவர் கால்களைப் பற்றியபடி உரத்த குரலில் கதறிக் கொண்டிருந்தான்.

ரவி அதிர்ந்து போனார். உடனே அவனைத் தன் இரு கரங்களாலும் தூக்கி நிமிர்த்தி, “அழாதே! போதும். போய் உன் புத்தகங்களை எடுத்துக் கொண்டு வந்து நீ முதலில் இருந்த இடத்தில் இரு!” என்று கனிவான குரலில் கூறி இடம் மாற்றி விட்டார்.

ரவி மாஸ்ரருக்கு இரண்டாவது தடவையாக, தண்டனைக்குக் கிடைத்த தண்டனை இது! இத்தண்டனை, காலம் முழுவதும் அவர் நெஞ்சை விட்டகலாது மனதில் ஒட்டிக் கொண்டிருக்கிறது.

## 13

ஆசிரியப் பயிற்சி முடிவுற்றதும் வேலை தேடும் படலம் ஆரம்பமானது. ரவியும், பயிற்சிக் கலாசாலையில் நண்பனாகப் பெற்ற கவிஞர் தில்லைச் சிவனும் இணைந்து பல பாடசாலைகளுக்கு விண்ணப்பம் அனுப்பிக் கொண்டிருந்தனர். கிறிஸ்தவ பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்றதால் மிஸன் பாடசாலைகளுக்கு மட்டுமே விண்ணப்பம் அனுப்ப வேண்டும். சைவப் பாடசாலைகளில் இவர்களை ஏற்க மாட்டார்கள். வேளையிலே தூரம் தொலைவில் படிப்பித்துக் கொண்டிருக்கும் நண்பர்கள் உறவினர்கள் மூலம் விவரம் அறிந்து அங்கெல்லாம் விண்ணப்பம் அனுப்பினார்கள்.

கந்தப்பளையினுள்ள ஒரு பாடசாலையிலிருந்து இருவருக்கும் அனுமதி கிடைத்தது. நுவரெலியாவுக்கு, வெளிநாட்டவர்கள் வந்து தங்கி உல்லாசப் பயணம் அனுபவித்துப் போவது, அங்குள்ள குளிர்சுவாத்தியத்தின் காரணமாக என்பது அனைவரும் அறிந்த விடயம். நுவரெலியாவிலிருந்து ஆறேழு மைல் தூரத்திலிருப்பதுதான் கந்தப்பளை. சின்னஞ்சிறு நகர்ப் பகுதி. நுவரெலியாவை விடவும் குளிர் அதிகம். அதன் காரணமாகத்தான் 'எந்தப் பளைக்குப் போனாலும் கந்தப்பளைக்குப் போகக் கூடாது' என்ற சொல்வழக்கு அடிபடுகிறது. என்றாலும் வேறு இடங்களில், இடம் கிடைக்காத காரணத்தால் இருவரும் அங்கு போகத் துணிந்து விட்டார்கள். போவதற்கு முன், ரவி தில்லைச் சிவனிடம் "அங்கே போய் நாங்கள் தங்குவதற்கு, சாப்பாட்டிற்கு ஏதாவது வசதி கிடைக்குமோ?" என்று ஆதங்கப்பட, "தீவார் இல்லாத இடம் உலகத்திலை கிடையாதடா! வாடா, எல்லாம் அங்கே போய்ப் பார்த்துக் கொள்ளலாம்" என்று அவன் உத்தரவாதம் அளித்தான்.

என்றாலும் ரவி புறப்படுவதற்கு இரண்டு நாள் கழித்துத் தான் தில்லைச் சிவன் புறப்படுவதற்கு ஒழுங்குகள் மேற்கொண்டிருந்தான். அவன், பயிற்சி பெறுவதற்கு முன்பே திருமணமானவன். அதனால் இந்தச் சுணக்கம், கந்தப்பளைக்கு ரவி போகவிருந்த செய்தியை

அறிந்த ரவியுடைய நண்பரான ஜெயசிங்கம் அப்புக் காத்து, அங்குள்ள குளிர் நிலவரத்தை எடுத்துச் சொல்லி, ஒரு தடித்த 'ஓவர் கோட்'டையும் அவனுக்குக் கொடுத்தார். அவர், தனது சட்டப் படிப்பை முடித்த கையோடு திருமணமும் செய்து பருத்தித் துறையில் வந்து குடியமர்ந்ததிலிருந்து, கட்சித் தொடர்பினால் ரவியுடன் மிகுந்த நட்புறவோடு பழகினார். தனது தந்தையார் கந்தப்பளையில் தபாலதிபராகப் பணியாற்றியதாகவும், தானும் அங்கு வசித்ததாகவும், தானோ, தந்தையோ பாவித்த ஓவர்கோட்தான் அது என்றும் விபரம் சொன்னார்.

ரவி ஒரு திங்கட்கிழமை ரயிலேறி கண்டி வரை வந்து பின் பஸ்ஸில் நுவரெலியாவுக்கு வந்து அங்கிருந்து கந்தப்பளை வந்து விசாரித்துக் கொண்டு செவ்வாய் மாலை பாடசாலையை வந்தடைந்தான். ஒரு தோட்டத்தை யண்டிய சிறிய பாடசாலை. ஐந்தாம் வகுப்பு வரையுள்ள ஆரம்ப பாடசாலை. திருமதி செல்வராசா என்னும் ஒருவர் அதன் தலைமையாசிரியராகப் பணியாற்றினார். பாடசாலை யோடிணைந்து அவரது வசிப்பிடம். அவரும் அவரது கணவரும் வாழ்ந்து வந்தார்கள். ரவி அவரிடம் தனது நியமனக் கடிதத்தைக் காட்டியதும், அவனுடன் உரையாடி, அவன் தங்குவதற்கு ஓர் அறையைக் கொடுத்தார். பாடசாலையிலிருந்து ஒரு கூப்பிடு தூரத்திலிருந்து ஒரு கடைத் தெரு, ஆறு ஏழு கடைகள் மட்டும்தான். இரண்டு சிங்களவரது கடைகள். மற்றவை யாவும் தமிழரது கடைகள். ரவி மாலை வேளையில் ஒரு தமிழரின் கடைக்குச் சென்று சாப்பிட்டு விட்டு வேளையிலேயே, தலைமையாசிரியை கொடுத்த ஒரு காபெற்பாயில், தான் கொண்டு வந்த ஓவர் கோட்டைப் போட்டுக் கொண்டு படுத்துறங்கி விட்டான்.

மறுநாட் காலை விடிந்ததும், காலைக் கடன்களை முடித்து கடையில் சாப்பிட்டு விட்டு பாடசாலைக்குள் நுழைந்தான். நன்றாக உடுத்து ஒரு கம்பளிச் சுவெற்றரும் அணிந்து கொண்டு போனான். குளிர்ப் பிரதேசத்தில் முதன் முதலாகக் கால் பதித்திருக்கிறான். எல்லாப் பிள்ளைகளும் தடித்த உடுப்புகள் அணிந்து காலுறைகளுடன் சப்பாத்துகளும் அணிந்த வண்ணமே வகுப்புகளில் இருந்தார்கள். தலைமையாசிரியையும் ஓவர் கோட் அணிந்திருந்தார். அவருடன் இன்னொரு பெண் ஆசிரியரும் அதே உடுப்புக்களுடன் இருந்தார். ரவிக்கு மூன்றாம் வகுப்புக் கொடுக்கப்பட்டது. முதலாவது ஆசிரிய போதனை. குளிரைச் சகித்துக் கொண்டு படிப்பித்தான். காலை 9 மணிக்குத் தொடங்கிய பாடசாலை பகல் 2 மணிக்கு முடிவுற்றது. ரவி, கடைக்குப் போய்ச் சாப்பிட்டு வந்து, தான் கொண்டு வந்த

புத்தகங்களில் எதையோ புரட்டிக் கொண்டிருந்தான். இரவுச் சாப்பாட்டை மாலை 4 மணிக்கே கொண்டு வந்துவிட வேண்டும். குளிருடன் பொழுதும் இருண்டு விடும். இந்தப் புதிய சூழலை வேதனையுடன் கழித்துக் கொண்டிருக்க, ஐந்து மணியளவில் தில்லைச் சிவன் வந்து சேர்ந்தான். ரவிக்கு மகா சந்தோஷம். அவன் கோட் எதுவும் கொண்டுவரவில்லை. சாதாரண உடுப்புகள் போர்வைத் துணிகளுடனேயே வந்தான். தலைமையாசிரியை அவனுக்கு காபெட் எதுவும் கொடுக்கவில்லை. ரவிக்குக் கொடுத்த விரிப்புச் சற்றுப் பெரிதாகையால் இருவரையும் அதிலேயே படுத்துறங்கும்படி பணித்தாள். தில்லைச் சிவன் குளிர் தாங்க முடியாததாகையால் தலைமையாசிரியையிடம் ஒரு சாக்கு வாங்கி, அதற்குள் தன் உடலைப் புகுத்திக் கொண்டு படுத்துறங்கினான்.

மறுநாள் வியாழக்கிழமை இருவரும் வகுப்புகளில் படிப்பித்தார்கள். வெள்ளிக்கிழமையும் படிப்பித்து முடிந்ததும் மூன்று மணியளவில், ரவிக்கு ஒரு தந்தி வந்தது. அதில், 'பதுளை ஊவாக் கல்லூரியில் உனக்கு இடம் கிடைத்திருக்கிறது' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. வீட்டிலிருந்து வந்திருந்தது அத்தந்தி. சரி, இந்தக் குளிர்க்கொடுமைக்கு விடை கொடுத்து பதுளைக்குப் போய் விடலாம் என்று அவன் மனம் புல்லரித்தது. ஆனால், தன்னுடன் வந்திருக்கும் நண்பனை விட்டு எப்படிப் போவது? என்று மனம் தள்ளாடியது.

தில்லைச் சிவனிடம் தந்தியைக் காட்டி "உன்னைத் தனியே விட்டுப் போக என்னால் முடியாது. நீ என்ன சொல்கிறாய்?" என்று அவனைக் கேட்டான்.

"நீ உன்ரை அலுவலைப் பார்! என்ரை அலுவல் பார்க்க எனக்குத் தெரியும்!" என்று அவன் அடித்துச் சொன்னான்.

அதன் பிறகு தான் ரவி, தந்தியைக் கொண்டு போய் திருமதி செல்வராசாவிடம் காட்ட, 'எனக்கு இங்கத்தைக் குளிர் ஒத்துக் கொள்ளவில்லை. நான் பதுளைக்குப் போகப் போகிறேன்!" என்று பணிவாக வேண்டினான்.

தலைமையாசிரியைக்கு முகம் கறுத்துப் போய்விட்டது. தோட்டமொன்றில் ஏதோ ஓர் அதிகாரியாகப் பணிபுரியும் கணவரும் அருகிலிருந்தார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று தலைமையாசிரியை உபதேசம் செய்து கொண்டிருந்தார். ரவி, சற்று

இறுகிய மனத்துடன் "நாளைக் காலை நான் புறப்பட்டு விடுவேன்!" என்று சொல்லி விட்டுத் தன் இருப்பிடத்துக்கு வந்தான்.

தன் சாமான்கள் எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தி சூட்கேஸ் பெட்டியிலும், காட்போட் பெட்டியிலும் வைத்தான். இராச் சாப்பாட்டுக் கடைக்குப் போகும் போது அவற்றைக் கடையில் வைத்துவிட்டு, விடிய எழுந்து புறப்பட்டு, பதுளைக்குச் செல்வதாகத் தீர்மானம், ஐந்து மணியளவில் ரவி தன் சாமான்களை எடுத்துக் கொண்டு புறப்பட தில்லைச் சிவனும் தன் பெட்டிகளுடன் புறப்பட்டான். அதிர்ச்சியடைந்த ரவி, "என்னடா இது?" என்று கேட்க, "நீ பதுளைக்குப் போடா! நான் யாழ்ப்பாணம் போகிறேன்!" என்று அதிரடியாய் பதில் கூறினான். இருவரும் தமது பெட்டிகளைக் கடையில் வைத்துவிட்டுச் சாப்பிட்டு வந்து பாடசாலையில் படுத்துறங்கினார்கள். விடிந்ததும் அதிகாலையிலேயே பஸ் ஏறி, கண்டி வரை வந்து, ரவி பதுளைக்குப் போக தில்லை யாழ்ப்பாணப் பயணத்தை மேற்கொண்டான்.

ரவி, ஊவாக் கல்லூரியில் படிப்பிக்கத் தொடங்கினான். ஊர் போய்ச் சேர்ந்த தில்லை, ஓராண்டு காலம் வரை ஓரிடத்திலும் படிப்பிக்க இடம் கிடைக்காமலிருந்து இறுதியில் தான் பிறந்த ஊரான வேலணையில் உள்ள சைவப் பாடசாலையில் இடம் கிடைத்து, அங்கு படிப்பித்து பின்நாளில் அப்பாடசாலையின் தலைமையாசிரியராகப் பணியாற்றி அறுபதாம் வயதில் ஓய்வு பெற்றான்.

# 14

நேர்மையும், நிதானமும் கொண்ட வள்ளியம்மையின் வழி நடத்தலில் வளர்ந்த ரவி, இயல்பாகவே அமைந்த விழுமியப் பண்பாடுகளின் பின்னணியில் வழிநடந்தாலும், அவன் மேலும் புடமிடப்படுவதற்காக இடம்பெற்ற மூன்று நிகழ்வுகளால் வாழ்நாள் முழுவதும் கர்வத்தோடு வாழும் பாக்கியம் கிடைத்தது.

ஏழு எட்டு வயதிருக்கும். இராசனாய் இருந்த காலம், காலைச் சாப்பாட்டுக்காக அவன் அம்மா பிட்டு அவித்துக் கொண்டிருக்கும் போது இராசனைக் கூப்பிட்டு அவனிடம் ஐந்து சதத்தைக் கொடுத்து, பக்கத்திலுள்ள கரையூரில் கருவாடு வாங்கி வரச் சொல்லுவாள். பிட்டுக்குக் கருவாடுதான் உப உணவு. அடுப்பில் நெருப்பு நூர்வதற்குமுன் கருவாடு வந்து சேர வேண்டும். கரையூரில் முன் பக்கமாகவுள்ள ஒரு வீட்டில் கருவாடு வாங்கி வருவான்.

மாரி காலம் முடிந்து கோடை காலம் தொடங்கும் பங்குனி சித்திரை மாதங்களில் ஊரிலுள்ள இளைஞர்கள் வாலாக்கொடி கட்டிப் பறக்க விடுவார்கள். சீனட்டான் கொடிதான் சிறுவர்கள் கட்டிப் பறக்க விடுவார்கள். சற்று வளர்ந்தவர்கள், படலப் பட்டம், கொக்குப் பட்டம், தாராப் பட்டம் என்று பறக்க விடுவார்கள்.

அந்நாட்களில் உத்திராவத்தையைச் சேர்ந்த தம்பிமுத்து என்பவர் பதினைந்தடிக்குக் குறையாத அளவுள்ள கொக்குப் பட்டத்தைப் பெரும்பாடுபட்டுக் கட்டினார். வீட்டில் அந்தப் பெரிய பட்டத்தைக் கட்ட இடமில்லாததாலும் பெரியவர்கள் பாய்ந்து கடிப்பார்கள் என்ற பயத்தாலும் பக்கத்திலுள்ள வெறும் நிலப் பரப்புள்ள காணியொன்றில் வைத்துக் கட்டி, நிறக்கடதாசியெல்லாம் ஒட்டி, கற்கோவளம் கடற்கரை வெளிக்குக் கொண்டு வந்து அதை ஏற்றினார். அந்தோ பரிதாபம்! நூலைச் சுண்டி இழுத்து அதை ஏற்ற முற்பட்டபோது, பட்டம் ஒரு பத்தடி உயரத்துக்கு மேலே பறந்து உடனேயே ஒரு பக்கம் சாய்ந்து நிலத்தில் சிறகு அடிபட விழுந்து கடதாசிகள் கிழிந்து சிதைந்து போய் விட்டது. எத்தனை

நாள் முயற்சி? அந்தக் கொடியைக் கட்டி முடிப்பதற்கு நேரான தடி, நீளமான மூங்கில்கள் எல்லாம் தேட எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார். பெரிய கொடிகளை தூண்டில் கயிற்றில்தான் பறக்க விட வேண்டும். அதை வாங்க எவ்வளவு காசு செலவழித்திருக்க வேண்டும்?

வாலாக் கொடி பறக்க விடும் உணர்வில் கருவாடு வாங்கப் போன இராசனுக்கு, ஒரு வீட்டுப் படலையில் வரிச்சுக் கட்டியிருந்த மூங்கில் தடிகள் கண்ணில் பட்டு மனதை அரித்தது. சீனட்டான் கொடி கட்ட மூங்கில் தடிதான் வேண்டும். படலையின் அடி வரிச்சு, பிள்ளைகள் படலையைப் பிடித்தபடி அவ்வரிச்சில் ஏறி வாகனம் ஓட்டி விளையாடியதால் கட்டுகள் அவிழ்ந்து தொங்கிக் கொண்டிருந்தது. தொட்டுப் பார்த்தான். வரிச்சுமட்டை கையோடு வருவது போலிருந்தது. அதை இழுத்தெடுத்துக் கொண்டு போக முற்படுகையில், அவன் கெட்ட காலம், வீட்டுக்காரி இதை அவதானித்து விட்டு உடனடியாகப் படலைக்கு ஓடி வந்தாள். இராசனைப் பிடித்து அவன் முதுகில் ஓங்கி ஓர் அறை அறைந்துவிட்டு இழுத்துக் கொண்டு போய், முற்றத்திலுள்ள ஒரு மரத்துடன் அவன் கைகளைப் பிணைத்துக் கட்டி விட்டாள். "கள்ள நாயே! படலையைப் பிய்த்து வரிச்சைக் கொண்டு போக நினைத்தாயோ..." என்று முகத்தில் அடித்தாள்.

இராசன் அழத் தொடங்கினான். அதிக நேரம் செல்லவில்லை. அவனை அவிழ்த்து விட்டாள். "போ நாயே!" என்று உறுமி விட்டு, அவனைப் படலைக்கு வெளியே தள்ளி விட்டாள்.

இது ஒரு தழும்பு.

பதினாலு அல்லது பதினைந்து வயதில் தும்பளைச் சிவப்பிரகாச வித்தியா சாலையில் படித்துக் கொண்டிருந்தபோது, அவனுடைய அண்ணன் செல்லத்துரை, பருத்தித்துறை ரவுணுக்கு அண்மித்த மூன்றாம் குறுக்குத் தெருவிலுள்ள ஒரு தென்னங்காணியில் கள்ளுச் சீவி விற்றுக் கொண்டிருந்தார். சில நாட்களில் மாலை வேளைகளில் இராசன் அங்கு போய் கள்ளு விற்றுக் கொண்டிருப்பான். சனி ஞாயிற்றுக் கிழமைகளில் கட்டாயமாக இந்த வேலை நடைபெறும். இராமலிங்கம் எனப் பெயர் கொண்ட ஓய்வு பெற்ற ஒரு மதுவரி இலாகா உத்தியோகத்தரின் காணி அது. இராமலிங்கத்தாரின் வீடு முற்பக்கமாக உள்ளது. பிரதான வீதியில் வீட்டு வாசல். குறுக்கு வீதியிலும் கிணற்றுப் பக்கமாக வாசல். இராசன் றோட்டைக் கடந்து, அந்தக் கிணற்றில் குடிப்பதற்குத் தண்ணீர் எடுத்துச் செல்வான்.

எளிய சாதியினர் உயர்ந்த சாதியினரின் கிணற்றில் தண்ணீர் அள்ள முடியாது. இராமலிங்கத்தாருக்கு ஏதோ இரக்கம் பிறந்து விட்டது. தாகம் வந்து இராசன் போய்த் தண்ணீர் கேட்க, "நீ அள்ளிக் குடி!" என்று சொல்லி விட்டார். அதனால் தண்ணீர் தேவைப்படும்போது இராசன் கிணற்றடிக்குப் போய் தண்ணீர் எடுத்து வருவான். தமையன் போவதில்லை.

இராசன் ஒருநாள் தண்ணீர் அள்ளிக் கொண்டிருந்தபோது கிணற்றுத் தொட்டியில் ஒரு சிறு துண்டு வாசச் சவர்க்காரம் கிடப்பதைக் கண்கள் கண்டு விட்டன. வெள்ளைக் கட்டி, லக்ஸ் சோப். அதை வைப்பதற்கு கேஸ் எதுவும் கிடையாது. சவர்க்காரக் கேஸ் புளக்கத்துக்கு வரவில்லை.

இராசன் வீட்டில் குளிக்கும்போது உடுப்புகளுக்குப் போடுகிற சவர்க்காரத்தை உடம்பில் தேய்த்துக் குளிப்பதுதான் வழக்கம். சவர்க்காரம் இல்லாதுவிட்டால், சோடாத் தூளைக் கையில் தொட்டு முகத்தில் படாமல், மேலுக்குப் போட்டுத் தடவிக் குளிப்பான். இங்கு லக்ஸ் சோப்பைக் கண்டதும் மனம் புல்லரித்தது. மெதுவாக அதை எடுத்து கள்ளுக் கொட்டிலுக்குக் கொண்டு வந்து அதை மறைத்து வைத்து வீட்டுக்குக் கொண்டு போய் விட்டான். வீட்டில் குளிக்கும் போது அந்த வாசச் சவர்க்காரத்தை முகத்துக்கு மட்டும் பூசிக் குளிக்கத் தொடங்கினான்.

இரண்டு நாள் கழிந்து, இராசன் கள்ளுக் கொட்டிலுக்குப் போய் கள்ளு விற்றான். தண்ணீர் தேவைப்பட்டபோது, ஒரு பாத்திரத்துடன் கிணற்றுக்குப் போய்த் தண்ணீர் அள்ளினான். இதைக் கவனித்த இராமலிங்கத்தார் கிணற்றடிக்கு வந்து இராசனை அணைத்து அவன் முகத்தை முகர்ந்தார். கண்கள் அகல விரிந்தன. "இங்கையிலிருந்த வாசச் சவுக்காரத்தை எடுத்துக் கொண்டு போயிட்டாய்..." என்று கேட்டார். இராசன் பதில் சொல்லவில்லை. முழுசினான். "சரி போ! இனி இப்படிச் செய்யாதை!" என்று சொல்லிவிட்டு, அவனை விடுவித்தார்.

இது இரண்டாவது தழும்பு.

இராசன் தொடர்ந்தும் கள்ளு விற்கப் போய்க் கொண்டிருந்தான். கிணற்றடிக்கும் தயங்கித் தயங்கித் தண்ணீர் எடுக்கப்போவான். இராமலிங்கத்தாரோ, அவன் மீது வெறுப்புணர்வு எதுவும் காட்டவில்லை. மதுவரித் திணைக் களத்தில் வேலை செய்யும் இன்ஸ்பெக்டர்களென்றாலும், மற்றும் உதவியாளர்களென்றாலும்

கள் இறக்கும் தொழிலாளர்களை மிகவும் அடிமைகளாக நடத்தி லஞ்சம் வாங்கும் கொடியவர்கள் எனப் பெயர் பெற்றிருந்தார்கள். இராமலிங்கத்தார் அவர்களுக்குள் ஒரு வித்தியாசமான மனிதர்.

மிக நெருங்கிய உறவினர் வீட்டுத் திருமணத்துக்கு இராசன் போயிருந்தான். இரவு பத்து அல்லது பத்தரைக்குத்தான் முகூர்த்த நேரம். சனங்கள் இரவானதால், ஒன்பது மணிக்கு முன்னரே போய்ச் சேர்ந்து விட்டார்கள். வயதில் மூத்தவர்கள் கலயாணப் பந்தலில் இருந்து கதைத்துக் கொண்டிருக்க இளைஞர்கள் அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தார்கள்.

கலியாண வீடு ஊரியவத்தையில், வயல்வெளிக்குப் பக்கத்திலுள்ள வீட்டில். இராசனும் அவனுடைய நண்பர்கள் சிலரும் அங்கிங்கென உலாத்திக் கொண்டிருந்தார்கள். அதிக நேரமிருந்த படியால், அவர்கள் வயல்வெளியைத் தாண்டி உத்திராவத்தைக்கு நடந்து வந்து விட்டார்கள். உத்திராவத்தைக் கிணற்றைக் கண்டதும், தண்ணீர் அள்ளிக் குடித்து விட்டுப் படியிறங்க, நிலா வெளிச்சத்தில் கிணற்றோரமாயிருந்த காணியில் நன்றாய்க் காய்ந்திருந்த மாங்காய்கள் கண்களில் பட்டு வாயூற வைத்தன. கைகளை நீட்டி ஆளுக்கொரு மாங்காயைப் பறித்து, அதைக் கடித்துத் தின்றபடி கல்யாண வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள். மாமரம் நின்ற காணியின் தென்புறத்தில் குடியிருக்கும் செட்டி எனப்படும் ஐயம்பிள்ளை என்பவர்தான் அந்த மாமரத்திற்குச் சொந்தக்காரர்.

கிணற்றில் தண்ணீர் அள்ளிய சத்தம், இளைஞர்களின் கலகலப்புச் சத்தம் எல்லாம் காதில் விழ, செட்டி கிணற்றடிப் பக்கம் பார்த்திருக்கிறார். இளைஞர்கள் மாங்காய் பிடுங்கியதைக் கண்டு விட்டார். உடனே படலையைத் திறந்து கொண்டு, அவர்களைத் தொடர்ந்து வேகமாக வந்தார்.

நாலு இளைஞர்களும் ஒருவர் தோளில் ஒருவர் கை வைத்தபடி, மாங்காயைக் கடித்துத் தின்று கொண்டே நடந்து கொண்டிருந்தார்கள். இராசன் அப்போது நெல்லியடியில் படித்துக் கொண்டிருந்ததால் சேட் அணிந்திருந்தான். மற்ற மூன்று பேருக்கும் வெறும் மேல்தான். செட்டி வேகமாக நடந்து வந்து "நில்லுங்கடா!" என்று உரத்த குரலில் கத்தினார். வீட்டிலிருந்து பார்த்தபோது ஒரு 'சேட்'டும் மாங்காய் பறித்ததைக் கண்டிருக்கிறார். அதனால் அந்தச் சேட் அணிந்திருந்த இளைஞனைக் கட்டிப் பிடித்து, அவன் வாயை மணந்து பார்த்தார். பட்டென்று ஓங்கி அவன் கன்னத்தில்

அறைந்தார். உடனே அவன் கையைப் பிடித்துக் கொற கொற என்று வீட்டுக்கு இழுத்துச் சென்றார். மற்ற மூவரும் நின்ற இடம் தெரியாமல் ஓடி மறைந்தார்கள்.

செட்டி இராசனை இழுத்துக் கொண்டு போய் முற்றத்திலுள்ள ஒரு மரத்தில் அவன் கைகளிரண்டையும் சேர்த்துக் கட்டினார். "இப்படியே நில்! விடியும் வரை நில். அப்பதான் மாங்காயின் ருசி தெரியும்!" என்று கூறிக் கொண்டே பக்கத்தில் நின்றார். இத்தனைக்கும் செட்டி யார்? இராசனுடைய மூத்த அக்காவின் புருஷனுடைய தங்கையைக் கல்யாணம் செய்தவர்தான் அவர். பத்து நிமிஷம் கழிந்தது. உறவு முறை அவர் மனதை அரித்ததோ அல்லது மனையாட்டி ஏதாவது அறிவுறுத்திப் புலம்பினாளோ தெரியாது. அவனை அவிழ்த்துவிட்டு, 'போடா! ஒரு நாளும் இப்படிக் களவு வேலை செய்யாதை!" என்று எச்சரித்து விட்டார்.

இது மூன்றாவது தழும்பு.

இந்தத் தழும்புகளுக்குப் பிறகு அவன்... பூரணமான மானுடன் என்றில்லாவிட்டாலும் அவன் செல்லுமிடமெல்லாம், அவை, படிப்பிக்கும் பாடசாலைகளாயிருந்தாலென்ன, சமூக சேவை நிறுவனங்களாயிருந்தாலென்ன, அரசியல் இயக்கங்களாயிருந்தாலென்ன, இலக்கியக் களமாயிருந்தாலென்ன அவன் மீது பெரு நம்பிக்கை கொண்டு பணிகளை வழங்கின. அப்பணிகளும் நற்பேறுகளாய் மிளிர்ந்தன.

## 15

பரமேஸ்வராக் கல்லூரிக்கு முழுக்குப் போட்டுவிட்டு அண்ணன்மாருடைய கள்ளுக் கொட்டிலில் சில நாட்கள் தங்கிக் கள்ளு விற்று விட்டு ஊர் திரும்பிய ரவிக்கு, மாலைப் பொழுதுகளைக் கழிப்பது பெரும் சிரமமாய் இருந்தது. வாசிப்புப் பழக்கம் வெகுவாகப் பற்றிக் கொண்டதால் மாலை வேளைகளில் பருத்தித் துறைக்குப் போய் வடலங்கா புத்தக சாலையில் தன் பொழுதைக் கழிக்கத் தொடங்கினான். வேளையில் வீரகேசரி வாரப் பத்திரிகையின் பாலர் பகுதியில் கட்டுரைகள், கதைகள் எழுதத் தொடங்கியதால், கவிஞரும், பல பாடப் புத்தகங்களின் ஆசிரியருமான வடலங்கா புத்தக சாலை உரிமையாளர் சிவக் கொழுந்து ரவியை அன்புடன் அரவணைத்து சஞ்சிகைகள் புத்தகங்களை அவன் தட்டிப் பார்க்க அனுமதித்தார். அந்நாட்களில் புலோலியூரைச் சேர்ந்த கு. பெரியதம்பி வீரகேசரியில் சிறுகதைகள் எழுதிக் கொண்டிருந்தார். இந்த நிகழ்வுகள் எழுத்துத் துறைப் பாலமாக அமைந்து, ரவி அத்துறையில் தடம் பதிக்க அத்திவாரமாக அமைந்தது.

ரவி நெல்லியடியில் படித்தபோது அங்கு அதிபராகப் பணியாற்றிய டாக்டர் சிவப்பிரகாசத்தின் வீடு, பருத்தித் துறைப் பிரதான வீதியில் வேலாயுதம் ஆங்கில பாடசாலைக்கருகில் இருந்தது. அது அவருடைய முதுச வீடு. டாக்டர் திருமணம் செய்தது புலோலியில். கிராமக் கோட்டடியிலிருந்து சிறிது தூரம். பாடசாலை நாட்களில் டாக்டர் மனையாளின் வீட்டிலிருந்து பாடசாலைக்குப் போவார். பாடசாலை முடிவுற்றதும் நேரே தனது முதுச வீட்டுக்குப் போவார். மாலை வேளைகளிலும் சனி ஞாயிறு தினங்களிலும் அவர் அங்குதான் காலத்தைக் கடத்துவார். அவரிடம் படித்த மாணவர்கள் அவருடன் படித்த சம கால நண்பர்கள் எனப் பலர் அங்கு வந்து போவார்கள். பழைய வீடு, ஒரேயொரு அறை, அறைக்கு முன்னால் இரு பக்கமும் விறாந்தை. அது சலாகைகளால் மறைக்கப்பட்டிருந்தது. இருப்பதற்குக் கதிரைகள் எதுவுமில்லை.

ஒரு அடி உயரமான திண்ணையில் இருந்து உரையாடிவிட்டுப் போவார்கள். விறாந்தையில் நிறைய புத்தகங்கள் சஞ்சிகைகள் பரவிக் கிடக்கும்.

வீட்டுக்கு முன்பாக குசினி பாழடைந்து, கூரையுமின்றிக் கிடந்தது. அத்திண்ணையில் கற்களால் ஒரு அடுப்பு உண்டாக்கி கேற்றலில் தண்ணீர் கொதிக்க வைத்துத் தேனீர் தயாரித்து வருபவர்களுக்கும் கொடுத்துத் தானும் அருந்துவார். சில வேளைகளில் டாக்டர், தான் வருபவர்களுடன் உரையாடிக் கொண்டு, ரவியிடம் தேனீர் தயாரிக்கும் பொறுப்பை ஒப்படைப்பார். ரவியும் மகிழ்வுடன் அதைச் செய்வான்.

டாக்டரின் வீட்டுக் காணிக்குள் எட்டுப் பத்துத் தென்னை மரங்கள் நிற்கின்றன. இரண்டொரு மரங்களில் கள் இறக்க வல்லி என்றொரு சீவல் தொழிலாளி வருவான். கிராமக் கோட்டிற்கு மேற்குப் பக்கமாக உள்ள கூவில் அவன் கிராமம். மெல்லிய உடற்கட்டு. சாதுவான தோற்றம். வல்லிபுரம் என்பது முழுப் பெயர். அதில் புரம், புறம் ஆகிவிட்டது. டாக்டர் தேனீர் பரிமாறும் வேளையில் வல்லி வந்தால், அவனுக்கும் கொடுப்பார். வந்தவர்கள் முக்கியமானவர்களாயில்லாவிட்டாலும், தான் தனியே யிருந்தாலும் டாக்டர் ஒரு நீளமான கிளாஸில் வல்லியிடம் கள் வாங்கி அருந்துவார்.

ஒருநாள் அவர் யாருடனோ கதைத்துக் கொண்டிருக்க, வல்லி, கள் இறக்கி முடித்து வெளியே செல்லப் புறப்பட்டான். டாக்டர் உடனே ரவியிடம் 'வல்லிக்குத் தேத் தண்ணி போட்டுக் குடு ரவி!' என்று சொன்னார். ரவி எழுந்து அடுப்பண்டை போனான். வல்லியை நிற்கும்படி கை காட்டி விட்டுத் தேனீர் தயாரித்தான். அடுப்பில் தண்ணீர் சுட்டுக் கொண்டிருந்தது. ஒரு பாத்திரத்தில் தேனீர் தயாரித்து, அதை ஒரு கிளாஸில் ஊற்றி அவனிடம் கொடுக்கப் போக, அவன் வேலியில் கொளுவிக் கிடந்த பேணியை எடுத்துக் கொண்டு வந்து ரவியிடம் நீட்டினான். ரவி வெதும்பிப் போய் பேணியில் தேனீரை ஊற்ற அவன் குடிக்கத் தொடங்கினான். ஒரு நளவன் இன்னொரு நளவனுக்குப் பேணியில் தேத்தண்ணி ஊற்றிக் கொடுத்த இந்தச் சம்பவம் காலம் முழுவதும் ரவியின் நெஞ்சை அறுத்துக் கொண்டிருக்கிறது.

இந்த டாக்டர் சிவப்பிரகாசம் உளவியல் துறையில் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றவர். தென்னாசியாவிலே உளவியல் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்ற முதலாவது அறிவு ஜீவி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 16

வராத்துப்பளையில் வாழ்ந்த வாலிபர்களின் நாடகத் துறை ஆர்வத்தைப் பற்றியும் நாம் கொஞ்சம் அறிய வேண்டும். இராசன் சிறுவனாயிருந்தபோது நடைபெற்ற கறுவல் அண்ணாவியின் நாட்டுக் கூத்துப் பற்றி மேலே அறிந்திருக்கிறோம். பின்னர் ஏற்பட்ட நாடக நிகழ்வுகளைப் பற்றி மீட்டுப் பார்ப்போம்.

நாட்டுக் கூத்துக்கலை, நாகரிகமடைந்து வரும் மக்களிடையிருந்து சற்றுப் பின் தள்ளப்பட, ட்ராமா என்று சொல்லப்படும் மேடை நாடகம் சீன் அலங்காரங்களுடன் மக்கள் மத்தியில் பரவத் தொடங்கியது. இராசன் வசித்த கிராமத்தை அண்டியிருந்த நெல்லண்டைப் பத்திர காளியம்மன் கோயில் மைதானத்தில் இத்தகைய நாடகங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இந்த நாடகங்களைப் பார்த்த ஆர்வத்தில் வராத்துப்பளை இளைஞர்களுக்கும், தாங்களும் ஒரு நாடகம் பழகி மேடையேற்ற வேண்டுமென்ற உந்துதல் ஏற்பட்டது.

இராசனுடைய மூத்தக்காவின் கணவர் சின்னையா நடிப்பாற்றலும், நல்ல குரல் வளமும் நிரம்பப் பெற்றவர். அதனால் அவர் அங்குள்ள இளைஞர்களை ஒன்று கூட்டி ஒரு நாடகம் நடித்துப் பழகி, அரங்கேற்ற வேண்டுமென்று முடிவு செய்தார். இளைஞர்களும் ஆர்வத்துடன் உடன்பட்டனர்.

மந்திகை ஆஸ்பத்திரிக்கு தென்புறமாக உள்ள கலிகை என்ற கிராமத்தில் வாழும் முருகேசு அண்ணாவியாரை அணுகி, அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டனர். முருகேசு அண்ணாவியாரும் நளவ சமூகத்தைச் சேர்ந்தவர்தான். மிகவும் பின் தள்ளப்பட்ட சமூகத்தவர். பெரிய பாட்டுக்கடலுக்கு குறுக்குக் கட்டுடன் வந்து மீன் வாங்கிச் சுமந்து செல்லும் கலிகைப் பெண்டுகள் வசிக்கும் ஊர்தான் அது. சின்னையா வீட்டுக்குப் பக்கத்திலுள்ள ஒரு வெறும் காணியில் கூத்துப் பழகுவதற்காக ஒரு பெரிய கொட்டகை அமைத்து அதில் கூத்துப் பழகும் வேலைகள் நடைபெற்றன.

முருகேசு அண்ணாவியார் பாட்டுகள் பாடப்படும்போது வீணை வாசிப்பார். நாடகத்தின் பெயர் அர்ச்சுனன் தபசு. கிழமைக்கு ஒரு தடவை, இரு தடவை என்று மூன்று மாதங்கள் இந்தக் கூத்துப் பழகல் நடைபெற்றது. நடிகர்கள் எல்லோருமே கள் இறக்கும் தொழிலாளர்களாதலால், அவர்கள் தொழில் முடிந்து உணவருந்தி விட்டுப் பத்து மணியளவில்தான் கூத்துப் பழக வருவார்கள். விடியப்புறம் மூன்று மணியளவில்தான் கூத்துப் பழகல் முடிவுறும். அனைவரும் வீட்டுக்குப் போய் தூங்கிவிட்டு காலை ஏழு மணியளவில் பனை ஏறத் தொடங்க வேண்டும்.

அண்ணாவியார் வேட்டிக்கு மேலே ஒரு வெள்ளைத் துண்டை இடையில் கட்டிக் கொண்டு கூத்துப் பழகும் இரவுக்கு முதல் எப்படியும் ஐந்து மணிக்கே வந்து விடுவார். இராசன் வீட்டில்தான் தங்கல். வேறு வசதியான வீடுகள் அமையப் பெறவில்லையாதலால் சின்னையா, மாமனார் வீட்டில் இந்த ஏற்பாட்டைச் செய்தார். இராசனின் அண்ணன்மார் தம்பிப் பிள்ளை, செல்லத்துரை இருவரும் அதற்கு ஆர்வத்துடன் ஒத்துப் போயினர். இதில் வேடிக்கையென்னவென்றால் அவர்களிருவரும் நாடகத்தில் பங்கு பெறவில்லை. தாழையடியில் தொழில் பார்த்துக் கொண்டிருந்த மாமனார் அவர்களைக் கூட்டிப் போய்த் தொழில் பழக்கிக் கொண்டிருந்தமையால் அது முடியாமற் போயிற்று. அண்ணாவியார் மாலை ஐந்து மணியளவில் வந்து சும்மா பொழுதைப் போக்கிவிட்டு, ஒன்பது மணியளவில் வள்ளியம்மை பரிமாறும் சோற்றைச் சாப்பிட்டு விட்டுக் கொட்டகைக்குப் போய்விடுவார். இராசனுடைய தந்தை கந்தப்பருக்கு இதில் கடுகளவு ஈடுபாடும் கிடையாது. இராசனும் அம்மாக்காரியும் கூத்துப் பழகல் பார்த்துவிட்டு, வீட்டுக்கு வந்து படுப்பார்கள். அண்ணாவியாரும் வந்து படுப்பார். விடிந்ததும் தேத்தண்ணி குடித்துவிட்டுப் போய்விடுவார்.

கூத்துக் கொட்டகைக்கு முன்னால் கொஞ்சம் வெற்று நிலம். மூலைப் பக்கமாகச் சிறிய வேப்பமரம். இளம் சந்ததி வெற்று நிலத்தில் இருந்து கூத்துப் பார்க்க, ஏழெட்டுப் பெண்டுகள் வேப்ப மரத்தையண்டியிருந்து கூத்துப் பார்ப்பார்கள். கூத்துப் பார்ப்பதை விட ஊர்ப்புதினங்கள் கதைப்பதும் அவளை இவளைப் பற்றிக் கிசுகிசுப்பதும்தான் அதிகமாயிருக்கும்.

நாடகத்திலே ஒரு காட்சி... 'அர்ச்சுனன் நரகர்களை அழிப்பதற்குப் பாசுபதாஸ்திரத்தைப் பெறுவதற்காக சிவபெருமானை வேண்டித் தவஞ் செய்கின்றான். இதனைக் கண்ட இந்திரன், அர்ச்சுனனுக்குப்

பாசுபதாஸ்திரம் கிடைத்தால், அதனால் தேவர்களையும் அழித்து விடுவானே என நினைத்து, அவனுடைய தவத்தைக் கலைக்க வேண்டுமென முடிவு செய்கிறான். அதனால் நடன தாரகையர் நால்வரில் ஒருவரான ஊர்வசியை அவ்விடத்துக்கு அனுப்புகிறான். ஊர்வசி அர்ச்சுனன் தவஞ் செய்யும் இடத்துக்கு வந்து, தழுக்கி மினுக்கி இனிய ஓசை யெழுப்பி நடனமாடுகிறாள். அர்ச்சுனன் கண்களை விழிக்கிறான். தன் முன்னே ஒரு நடன தேவதை! அவனுக்குக் கோபம் பொங்கி எழுகின்றது.

ஏன்டி என்னைத் தீண்ட வந்தாய் லேடி? நான்

ஏகிறேன் வனமதையே நாடி.

கணீரென்ற குரலில் பாய்கிறான் அவன். அவனுடைய சீற்றம் தாங்காமல் ஊர்வசி மறைந்து போகிறாள்.

இந்தப் பாட்டினை முருகேசு அண்ணாவியார் தான் இயற்றினாரோ அல்லது ஏதாவது மூலப் பிரதிகளிலிருந்து எடுத்தாரோ தெரியாது. அர்ச்சுனன் ஆங்கிலம் பேசுகிறான். ஆம்! தன் தவத்தைக் குழப்ப வந்தவளை Lady என்று ஆங்கிலத்தில் சீறுகிறான். நாடி என்று கீழ் வரியில் வந்த சந்த ஓசை நயம், லேடி என்று மேல் வரியில் இடம் பிடித்துக் கொண்டுள்ளது. அர்ச்சுனன் தபசு நாடகம் ஒரு தடவைதான் மேடையேறியது. அதற்கு மேல் அவர்களுக்கு நாடகமாட வசதி இல்லை. பணக் கஷ்டம். இந்த மேடையேற்றம் கூட ஏதாவதொரு நேர்த்திக்காக நடைபெற்றதல்ல.

இந்தக் கிராம மக்களுடைய, அரசு வழங்கும் தேவைகளைக் கவனித்து வருபவர் உடையார். இவர் தடித்த வேளாளர். நளச் சாதியினர் கையில் கொஞ்சம் காசு புரள, கொஞ்சம் துப்புரவான உடுப்புகள் அணிந்து பெண்கள் கொஞ்சம் நகை நட்டுகளுடன் நடமாடுவதைக் காணச் சகிக்காத அவர், கண்ணில் படும் ஆட்களிடம் 'நாடகம் பாக்க ஆசையாயிருக்கு, ஒரு நாடகம் போடுங்களேன்!' என்று பாசாங்கு பண்ணுவார். அப்படி நடந்தேறிய நாடகம்தான் இந்த அர்ச்சுனன் தபசு. நாடகத்துக்கு உடையார் அழைக்கப்பட்டிருந்தார். அவர் கபட நாடகமும் அரங்கேறியது. வராத்துப்பளை வெறும்கை நிலமானது.

இராசன் தும்பளைச் சிவப்பிரகாச வித்தியாசாலையில் ஏழாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தபோது ஒரு பெரும் விழா நடைபெற இருந்தது. பாடசாலைப் பத்தாண்டு பூர்த்தி விழாவோ

அல்லது வேறு ஏதோ கொண்டாட்டமோ என்பது நினைவில் இல்லை. கூட்டம் முடிவுற்ற பின்னர் நாடகம் நடைபெற்றது. ஏதோ ஒரு புராண நாடகம். அந்த நாடகத்தில் நாரதராக நடிக்க இராசனுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது. ஒரு மாதம் வரை நாடகம் பழக்கப்பட்டது. விழாவன்று மாலை நான்கு மணிக்கு முன்பே, இராசன் நாரதர் வேடம் தரிப்பதற்கு வேண்டிய பட்டு வேட்டி, தலைக்கணிய முடி மயிர், மற்றும் உருத்திராட்ச மாலை ஆகிய பொருட்களுடன் பாடசாலைக்குப் போனான். கூட்டம் முடிய நாடகம் நடைபெற்றது. நாடகத்தைப் பழக்கிய ஆசிரியர்கள், உரியவர்களுக்கான வேஷத்தைப் போட்டு நாடகம் நடைபெற்றது. இராசன் எதையும் பிரமாதமாகச் சாதிக்கவில்லை. மேடையில் நின்று வேளையில் பாடமாக்கிச் சொன்ன வசனங்களைச் சொல்லிவிட்டு இறங்கினான். இந்நாட்களில், தன்னுடைய பிள்ளை ஒரு நிகழ்ச்சியில் பங்கு பற்றினால், அதை பெற்றோர் உறவினர் என்று பலரும் அங்கு சென்று பார்த்து மகிழ்ந்து திரும்புவர். இராசன் தனியே போய் நடுச் சாமத்தில் உடுப்புப் பொதியுடன் நீண்ட பாதையூடாக வீட்டுக்கு வந்தான். அவனுக்கு நடிக்கத் தெரியாது. 'எனக்கு நடிக்க வராது' என்று பண்பாட்டு அழுத்தத்தோடு சொல்லுவான். நடிப்பு ஒரு சிறந்த கலை, மக்களுடைய மேம்பாட்டுக்கான கருத்துக்களை முன்னெடுக்க உதவும் உன்னதமான கலை என்பதை உணர்ந்துதான், பல மேதைகள் சிறந்த நாடகங்களை உருவாக்கியிருக்கிறார்கள். நடிகர்களும் அந்தப் பணியில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இந்தக் கருத்தின் அடிப்படையில்தான், ரவி, தன் கையில் கிடைத்த காந்தாமணி அல்லது தீண்டாமைக்குச் சாவு மணி என்ற நாவலை, நாடகமாக்கி அதை நெறிப்படுத்தி நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் கோவிலில், உடையாரின் பிரசன்னத்தில் மேடையேற்றினான். நாடகம் ஆடச் செய்து அவர்களைப் பிச்சைக்காரர்களாக்கும் உடையாரின் முகம் களிப்படைந்தது. இந்த நாடகத்தைப் பழக்கியவரும் முருகேசு அண்ணாவியார்தான். நாடகம் நடிப்பதில் திறமை இல்லாவிட்டாலும் ஒரு நாவலை நாடகமாக்கி சாதிக் கொடுமைக்கெதிரான நிகழ்வுகளை வெளிப்படுத்திய இந்நாடகத்தில் இராசனும் நடிக்க வேண்டும் என்று அனைவரும் விரும்பி நடிக்க வைத்தார்கள். முன் காந்தாமணி என்ற பாத்திரம். இரண்டு சீன்களில் தோன்றினான். அர்ச்சுனன் தபசில் நாரதர் வேடத்தில் தோன்றி, வசனங்களை ஒப்படைத்தது போல்தான். காந்தாமணியின் காதலனாக - காந்தாமணி பறையர் குலப் பெண். காதலன் பண்ணையாரின் மகன் - நடித்தவர் சந்தா

தோட்டத்தைச் சேர்ந்த கணபதிப் பிள்ளை என்ற வாலிபர். சூரன் என்பவருடைய மகன் இவர். அதனால் சூவன்னாக்கானா (சூ.க.) என்றே அனைவராலும் இவர் அழைக்கப்பட்டார். கானா என்றும் கூப்பிடுவார்கள்.

வேடிக்கை என்னவென்றால் துப்புரவாகப் பேசமாட்டார். கொன்னையர். "ற... ற... றவி... எ... எ... எப்படா வந்தனி?" என்றுதான் கேட்பார். ஆனால் நாடகத்தில் மிகவும் ஆர்வம். கட்டிறுக்கமான உடற்கட்டு, சமுக சேவையில் ஈடுபாடு. அர்ச்சுனன் தபசுக்கு ஊரிலே கொட்டகை போட்டது போல, காந்தாமணிக்கும் கொட்டகை போட்டு மூன்று மாதம் வரை பழகித்தான் நாடகம் மேடையேற்றப்பட்டது. நாடகத்தின் உள்ளடக்கம் தான் சிறப்பாயிருந்தது. வராத்துப்பளை வாலிபர்கள் காத்தவராயன் நாடகத்தையும் பழகி, பண்டாவத்தைப் பிள்ளையார் கோயிலுக் கணித்தாயுள்ள வெளியில் அரங்கேற்றினார்கள். அதுவும் வெற்றியளிக்கவில்லை. நாடகங்கள் பழகுவதற்கு தும்பளையிலிருந்து பெட்ரோமாக்ஸ் வாடகைக்கு எடுக்கப்படும். எப்படியும் இருபது தடவைக்குக் குறையாது கொடுக்கும் வாடகைப் பணத்துக்கு நிரந்தரமாக ஒரு பெட்ரோமாக்ஸையே விலைக்கு வாங்கி விடலாம். பரிதாபத்துக்குரிய மக்கள்.

மாவிட்டபுரக் கந்தசாமி கோவிலுக்குள் பக்தர்கள் உட்சென்று வணங்க விடாமல் பூட்டப்பட்டு, ஒரு கணித மேதையும் பாராளுமன்ற உறுப்பினருமான கொடியவனால் தடை செய்யப்பட, பக்தர்கள் சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போராட்டத்தில் பங்கு பற்றிய வேளையில், கந்தன் கருணை காட்டியதாக ஒரு கருப்பொருள் மனதில் உருவாயிற்று. அதுவே ஒரு நாடகமாக எழுதப்பட்டது. அந்த நாடகத்தை நெல்லியடி அம்பலத்தாடிகள் காத்தான் கூத்துப் பாணியில் வடிவமைத்து ஐந்துக்கு மேற்பட்ட இடங்களில் மேடையேற்றினார்கள். இளைய பத்மநாதன் இதன் இயக்குனராவார். நெல்லியடிச் சிவராசா முக்கிய பங்கேற்று நடித்தார். பின்னர், நாடகத்தை மோடிக் கூத்துப் பாணிக்கு மாற்றி பிரபல நாடகக் கலைஞர்களான கலாநிதி மௌனகுரு சி.தார் சீசியஸ், குழந்தை சண்முகம், பிரான்சிஸ் ஜனம் நடித்து யாழ் மாவட்டத்தில் இருபதுக்கு குறையாத இடங்களில் மேடையேற்றினர். பேராதனைப் பல்கலைக் கழகத்திலும், கொழும்பு சரஸ்வதி மண்டபத்திலும் மேடை யேற்றப்பட்டு அறிவு சார்ந்தோர் மத்தியிலும் பாராட்டப்பட்டது. சமகாலப் பிரச்சினையொன்றை முன்னெடுத்து அதனை மக்கள் மத்தியில் பரப்பியதன் மூலம், அந்தப்

பிரச்சினையை வென்றெடுக்கச் சகல மக்களையும் அணி திரட்டிய சிறப்பு இந்நாடகத்துக்குரியது.

'முற்போக்குக் கலைஞர்களின் சிறந்த நாடகங்களில் பொதுப்படையாகவும் கருத்து ரீதியாகவும் அலசப்படும் பிரச்சினைகள், கந்தன் கருணை என்ற இந்த நாடகத்தில் குறியீடுகளுக்குள் புகலிடம் தேடாமல், மிகத் துல்லியமாகவும், கூர்மையாகவும், அழுத்தமாகவும் சித்திரிக்கப்பட்டு நேரடியாகவே மக்கள் முன் வைக்கப்பட்டுள்ளது' என்று பேராசிரியர் கைலாசபதி இந்நாடகத்தைப் பற்றிக் கருத்து வெளியிட்டுள்ளார்.

## 17

அனுராதபுரத்தில் தொழில் பார்த்துக் கொண்டிருந்தபோது, கந்தப்பருக்கு வயிற்றில் ஏதோ வருத்தம் ஏற்பட்டுவிட்டது. கை வைத்தியம் செய்து பார்த்தார். பலன் கிடைக்கவில்லை. உடனே அவர் ஊருக்குத் திரும்பி விட்டார். அனுராதபுர ஆஸ்பத்திரியில் தங்கி வைத்தியம் செய்வித்திருக்கலாம். தன்னை உடன் இருந்து பராமரிக்க ஆள் இல்லை என்ற காரணமே அவரை ஊர் திரும்ப வைத்தது. ஊரிலும் இரண்டு இரண்டரை மைல் தூரத்தில் மந்திகை ஆஸ்பத்திரி இருந்தது. யாழ்ப்பாணத்தில் பெரியாஸ்பத்திரி இருந்தது. வைத்தியத்துக்கு இந்த ஆஸ்பத்திரிகளில் கட்டணமும் இல்லை. உடனிருந்து வேண்டிய உதவிகளைச் செய்ய இங்கெல்லாம் யாரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள். இதை மனதில் வைத்து, மனைவி வள்ளியம்மையையும் கூட்டிக் கொண்டு அவர் மானிப்பாய் ஆஸ்பத்திரிக்குப் போனார். வள்ளியம்மை இராசனையும் அழைத்துக் கொண்டு போனாள். இராசனுக்கு அப்போது ஏழு, எட்டு வயதிருக்கும்.

ஆஸ்பத்திரியில் தனி அறையில் தங்காமல் 20 நோயாளிகளைக் கொண்ட ஒரு வார்டில் தங்கி வைத்தியம் பார்த்தார். நோயாளியைப் பராமரிக்க வரும் ஓர் உறவினர் அங்கு தங்க முடியும். ஒரு சிறுவன் அவர்களுடன் வந்ததை ஒருவரும் பெரிதுபடுத்தவில்லை. ஆஸ்பத்திரியில் அவர்கள் சமைத்து உண்பதற்கான குசினி அறைகள் உண்டு. ஓர் அறையில் இரண்டு மூன்று பேர் ஆள் மாறி ஆள் மாறிச் சமைப்பார்கள். இரண்டு மூன்று பேர் சேர்ந்தும் சமைத்துச் சாப்பிடுவார்கள். வள்ளியம்மை கந்தப்பருக்கும் சேர்த்துச் சமையல் செய்து சாப்பிட்டார்கள். இரவில் கந்தப்பரின் கட்டிலுக்குப் பக்கத்தில் தாயும் மகனும் படுத்துறங்கினார்கள்.

இராசன் பொதுவாகவே சாதுவானவன். முரட்டுக் குணங்கள் எதுவும் கிடையாது. என்றாலும் எந்நேரமும் உற்சாகமாகக் காணப்படுவான். வார்டில் இரண்டு தாதிகள் பணியாற்றினார்கள்.

இராசனுடைய தந்தை இருந்த பக்கத்தில், சற்றே கருத்த மேனியும், மெல்லிய உடற்கட்டும் நீண்ட கூந்தலுமுடைய ஒரு பெண் பணியாற்றினாள். இராசனைக் காணும் போது கண்களால் பேசிச் சிரித்துவிட்டுப் போவாள்.

இந்நாட்களில், வைத்திய நிலையங்களில் ஏதாவது காயங்களுக்கு மருந்து கட்டும்போது முதலில் கட்டிய பன்டேஜ்ஜை அகற்றிக் குப்பைத் தொட்டிக்குள் போட்டு விட்டு, புதிய பன்டேஜ் கட்டுவார்கள். அந்த நாட்களில் அந்த வசதி இல்லை. அவிழ்த்த பன்டேஜ்ஜுகள், எவ்வளவு அழுக்காயிருந்த போதிலும் அவற்றைச் சேர்த்துச் சலவை செய்வித்து மீண்டும் உபயோகப்படுத்துவார்கள். சலவை செய்த பன்டேஜ்ஜுகள், சுருங்கிக் குமைந்து ஒன்று திரண்டிருக்கும். அவற்றைத் தாதிமார் ஓய்வான நேரங்களில் பிரித்துச் சுருளாகச் சுற்றி வைக்க வேண்டும்.

அந்தக் கறுப்பு நிறம் கொண்ட தாதியம்மாள் கீழே உட்கார்ந்திருந்து ஒரு நாள் அந்தப் பணியைச் செய்து கொண்டிருந்தபோது, சும்மா அங்கு மிங்கும் திரிந்து கொண்டிருந்த இராசனைக் கூப்பிட்டுத் தன்னோடிருந்து அந்தத் துணிகளைச் சுற்றும்படி கேட்டாள். இராசனும் மகிழ்ச்சியுடன் அந்தப் பணியைப் பல தடவைகள் செய்து கொடுத்தான். அந்தத் தாதி அக்காவின் மலர்ந்த முகமும், இனிய புன்முறுவலும், அவள் தன்னை அன்பாக நடத்திய சுபாவமும் அவன் மனதில் பதிந்து விட்டது.

கிறீன் மெமோறியல் ஹாஸ்பிட்டல் என்று அழைக்கப்படும் இந்த ஆஸ்பத்திரியை உருவாக்கியவர், சாமுவேல் பிஸ்ற் கிறீன் என்னும் அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டராவார். இவர் தனது 26 வயதிலேயே வைத்தியத் துறையோடு அறுவைச் சிகிச்சைப் பயிற்சியும் முடித்துக் கொண்டவர். அமெரிக்கன் மிஸன் என்ற திருச்சபையில் இணைந்து அர்ப்பணிப்புடன் இயங்கிய இவர் 1847இல் இலங்கை வந்து, 1848இல் மானிப்பாயில் முதலில், டிஸ்பென்ஸரி என அழைக்கப்படும் நாடி பார்த்து மருந்து கொடுக்கும் மருந்தகத்தை ஆரம்பித்தார். ஆரம்பித்த சில மாதங்களிலேயே அதனை விஸ்தரித்துப் படுக்கை வசதிகளுடன் கூடிய ஆஸ்பத்திரி ஆக்கினார். இங்கு பணியாற்ற அமெரிக்காவிலிருந்து வேறு பல டாக்டர்களும் வரவழைக்கப்பட்டனர். டாக்டர் கிறீன் உருவாக்கிய மானிப்பாய் ஆஸ்பத்திரி முதலில் என்ன பெயரால் அழைக்கப்பட்டதோ தெரியாது. அவர் இலங்கையை விட்டுப் போனதும், மானிப்பாயிலும் வேறு இடங்களிலும் பணிபுரிந்த

டாக்டர்கள் பலர், அமெரிக்க டாக்டர்கள் உள்பட - ஒன்றிணைந்து அவர் சேவையைக் கௌரவிக்கும் முகமாக கிறீன் மெமோறியல் ஹொஸ்பிட்டல் என்ற பெயரைச் சூட்டினர்.

பெரு மகிழ்ச்சிக்கும் ஆர்ச்சரியத்துக்குரிய சேதி என்னவென்றால் ஆஸ்பத்திரியை உருவாக்கிய அதே ஆண்டிலேயே உள்ளூர் இளைஞர்களை டாக்டர்களாக்குவதற்கு அந்த ஆஸ்பத்திரியிலேயே மருத்துவ போதனையும் நடாத்தினார். தமிழர்களை மட்டுமல்ல, தென்னிலங்கையிலுள்ள சிங்களவர்களையும் இந்த மருத்துவ போதனையில் ஈடுபடுத்தினார். இந்த மருத்துவப் பயிற்சி 1848இல் இருந்து 1883 வரை அதாவது 35 ஆண்டுகள் நடைபெற்றது.

டாக்டர் கிறீன் தமிழ் மொழியைத் திறம்படக் கற்று எட்டு மருத்துவ ஆய்வு நூல்களையும் நூற்றுக்குக் குறையாத கையேடுகளையும் தமிழில் எழுதி வெளிக்கொணர்ந்தார். இன்று யாழ் - போதனா வைத்திய சாலை என்ற பெயரில் இயங்கி வரும் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியையும் டாக்டர் கிறீன் அவர்களே ஆரம்பித்து வைத்தவர் ஆவார். அதுவும் டிஸ்பென்ஸரியாகவே தொடங்கப்பெற்று இயங்கி வந்த வேளை, மூன்றாண்டுகளின் பின் அரசாங்கம் அதனைப் பொறுப்பேற்று சகல வசதிகளையும் காலவோட்டத்தோடு விஸ்தரித்து சகல நோய்களுக்கும் வைத்தியம் நடைபெற்று வருகின்றது.

இங்கு முக்கியமான தகவல் ஒன்றையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. டாக்டர் கிறீன் இலங்கையில் கால் எடுத்து வைப்பதற்கு முன்னரே, நியூயோர்க் மருத்துவக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்ற டாக்டர் ஸ்குட்டர் என்பவர் 1820இல் இலங்கை வந்து பண்டத்தரிப்பில் ஒரு டிஸ்பென்ஸரியை நடத்திவிட்டு 1836இல் அவர் நாட்டை விட்டு வெளியேறியதும், டாக்டர் நாதன் வாட் என்னும் மற்றொரு டாக்டர் பண்டத்தரிப்பு டிஸ்பென்ஸரியுடன் வட்டுக்கோட்டையிலும் ஒரு டிஸ்பென்ஸரியைத் தொடங்கி, மாவட்டத்திலுள்ள சகல மக்களுக்கும் அவர்களது நோய்களுக்கு வைத்தியம் செய்து வந்தார். அவரும் சிறிது காலத்தில் இந்த டிஸ்பென்ஸரிகளை மூடி விட்டு அமெரிக்கா போய்ச் சேர்ந்தார். இவ்விரு டாக்டர்களும் அமெரிக்கன் மிஸனைச் சேர்ந்தவர்களே!

அமெரிக்கன் மிஸனரிமார் மருத்துவ சேவையைப் பல நாடுகளில் மேற்கொண்டாலும், அவர்களது சிறப்பான பங்களிப்பு கல்வித் துறையிலேயே விசாலம் கொண்டது.

வட்டுக்கோட்டையிலுள்ள பிரபலம் மிக்க யாழ்ப்பாணக் கல்லூரி, அமெரிக்கன் மிஸனயினராலேயே ஸ்தாபிக்கப்பட்டது. இன்னும் உடுவில் பெண்கள் கல்லூரி, உடுப்பிட்டியிலுள்ள அமெரிக்கன் மிஸன் ஆண்கள் கல்லூரி, அமெரிக்கன் மிஸன் பெண்கள் கல்லூரிகளும் அவர்களாலேயே ஆரம்பிக்கப்பட்டவை. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குள்ள விசேட சிறப்பு என்னவென்றால், சாதாரண வகுப்புகளுடன், பட்டம் பெறுவதற்கான வகுப்புகளும் நடத்தி பரீட்சையும் நடைபெறச் செய்வதாகும். இந்த வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, இன்று யாழ். பல்கலைக்கழகத்தின் மற்றொரு வளாகமாக இயங்கி வருகின்றது என்பது சிறப்புக்குரிய விடயமாகும்.

இவ்வேளை, மெதொடிஸ்த மிஸனரிமார் கல்விப் பணிக்கு மிகப் பெரிய அளவில் பங்காற்றியிருக்கிறார்கள். யாழ் மத்திய கல்லூரி, யாழ், வேம்படி மகளிர் கல்லூரி, சுண்டிக்குளி பரியோவான் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, மெதொடிஸ்த மிஸன் பெண்கள் கல்லூரி எனப் பல கல்லூரிகளை உருவாக்கினார்கள். ஆங்கிலம் கற்பதற்கான கல்லூரிகளை மட்டுமல்ல, கிராமம் கிராமமாக தமிழ்க் கலவன் பாடசாலைகளை அதிகளவு உருவாக்கினார்கள். ரவீந்திரனும் பசுபதியும் தமது ஆரம்பக் கல்வியைத் தமது கிராமத்துக்கருகிலுள்ள கற்கோவளம் மெதொடிஸ்த மிஸன் தமிழ்க் கலவன் பாடசாலையிலேயே பெற்றுக் கொண்டவர்கள் என்பது குறிப்பிட வேண்டியது. இவர்களுள் ரவி, தன் மேற்படிப்பைச் சிவப்பிரகாச வித்தியாசாலையில் மேற்கொள்ள, பசுபதி தன் மேற்படிப்பை தட்டாதெரு மெ.மி. பாடசாலையில் முடித்து இருவரும் தமது ஆசிரியப் பயிற்சியை நல்லூரில் இயங்கிவந்த கிறிஸ்தவ ஆசிரிய கலாசாலையில் பூர்த்தி செய்தனர். சாதித் தடிப்பு மிக்க ஆசிரிய கலாசாலைகளில் நுழைய முடியாது தவித்தவர்களை, கற்கோவளம் மெ.மி. பாடசாலையின் தலைமையாசிரியரான ஜே.பி.செல்வத்துரை அவர்கள்தான் கிறிஸ்தவ சமயத்துக்கு மாற்றி, நல்லூர் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற வழி வகுத்தவர் என்பதை வேளையில் தெரிவித்திருக்கிறேன்.

இந்த இரண்டு மிஸனரிமார் இங்கு வந்து கல்விப் பணி புரியத் தொடங்கிய சில காலத்திற்குப் பிறகு அங்கிலிக்கன் மிஸன் என்னும் திருச்சபையும் இங்கு கால் பதித்து தேவாலயங்களையும், பாடசாலைகளையும் உருவாக்கி சமயப் பணியாற்றி வருவதும் நம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியது.

அமெரிக்கன் மிஸன் வைத்தியத் துறைக்கும் கல்வித் துறைக்கும் ஆற்றிய பணிகள், மெதொடிஸ்த மிஸன், அங்கிலிக்கன் மிஸன் கல்வித் துறைக்கு ஆற்றிய பணிகள் பற்றியெல்லாம் அறிந்து கொண்டோம். இந்த மிஸனரிமார் 1800இன் ஆரம்பத்தில்தான் இலங்கை நாட்டில் கால் பதித்தார்கள். ஆனால் அதற்கு 200 ஆண்டுகளுக்கு முன்னரே நமது நாட்டில் காலூன்றி, கத்தோலிக்கர்கள், கல்விப் பணியினைப் பெருமளவில் மேற்கொள்ளத் தொடங்கி விட்டார்கள். கண்ணுக்கெட்டிய தூரமெல்லாம் கத்தோலிக்க தேவாலயங்களும், கத்தோலிக்கக் கல்லூரிகளும், கிராமப் பாடசாலைகளுமாகச் செறிந்து விட்டன. யாழ்ப்பாணத்தில் சம்பத்திரிசியார் தேவாலயம், சென் ஜேம்ஸ் தேவாலயம், கொஞ்சேஞ்சிமாதா கோவில், அடைக்கல மாதா கோவில், பாஷையூர் அந்தோனியார் கோவில், பருத்தித்துறை தொம்மையப்பர் கோவில், அந்தோனியார் கோவில், தும்பளை லூர்துமாதா கோவில் என வணக்கஸ்தலங்களும் யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி, கரவெட்டி திரு இருதயக் கல்லூரி, பெண் பிள்ளைகள் உயர் கல்வி கற்பதற்கான கன்னியர் மடங்கள் ஆகியவற்றுடன் கிராமத்துக்குக் கிராமம் கத்தோலிக்கப் பாடசாலைகளுமாக எங்கும் நிறைந்து காணப்படுகின்றன. சிங்கள மக்களின் புராதன சமயம் புத்த மதம், தமிழ் மக்களின் புராதன சமயம் இந்து மதம், இவ்விரு மதங்களுக்கும் அடுத்தபடியாக இலங்கையெங்கும் பரவியுள்ள மதம் கத்தோலிக்க மதமே என்பது யாவருமறிந்த விடயமாகும்.

உலகளாவிய ரீதியில் முஸ்லீம்கள் பரந்து வாழ்கிறார்கள். இலங்கையிலும் அவ்வாறே பரந்து வாழ்கின்றார்கள். யாழ்ப்பாணத்தில் வாழும் முஸ்லிம்கள் ஒரு பள்ளிவாசலை அமைத்து ஐந்து வேளையும் தவறாமல் தொழுகிறார்கள். ஒஸ்மானியாக் கல்லூரி என்னும் பெயரில் ஓர் ஆங்கிலப் பாடசாலையையும் நிறுவி, கல்விப் பணி புரிகின்றார்கள். பிள்ளைகள் தமிழர் நிர்வாகத்திலுள்ள பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் படிப்பார்கள். கொழும்பு மருதானையில் உள்ள ஸாஹிராக் கல்லூரி கம்பளையிலுள்ள ஸாஹிராக் கல்லூரி ஆகியவை பிரபலம் வாய்ந்த முஸ்லிம் கல்லூரிகளாகும்.

எல்லா நாடுகளிலும் வாழுகின்ற முஸ்லிம்கள் அந்தந்த நாடுகளின் மொழிகளைத் தமது முதன் மொழியாகக் கொண்டு வாழ்கின்றார்கள். எனினும் அரபு மொழியில்தான் தமது தெய்வமான அல்லாஹ்வைத் தொழுகின்றார்கள்.

## 18

இராசன் ஏழாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த வேளையில் வள்ளியம்மைக்கு ஒரு பாரிய வயிற்று வலி ஏற்பட்டது. இரவு பகல் என்றில்லாமல் வரும். குடலைப் பிடுங்குவது போல் வலி ஏற்படும். இலேசாக குடலில் எரிவு ஏற்பட்டுப் பயங்கரமாகக் குத்தத் தொடங்கும். வள்ளியம்மை பக்கவாட்டில் படுத்துக் கிடந்து, முழங்கால்களை வளைத்து வயிற்றோடிணைத்து, "ஐயோ...! ஐயோ...!" என்று பயங்கரமாக அலறுவாள். கை வைத்தியம் பார்த்து, ஊர்ப்பரியாரிமார் வைத்தியம் பார்த்து ஒன்றுக்கும் அடங்கவில்லை. கடைசியாக, முருங்கையிலையை அவித்து, அந்தத் தண்ணீரைக் குடிக்கக் கொடுத்தால் இரண்டு மூன்று நிமிடங்களில் அடங்கி விடும். ஆனால் பூரணமாக அதைக் குணப்படுத்த முடியவில்லை.

திடீரென்று வயிற்றுக்குத்து வரும் "ஐயோ... ஐயோ... கடவுளே!" என்று அவள் கதறத் தொடங்குவாள். உடனே வீட்டிலிருப்போர் முருங்கை இலை பிடுங்கி அவித்துக் கொடுப்பார்கள். நடுச் சாமத்திலும் வரும். வள்ளியம்மை குழறத் தொடங்குவதுதான் தாமதம்; இளைய மகள் தங்கம், கை விளக்கைக் கொளுத்திக் கொண்டு குசினிக்குள் ஓடி, அடுப்பைப் பற்ற வைத்து ஒரு சட்டியில் கொஞ்சம் தண்ணீர் ஊற்றி அதை எரித்துக் கொண்டிருக்க, கந்தப்பரும் இராசனும் அரிக்கன் லாம்பைப் பற்ற வைத்து, கொக்கைத் தடியுடன் முருங்கை மரத்தடிக்கு ஓடுவார்கள். வீட்டு வேலியிலும் ஒரு முருங்கை இருந்தது. கிணற்றடிக்குப் பக்கமாகவும் ஒரு முருங்கை இருந்தது. வீட்டு வேலியில் நிற்கும் முருங்கையில் இலை பிடுங்கித் தீர்ந்து விட்டால், கிணற்றடிக்கு ஓடிப் போய், இராசன் லாம்பைத் தூக்கிப் பிடிக்க, அந்த வெளிச்சத்தில் கந்தப்பர் நாலைந்து குளைக் காம்புகளைப் பிடுங்கிக் கொண்டு ஓடி வந்து, அடுப்பில் இருக்கும் சட்டியில் உருவிப் போட்டு அவிய விடுவார்கள். வேளையில் தண்ணீர் கொதித்துக் கொண்டிருப்பதால், விரைவில் பானம் தயாராகி விடும். இரு பாத்திரங்களில் மாற்றி மாற்றி ஊற்றி ஆறப் பண்ணி வள்ளியிடம் கொடுப்பார்கள்.

அவள் கஷ்டப்பட்டு எழும்பி அதைக் குடிப்பாள். ஒரு இரண்டு நிமிஷத்தில் எல்லாம் சரியாய்ப் போய்விடும். ஆனால் நிரந்தரத் தீர்வு இல்லையே! எவ்வளவு காலம் தான் இப்படி அவலப்படுவது? அவசர முதலுதவியாக, அடுப்பங்கரையில் விரைவில் எரியக் கூடிய பன்னாடை, கொக்காரைகளை எடுத்து வைக்க வேண்டும். உடனே எடுக்கக் கூடிய இடத்தில் கொக்கைத் தடியையும் பத்திரப்படுத்தி வைக்க வேண்டும். இரண்டுக்கும் முதல் தேவையான விளக்குகளும் கைக்கெட்டிய தூரத்தில் வைக்கப்பட்டிருக்க வேண்டும். தீப்பெட்டி உட்பட.

ஒருநாள் இரவு வள்ளியம்மைக்கு வயிற்று வலி வந்து உபத்திரவப்படுத்த எல்லோரும் எழுந்து பரிகாரம் செய்து, வலி அடங்கியதும் படுத்துறங்கி விட்டார்கள். வள்ளியம்மைக்கு உறக்கம் வரவில்லை. படுத்துக் கிடந்த படியே இந்தக் கொடிய நோய் தன்னைவிட்டு போகுதில்லையே. இதை இல்லாமற் செய்வதற்கு என்ன வழி? என்று யோசித்துக் கொண்டிருந்தாள்.

தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோவில் கந்த சஷ்டி கவசம் இன்னும் பத்துப் பன்னிரண்டு நாட்களில் தொடங்கவிருந்தது. வள்ளியம்மை, வருடந்தோறும் சந்நிதி கோவில் தீர்த்தத்துக்குச் சென்று கந்தனை வணங்கி வருவாள். இந்த ஆண்டும் போவதற்கு அவள் திட்டமிட்டிருந்தாள். அன்றிரவு ஏற்பட்ட வயிற்று வலியால் பெரும் வேதனைப்பட்டு, அது மாறியதும் கடுமையாக யோசித்துக் கொண்டிருந்தவள், இம்முறை வேளையோடு கோயிலுக்குப் போய் விரதம் அனுஷ்டிக்க வேண்டுமென்று முடிவு செய்தாள். விடிந்ததும் கணவன் கந்தப்பரைக் கூப்பிட்டு அதைச் சொன்னாள். கந்தப்பருக்கு இஷ்டமில்லை. வீட்டு வேலைகளைச் செய்வது யார்? என்ற கேள்வி எழுந்தாலும், வள்ளியம்மை படும் வேதனைகளை அவர் மனதில் எண்ணிக் கொண்டார். அதனால் முகம் சுளிக்காமல் 'ஓ! நீ சன்னதிக்குப் போய் விரதமிருந்திட்டு வா!' என்று விடை கொடுத்தார். வள்ளி இல்லையென்றால் கடைக்குப் போய் சமையலுக்குத் தேவையான சாமான்கள் வாங்குவது யார்? சின்ன மகள் சமையல் வேலை செய்வாள். சாமான் வேணுமே? கந்தப்பரின் மூத்த மகள் தங்கம் கலியாணம் முடித்து றோட்டுக்கு அந்தப்பக்கம் தனி வீட்டில் வாழ்கிறாள். அவளிடம் சொல்லி வாங்கலாம் என்று முடிவு செய்தார்.

வள்ளியம்மை கோயில் கொடியேற்றத்துக்கு முதல் நாளே அங்கு போய்ச் சேர்ந்து விட்டாள். இராசனையும் கூட்டிக் கொண்டு தான்

போனாள். பின்னேரம் நாலு மணியளவில் புறப்பட்டு எட்டு மைல் தூரத்தையும் நடந்து ஆறு மணியளவில் கோயிலை அடைந்து விட்டாள். கோயிலுக்குக் கிழக்குப் பக்கமாக ஐந்தாறு மடங்கள் இருந்தன. அவற்றுள் ஒரு மடம் எளியஞ் சாதி மக்களுக்காக அமைக்கப்பட்டது. நளவர், பள்ளர், பறையர் குலத்தைச் சேர்ந்த பக்தர்கள் அங்கு வந்து தங்கிப் போவார்கள். ஆலய பரிபாலன சபைதான் அவற்றை அமைத்தன. ஒவ்வொரு மடத்தினையும் கவனித்துக் கொள்வதற்கு அங்கு ஒரு பொறுப்பாளர் இருப்பார். நான்கு பக்கங்களுக்கும் சுவர் வைத்து அமைக்கப்பட்ட மடங்களின் ஒரு மூலையில் ஒரு சின்ன அறை மட்டும் இருக்கும். அது, பொறுப்பாளர் தனது பொருள் பண்டங்களை வைக்கவும் இரவில் தூங்கவும் ஆகும். அங்கு வரும் பக்தர்கள் - குறிப்பாக விரதமிருக்க வருபவர்கள் சுவர் ஓரங்களிலோ அல்லது நடுவில் உள்ள தூண்களுக்கருகிலோ தங்கள் பொருட்களை வைத்துக் கொள்வார்கள். இரவில் ஆண்கள் ஒரு பக்கமாகவும், பெண்கள் ஒரு பக்கமாகவும் நிரை நிரையாகப் படுத்துறங்குவார்கள்.

விடிந்ததும் தலை முழுகி விட்டு வள்ளி இராசனையும் கூட்டிக் கொண்டு கோயிலுக்குப் போனாள். கும்பாபிஷேகம் நடந்து முடிந்ததும் கொடியேற்றி வைத்தார்கள். வெளி மண்டபத்தில் எளியஞ்சாதிப் பக்தர்களோடு தானும் ஒருத்தியாக நின்று அவள் முருகப் பெருமானை மிகுந்த பக்தியோடு கும்பிட்டு விட்டு மடத்துக்குத் திரும்பினாள். பின் சமைத்து வைத்துவிட்டு, மத்தியானம் இராசனையும் அழைத்துக் கொண்டு மீண்டும் கோயிலுக்குப் போனாள். விரதம் ஆரம்பித்து விட்டது. மத்தியானம் பூசை கண்டுதான் விரதம் கழிக்க வேண்டும். கோயில் வாசலிலிருந்து பிரகாரத்தைச் சுவாமி வலம் வரும்போது பக்தர்களும் 'முருகா, முருகா' என்று அவன் திருநாமம் உச்சரித்தபடியே வலம் வருவார்கள். பூசை முடிந்த பின்னர் தமது மடங்களுக்குப் போய் உணவருந்துவார்கள். வள்ளி மதியப் பூசைக்கு இராசனையும் அழைத்துப் போய் பிரகாரத்தைச் சுற்றி வணங்கி விட்டு வந்துதான் விரதத்தை முறிப்பாள். மாலைப் பூசைக்கும் கோயிலுக்குப் போவாள். மடத்திலிருந்துதான் என்ன செய்வது?

மடத்துக்குப் பின்பக்கமாக கிழக்குத் திசையில் ஒரு கூப்பிடு தூரத்தில் பெரிய மரக்கறித் தோட்டங்கள் இருந்தன. காலை வேளைகளில் சமையல் வேலை செய்பவர்கள், அங்கு போய் மரக்கறி வாங்கி வருவார்கள். வள்ளியும் போவாள். இரண்டொரு மரக்கறிகளுடன் மறக்காமல் கீரையும் வாங்கி வந்து, அந்தக்

கீரையில் பெரும் பகுதியைத் தானே உண்பாள். கோயிலுக்கு வரும் போது தனது கொடிய வலி, இங்கும் வந்து தன்னைப் பழிவாங்கி விடுமோ? என்ற பயத்தினால் வந்தவுடனே, இராசனுடன் சேர்ந்து மடத்துக் கிணற்றடியில் ஒரு முருங்கை மரத்தை அடையாளம் கண்டு வைத்திருந்தார்கள். நல்லபடியாக ஓடிப் போய் அதில் இலை பிடுங்க வேண்டிய தேவை ஏற்பட்டதில்லை.

பொறுப்புணர்வுடனும் பக்தியுடனும் பத்து நாட்கள் விரதமிருந்து தீர்த்தத் திருவிழாவும் முடிந்து, அவளும் இராசனும் பஸ்ஸிலே வீடு திரும்பினார்கள். கோயிலில் இருந்தபோது ஒரு நாள் மதிய வேளை கந்தப்பர் கோவிலுக்கு வந்து மனையாட்டியையும் மகனையும் பார்த்து கொஞ்சம் காசும் கொடுத்துப் போனார். விரதம் அனுஷ்டித்ததோடு வள்ளியம்மையை வாட்டி வதைத்த வயிற்றுக் குத்து விடைபெற்றுப் போயிற்று. இதற்கு மூலகாரணம் கந்தன் கருணையா? அத்துடன் இந்தக் கருணையைப் பெற அவள் பட்டபாடுகளா? அத்துடன் விரதத்துக்கான உணவு வகைகளா?

தினமும் சந்நிதியானின் விசாலமான அக்கிரகாரத்தை ஒரு தடவை அல்லது இரு தடவை சுற்றி வர வேண்டும். கைகளிரண்டையும் மேலே தூக்கி அவனைக் கும்பிட வேண்டும். நெஞ்சோடு இணைத்துக் கும்பிட வேண்டும். மரக்கறி வாங்க, அரை மைல் தூரத்துக்குப் போய் வரவேண்டும். நடை, நடை, நடை! இவற்றுடன் கையசைப்பு, நல்ல தேகப் பயிற்சி. இவற்றுக்கு அனுசரணையாக குடலிலுள்ள சுரப்பிகளுக்கு வர்மம் உண்டாக்காத சைவ உணவு. கீரை மான்மியம். வீட்டுக்கு வந்ததும் வாரம் ஒரு தடவை, வெள்ளிக்கிழமைகளில் விரதமிருந்து மத்தியானம் மரக்கறியுடனேயே அவள் சாப்பிட்டு வந்தாள். வயிற்றுக் குத்துப் பறந்தோடிப் போயிற்று என்றாலும் வள்ளியம்மை தொடர்ந்தும் சந்நிதிக்குப் போய் விரதம் அனுஷ்டிக்க விரும்பவில்லை. தூரம் ஒரு காரணம். மற்றது மடத்தில் தங்கியிருந்து சமையல் காரியங்களைச் செய்வதில் உள்ள சிரமங்கள். இந்த நிலையில் கையில் விரிந்திருந்த ஒரு வரம் அவள் கண்களில் சுடர் பரப்பியது.

மாதனை கண்ணகி அம்மன் கோவில் விரதம்தான் அந்தச் சுடர். வைகாசி மாதங்களில் அங்கு விரதம் நடைபெறுவது வழக்கம். வள்ளியம்மை சந்நிதி முருகன் விரதத்தைத் தொடர்ந்து கண்ணகி அம்மன் விரதத்தை ஆண்டுதோறும் அனுஷ்டித்து வந்தாள். மத்தியானம் ஒரு மைல் தூரத்திலுள்ள கோயிலுக்குப் போய் அம்மனை வலம் வந்து வணங்கிவிட்டுத்தான் சாப்பிடுவாள்.

சைவச் சாப்பாடுதான். இந்த வயிற்றுக்குத்து இல்லாதொழிந்ததும், அவளுக்குப் பாரதூரமான வருத்தங்கள் எதுவும் வரவில்லை. நல்ல சுகதேகியாக இருந்து, வீட்டு வேலைகளை எல்லாம் செய்தாள். சந்நிதியானிடம் போய் அவள் தவமிருந்த போது அவளுக்கு நாற்பத்தைந்து வயதிருக்கும். அதற்குப் பின்னர் இருபது ஆண்டுகள் வரை நலமாக வாழ்ந்து, தனது பிள்ளைகள், பேரப் பிள்ளைகளையெல்லாம் வளர்த்தெடுத்து, அறுபத்தைந்தாம் வயதில் எவ்வித பிரச்சினையுமில்லாமல் இயற்கையெய்தினாள்.

வடபுலத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த கொடூரமான சாதி ஒடுக்கு முறைகளுக்கெதிராக சகல தாழ்த்தப்பட்ட மக்களையும் ஒன்றிணைத்து சிறுபான்மைத் தமிழர் மகாசபை என்ற அமைப்பை உருவாக்கி, தோழர் எம்.சி.சுப்பிரமணியம் போராடி வந்தார். ஆலயப் பிரவேசப் போராட்டமே மகாசபையின் போராட்டங்களில் முதலாயமைந்தது. பல வருடப் போராட்டத்தின் பலனாக முதன் முதல் திறக்கப்பட்ட ஆலயம் செல்வச் சந்நிதி ஆலயமாகும். அதனைத் தொடர்ந்தே சின்னச் சின்னக் கோயில்கள் திறக்கப்பட்டன.

இவ்வரிசையில் மாதனை கண்ணகையம்மன் கோவிலையும் சேர்த்துக் கொள்ளலாம். இவ்வாலயங்கள் திறக்கப்பட்டுச் சில வருடங்களின் பின் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் பலம் மிக்க போராட்டத்தின் காரணமாக சகல ஆலயங்களும் திறந்து விடப்பட்டன. தீண்டாமை ஒழிப்பு வெகு ஜன இயக்கம், சீனச் சார்புக் கட்சியின் வழி நடத்தலில் இப்போராட்டத்தை நடத்தி வெற்றியீட்டியது.

கண்ணகை அம்மன் கோயில் கொல்லருக்கு - இரும்புத் தொழில் செய்வோருக்கு உரிமையானது. அவர்கள் கடும்பிடி பிடிக்காததற்கு அதுவும் ஒரு காரணமாயமையலாம். மனிதர்கள் தங்கள் பக்திக்கேற்ப தாங்கள் வாழும் பகுதிகளில் கோயில்களை உருவாக்கி வழிபாடு செய்வார்கள். சிறிய ஊராக இருந்தால் தாங்களே பூசாரிகளாக இருப்பார்கள். பூசாரிமாரைப் பொதுவாக பக்தர்கள், ஐயா என்றே அழைப்பார்கள். காலப் போக்கில் அவர்கள் ஐயர்மாராகி விடுவார்கள். அதேவேளை பெரிய கோயில்களில் பிராமணர்களே பூசாரிகளாயிருப்பார்கள். அவர்கள் குருக்கள் என அழைக்கப்படுவார்கள். நல்லூர் கந்தசாமி கோயில், மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் எனப் பல பெரிய கோயில்களில் இந்தக் குருக்கள்மாரே பூஜை வழிபாடுகளைச் செய்கின்றனர். ஆனால்

செல்வச் சந்நிதி முருகன் கோயிலில் அதன் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை பூசாரி பரம்பரையே பூஜை செய்து வருகின்றது.

புலம் பெயர்ந்த நாடுகளில் சைவக் கோயில்கள் ஏராளம்... ஏராளம்... யாழ்ப்பாண மண்ணில் எழுந்தருளியிருக்கும் பெருங்கோயில்கள் எல்லாவற்றினதும் பெயரில் கோவில்கள், கோவில்கள். அங்குள்ள கோயில்கள் எல்லாவற்றிலும் அந்தணர்களே பூஜை புனஸ்காரம் செய்கின்றார்கள். அனைவரும் ஈழத்திலிருந்து வந்தவர்களே. ஒரு வியாபார நிலையத்தை முதலில் வாடகைக்கு எடுத்து ஒரு கோயிலை உருவாக்குவது அங்குள்ள தமிழ் மக்களுக்குத் தங்கள் துன்ப துயரங்களை கஷ்ட நஷ்டங்களைப் போக்க தெய்வம் வேண்டுமே! அதனால் அவர்களும் ஒழுங்காகப் போகின்றார்கள். காணிக்கை செலுத்தி வணங்குகிறார்கள். வெளிநாடுகளில் - புலம் பெயர்ந்த நாடுகளில் உள்ள ஆலயங்களில் வருமானம் ஏராளம். ஒரு புலம் பெயர்ந்த மனிதன் தானும் தன் மனைவியுமாக இரவும் பகலும் உழைத்துத்தான் குடும்பத்தை ஓட்ட வேண்டும். ஆனால் கோயிலை மூலதனமாகக் கொண்டிருக்கும் குருக்கள்மார் அங்கிங்கென அலையாது நிறையச் சம்பாதிக்கிறார்கள். நிறையப் பணம் சேர்ந்ததும் விசாலமான காணிகளை வாங்கி, கோயில்களை அமைக்கிறார்கள். கோயில்களில் குடியிருக்கும் தெய்வங்கள் அவர்களைக் கைதூக்கி விடுகின்றன. குருக்கள்மார் வசதியான வீடுகளை அமைத்து வாழ்ந்து வருகின்றார்கள்.

சந்நிதி கோயில் விரதம் இருப்பதற்கு முன் அந்தத் தீர்த்தத் திருவிழாவுக்கு ஆண்டுதோறும் வள்ளியம்மை போய் வருவாள் என்பதை முன்பு அறிந்திருந்தோம். இராசன் ஒன்றரை வயதுக் குழந்தையாயிருந்த போதும் அவனைத் தூக்கிக் கொண்டு போயிருந்தாள். கோவிலின் நாலாபக்கமும் பக்தர் கூட்டம். வள்ளியும் அவள் உறவினர்களும் கோயிலின் தென்பக்கமுள்ள ஆலமரங்களின் கீழ் திரண்டு நின்ற பக்தர்களோடு கலந்திருந்தனர். காவடி, கரகம், கற்பூரச் சட்டி என்றும் அங்கப்பிரதட்சணம் என்றும் பக்தர்கள் நேர்த்திக் கடன் செலுத்துவதை எல்லோரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். குழந்தையும் பார்த்துக் கொண்டிருந்தது. வள்ளியம்மை அவனைத் தூக்கித் தன் இடையில் இருத்தி அணைத்துப் பிடித்துக் கொள்ள, அருகில் நின்ற மாணிக்கத்தார் கிட்ட வந்து ஓர் ஊசியால் அவன் வலது காதைப் பிடித்துக் குத்தி உடனேயே தோடு போட்டார். இராசன் வலி தாங்காமல் அழத் தொடங்கினான். என்றாலும் தாய்க்காரி அவனை மேலும் அழுத்தமாக அணைக்க மாணிக்கத்தார் மற்றக் காதையும் குத்தித்

தோடு போட்டார். வலியோடு இணைந்த காரியமாதலால், ஒன்றரை வயதில் நடந்த இந்த நிகழ்வு ரவிக்கு இன்னும் மனதை விட்டகலாதிருக்கின்றது.

பெண் பிள்ளைகள் நகைகள் அணிய வேண்டிய கட்டாயம் இருப்பதால் அவர்களுக்குக் கட்டாயம் காது குத்தித் தோடு போடுவார்கள். ஆனால், அக்காலத்தில் ஆண் பிள்ளைகளுக்கும் காது குத்தித் தோடு போடப்பட்டது. ரவீந்திரன் சிவப்பிரகாச வித்தியா சாலையில் படிக்கும்போது மற்ற மாணவர்கள் தோடு போடவில்லை. இவன் மட்டும் தோடு போட்டிருந்தான். அதனால் அவர்கள் இவனை அடிக்கடி கிண்டல் பண்ணிக் கொண்டிருந்தார்கள். இதன் காரணமாக ஒரு நாள் பாடசாலையிலிருந்து திரும்பியதும் தோட்டைக் கழற்றித் தாயின் கையில் கொடுத்து விட்டான்.

வேளையில் இரண்டொரு நாள்கள் அவன் தாயிடம் "ஏன் எனக்குக் காது குத்தித் தோடு போட்டீங்க" என்று கேட்டதற்கு அவள், "காது குத்துவதனால் சில வருத்தங்கள் வராமல் போய் விடும்" என்று சொல்லுவாள். அவள் தெரிந்து சொல்வாளோ, சும்மா சொல்வாளோ தெரியாது. ஆனால் வைத்தியத் துறையினரிடம் அப்படியான ஒரு நம்பிக்கையும் இருக்கிறது.

இராசன் கூச்சப்பட்டுத் தன் தோடுகளைக் கழற்றி எறிந்தான். ஆனால் இன்று...? சலக நாடுகளிலுமுள்ள இளைஞர் கூட்டம் காதுகுத்தி தோடுகள், வளையங்கள் என்று அலங்கரித்துத் திரிகின்றார்கள். நாம் பிறந்த மண்ணிலும்தான்!

## 19

**யா**ழ். நகரிலுள்ள ஒரு கத்தோலிக்கப் பாடசாலையில் ரவி மூன்று அதிபர்களின் கீழ் பணியாற்றினான். முதல் இரு அதிபர்களும் அவனிடத்திருந்த நற்பண்புகளையும் செயல் திறத்தையும் இனம் கண்டு அலுவலகப் பணிகளில் ஈடுபடுத்தினர். மூன்றாவது அதிபர் ஒரு லஞ்சப் பிசாசு. குறுக்கு வழிகளில் பணம் சேர்ப்பதற்கு பாடசாலை நிர்வாகத்தை - விசேடமாக புதிய மாணவர் அனுமதியைப் பயன்படுத்திக் கொண்டார். முன்னைய அதிபர்கள் தியாக மனப்பான்மையோடு, கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபட்டதனால், பாடசாலை, அருகில் உள்ளவர்களிடம் மட்டுமில்லாமல் சிறிய தூரத்தில் உள்ளவர்களிடமும் பெரும் மதிப்பை ஏற்படுத்தியிருந்தது. அதனால் பெற்றோர் தம் பிள்ளைகளின் அனுமதிக்காகப் பாடசாலையை முற்றுகையிட்டனர்.

பாடசாலைக்கு அனுமதி கோரி வரும் பெற்றோரிடம் இந்த அதிபர் திலகம், "ஐயையோ! இடம் முழுவதும் நிரம்பி விட்டது. ஒருக்கால் தளவாட நிலைமை, வகுப்பாசிரியரின் நிலவரம் போன்ற விடயங்களைப் பரிசீலனை செய்து விட்டுத்தான் அதையிட்டு முடிவு செய்ய முடியும்... எதற்கும் ஒருக்கால் வீட்டுக்கு வாருங்கோ... யோசித்து முடிவு செய்வோம்..." என்று தழுக்காகப் பேசி அனுப்பி விடுவார்.

பெற்றோர் வீட்டுக்குச் செல்வார்கள். அங்கு அவர் மிகவும் சாதுரியமாகப் பேசி "ஒரு பிள்ளைக்கு மட்டும் இடமுண்டு!" என்று நாசுக்காகச் சொல்லி, நன்கொடைத் தொகையைக் கூறி விடுவார். அத்தொகை செலுத்தப்பட்டு பிள்ளை சேர்க்கப்பட்டு விடும். அரை வாசித் தொகையைத் தன் பொக்கற்றுக்குள் போட்டு விட்டு மிகுதித் தொகையைப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திடம் கொடுத்து விடுவார்.

ரவிதான் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர், அதிபரின் லஞ்ச ஊழல் மோசடிகளை அறிந்து கொள்வதால் ரவிக்கு அதிபரின்

கேடுகெட்ட செயல்களும், தந்திரங்களும் மனதில் ஒரு வெறுப்பை ஏற்படுத்தியது. அவன் நெஞ்சிலிருந்து ஒளி பாய்ச்சும் சத்திய விளக்கு, அதிபரின் துர்நடத்தைக்குப் பெரும் அச்சுறுத்தலாய் இருந்தது.

இதனால் அவர் ரவியை அப்புறப்படுத்த வேண்டுமென்று திடசங்கற்பம் பூண்டு, கல்விப் பணிமனையில் முக்கிய அதிகாரிகளைச் சந்தித்து, முதலில் ரவியின் சாதியைச் சொல்லி, தொடர்ந்து, "நான் பாடசாலையை நடத்துவதற்கு அவன் பல வழிகளில் தடையாயிருக்கிறான். அதனால் அவனை வேறு பாடசாலைக்கு இடமாற்றம் செய்யும்படி" பணிவாகக் கேட்கத் தொடங்கினான். அங்கு பணியாற்றுபவர்களும் சாதித் தடிப்புப் பிடித்தவர்களாதலால் இந்தப் பணி சுலபமாய் அமைந்தது. ரவி, வேளையிலேயே பதுளையில் சில ஆண்டுகளும், கொழும்பில் பத்து ஆண்டுகளுக்கு மேலாகவும் பணியாற்றியவன். அப்படிப்பட்டவனுக்கு அடிக்கடி இடமாற்றம் வந்து கொண்டிருக்கிறது. முதலில் அவன் புங்குடு தீவுக்கு மாற்றப்பட்டான். ரவி பிற இடங்களில் பணியாற்றியதை எடுத்துக்காட்டி அதை ரத்துச் செய்வித்தான். பின்னர் கிளிநொச்சிக்கு இடமாற்றம். அதுவும் ரத்துச் செய்யப்பட்டது. அடுத்து அதிக தூரமில்லாத இடமாகப் பார்த்து உடுப்பிட்டிக்கு மாற்றம் வந்தது. ரவி தன் வல்லமையினால் அதையும் ரத்துச் செய்து விட்டான்.

அதிபர் பாடு பெரும் சங்கடமாய் விட்டது. "தூர இடங்களுக்கு அனுப்பினால் அதை ரத்துச் செய்து விடுகிறான். இதனால் அருகில் உள்ள ஒரு பாடசாலைக்கு அனுப்பினால் எந்தக் காரணத்தையும் ரவியால் முன் வைக்க முடியாது" என்று அதிபரும் கல்விக் கந்தோர் அதிகாரியும் முடிவு செய்து இறுதியாக யாழ் மத்திய கல்லூரிக்கு இடமாற்றம் செய்தனர். ரவி படிப்பித்துக் கொண்டிருந்த பாடசாலையிலிருந்து ஒரு கூப்பிடு தூரம்தான் தொலைவு. இது ஒரு சாதாரண பாடசாலை. அது ஒரு பிரபலம் வாய்ந்த கல்லூரி.

ரவிக்கு மனதில் சந்தோஷமாயிருந்தது. என்றாலும் ஒரு தாழ்வுச் சிக்கல் அவன் மனதை உறுத்தியது. "நான் ஒரு தமிழாசிரியர். எம்.ஏ., பி.ஏ.க்கள், விஞ்ஞானப் பட்டதாரிகள், கலாநிதிகள் படிப்பிக்கிற கல்லூரிக்குப் போய் ஒரு மூலையில் பதுங்கிக் கொண்டிருக்க வேண்டியதுதான்..." என்று அவன் மனது ஆதங்கப்பட்டது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக தான் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவன் என்ற எண்ணமும் மனதில் சிறிதளவு அச்சுறுத்தலை ஏற்படுத்தியது.

அவன் கல்லூரிக்குப் போனான். அதிபர் அவனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "அங்கே போய் ஆசிரியர் அறையில் இருங்கள். ரைம் ரேபிள் வசதி கிடைத்ததும், வகுப்புகளுக்குப் போகலாம்" என்று சொன்னார். ரவி ஒரு நாள் ஸ்ராவ் ரூமில் இருந்தான். மத்திய கல்லூரி நூல் நிலையப் பொறுப்பாளர் கா. மாணிக்கவாசகர் வேளையில் ரவியுடன் தொடர்பு கொண்டவர். இதன் காரணமாக ரவி, நூல் நிலையத்தில் தன் பொழுதைக் கழிக்கத் தொடங்கினான். செய்திப் பத்திரிகைகளுடன் நூல்களையும் வாசித்துப் பொழுதைப் போக்கினான். அங்கிருந்து இலக்கியம் தொடர்பான ஆக்கங்களையும் உருவாக்கினான்.

அதிபர் சண்முகநாதன் உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அவருடைய மைத்துனர் - மனைவியின் தம்பி - செல்வராசாவும் ஓர் ஆசிரியர். அவர், ரவி படிப்பித்த சென்மேரிஸ் பாடசாலையிலேயே படிப்பித்துக் கொண்டிருந்தார். உரும்பிராயிலிருந்து சொந்த வாகனத்தில் வருவார். மைத்துனர் சண்முக நாதனையும் அழைத்து வந்து மத்திய கல்லூரியில் இறக்கி விட்டு வருவார். மாலையில் அவரை ஏற்றிச் செல்வார்.

செல்வராசாவும் தூய சிந்தையோடு படிப்பித்தல் பணியாற்றுபவரல்லர். அத்துடன் இயல்பான சாதித் தடிப்பு இருந்ததால், பாடசாலையில் ரவிக்கு எதிராகவே தொழிற்பட்டார். அவருடைய ஆலோசனையின் பேரிலேயே ரவிக்கு மத்திய கல்லூரிக்கு இடமாற்றம் நடைபெற்றது. ரவியைப் பற்றி மைத்துனர் செல்வராசாவிடம் சண்முகநாதன் விசாரித்திருக்க வேண்டும். 'சென்மேரிஸ் அதிபருடன், ரவி சண்டை பிடித்தவன்தான். கொஞ்சம் பிரச்சினைக்குரியவன் தான்' என்று சொல்லியிருக்கக் கூடும். அதன் காரணமாகத் தான் ரவிக்கு நேர சூசி கொடுக்காமல் இழுத்தடித்துக் கொண்டிருந்தார். அந்தக் கால இடைவெளியில் அவனை நோட்டம் விட்டார்.

ரவி ஆசிரியர்களுடன் மிகவும் அன்பாகவும் பண்பாகவும் பழகினான். நூலகத்தில் அமைதியாக இருந்து புத்தகங்களை வாசித்தான். ஏதாவது எழுதிக் கொண்டுமிருந்தான். இவற்றையெல்லாம் அவதானித்த அதிபர் அவனை அழைத்து கீழ் வகுப்புகளில் படிப்பிக்கும்படி நேர சூசி வழங்கினார். அவன் மனமகிழ்வோடு அவ்வகுப்புகளில் படிப்பித்தான். அதிபர் இடைக்கிடை அங்கு வந்து அவன் கடைமையை அவதானித்தார். ஒரு வருடம் முடிந்ததும், ரவிக்கு இடைநிலை வகுப்புக்களில்

படிப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. ஆறு, ஏழு, எட்டாம் வகுப்புகளில் அவன் படிப்பித்தான். அவனது பாடங்கள் தமிழ், சமூகக் கல்வி இரண்டும் ஆகும். வகுப்புகளில் அவன் சிறப்பாகப் படிப்பித்தமையால் ஒன்பதாம் வகுப்புக்களிலும் மேற்படிப்பு பாடங்கள் படிப்பிக்க அவனுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. மிகுந்த மன நிறைவோடு ரவி தன் பணிகளைச் செய்து கொண்டிருந்தான்.

அவனது நேர்மையான குணத்தை அவதானித்த ஆசிரியர்கள், அவனை ஆசிரியர் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினராகத் தெரிவு செய்தனர். சில காலத்தின் பின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் அவன் பொருளாளராகத் தெரிவு செய்யப்பட்டான். அவன் தன் இளமைப் பிராயம் தொட்டு சமூக சேவை நிறுவனங்களில் பணி செய்த படியால், அநேகமாக செயலாளர் பொறுப்புக்களை ஏற்றுப் பணி செய்திருக்கிறான். ஒன்றிரண்டு நிறுவனங்களில் தலைவராகவும் பணிபுரிந்திருக்கிறான். பொருளாளர் பதவி இதுவே முதற் தடவை.

3000 வரையிலான பிள்ளைகள் கல்வி கற்கும் கல்லூரி அது. பல வகைகளில் தினமும் நிதி வந்து சேரும். நன்கொடை உதவிகளும் கிடைக்கும். அக்கல்லூரியில் உள்ள சிறப்பு என்னவென்றால் வழங்கப்படும் நன்கொடை நிதிக்கு உடனே பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பற்றுச் சீட்டு வழங்குவதாகும். பாடசாலை நிர்வாக அலுவலகத்தில் ஒரு பக்கம் கல்லூரி லிகிதருக்குரிய மேசை, கதிரை, அலமாரிகள் இருக்கும். பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொருளாளருக்கும் அதே மாதிரி மேசை, கதிரை, அலமாரி வழங்கப்பட்டது. ரவி மாஸ்ரருக்கு அலுவலகத்தில் வந்து பணியாற்றுவதற்கு வசதியாக, காலை நேரத்தில் பாட ஓய்வுகள் வழங்கப்பட்டுள்ளது. ஒரு மாணவனைச் சேர்க்க, பாடசாலைக் கட்டணம், வசதி படைத்த பெற்றோராயிருந்தால் நன்கொடை பெறப்படுவதுண்டு. அதிபர் பெற்றோருடன் உரையாடி, அந்தப் பணத்தை ரவியிடம் ஒப்படைக்கச் செய்வார். ரவி பணத்தைப் பெற்றுக்கொண்டு, தானே பற்றுச் சீட்டு வழங்குவான். சண்முகநாதன் ஓய்வு பெற்றுச் செல்ல, இரத்தினசிங்கம் என்பவர் அதிபராகப் பணியாற்றி அவரும் ஓய்வு பெற்றுச் செல்ல, பாலசுந்தரம் என்பவர் அதிபராகப் பணிபுரிந்தார்.

1983இல் தென்னிலங்கையில் நடைபெற்ற இனக் கலவரத்தின் காரணமாக, அங்கெல்லாம் வசித்து வந்த தமிழ் மக்கள் வீடு

வாசல்களை இழந்து தமது பிறந்த மண்ணுக்குத் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது. அவர்கள் தமது பிள்ளைகளைச் சொந்த ஊரிலுள்ள பாடசாலைகளில் சேர்த்துப் படிப்பிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். கொழும்பிலே பிரபலம் வாய்ந்த கல்லூரிகளில் படித்த பிள்ளைகள், யாழ் பட்டினத்திற்கும் அண்டியுள்ள ஊர்களுக்கும் வந்து சேர்ந்த பெற்றோர் தமது பிள்ளைகளைப் பட்டினத்திலுள்ள பிரபலமான கல்லூரிகளில் சேர்த்துப் படிப்பிக்க விரும்பினார்கள். மத்திய கல்லூரியில் அனுமதி பெறப் பல பெற்றோர் வந்த வண்ணமிருந்தனர். பாடசாலைகளில் - விசேடமாகக் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்குப் பொதுவாகப் பாடசாலை அபிவிருத்திக்கு நிதி பெறப்படுவது அப்போதைய நடைமுறை. இதன் காரணமாக பெற்றோரும் தமக்கு வசதியான பணத்துடனேயே வருவார்கள்.

அதிபரிடம் போவார்கள். அவர் உடனே, "ரவீந்திரன் மாஸ்ரரிடம் போய்க் கதையுங்கோ!" என்று அவர்களை ரவியிடம் அனுப்பி விடுவார். இடம் பெயர்ந்து வந்தவர்களிடம் கடும் பிடியாக நிற்கக் கூடாது என்பதை மனதில் வைத்து அவர்கள் வழங்கும் பாடசாலை அபிவிருத்தி நிதியை ஏற்று, அதற்கு உடனேயே ரசீது வழங்கி, மாணவரையும் உரிய வகுப்புகளில் சேர்த்து, பெயரையும் இடாப்பில் பதிந்து விடுவான்.

அவன் பா.அ. சங்கப் பொருளாளராகப் பதவி வகித்த அந்த ஆண்டில் இரண்ட லட்சம் ரூபா வரை சேர்ந்தது. வங்கித் தொடர்புகளையும் அவனே வைத்துக் கொண்டான். பா.அ. சங்கத்தின் வருடாந்திரப் பொதுக் கூட்டத்துக்கு முதல் நடைபெற்றுக் கொண்டிருந்த கமிட்டிக் கூட்டத்தில் பொருளாளர், ஒட்டுமொத்தமான வரவு செலவுக் கணக்குகளுக்கு ஓர் அறிக்கை தயாரித்துச் சமர்ப்பித்தான். வழக்கம் போல் கமிட்டிக் கூட்டத்தில், அது ஏன் அப்படி, இது ஏன் இப்படி என்று கேள்விகள் எழுந்து கொண்டிருக்கும் போதுதான், ரவி எழுந்து சென்று, தன் அலமாரியைத் திறந்து சம்பந்தப்பட்ட பைல்களை எடுத்துக் கொண்டு வந்து போட்டு 'கோழி முட்டையிலை மயிரைப் பிடுங்குங்கோ!' என்று சினத்துடன் தன் நேர்மைத் திறத்தை வெளிப்படுத்தினான். அதிபர் மெதுவான குரலில், "கோழி முட்டையிலை மயிர் பிடுங்கிறியள் எண்டு சொல்லிப் போட்டுப் போட்டியள். இங்கை எல்லாரும் சத்தம் போடுகினம். அதை வாபஸ் வாங்குங்கோ!" என்று கூறினார்.

ரவி, அவரைத் திரும்பிப் பார்த்துவிட்டு உடனேயே பைல்களை மேசையில் போட்டு, 'இந்தாருங்கோ, கோழி முட்டையிலே மயிரைப் பிடுங்குங்கோ!' என்று உரத்துக் கூறிவிட்டு அமர்ந்தான். வெகுநேரம் ஆள் மாறி ஆள் மாறி பைல்களைத் துளாவிக் கொண்டிருந்தனர். சதக்காசுக்குக் கூட அங்கு தவறுகள் அகப்படவில்லை. அனைவரது முகங்களிலும் பெரும் ஏமாற்றம் வெளிப்பட கலைந்து சென்றனர். அவன் மன உறுதி மேலும் வலுப்பெற்றது.

அதன் பிறகு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், அவனை மீண்டும் பொருளாளராகப் பணியாற்றும்படி பலர் வேண்டுகோள் விடுத்தும், அவன் அதை ஏற்க மறுத்துவிட்டான். இரண்டொரு ஆண்டுகளின் பின் நடைபெற்ற ஆசிரியர் சங்கப் பொதுக் கூட்டத்தில், அவனை ஆசிரியர் சங்கத் தலைவராக ஓர் ஆசிரியர் பிரேரிக்க, ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டுத் தலைவராக வந்தான். அவனைத் தலைவராகப் பிரேரித்த ஆசிரியரின் அண்ணன்தான், கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வரவு செலவுக் கணக்கைப் பிய்த்துப் பிடுங்கிய கமிட்டி உறுப்பினர். அதற்குப் பிராயச் சித்தமாகத்தான் அவரது தம்பியாரான ஆசிரியர் - அவரும் பழைய மாணவர்தான் - ரவியை ஆசிரியர் சங்கத் தலைவராகத் தெரிவு செய்தார்.

அமைதியாக அந்தப் பொறுப்பினை ஏற்று, ஆசிரியர்களுக்குப் பாடசாலையில் ஏற்படும் பிரச்சினைகளை அதிபருடன் கலந்து பேசித் தீர்த்து மிகவும் மன மகிழ்வுடன் தனது 60ஆவது வயதில் ஓய்வு பெற்றான்.

ஒரு தமிழ் வாத்தியார், அதுவும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவன் - பிரசித்தி பெற்ற கல்லூரிக்குப் படிப்பிக்கப்போய் - அங்கு தன் சம்பளத்துக்காக அடங்கி ஒடுங்கிப் போய்ப் படிப்பிக்க வேண்டியதுதான் என்ற எண்ணத்துடன் போனவன், நேர்மைத் திறனும் நெஞ்சில் உரமும் நிறைந்தமையால், பாடங்களை நன்றாகக் கற்பித்ததுடன் பொது நிகழ்வுகளிலும் தூய சிந்தனையோடு பங்கு பற்றி பெரும் மனமகிழ்வுடன் பிரியாவிடை பெற்று வீடு திரும்பினான்.

வறுமை, ஆபத்து நிறைந்த தொழில், கொடூரமான சாதி ஒடுக்கு முறை, இவைகளுக்கு மத்தியில் இருவர் மட்டுமே படித்து ஆசிரியர்களாகி, அவர்களுள் ஒருவர் கவிஞராகவும், மற்றவர் எழுத்தாளராகவும் துளிர்த்து முற்போக்குப் பாதையில் மக்களை வழி நடத்தி, சமூக ஒடுக்கு முறைகளுக்கெதிரான போராட்டங்களை

முன்னெடுத்து அனைத்து மாணவர்களுக்கும் கல்வியறிவூட்டி டாக்டர், எஞ்சினியர், வங்கி முகாமையாளர், சட்டத்தரணி, பல்கலைக்கழக விரிவுரையாளர், கலாநிதி என்றெல்லாம் இந்தப் பனஞ்சோலைக் கிராமம் எழுச்சி பெற்று நிற்கின்றது! காலங்காலமாகப் பின் தள்ளப்பட்டு வந்த இடைவெளியை நிரப்பியதுடன், காலப் போக்கோடு இணைந்து கல்வித் துறையில் மட்டுமல்ல சகல துறைகளிலும் கால்பதித்து முன்னேறிக் கொண்டிருக்கிறது!

■

# பின்னிணைப்பு

எனது பனஞ்சோலைக் கிராமம், அடக்கி ஒடுக்கப்பட்ட அவல நிலையிலிருந்து மெல்ல மெல்லமாக முன்னேறி எழுச்சி பெற்று, காலப் போக்கில் கல்வித் துறையிலும் தடம் பதித்து, இன்று தலை நிமிர்ந்து நிற்பதைச் சொல்ல வந்த அடியேனுக்கு - 'கற்பகதரு' எனப் புகழாரம் சூடிக் கொண்ட பனை மாதா, தன் மக்களுக்கு வழங்கும் எண்ணிலடங்காத அருட்கொடைகள் யாவும் ஒதுங்கிக் கொள்ள வேண்டிய நிர்பந்தத்துக்குள்ளாகி விட்டன. அதாவது, அவற்றை விரிவாகத் தெரிவிக்க முடியாமற் போய்விட்டது. ஆதலால் அவற்றை இங்கு பட்டியலிட்டுக் காண்பிக்கவுள்ளேன். அத்துடன் பனைத் தொழிலையே நம்பி வாழ்ந்த உழைக்கும் மக்களாகிய நளவ சமூகத்தவர்களின் வரலாறு பற்றி எனக்குத் தெரிந்த விபரங்களையும் இணைக்க விரும்புகின்றேன். தொடர்ந்து பனை மாதாவின் அருட்கொடைகளைப் பற்றி அறிந்து கொள்வோம். இந்த அருட் கொடைகள் எண்ணிலடங்காதவை. தின் பண்டங்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், வீடு கட்டுவதற்கான மூலப் பொருட்கள், எரிபொருள்கள் என அவற்றைப் பாகுபடுத்தலாம்.

பனையிலிருந்து பனம் பழங்கள் கீழே விழுந்து, தானே முளைத்து வடலியாய், பனையாய்ப் பெருகிக் கொண்டேயிருக்கும். சனத் தொகை பெருகப் பெருக குடிமனைகள் பெருகிக் கொண்டே போக, அந்த மனைகளை அமைக்கத் தேவையான இடத்துக்காகப் பனைகள் தறிக்கப்பட்டு, அந்தப் பனைகளே வீடு கட்டவும் பயன்படுத்தப்பட்டன. இது இயல்பான நிகழ்வு. நமது பூமியில் யுத்த நிகழ்வுகள் தொடங்கிய பின், போராளிகள் நிலத்துக்குக் கீழே காப்பரண்களை அமைப்பதற்காக பனை மரங்களைத் தறிக்கத்

தொடங்கினார்கள். அதே வேளை படையினர், இக்காப்பரண்களைத் தகர்ப்பதற்காக வானூர்திகளிலிருந்தும், ஹெலிகாப்டர்களிலிருந்தும் பாரிய குண்டுகளை வீச, அதனாலும் பனைமரங்கள் தகர்த்தொழிந்தன. பனைகள் அழிந்தன. அதன் பயன்பாடுகளும் இல்லாதொழிந்தன. விஞ்ஞானத்தின் சாதனைகளாகத் தின்பண்டங்கள், பண்ட பாத்திரங்கள், உலோகப் பொருட்கள் நாடளாவிய ரீதியில் வந்து குவியப் பனைப் பொருட்கள் மறையத் தொடங்கின. கோதுமை, பித்தளை, வெண்கலம், அலுமினியம் போன்றவை வேளையில் வந்தன. தற்போது பிளாஸ்டிக் பாத்திரங்கள், தளவாடங்கள் அமைப்பதற்காகவும், வீடு நிலை கதவுகள், யன்னங்கள் ஆக்குவதற்காகவும் பிளாஸ்டிக் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றது. பொலித்தீன் உறைகள் மிக விரிந்த அளவில் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றின் காரணமாக தற்காலப் பரம்பரையே பனைமரத்தின் பயன்பாடுகளை அறிய முடியாதிருக்கும் போது, புதிய பரம்பரைக்கு அவற்றை நாம் தெரியப்படுத்தும் முக்கியம் உடையவர்களாயுள்ளோம். அதனால் அவற்றை ஆவணப்படுத்த வேண்டிய கடப்பாடு ஏற்பட்டுள்ளது.

முதலில் பனையை நம்பிப் பிழைத்து வந்த தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்களான நளவ சமூகத்தவர்களின் பழைய கால வரலாற்றை, எமக்குக் கிடைத்தவரை அறிந்து கொள்வோம்.

பழைய காலத்தில் மலையாளத்தவர்கள் சிலர் இலங்கையில், குறிப்பாக வட புலத்துக்கு சிற்பங்கள் செதுக்கும் வேலைகள் செய்வதற்காக வந்ததாகச் சில செவி வழிச் செய்திகள் தெரிவிக்கின்றன. கல்லினாலும், மரத்தினாலும் பெருமளவு சிற்ப வேலைகள் செய்ய வாய்ப்பு ஏது? கோயில்களில் ஓரளவுக்குத்தான் இந்தப் பணிகள் இடம்பெறக் கூடும். இவற்றுடன் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த தமிழ் மன்னர்களோ, சிங்கள அரசர்களோ, தங்கள் மாட மாளிகைகளைக் கலைமயமாக்க இவர்களை அழைத்திருக்கலாம். வந்த மலையாளிகள் தங்கள் பணி முடிந்ததும், இங்கேயே தங்கி, பனை மரங்களில் ஏறித் தமது பிழைப்பை நடத்தியதாகவும், அவர்களே நளவர் என அழைக்கப்பட்டதாகவும் அச் செய்திகள் தெரிவிக்கின்றன. பருத்தித் துறையில் ஏராளமான நளவர்கள் வாழ்கின்றார்கள். இவ்வளவு தொகை மலையாளிகள் இங்கு குடி கொண்டிருக்க முடியாது. ஆதலால் வேளையில் இங்கு வாழ்ந்த நளவ சமூகத்தவர்களுடன் அவர்கள் இணைந்து பனைத் தொழிலையும் செய்து வாழ்ந்திருக்க வேண்டும். இதற்கு அடிப்படைக் காரணமாக பருத்தித் துறையில்

வாழும் நளவ சமூகத்தவர்களின் பேச்சு மொழியில், மலையாளச் சொற்கள் கலந்திருப்பதைக் காண முடிகிறது. இத்தகவலைத் தரும் நான், என் பிறந்த ஊரை விட்டு வளரிளம் பருவத்திலேயே வேறு இடங்களில் வாழ்ந்தமையால், அந்தக் கலப்புச் சொற்களை எடுத்துக் கூற முடியவில்லை. ஆனால் நம் மக்கள் இரண்டு மூன்று பேர் கதைத்துக் கொண்டிருக்கும் போது, இன்னொருவர், ''என்னடி, உங்கை பறைஞ்சு கொண்டிருக்கிறாய்'' என்ற வார்த்தைப் பிரயோகம் இன்றும் நிலை பெற்றுக் கொண்டிருப்பதைக் காணலாம். 'பறைஞ் சுண்டிருக்கிறேன்' என்பது மலையாளச் சொல். பருத்தித் துறையில் வாழும் மற்ற மக்களிடம் இந்த வார்த்தைப் பிரயோகத்தைக் காணவே முடியாது. இந்தச் சமூகத்தவர்கள் மலையாளப் பாஷை கலந்து கதைக்கிறார்கள் என்பது அயலில் வசிக்கும் வேறு சாதியினரின் கணிப்பீடாகும்.

இன்னொரு தகவல்: நளவர் என்ற சொல்லுக்கு நளுவுபவர், நளுவார் என்ற முரண்பாடான கருத்துக்களும் கூறப்படுகின்றன. தாமே பனையேறிச் சீவிப்பவர்களாதலால், அவர்கள் நளுவிப் பிழைக்க வேண்டிய அவசியமில்லை. நளுவாமலே அதாவது வழுக்கி வாழும் தன்மையில்லாமலே வாழும் மனப் பக்குவம் பெற்றவர்களாதலால்தான், வடபகுதியில் நடந்த சகல விதமான சாதி ஒழிப்புப் போராட்டங்களிலும் பங்கு பற்றி வெற்றியீட்டியதுடன் பிள்ளைகளைப் படிக்க வைத்துக் கல்வித் துறையிலும் முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள்.

இந்த வேளை மு. தர்மலிங்கம் என்னும் ஓர் ஆய்வாளர், கலாநிதி இந்திரபாலா அவர்களின் வழிகாட்டலுடன் 'இலங்கையில் இன வாதமும் சாதி பேதமும்' என்னும் ஒரு நூலை எழுதி வெளியிட்டிருக்கிறார். அந்நூலிலிருந்து நளவ சமூகத்தவர் பற்றி அவர் தெரியப்படுத்தியுள்ள கருத்துக்களை இங்கு முன் வைக்கின்றேன். தமிழறிஞர்கள் ந.சி. கந்தையா பிள்ளை, முதலியார் செ. இராசநாயகம் ஆகியோர் சாதிப் பாகுபாடு பற்றி முன் வைத்த கருத்துக்கள்:

'யாழ்ப்பாண வைபவமாலை' என்னும் நூலில் கரைப்பிட்டி வன்னியன் கீழ் அறுபது காத்திக்கார நம்பிகள் சேவகராய் இருந்தார்கள். அந்த நம்பிகளின் தலைத் தம்பியின் மகளைக் கரைப்பிட்டி வன்னியன் கற்பழித்தான். அதை அவள் தகப்பன் அறிந்து, மறுநாள், அவ்வன்னியன் தேவ வழிபாடு செய்து கொண்டிருக்கையில் அவனைக் கொலை செய்தான். அவன்

கொலையுண்ண அவன் மனைவி அம்மைச்சி நாச்சியார் வயல் வெளியிலோடித் தான் எங்கே போகலாம் என்றறியாமல், தற்கொலை செய்திருந்தாள். நம்பித் தலைவனும் இராச விசாரணைக்குள்ளாகிக் கொலையுண்டான். வன்னியர் கையில் இருந்த திரவியம் சங்கிலி இராசனுக்காயிற்று. மற்ற நம்பிகள் சீவனத்துக்கு வழியில்லாததனாலே சாணாரக்குப்பம் என்னும் அயற் கிராமத்திலிருந்த சாணாருக்குப் பணிவிடைக்காரர்களாகிப் பனையேறும் தொழில் பயின்று, பின்பு அத்தொழிலைத் தங்கள் சொந்தமாக்கிக் கொண்டார்கள். அந்த நம்பிகள் தங்கள் குலத்தை விட்டு நழுவினதால் அவர்கள் பெயர் நளுவரென்றாய், இக்காலம் நளவர் என்றாயிற்று.

இந்த நளவர், சிங்கள மரமேறிகள் என்பது யாழ்ப்பாணச் சரித்திரத்தை எழுதிய முதலியார் செ. இராசநாயகம் அவர்களின் கருத்தாகும்.

தர்மலிங்கத்தின் நூலில் இன்னுமொரு விடயம் காணப்படுகின்றது. இந்தியாவிலிருந்து காலத்துக்குக் காலம் பல்வேறு சாதியினரும் இலங்கைக்கு வந்திருக்கிறார்கள். ஆனால் கோவியர், நளவர் என்ற இரு சாதியினரும் இந்தியாவில் இல்லை. ஆதலால் இவ்விரு சாதியினரும் இலங்கையிலேயே உருவாக்கப்பட்டவர்களாவர் என்பதே அவ்விடயமாகும்.

இனி, பனை மரத்திலிருந்து கிடைக்கும் பயன்பாடுகளை அறிந்து கொள்வோம்!

□

# பனைமாதாவின் அருட்கொடைகள்

முதலில் தின் பண்டங்களை வரிசைப்படுத்துவோம். உயிரினங்கள் யாவும் தழைத்தோங்க வித்துதான் மூலகாரணமாகவுள்ளது. வித்து, விதையென்றும் சொல்லப்படுகின்றது. பனங்கொட்டை என்று சொல்லப்படுகின்ற பனம் விதையிலிருந்து பனை மாதாவின் வியாபகங்களைக் கணக்கெடுப்போம்.

**கிழங்கு:** இதனை அவித்துச் சாப்பிடலாம். இதிலிருந்து கிடைக்கும் பண்டங்கள்: புளுக்கொடியல். கிழங்கைச் சிறிது சிறிதாக வெட்டிக் காய வைத்து, சீனியில் காய்ச்சி எடுத்தால், சீனிப் புளுக்கொடியல். புளுக்கொடியலை இடித்து மாவாக்கி சீனியுடன் கலந்து சாப்பிடலாம். அவித்த கிழங்கை இரண்டாகக் கிழிக்கும்போது பீலி என்றழைக்கப்படும் முதற் குருத்து அடியிலிருந்து வரும். அதன் முனையில் காணப்படும் வெண்மையானதும் மிருதுவானதும் இனிமையானதுமான அமிர்தம் ருசிமிக்கதாகும். பச்சைக் கிழங்கை கிழித்துக் காய வைத்தால் ஒடியலாகும். ஒடியலை இடித்து மாவாக்கிப் பிட்டு அவிக்கலாம். சோற்றுடன் குழைத்துத் தின்ன வெறும் பிட்டு, தனித்து ருசியுடன் தின்ன மீன், மரக்கறியுடன் அவித்துத் தின்னும் பிட்டு.

ஒடியல் மாவில் ஆக்கப்படும் கூழ், தமிழன் வாழும் இடமெல்லாம் கூடிச் செல்லும் சிறப்பு மிக்கது.

**கருப்பநீர்:** தனியே குடிக்க உதவும். அதைக் காய்ச்சிப் பாணியாக்கி பனங்கட்டி செய்யலாம். தேநீர் அருந்தவும், மற்றும் இனிப்புப் பலகாரங்கள் செய்யவும் உதவும். பனாட்டைச் சிறுசிறு

துண்டுகளாக நறுக்கி, பாணியில் போட்டு வைத்துப் பாணிப் பனாட்டுச் செய்யலாம். பாணியை ஓர் அளவுக்குக் காய்ச்சி, ஒரு பாத்திரத்தில் வைத்தால் சில நாட்களில் அது உறைந்து கட்டியாகி கற்கண்டு போலத் தடித்து வந்துவிடும். கற்கண்டின் பளபளப்பு இல்லாவிடினும், அதே ருசிதான். கல்லக்காரம் என்று பெயர். தேநீர் குடிக்கவும், நொறுக்குப் பலகாரங்களோடு தின்னவும் உதவும்.

**நுங்கு:** இளம் பருவ நுங்கின் தவிந்து மிகவும் ருசியானது. நுங்குக் கோம்பையைச் சீவி ஆடுமாடுகளுக்குத் தீனியாக வைக்கலாம். நுங்கின் மேலிருக்கிற பருமிள், கூழ் குடிக்க, கஞ்சி குடிக்க, குழந்தைகளுக்கு பால் பருக்க, மருந்து கரைத்து ஊட்ட உதவும்.

**பனம்பழம்:** பனம்பழங்களிலிருந்து பனாட்டுச் செய்யலாம். பனங்களியுடன் அரிசிமா சேர்த்துப் பனங்காய்ப் பணியாரம் செய்யலாம்.

**கள்:** மதுப்பிரியர்களின் ஆபத்தில்லாத குடிபானம்.

**ஓலை:** நாம் குடியிருக்கும் வீட்டை வேய்வதற்கும், எல்லைப் பாதுகாப்புக்கான வேலியடைப்பதற்கும் மிகவும் முக்கியமானது. மூடல் பெட்டி, வட்டப் பெட்டி, தட்டைப் பெட்டி, மாப்பெட்டி, கடகப் பெட்டி, பனங்கட்டிக் குட்டான், கூடை, பிடவைப் பெட்டி, உமல் (பண்டங்கள் எடுத்துச் செல்ல) கறி உமல் (மீன் வாங்குவதற்கு) கரையார் மீன் கொண்டு வர பெரிய மீன் பறி, கொட்டைப் பெட்டி (பணப் புழக்கத்துக்கு) வெத்திலைப் பெட்டி (வெற்றிலை பாக்கு வைப்பதற்கு) பாய் வகை (படுத்துறங்குவதற்கு வீட்டுக்கு வருபவர்களை இருக்க வைப்பதற்கு) பெரிய பாய்கள், அரிசி புளுக்கொடியால் காய வைப்பதற்கு, பனங்களியைப் பரப்பிக் காய வைத்துப் பனாட்டாக்குவதற்கு, பிட்டு கொளுக்கட்டை, மோதகம் அவிப்பதற்கு நீற்றுப் பெட்டி, மா அரிப்பதற்கு அரிதட்டு, குழந்தைகளைப் படுக்க வைப்பதற்குத் தடுக்குப் பாய், பிள்ளைகள் விளையாட காற்றாடி, ஊதுகுழல், குழந்தைகளுக்கான தொப்பி, வடலி ஓலையில் வெக்கைக்கு விசிற விசிறி, கருப்ப நீர் காவிச் செல்வதற்குக் குடுவை, கிணற்றை இறைப்பதற்கு கோணவடிவில் இழைக்கப்பட்ட பட்டை, பயிர்களுக்கு தண்ணீர் ஊற்றுவதற்கு கைப்பிடி போட்ட பெரிய பிளா, கள் அருந்துவதற்குச் சின்னப் பிளா, நயினார் வீட்டுக்குப் போனவிடத்தில், சாப்பிடக் கேட்டால் அதே அளவு பச்சை ஓலைப் பிளாவில் சாப்பாடு, ஆடுமாடுகளுக்குப் பச்சை ஓலை பெரும் தீனியாகும்.

கடைகளில் பச்சை, சிவப்பு நீல நிறங்களில் சாயத்தூள் வாங்கி, தண்ணீரில் கரைத்து, வார்த்தெடுத்த ஓலைகளை அவித்தால் அவை பளபளப்பாக வரும். அவற்றை மூடல் பெட்டிகளில் பொருத்தி அழகாக்கலாம். அதேபோல் விருந்தினர்கள் இருப்பதற்கான பாய்களும் பொத்தி வண்ணப்படுத்தலாம். இவை எல்லாவற்றுக்கும் மேலாக, தமிழினம் உலகப் புகழ் வாய்ந்த இனமாகப் போற்றப்படுவதற்கு, அறுபதுக்கும் மேற்பட்ட உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள திருக்குறள் உட்பட, அப்பாலும் இப்பாலுமாய் சகல புராண இதிகாச காவியங்கள், சங்க கால இலக்கியங்கள், நன்னெறி நூல்கள் யாவும் எழுதப் பெற்ற ஏடுகள் பனை மாதாவின் அருட் கொடையான பனை ஓலையேயாகும்!

**பனைமட்டை:** வேலிக்கு வரிச்சுக் கட்ட, கடகப் பெட்டி, கருப்ப நீர்க் குடுவைகளுக்கு விளிம்பு கட்ட, அடுக்களையை மறைத்துத் தட்டி கட்ட, பொருள் பண்டங்களை உயரத்தில் வைப்பதற்குப் பரண் அமைக்க, பனை மட்டையில் நார் உரித்து வேலிக்கு வரிச்சுக் கட்ட, பாளையில் தொங்கவிடும் முட்டியை இணைத்துக் கட்ட, கள், கருப்ப நீர் காவிக் கொண்டு வரும் முட்டி, குடங்களின் கழுத்தை இணைத்து தூக்கு வளையம் போடவும், குடிசை வீடுகளுக்குத் தடி தண்டுகளால் கூரை அமைத்துக் கட்டவும் உதவும்.

**ஈர்க்கு:** கூரை வேயும்போது ஓலைகளை ஈர்க்கினால் கட்டுவது, கிடுகுகளையும் ஈர்க்கினால் பிணைப்பது, புடைக்கும் சுளகு, வட்டச் சுளகு, சட்டி பானை வைக்க திருகணை, சோறு கறிப்பாத்திரங்களை உயரத்தில் வைக்க உறி, இடியப்பத்தட்டு.

**எரிபொருட்கள்:** காவோலை, பன்னாடை, கொக்காரை, பாளைக் கொள்ளி, உக்கிப்போன வளை, தீராந்தி, சலாகை, சிராய், பனங்காய்த் தும்பு, கிழங்குத் தோல், பீலி, ஊமல் எனப்படும் பனங்கொட்டை சகல மிச்ச சொச்சமெல்லாம் அடுப்பு எரிக்க உதவும். உக்கிப் போன ஓலைச் சிதறல்கள் பயிர்களுக்குச் சிறந்த பசளை. எப்படி? அவை நிலத்தின் அடியில் கிடந்து கீழே செல்லும் நீரை உறிஞ்சி வைத்துக் கொள்வதால் பயிர்கள் அந்த நீரைக் குடித்து வளர்கின்றன. ஒரு இனிப்பான செய்தி. முளைக்காத பனங்கொட்டைக்குள் அதன் கரு, பரந்து தடித்துப் பூரான் ஆகியிருக்கும். அதை வெட்டி எடுத்துத் தின்றால், அதன் சுவை நெஞ்சை நிறைக்கும்!

■




கருப்புப் பிரதிகளின்

# கதைப் பிரதிகள்

1. **'ம்'** (நாவல்) – ஷோபாசக்தி, (இலங்கை – பிரான்ஸ்)............. 80.00
2. **திசையெங்கும் சுவர்கள் கொண்ட கிராமம்**
   (குறுநாவல்கள்) அழகிய பெரியவன்................................................120.00
3. **உறையும் பனிப்பெண்கள்** (சிறுகதைகள்) –
   சுமதி ஷோபாசக்தி ரூபன் (இலங்கை – கனடா)......................... 60.00
4. **எம்.ஜி.ஆர். கொலை வழக்கு** (சிறுகதைகள்) –
   ஷோபாசக்தி (இலங்கை – பிரான்ஸ்)............................................. 110.00
5. **பிரண்டையாறு** (சிறுகதைகள்) – மெலிஞ்சிமுத்தன்
   (இலங்கை – கனடா).........................................................................65.00
6. **சடையன்குளம்** – (நாவல்) – சிறீதர கணேசன் ....................250.00
7. **மௌனவதம்** (நாவல்) – அர்துரோ வான்வாகனோ
   தமிழில்: ராமநுஜம்..........................................................................225.00
8. **கொரில்லா** (நாவல்) – ஷோபாசக்தி
   (இலங்கை – பிரான்ஸ்)...................................................................... 110.00
9. **தேசத்துரோகி** (சிறுகதைகள்) – சோபாசக்தி
   (இலங்கை – பிரான்ஸ்).......................................................................120.00
10. **அத்தாங்கு** (நாவல்) – மெலிஞ்சிமுத்தன்
    (இலங்கை – கனடா)......................................................................... 60.00
11. **வண்ணத்துப்பூச்சியும் சில மார்புகளும்** (சிறுகதைகள்) –
    தமயந்தி (இந்தியா)

**கருப்புப் பிரதிகள்**

பி55, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்ஸ் சாலை

சென்னை 600 005 பேச: 9444272500

மின்னஞ்சல்: karuppupradhigal@gmail.com





கருப்புப் பிரதிகளின்

# கவிப் பிரதிகள்

1. **ஏதிலியைத் தொடர்ந்துவரும் நிலா** – ம. மதிவண்ணன்
2. **ரகசியத்தின் நாக்குகள்** – நெற்கொழு தாசன், (இலங்கை – பிரான்ஸ்)
3. **ஒரு பயணியின் போர்க்காலக் குறிப்புகள்** – கருணாகரன் (இலங்கை)
4. **சாவுகளால் பிரபலமாத ஊர்** – தர்மினி, (இலங்கை – பிரான்ஸ்)
5. **பிறத்தியாள்** – பானுபாரதி, (இலங்கை – நார்வே)
6. **நமக்கிடையிலான தொலைவு** – ம. மதிவண்ணன்
7. **புலிபாய்ந்தபோது இரவுகள் கோடையில் அலைந்தன** – மஜித், (இலங்கை)
8. **நெரிந்து** – ம. மதிவண்ணன்
9. **கள்ளக்காதல்** – ஆதிரன் – வசுமித்ர
10. **ஆகவே நீங்கள் என்னைக் கொலை செய்வதற்கு காரணங்கள் உள்ளன** – வசுமித்ர
11. **போதலின் தனிமை** – யாழன் ஆதி
12. **காலிக்கோப்பையும் தானாய் நிரம்பும் தேநீரும்** – யாழன் ஆதி
13. **உம்மா: கருவண்டாய் பறந்து போகிறாள்** – ஹெச்.ஜி. ரசூல்

**கருப்புப் பிரதிகள்**

பி55, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்ஸ் சாலை

சென்னை 600 005 பேச: 9444272500

மின்னஞ்சல்: karuppupradhigal@gmail.com

முகவரி : பி - 55, பப்பு
மஸ்தான் தர்கா, லாயிட்ஸ்
சாலை, திருவல்லிக்கேணி,
சென்னை - 5
பேச : 94442 72500
karuppupradhigal@gmail.com

## கருப்புப் பிரதிகளின் தலித்தியப் பிரதிகள்

| | |
|---|---|
| *1. ஜாதியற்றவளின் குரல் (கட்டுரைகள்)*<br>*ஜெயராணி* | *250.00* |
| *2. ஏதிலியைத் தொடர்ந்துவரும் நிலா (கவிதை)*<br>*ம.மதிவண்ணன்* | *40.00* |
| *3. மெல்ல முகிழ்க்கும் உரையாடல் (கட்டுரை)*<br>*ம.மதிவண்ணன்* | *70.00* |
| *4. சடையன்குளம் (நாவல்)*<br>*சிறீதர கணேசன்* | *250.00* |
| *5. மீள்கோணம் (கட்டுரை)*<br>*அழகிய பெரியவன்* | *100.00* |
| *6.திசையெங்கும் சுவர்கள் கொண்ட கிராமம்*<br>*(குறுநாவல்கள்) அழகிய பெரியவன்* | *120.00* |
| *7. உள் ஒதுக்கீடு: தொடரும் விவாதம் (கட்டுரை)*<br>*ம.மதிவண்ணன்* | *50.00* |
| *8. உள் ஒதுக்கீடு : சிலபார்வைகள் (கட்டுரை)*<br>*ம.மதிவண்ணன்* | *45.00* |
| *9. நமக்கிடையிலான தொலைவு (கவிதை)*<br>*ம.மதிவண்ணன்* | *40.00* |
| *10. போதலின் தனிமை (கவிதை) யாழன் ஆதி* | *70.00* |
| *11. காலிக் கோப்பையும் தானாய் நிரம்பும் தேநீரும்*<br>*(கவிதை)யாழன் ஆதி* | *70.00* |
| *12. அருந்ததியர்களாகிய நாங்கள்... (கட்டுரை)*<br>*ம.மதிவண்ணன் (மறுபதிப்பு)* | *அச்சில்* |
| *13. தலித் பார்ப்பான் - சரண்குமார் லிம்பாலே*<br>*(சிறுகதைகள்)தமிழில் : ம.மதிவண்ணன்* | *அச்சில்* |
| *14. நெரிந்து (கவிதை) ம.மதிவண்ணன்* | *அச்சில்* |



ஒரு சிறிய கிராமம். பனைமரம்தான் அதன் இயற்கை வளம். அங்குள்ளவர்கள், அம் மரத்தையே நம்பிக் காலத்தைக் கடத்துகிறார்கள். அவர்களில் இருவர், கால்களை நகர்த்தி வேறு ஊர்களுக்குப் போய், அங்கு கள் இறக்கிப் பிழைக்கத் தொடங்கினார்கள். அந்த ஊர்களின் முன்னேற்றம் அவர்களின் மனதில் ஓர் அழுத்தத்தை ஏற்படுத்த, அதனிமித்தம் தங்கள் பிள்ளைகள் இருவரைப் படிப்பிக்கிறார்கள். பல கஷ்ட துன்பங்களுக்கிடையில் அவர்களும் ஆர்வத்துடன் படித்து ஆசிரியர்களாகிறார்கள்.

அவர்களுடைய கிராமத்துக்குப் பக்கத்திலிருந்த ஒரு கிராமத்தில் தமிழறிஞர் ஒருவர் வாழ்ந்து வந்தார். இருவரும் அந்தத் தமிழறிஞரிடம் கல்வி கற்கப் போனார்கள். தமிழ் கற்ற அவர்கள், அவருடைய நாஸ்திகக் கொள்கையினால் கவரப் பெற்று காலப்போக்கில் உலகளாவிய ரீதியில் பரந்து விரிந்த மார்க்சீயக் கொள்கையில் ஊறித் திளைத்து, தமது கிராமத்து வாலிபர்களை மட்டுமன்றி, அண்டை அயலில் உள்ள வாலிபர்களையும் ஒன்றிணைத்து சாதியொடுக்கு முறைக்கு எதிராக மட்டுமன்றி, உழைக்கும் மக்களை நசுக்குபவர்களுக்கெதிரான போராட்டங்களையும் முன்னெடுத்து சகலரையும் எழுச்சி பெறச் செய்தார்கள்.

அடக்கு முறைகளுக்கெதிரான எழுச்சிகளோடு மட்டும் நின்று விடாமல், தமது பிள்ளைகள் கல்வித் துறையிலும் முன்னேற்றம் பெறச் செய்து அகலக்கால் பதித்தார்கள். இந்த வரலாறுதான், ஒரு 'பனஞ்சோலைக் கிராமத்தின் எழுச்சி!'யாகும்.

*R. Pathmanaba Iyer*
*27-B, High Street,*
*Plaistow*
*London E13 0AD*

கருப்புப் பிரதிகள்

உயிர்மெய்